உ

அரிச்சந்திரபுராண வசனம்

ஸ்ரீமத் வீ. ஆறுமுகங் சேர்வை
அவர்களால்

வசனரூபமாக எழுதப்பெற்றது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை

1914

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 558

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

உ

கடவுள்துணை.

அரிச்சந்திரபுராண வசனம்.

திருப்பூவன மடம். உ சிவமயம். TIRUPPOOVANA MADAM.

இது
ஜீவகசிந்தாமணி வசன நூலாசிரியராகிய
மதுரை ஜில்லா, செம்பூர்
வித்வான்
ஸ்ரீமத் வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்
வசனரூபமாக எழுதப்பெற்றது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்தி
87, தம்புசெட்டி வீதி, சென்னை

1914
விலை ரூபா 1-8-0.

[Copyright Registered.]

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

இதனைப் படிக்குந்தோறும் ஒவ்வொருவரும் உள்ளமிளகி ஒப்பற்ற இக்கதையின்மீது பக்திகொள்வார்களென்பது திண்ணம்.

இத்தகைய இவ்வசன நூலைத் தமிழ் நாட்டிலுள்ள புத்திமான்களெல்லோரும் வாங்கித் தங்கள் தங்கள் இல்லங்களில் வைத்து வாசிப்பதனாலும், தங்கள் தங்களுடைய ஆண் மக்களிடமும், பெண்மக்களிடமும் கொடுத்து அவர்களையும் வாசிக்கும்படிச் செய்வதனாலும், படிப்போர்க்கும், கேட்போர்க்கும் விசேஷஞானமும், அருள், அடக்கம், ஈகை, கற்புமுதலிய நற்குணங்களுமுண்டாவதோடு நற்பயன்களுங் கைகூடும். இன்னும் இது புதிய முறையில் எழுதப்பெற்றிருப்பதால் கலாசாலைகளிற் கல்விகற்கும் மாணவர்க்கும் பெரிதும் பயன்படும்.

ஆதலின், இந்த, 'அரிச்சந்திர புராண வசனம்,' என்னும் நூலை இத்தமிழ் நாட்டிலுள்ள உத்தமகுணம் நிறைந்த கனவான்கள் விரும்பி யேற்று நன்குமதித்து எனக்கு உற்சாகத்தை யுண்டாக்கும்படி மிகவும் தாழ்மையோடு அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்புத்திக் கெட்டியவரையில் நான் இதனை எழுதி வெளிப்படுத்தி யிருக்கிறேனாதலின், இதில் சிற்சில பிழைகளும் ஏற்பட்டிருத்தல் கூடும். அவ்வாறு பிழைகள் காணப்படின், கல்வியறிவோடு நடுநிலைமையை வகிக்கும் பேரறிவுடைய உத்தமர்கள் அவற்றை எனக்குத் தெரிவிப்பின் வந்தனத்துடன் ஏற்றுத் திருத்திக்கொள்வேன்.

இங்ஙனம்:

☞ வீ. ஆறுமுகன்.

விஷய சூசிகை.

28-3

விஷயம்.	பக்கம்.

விஷயசூசிகை முற்றுப்பெற்றது.

28-3
திருப்பூவண மடம்.
உ
சிவமயம்.
TIRUPPOOVANA MADAM.

உ

கடவுள்துணை.

"அரிச்சந்திரபுராண வசனம்.

தெய்வ வணக்கம்.

விநாயகர் துதி.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"பெரும்புகழ் பெறும்படி யருந்துயர் கெடும்படி
பிரியம்பல வரும்படி யுளம்
விரும்பிய தனம்பெற மிகும்பெறு பதம்பெற
விளங்கிய தவஞ்செய நெடுங்
கரும்பவல் பெரும்பய றருங்கனி ரசங்கொடு
கவர்ந்தெனிடம் வந்தருள் செய
இருங்கரி முகன்சிறு சதங்கையொடு கிண்கிணி
யிலங்கிய பதம்பெறு வனே."

இதுவுமது.

கலிவிருத்தம்.

"பரிதி தன்மா பில்வரு பார்த்திபன்
விரித ரும்புகழ் மேவரிச் சந்திரன்
சரித மன்னுந் தமிழ்க்குத் துணைசெயக்
கரிமு கன்பதங் கைதொழு தேத்துவாம்."

இதுவுமது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

*"வையாம்பன் முகத்தானை மறலியையோ டத்துரந்து
வாழ்வ தென்றும்
மெய்யாம்பன் முகத்தாலும் வேதத்து மாகமத்தும்
விரித்த தென்றே
மொய்†யாம்பன் முகத்தானைப் பொடியாகப்பொருதுவினை
முடித்து நீண்ட

---

* வை-கூர்மை; † ஆம்பல்-யானை.

கையாம்பன் முகத்தானைக் காலையினு மாலையினுங்
கருது வோர்க்கே."

பரமசிவன் துதி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"சீர்கொண்ட செழுங்கமலத் திசைமுகனு நெடுமாலுஞ்
சிவனு மென்னப்
பேர்கொண்ட மூவுருவு மீருருவு மோருருவாய்ப்
பிறங்குந் தொல்லை
நீர்கொண்ட வண்டத்துந் தாவரத்துஞ் சங்கமத்து
நிறைந்து நின்றோன்
தார்கொண்ட தாளிணைக டமைகொண்ட வன்பினொடு
தலைமேற் கொள்வாம்."

இதுவுமது.

"புகலரிய சதுமறையாய் மறைப்பொருளா யுபநிடத்தாய்ப்
பூத மைந்தாய்
அகிலமுமாய் மன்னுயிரா யணுவிலணு வாயவற்றி
னகமாய் மேலாய்ப்
பகலிரவென் றறியாத பராபரமா யறுசமயப்
பகுதி யாகிச்
சகலமுமாய் நிஷ்களமாய் நின்றோன்றன் செழுங்கமல
சரண்புக் கேமால்."

இதுவுமது.

"ஆதியா யண்டபகி ரண்டத்து மப்புறத்து
மடங்கா துற்ற
நீதியாய் மணியொளியும் பாற்சுவையு மெனவணைத்து
நிறைந்து நின்றும்
பாதியா யொன்றாகி யருவாகி யுருவாகிப்
பரந்து மல்குஞ்
சோதியான் முடிசூட்டத் தனதுதிரு வடிசூட்டத்
துணிந்த தூயோன்."

உமாதேவி துதி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"கனத்தாள்வெங் கயமுகனுங் கந்தனுஞ்சம் பந்தனும்பா
லுண்ட கும்பத்
தனத்தாளே யறம்வளர்த்த காத்தாளே திரிபுரங்க
டழலாய் வேவச்
சினத்தாளே சிறியோர்கள் செய்தபிழை பொறுத்திரக்கஞ்
செய்யுஞ்செய்ய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே யென்றலைமேல்
வைத்தாள் வாயே."

முருகக்கடவுள் துதி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"பெருமையிலுங் கதிமையிலு முதுமையிலு முகிலெனவே
பிறங்கு மேனிக்
கருமையிலுங் கடுந்தறுகட் செம்மையிலும் வெம்மையிலுங்
கலங்கேன் காலா!
எருமையிலும் வெள்ளாட்டுப் பால்போது மெனப்பிறரை
யெண்ணே னன்பால்
வருமயிலும் பொருமயிலும் வரதன்மகன் குகனுமென்றன்
மனத்தி லுண்டே."

காளியம்மன் துதி.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"அந்தரியா மளையமலை யால காலி
யம்பிகைமா தரிகௌரி யாளி யூர்தி
வந்தரிநான் முகன்வணங்கு மலர்த்தாட் சூரி
வைரவிதா ருகவைரி மதங்கி நீல
கந்தரியோ கினிசூலி நீலி நாக
கங்கணிசங் கரிவிமலை காளி வால
சுந்தரிசா முண்டி திரி சூலி கோலத்
துணையடியென் முடிமீது சூடி னேனே."

கலைமகள் துதி.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"மருப்பவள வாக்குவிந்து திரண்டு முத்து
வடமணிந்து குடமெனவே வயங்கிச் செம்பொற்
பொருப்பவள வாவளர்ந்து ததும்பி விம்மிப்
புடைபரந்து களபநறும் புளகக் கொங்கைத்
திருப்பவள வாயாளைத் தேனை மானைச்
செழும்படிக நிறத்தாளைத் திகழ்வெண் கஞ்சத்
திருப்பவளை யுலகேழு மீன்ற தாயை
யெனதிதய கமலத்தே யிருத்தி னேனே."

அவையடக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"நீர்கொள்வார் பாலோடு நேருற்றால் பதர்கொள்வார்
நெல்லோ டுற்றால்
நார்கொள்வார் பூவுற்றால் வேர்கொள்வா ரதிற்சிறிது
நறையுண் டாயின்
சீர்கொள்வார் புன்சொல்லுஞ் செஞ்சொல்லுஞ் சேர்ந்
சோப் புன்சொல் [தொன்றிற்
யார்கொள்வா ரென்பதுசற் றறியாமற் சிறியேனு
வசைக்கின் றேனே."

இதுவுமது.

"புருடனுர்க் கேந்திழையார் பொருளுரைப்பதெனப்பிறர்தம்
பொருளே வெளவுந்
திருடனுர் மேலவருக் கறமுரைப்ப தெனச்சிறிய
*தெள்கு துள்ளிக்
கருடனுர்க் குப்பறவை கற்பிப்ப தெனவனந்தங்
கண் ணுள் ளார்க்குக்
குருடனுர் வழிகாட்ட லெனப்பெரியோர் முன்சிறியேன்
கூற லுற்றேன்."

---

* தெள்கு - கொசுகு.

நூல்.

உலகம் நிலைபெறுவதற்குப் பெருந்துணையாயுள்ள சூரிய னது குலத்திற் றோன்றிப் பண்டைக்காலத்தில் அரசு புரிந்துவந்த மன்னர்களுள் திரிசங்குவின் புத்திரனாகிய அரிச்சந்திரனே மிக்க கீர்த்தி வாய்ந்தவன்; மற்றொருவனைப் பணியாது தாணியாண்டவர்களாகிய சக்காவர்த்திக ளறுவருள் இவனுமொருவன்; சத்தியந் தவறாதவன்; அணுவளவும் பொய் கூறாதவன்; பிறர்மனை விரும்பாத பெருங்குணமுடையவன்; இல்லையென் றிரப்பார்க் கில்லையென்னாத இதயம் படைத்த மகாவள்ளல்; தன்னுயிர்போல மன்னுயிரைக் காக்குந் தருமகுணசீலன்; செங்கோன் முறையிற் சிறிதும் பிசகாதவன்; குபேரனும் நாணும் நிதிபடைத்த கோமான்; சகல கலைகளுங் கற்றுத்தேர்ந்த விற்பனன்; திருமகள் வாழும் பெருமார்புடையவன்; உருவிலான் வெட்கும் உருவமுடையான்; மிகவும் ஜீவகாருண்யம் பொருந்திய பேரிறைவன்; பொறுமையிற் சிறந்த புரவலன்; பெரியோரைப் போற்றுந் திருவினன்; சந்திரமதி யென்னும் மகா பதிவிரதையைப் பத்தினியாக அடைந்தவன்; அந்தணரை ஆதரிக்கு மன்பினையுடையவன்; தெய்வபக்தியிற் சிறந்த செம்மல்; குருபக்தியிற் சிறந்த கோமான்; முப்பத்திரண் டறங்களையும் முறை பிசகாது நடத்திவரும் பேறிவினை யுடையான்; கோசல நாட்டுக்கிறைவன்; அயோத்திமா நகரத்திற் கதிபதி. இத்தகைய அரிச்சந்திரனுடைய சரித்திரமானது மிகவும் புண்ணியம் பொருந்தியது; இதனை வாசிப்போரும் கேட்போரும் எத்தகையரா யிருப்பினும் நன்னெறியிற் புகுந்து உலக நீதிகளை யுணர்ந்து இகசுகம் பரசுகம் ஆகிய இரண்டினையும் பெறுவார்க ளென்பது திண்ணம். ஆதலின், இஃது எவர்க்கும் உபயோகமா யிருத்தற்பொருட்டு அரிச்சந்திர புராண மூலச் செய்யுட்களைத் தழுவி, இதனைத் தெளிவான வசனமாக எழுதுவாம். இவ்வசனம் எவ்வகை இடையூறு மின்றி இனிது முடியுமாறு எம்மிஷ்டகுல தெய்வங்களாகிய விநாயகக்கடவுள் முதலிய தெய்வங்களின் அனுக்கிரக முண்டாவதாக.

இவ் வரிச்சந்திரனுடைய கதையைப் படித்தற்கு முதலில் இவனுடைய நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு முதலியவற்றைத் தெரிந்துகொள்ளுதல் அவசியமாதலின் இப்போது அவைகளைச் சிறப்பித்துக் கூறிப் பின்னர் மற்ற விஷயங்களை முறையே கூறுவாம்.

நாட்டுச்சிறப்பு.

கலிநிலைத்துறை.

முன்னு றறியாப் பிறவிக்குரு டான மூடன்
தன்னாற் றொடுசா கரத்தினிடஞ் சாற்று மாபோல்
என்னா லறிதக்க தன்றென்னினு மன்னர் மன்னன்
நன்னாட் டணியான் சிலவல்ல நடத்த லுற்றேன்.

நெடுங்கடல் சூழ்ந்த இந் நிலவுலகத்தில் சத்தியத்தின் உயர்வை விளக்குதற் பொருட்டு நான் எடுத்துக் கூறத் தொடங்கிய இக்கதைக்கு நாயகனும், சத்தியத்தை நிலை நிறுத்தி என்று மழியாப் புகழ்படைத்தவனுமாகிய அரிச்சந்திரனால் ஆளப்பெற்ற கோசலமென்னும் நாடானது அளவிடற்கரிய சிறப்பினையுடையது. இத்தகைய அரசர்க்கரசனாகிய அரிச்சந்திரனது நல்லியல் பொருந்திய அந்நாட்டின் சிறப்பானது என்னால் அளவிட்டறிந்து சொல்லத்தக்கதன்றாயினும், முன்னேயிருக்கும் வழியை அறிந்து செல்ல முடியாத பிறவிக் குருடனான ஒரு பேதை, தன்னுடைய அறிவினாலே, சகரரால் தோண்டப்பெற்ற சமுத்திரத்தின் இடம் முதலியவற்றை யெல்லாம் ஆராய்ந்தறிந்து சொல்லத்தொடங்கியதுபோல அந்நாட்டு வளங்களுள் என்னாற் சொல்லக்கூடிய சிலவற்றை மாத்திரம் கூறத் தொடங்குகின்றேன்.

மழைவளம்.

அந்நாட்டிலே சூற்கொள்ளாத வெண்மைநிறம் பொருந்திய மேகமானது, குளிர்ச்சிபொருந்திய திருப்பாற்கடலிற் றோன்றி நிறைந்த அமுதம் திரண்டு செழிப்புற்றுத் தனக்

மேற்பட்ட நட்பினாலே இலவண சமுத்திரத்தைச் சார்ந்து அதனிடத்தே கூடினாற்போல வந்து, அதனுள்ளே யிருக்கின்ற நீரைப்பருகி அதனாலே கருமைநிறம்பெற்று, ஆதியில் அவ்வமுதத்தை விரும்பித் தேவர் முதலியோர் பாற்கடலைக் கடைகின்றகாலத்தில் தோன்றியெழுந்த விடமானது ஆகாயமெல்லாம் பரவிபதுபோல எழுந்து விண்ணிற் பாவும்; அவ்வாறு கருமைநிறம் பெற்று மேலெழுந்ததும், சிறப்புற்றதுமாகிய மேகக்கூட்டம், கீழிடமும் மேற்பாகமுந் தெரியாதபடி இருண்டு விண்ணிடமெல்லாம் நீல நிறமுள்ள கொடிகள் பறந்தாற் போலவும், நீலவர்ணக் குடைகள் விரிந்தாற்போலவும் கூடிப் பூமியும், ஆகாயமும் தம்மில் மாறுகொண்டு போர்செய்தாற்போலத் தோற்றும்படி கனமாகிய இந்திரவில்லிலே இடிகளையும், மழைத்துளிகளையும் அம்புகளாகத் தொடுத்து எய்வதுபோல மழையைச் சொரியும்; (அதாவது இந்திர வில்லுடனும், இடிகளுடனும் மழைத்துளிகளைச் சொரியும்); அப்படிச் சொரியும்போது அம்மழைத் துளிகளின்கூட்டம் எப்படி யிறங்குமெனில், ஆகாயத்திலுள்ள தேவர்களாகிய மதுவடிப்போர்கள் மழைநீராகிய மதுவை, "இம்மதுவானது மீன்கள் சஞ்சரித்து விளங்காநின்ற சமுத்திரத்திற் றோன்றியது; ஆதலின் மிகச் சிறப்புற்றது; இதனைச் சுத்தப்படுத்திப் பெரியவொரு தாழியில் நிறைத்து வைப்போம்" என்று கருதிச் சராசரங்களுக் கெல்லாம் வசித்தற்குரிய ஸ்தானமாய் விளங்கும் பூமியைப் பெரிய குடமாகக்கொண்டு ஆகாயத்தை அக்குடத்தின் மேல்வைத்துக் கள்வடிக்கும் நெய்யரியாகிய கிண்ணமாக்கி யூற்ற, அஃது அக் கிண்ணத்தின் பல துவாரங்களின் வழியாகப் பல தாரைகளாய் விழுவதை நிகர்த்துப் பொழியும்; அவ்வாறு சொரிந்த மாத்திரத்தில், மேகத்தாலே சொரியப்படுகின்ற மழைகளாகிய பாணங்கள் பூமியின்மேல் விழுந்து அவைகள் பாய்ந்த புண்களினின்றும் சிந்துகிற இரத்தத் திரட்சிபோல எவ்விடத்தும் கார்காலத்திற் றோன்றுகின்ற இந்திரகோபப் பூச்சிகள் வெளிப்பட்டு அதிகரித்து விளங்கக் கண்

பார்வைக் கடங்காம லதிகரித்துப் பெருகிய ஜலம் திரண்டு ஆரவாரிக்கும்; பின்னர் அவ்வாறு திரண்ட ஜலப் பெருக்கா னது: களவு, கொலை, மதுபானம், பொய், காமம் என்று சொல்லப்படும் ஐந்து மகா பாதகங்களையும் நீக்கிய உத்தமர் களுக்கு, அஞ்ஞானம் நீங்கி மனந்தெளிந்த அறிவுடையோர் கொடுக்கும் உத்தமதானம் பெருகுவதுபோலப் பள்ளம், மேடு, பெரியமலைகள், காட்டின் பக்கங்கள் ஆகிய இடங்க ளெல்லாவற்றிலும் பாவி அதிகரித்து வேகங்கொண்டோடும்.

நதிவளம்.

உலகத்திற்குத் துணைக்காரண மானவைகளும், கூட் டம் பொருந்தியவைகளுமாகிய சிறந்த மேகங்கள் மேற் கூறியபடி மழையைச் சொரிவதனாலே ஆரவாரித் தெழுந்த அந்நீர்ப் பெருக்கானது முன்னே சொல்லிய விடங்களி லெல்லாம் பாவிப் பின்னர் மலைகளிலிருந்து வழியும்போது அநேகங்கோடி மலைச்சிகரங்களை யெல்லாம் முறித்து, ஆங் காங்கே உற்பத்தியாகி ஓடும் அருவிக் கூட்டங்களுட் புகுந்து அவற்றிலடங்காமல் இரைச்சலிட்டோடிப் பின்னும் அதிக முழக்கத்தைச் செய்து சரயு என்னும் பெயரினையுடைய புண்ணிய நதியிலே வந்துகூடி நடக்கும்; அவ்வாறு வந்து கூடவே அந்தச் சரயு நதியானது மிகுந்த பெருக்கினை யுடையதாகி, இருமருங்கினு மிருக்கும் சந்தன விருக்ஷம், தோடைவிருக்ஷம், அசோகமரம், பலாசவிருக்ஷம், தேவ தாரவிருக்ஷம், மகிழமரம், கடுக்காய்மரம், சண்பகவிருக்ஷம், சாதிலிங்கமரம், கோங்கமரம், சுரபுன்னைவிருக்ஷம், கடம்பு மரம், பேரீத்தமரம், மூங்கில்மரம், கற்பூரவள்ளி, பனைமரம் ஆகியவற்றை யெல்லாம் அடித்துக்கொண்டு அவற்றுடனே அலைகள் புரள வேகங்கொண்டு பாயும்; இன்னும் அது மலை களிலுள்ள ஏலம், தகரம், இலவங்கம், மஞ்சள், தக்கோலம், வசம்பு, சிவந்த குங்குமம், கோட்டம் ஆகியவைகளையும் வாரிக்கொண்டு, பதினன்கு உலகங்களும் நடுங்கும்படி வந்து பொருந்திய ஊழிக்காலத்தில் பொங்கியெழுந்து எல்லா

வற்றையும் மோதி யழிக்கின்ற கரிய கடலையும் நிகர்த்து விளங்கும்; இன்னும் ஆரவாரம் மிகுந்து விளங்கும் அவ்வாற்றின் வெள்ளப்போக்கானது, பக்கங்களிலுள்ள நீலமணி, வைரமணி, வைடூரியம், முத்து, சிவந்த நிறம் விளங்கா நின்ற பவளம், அழகுநிறைந்த பதுமராகம் ஆகியவைகளை எற்றித் தள்ளிக்கொண்டு, அவை பல நிறங்களோடு கலந்து விளங்குவதனாலே இப்பூமியில் நீட்சிபெற்றுவந்த ஓர் இரத்தின வில்லைப்போலவும் ஓடும்; இன்னும் அப்படி ஓடும் வெள்ளத்தில், பக்கங்களிலுள்ள புற்றுக்கள் அலைகளால் மோதுண்டு தகர்வதனால் வெளிப்பட்டனவும், * படமெடுத்தாடுகின்றனவுமாகிய அரவங்களும், ஆங்காங்கே கரைகளிலுள்ள ஈமங்களிற் கிடந்து கலந்த எலும்புகளும், அளவிடப்படும் ஆட்டமும், (அதாவது அலைகள் தாவிச் செல்வதாலுண்டாகும் அசைவும்) நடுவே ஜலமும், அந்நதி செல்லும் அத்திசையிலேயே அப்புனலோடுவதாலுண்டாகும் ஓசையும் பொருந்துவதால் அவ்வெள்ளத்தையுடைய அந்நதியானது, சர்ப்பங்களையும், எலும்புகளையும் ஆபரணங்களாக அணிந்தவனும், ஆட்டத்தை (அதாவது நடனத்தை) யுடையவனும், சிரசினடுவே கங்காஜலத்தைத் தரித்தவனும், பகீரதன் பொருட்டுக் கங்கை பூமியிற் பாயும்போதுண்டான ஆரவாரத்தைச் சமீபத்திலுடையவனும், கபாலத்தை யேந்தியவனும், மேருவை வில்லாகக் கைக்கொண்டவனுமாகிய சிவனை நிகர்த்து விளங்கும்.

---

* மூலநூலில் இவ்விடத்திலுள்ள "ஆடுநாகமும்" என்ற செய்யுளைப் பிரிமொழிச் சிலேடையாக்கி நதிக்கு வேறு பொருளும், சிவனுக்கு வேறு பொருளு முரைப்பதுண்டு. ஆயினும், அவ்வாறுரைப்பது இவ்விடத்திற்குப் பெரும்பான்மையும் பொருந்தாதிருத்தலானும், வசனநடைக்கு மயக்கத்தைக் கொடுக்குமாதலானும், இரண்டிடத்தும் ஒரேதன்மைத்தான பொருளுரைத்தலே சிறப்புடைத்தாகலானும் அதனைச் செம்மொழிச் சிலேடையாக்கி இவ்வாறு வசனத்திற் கியையுமாறு பொருளுரைக்கப்பட்டது.

இஃதன்றி அந்நதியில் திரண்டுசென்ற நீர் முழுவதும் எவ்வித வேகங்கொண்டு பாயுமெனில், பிரளயகாலத்தில் சமுத்திரத்தின் மத்தியிலிருந்து பொங்கியெழும் வடவா முகாக்கினியையுந் தாழ்மைப்படுத்தி அதினும் மூன்றுபங்கு வேகத்தை யுடையதாய்ப் பகைவரை வெல்லும் பெரிய யானைகளையும், சிங்கங்களையும் அடித்துக்கொண்டு உக்கிரத் தோடு செல்லும்; இன்னும் இவ்வித வேகத்தோடு செல்லும் அந்நதியானது தருக்களின் தளிர்களையும், வளார்களையும், மரங்களையும் அடியோடு கெட்டு முறியும்படி வீழ்த்திக் காட்டிடங்களைச் சூழ்ந்து அங்குள்ள பெரிய யானைமதத்தின் நாற்றத்தையும், யானை மாறிமாறி அடிவைத்து நடப்பது போல மாறிமாறிப் பாயும் நடையையுங் கொண்டு செல்வ தால், வேகமும், மதமயக்கமும் நீங்காத வெவ்விய யானையை யும் நிகர்க்கும்; இவ்வாறு நிகர்ப்பதன்றி இன்னும் அந் தச் சரயுநதியானது, கொலை செய்கின்ற யானைகளினுடைய அழகிய கொம்புகளையும், வேடுவர் குடிசைகளில் வைத் திருந்த சங்குகளையும், நீட்சிபொருந்திய ஊதுகொம்பு களையும் வாரிக்கொண்டு, அவையெல்லாம் தன்னிடத்தே விளங்கும்படிச் சென்று, வேகத்திலே பொருந்திய பத்திர காளி மனமகிழ்ந்து தங்குகின்றபோர்க்களத்தையும்,நிகர்த்து விளங்கும். பின்னர் அந்நதி, உடுக்கைபோன்ற இடையினை யுடைய வேடமகளிர் ஆங்காங்குள்ள துறைகளில் மூழ்க, பக்கங்களில் ஏலச்செடிகளைப் பறித்துப் பரப்பிக்கொண்டு பற்பலவிடங்களிற் சுழித்துக் கரைகளில் உராய்ந்து குறிஞ்சி நிலத்திற் கிறைவனாகிய வெற்றிக்கொடி தரித்த முருக னுடைய அடிகளை வணங்கி (அஃதாவது: அவனடிகளை வணங்குவதுபோலக் குறிஞ்சிநிலத்திற் சென்று) தான் செல்லும் வேகத்தினாலே கொடிகளும் புற்களும் சிதைவுற்று விளங்கும்படித் தோற்றுவதாகிய அக்குறிஞ்சிநிலத்தைக் கடந்து செல்லும்.

இவ்வாறு குறிஞ்சிநிலத்தைக் கடந்து சென்றவுடன் அந்நதி, பறவைகளையும், புலிகளையும், குரங்குகளையும், மேம்

பாடுபொருந்திய மலர்களையும், வேங்கைமரங்களையும், வண்டு களையும், விரும்பப்படுகின்ற பலாக்காய்களையும், தன்னிடத் தே வந்து நீரைப் பருகுகின்ற யானைகளையும், இழுத்துக் கொண்டு வெப்பத்தாற் சுடுகின்ற பாலைநிலத்தில்வந்துகூடும்; அவ்வாறு கூடி உயர்ந்தசென்று தெளியும் நல்வழியை யுணராதவர்களும், சினம் பொருந்தியவர்களுமாகிய வேடர் களும், அங்குள்ள பேய்த்தேர் என்னும் கானலையும், தான் பாய்வதாற் றோன்றும் வெள்ளத்தையும் தங்கள் மனத்தா லாராய்ந்து வேறுபிரித் தறியமுடியாத இயல்பினையுடைய அப்பாலைநிலத்திலுள்ள ஊர்களையும், அங்குள்ள பாலைநிலப் பெண்களையும் தள்ளிக்கொண்டு, அந்நிலத்தில் வாசஞ் செய் பவளும், கலைமானை வாகனமாக ஏறி நடத்துகின்றவளு மாகிய பத்திரகாளியினது தாளை வணங்கிப் பெருகும். அதன்மேல் அழகிய புனலையுடைய அவ்வாறுனது, தனக்குள் ளகப்பட்டுவரும் அழகிய கோங்கமரத்தினுடைய பூங்கொத் துக்களும், அப்பாலைநிலத்திற் சாய்ந்த இருப்பைமரத்தி னுடைய பூங்கொத்துக்களும், சிதைந்து கெடவும், இருல் கள் அங்கு ஓங்கி மேலே யெழவும், சென்று, ஆங்காங்கே நெருப்புப்பொறிகள் மின்மினிகளைப்போலத் தோன்றப் புறுக்கள் மேய்ந்துகொண் டிருக்கும் இயல்பினையுடையதாகிய அப்பாலைநிலத்தை விட்டுப்போய்ச் செழிப்புற்ற முல்லைநிலத் திற் சேரும்.

அவ்வாறு சேர்ந்தவுடன், முழுகுதற்குரியதும், குற் றஞ் சொல்லப்படாததும், நடுவே ஆழத்தை யுடையதுமான அவ்வாற்றின் நீரானது, அம்முல்லைநிலத்திலுள்ள ஆடுகளும், பெரிய கறவைப்பசுக்களும், எருதுகளும் அஞ்சியோடும் படியாகப் பாய்ந்து கொன்றைமரங்களின் கிளைகளை முறித்து, அக் கொன்றைமரங்களிலுள்ள காய்க் கொத்துக்களையும், தன்னிடத்தே சேர்த்துக்கொண்டு அங்கே யிடப்பட்டிருக் கும் பலகரைகளை மோதி அழிக்கும்; இதுவுமன்றி இன்னும் அவ்வாறுனது அம் முல்லைநிலத்தில் ஆயருடைய தயிரைக் கொள்ளையிட்டு, மாமரங்களை ஒடித்தழித்து, தேவர்கள்

மூழ்காநின்ற அலைகளையுடைய சமுத்திரத்தைப்போலப் பெருகிச் சார்ந்து, மேகங்களை மேலே தாங்குகின்ற (அதாவது: மேகமண்டலம் வரை வளர்ந்த) குருந்தமரங்களை வேரோடு சாய்த்துத் தள்ளி, அவற்றில், ஆய்ச்சியர் நீராடுங் கால் நழுவிய வஸ்திரங்களைச் சேர்த்து எல்லாவற்றையுந் தன்னிடத்தே கொண்டு அலைகளைச் செய்து செல்வதனாலே, முன்னே ஆய்ச்சியருடைய தயிர், வெண்ணெய் முதலியவற்றைத் திருடியுண்டு, அவர்களுடைய ஆடைகளைக் கவர்ந்து குருந்தமரத்திற் சேர்த்து விளையாடிய கிருஷ்ணனையும் நிகர்க்கும்; இவ்வாறு நிகர்ப்பதன்றி இன்னும் அது மனிதரைக் கடித்து மிகவும் வருத்துகின்ற பாம்புகளையும் தள்ளி வெள்ளத்திற் சேர்த்து வருத்தி, மேகந் தவழும்படி வளர்ந்து வளர்ந்திருக்கின்ற மாமரங்களையும் ஒடித்து, எவ்விடத்தும் இரகசியமாக நிறைந்து மறைந்திருக்கின்ற பத்திரகாளியை முன் பாலைநிலத்தில் வணங்கினதுபோல இம் முல்லைநிலத்தில், வேதத்தால் வணங்கப்பட்டவனும் இந்நிலத்திற்கிறைவனுமாகிய விஷ்ணுவை வணங்கி, (அதாவது வணங்குவதுபோலத் தாழ்ந்து சென்று) உயிரை நிகர்த்த பெட்டையன்றில்களும், ஆணன்றில்களும், இறகையுடைய அன்னங்களும், பெட்டைகளோடு நெருங்கியிருக்கின்ற நாரைகளும் ஒன்றோடொன்று கூடிச் சந்தோஷம் நீங்காமல் வசித்திருக்கும்படி அமைந்ததும், மிக்க நீர் நிறைந்த தடாகங்களாற் சூழப்பட்டிருப்பதுமாகிய மருதநிலத்திற் சேரும்.

அப்படிச் சேர்ந்தவுடன் அந்நதியின் பிரவாகமானது மிகுந்து, வாழைமரங்கள், கமுகமரங்கள், மகிழமரங்கள், மருதமரங்கள், பலாமரங்கள், தென்னமரங்கள், மகரந்தத்தையுடைய சண்பகமரங்கள், இலவமரங்கள், குங்குமமரங்கள், மாதுளமரங்கள், புன்னைமரங்கள் முதலியவற்றின் கூட்டங்களை மோதி முறித்தழிக்கும்; அதன்மேல் இவ்வாறு மரங்களைச் சிதைத்துச் சென்ற அவ்வெள்ளம், அம்மருதநிலத்திடங்களெல்லாம் பாவ, அப்போது ஆங்காங்கே நெருங்கியிருக்கின்ற வாய்க்கால்களிலெல்லாம் கலந்து சென்ற வேக

மான ஜலம், வால்கள் தொங்குகின்ற எருமைகள் போய் விழும் அதிர்ச்சியினாலே சேல்மீன்கள் தங்கள் தேகம் ஆகா யத்திற் படும்படி குதித்துப் பாயும் செழிப்பினையுடைய தடாகங்களிற் பாயும்; அங்ஙனம் பாய்ந்த மாத்திரத்தில் அந் தப் பெரிய ஜலப்பிரவாகமானது, அக்குளங்களை யெல்லாம் நிரம்பச் செய்து, மதகுகளிலும் மோதி, நீண்ட கரைகளை யுந் தாக்கி யுடைத்து, அலைகளாலே வீசிச் சேறுகளை ஒது க்கி எங்கும் ஒரேஜலமாகத் தோற்றும்படி பரவி வயல்களிலும் பாயும்; அப்படிப் பாய்ந்தவுடன் அவ்வயல்களின் வரம்புகளை யுடைத்துக் கரையச்செய்து, மடுக்களுக்கு நீர் பாயும்படி யமைந்த வாய்க்கால்களையு முடைத்து, அல்லிமலர்களையும், தாமரைமலர்களையும், கரும்புகளையும், இஞ்சிகளையும், மஞ் சள்களையும் கட்டுக்குலையும்படி செய்து, வாழைமரங்கள் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற மருதநிலத் தூர்களையும் அழிக் கும்; அப்படி யழிப்பதன்றி இன்னும் அந்தச் செழித்த நீரானது பெரிய குளங்களை யெல்லாம் உடைத்துக் கெடுத்து, இனிமையான கனிவர்க்கங்களை யெல்லாம் வாரிக்கொண்டு போய்ச் செல்வம்பொருந்திய உழவர்களுடைய ஊர்களெல் லாவற்றையும் ஒருமிக்கக் கெடுத்து எவ்விடத்தும் பெரிய ஆறாகப் பெருகும்.

இவ்வாறு ஜலப்பிரவாகம் எங்கும் ஆறாகப் பெருகிய மாத்திரத்தில், அந்தக் கோசலநாடெல்லாம் அப்படிப்பரவிய நல்ல ஜலமானது ஓடுகிற சப்தமும், அந்நீர் உயர்ந்த கரை களை உடைக்கும் சப்தமும், சோலைகளிலே வண்டுகள் பாடு கிற இசையும் எங்கும் பரவும். இப்படி எங்கும் ஓசை பரவப் பெருகிய ஜலத்தால் ஆங்காங்குள்ள ஏரிமுதலியவைகள் நிறைந்து ததும்பிப் பற்பல விடங்களில் உடைப்புண்டாக, அப்போது மள்ளர்கள், மதுவானது ததும்பி யொழுகுகிற வாயும், கட்குடியினால் சந்தோஷமானது உள்ளே பொங்கு கின்ற மனமும் தோன்றப் பறவைகள் சப்திக்கின்ற குளக் கரைகளிலெல்லாம் வந்து நெருங்கிக் கூடுவார்கள். அங்ஙனங் கூடிய மாத்திரத்தில் அவர்களுட் சிலர் மண் வெட்டிகளைக்

கைக்கொண்டு சந்தோஷமாகக் குதித்து மேட்டு நிலத்தி லுள்ள மண்ணை வெட்டுவார்கள்; சிலர் அப்படி வெட்டிய மண்ணைச் சுமந்துசென்று உடைப்புக்களிற் கொட்டுவார்கள்; சிலர் அவ்வாறு கொட்டிய மண்ணை மிதித்துக் கெட்டிப் படுத்திக் கரை கட்டுவார்கள்; சிலர் வலிமையாகிய கோலை யெடுத்து, உற்சாகத்துடன் ஜனங்கள் கூடும்படி மருதநிலப் பறையைக் கொட்டுவார்கள்; சிலர் குதிரை மாங்களைக் கொண்டுபோய் நிறுத்திக் கரையை வெள்ள முடைத்துவிடாமல் தாங்குவார்கள்.

நிலவளம்.

அவ்வாறு அவ்வுழவர்கள் உடைப்புக்களை யடைத்து நீரைத் தேக்கிய பின்பு, பக்கங்களிலுள்ள அன்னங்கள் பயந்து, தங்களுடைய நெருங்கிய சிறகுகளிலே சுழற்சியான காற்றுண்டாகும்படி பறந்து நீங்க, மருதநிலப்பறையை ஓசை யெழும்படி முழக்கி, வயல்களில் நீரைப் பாய்ச்சிப் பெருக்கிப் பழமையாய்க் கிடந்த வரம்புகளை வெட்டித் திருத்திப் புதுக்கி எருமைக்கடாக்களை ஏரிலே பூட்டி உழுவார்கள்; அப்படி உழுமொலி எங்கும் மிகும். அவ்வாறு ஒலி மிகும்படி அவர்கள் உழும்போது வலம்புரிச் சங்குக் கூட்டங்களும் சாதாரணமான வெள்ளைச் சங்கினங்களும், இன்னும் வெண்மையான சலஞ்சலமென்னும் சங்குக் கூட்டங்களும், பிளக்கவும், அவற்றிலுள்ள முத்துக்கள் உடைபட்டுச் சிதறவும், நீலோற்பல மலர்கள் சிதைவுறவும், தாமரைமலர்கள் நசுங்கிச் சிதையவும், மீன் கூட்டங்கள் நசுங்கவும்* சால்களிலெல்லாம் கலப்பையின் கொழுவானது செல்லும். இன்னும் ஏரிற்பூட்டிய எருமைக்கடாக்களை அடித்தோட்டத் தக்கதும், ஓர் இருப்பு மாத்திலிருந்து ஒடித்தெடுத்தது போன்ற வன்மை யுடையதுமாகிய தாற்றுக்கோலானது தூள்தூளாகப் போகும்படி எருமைக்கடாக்களை அடித்து

* சால் - கலப்பைச் சுவடுகளுக்கு நடுவிலுள்ளவிடம்; இவ்விதம் மூன்று சால்களிட்டு முறையே ஒவ்வொன்றை அழித்து உழுதுகொண்டுபோவது வழக்கம்.

அதட்டி யோட்டி அஃது அங்ஙனம் முறிந்தவுடன் பக்கத்தி லுள்ள நீண்ட கரும்பை ஒடித்துக் கோலாகப் பிடித்தடித் தோட்டி எவ்விடத்தும் பரம்படிப்பவர்கள் அநேகங்கோடி பேர்களாய் விளங்குவார்கள். அவ்வாறு பரம்படிக்குங் காலத் தில் கரும்புகளும், நீலோற்பல மலர்களும், தாமரைமலர்க ளும், செவ்வாம்பல் மலர்களும், ஆங்காங்கு முளைத்திருக்கிற நீர்ச்சேம்புகளும், நண்டுகளும், ஆமைகளும், புஷ்பங்களில் தேனைப் பருகும்பொருட்டுச் சேர்ந்த வண்டுகளும், நத்தை களும், சங்குகளும், அந்தப் பரம்பு மரங்களினடியிற் படிந்து நசுங்கும்; இன்னும் உழுகிற படைச் சால்களிலெல்லாம் முத் துத்திரள்கள் சிதறிக்கிடக்கும்; மள்ளர்களின் கால்களிலெல் லாம் தாமரைமலரின் வாசனை பரிமளித்துக்கொண்டிருக்கும்; அவர்கள் கரும்புகளை யொடித்து எருமைக்கடாக்களை அடித் தோட்டுவதால் அக்கரும்புகள் சிதைந்து அவற்றின் சாறு அக்கரிய எருமைக்கடாக்களின் மேலெல்லாம் ஒழுகிக்கொண் டிருக்கும்; அன்றியும் அவற்றின் வால்களிலெல்லாம் பல விதமான மலர்களின்வாசனை பொருந்தியிருக்கும். இன்னும், உழவர்கள் ஏரிலே பூட்டப்பட்ட எருதுகளை யடித்தோட் டும்போது, அங்குள்ள இளமைபொருந்திய அன்னங்கள் அவற்றைக்கண்டு, 'இவை, திரிபுரங்களையெரித்த சிவபெருமா னுடைய வாகனத்தின் இனங்கள்; ஆதலால் நம்மை வாகன மாகப்பெற்ற பிரமதேவனை அச்சிவன் தண்டித்ததுபோல அப்பிரமனுக்கு வாகனமாகிய நம்மை இவ்வெருதுகள் தண் டிக்கக்கூடும்' என்று கருதி, முற்காலத்தில் சிவனுக்கு நிக ராக ஐந்து சிரங்களையடைந்து பின்பு அவற்றுள் அச்சிவனால் ஒருசிரங் கிள்ளப்பெற்று அவனுக்கஞ்சிய பிரமதேவன்போலப் பயந்து இரண்டு சிறகுகளாலும் தங்கள் மார்பிலே அடித் துக்கொண்டு பறந்தோடும்; இஃதன்றிப் பலவாசனைக் கொடி செடிகளையுண்டு அசையிடுவதால் பற்களிலே நுரை வெளிப் பட்டுத் தோன்றுகின்ற எருதுகளின் பாதக்குளம்புகள், நல்ல நுரைகளையுடைய தடாகங்களிலே தினந்தோறும் பூத்த பல மலர்களிலுள்ள பொன்னிறமான மகரந்தங்கள் வரிவரியாகப்

பொருந்தி யிருப்பதனாலே, இடையில் வெற்றிடமில்லாமல் எங்கும் பொன்னுரைக்கப்பட்டிருக்கும் நல்ல நிறம் பொருந்திய உரைகல்லைப் போன்றிருக்கும்; இவற்றிற்கு இஃதன்றி வேறெதையும் உவமைகூறுதல் முடியாது.

இவ்விதமான சிறப்புக்களுடன் அவ்வுழவர்கள், வயல்களை யுழுது பரம்படித்துச் சீர்செய்தவுடன், தங்களிடத்தே வந்து கூடின பிராமணர்களுக்கும், முனிவர்களுக்கும் தகுதியான தானப் பொருள்களை வரைவின்றி வாரிவாரி யிறைக்கும் வள்ளல்கள்போல, அந்நிலங்களின் நான்கு பக்கங்களையும் நோக்கி அந்நிலங்கள் விளைவுக்குவரும் காலபக்குவத்தை யுணர்ந்து எவ்விடங்களிலும் மிகுதியான செந்நெல் முளைகளையும், வெண்ணெல் முளைகளையும் விதைத்து அவை இடையூறின்றி நன்றாக வளர்ந்தோங்குமாறு தெய்வத்தை வணங்குவார்கள். அதன்மேல் அவ்வாறு விதைத்த முளைகள், தேன்கூடுகளி லிருந்துவடியும் தேன் பாய்வதனாலும், பெரிய வாழைக்கனி, மதுவொழுகும் பலாக்கனி, மாங்கனி முதலியவைகளும், இன்னும் மற்றக்கனிகளும் வாய்விட்டுடைந்து அவற்றிலிருந் தொழுகுகின்ற தேன் பாய்வதனாலும் செழிப்பாக முளைத்து நாற்றுக்கள் வளரும். அப்படி வளரும் நாற்றுக்களுக்குப் பாயும்பொருட்டு, அவற்றின் பக்கங்களிலெல்லாம் நீர்ச்சேம்புகள் முளைத்திருக்கின்ற செழிய குளக்கரையிலுள்ள மடையின் றுவாரம் நிரம்பவருகிற நீரின் தோற்றமானது எப்படி யிருக்குமெனில், மூங்கில்கள் முளைத்துத் தோற்றுகின்ற மலைக்குகையிலிருந்து பெரும் பாம்புகள் புறப்படுவது போன்றிருக்கும்.

இவ்வாறு ஜலம்பாய நாற்றுக்கள் வளர்ந்து பறித்து நடும் பக்குவத்தை யடைந்தவுடன், மள்ளர்கள் நற்றினம் பார்த்து அத்தினத்தில் மருதநிலத்திற் கிறைவனாகிய இந்திரனை வணங்கி அந் நாற்றுக்களைப் பறித்துக்கட்டிச் சுமையாக்கிச் சுமந்து கொண்டுபோய், முன்னமே உழுது தொளியாக்கி யிருக்கும் வயல்களிற் சேர்த்துப் பள்ளியரை யழை

த்து அவர்க்கு வேண்டுவன நல்கி நடும்படிச் செய்வார்கள். அப்பள்ளியர்கள் நாற்றுமுடிகளை யெடுத்துத் தெய்வத்தைத் தொழுது * குரவையிட்டாடிப் பாடி அவிழ்த்து மகிழ்ச்சியுடன் நடுவார்கள். இவ்வாறு நடும்போது நிறத்தினாலே இருளையும் வென்று கருமையடைந்திருக்கின்ற செழிய கூந்தலையும், கயல்போன்ற கண்களையுமுடைய உழத்தியர் மேற்கூறியபடி இடும் குரவை யொலியானது, சப்திக்கின்ற கடலின் முழக்கத்தையும் வெல்லும்.

இவ்விதம் மகிழ்ச்சியோடு நாற்றுக்களை நட்டபின்னர், வயல்களி லெல்லாம் நெற்பயிர்கள் மிகவும் செழிப்புற்று நிமிர்ந்து பசுமையடைந்து வளரும். அப்படி வளர்ந்து களை யெடுக்கும் பருவம் வந்தவுடன் அப்பள்ளியர் மதுவையுண்டு மகிழ்ச்சியடைந்து களைபறிக்கத் தொடங்குவார்கள்; அங்ஙனம் களை பறிக்கும்போது, அப்பெண்கள் ஆங்குக் களைகளாக வளர்ந்திருக்கின்ற தாமரைமலர்கள், அவர்களுடைய செந்நிறம் விளங்காநின்ற சிற்றடிகளையும், மெல்லிய முகத்தையும், கைகளினழகையும் நிகர்த்திருப்பதனாலும், நீலோற்பல மலர்கள் விழிகளை நிகர்த்திருப்பதனாலும், செவ்வல்லி மலர்கள் இதழை நிகர்த்திருப்பதனாலும் அவைகளைப் பறிக்க மனமில்லாதவர்களாய் விட்டுவிடுவார்கள். இன்னும் அக்காலத்தில் மேற்கூறியபடி அந்த வயல்களில் மெல்லிய களைகளைப் பிடுங்குகிற உழத்தியர்களுடைய வெற்றிமிகுந்த கண்கள் நீரில் சேல்கள்போலத் தோன்றுவதனாலே, அப்பள்ளியர்மீது ஆசைமிகுந்து மயங்கிய உழவர்கள் அக்கண்

---

* குரவை - பள்ளியர் நாவையசைத்து மணியாட்டுதல்போல விடும் ஒருவகை யொலி. கலியாணம், தெய்வத்திற்கு நடத்தும்விழா, நாற்றுநடல் முதலிய மங்கல காரியங்கள் ஆகியன நடக்கும்போது இவ்விதம் குரவையிடுதல் பள்ளியர்க் குரியதொழில்; இதனைத் தென்னாட்டில் விசேஷமாகக்காணலாம்; பண்டைக்காலத்தில் பள்ளியர் இவ்விதம் குரவை யிட்டுக்கொண்டு கைகோத்தாடுதல் வழக்கம்; இவ்விதம் ஆடுங் கூத்துக்குக் குரவைக் கூத்தென்று பெயர். குரவையிடுதல் காரணமாகவே இக்கூத்துக்கு இப்பெயர் ஏற்பட்டது.

களின் சாயல்களை மீன்களென்று நினைத்து அவற்றைப் பிடிக்குமாறு ஆங்காங்கே பறிகளை வைத்துப் பார்த்து அவை அப்பறிகளில் அகப்படாமையினாலே ஆச்சரியப்படுவார்கள்.

உழத்தியர் இவ்வாறு மகிழ்ச்சியோடு களைகளைப் பறித்து மிதித்துவிட்டபின் அந்தப் பயிராகிய பெண் மீன்களையுடைய ஜலமாகிய நாயகனைக் கூடி (அதாவது நீரைப் பருகி வளர்ந்து)பின்புகருப்பங்கொண்டு(அதாவதுஇளங்கதிர்களைக் கொண்டு) துவளுதலுடன் அசைந்து, கதிர்களாகிய பிள்ளைகளை யீன(அதாவது கதிர்களைவெளியேதள்ள)அவ்விளங்கதிர்களாகிய பிள்ளைகள் தங்கள்தாயாகியபயிரிடமிருந்துகிரகித்த பால் தங்கள் மெய்யிற்றங்க (அதாவது அவ்வாறு வெளியே தள்ளப்பட்ட இள நெற்களில் பயிரின் செழிப்பாலுண்டான பால்போன்ற வெள்ளிய சத்துண்டாக) மேனிபசந்து (அதாவது அவ்விளநெற்கள் பசிய நிறத்தை யடைந்து காய்த்துப்) பின்பு பழுத்து விளைந்த செந்நெற் கதிர்கள் பதிவிரதைகளைப் போலத் தலைவணங்கித் தோன்றும். இப்படி நெற்கள் தலைவணங்கி விளைந்து அறுக்கும் பக்குவத்தை யடைந்தவுடன்,பூவிதழ்களினின்றும்ஒழுகுகின்ற தேன்சூழ்ந்து பாய்கின்ற அவ்வயல்களிலே, மள்ளர்கள் சிறிதும் சோர்வில்லாதவர்களாகி, கைப்பிடியிலே கோக்கப்பட் டிருப்பவைகளும், பிரகாசம் பொருந்தியவைகளுமாகிய அரிவாள்களைக் கருக்கொண்டிருக்கும் வெண்மையான சங்கின் முதுகிலே தீட்டி அவற்றைச்சங்கைப்போலவெள்ளிய ஒளியுடையவைகளாகச் செய்துகொண்டு, தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமி வளையலாக அணிந்துகொள்ளுமாறு சங்குகளை வளையமாக அறுத்து அவளுக்கு முன்னின்று அவள் பார்த்துக் களிக்கக் கொடுப்பவர்கள்போல வளைவாகிய அவ் வரிவாள்களை முன்னே நீட்டி நீட்டி அவற்றால் அந்நெற்கதிர்களை அறுப்பார்கள். பின்னர், சேற்றில் நீண்டு கிடக்கிற நெற்கதிர்களை மேற்கூறியபடி அறுத்து முடிந்தவுடன், அவற்றையெல்லாம் ஒன்றுகச் சேர்த்துப் பல கட்டுக்களாகக் கட்டிவைத்து அக்கட்டுக்களைத் தூக்கிச் சுமந்தவர்களாய்க் களத்துக்குச் செல்

னும் வழியாகச் சென்று அக்கட்டுக்களைப் போட்டு அவிழ்த்துதறிப் பல போர்களாக வேய்ந்து உயர்த்துவார்கள். அதன்மேல் அவ்வாறு வேய்ந்த போர்களைப் பிரித்து வட்டமாக உதறி அக்கதிர்களின்மேல் மாடுகளைப் பிணைபலாக்கிவிட்டு மிதிக்கும்படிச் செய்து நெற்கள் உதிர்ந்தவுடன் அவர்களுட் சிலர் வைக்கோலை வேறுபடுத்தி வேய்வார்கள்; சிலர் நெற்களைத் தூற்றுவார்கள்; சிலர் அவற்றைப் பொலிகளாகக் குவிப்பார்கள்; சிலர் அந்நெற்களை வண்டிகளில் ஏற்றும் பொருட்டுச் சுமப்பார்கள். அதன்பின்னர் இவ்வாறு அளவில்லாமல் எருதுகளைப் பல பிணைபல்களாகப் பிணித்துவிட்டு மிதிக்கும்படி செய்து தூற்றியெடுத்துச் சுமந்த நெற்களை அம்மள்ளர்கள், வண்டிகள் நிரம்ப அவற்றிலேற்றி அவ்வண்டிகளை ஓட்டிக்கொண்டுபோய்த் தங்கள் தங்கள் குலஸ்திரீகளாகிய மனைவியரும் மக்களும் சந்தோஷத்தோடு தங்கியிருக்கும் உயர்ந்த வாழ்வையுடைய வீடுகளில் முகடுவரை உயர்ந்து முட்டும்படி அந்நெற்கள் முழுவதையுங் கொட்டி நிறைப்பார்கள்.

இவ்வாறு நெற்களை அவர்கள் வீடுகளிற் சேர்த்தவுடன் அவர்களுடைய வீடுகளெல்லாம் இலக்குமி வாசஞ் செய்து விளையாடக்கூடியவையாயிருக்கும்; அவர்கள் வாசஞ் செய்யும் ஊர்களைச் சார்ந்த காடுகளெல்லாம், கரிய குயில்கள் தங்கள் கூடுகளிலிருந்து இனிமையாகக் கூவக் களிப்பையுடைய மயில்களாடுஞ் சிறப்பினை யுடையனவா யிருக்கும்; இப்படியே அந்தக் கோசலநாட்டைச் சார்ந்த ஊர்கள் முழுவதும் சிறந்த செய்கைகள் நடப்பனவா யிருக்கும். இன்னும் அவ்வூர்களைச் சார்ந்த குளங்களிலே ஒருபக்கத்தில் பெட்டையன்னம் ஒருபுறமாகவும், குஞ்சு ஒருபுறமாகவும் படுத்திருக்க இளமையாகிய ஆணன்னங்கள் நடுவே படுத்திருக்கும்; மற்றொரு பக்கத்தில் நீர் பாய்கிற மடையிலே தங்கியிருக்கும் சங்கீன்ற முத்துக்களைத் தங்களுடைய முட்டைகளென்று நினைத்துப் பெட்டையன்னங்கள் அடை காத்துக் கிடக்கும்; இன்னும் மேற்கூறிய மருதநிலத்திலே கோவை

களைப்போல எல்லாம் முதிர்ந்த பருவத்தை யடைந்து விளைந்து கிடக்கிற நெற்கதிர்களிலுள்ள காய்ப்பதமான நெற்களையெல்லாம் எருமைமாடுகள் தின்று பின்னர் கரும்புத்தோட்டங்களிலும் புகுந்து மேய்வதனாலே, அந்நெற்களிலும் கரும்புகளிலுமிருந்து சிதைந்து வெளிப்பட்ட முத்துக்கள் நெல்லின் தண்டு, கரும்புத்தோகை முதலியவற்றில் பின்னிக்கொள்ள, அத்தோகை முதலியன அவ்வெருமைகளின் கடைவாய்களிலெல்லாம் முத்துச்சரங்கள்போலத் தொங்கிக்கொண்டிருக்கும். இஃதன்றி அளவில்லாத பெண்கள் நீராடுகிற குளங்களிலே, அவர்களா லேற்படும் ஆரவாரத்தைக் கேட்டுப் பயந்து குஞ்சுகளையுடைய பெட்டையன்னங்கள் அவற்றைவிட்டு நீங்கித் தூரமாகப் பறந்துசெல்ல, அப்போது குஞ்சுகள் தனிப்பட்டதால் மிகவும் துக்கத்தையடைந்து தாமரை மலரிற் கிடந்து வாய்விட்டுக் கதறும்; அவ்வாறு கதறுகின்ற அக்குஞ்சுகளை நீரலைகள், மெல்லிய அத் தாமரை மலரையே தொட்டிலாக அமைத்தாட்டி அவைகள் தூக்கநீங்கி உறங்கும்படிச் செய்யும். இன்னும் அக்குளங்களின் கரைகளி லிருக்கும் வேர்ப்பலாவி னடியிற் பழுத்துப் பள்ளங்களிலே கிடக்கும் பலாப்பழங்களிலிருந் தொழுகும் தேனூறல் அக்குளங்களின் நீர்மேல் மலர்ந்திருக்கும் தாமரைமலர்களின்மேற் பாய்ந்து தங்கியிருக்கும்; அவ்வாறு தங்கியிருக்கும் மலர்களைக் கொண்ட அக்குளங்கள் எப்படி யிருக்குமெனில், அவை முன்னே அத்தேனூறலை மனந் திருப்தியாகவுண்ட ஆசையினாலே மேலும் இஷ்ட முண்டானபோது பருகுதற்கு மேலும் பல கிண்ணங்களில் ஏற்றுவைத்துக் கொண்டிருப்பன போன்று விளங்கும்.

இஃதன்றி அந்நாட்டைச் சார்ந்த வூர்களிலுள்ள சோலைகளில் பலாப்பழத்தை ஒரு பக்கத்திற் பிளந்து தின்றுகொண்டிருந்த மதியில்லாக் குரங்கு அருகே தோன்றின கமுகமரத்தினுடைய செழுமையான பாளையை அரவத்தின் படமென்று நினைத்துப்பயந்துநடுங்கி இரசத்தோடுசேர்த்துத் தின்றுகொண்டிருந்த அக் கனியை அப்படியே விட்டோட

அப் பலாக்கனி திறந்த பக்கம் பொன்மை நிறமாகவும் மற்றப் பக்கம் பசுமை நிறமாகவும் விளங்கும் தோற்றம் எப்படி யிருக்குமெனில், மேகத்திலே மறைந்த வெவ்விய சூரியனை நிகர்த்திருக்கும். இன்னும், அவ்வூர்களில் நிலத்திலே சேறுண்டாகும்படி சொரிகிற மலர்த்தேனுடனே, தித்திப்பாகிப பழங்களிலிருந் தொழுகுவனவாகிய கனிரசங்களும், ஒள்ளிய கரும்புகளை யாட்டும்போது சிந்திப் பாய்வனவாகிய சாறுகளும், தம்மில் ஒன்றுகக் கூடி ஆறுபோலப் பாய்வனவாகிய இடங்கள் ஆங்காங்கே அநேகமாக விளங்கும். இஃதன்றி அங்குள்ள சோலைகளில் இளந்தென்றலானது வந்து வாசனை பொருந்திய மலர்களிலே படிந்து அவற்றின் வாசனையைக் கிரகித்துக்கொண்டு உதிர்த்துச் சிந்தியதனுல் மேலே பறந்த மகரந்தப்பொடிகள், சென்று பாவி மலைகளின்மேலே சொரிகிற மழைக்கூட்டங்கள்போல, அவ்வூர்களைச் சார்ந்த வீடுகளினும், அழகிய முற்றங்களினும் நிரம்பிப் படியும்.

இன்னும் மேற்கூறிய கோசலநாட்டில் முருகக்கடவுள் வாசஞ்செய்து விளங்காநின்ற செழிப்பும் குளிர்ச்சியுந் தங்கிய குறிஞ்சிநிலமெங்கும் கெடுதலில்லாத திணைப்புனங்களில் கிளிகளை ஒட்டுகிறவர்களாகிய குறவர்கள், அகன்ற கவணிலே வைத்து வீசியெறியும் நாகரத்தினங்கள் மேலெழுந்து கீழ்விழும் தோற்றம் எப்படி யிருக்குமெனில், அநேக சூரியர்களுடைய கூட்டம் தனித்தனியே பூமியி விறங்குவது போன்றிருக்கும். இஃதன்றி விசாலமான நெய்தனிலத்திலே முத்துக்கள் வண்டலாக ஒதுக்கப்பட்டிருக்கும் கடற்கரையில் தம்முடைய நாயகரைப் பிரிந்து, அவர்மீதுள்ள அன்பினுலே தாம் நினைத்தபோது அவர் வருவாரா வமாட்டாரா வென்று ஆராய்ந்தறிதற்பொருட்டுக் * கூடற்சுழியிட்டுக்

* கூடற்சுழி - விரலினுல் மணலில் வட்டமாகக் கோடிட்டுப் பார்ப்பது; அவ்வாறு கோடு கிழிக்கும்போது இருதலைப்பும் ஒன்றுகச் சேர்ந்துவிட்டால் நாயகர் வருவாரென்று தலைவியர் நிச்சயித்துக் கொள்வது வழக்கம்.

கொண்டிருப்பவரும், நீலோற்பலமலர்போன்ற கண்களை யுடையவருமாகிய வலைச்சியருடைய மடியின்மீதேறிச் சங்குகள் முத்துக்களை யீனும்; இன்னும் தங்கள் சாதிக்குரிய தருமத்தின் நிலைமையை அளந்து (அதாவது ஆராய்ந்தறிந்து) அதன்படி நடக்கும் வலையர்களுக்குரிய அந்நெய்தனிலத்திலே கரிய கண்களையுடைய வலைச்சியர், இழிகுணங்களை யெல்லாம் அளவிட்டு வெளிப்படுத்தக்கூடிய கள்ளுக்கு விலையாக வெண்மைநிறம்பொருந்திய முத்துக்களை மனமிசைந்து அளப்பார்கள். இன்னும், எல்லா நாட்டினுஞ் சிறந்து விளங்குவதான இக்கோசலநாட்டில் நிலங்களிலெல்லாம் முத்துக்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கும்; பசுமையான ஜலங்கள் நிறைந்த விடங்களிலே நீலோற்பல மலர்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்; நல்லோர்களுடைய வாய்மொழிகளில் நல்ல குணத்தோடு பொருந்திய நல்லுபதேசங்களே விளங்கும்.

நாட்டுச்சிறப்பு முற்றுப்பெற்றது.

நகரச்சிறப்பு.

கலிவிருத்தம்.

மகர தோரண வாயினு நாஞ்சிலுஞ்
சிகர மாமதி லுஞ்செறி போகழ்
சகரர் வான்புகழ் சாற்று மயோத்திமா
நகர மேன்மை சிறிது நடத்துவாம்.

நாம் இதுவரை கோசலநாட்டின் சிறப்பைக் கூறினோம்; இனி, திருமகனுக்குக் கொடியாக வமைந்த மகரவடிவம் விளங்கும்படி செய்யப்பட்ட தோரணங்கள் விளங்காநின்ற கோட்டை வாயில்களும், மதிலுறுப்புக்களும், அவ்வுறுப்புக்களைப் பெற்ற சிகரம்பொருந்திய மதிலும், 'சகரரால், தோண்டப்பட்ட கடல் இதுவே' என்று பார்ப்போர் சொல்லும்படி தன் தோற்றத்தைக் காட்டி அச்சகருடைய

சிறந்த புகழை விளக்கிக் காட்டக்கூடிய பெரிய அகழியும் நெருங்கியிருக்கின்ற அயோத்திமாநகரத்தினது மேன்மையில் தெரிந்தவரையிற் சிறிது கூறுவாம்.

சத்தியத்திற் சிறந்த உத்தமனாகிய அரிச்சந்திரனிருந்தரசு நடத்தும் மேற்கூறிய அயோத்திமாநகரம் எவ்வகைச் சிறப்புடையதெனில், அதில், உயர்ந்த மாளிகைகளும், மேலுப்பரிகைகளும், போசன சாலைகளும், சித்திரகூடங்களும், கோபுரங்களும், பெரிய அரண்மனைகளும், நிருத்தஞ் செய்யும் நாடகமேடைகளும், அழகு பொருந்திய தரும சத்திரங்களும், குதிரைகளும் யானைகளும் தங்கிநிற்கிறவிடங்களும் மிகவுஞ் சிறப்புற்று விளங்கும்; கடைவீதியில் சித்தசனை நிகர்த்த அழகு வாய்ந்த ஆடவரும், அழகிய மயில்போன்ற சாயலையுடைய பெண்களும் நெருங்கிச் செல்வதால் அறுபட்டு வீழ்ந்த பொன்மாலைகள் தரையிற் கிடந்து பிரகாசித்துக்கொண்டிருக்கும்; மேல்மாடங்களிலிருந்து அழகிய தேமலையுடைய அவயவங்கள் பொருந்திய பெண்கள், தங்களுடைய கூந்தல் உலரும்படி புகைக்கும் இனிய அகிற்புகையானது, அன்பு தங்கிய மனத்தையுடைய அரிச்சந்திரனது புகழ் கொழுந்துவிட்டு வளர்ந்தோங்கித் தழைப்பது போல ஆகாய முகடெல்லாம் ஓங்கிச் சென்று படரும். அழகு பொருந்திய இராஜ வீதிகளில், விடா மழையின் சப்தத்தைப்போலவும், ஊழிக்காலத்தி லுண்டாம் பேரொலி போலவும் காலாட்படைகள் சப்திக்கும்; தேரொலியும் சப்திக்கும்; தங்கள் தேகம் ஆகாயத்திற் பொருந்தும்படி தாவிச் செல்லும் குதிரைகளும் அனுமானிக்கும்; யானைகளும் வீறிட்டுச் சப்திக்கும்.

வேதியர் வீதிகளிலே வேதகோஷ்டங்களும், பெரிய சாஸ்திரங்களை ஓதும் சப்தமும் மிகுந்திருக்கும்; நிருத்த மாதர்களிருக்கும் வீதிகளில் இனிய சங்கீதம் பாடும் ஒலியும், வேய்ங்குழலின் இசையும், ஆடுகின்றவர்களுடைய பாதங்களி லணியப்பட்டிருக்கும் சதங்கைகளி னொலியும்,

சிலம்புகளி னொலியும், வீணை யிசையின் ஒலியும் தினந்தோறும் உண்டாகிக்கொண்டிருக்கும்.

இன்னும் அந்நகரத்தில் கிளிகளெல்லாம் கீதங்களையே பாடிக்கொண்டிருக்கும்; நாகணவாய்ப்புட்கள் குழந்தைகளைப் போல் மழலை மொழிகளைப் பேசிக்கொண்டிருக்கும்; கூட்டமாகிய பிராமணர்கள் வேதங்களைப் பாடிக்கொண்டிருப்பார்கள்; இனிமையான இசையையுடைய பெண்கள் அரிச்சந்திரனுடைய ஈகைக் குணங்களை * வள்ளை யென்னும் உலக்கைப் பாட்டி லமைத்துப் பாடுவார்கள்; குலமாதர்க ளிடத்திலெல்லாம், தங்கள் நாயகரோடு சேர்ந் துறவாடுந் தொழிலே சிறந்திருக்கும்; மூதேவி யொருத்திக்கு மாத்திரம், தான் அந்நகரிற் சேரமுடியா திருப்பதா லேற்படும் பிணக்கமே அதிகமாயிருக்கும்; நாடகக்காரர்களிடத்தில் தினந்தோறும் ஆடுந் தொழிலே சிறந்திருக்கும்; புகழ்ந்து பாடும் பாணர்களிடத்தில் ஒவ்வொருநாளிலும் பாடுந் தொழிலே அதிகமாயிருக்கும்; பொன்னிறமான மகரந்தங்களையும், பச்சைக்கற்பூரத் தூள்களையும், சிவந்த பதுமராக மணிமாலைகளையும் அணிந்த அவயவங்களையுடைய பாத்தையர்கள் தினந்தோறும் விடியற்காலநேரத்துக்கு முன்னே இராகங்களையும், நடனத்திற் கேற்ற பாடல்களையும் கற்றுக்கொள்வார்கள். அன்றியும் அவ்வயோத்திமாநகரத்தின் மாடங்களில் நாட்டப்பெற் றுயர்ந்துநின்று விளங்கும் கொடிகள், "எங்களிடத்தில் அநேகம் சிறந்த பொருள்களெல்லாம் பொருந்தியிருக்கின்றன; ஆதலால், நீங்கள் இங்கு வந்து இவற்றுள் வேண்டுவனவற்றை யெடுத்துக்கொள்ளுங்கள்," என்று அம்மாடங்கள் தேவர்களைக் கைகளால் அழைப்பனபோல எவ்விடத்தும் தமக்குள் ஒன்றினுமொன் றுயர்ந்துநின் றசைந்து விளங்கும். இன்னும் அக் கொடிகளுள் வெள்ளை நிறமாகிய கொடிகள் எங்கும் நிறைந்து விளங்கும் தோற்றம் எப்படி யிருக்குமெனில், ஆதிகாலத்திலே செய்த சிறப்புள்ள தவத்தினாலே

* வள்ளை - உலக்கையால் நெல் முதலியன குற்றும்போது மூச்சாறுதலுக்குப் பாடும் பாட்டு.

Acc. No: 558
R65(4??)

உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் தாயைப்போன்று அன்புடையவனு யுதித்த அரிச்சந்திரனை மகாவிஷ்ணுவென்று நினைத்து அவன் பள்ளி கொள்ளுதற் குரிய இடமாயமைதற் பொருட்டுப் பாற்கடலானது மேலெழுந்து வளைந்து நெருங்கிய தோற்றத்தை நிகர்த்து விளங்கும். இன்னும் அழகிய மாளிகைகளில் ஸ்திரீ புருஷர் சந்தோஷமாகக் கூடி விளையாடுங் காலத்தில், அப்புருஷர்கள் அம்மாளிகைகளின் சுவர்களில் பிணக்குப் பார்வையுடன் விளங்கும்படி எழுதப்பட்டிருக்கும் சித்திரப்பாவைகளை ஆச்சரியத்தோடு பார்க்க, அதற்கு அவர்களுடைய ஸ்திரீகள் மனம் பொருதவர்களாய்க் கோபித்துப் பார்க்கும் பார்வையானது உயிரைக் கொல்லப் பார்க்கின்ற எமனையும் பழித்து விளங்கும்; வலிமை பொருந்திய வச்சிராயுதத்தைத் தாங்கிய இந்திரனால் சிறகறுபடும்படி மூண்ட போரினின்றுந் தப்புதற்கு, "நமக்குக் காவலாயுள்ளவன் அரிச்சந்திரனேயாவன்," என்று கருதி, அவனைச் சரணமாகவடைந்த பெரிய மலைக்கூட்டங்கள்போல அந்நகரத்திலுள்ள தேர்ச்சாலைகளில் தேர்க்கூட்டங்கள் வரிசைபெற்று நிற்கும்; இவையன்றி அங்கே திரவியம் நிறைந்த சாலைகளும், இனிய சங்கீத சாஸ்திரத்தைக் கற்கும் சாலைகளும், ஓமம் பண்ணுகிற சாலைகளும், தரும சத்திரங்களும், புகை மேலெழுந்து விளங்காநின்ற மடைப் பள்ளிகளும், குலமாதரோடு நாயகர் கூடி புறவாடி விளையாடுகின்ற சிங்கார மண்டபங்களும் கணக்கற்று விளங்கும்.

அந்நகரத்திலுள்ள மனிதர்களுடைய மனத்தில் தருமமே குடிகொண் டிருக்கும்; வீரர்களுடைய தோள்களில் வலிமையே குடிகொண்டிருக்கும்; அவர்களுடைய ஆயுதங்களில் செழிப்பாகிய சூரியனுடைய பிரகாசமே தங்கியிருக்கும்; பெண்களுடைய கண்களிலே கொலைத்தொழிலே குடிகொண்டிருக்கும். அந்த அரிச்சந்திர மகாராஜன் அந்நகரையாளத் தொடங்கிப் பிரகாசம்பொருந்திய முடியைக் கையினாலே சூட்டப்பெற்றிருந்த நாள்வரையிலும் வளப்பம்பொருந்திய அவ்வயோத்திமா நகரத்திலுள்ள ஜனங்களுக்குச் சிறி

தேனும் ஏக்கமேற்பட்டதில்லை. ஆனால், ஆங்கு ஒவ்வொரு இல்லத்திலும் செல்வமிருந்து ஒவ்வொருவரும் உயர்ந்த உணவைச் சமைத்துச் சாப்பிடுவ தல்லாமல் ஒருவரேனும் பிச்சைக்குச் செல்வதில்லை; அதனால் யாசகர் அகப்படுவது அருமையா யிருக்கும்; ஆகையால் அங்குள்ள எல்லோரிடத்தும், "யாசகர்க்கு முதலில் உணவிட்டு உண்ணும் பாக்கியத்தை நாம் பெறவில்லையே," என்கிற ஏக்கம் ஒன்றுமே குடிகொண்டிருக்கும். இன்னும் அந்நகரத்தில் கொலைத்தொழிலைக் கற்கின்ற பெண்களுடைய கண்களால் உரிய நாயகருக்கேற்படும் துன்பமும், பருவ மங்கையருடைய மேலவயவங்களின் பாரத்தால் இடை ஒடிந்துபோகுமென்று கூறுகிற துன்பமுமே யன்றி வேறு துன்பமில்லை; ஸ்திரீகள் நடக்கின்ற காலத்தில், "இவர்களுடைய தோள்முதலிய அவயவங்களைச் சுமந்து தாங்கமாட்டாமல் இடையானது ஒடிந்து போகும்; ஆதலால் நீங்கள் இவ்வாறு நடப்பது தகுதியன்று," என்று பாதங்களை வேண்டிக் கூறுவதுபோல் அவ்விரண்டு பாதங்களிலும் அணியப்பட்டிருக்கும் பொற்சிலம்புகள் இடும் அபயக்குரலையன்றி வேறு அபயக்குரலில்லை; இன்னும் அங்குத் தாமரைமலர்களால் நிறையப் பெற்றவைகளும், நீட்சி பொருந்தியவைகளுமாகிய குளங்களில் பெருகி வழிந்தோடும் நீரைச் சிறை செய்வதன்றி வேறு சிறையில்லை; சந்திரப் பிறையின் குறைவும், அழகுபொருந்திய மாதர்களுடைய சிற்றிடைகளின் குறைவுமேயன்றி வேறு குறைகளும் காணப்படா. இவையன்றி இன்னும் அந்நகரத்தில் புலியும் மானும் ஒருதுறையிற் பொருந்தி ஒற்றுமையுடன் நீரைப் பருகிவாழும்; பருந்தும், பசுமை நிறம் பொருந்திய கிளியும் இரவும் பகலுமாகிய எக்காலத்திலும் ஒரே கூண்டிற் கூடியிருந்து மிகவும் சிநேகத்தோடு வாழும்; இன்னும் அந்நகரத்து மனிதர்களிடத்தில் வாக்கியார்த்தங்களைத் தெரிந்து கொள்ளுதலும், வேதங்களையும் புராணங்களையும் பாராயணஞ் செய்தலும், புத்தியிற் றெளிவுடைத்தா யிருத்தலும், தானங்கொடுத்தலும், பிறருக் குபகாரஞ் செய்தலும், யாகஞ் செய்தலும்,

மயக்கமற்ற பெரிய தவங்களைச் செய்தலும், செல்வவளம் பெற்றிருத்தலும், ஜீவகாருணிய முடைத்தா யிருத்தலு மாகிய செய்கைகளை விளங்கிக்கொண் டிருக்கும்.

நகரச்சிறப்பு முற்றுப்பெற்றது.

விவாக காண்டம்.

மேற்கூறிய சிறப்பினையுடைய அயோத்திமா நகரத்திலே வரிசையாக அமைந்த ஆயிரம் இரத்தினத் தூண்களும், ஆயிரம் மாற்றுள்ள பசும் பொன்னாற் செய்த மண்டப வரிசைகளும் பொருந்தி மிகவும் சிறப்புடன் விளங்காநின்ற அரண்மனையில் உன்னதமாக விளங்கும் கொலுமண்டபத்திலே, சுற்றிலும் முத்துச்சரங்கள் தொங்கும் செழுமையாகிய பொற்குடை நிழலைச்செய்ய, அழகுமிகுந்த இரத்தின சிம்மாதனத்தில் ஒருதினம் அவ்வரிச்சந்திர மகாராஜன் மிகவும் மகிழ்ச்சியோடு கொலுவிருந்தான். அப்படியிருந்த மாத்திரத்தில் ஒரு பக்கத்திலே சிற்றரசர்கள் கொடுக்கவேண்டிய பகுதிப் பொருள்களைக் கொண்டுவந்து, 'என்னுடைய பொருள் இவ்வளவு, என்னுடைய பொருள் இவ்வளவு,' என்று சொல்லி இரண்டு கைகளையுங் கூப்பித்தொழுது, சந்தோஷமாக அளந்து கொடுக்கவும், நெருங்கின பலவேதப் பிராமணர்கள் பஞ்சாங்கத்தை யாராய்ந்து பொருத்தம் நிமித்தம் முதலியவற்றை யெடுத்துக் கூறவும், பொருந்திய கவி வல்லோர் பலர் மங்கல கவிகளைப் பாடவும், பழமையான சூரியகுலந் தோன்றிய நாள்முதலாக அச்சூரியகுல மன்னர்களுடனே கிரமமாகத் தலைமையுடன் றொடர்ந்துவந்த சிரேஷ்ட குல மந்திரிகளும், பற்பல தேசத்தரசர்களும் சூழவும், சந்திரன்போன்ற முகத்தையும், சிறப்புற்ற மற்ற அவயவங்களையும், உயர்ந்த அழகையுமுடைய பெண்கள் மாறிமாறி வெண்சாமரைகளை வீசவும், கணிகையர், சிறந்த பொன்னாலே செய்யப்பட்டு இரத்தினங்கள் பதிக்கப்பெற் றிருக்கின்ற கங்

சுணங்களை யணிந்த கைவிரல்கள் அழுந்தும்படி முறுக்காணிகளை முறுக்கி வீணைகளை வாசித்துப் பாடிக்கொண் டிருக்கவும், மற்றொரு புறத்திலே பாடகங்களணிந்த பாதங்களிலே சிலம்போசை யுண்டாகும்படி நாடகமாதர்கள் அசைந்தசைந்து நடனஞ்செய்யவும், அவனுடைய மார்பின்மேலே தங்கியிருக்கிற இரத்தின மாலைகளும், முத்துமாலைகளும், அவற்றினடுவே சோதிகளைப் பாப்புகின்ற பலவகை இரத்தினங்களும் பிரகாசிக்கவும், அழகுபொருந்திய இரண்டு புயங்களிலும் தாமரைமலரில் வீற்றிருக்கின்ற வீரலட்சுமி, விஜயலட்சுமி ஆகிய இருவரும், அழகிய பொன்னாற் செய்யப்பட்ட வாகுவலையங்களும் தங்கிப் பிரகாசிக்கவும், சந்திரனைச் சடைமேற் றரித்தருளிய சிவபெருமானால் எரிக்கப்படாத மன்மதன் இவனேயென்று தன்னைப் பார்த்துப் பலர் சொல்லும்படித் தன்னிடத்தே மிகுந்த அழகு விளங்கவும், செவிகளிலணியப்பட்டிருக்கும் பெரிய மகா குண்டலங்களிலுள்ள இரத்தினங்கள் அழகிய பிரகாசத்தை வீசவும், உயிர்க்குக் காவல்செய்கிற உடைவாளானது இடைக்கச்சையில் விளங்கவும், உடுக்கை தங்கின கையையுடைய சிவனடியார்களை வணங்கித் தினந்தோறும் விபூதியை யணிவதால் அத்திருநீறுபட்டுக் காய்ப்பேறித் தோன்றிய கறுப்பு நிறமானது நெற்றியிலே பிரகாசிக்கவும், எல்லாத் திக்குகளிலுமுள்ள அரசர்கள் கிரீடங்கள் பொருந்திய சிரங்களாலே அம்மகுடங்கள் பொருந்தும்படி வணங்கி அதனாலுண்டாக்கிய கறுப்பு நிறமுள்ள வடுவானது தாமரைமலர்போன்ற இரண்டு பாதங்களிலும் விளங்கவும், தாங்கள் சேரத்தக்க சமயமறிந்து சூரியனுஞ் சந்திரனும் ஒன்றாகக்கூடி எட்டுத் திக்குகளிலும் நீண்ட கிரணங்களைப் பாப்புவதுபோல அழகுமிகுந்த முகத்திலே ஒளியானது நிலைபெற்று விளங்கவும், அந்த முகத்துக்கு மேலே சிரசில் இரத்தினங்கள் பொருந்திய கிரீடத்தின் ஒளி நிலைபெற்றுப் பிரகாசிக்கவும், குளிர்ச்சி பொருந்திய கிருபையானது இரண்டு கண்களுக்குள்ளும் நிறைந்து இமைகளுக்கு மேற்பட்டுக் கடைக்கண்களிலும் தாவி இந்த

மண்ணுலக முழுதும் வியாபித்து இங்குள்ள உயிர்களெல்லாம் சுகத்தையடைய ஆகாயத்தளவுஞ் சென்று, வெவ்விய கலிபுருஷன் மறைந்தோடிப்போக நெடிய கடலைப்போன்று விசாலித்துப் பெருகவும், ஓரத்தில் வந்து கரையை மோதுகிற சமுத்திரத்திலே நெருங்கின அலைகள் ஆகாயத்தில் வீசுகிற வெள்ளிய நுரைக்குள்ளே விளங்கும் ஓர் இளஞ் சூரியனைப்போன்று மேற்கூறியபடி பெண்கள் வீசிய சாமரைகளுக்குள்ளே அழகு பொருந்திய இரத்தினபரணங்கள் பிரகாசிக்க மிகவும் சிறப்போடு தோன்றித் தேசவிசாரணை நடத்திக்கொண்டிருந்தான்.

தீர்த்தயாத்திரை சென்ற முனிவர் அரிச்சந்திரனைக் காணல்.

அவ்வாறிருக்கின்ற சமயத்தில் தேசவிசாரணை முதலியவை முடிந்தவுடன் அவன் தன்னுடன் கூடியிருந்த எல்லோருக்கும் விடைகொடுத்து அவர்களை யனுப்பிவிட்டு முக்கியமான சிலருடன் தனித்து அச்சபாமண்டபத்தில் வீற்றிருந்தான். அப்படியிருக்கும்போது திர்த்தயாத்திரை சென்றிருந்தவர்களும், நன்மார்க்கங்கள் பொருந்தியவர்களுமாகிய அநேகம் முனிவர்கள் புண்ணியமிகுந்த பல திர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து அவ்வயோத்திமாநகரத்திலே வந்து கூடினார்கள். அங்ஙனம்வந்து கூடிய அம் முனிவர்களெல்லோரும் சடைத்தலையும், மொட்டைத்தலையும், குடுமித்தலையும், மெல்லிதான காவிதோய்த்த வஸ்திரத்தையும் சிறந்த மரவுரியையு முடுத்த இடையும், தொங்குவதாகிய சிறியவயிறும், ஆபாசமா யிளைத்து நடக்கிற நடையும், வாழ்த்தி ஆசீர்வதிப்பதும் கோபித்துச் சாபங் கொடுப்பதுமாகிய நாவும், முப்புரிநூலணியப்பட்ட மார்பும், அந்த முப்புரிநூலினிடமாக விளங்கி மிகவுமசைகின்ற மான்றோலும், விரல்களிலே தருப்பை மோதிரங்களும், யாக திட்சிதரென்று சொல்வதற் கறிகுறியாகச் செவிகளிலே தொங்குகிற குண்டலங்களும், நான்கு வேதமார்க்கங்களுக்கிசைந்த திரிதண்டங்களும், தாங்கிக்கொண்டு வருகிற குடையும், கமண்டலத்

தைக்கொண் டிருக்கின்ற காமும் உடையவர்களாய், இவ்விதம் பல வேறுவகைப்பட்ட தோற்றங்களைக்கொண்டு அந்நகரத்திலுள்ள அன்னசத்திரத்தைபடைந்து உணவுண்டிளைப்பாறி, முன்னே கடலானது முழங்கிக்கொண்டுவந்தாற்போல வேதகோஷ்டங்களைச் செய்துகொண்டு அரசர்க்கரசனாகிய அவ்வரிச்சந்திரனுடைய அரண்மனை வாயிலில் அவனைக் காணும்பொருட்டு வந்து சேர்ந்தார்கள்.

அப்படிவந்து சேர்ந்தமாத்திரத்திலே அரிச்சந்திரமகாராஜன் அம்மகரிஷிகளுடைய முழக்கத்தைக்கேட்டு மனத்திலே மிகவும் சந்தோஷங்கொண்டு உடனே எழுந்து எதிர்சென்று அவர்களைக் கண்டு, "நான் செய்த எந்தச் சிறந்த தவம் இன்று வந்து கைகூடி இம்முனிவர்களை இங்கே வரும்படிச் செய்தது?" என்று சொல்லி அந்த மகரிஷிகளுடைய மலர்போன்ற பாதங்கள் தன்னுடைய சிரசிலே பொருந்தும்படி வணங்கினன். அவ்வாறு அம்மன்னன் வணங்கியபோது அவ்வருமையான தவசிரேஷ்டர்கள் அவனை ஆசீர்வதித்து, தங்கள் வாய்முழுதும் சிறந்த வேதங்கள் முழங்கும்படி அவற்றைப் பாராயணஞ் செய்துகொண்டு அம்மன்னனிருந்த சபாமண்டபத்திலே வந்து கூடினர்கள். அங்ஙனம் கூடவே அரிச்சந்திரன் அவர்களுள் ஒவ்வொருவருக்கும் சித்திரங்களெழுதப்பெற்ற இரத்தின சிங்காசனங்களைக் கொடுத்து எல்லோரையும் இருக்கும்படிச் செய்து பின்பு தானும் தனக்குரிய ஆசனத்தமர்ந்தான்.

அவ்வாறிருந்தவுடன் குற்றமற்ற வார்த்தைகளையுடையவனுகிய அவ்வரிச்சந்திரன் அம்முனிவர்களை நோக்கி, "ஏ மகரிஷிகளே! நீங்கள் தீர்த்தயாத்திரை செய்துவந்ததில் எந்த எந்தத் தேசங்களைக் கண்டீர்கள்? எந்த எந்தத் திக்குகளிற் சென்றீர்கள்? எந்த எந்தத் தீர்த்தங்களிலே மூழ்கினீர்கள்? ஆங்காங்கே என்ன ஆச்சரியங்களைக் கண்டீர்கள்? இவைகளையெல்லாம் எனக்கு முன்னே கூறுவீராக," என்று சொன்னன். அவ்வாறு அவன் கூறவே அவ் வார்த்

தைகளைக் கேட்ட அம்முனிவர்களெல்லோரும் அவனுக்குத் தாங்கள் கண்ட விசேஷங்களைக் கூறத் தொடங்கினவர்களாய் அவனை நோக்கி, "கோசலநாட்டுக்கதிபதியே! மிகவும் விசாலம் பொருந்திய இப்பூமண்டலத்தில் சிறப்புற்று விளங்குவதாகிய கன்னோசியென்னும் நாட்டிலே கண்டகியென்னும் ஒருபுண்ணியதீர்த்த மிருக்கின்றது; அது மிகவும் சிரேஷ்டமானது; ஆகையால், நாங்களெல்லோரும் அங்குச் சென்று அத்தீர்த்தத்திலே மூழ்கிப் பின்னர் உன்னுடைய கிருபைபொருந்திய முகத்தைக் காணவேண்டுமென்னும்விருப்பத்தினாலேஇங்குவந்துசேர்ந்தனம்; இன்னும் நாங்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்பாயாக; மேற்கூறிய கன்னோசி நாட்டிலே கன்னமாபுரியென்னும் சிறந்தபட்டின மொன்றுண்டு; அந்நகரத்தைச் சந்திர குலத்தினுதித்த சந்திரதயனென்னும் அரசன் ஆண்டுவருகின்றான்; அவன், கொன்றை மலரின் வாசனைபொருந்தி நீண்டசடைகளையுடைய பரமசிவக் கடவுளை நோக்கித் தவஞ்செய்து அக்கடவுளின் வரத்தினாலே மிகவும் சிறப்புவாய்ந்த ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து வருகின்றான்; அழகிற் சிறந்த அவயவங்களைப் பெற்ற அப் பெண்மணியோ சந்திரமதி யென்னும் பெயரை யுடையவள்; மண்ணுலகத்துப் பெண்களுள்ளும், தேவேந்திரன் வாசஞ் செய்யும் சுவர்க்கலோகத்துப் பெண்களுள்ளும் இணையொருவரு மில்லாத சிறப்பு வாய்ந்தவள்; கருமையாகிய கூந்தலையுடைய அருந்ததியின் கற்பைக் காட்டினும் எண்மடங் கதிகமான கற்புடையவள்; இலக்குமியைக் காட்டினும் மிக்க பேரழகுடையவள்; பகற்காலத்திலே சூரியனுக்குத் தோற்றோடிய இருளானது அவ்வாறு தோற்ற வசையினால் வெட்கத்தைபடைந்துஅவ்வசை தீருமாறு மீண்டும்அச்சூரியனோடு போர்செய்யக் கருதிப் பல மலர்மாலைகளை யணிந்து, திரண்டு சந்தோஷித் தெழுந்தாற்போலத் தோன்றி, பல மலர்களாற் றொடுக்கப்பட்ட மாலையை யணிந்து, மேகத்தை வென்று, கருமணலைக் கோபித்துத் தள்ளி, கொடிப்பாசியையும் வெறுத்து, அழகிய கொன்றைக்காயைத் தூர்த்தி, அகிற்

புனைகையையும் மயிர்ச்சாந்தையும் புழுகையும் தரித்துப் பனி நீரிலே நனைந்து நெறிப்புடன் வளர்ந்து செழிப்புடன் நீண்ட கூந்தலையுடையவள்; தீய்ந்த பயிர்களும், பட்டுப்போன மரங்களும், முன்னாளிலே இறந்த மனிதரின் உடம்பினின்றுங் கழிந்து கிடக்கின்ற வெள்ளை யெலும்புகளும் கேட்டமாத்திரத்தில் உயிர்பெற்றெழும்பொருட்டு, பிரமதேவன் கண்ட சருக்கரையையும், பாலையும், தேனையும், அமுதையும், குயிலிசையையும், கிளிமொழியையும், வேய்ங்குழலிசையையும், வீணையிசையையும் சேர்த்து ஒன்றாகக் கலந்து அக்கலவையால் வாயில் அமைத்து வைக்கப்பெற்ற இனிய வசனத்தை யுடையவள்; கடலையும், கெண்டைமீனையும், அம்பையும், பெண்மானின் பார்வையையும், நீலோற்பல மலரையும், கருவிளம்பூவையும், மாவடுவையும், யமனையும், வலையையும், வாளையும் வெற்றிகொண்டு மிகவும் நீண்டு விசாலித்துக் கொடிய செய்கையைப் பெற்று, கன்னங்களின் இருபுறத்திலும் தாவிக் குமிழ்போன்ற நாசியிலும், காதுகளி லணியப்பட்டிருக்கும் குண்டலங்களிலும் பாய்ந்து அவற்றைச் சீறி, விடத்தைப்போலக் கறுத்துச் செவ்வரிபடர்ந்து உன் கை வேலைக்காட்டினும் கூர்மை அதிகரித்த கண்களையுடையவள்; இளங்கமுகைப்போன்ற கண்டத்தை யுடையவள்; பசிய மூங்கிலை நிகர்த்த தோள்களை யுடையவள்; நீர்ச்சுழிபோன்ற உந்தியையும் ஆலிலைபோன்ற வயிற்றையு முடையவள்; பார்த்தவர்க ளெல்லோரும், 'தருமம் விளங்குவதான தவமும், இவ்வுலகமும் இவளுடைய இடையினாலே அழிந்து போகுமென்று நினைத்து நான்முகன் இவளைப் படைக்கின்ற காலத்தில் இவளுக்கு இடையைப் படைத்திலனோ! அல்லது இவளுடைய வேல்போன்ற கண்களை முதலிற் படைத்து அவனுடைய கைகள் சோர்ந்துபோய் விட்டதனால் அவ்விடை உண்டாக்கப்படவில்லையோ! அல்லது அவன் கைகள் அதனைச் செய்தற்கு மறந்துபோய்விட்டனவோ! அன்றி அவ்விடை இவளுடைய உருவத்தில் அவனால் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதோ! அல்லது இவளுடைய தோள்முதலிய

அவயவங்களைச் சுமந்து இளைத்ததனால் அஃது இறந்துபோயிற்றோ! உருவத்தோடிருக்கின்றதோ இல்லையோ? அல்லது இனிமேல் உண்டாகுமோ! இவற்றுள் எதையும் நாம் ஆராய்ந்தறிந்து நிச்சயித்தல் முடியாது,' என்று ஆச்சரியமடைந்து கூறத்தக்க மெல்லிய இடையையுடையவள்; களிப்பையுடைய திருமாலையும் மயங்கச்செய்யும் அழகைப் பெற்ற இலக்குமி வாசஞ்செய்யும் செந்தாமரைமலரும், விரிவான வேதசாஸ்திரங்களைச் சொன்ன பிரமதேவன் உற்பத்தியான செந்தாமரை மலரும் நாணத்தை யடையும்படி முருக்கம்பூவை நிகர்த்த இதழையும், செவ்வல்லிமலரை நிகர்த்த வாயையும், நீலோற்பலமலர் போன்ற கண்களையும், குமிழம்பூவை நிகர்த்த நாசியையும், முல்லை மலர்களை நிகர்த்த பற்களையும், வள்ளைக்கொடியை நிகர்த்த காதுகளையும் பெற்றுத் தோன்றிப் பார்த்தவர், 'இது, முருக்கம்பூவும், செவ்வல்லிமலரும், நீலோற்பலமலரும், குமிழம்பூவும், முல்லைமலர்களும், வள்ளைக்கொடியும் நடுவே மலர்ந்து அழகுடன் விளங்குவதான ஒரு தாமரைமலர் என்று,' சொல்லிப் புகழுமாறு வியர்வை செறிந்து சிறப்பு மிகுவதான முகத்தையுடையவள்; இன்னும் அவள், வாசனை பரிமளிக்கின்ற மலர்மாலையையும், கூட்டுவருக்கச் சந்தனத்தையும், பிரகாச மிகுந்த இரத்தினாபரணங்களையும், அவற்றாலேற்படும் செயற்கையழகையும், இயற்கை யழகையும் தாங்கிப் பார்ப்பவர்கள், 'கொடி' யென்று சொல்லுமாறு நிறையமலர்ந்த பூங்கொம்பு போலத் துவண்டு துவண்டு இடை நுடங்கிக் கால்களிரண்டும் பூமியிலே படுவதற்குப் பொறாமல் வருந்தி மதயானைக்குப் பின் செல்லும் ஒரு பெட்டையானை போலவும், இளமையான நடையை நடந்து காட்டுகின்ற பெட்டையன்னத்தைப் போலவும் நடக்கின்ற மிருதுவான நடையை யுடையவள்.

இவ்வகைச் சிறப்பு வாய்ந்தவளும், அமுதத்துடனே தோன்றிய இலக்குமிக்கு மகுடம்போன்றவளுமாகிய அச்சந்திரமதியைப் பற்பல தேசத்தரசர்கள் மணஞ்செய்யக் கருதி, அவள் தந்தையாகிய சந்திரதயனிடத்திற் கேட்டார்கள்; அப்

படிக் கேட்ட அவர்களுள் ஒருவருக்கேனும் அவன் அப் பெண்ணைக் கொடாது மறுத்து, 'ஆதியில் இவள் தோன்றுங்காலத்தில் எம்பெருமானாகிய பரமசிவக்கடவுள் ஓர் * இரகசியமான விஷயத்தை எனக்குத் தெரிவித்து இவ் விஷயத்திற்குப் பொருத்தமானவனெவனே அவனுக்கே இப்பெண்ணைக் கொடு என்று சொல்லியிருப்பதால் அத் தகையனுக்கே இவளை மணஞ்செய்து கொடுப்பேன்,' என்று எல்லோரிடத்தும் கூறிவிட்டான்; இவ்விஷயத்தை நாங்கள் இப்போது அறிந்துவந்தோம்; நன்றாக ஆராய்ந்து பார்க்கும் போது அவள் உனக்கே மனைவியாவாளென்பது எங்கள் புத்திக்குத் தோற்றுகின்றது," என்று கூறினார்கள்.

இவ்வாறு கூறிய மாத்திரத்தில் அரிச்சந்திரனுடைய மனமானது அச்சந்திரமதியினிடத்தே சென்றது; அதனால் முன்னே பாதகமென்று கருதி நீக்கிவைத்த பெண்ணிச்சையானது அம்மகரிஷிகள் கூறிய சொற்களோடு கலந்து சென்று அவனுடைய காதுகளாகிய வாயிலின் வழியாக நுழைந்து, வெறும் வெளியிலே வைத்துக் காற்றலைசைக்கப் படும் விளக்கைப்போல அவனுள்ளத்தை அசையும்படிச் செய்து கலக்கி, மிகவும் வளர்ந்தோங்க, அவன் மனமுருகி அனலி லிடும் மெழுகுபோ லானான். சந்திரகிரணத்தினால், அதற்குப் பொருத்தமாகிய சந்திரகாந்தக்கல் உருகி நீரைச் சொரியுமேயன்றி வேறு சாதிக்கல் அவ்வாறு செய்யாது; அதுபோல் பிரமதேவன் அச்சந்திரமதியைப் படைக்குங் காலத்தில் அவ்வரிச்சந்திரனுக்கே மனைவியாகும்படிப் படைத்து அவன் விரும்புதற்குத் தகுதியுடையவளாயிருந்தபடியால் மேற்கூறியபடி அவனுக்கு விருப்ப மிகுந்து கலங்காத அவனுடைய மனமுங் கலங்கிப் புத்தி குறைய உடனே அவன் தன்னுடைய கல்வியறிவு, மன அடக்கம், பொறுமை,

---

* இரகசியமான விஷயமாவது: "சந்திரமதி மங்கலியத்தோடு தோன்றுவாள்; அம்மங்கலியம் பிறர் கண்ணுக்குத் தெரியாது; அதைக் காண்பவனெவனே அவனே அவளுக்கு நாயகனாவான்; ஆதலால், அத்தகையனுக்கு அப்பெண்ணைக் கொடு," என்று கூறியது.

பிரகாசம் முதலியவைகளை யெல்லாம் போக்கி உடம்புந் தளரப்பெற்றான்.

அப்படித் தளர்ச்சியடையினும் அவன் மிகுந்த புத்திமானாகையால், "நாம் இவ்வாறு அவசரப்பட்டு மனவுறுதியைக் கைவிடுவது தகாது" என்று மேற்கூறியபடி கரை கடந்து சென்ற பெண்ணாசை யென்னும் ஆற்றைத் தன்னுடைய அறிவென்கின்ற கரையையிட் டடக்கிக்கொண்டு அச்சந்திரமதியைப் புகழ்ந்து கூறிய அம்முனிவர்களை நோக்கி, "அந்தணர்களே! உங்களுடைய சிறந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் என் மனமுழுதும் அப்பெண்ணிடத்தே சென்றுவிட்டது; அவளை எப்படியேனும் மணஞ்செய்யவேண்டுமென்று அடியேன் நாடுகின்றேன்; எப்படியேனும் நீங்கள் அப்பெண்மணியை எனக்கு மனைவியாகும்படிச் செய்யவேண்டும்; அவ்வாறே செய்வோமென்று நீங்கள் உறுதி சொன்னால் மாத்திரம் என்னுடைய உயிர் என் தேகத்திற் றங்கும்; இல்லையேல் அது நிலைபெற்றிருப்ப தருமை," என்று கூறினான். அங்ஙனங் கூறவே அம்முனிவர்கள் அரிச்சந்திரனை நோக்கி, "அழகிய இடத்தையுடைய இப்பெரிய வுலகத்தையாளு மிறைவனே! அரசர்களுக்குள் சிம்மம்போன்று விளங்கும் வீரத்தை யுடையவனே!! உன் இஷ்டத்தை நிறைவேற்ற நாங்கள் கடைமைப்பட்டிருக்கின்றோம்; சந்திரன் போன்ற முகத்தையும், செந்திருவை நிகர்த்த அழகையும் பெற்ற அச்சந்திரமதியை நீ மணம் புரிந்து கொள்வதற்கு எங்களால் ஆகவேண்டிய காரியம் யாது? அதைக் கூறுவாயானால் தாமதமின்றி இப்பொழுதே அக் காரியத்தை முடிக்கின்றோம்; நீ விரைவில் எண்ணியிருக்கும் விஷயத்தை எங்களிடம் தெரிவிப்பாயாக," என்று கூறினார்கள்.

அதைக் கேட்டவுடனே சிவந்த கண்களையுடைய மகாவிஷ்ணுவை நிகர்த்தவனாகிய அவ்வரிச்சந்திரன் மிகவும் மகிழ்ச்சியோடு அம்முனிவரை நோக்கிச் சிவந்த கரங்களால்

வாயை மூடிக்கொண்டு மிக்க மரியாதையுடன், "முனி சிரேஷ்டர்களே! மலர்களின் அகவிதழ்களால் மிகவும் அலங்காரம் பெற்று விளங்குகின்ற கூந்தலையுடைய அச்சந்திரமதியை நான் மணஞ் செய்துகொள்ளும் பொருட்டுத் தாங்கள் பாறகற்கள் பொருந்திய பாலைநிலத்தையும், காடுகளையுங் கடந்து உங்கள் பாதங்கள் வருந்தும்படி தூதாகச் சென்று அவளைப் பெற்ற தந்தையாகிய சந்திரதயமகாராஜனைக் கண்டு அப்பெண்ணை எனக்கு மணஞ் செய்து கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக் கலியாண வார்த்தைகளைப் பேசி அம்மன்னர்பெருமான் சொல்லும் மறுமொழியைக் கேட்டு மீண்டும் என்பால் வந்து அதனைத் தெரிவிக்கவேண்டும்; நீங்கள் செல்லின் எனதெண்ணம் அவசியம் நிறைவேறும்," என்று முகமலர்ந்து கூறினான்.

முனிவர் சந்திரதயனிடத்தில் தூது செல்லல்.

மேற்கூறியபடி அரிச்சந்திரன் மிக்க விருப்பத்தோடு தன்னுடைய நோக்கத்தைத் தெரிவிக்க, அம்முனிவர்கள் அவன்மீது கருணை அதிகரித்தவர்களாய் அவனை நோக்கி, "அரசனே! கேட்பாயாக; நீ சொன்னபடியே நாங்கள் மீண்டும் இப்பொழுதே சந்திரதயனிடம் செல்கின்றோம்; தெய்வானுக்கிரகத்தால் உனக்கும் சந்திரமதிக்கும் திருமணம் ஏற்பட்டு அதனை நாங்கள் தரிசிக்கப்பெறுவோமாயின் அதுவே எங்களுக்கு மனக்களிப்பைத் தருகின்ற நன்மையான காரியமாகும்; அதனைக்காட்டினும் நாங்கள் திருப்தியடையக்கூடிய காரியம் வேறொன்றில்லை," என்று சொல்லி உடனே எழுந்தார்கள். அவ்வா றெழுந்தவுடன் மீண்டும் அரிச்சந்திரனை நோக்கி, "மன்ன! எப்படியாவது அந்தச் சந்திரமதி உனக்கு மனைவியாகும்படியான முயற்சியைச் செய்கிறோம்; நீ கவலை யடையா திருப்பாயாக," என்று சொல்லி ஆசீர்வதித்து, வேதமந்திரங்களின் இரகசியங்களையறிந்த அம்முனிவர்க ளெல்லோரும் அரிச்சந்திரனுடைய சபாமண்டபத்தை விட்டு நீங்கி, சிறப்பால் அமராவதியை

நிகர்ப்பதான அயோத்திமாநகரைக் கடந்து கன்னமாபுரியை நோக்கிச் சென்றார்கள்.

மகா தவத்திற் சிறந்த அம்முனிசிரேஷ்டர்கள் அவ்வாறு சென்ற பின்பு, அரிச்சந்திரன் சபாமண்டபத்தை விட்டு நீங்கிச் சென்று, அரண்மனை யடைந்து, மாலைக்கடன்களை முடித்துக்கொண்டு, இராவானவுடன் போசனமுண்டு பள்ளியறையிற் சென்று தனிப்பட்டவனாகிச் சயனித்துக்கொண்டான். அங்ஙனஞ் சயனித்தமாத்திரத்தில் அவன் தனிப்பட்டிருந்தபடியால் அப்போது முனிவர்கள் சந்திரமதியைச் சிறப்பித்துக் கூறிய வார்த்தைகளெல்லாம் ஞாபகத்தில் வந்தன; அதனால் அவனுக்குச் சிறிதும் நித்திரை வரவில்லை; அவனுடைய மனவுறுதியுங் கெட்டது; உடனே அச்சந்திரமதியைச் சிந்தித்தான்; மணமுடியுமோ முடியாதோவென்றையமுற்று மயக்கங்கொண்டான்; அதனாலே வருத்தத்தை யடைந்தான்; மேனி வாடினான்; ஒரு செய்கையும் செய்ய அறியாதவனாய்ப் படுக்கையிற் புரண்டு உயிர் கலங்கினான்; அவ்வாறு அவன் மதிமயங்கி நித்திரை கொள்ளாதிருந்தபடியால் தனக்குத்தானே சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினவனாய், "சிறந்த தந்தங்களையுடைய ஆண்யானை மேலேறிப் பவனிவரும் உயர்ச்சி பொருந்திய சந்திரதய மன்னனுடைய மகளாகிய சந்திரமதி இங்கே வந்த முனிசிரேஷ்டர்களுடனே மாயாரூபமாக வந்து என் மனத்துள்ளே நுழைந்து என்னுடைய அரிய உயிரைக் கைப்பற்றிக் கொண்டு மீண்டும் அம்முனிவர்கள் திரும்பிச் செல்லுங் காலத்தில் அவர்கள் கூடவே போய்விட்டாளோ! ஒன்றுந் தெரியவில்லையே! சூரியனுடைய தேரின் ஒற்றைச் சக்கரமானது சுழன்று வருவதான இவ்வுலக முழுவதையும் நான் காவல் செய்யத் தொடங்கி முடிசூட்டிக்கொண்ட அந்நாள் முதலாக இந்நாள்வரையிலும் என்னுடைய ஆளுகையில் திருட்டென்பதே ஏற்படாமலிருந்தது; அப்படியிருக்க, இன்றைக்கு ஒரு பெண்கொடி தன்னுடைய வல்லமையினாலே ஒருவரு மறியாமல் மறைந்துவந்து என்னுடைய ஆவியைத்

திருடிக்கொண்டுபோய்விட்டாள்; இதை ஆராய்ந்து பார்த்தால் எனக்கு இப்போது மிகுந்த அறியாமை யேற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது," என்று கூறினான்; அவ்வாறு கூறிப் பின்னரும், சந்திரமதியை விளித்து, "மயில்போலுஞ் சாயலையுடைய என் கண்ணே! மான் பார்வைபோலும் மருண்ட பார்வையையுடைய பெண்ணே!! உலகத்தில் பிறர்க்குரியதாகாமல் தனக்கே உரியதாகும்படி ஒருவனால் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கும் பொருளை வனத்தில் வாசம் செய்கின்ற வேடர் அபகரித்துச் செல்லும்படி அவன் விட்டுவிடுவானோ? ஒருநாளும் விடமாட்டான்; அதுபோல எனக்கே உரியதாக எண்ணி நான் பாதுகாத்துவரும் என்னுயிரை வேறொருவர் கைப்பற்ற நான் சம்மதிப்பேனோ? ஒருபோதும் சம்மதியேன்; அப்படி அதன்மீது நான் மிக்க அபிமானம் வைத்திருந்தும் அஃது இப்போது உன்பால் வந்துவிட்டது; நீ செய்த திருட்டு மாயையால் அஃது இவ்வாறு உன்பால் வந்ததோ அல்லது தானாகவே விரும்பி வந்துவிட்டதோ தெரியவில்லை; எனக்குரியதாகிய அது மேற்கூறியபடி தானாகவே வந்தபோதிலும் அதனை உனக்குரியதாகக் கைக்கொள்ளலாமோ? நீ சிறிதும் யோசியாமல் அதனை இவ்வாறு கைக்கொண்டிருக்கின்றாய்; இது நியாயமாகாது; கரிய நிறத்தோடு விளங்குகின்ற கடலாற் சூழப்பெற்ற இந்தப் பெரிய வுலகத்தி லுள்ளவர்களுக்கெல்லாம் நன்மையைத் தரும் தவப்பயன் யாதெனில் குற்றமற்ற பிள்ளையைப் பெறுதலே யென்று அறிந்தோர் கூறுவர்; அப்படியிருக்க, உன் தந்தை பல ஜனனங்கடோறுஞ் செய்து வந்த வஞ்சனையின் பயனாக உயிரைத் திருடுங் கள்ளச் செய்கையையுடைய உன்னைப் பெற்றிருக்கின்றார்; இச்செய்கை முழுதும் கொடிதேயாகும்; உன் தந்தை உன்னைப் பெறும் பொருட்டுச் செய்துவந்தது வஞ்சனையே யன்றித் தவமன்று," என்று விடியுமளவும் வாய்க்கு வந்ததை யெல்லாம் சொல்லிப் பிதற்றிக்கொண்டிருந்து விடிந்தபின் னெழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு இராஜ

காரியங்களிற் பிரவேசித்தான்; அவ்வாறு பிரவேசித்தும் தான் கொண்ட எண்ணம் மனத்தைவிட் டகலாதபடியால், அன்று பகலிலும் அவன், "அந்தச் சந்திரமதியினுல் நான் இவ்வாறு அடைகின்ற வாட்டத்தை யெல்லாம் அவளிடம் நேரிற் சொல்லி ஆற்றிக்கொள்ளும்படி அவள் எனக்கு மனைவியாகி என்னிடம் கிட்டி வருவாளோ? அல்லது அப்படி அமைந்து வாராமல் பின்னும் இப்படியே எனக்குத் துன்பத்தைச் செய்துகொண்டிருப்பாளோ? அப்படி அவள் செய்கிற துன்பம் அதிகப்படுமோ? அல்லது குறையுமோ?" என்று சொல்லிப் பலவாறு சிந்தனை செய்துகொண் டிருந்ததோடு மற்றைநாட்களிலும் இவ்வாறே தனக்குட் பல வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு தூது சென்ற முனிவரின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

முனிவர் கன்னேசிநகர மடைதல்.

அயோத்திமாநகரத்தில் மேற்கூறியபடி அரிச்சந்திரனிருக்க, மகானுபாவனுன அவன் சந்திரமதியைக் கலியாணஞ்செய்துகொள்ளும்பொருட்டு விவாக வார்த்தைகளைச் சந்திரதயனிடம் பேசுவதற்காகச் சென்ற முனிவர்கள், அயோத்திநகருக்கருகில் வழியிற் றோன்றிய கமுகமாச் சோலைகளுடனே குளங்களையுங் கடந்து அப்பாற் சென்று இடையி லெதிர்ப்பட்ட காடுகளிலும், மலைகளிலும், ஆறுகளிலும் நடந்து, அவற்றையுந் தாண்டிப்போய்க் கன்னேசியென்னும் சிறந்த நகரத்தைச் சார்ந்து, வெற்றிபொருந்திய சந்திரதயமன்னன் தங்கியிருக்கும் சபாமண்டபத்திற்குள்ளே போனர்கள். அப்போது மகா மேருவை நடுவே துளைத்துத் துவாரமாகச் செய்துவைத்தாற்போ லிருக்கிற மேனுப்பரிகையையுடைய அழகிய அக்கொலுமண்டபத்திலே பகுதிப் பொருள்களைச் செலுத்தும் பல சிற்றரசர்கள் வந்து தேர்களையும் யானைகளையும் விட்டிறங்கி அச்சந்திரதயன் பாதங்களை வணங்கும்பொருட்டு அவன் சமீபத்திற் சென்று வணங்கி ஒரு பக்கத்தில் நிற்கவும், மேககர்ச்சனையையும்,

கடல் முழக்கத்தையும் போன்று அழகிய பேரிகைகள் முழங்கவும், பிரகாசமிகுந்த மகுடம் சிரத்தில் விளங்கவும், மிக்க ஒளியையுடைய வீரகண்டைகள் பாதங்களிற் பிரகாசிக்கவும், கைகளிலே ஒளி மிகுகின்ற இரத்தின கங்கணங்கள் மின்னவும், காதுகளிலே சூரியனைப்போல் ஒளிவிடுகின்ற குண்டலங்கள் தொங்கவும், ஆங்காங்கே பதிக்கப்பெற்றிருக்கின்ற மரகதமணிகளாற் பச்சையொளியை வீசுவதான பொன்மலைபோன்ற அச்சபாமண்டபத்தின் சாளரங்களின் வழியாக அம்மன்னன் தோள்களி லணியப்பட்டிருக்கும் கேயூரங்களின் கிரணம் வீசவும், உயர்ந்த அவயவ நலத்தைப்பெற்ற பெண்கள், செம்பொன்னாலும் செழிய இரத்தினங்களாலும் காம்பு முதலியன செய்யப்பெற்று விளங்கும் வெண்சாமரங்களை வீசவும், சுக்கிரபகவானை நிகர்த்த மதிநுட்பத்தையுடைய மந்திரிகள் துதிக்கவும், தவங்களைச் செய்து சிறப்புற்ற முனிவர்கள் வாழ்த்தவும், வேதங்களைப் பாராயணஞ் செய்கின்ற பிராமணர்கள் சூழவும், பாட்டுக்களைப் பாடுவதில் வல்லவர்களாகிய வித்வான்கள் அம்மன்னன் வாழ்வுறும்படி பல வாழ்த்துக்கவிகளைப் பாடவும், இன்னும் பலவகைச் சிறப்புக்களுடனே மகாமேதாரணத்தின் கீழமைந்த சிங்காதனத்திலே அச்சந்திரதயன் வீற்றிருந்தான்.

அப்படி அவன் சிறப்புடன் தங்கியிருக்கும்போது மேற்கூறியபடிச் சென்ற முனிவர்க ளெல்லோரும் அவன் திருச்சமுகத்தை யடைந்தார்கள். அவ்வாறடைந்த மாத்திரத்தில் சந்திரதயன் அம்முனிசிரேஷ்டர்களைக் கண்டு உடனே எழுந்து அழகிய கிரீடந் தாழும்படி வணங்கினன். அங்ஙனம் வணங்கவே அம்முனிவர்க ளெல்லோரும் தங்கள் மனத்தில் சந்தோஷ மதிகரிக்க அவனைப் பன்முறை வாழ்த்தி அதன்மேல் தங்களுக்குரிய ஆசனங்களி லமர்ந்தார்கள். அப்படியிருந்தபின்பு சந்திரதயன் அவர்களை நோக்கி, "அந்தணர்களே! முன்னர் இக்கன்னோசி நாட்டிற்கு வந்து, மேகங்கள் நீரைச் சொரிவதனாலே வெள்ளந் திரண்டு முத்துக்களை

யும் இரத்தினங்களையும் கொழித்துக்கொண்டு பல அருவிகளின் வழியாகப் பாய்ந்து காடுகளெல்லாம் பெருகியோடுவதான கண்டகியென்னும் தெய்வத்தன்மை பொருந்திய தீர்த்தத்திலே மூழ்கிப் பின்னர் இந்நகரை யணுகி என்னைக் கண்டு, நான் வணங்க, என் சிரசிற்கு உங்கள் பாதங்களை முடிகளாகச் சூட்டி ஆசிர்வதித்துச் சென்ற நீங்கள் உடனே இவ்வளவு சீக்கிரத்திற் றிரும்பி வந்ததற்குக் காரணமியாது? உங்கள் மனத்தி லேற்பட்ட விருப்பமென்ன? கிருபைசெய்து சொல்லுவீராக," என்று கூறினான்.

அதைக் கேட்ட முனிவர்கள் சந்திரதயனை நோக்கி, "அரசனே! எங்கள் வார்த்தைகளைக் கேட்பாயாக; நாங்கள் இங்கு வந்து தீர்த்தமாடிச் சென்றபின்பு அயோத்திமாநகரத்திற்குச் சென்றோம்; அங்குச் சென்றவுடன் நீதியுந் தயையும் பொருந்திய அந்நகர்க்கிறைவனான அரிச்சந்திரன் எங்களைக் கண்டு வணங்கி, நாங்கள் பார்த்த விசேஷங்களைக் கூறும்படி கேட்டான்; அவ்வாறு கேட்டவுடன் நாங்கள் பல விசேஷங்களையுஞ் சொல்லிக்கொண்டு வரும்போது உன்னுடைய நகரத்தின் வளத்தையும், உனது சன்மார்க்கத்தையும், உன் புத்திரியினுடைய சிறப்பையுங் கூறினோம்; அவ்வாறு கூறியபின்பு இவற்றை யெல்லாங் கேட்ட அவன் உன் குமாரத்தியாகிய சந்திரமதியையே மணம்புரிய வேண்டுமென்னும் விருப்பங்கொண்டு, அதன்பொருட்டு உன்பால் வரத் துணிந்து, முதலில் உன்னுடைய சம்மதத்தைக் கேட்டறிந்து வரும்படி எங்களை வேண்டினான்; அதனால் மீண்டும் நின் திருச்சமுகத்தில் நாங்கள் வந்துசேர்ந்தோம்; செல்வத்தின் மிகுந்தவனே! அருந்ததிபோலுங் கற்புடைய புத்திரியைத் தந்தையர் வேறு தாழ்ந்த வழியிலே போகாவண்ணம் தருமநெறி மிகுந்த புண்ணிய புருஷரிடத்தில் வருத்தப்பட்டாவது மனைவியாகச் சேர்ப்பது தீயசெய்கையன்று; இஃது, எக்காலத்தும் அழியாத பெரிய தவத்தினு லேற்பட்ட நல்வழியேயாகும்; நன்மண மிகுந்த மாலையை யணிந்த வேந்தனே! இன்னமுங் கேட்பாயாக; இந்தப் புவனமுழுதும்

நாங்கள் சென்று அநேக கோடி அரசர்களை யெல்லாங் கண்டு வந்தோம்; அவர்களுள் இந்த அரிச்சந்திரனை நிகர்க்கும் சிறப்பு வாய்ந்தவர் ஒருவரு மிலர்; ஆதலால், சிவன் கிருபை செய்து வரத்தைக் கொடுக்க அவ்வரத்தினாலே நீ பெற்ற திருக்குமாரிக்கு இவனையன்றி வேறே தகுதியான நாயகன் ஏற்படுவது அருமை; நீ இவனுக்கே நின் மகளை மணஞ் செய்து கொடுத்தால் மிக்க சிறப்படைவாய்," என்று கூறினார்கள்.

உலக மயக்கத்தை யொழித்த நற்குணங்களையுடைய அம்மகரிஷிகள் இவ்வாறு கூறக்கேட்டவுடன் பொய்யில்லாத வார்த்தைகளையுடைய சந்திரதயமன்னன் அவ்வரிச்சந்திரனுக்குப் பெண்ணைக்கொடுக்கலாமென எண்ணினான்; அவ்வாறெண்ணியும் சிவன்மொழிந்த இரகசியமொன் றிருப்பதால் அதற்குச் சம்மதியாதவனாய், "முனிவர்கள் கூறிய வார்த்தைகளினால் அரிச்சந்திரனே நமது குமாரத்திக்குத் தகுதியான நாயகனாகத் தோற்றுகின்றான்; அதனால் அவனுக்கே சந்திரமதியைக் கொடுக்கலாமென எண்ணம் உண்டாகிறது; ஆயினும், பார்வதிபங்களுன பரமசிவன் முன்னே மொழிந்த இரகசியம் இவ்வெண்ணத்திற்குத் தடையாகின்றது; எப்படியாயினும் நாம் பரமசிவனுடைய கட்டளைப்படியன்றோ செய்யவேண்டும்; அதைமீறி நம்மாலென்ன செய்யக்கூடும்?" என்று தனக்குட் சிந்தித்து, ரிஷிகளை நோக்கி, "முனி சிரேஷ்டர்களே! நீங்கள் சொல்வது சரியே; அரிச்சந்திரன் என் புத்திரிக்குத் தகுதியான நாயகன்றான்; அவனுக்கே அவளை மணஞ்செய்து கொடுக்கலாமென எண்ணமிருக்கிறது; ஆயினும், ஆதியில் எனக்கு வரங்கொடுத்த சிவன் ஓர் இரகசியத்தைச் சொல்லி, 'இதை வெளிப்படுத்துகிறவனெவனோ அவனே உன் புத்திரிக்கு நாயகனாவான்,' என மொழிந்திருக்கின்றனர்; ஆதலால் அக்கட்டளைப்படியே செய்யவேண்டும்; நான் சந்திரமதிக்குச் சுயம்வர மேற்படுத்தி எல்லா அரசர்களையும் வரவழைக்கின்றேன்; நீங்கள் அரிச்சந்திரனையும் இங்கு வரும்படிச் செய்யுங்கள்; நானும்

அப்பெண்ணும் நல்லதவத்தைச் செய்திருப்போமாயின் அச் சுயம்வரத்தில் அரிச்சந்திரனே அவ்விரகசியத்தை வெளிப் படுத்தல்கூடும்; அங்ஙனம் வெளியிடின் அவனுக்கே என் மகளை மணஞ்செய்து கொடுப்பேன்," என்று சொன்னான்.

இவ்வாறு சந்திரதயன், 'அந்த அரிச்சந்திர மகாராஜனை இங்கே வரவழையுங்கள்' என்று முனிவரிடம் கூறவே வேதபாராயணத்திற் சிறந்தவர்களான அம்மகரிஷிகள் மன மகிழ்ச்சியடைந்து தங்கள் முகத்தில் சந்தோஷக்குறி அதி கரித்துத் தோன்ற விரைவாக எழுந்திருந்து சந்திரதயனை வாழ்த்தி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு அயோத்திமா நகரை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் அவ்வாறு செல் லவே சந்திரதயன், "என்னுடைய மகளாகிய சந்திரமதிக்கு, சுயம்வரதினம் இதற்கேழாவது நாளாகும்; ஆதலால் எல்லா மன்னரும் அத்தினத்தில் இங்குவந்து சேரவேண்டும்," என்று ஓலைகளையெழுதி அவற்றைத்தூதுவர்கையிற் கொடுத் துப் பெரிய இவ்வுலகத்திலே நிறைந்த அரசர்களுக்கெல்லாம் அனுப்பினான். அவ்வாறு எல்லோரும் வணங்கத்தக்க பாதங் களையுடைய அரசர்க்கரசனான சந்திரதயன் அனுப்பிய தூதர் கள் பல தேசங்களுக்கும் நிருபங்களைக் கொடுத்துத் தெரி வித்தவுடனே செழித்த குடையையுடைய அரசர்களெல் லோரும் மிக்க ஆசையோடும் சந்தோஷத்துடனும் புறப் பட்டுத் தங்கள் தங்கள் தேசங்களையும் நகர்களையும் விட்டு நீங்கி எழு கடல்களும் பொங்கிவந்து வளைந்தனவென்று சொல்லும்படி கன்னமாபுரிவந்து நெருங்கிக் கூடினார்கள்; அங்ஙனம் கூடவே அந்நகரத்திலுள்ள சோலைகளிலும், நல்ல நீரையுடைய குளக்கரைகளிலும், தேவ கோயில்களிலும், நாடகப் பெண்களாடுகிற நாடக மேடைகளிலும், பெரிய மாடங்களின் ஒதுக்கமான மூலைகளிலும், சிறப்பமைந்த வெளி முற்றங்களிலும், பொன்மயமான சத்திரங்களிலும் அம்மன்னர்களுடைய சேனைகள்வந்து தங்கின. மானினது மருண்ட பார்வையை வென்ற கண்களையுடைய சந்திரமதி க்கு நாயகனாகப்போகும் அரிச்சந்திரன் வருவதற்குமுன்னே

அவசரப்பட்டு வந்துசேர்ந்த பல அரசர்களுக் குரியவைக ளாய்த் தேவர்களுமறிந்து சொல்லமுடியாதபடி வந்திறங் கின யானைக் கூட்டங்களையும், தேர்க் கூட்டங்களையும், குதி ரைக் கூட்டங்களையும், காலாட்படைக் கூட்டங்களையும், அமைச்சர் முதலாயினோர் கூட்டங்களையும், மங்கையர் கூட்ட ங்களையும் அளவிட்டுச் சொல்லுதல் எவர்க்கு மியலாது.

இங்கே மேற்கூறியபடி அரசர்களும் சேனைகளும் வந் துகூட, அரிச்சந்திரனிடம் திரும்பிச்சென்ற நல்ல தவத்தை யுடைய முனிவர்களெல்லோரும் மிக்க நன்மை பொருந்திய அயோத்திமா நகரடைந்து அரிச்சந்திரனிடம் சென்றார்கள். அவர்கள் வரவைக்கண்ட அம்மன்னன் உடனே எழுந்து அவர்களை வணங்கி, மிக்க மரியாதையுடன் கரத்தால் வாயை மூடிக்கொண்டு அவர்களை நோக்கி, "முனி சிரேஷ்டர்களே! நீங்கள்சென்று கன்னமாபுரி மன்னனிடத்தில் பேசிய விதத் தையும், அதற்கவர் விடைகூறிய தன்மையையும் எனக்கு உரைத்தருளுவீராக," என்று கூறினான். அதைக் கேட்ட வுடனே அரிய தவங்களைச் செய்தற்குரிய அம்முனிவர்க ளெல்லோரும் அரிச்சந்திர மகாராஜனை நோக்கி, "அரசனே! உலகத்தில் பெரியதவத்தை யுடையவன் நீயேயன்றி வேறொ ருவருமில்லை; சந்திரதயன் தன்னுடைய மகளை உனக்கே மணஞ் செய்துகொடுக்க விருப்பமுறுகின்றான்; ஆயினும், 'அப் பெண்ணைப் பற்றிச் சிவன் மொழிந்த இரகசியத்தை வெளிப்படுத்துவோனுக்கே அவளைக்கொடுக்கவேண்டுமென் கிற ஏற்பாடொன் றிருப்பதால் அந்தப்படி வெளிப்படுத்து வோனுக்கே அவளை மணமுடிக்க வேண்டும்; நான் இப் போது சுயம்வரம் ஏற்படுத்தி எல்லா அரசர்களையும் வர வழைக்கின்றேன்; நீங்கள் அரிச்சந்திரனையும்வரவழையுங்கள்; தெய்வானுக்கிரகத்தால் மேற்கூறிய இரகசியம் அம் மன்ன னால் வெளிப்படுமாயின், அவ்வேந்தனுக்கே சந்திரமதியைக் கொடுப்பேன்,' என்று மொழிந்தான்; நாங்கள் நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது நீ செய்த தவப்பயனால் அவள் உனக்கே மனைவியாவா ளென்பது விளங்குகின்றது; ஆத

லால் நீ விரைவில் எங்களுடன் புறப்பட்டு வருவாயாக," என்று மொழிந்தார்கள்.

அரிச்சந்திரன் கன்னமாபுரிக் கேகுதல்.

முனிசிரேஷ்டர்கள் மேற்கூறியபடி மொழிந்த மாத்திரத்திலே அரிச்சந்திரன் மிக்க சந்தோஷத்தை யடைந்து, அவ்வாறுண்டான உவகையானது வளர்ந்தோங்கவும், தோள்கள் விம்மிதங் கொண்டபடியால் வாகு வலையங்கள் வெடித்து நீங்கவும் உடனே யெழுந்து மலையைக் காட்டினும் உயர்ந்து விளங்கும் செம்பொன் மயமான அரண்மனையை விட்டு வெளியேசென்று ஆசாரவாசலிலே வந்து நின்று, மந்திரிமுதலிய காரியஸ்தர்களை நோக்கி, "நான் இப்பொழுது கன்னமாபுரிக்குப் புறப்படுகின்றேன்; ஆதலின் எனக்கு முன்னமே நீங்களும் புறப்படுவதோடு நம்மைச் சார்ந்த அரசர்களையும், சேனைகளையும், பணிப்பெண்கள், அகப்பரிவாரமகளிர் முதலிய பெண்களையும், இன்னும் ஆங்குச் செல்லத் தக்கவர்களையும் கரும்புகள் நிறைந்த வயல்களை வேலியாகவுடைய அக்கன்னோசி நாட்டை நோக்கிச் செல்லும்படிச் செய்வீராக," என்று மொழிந்து உடனே தன்னுடைய தேர்ப்பாகனைநோக்கி, "பாக! விரைவில்சிறந்த மணிகள் கட்டப்பெற்று அழகுடன் விளங்குவதான நம்முடைய தேரை அலங்கரித்துக்கொண்டு வருவாயாக," என்று கட்டளையிட்டு, அப்பொழுதே அரண்மனைக்குச் சென்று ஸ்நான ஜெபதபங்களை முடித்துப் போசனமுண்டு தன்னை மிக்க சிறப்புடன்அலங்கரித்துக்கொண்டு பயணத்திற்கு ஆயத்தமாயிருந்தான். இதற்குள் சாரதியானவன் தேர்ச்சாலைக்குச் சென்று பல தேர்களை அலங்கரித்து, ஒவ்வொரு தேருக்கும் தக்கபடி ஒவ்வொன்றிலும் பல யானைகளையும், சிங்கங்களையும், குதிரைகளையும், பூதங்களையும் பூட்டிக்கொண்டுவந்து அரண்மனைவாசலில் நிறுத்திப் பிரகாசமிகுந்த வீரக்கழலையணிந்த பாதங்களையுடைய அரிச்சந்திரன் பாதங்களில் சாஷ்டாங்கமாக வணங்கினான்.

அதன்மேல் அவ் வரிச்சந்திரமகாராஜன், தோலா லிறுகக்கட்டியிருக்கும் பெரிய பேரிகைகளும், சங்குகளும், நிலைபெற்று முழங்க, மாலைகள் தங்கிய தோள்கள் பூரிக்கத் தனக்குரிய இரதத்தின்மேலேறி அதி சீக்கிரமாக அதனைச் செலுத்திச் சென்றான்; அரிச்சந்திரன் அவ்வாறு அழகிய தேரைச் செலுத்திக்கொண்டு சென்றவுடனே அவனுக்குக் குற்றேவல் செய்கின்ற அநேகம் அரசர்களும் தங்கள் தங்களுக்குரிய தேர்களில் ஏறிச்சென்றார்கள்; அப்படி அவர்களேறிச்சென்ற நூறுகோடி பொன்மயமான தேர்கள் மலைகள்போல அரிச்சந்திரனுடைய தேரைச் சுற்றிலும் நிறைந்து பக்கங்களிலும் நெருங்கின. இன்னுஞ் சில அரசர்கள் பல குடைகளின் நிழல்கள் சூழ இரத்தினப் பல்லக்குகளின் மீதேறிச் சென்றார்கள்; தங்களுடைய மதிநுட்பத்தினாலே உலகத்தைக் கைவசப்படுத்தும் ஒருகோடி மந்திரிமார்களும் அவ் வரிச்சந்திரமன்னனைப் புகழ்ந்து வணங்கிக் கைகூப்பிக்கொண்டு சென்றார்கள்; பொன்னிறமான மேனியையுடைய கொடிபோன்ற பெண்களும், கருப்பு வில்லையுடைய மன்மதனை நிகர்த்த யௌவன புருஷர்களும் அன்னக்கூட்டங்களுடனே சிங்கக்கூட்டங்கள் சேர்ந்து சென்றாற்போல விரைந்து சென்றார்கள்; அரிச்சந்திரனுக்குக் குருவாகிய வசிஷ்டமுனிவரும், சுமப்பவர்களால் தாங்கப்படுகின்ற வெள்ளை நிறமாகிய முத்துச் சிவிகையிலேறி அன்னவாகனத்தின்மீ தமர்ந்துசெல்லும் பிரமதேவனைப்போல அரசர்களும், மந்திரிகளும் வணங்க உயர்ந்த வேதங்களைச் சொல்லிக்கொண்டு அவ்வரிச்சந்திரனுடனே பிரயாணமாகிச் சென்றார்; காலாட்படைகளெல்லாம் பூமியிற் பாய்ந்து செல்கின்ற சமுத்திரத்தை நிகர்த்துச் சென்றன; வலிமை பொருந்திய குதிரைகள் அக்கடலிலே தாவிச் செல்கின்ற அலைகளைப்போலச் சென்றன; மதமொழுகுகின்ற யானைகள், வாசனை பொருந்திய அருவிக்கூட்டங்கள் பாய்கின்ற பல மலைகள் நடந்து செல்வதுபோற் சென்றன; மேற்கூறிய முனிவர்களோ, அரிச்சந்திரன் அவர்களை நோக்கி, "நீங்கள் நடந்து செல்

வது தகாது, வாகனங்களில் ஏறிச்சென்றாலும் அவற்றால் உங்களுக்குத் துன்பமுண்டாகும்; ஆகையால் நீங்கள் ஆகாய மார்க்கமாகச் செல்வது நலம்,'' என்று சொல்வதற்குமுன் தாங்களே, ''நாம் பாறக்கற்கள் நிறைந்த பாலைநிலம் முதலிய வற்றின் வழியாகச் சென்றால் அவற்றாலேற்படுந் துன்பத்தை நம்முடைய கால்கள் சகிக்கமாட்டா; வாகனங்களிலேறிச் சென்றாலும் அவையெல்லாம் நமக்குத் துன்பத்தைச் செய்வனவாம்,'' என்று யோசித்து அதிசீக்கிரத்திலே தங்களுடைய ஆகாய கமனசக்தியைக் கொண்டு மேலே கிளம்பி ஆகாயமார்க்கமாகச் சென்றார்கள்.

இவ்வாறு அரிச்சந்திரமகாராஜன், இரத கஜ துரக பதாதியென்னும் நால்வகைச் சேனைகளுடனே செல்லும் போது அநேகம் வெண்முத்துக் குடைகளும், அநேகம் பவளக் குடைகளும், கொண்டாடத்தக்க அநேகம் மாணிக்கக் குடைகளும், ஆகாயத்தில் உலாவுகிற நூறுகோடி சூரியரும் நூறுகோடி பூரணச்சந்திரர்களும் பரவினதுபோல எங்கும் பரவித் தோன்றின; அருமையான சூரியகுலத்திற் பிறந்த அரசர்களுடைய நீதிசார்ந்த புகழானது எவ்விடத்தும் நிரம்பியதுபோலப் பிரகாசம் பொருந்திய வெண்சாமரைக் கூட்டங்களும், வெள்ளைக் கொடிகளும் சேனைகள் செல்லும் மார்க்கமெல்லாம் நெருங்கித் தோன்றின. இன்னும் மேற் கூறிய நால்வகைச் சேனைகளுள்ளும் குதிரைகள் வாயுவேகத்தினும் மிஞ்சிய வேகத்துடன் சென்றன; யானைகள் ஆகாயத்திலுள்ள மேககர்ச்சனைபோல முழங்கி அம்மேகங்கள் வேகங்கொண்டு செல்வதுபோற் சென்றன; இரதங்கள் பல மலைகள் வேகங்கொண்டு செல்வதுபோற் சென்றன; காலாட் படைகளோ பல ஆறுகள் திரண்டு வேகமாகச் செல்வது போற் சென்றன. இத்தகைய சேனைகளுள் மழுவாயுதங்களும், கைவாள்களும், நீண்ட விற்களும், வளைதடிகளும், வச்சிராயுதங்களும், தோமரங்களும், கொழுக்களும், சக்கரங்களும், அநேகங் கைவேல்களும், வெப்பத்தைக் கொண்டு ஒளி பொருந்தி நீண்ட சூலங்களும் நெருங்கி விளங்கின;

அவ்வாறு சேனைகளுக்குமேலே நெருங்கி ஒன்றோடொன்று மோதிய அவ்வாயுதங்களின் வாயினின்றுண்டாகிய வெவ்விய நெருப்புப் பொறிகள், மலைகளின் மேலே நெருங்கிய மூங்கில்கள் ஒன்றுடனொன்று மோதி யுராய்வதால் பற்றி யெரியும் நெருப்பைப்போல ஆகாயமெல்லாம் விளங்கின; "கடலிலே நீண்ட பொன்மலைகள் தோன்றி அவற்றின்மேல் பல பொன்னிறக்கொடிகள் படர்ந்திருந்திருக்குமானால் அக்கொடிகளே சமுத்திரம்போன்ற இச்சேனையினடுவே பொன்மயமான தேர்களி லேறிச்செல்லும் பொற்கொடிபோன்ற மாதரை நிகர்க்கும்," என்று பார்த்தோர் சொல்லும்படி, வருத்தங் கொண்டு துவளுகிற இடையையும், நல்ல நெற்றியையுமுடைய இராஜஸ்திரீகள் அழகிய பொற்றேர்களிலேறிச் சென்றார்கள்; இன்னும் அவர்களுள் கருமையான மேகம்போன்ற கூந்தலையுடைய சில பெண்கள், பெரிய யானைகளின் முதுகின்மேல் ஏறிச் சென்றார்கள்; அவர்கள் அவ்வாறு சென்ற தோற்றமானது எப்படி யிருந்ததென்றால், மேகங்களி னடுவே தோன்றுகின்ற பல மின்னல்கள் மறையாமல் விளங்கி அம்மார்க்கத்தில் செல்வதுபோன்றிருந்தது; இன்னும் வில்லை நிகர்த்த நெற்றியையுடைய சில ஸ்திரீகள், காற்றினாலே ததும்புகின்ற நீரையுடைய கடலின்கண் தாவிச் செல்கின்ற அலைகளின்மேல் தங்கிச் செல்கின்ற அன்னங்கள் போல விலை மதிக்கக்கூடாத வேகம் பொருந்திய குதிரைகளின்மே லேறிச்சென்றார்கள்; இவ்வாறு எல்லோரும் செல்லும்போது வழியிடையில் சரயுநதியானது குறுக்கிட்டது. அங்ஙனங் குறுக்கிடவே அரிச்சந்திரமகாராஜன் தன்னுடைய குதிரைக ளிறங்கிச் செல்லவும், நெடிய காலாட்படைக ளிறங்கிச் செல்லவும், யானைகள் இறங்கிச் செல்லவும், தேர்கள் இறங்கிச் செல்லவும், தானும் தன்னுடைய தேரை அதிலிறக்கிச் செலுத்தினான்; அப்படி அவன் செல்லுகின்ற காலத்தில் அவனுடைய சேனைகள் அவ்வாற்றைக் கடந்து வரிசை வரிசையாகக் கரையேறின; அவ்வாறு கரை யேறும்போது அச்சேனைகள் நெருங்கிக் கால்களால் எற்றிய நீரானது கரை

யின்மேலும் மோதி வீச அதனாலே அந்நீருடன் சேர்ந்து கரையிற் றுள்ளிய வாளைமீன்களுக்கு அளவேயில்லை; இன்னும் அவ்வாற்றில் சிங்கங்களை நிகர்த்த புருஷர்களுடனே கூடிச் சென்ற மின்னலைப்போன்ற பெண்களுடைய ஆபரணங்கள் சிதையும்படி பல மனிதர்களும் நெருங்கிச் சென்றபடியால் அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களும், மேகலைகளும் அறுபட்டு வெள்ளத்தில் வீழ்ந்தன; அப்படி வீழ்ந்தும் அவர்கள், செல்வச்செருக்கால் அவ்வாபரணங்களை நோக்காதவர்களாயும், அம்மேகலைகளைப்பற்றிச் சிந்தியாதவர்களாயும் சென்றார்கள். இவ்வாறு சேனைகளும், ஸ்திரீகளும், புருஷர்களும் நெருங்கிச் சென்று அச் சரயுநதியைக் கடக்க, அரிச்சந்திரனும் கடந்து கரையேறினான்.

அதன்மேல் சப்திக்கின்ற வீரக்கழலை யணிந்த அவ்வரிச்சந்திரமன்னன் அநேகம் அரசர்களுடனே அதற்கப்பாற்சென்று அநேகம் நாடுகளையும், பலதருக்கள் நிறைந்த சோலைகளையுஞ் சார்ந்து பின்னர் நீண்ட காடுகளையும், மலைகளையும், கான்யாறுகளையும் பார்த்துக்கொண்டேபோய் அவற்றையுங் கடந்து ஓடுவதான குளிர்ந்த நீரையுடைய கோமதியாற்றினருகே சென்றான். அவ்வாறு அவன் கான்யாறு முதலியவற்றைக்கடந்து கௌசிகையென்னும் பெயரைக்கொண்ட கோமதியாற்றைச் சார்ந்தவுடன் அதனருகே யிறங்கினான்; அவன் இறங்கினமாத்திரத்தில் யானைகளும், இரதங்களும், குதிரைக்கூட்டங்களும், காலாட்படைகளும் இறங்கின. அங்ஙனம் ஒளிதங்கிய வேலாயுதங்களையுடைய சேனைகள் நெருங்க, எங்கும் பரவும் ஒளியையுடைய கிரீடத்தையணிந்த அரிச்சந்திரமன்னன் அக்கோமதியாற்றங்கரையில் இறங்கினமாத்திரத்தில் சூரியன் உலகமெல்லாம் பரந்து வியாபிக்கின்ற கிரணங்களைத் தனக்குள்ளே ஒடுக்கிக்கொண்டு மேற்றிசைக்கடலிலே இறங்கி மறைந்தான். அவ்வாறு ஆழத்தையுடையதும், அலைகள் பொருந்தியதும், கருமை நிறமுள்ளதுமான மேற்றிசைக் கடலிலே சூரியன் போய் மறைந்தவுடனே அரிச்சந்திரமகாராஜனும், மற்றுமுள்ள இராஜகுமாரர்களும், அவர்கள் பெண்

களும், மற்றுமுள்ள சிற்றரசர்களும், அவர்கள் பெண்களும், புத்தி மிகுந்த மந்திரிகளும், மற்றச் சேனுவீரர்களும், மேற் கூறியபடி தங்கள் தங்களுக்குரிய வாகனங்களாகியஇரதங்களை யும், மதயானைகளையும், குதிரைகளையும், பல்லக்குகளையும் விட்டிழிந்து ஒவ்வொருவரும் ஆங்குத் தங்குவதற்குரிய இடங்களை ஆராய்ந்து தேடினார்கள். அவ்வாறு தேடி மந்திரிமுதலியோர் அரிச்சந்திரனுக்குத் தகுதியான ஒருகூடாரத்தை அமைக்க அம்மன்னன் அதிற் றங்கினன்; மற்ற அரசர்களும், அவர்களுடைய பெண்களும் பட்டினுலும் மணிகளாலும் செய்த கூடாரங்களை நிறுத்தி அமைத்து அவற்றினுச்சியில் ஆகாயத்தை யளாவும்படி செம்பொன்னுற் செய்த சிகரங்களை வைத்து உள்ளே மேற்கட்டிகளையும், வெளியே கொடிகளையும் கட்டி, நீண்ட திரைகளையும் தொங்கவிட்டு, இன்னும் பல விதமான அலங்காரங்களைச் செய்து அவற்றில் தங்கியதோடு, சந்தனமரங்களிலும், சண்பகமரங்களிலும், வலிய கிளைகளையுடைய அகில்மரங்களிலும், தேவதாரமரங்களிலும், பருத்து நீண்ட பலாமரங்களிலும், அங்குசம் பாய்ந்ததனு லேற்பட்ட புண்களையுடையயானைகளையும், குதிரைகளையும்கட்டினர்கள். இவ்வாறு யானை முதலியவற்றைக்கட்டி எல்லோரும் தங்கள் தங்களுக்குரிய கூடாரங்களில் தங்கியபின் உடன் கொண்டு சென்ற உணவுகளை யுண்டிளைப்பாறித் தாம்பூலந்தரித்து மகிழ்ச்சியோடு சயனித்துக்கொண்டார்கள்; அப்போது ஸ்திரீகள் தங்கள் நாயகருக்குப் பிரயாணத்தா லேற்பட்ட கஷ்டம் நீங்கும்படி விசிறி முதலியவைகளால் வீசிச் சிரமபரிகாரஞ் செய்தார்கள்; இன்னும் அங்கே வாசனையின் பொருட்டும், காட்டு மிருகங்கள் அணுகாதிருக்கவும் அவர்கள் அகிற்கட்டைகளையும், சந்தனக்கட்டைகளையும் போட்டு நெருப்பை மூட்டி யெரிக்க அதனு லுண்டாகிய நெருப்புச் சுவாலையும், புகையும், கண்டவர் நெஞ்சந் திடுக்கிடும்படி, செவ்வானமானது வெள்ளிய மேகத்தினுல் மூடப்பட்ட தோற்றம் போல் மேலெழுந்து விளங்கின. புகுதற்கு விட்ட வழியின்றி வேறு வழிகளில்லாமல் எங்கும் கவிந்திருக்கின்ற கூடாரங்

களுக்குள்ளே மின்னுகின்ற அழகிய இரத்தின விளக்குகளின் ஒளிகள் எப்படி விளங்கினவெனில், சிலம்பிப்பூச்சிகளாலே கட்டப்பட்ட பட்டுநூற்கவிப்புகளுக்குள் பல மின்மினிப்பூச்சிகள் தங்கியிருப்பன போன்று தோன்றின.

இவ்வாறு தூண்டாமணி விளக்குகள் பிரகாசிக்க எல்லோரும் கூடாரங்களில் தங்கியிருக்கும்போது சந்திரனானவன், "நீண்ட கடிவாளத்தையுடைய வேகமான குதிரைமேலேறிப் பகைவர்முன் சென்று ஜெயத்தைக்கொண்ட அரிச்சந்திரமகாராஜன், பழிப்பில்லாத நமது குலத்திலவதரித்த சந்திரவதிக்குத் தகுந்த நாயகன்றானா," என்று தெரிந்துகொள்வதற்கு வந்து எட்டிப்பார்ப்பதுபோலச் சந்தோஷித்து எட்டுத்திக்குகளிலும் தன்னுடைய கிரணங்களைப் பரப்பி உதயமாயினான். அப்படி அவன் உதயஞ்செய்த மாத்திரத்தில் சிவந்த கெண்டைமீனை நிகர்த்த கண்களையுடைய சந்திரவதிக்கு நடக்கப்போகும் திருக்கலியாணச் சடங்கிற்குப் பூமிதேவியானவள் தோஷமில்லாத வெள்ளிப்பானையில் சமையல் செய்த பாற்பொங்கலானது பொங்கி அப்பானையைச்சுற்றிலும் வழிந்ததுபோல வெள்ளிப்பானையை நிகர்த்த அச்சந்திரனிடமிருந்து புதிதானசந்திரிகை எங்கும்பரவிவிளங்கிற்று. அங்ஙனம் பரவியசந்திரிகையாலே பேதமைமிகுந்தபெண்களும், அவர்களுடைய நாயகரும் மேற்கூறிய கூடாரங்களில் சந்தோஷித்து நித்திரை செய்தார்கள். அரிச்சந்திரனொருவன் மாத்திரம் தன் மனதில் சந்திரவதியின் மீதேற்பட்ட விருப்பமும், அதனாலுண்டாகிய வருத்தமும் அதிகரிக்கத் தனியனாய்ப் படுத்து நித்திரை யில்லாதிருந்தான். அவ்வாறு நித்திரையில்லாது சந்திரவதியைக் கருதிக்கொண் டிருந்தபடியால் அவனுக்கெதிரே அவளுடைய உருவெளித் தோற்றம் அடிக்கடியுண்டாய் மறையத் தலைப்பட்டது; அதனால் அவன் அப்போது அவ்வுருவெளித் தோற்றத்தைப் பார்த்தான்; அங்ஙனம் பார்த்தவுடனே சந்தோஷித்தான்; அதையே கருதினான்; அப்படிஅவன் கருதிய சிறிதுநேரத்திற்குள் அத்தோற்றம் மறைந்துவிட்டது; அவ்வாறு மறையவே அவன் துக்கித்

தான்; கலங்கினான்; அவ்விதம் அவன் கலக்கமுற்றுச் சிறிதும் நித்திரைகொள்ளா திருந்தபடியால் அவ்விரவு அவனுக்கு ஒரு யுகம்போலத் தோற்றிற்று; அதனால் அவன் கொட்டாவி விட்டுக்கொண்டு, "சந்திர குலத்தினளாகிய சந்திரவதியினிடத்திலே என்மனது செல்லும்வழியில், கழியாதிருக்கின்ற இந்த இராத்திரி மாத்திரம் தொலைந்து போவதற் கிடமில்லையோ," என்று புலம்பி அவ்விரவையும், மன்மதனையும், சந்திரனையும், தூங்காத தன்னுடைய கண்களையும் வெறுத்துக்கொண்டிருந்தான்.

நொடிப்பொழுதாவது ஒரு குறையைச் சொல்லி நொந்து கொள்ளாதவனாகிய அரிச்சந்திரன், மேற்கூறியபடி கொடுமையையுடைய மன்மதனையும், செழுமையான சந்திரனையும், தூங்காத கண்களையும், உலகத்திலே வேறொன்றி விடியாதிருக்கின்ற இரவையும் வெறுத்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அழகிய கோழிகள், "அரிச்சந்திர மகாராஜனைப் பெண்மாயையும், இரவும், சந்திரனும், சேர்ந்து வாட்டுகின்றன; எமதையனாகிய அவனோ இச்சமயம் மிகவும் இளைத்துப்போய் எளியனா யிருக்கின்றான்; அங்ஙன மிளைத்திருப்பதால் இத்துன்பத்தைச் சகியான்; ஆகையால் இத்துன்பம் அவனுக்கு நீங்குமாறு சூரியனே! நீ விரைந்து வருவாயாக," என்று கூப்பிடுவதுபோல இறகுகளினாலே மார்பிலடித்துக்கொண்டு கூவின. அவ்வாறு கூவினமாத்திரத்தில் அக்குரலைக் கேட்டு விரைந்து வருபவன்போலச் சூரியன் உதயமாயினான்; அப்படி உதயமானவுடனே வெவ்விய கிரணங்களையுடையவனாகிய அச்சூரியனுடைய தோற்றத்தைக் கண்டு இரவெல்லாம் ஆரவாரித்துக் கொண்டிருந்த கடலும் தன்னுடைய ஒலி யடங்கிற்று; சந்திரனும் தன்னுடைய கிரணங்களைச் சுருக்கிப் பிரகாசங் குறைந்தான்; அக்கருணத்தில் குயில்களெங்குங் கூவின; செம்போத்துகள் கத்தின; குளங்களிலே தாமரைமலர்களில் தூங்கிக்கொண்டிருந்த அன்னம் முதலிய பறவைகளெல்லாம் விழித்துத் துள்ளித்துள்ளிச் சப்தித்தன, அவ்வாறு எல்லா ஜீவராசிகளும் விழித்

Acc.No: 558
Q1:38

தெழுந்து மகிழ்ச்சி யடையும்படி உதயஞ்செய்த சூரியன், "நான் இப்போது என்னுடைய தேரை வேகமாகச் செலுத்தி, என் குலத்திற் பிறந்த அரிச்சந்திரனை வருத்திய பாவமிகுந்த இரவையும், சந்திரனையும் கோபித்து அழகிய இடத்தையுடைய இவ்வுலகத்தை விட்டுப் போகும்படி துரத்துகின்றேன்," என்று சொல்லிக்கொண்டு வருபவன்போல மிகவும் மேனி சிவந்து மேலெழுந்து தோன்றினன். அப்படித் தோன்றிய அச்சூரியன் அளவற்ற தன்னுடைய கிரணங்களை எங்கும் பரப்பிய தோற்றமானது எப்படி யிருந்ததெனில், "உலகத்திலுள்ள துன்பங்களைப் போக்கித் தருமங்களை நிலை நிறுத்தின அரிச்சந்திரமகாராஜனுக்குத் துன்பத்தை யுண்டாக்கிக்கொண்டிருந்த இரவாகிய பெண் இப்போது என்னைக் கண்டு ஓடிப்போனாலும் அவள் போகும் திசைகளெல்லாம் பின்பற்றி அவளைப்பிடித்து வருத்துங்கள்," என்று சொல்லி அவன் அவற்றை அனுப்பியதுபோன் றிருந்தது.

இவ்வகைச் சிறப்புக்களுடன் சூரியன் உதயமாகி மேலெழுந்து தோற்றியவுடனே அரிச்சந்திரன் முதலிய எல்லோரும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கடல் முழக்கத்தைப்போலப் பேரிகைகள் முழங்கச் சிவனடியைப் பூஜித்து அப்பாற் செல்லும்பொருட்டு அவ்வரிச்சந்திரனும், அவனோடு கூடிச்செல்லும் கௌரவமுடைய சிலரும் ஒளி பொருந்தி இரத்தினங்கள் பதிக்கப்பெற்று விளங்காநின்ற தேர்களின் மீதேறினார்கள்; மற்றவர்களும் தங்கள் தங்களுக்குரிய பற்பல யானைகளிலும், குதிரைகளிலும், பல்லக்குகளிலும் ஏறினார்கள். அவ்வாறு எல்லோரும் வாகனங்களிலேறிக்கொண்டவுடனே அரிச்சந்திரமகாராஜன் அந்தப் பெரிதான கோமதியாற்றைவிட்டு நீங்கி உயர்ந்த யானைகளும் குதிரைகளும் நெருங்கி முன்னே நடக்க, வாசனை பொருந்திய மாலையையணிந்த கூந்தலையுடைய பெண்கள் கூட்டமும் பின்தொடர்ந்து செல்லச் சந்தன மரங்களோடு கூடி, உயர்ந்து விளங்குகின்ற பெரிய மலைகளின் சாரலை யடைந்தான்,

அவ்வாறு சேர்ந்தவுடன் ஒரு மலைபடிவாரத்தில், கிளிகள் கூடி இசைகளைப் பாட, மலர்முதலியவற்றாலேற்படும் மிக்க வாசனை மலிந்த கடுக்காய்மரம், பலாசமரம், மாமரம், மஞ்சாடிமரம், பலாமரம், விரிகின்ற மலர்களையுடைய சண்பக மரம், வேங்கைமரம், கோங்குமரம், மூங்கில்மரம், சொரிகின்ற மலர்களையுடைய சுரபுன்னைமரம், அசோகமரம் ஆகிய பலதருக்கள் நெருங்கிய ஒரு சோலையிலே தங்கினான். அவ்வாறு தங்கியவுடன் அலைகளையுடைய சுனைநீராடவும், அருவி நீரில் மூழ்கி விளையாடவும், பெண் யானைகளும், வலிய ஆண் யானைகளும் செல்வதுபோல வில்லைப்போலும் நெற்றியை யுடைய பெண்களும், கல்லைப்போலுந் தோள்களையுடைய புருஷரும் அம்மலைமீதேறினார்கள். அம்மலையானது அப்புருஷருடைய தோள்களை ஒப்பாகிய பல சிகரங்களை யுடையதாயும் அவர்கள் விளையாடத் தகுந்ததாயும் அமைந்திருந்தது. அதனால் அப்பெண்களும் புருஷர்களும் அம்மலையில் பற்பல விடங்களிற் சென்று அருவிகளிலே நீராடுகிறவர்களும், சுனைகளிலே குளிப்பவர்களும், அப்படி நீராடும்போது ஜலத்தின் ஆழத்திற்கஞ்சி அகன்ற கரைமேலேறுகிறவர்களும், அக்கரைகளிலே நின்று ஒருவரோடொருவர் சரசஞ் செய்து விளையாடி விரைந்தோடி நீரிற் குதிப்பவர்களும், வாசனைமிகுந்த மலர்களைக் கொய்பவர்களும், அம்மலர்களைச் சூடிக்கொண்டு வேறிடத்திற்குத் திரும்புகிறவர்களுமாய் மகிழ்ச்சியடைந்து அந்நீர் விளையாட்டு முதலியன முடிந்த பின்னர் நுண்ணிய மணல்களையுடைய வண்டல்களிலும், அவ் வண்டல்களையுடைய சோலைகளிலும், பருத்தமலைச் சிகரங்களிலும், பளிங்குப் பாறைகளிலும், ஒப்பில்லாத தினைப்புனங்களிலும் சென்று பலவிதமான வேடிக்கைகளைப் பார்த்துப் பொழுது போக்கினார்கள்.

இவ்வாறு அரிச்சந்திரனும், அவனுடன் சென்றவர்களும் ஆங்குப் பலவேடிக்கைகளைப் பார்த்துப் பகற்பொழுது கழிந்து இரவு வந்தவுடனே அழகிதான அம்மலைச்சாரலைச் சார்ந்த சோலையிலே தங்கி அவ்விரவைக் கழித்தார்கள். அவ்

வாறு கழித்து அவ்விருள் நீங்கி விடிந்தபின்னர் ஒளிபொருந்திய வேலாயுதத்தைத் தாங்கிய அரிச்சந்திரன் எழுந்து காலைக்கடன் முதலியன முடித்து மிக்க பிரகாசத்தையுடைய தேரின்மேலேறி வெற்றிபொருந்திய தன் சேனைகளுடனே அப்பாற் சென்றான். அவ்வாறு புறப்பட்டுப் போகும்போது தேர்கள் வேகமாகச் செல்லுதலாலே வழியிலெதிர்ப்பட்ட பெரிய மூங்கிற் காடுகளும், தாழ்ந்த மலைச் சிகரங்களும், விசாலித்த சோலைகளும் சிதைந்தழிந்து பொடியாகி அவற்றினின்று மெழுந்த தூளிகள் ஆகாயமெல்லாம் பாவிச் சென்றன; இன்னும், அவ்வரிச்சந்திரனுடைய செம்பொற்றேரின் சக்கரங்கள் உராய்ந்து செல்வதினாலே வழியிலுள்ள பல நிறம் பொருந்திய மலைகளும், பரந்த கற்பாறைகளும் அச்சக்கரங்களின் பொன் படிந்து மேருமலையைப் போன்று பொன்னிறமாக விளங்கின; இப்படி அவைகள் விளங்கும்படி அரிச்சந்திரன் சேனைகளோடு தன் தேரைச் செலுத்திக்கொண்டு சென்று மேலும் ஆகாயத்தை அளாவி உயர்ந்திருக்கின்ற பெரிய மலைகளையும், பெரிய யானைகளின் மதம்படிந்துயர்ந்திருக்கின்ற மேடுகளையும், மலைச்சாரல்களையும், கஸ்தூரி வாசனை பொருந்தி உயர்ந்திருக்கின்ற பல சோலைகளையும், வெப்பமாகிய காடுகளையும் கடந்து, இன்னும் பல அருமையான விடங்களையுந் தாண்டிப் போயினான்; அவ்வாறு தாண்டிச் சென்ற அவன் பின்னர், விரிந்திருக்கின்ற வெவ்விதான விடர்நிலங்களும், வெயிலினாலே வெந்து கீழே சரிந்து கிடக்கின்ற பெரிய மலைகளும், அவ்வெப்பத்தினாலே இலைகள் சருகாய் வெந்து மேலே பொரிந்திருக்கின்ற பெரிய மரங்களும் பூமியின்மேற் புகைந்தெரிந்து நெருப்புச் சுவாலையெழுவதாகிய கடுமையைக்கொண்ட பாலைவனத்தைச் சார்ந்தான்; அப்பாலைவனத்தில், எக்காலத்தும் தேவர்களுக்குத் துன்பம் விளையாதிருக்கும்படி சிவபெருமான் திரிபுரத்தையெரித்த நெருப்பும், வெற்றி பொருந்திய மன்மதன் சாம்பலாகும்படி நெற்றிக் கண்ணைத் திறந்து அவனை யெரித்த நெருப்பும், வலிமையாகிய அலைகளை வீசி யெழுகின்ற கடலி

ணடுவே யிருக்கின்ற வடவைக்கனலும் ஒன்ருகக் கூடிவந்து குடிகொண்டனவென்று சொல்லும்படி எவ்விடத்தும் வெப்பம் அதிகரித்திருந்தது; இன்னும் அந்தப் பாலைநில முழுதும் மேற்கூறியபடி சுடுகின்ற நெருப்புச் சுவாலையினுலும், ஆகாயத்தி லெழுந்து வருகின்ற சூரியகிரணத்தினுலும் வெந்து உடலம் வற்றுதலாய் மெலிந்த பாம்புகளின் தலைகள் பிளப்ப, அவற்றினின்றும் வெடித்து மேலெழுந்து பூமியில் வந்து விழுகின்ற நாகரத்தினங்கள், பகற்காலத்திலே ஆகாயத்தி லிருந்து உதிருகிற நக்ஷத்திரங்கள் போன்று ஆங்காங்கே பிரகாசித்தன; இவையன்றி அங்கே கரிய மேகங்களெல்லாம் அந்நிலத்தின் வெப்பத்தினுலே தீய்ந்து மழைத்துளிகளே யில்லாமல் கூட்டங் கலைந்து அந்நிலத்திற்கப்பா லோடிப் போய்த் தாங்கள் மழை பெய்வதையே மறந்துவிட்டபடியினுலே அப் பெரிய நிலமெல்லாம் வெடித்து அவ்வெடிப்பின் வழியே கீழுலகத்திலுள்ள ஆதிசேடனுடைய சிரோரத்தின சோதிகள் விளங்கிக்கொண்டிருந்தன; அப்படி விளங்கிய தோற்றம் எப்படி யிருந்ததெனில், அப்பெரிய பாலைநிலம், தன்மேல் நெருப்பைக் கக்குகிற சூரியன்மேற் கோபித்து அவனைச் சுடுதற்குக் கண் சிவந்து மேலே கிளம்பினதை நிகர்த்திருந்தது. அந்நிலத்தருகேயுள்ள மான்களெல்லாம் நீரின்றி விடாய்கொண்டு தேகமிளைத்து வற்றிய சோர்வினுலே, தமக்கேற்பட்ட தாகத்தை நீக்கிக்கொள்ள, நீர்போலத் தோற்றும் பேய்த்தேராகிய கானலைப் பெருகிய குளத்து நீரென்று நினைத்து அக்கானல் தோற்று மிடங்களை நோக்கி ஓடியோடி நீர் சிறிது மகப்படாமையினுலே வருந்திச் சிறிதேனும் ஈகையில்லாப் பாவிகளிடத்தில் தினந்தோறும் யாசித்துச் சென்று ஒன்றுமகப்படாமல் முகவாட்டங்கொண்டலையும் யாசகரைப் போன்று திரிந்தலைந்தன; ஓரிடத்தில் நீர்போற் ருேன்றி அங்குச் சென்றவுடன் மறைந்து வேருேரிடத்திற் ருேன்றும் அக்கானலோ, திரவியம் மிகுந்த ஈகையாளரைப்போல நடித்து யாசகர் சமீபத்திற் சென்றவுடன் மறைந்தோடும் பாவிகளைப் போன்றது. இன்னும் அவ்விடத்

திலே சண்டைகள் நடக்குங் காலத்தில் வெற்றிகொண்ட ஒவ்வொருவரும் தாங்கள் பகைவரைக் கொன்ற சாமர்த்தியங்களையும், அப்பகைவர் பட்ட விதங்களையும், தங்கள் பெயர்களையும் ஞாபகார்த்தமாக எழுதி நாட்டப்பட்ட கற்களும், அருந்துவதற்கு நல்ல நீர் கிடையாமல் உடல்பதைத்து உயிர்நடுங்கியலைந் திறந்தயானைகளின் தந்தங்களும், பார்ப்பவர் அச்சங் கொள்ளத்தக்க கன்மேடுகளும், சிறுகுன்றுகளும் ஆங்காங்கே விளங்கின; அவற்றினிடையே சிள்வண்டுகளெல்லாம் நீண்ட கடற்றிரையின் முழக்கத்தைப்போலச் சப்தமிட்டுச் சுழன்று திரிந்தன. இன்னும் அந்நிலத்தில் எரிகின்ற வெயிலின் மிகுதியாலே யானைத் தந்தங்கள் வெடிக்க அதினின்றும் ஆகாயத்திற் கிளம்பிக் கீழே விழுகின்ற முத்துக்களை மழைத்துளிகளென்று நினைத்துச் சாதகப்பறவைகளெல்லாம் சென்று பார்த்து அவை மழைத்துளிகளில்லாமையாலே மயக்கங்கொண்டு மனம் வருந்தி யலைந்துகொண்டிருந்தன; சருகுகளெல்லாம் நெருப்புப்பற்றி யெரிந்து காற்றினுல் மேலெழுந்து கருகி இருளைப்போலப் பரவ அத்தோற்றம் ஒரு பெரிய மரத்தின் நிழலைப்போன் றிருந்தபடியால் அதனை நிழலென்று நினைத்து வெப்பத்தால் வாட்டமடைந்து வருந்தின காடிகளும், கடம்பைகளும், மான் கூட்டங்களும், கலைகளும், காட்டுக் குதிரைகளும் அவ்விடத்தில் போய் விழுந்து நெருங்கி வருந்தின.

இத்தகைய அப்பாலைநிலத்தின் வெப்பம் எப்படிப்பட்டதென்றுல், பூமிதேவி ஆடையாக வுடுத்தி யிருக்கப்பட்ட அலைகடலி னடுவேயுள்ள வடவைக்கனலில், அப்பாலைநிலத்தினுள்ள வெண் மணல்களுள் ஒரு சிறிய மணலை யெடுத்துக் கொண்டுபோய் வைத்தால் அஃது அவ்வடவாமுகாக்கினியையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கிக் கடல்நீரையும் வறட்டி அரம்பாஸ்திரீகள் தங்கியிருக்கின்ற தெய்வலோகத்தையும் நாசஞ் செய்துவிடும்; எல்லாம் அழிகின்ற ஊழிக்காலத்தில் தானிருக்கு மிடத்தைவிட்டுப் பெயர்ந்து சென்று இப்பூமியினிடங்க ளெல்லாவற்றையும் தனக்குள்ளடக்கி அழிக்கவரும்

பிரளய வெள்ளத்திலும் அப்பாலைநிலத்தின் நுண்ணிய மணலொன்றுதெறித்து விழுமாயின் அம்மணல் அந்நீர்முழுவதையும் பருகிச் சுவறச் செய்துவிடும்; இன்னும் சூரியனாலே சுடப்படுகிற மூங்கிற்காடு வெந்தெரிய அதனாலே எங்கும் மிகுந்த நெருப்பில் பாம்புகளும், மதயானைகளும் வீழ்ந்திறந்து அவற்றினுடல் அழிந்து பெருகிய இரத்தவெள்ளமானது சென்று சமுத்திரத்திற் பாய, அப்போது அவ்விரத்த வெள்ளத்தில் மலைகளைப் போன்று மிதந்து செல்லும் எலும்புக் குவியல்கள் சமுத்திரத்திற் றோன்றுகின்ற வெள்ளிய நுரைத்திரட்சிகளைப் போன்று எங்கும் விளங்கும்.

இவ்வாறு பலவிதத்திலும் பயங்கரம் மிகுந்த அப்பாலை நிலத்தின் மத்தியில், வெவ்விய யானையுரி தரித்தவளும், கங்காசலமும் சந்திரனும் விளங்குகின்ற சடையையுடைய சங்கரனுக் குரியவளும், திரிசூலியும், தாருகவிநாசனியும், சவுந்தரியும், செழுமையாக ஒலிக்கின்ற இரத்தினச் சிலம்புகளை யணிந்த திருவடிகளை யுடையவளும், எமது குலதெய்வமுமாகிய காளிதேவி திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருந்தாள் அவ்வாறு அவள் தங்கியிருந்த சபையின் சிறப்பை விளக்கமாகக் கூறுவாம் :

அவள் அங்கே எப்படி அமர்ந்திருந்தாளெனில், பிரகாசத்தோடு விளங்குகின்ற சோமசூரியாக்கினிக ளென்னும் மூன்று சுடர்களும் ஓரிடத்திலே கூடி இரண்டாகப் பிரிந்து உதயமானாற்போலச் செறிந்து விளங்கி இருபுறத்திலும் கடைப்பாகங்களிலே சிவந்து நடுவே கருமை யடைந்திருக்கின்ற இரண்டு கண்களும் மிகவும் சுழலவும், சிறிய இடையிலும் கைகளிலும் தலையிலும் ஆபரணங்களாக அணிந்த சர்ப்பங்களின் உச்சிக்கொண்டைகளிலுள்ள இரத்தினங்கள் மிகுந்து ஒளிவிடவும், மிகவும் வறுமையுற்றவர்களைச் செல்வச் செருக்குடையவர்கள் அகங்காரங்கொண்டு வருத்துவது போலக் கொடிபோன்ற இடையை வருத்தி அதற்குத் துன்பத்தை செய்கின்ற மேலவயவங்களி னழகும், தாமரைமலர்

போன்ற பாதங்களி னழகும், குறுவியர்வை தங்கிய முகத்தி னழகும் அதிகரித்து விளங்கவும், கடல்கள் பொங்கிப் பதினான்கு உலகங்களையும் அழிக்கின்ற யுகமுடிவிலே கொடுமை பொருந்திய ஊழித்தீயானது கொதித்தெரிவதுபோல், மிகவும் மாறுகொண் டெதிர்த்த தாருகாசுரனை வென்று மற்றய அசுரர்களுடைய குடல்களைப் பிடுங்கி மாலையாக அணிந்து விளங்கிய திரிசூலத்தின்மேலே வெவ்விய நெருப்பானது சுடர்விட் டெரியவும், சிவன் திரிபுரத்தைச் சுடுங்காலத்திற் றோன்றிய நெருப்பைப்போல எந்தத் திக்குகளிலும் பொடிப் பொடியாகத் தெறிக்கின்ற சுடர் ஒளிவிடும்படி வலக்கையிலே தங்கிய வாளாயுதத்தின் பிரகாசமானது ஓங்கி விளங்கவும், யுகமுடிவில் உலகத்தை யழிக்கப் பொங்கியெழுகின்ற கடலின் முழக்கத்தைப்போலவும், மேகமண்டலத்தில் இடிக்கின்ற இடியின் முழக்கத்தைப்போலவும் இடக்கையி லிருக்கிற மணிக்கேடகமானது ஒலியிட்டசையவும், ஒருகை பட்டயத்தைக் கொண்டும், ஒருகை வாளைக்கொண்டும், ஒருகை மழுவைக்கொண்டும், ஒருகை வளைதடியைக்கொண்டும், ஒருகை சக்கரத்தைக் கொண்டும், ஒருகை வேலாயுதத்தைக் கொண்டும், ஒருகை கேடயத்தைக் கொண்டும், ஒருகை வச்சிராயுதத்தைக் கொண்டும் கூட்டமாக அமைந்த எட்டுக் கைகளும் நெருப்பெழுந் தெரியும்படி அவ்வாயுதங்களை வீசுவனவாயும், சுழற்றுவனவாயும் பிரகாசிக்கவும், பொன்னாற் செய்து இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற குண்டலங்களும், கனமான சரப்பணிகளும், அஸ்தகடகங்களும், கங்கணங்களும், இரட்டையாகச் சூழுகின்ற அரைநூன்மாலைகளும், நெற்றிப்பட்டமும், அணியத்தகுந்த தோள்வளைகளும், செழுமையான பாடகங்களும், அழகிய சிலம்புகளும், சதங்கைகளும், பதக்கமும், இன்னும் அழகதிகரித்த மற்ற ஆபரணங்களும் எட்டுத் திக்குகளிலும் அசைந்து அவற்றின் சோதி நிலைபெற்று நெருங்கவும், முத்துக்களை வரிசைப்படுத்தித் தைத்து, வயிரரத்தினங்களை அவற்றினருகே சேர்த்து, நீலமணிகளையும் இடையிடையே கோத்து, நிகரில்லாத

பச்சைமணிகளையும் விரவி, பதுமராகத்தையும் பொருத்திப் பல விசித்திரமாக நெய்து செய்துள்ள இடை வஸ்திரமும், அப்படியே அழகு விளங்கும்படிச் செய்த மார்யாப்பென்னும் உத்தரீயமும், பலவிதமான மாலைகளும் சந்திரிகையையும் வெயிலையும் நிகர்த்து ஒளிகளை வீசவும், காவலாக வரிசைகொண்டு நிற்பனவாகிய ஒருகோடி பூதங்களும், பல விதமான கற்பனைகளையுங் கற்றுத் தப்பாமற் சொன்ன பணிவிடைகளைச் சீக்கிரத்திற் செய்து முடிக்கின்ற ஒருகோடி பூதங்களும், அவைகளோடு சேர்ந்து மிக்க அன்பைக்கொண்டு நிற்கும் ஒருகோடி இடாகினிகளும், நன்மார்க்கங்களைச் செய்கின்ற மந்திரிகளைப்போன்று காரியம் நடத்துவதற்கு வெளியே செல்பவைகளும் திரும்பி வருபவைகளுமாகிய ஒருகோடி பூதகணங்களும் பக்கத்திலே யுள்ளனவாய்ச் சூழ்ந்திருக்கவும், சில பிசாசுகள், பயமில்லாமல் எதிர்த்துப் போர்புரிந்து இறந்தவர்களுடைய அறுபட்ட தலைகளை எடுத்துக்கொண்டுவந்து அக்காளியினுடைய கையில் வைக்கவும், இன்னும் நூறுகோடி பேய்க்கூட்டங்கள், நரபலிகளாகக் கொடுத்த எண்ணிறந்த தலைகளை யெடுத்துக்கொண்டுவந்து அவள்முன்னே செந்நிறமான உதிரமொழுகும்படி வைக்கவும், துவளுகின்ற நுண்ணிய இடை அசைய இருபுறத்திலும் நின்று வெண்சாமரைகளை வீசுகின்றவர்களும், சிலம்புகளையணிந்த அவளுடையபாதங்களைக்கூட்டிச் சிரசின்மேலே சூடிக்கொள்ளுகிறவர்களும், ஸ்துதிப்பாட்டுக்களைப் பாடுகிறவர்களும், கூத்தின் விகற்பங்கள் தோன்றக் கிரமமாக நின்று ஆடுகிறவர்களும், அவ்வாட்டத்திற் கிசையப் பாடுகின்றவர்களுமாகிய அநேகம் அரம்பாஸ்திரீகள் புடைசூழ்ந்து நிற்கவும், திருமஞ்சன மெடுக்கிறவர்களும், பெரிய புஷ்பமாலைகளைத் தொடுப்பவர்களும், அவளுடைய வாளைப்போன்ற கண்களுக்கு மையிடுகிறவர்களும், அரிய திருவமுதை நிவேதிப்பவர்களும், அவள் சந்நிதிமுன்னே கண்ணாடி காட்டுகிறவர்களும், கபடமில்லாமல் அவளுக்கு முன்னே படிக்கம் முதலியவற்றை ஏந்தி நிற்போருமாகிய அநேக கோடி இடா

னிகள் சூழ்ந்து நெருங்கி நிற்கவும், தேவர்கள் கூடித் துதிப்பதான திருமுற்றத்திலே இம்மண்ணுலகத் துள்ளவர் கள் வந்து சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து அவள் பாதங் களை வணங்கிக் கும்பிடவும், அவ்வாறு கும்பிட்டுத் தங்க ளுடைய எண்ணங்கள் நிறைவேறும்படி வேண்டியவரங்களைப் பெற்றுக்கொள்ளவும், எல்லார்மீதும் கிருபாநோக்கத்தைச் செலுத்திப் பிரகாசிக்கின்ற சடைகள் பக்கங்களிலே அசைந் தாட, அஞ்சாத சிங்கங்கள் தாங்கப்பெற்ற பொன்னாசனத் தின்மேல் எல்லாப் பெண்களுக்கும் அரசியாய் வீற்றிருந்து விளங்கினாள்.

அரிச்சந்திரன் காளியைத் தரிசித்தல்.

அழகிய பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்யப் பெற்ற சிங்காசனத்தின்மேல் மேற்கூறியவாறு காளிதேவி யானவள் சிறப்புடன் வீற்றிருக்க, அங்குச் சென்ற அரசர்க் கரசனாகிய அரிச்சந்திரன் அக்காளி தேவியின் கோவிலைக் கண்டு, தன்னோடு கூடவந்த தேர்ப்படைகளையும், மதம்பொ ருந்திய யானைப்படைகளையும்,குதிரைப்படைகளையும்,காலாட் படைகளையும் அக்கோவிலின் கடைவாயிலிலே நிற்கும்படி நிறுத்திவிட்டுத் தான், தன்னுடைய குருவாகிய வசிஷ்ட முனிவருடனும், அருமையாகிய தவத்தையுடைய மற்ற முனிவர்களுடனும், தன்குலத்திற்றோன்றிய சுற்றத்தாராகிய அரசர்களுடனும், அக்காளி கோவிலின் திருமுற்றத்திற் சென்று அவளை வணங்கினான். அவன் அவ்வாறு வணங்கிப் பக்கத்திலுள்ள விசேஷங்களைப் பார்த்தான். அங்ஙனம் பார் க்கும்போது ஒரு தேரும், சில குதிரைகளும், ஒரு வில்லும், சில அம்புகளும், கல்லாகச் சமைந்திருந்தன; அவற்றைக் கண்டவுடன் அரிச்சந்திரன், "இவையேன் கல்லாகச் சமைந் திருக்கின்றன?" என்று யோசித்து அவற்றின்மீது தன் பார்வையை அழுத்தமாகச் செலுத்தினான். அவ்வாறு அவன் அவற்றைக் கூர்மையாகப் பார்க்கவே முன்னே கல்லாயிருந்த தேரும், குதிரைகளும், வில்லும், அம்புகளும் அக்காளிக்

கெதிரிலேயே பொற்றேரும், பொன்னிறக் குதிரைகளும், பொன்மயமான வில்லும், பொன்மயமான அம்புகளுமாய்த் தோன்றின. அப்படி முன்னுளிலே கல்லாயிருந்த தேர் முதலியன பொன்னுக மாறவே அரிச்சந்திரன் அவ்விசேஷத்தைக் கண்டு மகிழ்ந்து ஆச்சரியமுற்றுப் புளகாங்கிதங்கொண்டு, "இவைகள் என்ன காரணத்தினுல் இவ்வாருயின?" என்று ஆலோசித்தான். அப்படி ஆலோசிக்கவே பொன்மயமான சந்தனச் சேறு பூசின தோள்களை யுடையவளும், இருண்டு சுருண்டிருக்கின்ற சடையையுடையவளுமாகிய அக்காளி தேவியானவள் தனது கோவிலைவிட்டு நீங்கி வாயிலுக்கு வெளியே வந்தாள். அவ்வாறு காளிதேவி பிரத்தியக்ஷமாக வெளியே வந்த மாத்திரத்தில் அரிச்சந்திரன் தாமரை மலர்போலுந் தன்னுடைய கைகளைத் தலைமீது குவித்து அவளுடைய செம்பொன்போன்ற பாதங்களிலே விழுந்து வணங்கி அவள் திருமுகத்தை நோக்கி, "அம்மையே! என்னுடைய தவப்பயனுனது உன்னைத் தரிசிக்கப்பெற்ற இப்போதுதான் பலிதமாயிற்று; பூதங்கள் விளையாடுவதான நின் திருமுன்றிலிலே நின்ற கற்றேர்முதலியன பொற்றேர் முதலியனவாக இப்போது மாறியதற்கு யாது காரணம்? இதன் இரகசியத்தை எனக்குக் கூறி யருளவேண்டும்," என்று கேட்டான்.

அப்படிக் கேட்டமாத்திரத்திலே காளிதேவியானவள் அவ்விசேஷத்தைக் கூறத்தொடங்கினவளாய் அரிச்சந்திரனைப் பார்த்து, "மன்னவனே! கேட்பாயாக; முன்னொரு காலத்தில் வெற்றிபொருந்திய வருணதேவன், உவர்க்கடல் சூழ்ந்த இவ்வுலகவாசையை நீக்கிச் செல்லும்போது தனக்குரிய இந்தப் பொற்றேர் முதலியவற்றை இங்கே கொண்டு வந்து நிறுத்தி இவற்றைப் பிறர் கவராதிருக்கும்பொருட்டுக் கல்லாகச் சமைத்து இவற்றை எனக்குக் காட்டி, 'அம்மையே! இந்தத் தேர் முதலியன எவனுல் பார்க்கப்படும்போது கல்வடிவம் போய்ப் பொன் வடிவம் பெறுமோ அவனுக்கே

உரியனவாம்; ஆதலின் அத்தகையினனுக்கே நீ இவற்றைக் கொடுத்துவிடுவாயாக,' என்று கூறிச் சென்றான்; அப்படி அவன் கூறி இவற்றை எனக்கெதிரில் வைத்துச் சென்ற அந்நாள்முதல் இந்நாள்வரையில் இவை கல்லாகவேயிருந்தன; இப்பொழுது நீயெதிர்ப்பட்ட மாத்திரத்தில் அக்கல்வடிவம் போய்ப் பொன் வடிவம் பெற்றன; ஆகையால் நீயே இத்தேர்க்கும், குதிரைகளுக்கும், வில்லுக்கும், அம்புகளுக்கும் உரியவனாயினாய்; தடையின்றி நீ இவற்றைக் கொண்டு செல்வாயாக," என்று சந்தோஷித்து அவற்றை அவனுக்குக் கொடுத்தனள். அவ்வாறு கொடுக்கவே கோசல நாட்டாற் சூழப்பெற்ற அயோத்திநகரத்திற் கிறைவனாகிய அவ்வரிச்சந்திரன் அக்காளியைத் துதித்து வணங்கி அவற்றைப் பெற்றுக்கொண்டு தான் முன்னேறிவந்த தேரை நீக்கிவிட்டு அப்பொற்றேரிலேறி மிகவும் சிறப்புடன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான்.

மிகுந்த ஒளி பொருந்திய இரத்தினங்கள் பதிப்பிக்கப்பெற்ற கேயூரமணிந்த தோள்களையுடைய அரிச்சந்திர மகாராஜன் அவ்வாறு காளிகோவிலையும் பாலைநிலத்தையும் விட்டுப் புறப்பட்டுத் தன்னுடைய படைகளிலுள்ள வாள்கள் முன்னே செல்லவும், விற்கள் செல்லவும், காலாட்கள் செல்லவும், தேர்கள் செல்லவும், யானைகள் செல்லவும், தன்னைச் சார்ந்த பெண் கூட்டங்கள் செல்லவும் பல நாட்கள் பிரயாணஞ்செய்து இடையிடையே தங்கி முடிவில் மேற்கூறிய சந்திரதயமன்னனுக்குச் சொந்தமான கன்னோசிநாட்டிற் போய்ச் சேர்ந்தான்.

அந்தக் கன்னோசிநாடு எவ்வகைச் சிறப்புவாய்ந்ததெனில், அந்நாட்டைச் சேர்ந்த மருதநிலச்சார்பானவிடங்களில் தென்னமரங்களின் முற்றின நெற்றுக்களும், கமுகினது குலைகளும், தேன் பொருந்திய மாங்கனிகளும், விரும்பத்தக்க பலாப்பழங்களும் அந்த அந்த மரங்களில் மிகுந்திருப்பதனாலே, நீண்ட வாலையுடைய குரங்குகள் ஒரு தென்ன

மரத்திலிருந்து மற்றொரு தென்னமரத்திற் பாயும்போது அந்த அதிர்ச்சியினால் மேற்கூறிய பழங்களெல்லாம் அடியிலுள்ள வாழைமரங்களின்மேல் உதிர அவ்வாழையிலுள்ள பழங்களெல்லாம் சிதைந்தழிந்து சிந்தும்; கூனலான ஒரு ஆண்குரங்கு பாய்கிற அதிர்ச்சியால் உதிர்ந்த தென்னங் குரும்பையானது, ஒரு பலாமரத்திலே மறைந்திருந்த சிவந்த முகத்தையுடைய பெரிய குரங்கின் தலையில் விழ அதற்கஞ்சிய அக்குரங்கானது தன் பெண்குரங்கை வாலைப் பிடித்திழுத்துக் கூட்டிக்கொண்டு பக்கத்திலுள்ள வாழைத்தோட்டத்திற்குள்ளே போய்ப் புகும்; அங்குள்ள குளக்கரைகளில் பலவிதமான சங்கு முத்துக்களும், பதுமராக மணிகளும் சந்திரனுடைய பிரகாசத்தையும் சூரியனுடைய பிரகாசத்தையும் செய்து இராப்பகலென்னும் பேதந் தெரியாதிருப்பதனாலே அக்குளங்களிலுள்ள தாமரைமலர்களும் அல்லிமலர்களும் தாங்கள் மலரவேண்டியகாலத்தில் மலராமலும், குவியவேண்டிய காலத்தில் குவியாமலும் மயக்கங்கொண்டிருக்கும்; இவையன்றி அங்குள்ள சோலைகள் அசோகின் றளிர்களாலே ஸ்திரீகளின் கால்களையும், வாழைகளாலே அவர்களுடைய துடைகளையும், மூங்கில்களாலே தோள்களையும் விளக்கிக் காட்டிக்கொண்டிருக்கும்; குளங்களெல்லாம் தாமரைச் சுருள்களாலே பெண்களுடைய குழைகளையும், தாமரை மலர்களாலே முகங்களையும், நீலமலர்களாலே கரிய கண்களையும், செவ்வாம்பல் மலர்களாலே வாய்களையும் தோன்றச்செய்துகொண்டிருக்கும்; அங்குள்ள ஏரிகளோ, வயல்களுக்கு மடைகளின் வழியாக நீரைப் பாயவிட்டாலும், கார்காலந்தோறும் மேன்மேலும் நீர் வந்து பெருகுவதனாலே சிறிதும் குறைவுபடாமல் நிறைந்து, 'ஏழு கடலும் வந்து புகுந்தாலும் இவை நிறைவுறா,' என்று சொல்லும்படி விசாலமுள்ளவைகளா யிருக்கும்; இன்னும் அவ்வேரிகளினின்றும் மதகுகளின் வழியே வயல்களுக்குப் பாயும்படி நீரைப் பகுத்துவிட்டால் அந்நீர்ப்பிரிவுகள், பவளத்தினு மிக்க சிவப்புநிறம் பொருந்திய கால்களையுடைய சக்கரவாகப்பக்ஷி

கள் தங்கள் பெட்டைகளுடனே பயந்து பறந்து செல்லவும், மீன்கள் இருபக்கத்தினு மொடுங்கிச் செல்லவும் சமுத்திரம் போன்ற இரைச்சலுடையனவாய்ச் செல்லும்; இன்னும் அங்குள்ள குளங்களில் ஆண் அன்னமானது தன்னுடைய பெட்டையை விட்டு நீங்கி வேறொரு பெட்டையி னருகே செல்ல அதைக் கண்டமாத்திரத்தில் அவ்வாணன்னத்திற்குரிய பெட்டையன்னம் பிணங்கி ஒரு தாமரைமலரிற்போய் மறைய அம்மலர் குவிந்த மாத்திரத்தில் அவ்வாணன்னமானது அதைக் கண்டு, "நம்முடைய பெட்டை அம்மலர் மூடியதா லிறந்துபோயிற்று; ஆதலால் நாமும் உயிரை விட்டுவிட வேண்டும்," என்று துணிந்து அவ்வாறே செய்யத் தொடங்க, அப்போது முன் மறைந்த பெட்டையன்னம் உடனே குவிந்த அத்தாமரைமலரினின்றும் வெளியேறி அவ்வாணன்னத்தைத் தேற்றி அதன் மனத்தைத் தெளிவுறும்படிச் செய்யும்; காற்றினாலே அசைவுறும் மாக்கிளைகள் அம்மாக் கொம்புகளி லிருக்கும் தேனிறால்களில் மோதுவதனாலே அவைகள் கிழிப அவற்றினின்று மொழுகிய தேனானது ஆற்றைப்போலப் பெருகிப் பாவி அங்குள்ள குளங்களைச் சார்ந்து மடைகளின் வழியாகச் சென்று சேற்றையுடைய வயல்களில் செழிப்புற்றிருக்கும் நெல்லின் நாற்றுக்களில் பாய்ந்து எங்கும் நிறையும்.

இத்தகைய கன்னோசிநாட்டில் மேற்கூறியபடி அரிச்சந்திரன் சேர்ந்து, தன்னோடு கூடவந்த மான் பார்வை போலுங் கண்களையுடைய பெண்களின் நடையைத் தாமும் கற்றுக்கொள்ளும் பொருட்டுச் சேவல்களோடு கூடியிருந்த பெட்டையன்னங்கள் அவர்களுக்குப் பின்னே தொடர்ந்து வரும்படி மருதநிலச்சார்பான பல நிலங்களையுங் கடந்து சென்று அதன்மேல் தான் ஏறிச்சென்ற பலம் பொருந்திய தேரைவிட்டிறங்கி இரண்டு கொம்புகளையுடைய யானையின் மேலேறினன். அவ்வாறு அலங்காரம் பொருந்திய யானையின்மேலேறிய அவன், உலகமும் அண்டமும் வெடித்துப் போகுமென்று சொல்லும்படி இடியைப்போல் முழங்குவ

தான பல வாத்தியங்களும் சப்திக்க, கொடிகளும் குடைக ளும் திரண்டு செல்லப் பலவிதமான மலர் முதலியவற்றின் வாசனை பரிமளிக்கின்ற கங்கையாற்றின் கரையிற் போய்ச் சேர்ந்தான். அங்ஙனஞ் சேர்ந்தவுடனே, முற்காலத்தில் துருவாசமுனிவரிட்ட சாபத்தினாலே மகாவிஷ்ணு சர்ப்பசய னத்தில் நித்திரை செய்யுந் திருப்பாற்கடலில் தெய்வலோ கத்திலுள்ள செல்வமெல்லாம் போய்த் தங்கினாற்போலத் தன்னுடைய சிறப்புக்களெல்லாந் தங்கித் தோற்றும்படி அவ் வரிச்சந்திரமகாராஜன் தன்னுடைய சேனைகளுடனும், செல் வங்களுடனும் அந்த கங்கைக்கரையிலே இறங்கினான். அப் போது அந்த கங்காஜலமானது மின்னலைப்போற் றுவளு கின்ற சிற்றிடையையுடைய பெண்கள் ஸ்நானஞ் செய்கின்ற காலத்திலே முன் அணிந்திருந்து கழுவிவிடப்பட்ட கந்த பொடிகளுடனும், சந்தனத்துடனும், நல்ல நிறத்தையுடைய குங்குமத்துடனும் கலந்து பல நிறத்தை யடைந்து ஆகாய வில்லைப்போன்ற அழகுடையதாய் விளங்கிற்று; அத்தகைய நிறம் பொருந்திய சீலத்தைக் கொண்ட கங்காஜலத்திலே மிகவுஞ் சிறப்புற்ற அரிச்சந்திரமகாராஜனும், பரிமள மிகுந்த மாலையை யணிந்த தோள்களையுடைய மற்ற இராஜகுமாரர்க ளும், தேனொழுகுகின்ற மலர் சூட்டப்பெற்ற கூந்தலை யுடைய பெண்களும் மூழ்கிக் கரை யேறினார்கள்; பாகர்கள் யானைகளையும் குதிரைகளையும் அதிற் குளிப்பாட்டித் தாங்க ளும் மூழ்கி யெழுந்து கரை யேறினார்கள்; இன்னும் மற்றச் சேனைகளுங் குளித்துக் கரையேறின. இவ்வாறு அரிச்சந்திர மகாராஜன் தன்னைச் சார்ந்தவர்களுடனும், தன் சேனைக ளுடனும் ஸ்நானஞ்செய்து முடிந்தபின், அழகிய கையிலே வேலாயுதத்தைத் தாங்கிய அவ்வரிச்சந்திரமகாராஜன் எல்லா ஜீவராசிகளிடத்தும் கிருபையைச் செலுத்தும் புண்ணிய விசேஷத்தினாலோ, சந்திரமதியின் கற்பின் விசேஷத்தி னாலோ, அரிச்சந்திரனுடைய மந்திரிகளின் நற்குண நற் செய்கைகளாலோ அம்மன்னனுடைய சேனைகளெல்லாம் எவ் வித அபாயமு மின்றிக் கெண்டைமீன்கள் உலாவுவதான

நீர்ப்பெருக்கைக் கொண்ட அக்கங்காநதியைக் கடந்து சென்றன. அவற்ரோடு அவ்வரிச்சந்திரமகாராஜனும் அப்பாற் சென்ருன்.

இவ்வாறு கங்கையைக் கடந்தவுடன் அம்மன்னன் தன் சேனைகளுடன் விரைந்து சென்று கன்னமாபுரியைக் கண்ணாலே கண்டான். அப்போது அந்நகரிலுள்ள அன்னங்கள் விளையாடுகின்ற நீர்த்துறைகளையுடைய அகழியும், குளமும், பொன்னிறமான பெரிய மதில்களும், மாடகூடங்களும், பெரிய உப்பரிகைகளும் சிறப்புடன் சமீபத்தில் அவனுக்கெதிரே தோற்றின; அவ்வாறு தோற்றியவுடனே அரிச்சந்திரன், முன்னே சந்திரமதியின் சிறப்பைக் கூறிய முனிவர்களை நோக்கி, "அந்தணர்களே! எதிரே மாடமாளிகை கூடகோபுரங்களுடன் சிறப்புற்று விளங்குமூர் எந்த வூர்? அஃது எவருக்குரியது?" என்று வினவினுன். அவ்வாறு கேட்கவே அம்முனிவர்கள் அவனைப் பார்த்து, "அரசர் பெருமானே! முன்னமே உனக்கு நாங்கள் தெரிவித்த சந்திரமதி தங்கியிருக்கும் சிறப்பைப் பெற்ற கன்னமாபுரி இதுதான்," என்று மகிழ்ந்து கூறினுர்கள். அங்ஙனஞ் சொன்ன மாத்திரத்திலே அகவிதழ்களையுடைய மலர்களாற் றொடுக்கப் பெற்ற மாலையை யணிந்த அரிச்சந்திரன் அப்பொழுதே அச்சந்திரமதியை அடைந்தவன்போல மகிழ்ந்து மயிர்ச் சிலிர்ப்புற்று அங்கம் பூரித்தான்.

அதன்மேல் அவன் அவ்வாறு மிகுந்த சந்தோஷத்துடனே தன்னுடைய பரிசனங்களெல்லோரும் பின்னே தொடர்ந்து வர இடையிலுள்ள வழியைக் கடந்து, தன்னுல் விரும்பப்பட்ட அச்சந்திரமதி தங்கியிருக்கப்பெற்றதும், மேகங்கள் சஞ்சரிக்கும்படி உயர்ந்த மதில்களாற் சூழப் பெற்றதுமாகிய அக் கன்னமாபுரத்தின் கோட்டைவாயிலுக்கருகே சென்ருன். அவ்வாறு சென்ற மாத்திரத்தில் இருபுறத்திலும் செய்து வைக்கப்பெற்ற சிங்கங்களையுடைய கோட்டை வாயில்கள் முழுதிலும் மகாதோரணங்களும்,

நெருங்கிவந்த பகைவர்மேல் கல்லை வாரியெறியும் இடங்கணிப்பொறி முதலிய எந்திர வரிசைகளும், சிறந்த மதிலைச் சூழ்ந்த அகழியும், அவ்வகழியில் மலர்ந்து விளங்கும் நீல மலர்களும், தாமரை மலர்களும், அதில் சஞ்சரிக்கும் முதலைகளும், நீர்நாய்களும், சுறு முதலிய மீனினங்களும் மிகுந்து தோன்றின. இன்னும், நிகரற்ற பொன்மலையி னடுவிலே துவாரஞ்செய்து அதற்குள்ளே வரிசையாக நீண்ட வீடுகளை வரிசை வரிசையாக அமைத்து வைத்திருப்பதுபோல அக்கோட்டைக்குள்ளே விளங்கும் மாளிகைகளும், மாடகூடங்களும், மதிலும் சேர்ந்த வடிவம் சக்கரவாளகிரிபோன்றிருந்தது; அம்மதிலைச் சூழ்ந்த அகழியோ சிகரத்தையுடைய அச்சக்கரவாளகிரிக்குப் புறமாக வளைந்த பெரும்புறக்கடலை யொத்திருந்தது; "தாமரைக்கு நாயகனாகிய சூரியனுடைய குலத்திலே தோன்றிய பகீரதன் முற்காலத்தில் ஆகாயத்தி லிருந்து ஒரே கங்கையை உலகத்தில் வரும்படிச் செய்தான்; இப்போது சந்திரமதியைப் பெற்ற சந்திரதயமன்னனோ தன்னுடைய நகருக்குள்ளே அநேகம் கங்கைகளை வரவழைத்திருக்கிறான்," என்று பார்த்தோர் சொல்லும்படி அந்நகரத்தின் மேற்பாகங்களெல்லாம் அநேகம் வெள்ளைக்கொடிகள் பறந்துகொண்டிருந்தன; தெய்வலோகத்தி லிருக்கும் பெண்கள் பூலோகத்திற்கு இறங்கிவந்து இங்குள்ள அதிசயங்களைப் பார்க்கும்பொருட்டும், பூலோகத்திலுள்ள பெண்கள் தெய்வலோகத்திற்குச் சென்று அங்குள்ள அதிசயங்களைப் பார்க்கும்பொருட்டும் வழியாயிருக்கும்படி தெய்வலோகம் வரையிலும் உயர்த்திக் கட்டப்பட்டவைகள்போல அந்நகரத்திலுள்ள மாளிகைகளும், கோபுரங்களும், கோவில்களும் மிகவும் உயர்ந்திருந்தன; அவ்வாறு உயர்ந்திருந்த வீடுகளுக்குக் கண்கள்போலப் பொன்னா லமைக்கப்பட்ட சன்னல்களி னிடையே வேடிக்கை பார்க்கும் பெண்களுடைய முகங்கள் தோன்றும் காட்சி எப்படி யிருந்ததெனில், அநேகம் உதயகிரிகளின்மேற் றோன்றிய பல சூரியர்களுக்கு நடுவே பல சந்திரர்கள் உதயஞ் செய்ததைப்போன் றிருந்தது.

இத்தகைய நகரில் மேற்கூறியவாறு வெற்றிமாலை சூட்டப்பெற்ற வேலாயுதத்தைத் தாங்கிய அரிச்சந்திரமகாராஜன் சேர்ந்தவுடன் அவனுடைய சேனைகளெல்லாம் பொன்னிறத்தோடு அழகுபெற்று விளங்காநின்ற அந்நகரின் மதிலுக்கு வெளியிலுள்ள இடமெல்லாம் நிரம்புதலாகிப் பின்பு உலகத்தையெல்லாம் தனக்குள்ளடக்கிக்கொள்ளப் பிரளயகாலத்திற் பொங்கின நீலநிறம் பொருந்திய ஏழுகடல்களும் ஒரு குகைக்குட் போய்ப்புகுந்தாற் போல அந்நகரத்தின் கோட்டைக்குள்ளே போய்ப்புகுந்து நிறைந்தன. அதன்மேல் அரிச்சந்திரன், தோரணங்களின் பிரகாசம் வீசுகின்ற மாணிக்கத் திண்ணைகளின்மேல் பூரணகும்பங்களும், ஒளிவிடுகின்ற விளக்குக்களும் நிறைந்துவிளங்கும் சிறப்புள்ள மாளிகைகள் நிறைந்த இராஜ வீதிகளையும், மந்திரி முதலியோரிருக்கின்ற வீதிகளையும் கடந்து சென்று தான் ஏறிப்போன யானையை விட்டிறங்கிச் சந்திரதயனுடைய சபாமண்டபத்திற்குள்ளே சென்றான்.

அங்ஙனம் கற்பகத்தருவைப் போன்ற ஈகைபொருந்திய கையையுடைய சந்திரதயனுடைய சபாமண்டபத்தில் அரிச்சந்திரன் சென்றவுடனே அச்சந்திரதயன் அளவற்ற ஆனந்தமடைந்து தன்பக்கத்திற் கூடியிருந்த அரசர்களுடனே சிங்காசனத்தை விட்டெழுந்து எதிர்கொண்டு சென்று அன்புடனே இருகரங்களாலும் அவனை இறுகத்தழுவி அச்சபாமண்டபத்தில் சிங்காரமாக அமைக்கப் பெற்றிருந்த மேடைக்கழைத்துச் சென்று அவனுக்கும், அவனோடு சென்ற முனிவர்களுக்கும், அரசர்களுக்கும் தக்க ஆசனங்களளித்து உபசாரவார்த்தைகள் கூறி உட்காரும்படிச் செய்து எல்லோருமிருந்தபின்பு தானும் தனக்குரிய சிங்காதனத்தமர்ந்து பரிமளமிகுந்த தாமரைமலர்போல முகமலர்ச்சி யடைந்து தன்னுடைய கண்கள் குளிரத் தனக்கு மருமகனாகப்போகும் அவ்வரிச்சந்திர மகாராஜனைப் பார்த்தான். அவன் அங்ஙனம் பார்த்ததோடு இன்னும் சந்திரமதியின் கலியாணத்தை விரும்பி அங்கு வந்திருந்த அரசர்களும், சுற்றிநின்ற பெண்க

ளும், பிரகாசிக்கின்ற மாலையை யணிந்த மந்திரிமார்களும் தங்களுடைய கண்கள் பச்சைமரத்திலே தைத்த ஆணிபோல் அவனுருவத்திற் பாயும்படி அன்பு கொண்டு சிறிதும் கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்தார்கள். அவ்வாறு அம்மண்டபத்தில் நிறைந்திருந்த அரசர்களும், மந்திரிகளும், மற்றுமுள்ள புருஷர்களும், பெண்களும் வேறொன்றையும் பாராதவர்களாய் அவ்வரிச்சந்திரமகாராஜனையே பார்த்து, "மாந்தளிர் போலும் மேனியையுடைய இரதிதேவிக்கு நாயகனான மன்மதன் இவனே, இவனையன்றி உலகத்தில் வேறொரு மன்மதனில்லை," என்று அவன் வடிவத்தைப் புகழ்ந்து பேசினார்கள்; சந்திரதய மன்னனோ அவனழகைப்பார்த்துப் பிரமித்து சித்திரத்தைப் போல அசைவற்றிருந்து ஒன்றுஞ் சொல்லாதவனாய்த் தனக்குள்ளே, "எனக்கு உலகத்தில் இத்தகைய மருமகன் கிடைப்பது அரிதாகும்; இவன் என் குமாரத்திக்கு நாயகனாவனோ ஆகமாட்டானோ; ஈசுரன்கிருபை எப்படி யிருக்கின்றதோ; அம்பைப்போன்ற கண்களையுடையவளாகிய சந்திரமதி முன்னாளிலே அரியதவத்தைச் செய்திருப்பாளானால் இவனையே தனக்கு நாயகனாக அடைவாள்; சிவபெருமான் கூறியபடி அவளுடைய கழுத்தில் அமைந்திருக்கும் திருமாங்கல்யத்தை இவனேகண்டு அவளை மணஞ்செய்துகொண்டால் மாத்திரம் யானும் என்மகளும் சிறந்த தவத்தைச் செய்தவர்களாவோம்; இல்லையேல் எங்கள் தவம் அவமேயாம்; என்னுடைய இஷ்டம்போல் இவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதற்குச் சிவன் கட்டளை தடையாயிருக்கின்றதே; அஃதில்லையேல் யான் இப்பொழுதே சந்திரமதியை இவனுக்கு மணஞ்செய்து கொடுத்துவிடுவேன்; அஃதொன்றிருப்பதனால் ஒன்றுஞ் செய்ய வியலாதவனா யிருக்கின்றேன்," என்று பலவாறு எண்ணி வருந்தினான்.

அவ்வாறு வருந்தினவன் மீண்டும் ஆலோசித்து, "எப்படியாயினும் சிவன் கட்டளைப்படியே நாம் நடக்கவேண்டும்," என்றுறுதிகொண்டு, அரிச்சந்திரனையும் மற்ற அரசர்களையும் நோக்கி," அரசர்களே! நீங்களெல்லோரும் என்னைமதித்து

என் குமாரத்தி சுயம்வரத்திற்கு வந்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்; ஆயினும் அப்பெண்ணை என்னிஷ்டப்படி உங்களில் ஒருவர்க்குக் கொடுத்தல் முடியாது; மன்மதனை எரித்து விளங்குகின்ற நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் கட்டளையிட்டபடி அப்பெண்ணின் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் ஓர் இரகசியத்தைக் கண்டு வெளிப்படுத்துவோருக்கே அவளை நான் மணஞ் செய்து கொடுப்பேன்; மிகவும் சிறப்புற்ற கலியாணப் பந்தலுக்குள்ளே வாளாயுதத்தைவென்று விளங்குகின்ற கண்களையுடைய அப்பெண் நாளை வந்து சேருவாள்; அப்போது கலியாணகாரியம் உறுதிப்படும்; நீங்களெல்லோரும் இன்று உங்களிடங்களுக்குப்போய்த் தங்கியிருந்து நாளை வருவீராக," என்று கூறினன். சந்திரதயன் இவ்விதம் சொல்லவே அரசர்களெல்லோரும் தங்கள் தங்களுக்கமைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குச் சென்றார்கள்; உத்தமகுணங்களையுடைய அரிச்சந்திரமகாராஜனும் உயர்ந்த சபாமண்டபத்தினின்றும் நீங்கி அலங்கரிக்கப்பெற்ற யானையின்மேலேறித் தானிருப்பதற்கமைத்த மாளிகைக்குச் சென்றான்.

அரிச்சந்திரமகாராஜன் மேற்கூறியபடி யானைமேலேறிக்கொண்டு போகவே, சந்திரதயமன்னனுடைய சபையில் நடந்த விஷயங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண் வேகமாக நடந்து தோரணங் கட்டப்பெற்றிருக்கின்ற அந்தப்புர வாயிலைக் கடந்து, உடுக்கைபோன்ற இடையையும், அமுதம்போன்ற சொற்களையும், சந்திரன்போன்ற முகத்தையுமுடைய சந்திரமதி யிருக்கும் மாளிகையைச் சார்ந்து சந்தோஷ மிகுந்த முகக்குறிப்போடு அவளைக் கண்டாள். அவ்வாறு கண்டு முகமலர்ச்சியோடு நின்ற அப்பெண்ணைப் பொற்கொடிபோன்ற சந்திரமதி பார்த்து, 'இவளிடத்தில் ஏதோ விசேஷ மிருக்கின்றது,' என்றெண்ணி, "பெண்ணே! நீ இங்கு விரைந்து வந்ததையும், உன் முகம் சந்தோஷத்தோடு விளங்குகிறதையும் நோக்கும்போது ஏதோ ஒரு விசேஷ மிருக்கின்றதாகத் தெரிகிறது; உன்

மனத்தி விருப்பமென்ன? விரைவிற் கூறுவாயாக," என்றுரைத்தாள்; அப்படிச் சொன்னவளவிலே அந்தப் பெண், சந்திரவதியினுடைய செம்பொன்போன்ற பாதங்களை வணங்கித் தான் சொல்லப்போகும் சமாசாரத்தைக் கேட்கத்தகாதவர் எவரேனும் வருகிறார்களாவென்று நான்கு பக்கங்களையும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டு ஒருவரும் வராதபடியால், 'சொல்லும் சமயம் இதுதா' னென்றறிந்து, அச்சந்திரவதியை நோக்கி, "செம்மை வாய்ந்த இலக்குமியை நிகர்த்த சிறப்பு நிறைந்த அம்மையே! உன்னைக் கலியாணஞ் செய்து கொள்ள விரும்பிப் பலதேயத்தரசர்களும் வந்து உன் தந்தையாகிய சந்திரதயமன்னனுடைய சபாமண்டபத்திற் கூடியிருந்தார்கள்; அவர்களோடு அயோத்திக் கிறைவனாகிய அரிச்சந்திரமகாராஜனும் வந்திருந்தான்; அம்மம்ம! அவன் அழகை நான் என்னென்று சொல்வேன்; அவன் முகத்தை நான் பார்த்த மாத்திரத்தில் உன்னிடத்திற்கு வர மனமிசையாமல் இவ்வளவு நேரம் வரையில் அவனழகையே பார்த்துக்கொண்டு நின்றேன்; இப்பொழுதுதான் அரசசபை கலைந்து எல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ் செல்ல அவனும் தன் விடுதிக்குச் சென்றான்; அதன்மேல் நான் உன்னிடம் வந்தேன்; அவனுடைய அவயவ நலங்களைச் சிறிது கூறுவேன் கேட்பாயாக: சமுத்திர ஜலத்தாற் சூழப்பட்ட இவ்வேழுலகங்களையும் ஒன்றின்மேலொன்றாக வைத்தடுக்கத்தக்க வலிமை வாய்ந்த அவனுடைய தோள்களும், இலக்குமிதேவியின் உயிரும் மனமும் தாவிச் சென்று தங்கத்தக்க இடமகன்ற மார்பும், செந்தாமரை மலர்போல் ஒளியைக் கொண்ட கண்களும், யாசகர்கள் சந்தோஷிக்கும்படித் தினந்தோறும் திரவியங்களை வாரிக் கொடுக்கும் கற்பகத் தருவை நிகர்த்த கைகளும், பெண்கள் மனத்தை யெல்லாம் கொள்ளைகொள்வனவாகும்; இன்னும் அவனுடைய அழகு விளங்குவதான முகத்தையும், அதிலே துளிக்கின்ற குறு வியர்வையையும், செம்பவளத்தை நிகர்த்த வாயையும், மகர குண்டலங்களை யணிந்த காதுகளையும், உடுக்கைபோன்ற

இடையையுடைய பெண்கள் பார்த்தால், அவன் தங்களுக்கு நாயகனாகக் கிடைக்கப்பெறாத ஏக்கத்தினாலே அப்பெண்களுடைய உயிர் மெலிந்து அவர்களுடம்பில் நின்றாலும் நிற்கும், நில்லாமற் போனாலும் போகும்; அவனுடைய மார்பிற்குக் கீழுள்ள மயிரொழுங்கின் கருமையும், அழகுநிறைந்த வயிறும், படர்ந்த மார்பும், இந்திரவில்லைப்போல்வனவாகிய புருவங்களும், சிறந்த நெற்றியும், பட்டமாங்களும் தளிர்க்கும்படி சிரிக்குஞ் சிரிப்பும், முத்துக்களை நிகர்த்த பற்களும், மகாவிஷ்ணுவின் சயனஸ்தானமாகிய திருப்பாற்கடலிலே பொருந்தியிருக்கும் அமுதத்தை நிகர்த்த வசனமும் முருகக்கடவுளிடத்து மில்லை; பெண்களுடைய மனத்தை யெல்லாம் உள்ளுருகச் செய்வதான அழகு நிறைந்த அவ்வரிச்சந்திர மன்னனைப் பார்த்த பின்னர் அக்கண்களால் மலர்மாலையை யணிந்த மற்றைய அரசர்களை நோக்கினால், அக்கண்களுக்கு அவர்களுடைய தோற்றம் எப்படியிருக்குமெனில், உலகத்தி லுண்டான இருளைப் போக்கி மிக்க பிரகாசத்தைச் செய்கின்ற சூரியனைப் பார்த்த கண்கள் நக்ஷத்திரங்களைப் பார்க்கும்போது அக்கண்களுக்கு அவை ஒளி குறைந்து தோற்றுவதுபோன் றிருக்கும்; இத்தகைய சிறப்புவாய்ந்த அவனை நாயகனாக அடையும் பெண் யாரோ அவளே சிறந்த தவமுடையவளாவாள்; நீ மிக்க தவமுடையவ ளாதலின் அவன் உனக்கே நாயகனாக அமைவான்; எல்லாக் குறிப்புகளையும் நோக்கும்போது நீ அவனுக்கு மனைவியாக அமைந்து நீங்களிருவரும் மனமகிழ்ச்சியோடு கூடி இல்லறநடத்துவதை யானும், மற்றப் பெண்களும் கண்களாற் றரிசித்து மகிழ்வோ மென்பது நிச்சயமாக விளங்குகின்றது; இதில் எள்ளளவும் சந்தேகமில்லை,'' என்று கூறினாள்.

அவ்வாறு மின்னலை நிகர்த்த இடையையுடைய அப்பெண் கூறவே, சந்திரதயமன்னனுடைய குமாரியான சந்திரமதி அந்த வார்த்தைகளைக் கேட்டு, அவள் அரிச்சந்திரனுக்கே மனைவியாகும்விதி ஏற்பட்டிருந்தபடியினாலே எவரையும் விரும்பாத தன் மனத்தில் அவனை தனக்கு நாயக

ளுக வேண்டுமென்று கருதினுள். அவ்வாறு கருதவே அவ ளுக்கு அவன்மீதேற்பட்ட விருப்பம் அதிகரித்தது; அத ஞல் அவள், "அயோத்திநாட்டிற் கிறைவர் நமக்கு நாயக ராக அமைவாரோ அமையமாட்டாரோ," என்று கவலையுற் ருள்; அக்கவலையால் அவளுடைய உடலம் மெலியக் கைகளி லணியப்பட்டிருந்த வளையல்கள் கழன்று விழுந்தன; இடை முன்னிருந்ததைக் காட்டினும் அதிகமாக மெலிவுற்றது; தாயையு மறந்தாள்; தன்னையும் மறந்தாள்; பேசுகிற பேச்சை யும் மறந்தாள்; இன்னும் தன்னுடைய மற்றச் செய்கை களையு மறந்தாள்; அங்ஙனம் எல்லாச் செய்கைகளையும் மற ந்து அரிச்சந்திரன்மீதேற்பட்ட நேயம் ஒன்றை மாத்திரம் மறக்காதிருந்தாள். அவ்வாறு கொண்ட எண்ணத்தால் அவ ளுடைய தேகத்தில் வெம்மை யதிகரித்து அதனை யாற்ருது அவள் மிகவும் வருத்தமுற்ருள்; அதைக் கண்ட தாதியர் அவ்வெப்பம் தணியுமாறு பரிமள மிகுந்த கலவைச்சாந்தை யும், பனிநீரையும் அவளுடைய உடம்பெங்கும் பூசி மயிற் ருேகையாற் செய்யப்பட்ட விசிறிகளைக் கொண்டு விசிறினுர் கள்; அப்படி வீச வீச மேன்மேலும் வெம்மை யதிகரித்துப் பூசின சந்தனம் முதலியன காய்ந்து பொருக்குப் பொருக்கா யுதிர்ந்தன; அதனுல் அச்சந்திரமதி அடிக்கடி கவலை அதி கரித்தவளாயினுள்; அப்போது சூரியனும் மேற்றிசைக்கட லில் மூழ்கி மறைந்தான்.

அவ்வாறு சூரியன் அஸ்தமிக்கவே, சத்தியந் தவருது செங்கோல் செலுத்தி உலகத்தைப் பாதுகாத்துவந்த அர சன் அவ்வுலகத்தை மிகவும் பாவம் நிறைந்த ஒரு கொடுங் கோன்மன்னன்வசம் கொடுத்துவிட்டுத் தான் தவஞ் செய் தற்பொருட்டுக் காட்டிற்குச் சென்று மறைந்தாற்போல உலகத்திலுள்ள எல்லோரையும் மகிழ்ச்சி யடையும்படிச் செய்துகொண்டிருந்த பகற்காலமானது அவர்களை இரவு வந்து சூழும்படி விட்டு நீங்கிற்று. அங்ஙனம் பகல் நீங்கவே, பிருதிவிமுதல் ஆகாய மீருகவுள்ள பஞ்சபூதங்களும் ஒடுங் கும்படி பெரிய ஊழிக்காலம் வந்தபோது அகண்டபரிபூரண

மாய் எங்கும் நிறைந்து நின்று கூத்தாடும் காளகண்டத்தை யுடைய சிவபெருமான் சடைகள் சிவந்த நிறத்தோடு விரிந் தாற்போல ஆகாயமெல்லாம் செவ்வானம் பரவிற்று. அச் சமயத்தில், நெடுங்காலமாக நீதியுடன் அரசாண்டுவந்த மன் னர் தங்கள் வாணாட் கழிந்து நீங்க, இளமையான அவர்க ளுடைய புத்திரர் பருவமடைந்துவந்து அவ்வரசாட்சியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னே கொடுமை தங்கிய சிற்றர சர்கள் அதனைக் கைப்பற்றிக்கொள்ள வெண்ணித் தம் சேனைகளுடன் அவ்விராஜ்யத்தில் வந்து புகுந்ததுபோல இவ்வுலகத்தை மகிழ்வித்த சூரியன் நீங்க, சந்திரன் உதயஞ் செய்து தன்னுடைய கிரணங்களைப் பரப்புவதற்கு முன்னே மாலைக்காலம் வந்தது. அதன்மேல் இராக்காலம் வரத் தொடங்கி மேன்மேலும் வளர்வதாயிற்று; அங்ஙனம் இராக் காலம் வளர ஆரம்பிக்கவே ஆகாயத்தில் அநேகம் நக்ஷத் திரங்கள் உதயமாயின; கொடிதான மாலைக்காலம் குறைந் தது; கரிய கடலாற் சூழப்பெற்ற உலகமெல்லாம் தானே ஆளத் தொடங்கினதுபோல எங்கும் இருளானது செறிந்து நிறைந்தது; அப்படி நிறைந்த இருளானது எவ்வாறு விளங் கிற்றென்றால், "தேவர்கள் பாற்கடலைக் கடைகின்ற காலத் தில் உண்டான கரியவிடமானது இப்போதும் உண்டாகி உல கத்திற் பரவியது," என்று பார்த்தோர் கூறி அதிசயிக்கும் படி எங்கும் மிகுந்த கருமை நிறத்தோடு விளங்கிற்று.

அதன்மேல், பகைவரோடு போர் செய்யும்படி தம் முடைய படைத்தலைவரை யனுப்பி அவர்கள் அப்பகைவரை ஜெயிக்கமுடியாமல் தளர்ச்சியடைய அதைக் கண்டு தாமே கோபமுற்றுக் கத்தியை உருவிக்கொண்டு அத்தலைவரைச் சீறித் தூரத்திவிட்டு அப்பகைவர்மேற் சென்ற செங்கோன் மன்னரை நிகர்த்து, சந்திரவதியிடம் சென்று அவளை வருத் துப்படி முன்னே இருளை யனுப்பி அவ்விருளானது அவ் வாறே அவளுக்கு அதிகமாக வருத்தஞ் செய்யாதிருப்பது கண்டு,"இன்னமும் இவளுடைய ஆவி போகாதிருக்கின்றதா? நீ என்ன வல்லமையை இவளிடத்தே செலுத்தினாய்?" என்று

அவ்விருளைக் கோபித்துத் துரத்திவிட்டு அச்சந்திரமதிக்குத் துன்பஞ் செய்தற்குப் புறப்பட்டாற்போல இருளை நீக்கி, சந்திரன் உதயமானான். அவ்வாறு உதயமான சந்திரன் எப்படி விளங்கினானெனில், இராத்திரியை நிகர்த்து விளங்கும் திருமேனியையுடைய மகாவிஷ்ணு பாற்கடலைக் கடைந்த காலத்திலே இந்திராதி தேவர்களுக்கு அவர்கள் பெறாத கற்பகத்தரு, சிந்தாமணி முதலிய பொருள்களையும் அமுதத்தையுங் கொடுத்துவிட்டு மீதியாயிருந்த அமுதத்தை உருட்சியாகத் திரட்டி அப்பாற்கடலினிடமே ஒருபக்கத்தில் வைக்க அத்திரட்சி மேலெழுந்து மிதந்தாற்போலச் சமுத்திரத்தின்மேற் பிரகாசித்தான். அங்ஙனம் பிரகாசிக்கவே சந்திரமதிக்கு அவள் கொண்ட எண்ணத்தால் வேதனை அதிகமாயிற்று; அதனால் அவள், உணவும் வேண்டாளாய்ப் பள்ளியறைக்குச் சென்று படுத்துக்கொண்டு சந்திரன், இரவு முதலியவற்றை வெறுக்கத் தொடங்கினவளாய் முதலிற் சந்திரனை நோக்கி, "வெண்மை நிறம் பொருந்திய சந்திரனே! மனத்திற் கவலைகொண்டு உடல் மெலிந்திருக்கின்ற ஏழைப் பெண்பாலாகிய என்னை நீயும் வருத்துவது நியாயமோ? இஃது உனக்கு வீரத்தன்மையன்று; இன்னும் நீ உலகத்திற்கெல்லாம் மிக்க குளிர்ச்சியைச் செய்து மனிதரை மகிழ்விக்கக் கூடியவனாயிருந்தும் எனக்கு மாத்திரம் மிகுந்த வெப்பத்தைச் செய்கின்றாய்; உன்னுடைய கிரணத்தால் என் உடல் முழுதும் எரிகின்றது; என்ன பயனைக் கருதி இவ்வாறு என்னை எரிக்கின்றாய்? உலகத்திலுள்ள அறிவாளிகள் திக்கற்றவர்க்கே துணைசெய்ய நாடுவர்; துணையுடையவர்க்குதவிசெய்தலைச் சிறப்பாகக் கொள்ளார்; அப்படியிருக்க நீ தம் துணைவரோடு கூடியிருக்கும் பெண்களுக்கு மாத்திரம் குளிர்ச்சியைச் செய்து அளவற்ற ஆனந்தத்தை யுண்டாக்குகின்றாய்; என்னைப்போலத் துணையின்றி வருந்துவோரை மிகவும் வெதுப்பி மேன்மேலும் அதிகமாக வருந்தச் செய்கின்றாய்; இச்செய்கை செல்வமுடையவர்களைக் கொண்டாடி ஏழைகளை மதிக்காமல் வருத்தும் அறி

வற்ற மூடர் செய்கையைப்போன் றிருக்கின்றது; மேற்
கூறியபடி உலகத்தில் எல்லோர்க்கும் நன்மையைச் செய்து
எனக்கு மாத்திரம் தீங்கைச் செய்கின்றாயே; நானொருத்தி
தானா உனக்கு விரோதி; தினந்தோறும் சூரியன் அஸ்தமித்த
வுடனே சந்தியாவந்தனகாலத்தில் கை கூப்பி உன்னை
வணங்குவது வழக்கம்; அப்படி வழக்கமாகச் செய்தவரும்
வணக்கத்திற்குப் பயனாக நீ இப்போது என்னைச் சுட்டெரிக்
கின்றாய்; நன்மை செய்வார்க்குத் தீங்கு செய்யும் உன்
னுடைய சுபாவம் மிகவும் நன்றாயிருக்கின்றது; எப்பொழு
தும் இடைவிடாது தம்மீது அன்பைச் செலுத்திவரும்
நேயர்க்குத் தீங்கு செய்யும் மடையருக்கும் உனக்கும் என்ன
பேத மிருக்கின்றது," என்று கூறியும், இளந்தென்றலைப்
பார்த்து, "இனிமை பொருந்திய தமிழ்முனி வாசஞ் செய்யு
மிடமாகிய பொதிகையினின்றுங் கிளம்பிவந்த தென்றலே!
நீ எல்லோருக்கு மின்பத்தைத் தரக்கூடியவிடத்தி னுற்பத்தி
யாகியும் எனக்குக் குளிர்ச்சியைச் செய்து மகிழ்ச்சியைத்
தராமல் மிகவும் வெம்மையைச் செய்து துன்பத்தைத் தரு
கின்றாய்; இஃது உனக்கு நியாயமன்று," என்று கூறியும்,
இரவை நோக்கி, "பனியோடு கூடிய இரவே! என்னை நீ
நெடுநேரம் வருத்தினாய்; அவ்வாறு வருத்தியும் இன்னும்
நீங்காதிருக்கின்றாய்; நீ விரைந்து நடந்து சென்றால் உன்
பாதங்களுக்கு நோவுண்டாகுமோ? சூரியனுடைய தேர்ப்
பாகனாகிய அருணன் கீழ்த்திசைக்கடலிலே தோன்றுஞ்
சமயமாகியும் உன்னுடைய வலிமை குறையாதிருக்கின்றது;
நீ என் வருத்தத்தைச் சிறிதேனும் கருதவில்லை," என்று
கூறியும் நிந்தித்துப் பின்னர், "அந்தோ! எங்கும் நிரப்புவ
தான தென்றற்காற்றும், நீண்ட ஆகாயத்திலிருந்து கிரணங்
களை வீசும் சந்திரனும், கரையில் மோதுகின்ற அலைகளை
யுடைய சமுத்திரத்தின் முழக்கமும் தொலையவில்லையே;
இவையெல்லாம் இவ்வாறு ஓங்குவதற்கு இந்த இரவொன்று
மே காரணமா யிருக்கின்றது; இதுமாத்திரம் நீங்கினால் மற்ற
எல்லாம் தாமே குறைந்துபோம்; யானும் துன்பம் நீங்கப்

பெறுவேன்; அங்ஙனம் துன்ப நீங்கப்பெறுவேனாயின் எனக்கு எவரும் நிகராகமாட்டார்கள்," என்று தனக்குத்தானே சொல்லி வருந்தினாள்.

இவ்வாறு சந்திரமதி அன்றிரவில் உணவு முதலியவற்றையும் நீக்கி அடங்காத் துயரடைந்து படுக்கையிற்கிடந்து வருந்தவே அவளுடையதோழியானவள் அவளுக்கேற்பட்ட அவ்வருத்தத்தைத்தணிக்கும்பொருட்டுஅவள்சமீபத்திற்சென்று பலவகைத் தேறுதலான வார்த்தைகளைக் கூறித் தேற்றினாள். அவ்வாறு தேற்றியும் அவள் மனந் தெளிவுறாதவளாய் அத்தோழியை நோக்கி, "எனதுயிர்த் துணைவியே! என் துன்ப நீங்குவதற்கு இப்போது யாதோருபாயத்தையும் யான் காணேன்; இந்த இராவோ பலயுகங்கள் கூடியகாலத்தைப் போல விரைவில் கழியாதிருக்கின்றது; சூரியன் அஸ்தமித்தது முதல் இதுவரை பல யுகங்கள் கழிந்திருக்குமென்று நான் நினைக்கின்றேன்; இந்த இரவு எப்பொழுது தொலையும்? அதைமாத்திரங் கூறுவாயானால் என் துன்பம்நீங்கும்," என்று கூறினாள். அதைக் கேட்டுத் தோழி, தன் கரங்களைக் கூப்பி அச்சந்திரமதியை வணங்கி, அவள் திருமுகத்தை நோக்கி, "அம்மையே! நீ வருந்தாதே; இந்த நெருங்கிய இரவானது தொலைவதற்குஇன்னும் ஒருநாழிகைநேரந்தானிருக்கின்றது; சீக்கிரத்தில் உனக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படியான விஷயம் நேரும்," என்றுரைத்தாள். அவ்வாறுரைக்கவே, சேவல்கள் அரிச்சந்திரமன்னனை நோக்கி, "அயோத்திநாட்டிற் கிறைவனே! சந்திரமதி உன்னை நாயகனாக அடையவேண்டி இப்போது ஊணுறக்கமின்றிவருந்தி மெலிகின்றாள்; ஆகையால் நீ விரைவில் வந்து அவளை மணமுடித்து அவளுக் குண்டாயிருக்கும் கவலையை நீக்குவாயாக," என்று கூப்பிடுவது போல இறகுகளாலே மார்பி லடித்துக்கொண்டு கூவின.

அப்படிச் சேவல்கள் கூவினவுடனே பின்னிரவு நேரத்தில் இசை பயில்வோரால் ஊதப்படும் வேய்ங்குழலின் ஓசைகள் அடங்கின; சமுத்திர முழக்கமும் ஒடுங்கிற்று; சந்திர

மதிக்குக் கவலையினாலே உடம்பில் மூண்டெரிந்துகொண்டிருந்த நெருப்பும் தணிந்தது; சந்திரனும் தன்னுடைய கிரணங்களைச் சுருக்கி யொடுங்கினான்; இரவும் நீங்கிப்போய்விட்டது; பொழுதும் விடிந்தது; அவளுடைய கவலையு மடங்கிற்று; இரவில் அலர்ந்திருந்த அல்லி மலர்களெல்லாம் வாய் குவிந்தன; கரிக்குருவிகளெல்லாம் சத்தமிட்டுக்கொண் டெழுந்து பறந்தன; விடியற்காலத்தில் ஊதப்படும் சங்குகளெல்லாம் முழங்கலாயின; அங்கு வந்திருக்கும் அரசர் கூட்டங்களின் சுமையைப் பூமிதேவி தாங்கிக்கொண்டிருக்கும் விசேஷத்தைப் பார்க்கும்பொருட்டு முகமலர்ச்சிகொண்டதுபோலத்தாமரைகளெல்லாம் மலர்ந்தன; அத்தாமரைத் தடாகங்களிலுள்ள உயிர்ச் சங்குகளெல்லாம் எழுந்து முழங்கிக்கொண்டு ஊர்ந்து சென்றன; "சந்திரனனவன் சந்திரமதியைக் கொல்லப் புகுந்தாலும் அல்லது வெல்லப் புகுந்தாலும் அச்சமயத்தில், நீ இவ்வாறு செய்யாதே என்று சொல்லித் தடுக்கக்கூடியவன் நானொருவனே; ஆதலால், நான் இப்பொழுது அவனுக்குச் சமாதானங் கூறி அவனைப் போகும்படிச் செய்கின்றேன்," என்று அவனை யனுப்புதற்கு வந்தவன்போல அச்சந்திரன் மறையச் சூரியன் கிழக்கே உதயமாயினான்; அங்ஙனம் சூரியோதமாகவே சோலைகளிலெல்லாம் பக்ஷிகளினோசை முழங்கின; மலர்மாலையை யணிந்தவர்களும், வெண் கொற்றக் குடையை யுடையவர்களுமாகிய அரசர்களுடைய முன்றில்களிலே விடியற்காலத்தில் முழங்கும் பெரிய முரசங்கள் முழங்கின.

சந்திரமதி சுயம்வரம்.

அன்று, சந்திரதயமன்னன் சந்திரமதிக்குச் சுயம்வர மேற்படுத்திய நாளாதலால் அரசர்களெல்லோரு மெழுந்து ஸ்நான ஜெப தப போஜனாதிகளை முடித்து அலங்கரித்துக் கொண்டு கலியாண மண்டபத்திற்குச் செல்ல ஆயத்தமாயிருந்தார்கள். சந்திரதயமன்னன், முன்னமே மிகவும் சிறப்புடன் அலங்கரிக்கப்பெற்றிருந்த கலியாண மண்டபத்தில் தனக்குரிய வேதப்பிராமணர்களும், பெரியோர்களும் சூழப்

போய்ச் சேர்ந்தான்; அவன் சுற்றத்தாராகிய அரசர்களும் வந்து சேர்ந்தார்கள்; ஆராய்ந்துணர்ந்து நீதிகளை யெடுத்துக் கூறும் அவனுடைய மந்திரிகளும் வந்து சேர்ந்தார்கள்; இன்னும் அவனைச்சார்ந்த மற்றமானிடர்களும், பெண்களும் மகிழ்ச்சியுடன் வந்து கூடினார்கள். அவ்வாறு அவனுடைய பரிவார ஜனங்களாகிய எல்லோரும் வந்து கூடவே சந்திரதயன் நல்லநேரத்தில் சந்திரமதியை அலங்கரித்து அழைத்து வரும்படித் தாதியரிடம் சொல்லியனுப்பினான்; உடனே தோழிமார்கள், தேன்பாகுபோன்ற குளிர்ந்த சொற்களையும், மயில்போன்ற சாயலையும், பசிய வளைபலே யணிந்த கைகளையுமுடைய அச் சந்திரமதியைத் தெய்வலோகத்துப் பெண்களும் பார்த்து அதிசயிக்கும்படி அலங்கரித்து, அவளுடைய மாலையிலுள்ள வண்டுகள் சந்தோஷத்துடனே பாடிக்கொண்டு தொடர்ந்துவர அக்கலியாண மண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். அப்படி அழைத்துவந்த அவர்கள் தன்னைச் சூழ்ந்துவர அச் சந்திரமதியானவள், அழகிய கைகளிலே அணியப்பெற்ற சங்குவளையல்கள் கலகலவென்று சப்திக்கவும், சிவந்த கயல்போன்ற கண்கள் அழகிய காதுகளி லணியப்பெற்றிருக்கும் குண்டலங்களோடு பொருதவும், தன்னுடைய சிறந்த அவயவங்களைத் தாங்கிக்கொண்டு கொடியினுஞ் சிறிய இடையானது துவள அரண்மனைவாயிலைக் கடந்து நடந்தாள். அவ்வாறு நடக்கும்போது, "பெண்மணியே! உன்னுடைய உருவமெலிந்த இடையானது தோள் முதலிய அவயவங்களைத் தாங்கமாட்டாமல் ஒடிந்தொடியும்; ஆதலால், அதற்கவ்வித இடையூறுண்டாகுமாறு நீ விரைவாக நடக்காமல் மெதுவாகக் கால்களைப் பூமிமேற் றூக்கி வைத்துத் தோழியர்க்கு முன்னே நடந்து செல்வாயாக," என்று சொல்வதுபோல அவள் பாதங்களி லணியப்பட்டிருந்த சிலம்புகள் ஒலித்தன; நீண்டு சிக்கில்லாமல் நெறிப்புக்கொண்டு வளர்ந்த அவளுடைய கூந்தலை வாசனைத் தைலமிட்டுச் சிவிகிர்ந்திட்ட கொண்டையானது, நீலநிறம்பொருந்தி நீண்டுசென்ற ஒரு ஆற்றின் வெள்ளம் ஓரிடத்திற் சுழி

த்து மடங்கியதை நிகர்த்திருந்தது; தாதியர்முன்னே கண்ணாடியைக் காட்டி அதில் தோன்றும் அவளுடைய அலங்காரத்தைக்கண்டு அவள் மகிழ்ச்சி யடையுமாறுசெய்து அவள் தேகத்தி லணிந்த ஆபரணங்களின் சோதியானது கோடி சூரியர்கள் ஓரிடத்திற்கூடிப் பிரகாசித்தது போன்றிருந்தது; அவள் தோளிலணிபப்பட்டிருந்த இரவிக்கையானது ஓரங்களில் வைத்துத் தைக்கப்பட்ட இரத்தினங்களாலும் முத்துக்களாலும் மிகுந்த பிரகாசத்தைச் செய்துகொண் டிருந்தது.

இவ்வகைச் சிறப்புக்களுடனே அவள் மேற்கூறியபடி அரண்மனை வாயிலைவிட்டு வெளியேறித் தாதிகளுடன் நடந்து, காதுகளுக்கு நேராகச்செல்லும் கண்களை நோக்கி, "நீ இங்கே செல்லாதே; உன்னைக் கண்டால் வேதசாஸ்திரங்களும், எல்லா வுலகங்களும் அழியும்," என்று சொல்லி அந்தக் காதுகள் தங்களிடமுள்ள குண்டலங்களைக்கொண்டு அக்கண்களைத் தடை செய்வதுபோல அக்கண்களின் பக்கத்தே அழகிய அக்காதுகள் குண்டலங்களுடன் பிரகாசிக்கவும், அரிச்சந்திரனை நோக்கி, "கற்பகத்தருவை நிகர்த்த கைகளையுடைய அரிச்சந்திர மகாராஜனே! நீயே இப் பெண்ணுக்கு நாயகனாகப் போகின்றாய்; ஆதலால் நீ இவள் சமீபத்தில் வருவாயாக," என்றும், மற்ற அரசர்களை நோக்கி, "மன்னர்களே! நீங்கள் இப் பெண்ணுக்குத் தகுதியானவர்களல்லர்; ஆதலால் தூரத்தே செல்லுங்கள்," என்றும் சொல்வது போல அவளுடைய மேகலாபரணத்திலுள்ள மணிகள் சப்திக்கவும், அவள் கைகளிரண்டையும் வீசிச்செல்லும்போது ஒளியையுடைய கையணிகளின் இரத்தினவரிசைகள் பின்னும் முன்னுஞ்சென்று காந்தியை வீசவும், மெலிந்து தளர்ந்திருக்கின்ற இடையானது நம்மையும் சுமப்பதால் ஒடிந்து போகுமென்று மனமிரங்கி யெழுவனபோல அவளுடைய கூந்தலிலுள்ள வண்டுக்கூட்டங்கள் நடையின் அதிர்ச்சியாற் கலைந்தெழுந்து முழங்கவும், தலையிலிருந்து பாதங்கள்வரை மின்னலாலே அமைத்தாற்போன்ற அவளுடைய திருமேனியைப்பொன்னாபரணங்களாலும், இரத்தினாபரணங்களாலும்,

தங்கவஸ்திரங்களாலும், பட்டுக்களாலும் மறைத்துக்கொண்டு, கலியாணப் பந்தலுக்குள்ளே புகுந்தாள்.

அவள் அவ்வாறு கலியாண மண்டபத்திற் புகுந்தவுடனே ஜனக்கூட்டத்தினிடையே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பல தூதுவர்கள், சுயம்வரத்தின் பொருட்டு வந்து தங்கள் தங்களுக்குரிய விடங்களில் தங்கியிருந்த பலதேசத்தரசர்களிடம், சந்திரமதி கலியாணமண்டபத்திற்குள் வந்துசேர்ந்த விவரத்தைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டவுடனே அவ்வரசர்களெல்லோரும் யுகாந்தகாலத்திலே கடல் பொங்கி யெழுந்தாற்போலக் கூட்டமாயெழுந்து மனக்களிப்புடனே கலியாணப்பந்தலுக்குப் புறப்பட்டார்கள்; அவ்விதம் புறப்பட்டபோது யுத்தஞ் செய்யத்தக்க வீரர்களெல்லோரும் இரதங்களி லேறிக்கொண்டு நான்கு பக்கத்திலுஞ் சூழ்ந்து அவ்வரசர்களைத் தொடர்ந்துவர, மிகவும் அதிருகின்ற பெரிய வீரமுரசங்களும், எக்காளங்களும், சங்குகளும், மற்றுமுள்ள வாத்தியங்களும் முழங்கின; இன்னும் கைத்தாளங்களும், மத்தளங்களும், வீணைகளும், சுருதியுண்டாக மீட்டுகின்ற தம்பூருகளும், தெருவெல்லாம் நிறைந்தொலித்தன; அங்ஙனம் வாத்தியங்களெல்லாம் ஒலிக்க அரசர்கள் சேனைகளுடன் சென்றபடியினாலே அச்சேனைகளின் நெருக்கத்தால் எழுந்த செம்மண் தூளிகள் உலகத்தை வளைந்திருக்கும் சக்கரவாளகிரிவரையிலும் சென்றன; அச்சேனைவீரர்களாற் பிடிக்கப்பட்ட வெற்றிக் கொடிகளெல்லாம் அண்டகோளம் வரையில் உயர்ந்து பறந்து விளங்கின; இன்னும் மேற்கூறியவாறு பூமியிலிருந்து கிளம்பிப் பரந்த செம்மண் தூளிகள் தேவர்களுடைய ஊரிலும் போய்ப் புகுந்து அதற்குமேலும் உயர்ந்து சென்று நிறைந்தபடியினாலே மேகத்திலுள்ள சிறிய மழைத்துவாரங்கள் அடைபட்டதோடு எட்டுத் திக்குகளிலும் நிற்கின்ற ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்ரதீபம் என்னும் அஷ்டயானைகளுடைய மதத்துவாரங்களு மடைபட்டன; அவ்வாறு தூளி

யெழும்பும்படிச் சென்ற அரசர்களுடைய யானைப்படைகளும், குதிரைப்படைகளும், தேர்ப்படைகளும் காலாட்படைகளும் அவ்வூரின் எல்லாத் திக்குகளிலும் வெற்றிடமில்லாமற் கூடி நெருங்கின; இவையன்றி வெளி நகரங்களிலிருந்து கலியாணத்தின் பொருட்டு அங்கு வந்தவர்களும், அக்கன்னமாபுரியி லிருப்பவர்களுமாகிய தேன்போன்ற சொற்களையுடைய பெண்களும், யாசகத்தின்பொருட்டு வந்த பிராமணர்களும், மற்றும் அந்நகரத்திலுள்ள மனிதர்களும் கலியாண மண்டபத்திற்குச் செல்வதற்கு அலங்கரித்துக்கொண்டு தெருக்களில் வந்து கூடினார்கள். அங்ஙனம் எங்கும் மனிதர் கூட்டம் நிறையும்படி, "பொற்கொடி போன்ற சந்திரமதி கையாற் சூட்டப்பெறும் மணமாலை என் கழுத்தில் விழும்! என் கழுத்தில் விழும்!!" என்று ஒவ்வொருவரும் தனித்தனியே நினைத்துக்கொண்டு பல தேசத்தரசர்களும் செல்லும்போது எல்லோருக்கும் பின்னால் அரிச்சந்திரமகாராஜனும் தன் பரிவாரங்களோடு சென்றான்.

சிறிது நேரத்திற்குள் மேற்கூறியபடி சேனைக்கூட்டங்களுடன்சென்ற அரசர்களெல்லோரும் கலியாணமண்டபத்திற் சேர்ந்து தங்கள் தங்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்தார்கள். சுயம்வரகாலத்தில் வந்துகூடும் அரசரின் குலம், பெயர், ஊர் முதலியவற்றைத் தோழிகள் மணமகளுக்குக் கூறி விளக்கவேண்டியது முறையாதலின், அந்தச்சமயத்தில் கரும்பின் இரசத்தைப்போன்ற சொற்களையுடைய சந்திரமதியின் தோழிகள் அங்குவந்து கூடிய பலதேயத்தரசர்களின் பெயர், நாடு, குலமுறை முதலியவற்றை விளக்கமாக அவளுக்குக் கூறத்தொடங்கினவர்களாய்ஒவ்வொருஅரசனையும்கைபினாற் சுட்டிக்காட்டி அவளை நோக்கி, "மிகுந்த அழகைக்கொண்ட இலக்குமிதேவியை நிகர்த்த சிறப்பு வாய்ந்த சந்திரமதியே! இவ்விடத்தமர்ந்திருக்குமரசன், நதிபெருகிப்பாய அதனாலே செழிப்புற் றுயர்ந்து மலர்ந்த தாமரை முதலிய மலர்களிலுள்ள தேன் மிகுந்து பெருகி வழிந்தும் பூரணமாக நிறை

வுறுத குளங்களில்வலைபர்கள் மீன்பிடித்தற்குவலைகளை வீசும் போது அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமற் கிழித்துக் கொண்டு துள்ளி மேலெழுந்த வாளைமீன்கள், வளைவான குலைகளையுடைய கமுகமரங்களின்மேற்பாய, அவற்றின் மடல்கள் சிதைந்து அம்மடல்களினின்று மொழுகிய தேனனது பெருகி அக்குளக்கரைகளை யுடைக்கும் சிறப்புவாய்ந்த குடநாட்டிற்கதிபனான சேரன்; இருள் விளங்குவதான விடத்துக் கொப்பாகிப விழிகளையுடையவளே! துவண்டு இளைத்திருக்கின்ற மெல்லிய இடையை யுடையவளே!! இந்த அரசன் சிவனால் கொடுக்கப்பட்டதும், பாம்பு மண்டலமிட்டுச் சுருண்டிருப்பது போன்ற ஆச்சரியமான வடிவத்தை யுடையதுமாகிய வளையை முன்னொருகாலத்தில் தன்னோடெதிர்த்த இந்திரன் மீதுசெலுத்தி அவனுடைய திருமுடியை உடைத்தவன்; பின்னும் தன்னுடைய பாதாரவிந்தத்திலே வருணன்வந்து வணங்கும்படிச் செய்தவன்; செந்தமிழை வளர்த்த பாண்டியன். மிகுந்த பரிமளத்தை யுடைய மலர்களிலுள்ள மகரந்தங்களைப் பூசிக்கொண்டு வண்டுகள்இசைபாடும் சிறப்பினையுடைய கூந்தலையும், மயில்போன்ற சாயலையு முடையவளே! இந்த அரசன், ஒலிமிகுந்த அலைகள் மோதுவதான உவர்க்கடலாற் சூழப்பெற்ற எழுலகங்களும் ஒரேவிதமாக நடக்கும்படிக்கும், வலியோர் எளியவரை வருத்தாதிருக்கும்படிக்கும் தன்னுடைய ஆக்ஞையைச் செலுத்தித் தன் நாட்டில் தீங்கடைந்தோர் அத்திங்கைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டு வந்து தட்ட ஒலிக்கும் * ஆராய்ச்சி மணியானது தன் முன்றிலிலே எப்போதும் அசையாதிருக்கும்படிச் செய்தவன்; எல்லோரையும் தனக்குள்ளடக்கித் தன்னுடைய ஆண்புலிக் கொடியை வடக்கேயுள்ள மேருகிரியிலும் எழுதிவைத்த

---

* ஆராய்ச்சி மணி- தன்புறத்தோர் தம் குறைகளை அரசனிடம் தெரிவித்தற் கேதுவாக அரண்மனை வாயிலிற் கட்டப்பட்டிருக்கும் மணி; தீங்கடைந்தோர் சென்று அம்மணியை அசைத்தால் அவ்வோசையைக் கேட்டு அரசன் உடனே வந்து விசாரித்து அக்குறையை நீக்குவன்; இது பண்டைக்காலத்துச் செங்கோன்முறை.

வீரத்தன்மையுடைய புனனுடனுகிய சோழன். விடத்தைப் போலவும், கடலைப்போலவும், வெற்றிமிகுந்த அம்பைப் போலவும் விளங்குகின்ற கண்களையுடைய பெண்ணே! வட திசையிலுள்ள மேருமலையைப் போன்ற தேரிலேறி வந்து இங்கேயிருக்கின்ற இவ்வரசன் யாரெனில், குளத்திலே நீராடச் சென்ற பெண்கள் ஸ்நானஞ் செய்து வீட்டிற்குக் கொண்டு செல்வதற்குத் தங்கக்குடங்களிலும், வெள்ளிக் குடங்களிலும் நீரை மொள்ளும்போது சூல்மிகுந்த சங்குகள் அக்குடங்களிற் சேர்ந்து முத்துக்களையீனும் அழகு பொருந்திய குருநாட்டிற் கதிபதி. இயற்கை மணமும், புனுகும், ஆபரணங்களும் எப்பொழுதும் நீங்கா திருக்கின்ற திருமேனியையுடையவளே! இங்கமர்ந்திருக்கும் அரசன் எவனெனில், சண்டைசெய்வதற் குதவியா யமைந்த கொம்புகளினுலே வாசனைமிகுந்த தாமரைமலர் முதலியவற்றைச் சிதைத்து இளமையான எருமைகள் குளங்களின் நீரிலே குதிக்க அவ்வாறு குதித்த அதிர்ச்சியினுலே அக்குளங்களில் ஒருகோடி கயல்மீன்கள் வெருண்டோடவும், தாமரை மலர்களிலிருந்த ஒருகோடி வண்டுகள் பறந்தோடவும், ஒருகோடி வெள்ளையன்னங்கள் அஞ்சிப் பயந்தோடவும், கோபத்தையுடைய ஒருகோடி வாளைமீன்கள் கரைகளின்மேற் றுள்ளிப் பாய்வதான வளத்தைக்கொண்ட குருநாட்டரசன். குறுவியர்வை கொண்டு, முயல்சேரப்பெறுத ஒரு சந்திரனை நிகர்த்த முகத்தையுடைய பெண்ணே! மேகங்கள் தன் சிகரத்தில் ஊர்ந்து செல்லும்படி உயர்ந்து விளங்குவதான தேரின்மேலேறி வந்து மாலையணிந்து விளங்கும் மார்புடனே இங்கு வீற்றிருக்கும் அரசன், குளங்களில் கெண்டைமீன்கள் துள்ளி விழுவதனுலே நீலமலர்களின் அரும்புகள் சிதைந்து வழிந்த தேன்மிகுந்து பெருகி மடையின் வழியாகச் சென்று பாய அதனுலே வயல்களிலுள்ள செந்நெற்கள் வளர்ந்து கதிரையீனும் வளப்பமிகுந்த மகததேசத்திற் கிறைவன். மூங்கிலைப் போல நீண்டு அழகிய ஒளிபொருந்திய தோள்களையும், நல்ல மழலைச் சொற்களையுமுடைய மாதே! நீண்ட புறமயிரைக்

கொண்டு வலிமைபொருந்திய குதிரைகளும், பெரிய யானைக ளுஞ் சூழ உயர்ந்த தேரிலேறிவந்து இங்கே தங்கியிருக்கு மரசன், வரம்புகளைக்கொண்ட வயலிலே முளைத்தெழுந்த செழிப்பையுடைய தாமரைமலர்களின் இதழ்களிலே சூற் கொண்ட சங்குகள் ஈனுகின்ற அழகிய முத்துக்கள் சந்தி ரனைப்போன்று பிரகாசிக்கும் வளம்பொருந்திய கவுடநாட்டுக் குரியவன். பலவிதமாகச் சிதறிய செவ்வரிகள் பொருந்திய கண்களையுடைய பெண்கள் நாயகமே! அழகான தேர்மே லேறிவந்து இங்கமர்ந் திருப்பவன், விரிவான சமுத்திரத்தை யுண்ட குறுமுனியென்னும் அகஸ்தியன்தங்குகின்றபொதிய மலையிலே உற்பத்தியாகி வீசும் தென்றற் காற்றினாலே புன்க மரங்கள் பொரிபோல மலர்ந்த மலர்களைச் சிந்தவும், கொன் றைமரங்கள் பொன்னைப்போல் விரிந்த மலர்களைச் சிதறவும், அவற்றின் மேலே புள்ளிகளையுடைய வண்டுகள் சேர்ந்து இனிமையான இசைகளைப் பாடவும், இன்னும் பக்கங்களில் நிறைந்த மரங்களினுள்ள பலவிதமலர்கள் மகரந்தங்களையும் தேனையும் சொரியவும் மணமிகுந்து பாயும் சிந்துவென்னும் நதியையுடைய வளமிகுந்த சிந்துநாட்டிற் கிறைவன். தேவர் கள் உடம்பு மிகவும் நொந்து பாற்கடலைக் கடைகின்ற காலத் திற் றோன்றிய அமுதமேயென்று கூறத்தக்க இனிமை வாய்ந்த சொற்களையுடைய பாவையே! சதுரங்க சேனைக ளாகிய சமுத்திரத்தினடுவே, சண்டையிலிறக்கும் எதிரிக ளுடைய தேகக்குவியலாகிய மலையை உயரமாக நிறுத்தித் தோற்றச் செய்கின்ற (அஃதாவது சதுரங்க சேனைகளுக்கும் நடுவிலே பகைவரைக் கொன்று அவருடைய தேகங்களை மலைபைப்போற் குவிக்கத்தக்க) திருமால்போன்ற இவ்வரசன் யாரெனில், அன்னிய ருடல்களை மிகவு மழித்து அதனால் செருக்கடைந்து ஜெபங்கொள்ளலாமென்று நினைத்துக் கரு ம்புவில்லுடனே மலர்ப் பாணங்களைக் கொண்டு மன்மதன் சிவனுக்கெதிரே சென்றகாலத்தில் எலும்புகளை ஆபரணங்க ளாக வணிந்த அச்சிவன் கோபங்கொண்டு அவனை யெரிக்க, அப்போது அம் மன்மதனுடைய அங்கம் பொடிப்பொடி

யாகிச் சிந்திய விடமாகிய * அங்க நாட்டிற் கதிபன். தேனொழுகுகின்ற மாலையின் சுமையைத் தாங்கமுடியாமல் மெலிந்து வருந்துவதான இடைகளையுடைய இலக்குமியை நிகர்த்தவளே! இந்த மன்னன், காற்றினாலசையும் ஈஞ்சின் முட்களாலும், நீரினின்றுங் குதித்து வேகங்கொண்டு பாயும் சக்கரம்போன்ற இருல்களினாலும் வாய்க்கால்களுக்குப் பக்கத்திலிருக்கும் மரங்களில் தேனீக்களால் கட்டப்பட்டிருக்கும் தேன்கூடுகள் கிழிந்து வழிகிற தேனும், முதிர்ந்து விளைந்த சோளக்கதிர்கள் மோத அதனாலே மாமரங்களினடியிற் றொங்கிய பழங்கள் சிதைந்து ஒழுகிய இரசமும் பாய்ந்து, ஆலைகளி லாட்டப்படும் கருப்பஞ்சாறும் சிந்திப் பெருகுவனவாகிய வயல்களில் அழகிய நெற்கள் செழிப்போடு விளைகின்ற பாஞ்சாலநாட்டிற் கரசன். தேனையுடைய மலர்களின் மகரந்தத்தைக் கொண்டு கூந்தற்பனையின் மலர்ந்த பாளையைப்போல் நீண்ட கூந்தலை யுடையவளே! சிகரமானது உயர்ந்து ஆகாயத்தை யளாவக் குதிரைகள் பூட்டி அலங்காரத்துடன் விளங்கும் தேரின்மீ தேறிவந்து இவ்விடத்திற் றங்கியிருப்பவன், மதகின் வழியிலே ஓடுகின்ற பூரண கருப்பத்தையுடைய் சங்கானது நீருடனே சென்று மீண்டும் குளத்திலே போய்ச் சேரத் திரும்புங்காலத்தில் ஓடுகின்ற அந்நீரானது அதனைப் பின்னே தள்ள, அது வலிகொண்டு எதிரேறிச் செல்வதால் நீண்ட காம்புகளையுடைய நீர்ச்சேம்புகளில் மோதி வயிறுளைந்தீன்ற முத்துக்கள் அந்நீருடனே எங்கும் நிறைந்து செல்வதான நிலவளத்தையுடைய காந்தாரநாட்டிற் கரசன். நெருங்கி நீண்டு எதிர்ப்பட்ட ஆடவருடைய மனத்தைக் கொள்ளை கொள்ளத்தக்க கண்களையுடைய பெண்பாவையே! இங்கே வீற்றிருக்குந் தோன்றல், குளங்களி லெல்லாம் ஆங்காங்கே அலைந்து மீன்களைப் பிடித்துத் தின்று கொழுத்து வலி மிகுந்த முதலையானது பிடித்துத் தின்னும்பொருட்டுப் பின் றொடர்ந்து

* மன்மதனுடைய அங்கம் சிந்திய காரணத்தால், அது சிதறிய விடம் அங்கநாடெனப் பெயர்பெற்றது.

செல்ல அதைக் கண்ட நீர்நாயானது மிகவும் அச்சங் கொண்டு எவ்விடத்தும் நில்லாமலோடி ஆழமுள்ள குளத்து நீரைவிட்டு வெளியேறிக் கரும்புத்தோட்டங்களிலே சென்று எப்போதும் கரும்புத்தூரிலே தூங்கும் விசேஷத்தை யுடைய கலிங்கநாட்டிற் கிறைவன். துறவிகளுடைய மன வுறுதியுங் கெடும்படி வளர்ந்தோங்கிய இளமையான கொடி யை நிகர்த்த பொற்றொடியே! இவ்வேந்தன், நீரிலே யிருக் குந் தாமரையிற் றோன்றிய முத்துக்கள் அந்நீருடனே கல ந்து சென்று வயல்களில் நிறைந்து ஏரிற் பூட்டிய எருமைக் கடாக்களின் வலிய பாதங்களால் மிதியுண்டு சேற்றி லழுந் திப் பின்பு, தன் கூர்மையினாலே நிலத்தைக் கீறிச் செல்வ தான கொழுமுனையிற் பட்டுடைந்து சிதறுவதான வளத்தை யுடைய அவந்திநாட்டிற் குரியவன். புதிய அமுதத்தை நிகர்த்த வசனத்தையும், பொன்னாலாகிய வளையலை யணிந்த கைகளையுமுடைய பெண்ணே! இங்கே வீற்றிருக்கும் இவன், பரிசுத்தமான கல்வி பொருந்திய பெரியோர்கள் சொல்லினின்றுந் தவறி நடவாத நீதியை யுடையவன்; அழ கிய முத்துக்களைப்போன்ற பற்களையுடைய பெண்களால் அணியப்பெற்றுத் தினந்தோறும் குளிக்குங் காலத்தில் கழுவிவிடப்படுவனவாகிய வாசனைக்கலவைச் சேற்றினாலே மதங்கொண்ட யானைகள் வழுக்கி விழுகின்ற வீதிகளைக் கொண்ட நகரம் பொருந்திய மத்திரதேசாதிபதி. புண்ணிய பாவங்களை விசாரித்தறிந்து மானிடர்களைத் தண்டனை முதலி யன புரியும்பொருட்டுக் கொல்லுகின்ற எமனை நிகர்த்த கொலைத்தொழில் பொருந்திய கண்களையும், எவரும் மகி ழத்தக்க அழகையுமுடைய மங்கையே! பெரிய மச்சுவீடு போ லுயர்ந்திருப்பதான தேரின்மே லேறிவந்து இந்தப் பக்கத்திற் றங்கியிருப்பவன், இரண்டு கயல்மீன்களை நிகர்த்த நேத்திரங்களையுடைய பெண்கள் கழுத்தி லணிந்த முத்து மாலைகளின் கனத்தாலே அவர்களுடைய இடை இற்றுவிழு மென்று புருஷர்கள் அச்சத்தை யடைந்து படுக்கையிற் படுத்து நித்திரை செய்யுங் காலத்திலும் அவ்வச்சத்தை மற

வாதுவாய் புலம்பும் விசேஷத்தையுடைய மச்சநாட்டு மன்னன். ஒருகோடி மதம் பொருந்திய யானைகளும், பலகோடி வெற்றி மிகுந்த குதிரைகளும் கடலைப்போலத் தொடர்ந்து தன்னுடன் வர, மேகமண்டலத்தளவு முயர்ந்த ஒரு தேரின் மேலேறி வந்து இவ்விடத்திற் றங்கியிருக்கும் இவ்வரசன் யாரெனில், மடலையுடைய கமுகமரத்திலே விரிகின்ற பாளை, தன்னுடைய படத்தினு மிக்க வடிவத்தைக்கொண்டு விளங்குவதால் அதைக்கண்டு தன்னினு மேற்பட்ட விடம்பொருந்திய பாம்பென்றெண்ணி வெட்கங்கொண்டு இரை யெடுப்பதற்கும் வெளியே வாராமல் அக்கமுகின் குருத்திற் கிடக்கின்ற அறிவற்ற சர்ப்பத்தைப் பிடித்துண்ணும்பொருட்டுக் கலாபம் பொருந்திய மயிலானது அந்தக் கமுகமரத்தின்மேலேறி மற்றொரு விரிந்த பாளையின் பூவிலே மறைந்திருக்கும் விநோதத்தையுடைய கேகயநாட்டை யாள்பவன். துவண்டு விழுகின்ற நூலையே இடையாகக்கொண்டு, மேகம் மேலே தங்கி மழையைச் சொரிய மகிழ்ந்து நடமாடிவரும் ஒரு மயிலைப்போலச் சிரசின்மேல் வளர்ந்த கூந்தலுடனே சஞ்சரிக்கும் பெண்ணே! கண்ணாடியிற் றோன்றும் சாயலைப் போலச் சிறிதும் வேற்றுமையின்றி உன் மனத்திலும் குடிகொண்டு, அழகிய தேரின்மேலும் ஏறிவந்து இங்கே சிறப்புடன் ஆசனத்தமர்ந்து விளங்கும் இம்மன்னன், தினந்தோறும் ஆராய்ந்து செய்யப்படும் தருமமே மேன்மேலும் வளர்வதாகிய கோசலநாட்டை யாள்பவன்," என்று கூறி அங்கு வந்திருந்த எல்லாத் தேசத்தரசர்களையும் விளக்கித் தெரிவித்தார்கள்.

அவ்வாறு அவர்கள் பல அரசர்களையும் தெரிவித்துக் கடைசியில் மேற்கூறியபடி மந்தரமலைக் கொப்பான தோள்களையுடைய அரிச்சந்திரனுடைய பெயரைக் கூறிய மாத்திரத்தில் அச்சந்திரமதியானவள் தன்னைச் சூழ்ந்து மறைத்துநின்ற தோழிகளுடைய தோள்களைத் தாழ்த்தி அவர்களுக்கிடையில் மறைந்துநின்று தலை நிமிர்ந்து அந்த அரிச்சந்திரமகாராஜனைப் பார்த்து, அவன் தன்னை மனைவியாக

அடையவேண்டுமென்று கருதியிருக்கும் அவனுடைய எண்ணத்தையும் முகக்குறிப்பா லுணர்ந்தாள். அப்போது அழகிய கையிலே வேலையேந்திய அரிச்சந்திரனும் அவளுடைய தாமரை மலர்போலும் முகத்தை விருப்பத்தோடு பார்த்தான்; அவ்வாறு பார்க்கவே சிவந்த கயல்போலுங் கண்களையுடைய அவளுடைய கழுத்தில் திருமங்கலிய மொன்று மிகுந்த பிரகாசத்துடன் அவனுக்குத் தோன்றிற்று; அவ்வாறு அவனுக்குமட்டுந் தோன்றிய அத்திருமங்கலியத்தை அவன் உற்றுப் பார்த்தான்; அப்படி அதனைப் பார்த்தவுடன் அவன் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்து, "இஃதென்ன விந்தை! இவள் விவாகமாகாத பெண்ணென்றல்லவா நினைத்திருந்தோம்; இப்போது நேரில் பார்க்கும்போது இவளுடைய கழுத்தில் திருமங்கலிய மிருக்கின்றது; இதனால் இவள் முந்தியே விவாகமாகி ஒருவனால் திருமங்கலியம் சூட்டப்பெற்றவளாக விளங்குகிறாள்; அப்படி விவாகமான இவள் அத்திருமங்கலியத்தையும் கழுத்தி லணிந்துகொண்டு மற்றொருவனுக்கும் மனைவியாகுதல் தகுமோ? இஃதென்ன அனியாயமா யிருக்கின்றது; எவனோ மணஞ்செய்து தள்ளிவிட்ட இவளைத் தந்திரமாக ஒரு முடிமன்னனுக்கு மணஞ்செய்து கொடுக்கக் கருதி இவளுடைய தந்தையாகிய சந்திரதயமன்னன் இவ்விதம் மாறுபாடான சுயம்வரத்தை ஏற்படுத்திச் சிறந்த அரசர்களையெல்லாம் வரவழைத்திருக்கிறார்; இது மிகவும் தகாத செய்கையாகும்; இவ்வனியாயச் செய்கையைப்பற்றி அம்மன்னனிடத்தில் நாம் தக்க கேள்விகளைக் கேட்கவேண்டும்," என்று தனக்குட் சிந்தித்தவனாய் அச்சந்திரதய மன்னனை நோக்கி, "கன்னோசி நாட்டிற் கதிபதியே! இப்போது நீர் என்னகாரியஞ் செய்தீர்; இப்பெண்ணின் கழுத்தில் மங்கலியம் விளங்குகின்றது; இதனால் இவள் முன்னரே ஒருவனுக்கு மனைவியான பெண்ணாகத் தோற்றுகின்றாள்; இப்படி முன்னே ஒருவன் விவாகஞ்செய்து கொண்டபோது சூட்டிய மங்கலியத்தை இன்னமும் கட்டிக்கொண் டிருக்கின்ற இப்பெண்ணை அம் மங்கலி

யத்தோடு பின்னுமொருவனுக்கு மணஞ்செய்து கொடுத்தல் தகுதியாமோ? எவர்தாம் இவளை மணஞ்செய்து கொள்வர்? முனனொருவனுக்கு விவாகமான பெண்ணை மற்றொருவன் விவாகஞ் செய்துகொள்ளும் வழக்கம் சில கீழ் சாதியார்களிடத்துண்டு; அவ் வழக்கத்தை மிகவும் உயர்ச்சியுற்ற க்ஷத்திரிய குலத்திற் பிறந்த நீர் அனுசரிக்கலாமோ; பெண் எவ்வளவு சிறப்புற்றவளா யிருந்தபோதிலும் இவ்விவாகத்தை இங்கு வந்திருக்கும் அரசர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா; நீர் என்ன எண்ணத்தைக்கொண்டு இச் சுயம்வரம் நாட்டி அரசர்களை வரவழைத்தீர்? எனக் கொன்றுமே விளங்கவில்லை," என்று பலவாறு பேசினன்.

வள்ளற் றன்மையிற் சிறந்த அரிச்சந்திரன் இவ்வாறு சொன்னவுடனே சந்திரதபமன்னன், தான் எண்ணியிருந்தபடியே அரிச்சந்திரன் திருமங்கலியத்தைக் கண்டு சொன்னதைப்பற்றியும் அவன் மருமகனா யமைந்ததைப் பற்றியும் மனத்துள் அடங்கா மகிழ்ச்சிகொண்டு, அதை வெளிக்குக் காட்டாம லடக்கி, அவ்வரிச்சந்திரனைப் பரிகசிக்க எண்ணினவனாய் மற்ற அரசர்களை நோக்கி, "அரசர்களே! இந்த அரிச்சந்திர மகாராஜன் என் குமாரத்தி கழுத்தில் திருமங்கலிய மிருப்பதாகக் கூறுவது நகைப்பிற் கிடமாயிருக்கிறது; தோஷமற்ற என் பெண்மீது தோஷங்கூறுவது நியாயமாகுமா? இவர் என்ன காரணத்தினலோ பொய்யான வார்த்தையைக் கூறுகின்றனர்; இவர் சொன்னபடி சந்திரமதி கழுத்தில் தாலி யிருக்குமானல் உங்களுக்குந் தெரியுமன்றோ; ஆதலாலே நீங்கள்பார்த்து உண்மையைக் கூறுங்கள்," என்று சொன்னன். உடனே அவ்வரசர்க ளெல்லோரும் சந்திரமதி கழுத்தை நன்றாக உற்றுப் பார்த்தார்கள்; அவர்களுடைய கண்களுக்குத் திருமங்கலிய மிருப்பதாகத் தோற்றவில்லை; அதனல் அவர்கள் அதிசயித்து அரிச்சந்திரன் ஏதோ பிரமைகொண்டிருக்கின்றனென்று நினைத்து, இவன் கட்டளைப்படி அவனே சந்திரமதிக்கு நாயகனாகப் போகிறனென்பதை யுணராமல் கை கொட்டிச் சிரித்து மூக்கில் விரல்

வைத்து, "இந்த அரிச்சந்திரன் பொய்யனு யிருக்கின்முன்; இவனுக்கு ஏதோ பயித்தியம் பிடித்திருக்கிறது; இல்லாவிடில் இவ்வாறு கூறமாட்டான்," என்ருர்கள். அதைக் கேட்டு அரிச்சந்திரன் மீண்டும் சந்திரமதி கழுத்தை நன்ருகப் பார்த்து, சிவன் வரத்தின்படி அவளுக்குத் தானே நாயகனுக அமைந்ததை முன்னிட்டு அம்மங்கலியம் சந்தேகமற முன்னிலும் மிக்க பிரகாசத்தோடு தனக்குத் தோற்றியபடியால் அதைப்பற்றி அவன் மேலும் ஆச்சரியத்தையும், தன் வார்த்தைக்கு மாறு கூறிய அரசர்கள்மீது கோபத்தையு மடைந்து, "மங்கலியம் நன்ருகத் தெரியும்போது இவர்களேன் தெரியவில்லையென்று கூறுகின்ருர்கள்? இவர்களும் சந்திரதயனுடைய ஈனத்தொழிலுக் கிணங்கிப் பொய் கூறுகின்ருர்கள் போலும்," என்று தனக்குட் சிந்தித்தவனுய், அந்த அரசர்களை நோக்கி, "மன்னர்களே! எனக்குப் பயித்தியம் பிடிக்கவில்லை; உங்களுக்குத்தான் பெரும் பயித்தியம் பிடித்திருக்கின்றது; இவள் கழுத்தில் திருமங்கலியம் மின்னலைப்போன்று பிரகாசிக்கும்போது நீங்கள் அஃதில்லையென்று கூறுகின்றீர்கள்; நீங்களும் இம்மன்னனுடைய மோசச்செய்கைக் கிணங்கி இப் பெண்ணை எவரேனும் மணஞ்செய்து கொள்ளலாமென எண்ணினீர்கள்போலும்; அல்லது உங்களுடைய கண்பார்வைதான் குறைந்துவிட்டதோ யாதோ தெரியவில்லை; நக்ஷத்திரம்போல மின்னும் தாலியானது இவள் கழுத்தி லில்லையென்று நீங்கள் கூறுவது மிக்க ஆச்சரியம்! உங்கள் அறிவு மிகவும் நன்ருயிருக்கின்றது," என்று கூறினுன். அதன்மேலும் அரசர்கள் அவன் வார்த்தைகளை ஒப்புக்கொள்ளாமல் மறுத்துரைத்தார்கள்; வாக்குவிவாதம் பலமாக நடந்தது.

அரிச்சந்திரனுக்கும் மற்ற அரசர்களுக்கும் அவ்வாறு தருக்கம் நடக்கும்போது சந்திரதயன், "இவ்வளவு தருக்கம் நடந்தது போதும்; இப்படியே விட்டுவிட்டால் இது முதிர்ந்து கலகமாய் முடிந்தாலும் முடியும்; இனி உண்மையைக் கூறி எல்லோருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கவேண்

டும்,'' என்று கருதி அரசர்களை நோக்கி, ''மன்னர்களே! உங்கள் விவாதத்தை நிறுத்துங்கள்; இந்தப் பூமண்டலத்தை யாளுகின்ற அரிச்சந்திரமகாராஜன் என் குமாரத்தியின் கழுத்தில் தாலியிருக்கக் கண்டதும் உண்மைதான்; நீங்கள் காணாததும் உண்மைதான்; இவ்வாறு நீங்கள் அம்மங்கலி யத்தைக் காணாமலிருப்பதற்கும், அரிச்சந்திரன் கண்டதற் கும் தக்க காரண மிருக்கின்றது; அது மகாதேவ ரகசியம்; அதனை வெளிப்படுத்திச் சந்திரமதிக்குரிய நாயகனைத் தெரி ந்துகொள்வதற்கே சுயம்வரம் நாட்டி எல்லோரையும் இங்கு வரவழைத்தேன்; நான் எண்ணியபடியே காரியமும் முடிந் தது; இனி அந்த இரகசியத்தை எல்லோரு மறிய வெளிப் படுத்திக் கூறுகிறேன் கேட்பீராக; நான் நெடுநாளாகச் சந் ததியின்றி வருந்தி முடிவில் புத்திரப்பேற்றை விரும்பிச் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தேன்; அங்ஙனந் தவம் புரியவே அத்தவத்தின் பயனாகப் பரமசிவக்கடவுள் எனக்கு முன்னே பிரத்தியக்ஷமாகி என்னை நோக்கி, ''அன்பனே! நீ செய்த தவத்திற்காக நான் மிகவும் மகிழ்ச்சி யடைந் தேன்; உனக்கு மங்கலியத்துடனே ஒரு பெண் பிறப்பாள்; அந்த மங்கலியம் எவர் கண்ணுக்குந் தோற்றாது; ஆனால் உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் கண்ணாடி நிழலில் மாத் திரம் தெரியும்; அவளுக்கு நாயகனாகத்தக்கவ னெவனோ அவனுக்கே அம்மங்கலியம் பிரத்தியக்ஷமாகத் தெரியும்; அவ்வாறு அம்மங்கலியத்தைக் காண்பவ னெவனோ அவ னுக்கே அப்பெண்ணை மணஞ்செய்து கொடுப்பாயாக,'' என்று வரமளித்துச் சென்றார்; அந்த வரத்தின்படியே இவள் பிறந்தாள்; அவ்வாறு இவள் பிறந்தநாள்முதல் இன் றளவும் இவளுடைய கழுத்திலுள்ள மங்கலியத்தை யானுங் கண்டதில்லை; என் மனைவியுங் கண்டதில்லை; இவளை வளர்த்த தாய்மாருங் கண்டதில்லை; இவளுடைய தாதிகளுங் கண்ட தில்லை; உலகத்திலுள்ள மற்றவர்களுங் கண்டதில்லை; இந் தச் சந்திரமதிக்கும் அது தெரியாது; இவள் கையில் தடவி னாலும் அக்கைக்கும் அஃது அகப்படாது; ஆனால் இவளும்,

நானும், என் குடும்பத்தவர்களும் சிவனருளியபடி கண்ணாடி நிழலில் மாத்திரம் அதைப் பார்த்திருக்கிறோம்; அரிச்சந்திரமகாராஜன் இவளுக்கு நாயகனாக அமைந்தபடியினாலே சிவன் கூறியபடி அத்தகைய தாலியை இப்பொழுது கண்டார்; ஆதலால் இனி அம்மன்னர்பெருமானே இவளுக்குரிய நாயகர்," என்று கூறினான்.

இதைக் கேட்டவுடனே அங்குக் கூடியிருந்த எல்லோரும் அளவற்ற ஆச்சரியத்தையடைந்து, 'அரிச்சந்திரனே பாக்கியவான்,' என்று கூறி அவனைப் புகழ்ந்தார்கள். அரிச்சந்திரமகாராஜனும், "முன்னே நம்மிடம் வந்த முனிவர்கள் இச்சந்திரமதி சம்பந்தமாக ஓர் இரகசியம் ஏற்பட்டிருக்கின்றது என்று கூறியவிஷயம் இதுதான்போலும்," என்று தலையசைத்துத் தன் விருப்பத்தின்படியே சந்திரமதி தனக்குரியவளானதைப்பற்றி அடங்கா மகிழ்ச்சி யடைந்தான்.

அப்போது சந்திரமதி தன்னிஷ்டப்படியே அரிச்சந்திரன் தன் கழுத்திலுள்ள தாலியைக் கண்டதைப்பற்றி மனத்தில் உவகை பொங்கத் தனதெண்ணத்தை நிறைவேற்றிய இஷ்ட தெய்வத்தைத் துதித்தாள். அவ்வாறு துதித்துப் பின்னர், வேறொன்றையும் சிந்தியாமல் அரிச்சந்திரனுடைய பெயரையே மனத்திற் சிந்தித்தவளாய்ச் சேடியரால் கொடுக்கப்பெற்ற மணமாலையைக் கையில்வாங்கிக்கொண்டு சிவனைத் தியானித்து மேல்நோக்கி, "என்னை உலகத்திற் பிறக்கும்படி செய்து எனக்கு மிக்க சிறப்பை யுண்டாக்கிய உமைபாகனே! நான் அரிச்சந்திரமகாராஜனுடைய பெயரையன்றி வேறு புருஷரைச் சிந்தியாத கற்புவாய்ந்தவளும், உன் பாதத்தை மறவாத அடியாளுமாயிருப்பது சத்தியமானால் இந்த மாலையானது அவனுடைய கழுத்திலேயே போய்விழக்கடவது," என்று கூறி அம்மணமிகுந்த மாலையை ஆகாயத்திற் சுழற்றி யெறிந்தாள். உயர்ந்த இரத்தினாபரணங்களை யணியப்பெற்று அழகு விளங்காநின்ற அவயவங்களையுடைய சந்திரமதி அவ்வாறு சுழற்றியெறிந்த மாலையானது அச்சபையி

னுள்ள எல்லோரும் பார்த்து அதிசயிக்கும்படி அச்சந்திரமதியினுடைய கற்பின் மகிமையாலே வெற்றிமாலையைத் தரித்த வேலாயுதத்தைக் கொண்ட அவ்வரிச்சந்திரமகாராஜனுடைய கழுத்தில் விழுந்து மார்பில் பிரகாசத்தோடு விளங்கிற்று; அப்போது அரிச்சந்திரனுடைய முகமானது உதய கால சூரியன்போல மகிழ்ச்சி மிகுந்து பிரகாசித்தது; மற்ற அரசர்கள், சந்திரமதி தங்களுக்குக் கிடைக்கவில்லையென்று முகவாட்டத்தை யடைந்தபடியால் அவர்களுடைய முகங்களெல்லாம் சூரியன் முன்னே எதிர்ப்பட்ட சந்திரன் போல ஒளி குறைந்து விளங்கின; அப்போது அங்குக் கூடியிருந்த பெண்க ளெல்லோரும், "அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் மங்கள முண்டாகுக," என்று கூறி ஆர்ப்பரித்தார்கள்; தேவர்க ளெல்லோரும் அவ்விருவரையும் வாழ்த்தினர்கள்; இசைவல்லோர் கீதங்களைப் பாடி ஆரவாரித்தார்கள்; சந்திரமதியினுடைய உறவின ரெல்லோரும் சந்தோஷ வார்த்தைகளைக் கூறி முழங்கினர்கள்; மங்களவாழ்த்துப் பாடுவோரும் பல துதிப் பாட்டுக்களைப் பாடி ஆர்ப்பரித்தார்கள்; துறவினராகிய முனிவர்களும், "சந்திரமதியும் அரிச்சந்திரனும் நீடூழி வாழ்வார்களாக," என்று வாழ்த்தினர்கள்; வேதப் பிராமணர்களும் வேதங்களைக் கூறி ஆரவாரித்தார்கள்; அதன்மேல் எல்லா வாத்தியங்களு முழங்கச் சகல சிறப்புக்களுடனும் நல்ல முகூர்த்தத்தில் அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் வேதவிதிப்படி விவாகச்சடங்கு நிறைவேறிற்று. அவ்வாறு சிறந்த விவாகமானது நிறைவேறியபின் நல்ல இலக்கண இலக்கிய நூல்களை ஆராய்ந்துணர்ந்த வித்வான்கள் புகழ்ந்து பாடவும், பல வாத்தியங்களும் முழங்கவும், சங்கீத சாஸ்திர வல்லோர் மனமுருகத்தக்க இசைப் பாடல்களைப் பாடவும், வீணை, வேய்ங்குழல் முதலிய இன்னிசைக் கருவிகள் சப்திக்கவும், பரதசாஸ்திரத்தை நன்குணர்ந்த நிருத்தமாதர் அந் நூன்முறை தவறாது அபிநயஞ் செய்து நடனம் புரியவும், அந்தணரும், முனிவரும், அரசரும், உறவினரும், மற்ற மனிதர்களும், பெண்

களும், நால்வகைச் சேனைகளும் சூழ்ந்து நெருங்கிச் செல்லவும், அகவிதழ்களையுடைய பூமாலையை யணிந்த சுந்தரமுள்ள சந்திரமதியும், அவளால் மணமாலை சூட்டப்பெற்ற அரிச்சந்திரனும் ஊர்வலம்வந்து அந்தப்புரஞ் சேர்ந்தார்கள். அக்கலியாணத்தை முன்னிட்டு அந்நகரத்தில் சில தினங்கள்வரை வேடிக்கைகளும் விருந்துகளும் நடந்தன; அதன்மேல் சந்திரதயன் தன் மகளுக்குத் தகுதியான நாயகன் கிடைத்த சந்தோஷத்தினாலே வேதியர்க்கும் வித்வான்களுக்கும் யாசகர்களுக்கும் அளவற்ற தானதருமங்களைச் செய்து சுயம்வரத்திற்கு வந்திருந்த அரசர்களுக்கும் மற்றையர்க்கும் தக்க மரியாதைகளை நடத்தி உபசரித்து அவர்களைத் தங்கள் தங்களுடைய நகரங்களுக்குச் செல்லுமாறு அனுப்பினான். எல்லோரும் தங்கள் தங்களுடைய பதிகளுக்குச் சென்றார்கள்.

மேற்கூறியபடி சந்திரமதியுடன் அந்தப்புரஞ் சென்ற அரிச்சந்திரன், மற்றை நாட்களில் நடக்கும் சடங்குகளும் நடந்தபின் அந்தப்புரத்து ஸ்திரீகளால் உபசாரத்துடன் படைக்கப்பெற்ற அறுசுவை மிகுந்த போசன மருந்தியும், தக்கோலம், தீம்பூ, இலவங்கம், பச்சைக்கற்பூரம், சாதிக்காய் என்னும் ஐந்து வஸ்துக்களையும் சேர்த்திடிக்கப்பெற்ற பஞ்சமுகவாசக் கலவையுடன் தாம்பூலந் தரித்தும், சந்தனக் கலவை பூசியும், மைத்துனி முறையுள்ள பல பெண்கள் பூச்செண்டெறிதல், மஞ்சணீரூற்றல், சந்தனக்குழம்பு தெளித்தல் முதலிய விளையாட்டுக்களைச் செய்து பரிகசிக்க அவர்களுடன் மகிழ்ந்து தானும் விளையாடியும், பின்னர் மேன்மை யுண்டாகும் நற்றினத்தில் சிறந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்ற பள்ளியறையில் மிக்க பிரகாசத்தைக் கொண்ட ஒருகோடி மாணிக்க விளக்குகளைத் தாதிப்பெண்களிற் சிலர் தாங்கிக்கொண்டு நிற்கவும், சிலர் சாந்தாற்றி கொண்டு வீசவும், சிலர் பொற்றட்டில் பஞ்சமுகவாசச் செப்பு, தாம்பூலம் முதலியவற்றை வைத்து அதனை ஏந்திக் கொண்டு நிற்கவும், சிலர் சந்தனக்கலவை பனிநீர் முதலிய

வாசனை வஸ்துக்களைத் தாங்கி நிற்கவும், சிலர் சூட்டுகின்ற மலர்க்கண்ணி, அணிகின்ற மாலை முதலியவற்றைப் பூவிடு பெட்டியில் வைத்துத் தாங்கி நிற்கவும், இரத்தினமயமாய் விளங்கும் கட்டிலில் அமைக்கப்பட்டிருந்த பஞ்சணையைச் சார்ந்து கலவைச்சாந்தணிந்து மலர்மாலை சூடித் தாம்பூல மருந்திச் சந்திரமதியுடன் இல்லறவியலுக்குத் தகுதியாகப் பல வேடிக்கையான வார்த்தைகளைக் கூறி விளையாடத் தொடங்கினான். அப்போது சந்திரமதியும் கூந்தலுக்கு அகிற்புகையூட்டி, தேகத்தில் சந்தனச்சேறு, கஸ்தூரி, பனிநீர், பச்சைக்கற்பூரம், சவ்வாது ஆகியவைகளை யெல்லா மணிந்து அவனுடன் விளையாடத் தொடங்கினாள். அவ்வாறு இருவரும் விளையாடும்போது ஒருவர்மீதொருவர் மகரந்தங்களை வாரிவீசியும், சந்தனச்சேற்றைப் பூசியும், பனிநீரை யிறைத்தும், மல்லிகை, சண்பகம், குருக்கத்தி, புன்னை, முல்லை, குரவம், மகிழ், தாமரை, நீலம், சாமந்தி, செருந்தி, இருவாட்சிமுதலிய மலர்களைச்சொரிந்தும், அளவற்றமகிழ்ச்சியடைந்தார்கள். அங்ஙனம் அவர்கள் ஆபரணங்கள் சப்திக்கவும், மாலைகள் சிதையவும், சூட்டியமலர்கள் சிந்தவும் விளையாடவே அவ்விருவருக்குமேற்பட்ட அன்பானது நிமிஷத்துக்கு நிமிஷம் மேன்மேலும் வளர்ந்துகொண்டிருந்தது; அதனால் அவர்கள் இரதியும் மதனும்போலவும், திருமாலும் இலக்குமியும்போலவும், பரமசிவனும் உமையும்போலவும், முருகனும் வள்ளியும்போலவும் உடலிரண்டு உயிரொன்றாய்க் கூடியுறவாடிப் பிணங்கியும் இணங்கியும் பெற்றோருற்றோர் மகிழ, சாஸ்திரக் கிரமப்படி இல்லற வின்பத்தை யனுபவித்தார்கள். அரிச்சந்திரன் இவ்விதமே சந்திரமதியுடன் கூடி இணைபிரியாது விளையாடி மகிழ்ச்சிமிகுந்து சிலதினங்கள் வரை அக்கன்னமாபுரியிலேயே தங்கியிருந்தான்.

அரிச்சந்திரன் சந்திரமதியுடன் அயோத்திக்குத் திரும்புதல்.

அதன்மேல் அவனுக்குத் தன் நகரத்திற் கேகவேண்டுமென்று எண்ண முண்டானபடியால், அவன் தன்னுடைய

மாமனாகிய சந்திரதயனிடத்தில் தன தெண்ணத்தைத் தெரிவித்தான். அவ்வாறு தெரிவிக்கவே அச்சந்திரதயன் ஒரு சுபதினத்தில் தன் மருமகனாகிய அரிச்சந்திரனுக்குச் செய்ய வேண்டிய சிறப்புக்களை யெல்லாஞ் செய்து சந்திரமதிக்கும் அளவற்ற ஆடையாபரணங்களையும், திரவியத்தையும், அடிமைப் பெண்களையும், பிரியமாக வளர்க்கும் கிளி, நாகணவாய்ப்புள் முதலியவற்றையும்,அநேகம் விளையாட்டுக்கருவிகளையும், வாகனங்களையும், சீப்பு, கண்ணாடி முதலியவைகளையும், இன்னும் பெண்களுக்குரிய அநேகம் பொருள்களையும் சீதனமாகக் கொடுத்துக், குடும்பத்தை நடத்தக்கூடிய அநேகம் புத்திகளையுங் கூறி அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் அனுப்பினான். அவ்வாறு அவன் அனுப்பியவுடனே அவ்வரிச்சந்திரனும் சந்திரமதியும் அந்தப்புரத்து ஸ்திரிகளிடத்தும் மற்றவர்களிடத்தும் பயணஞ்சொல்லி விடை பெற்றுக்கொண்டு அழகிய தேர்மேலேறிப் பொன்னால் அலங்கரிக்கப்பெற்ற சிகரங்களையும், நீண்ட கதவுகளையும் கொண்ட கோட்டை மதிலைக் கடந்து வெளியேறிப் புறப்பட்டார்கள். அவ்வாறு புறப்பட்ட அவர்கள், பல நிறம்பொருந்திய அநேகம் சூரியர்கள் பரவினாற்போலப் பல முத்துக்குடைகள் மேலே நிழலைச் செய்யவும், பரிசுத்தமான வெள்ளைக் கொடிகள் பல ஆகாயத்தில் நிறைந்து விளங்கவும், எக்காளம் முதலிய பல வாத்தியங்கள் முழங்கவும், மின்னலைப்போல ஒளிபொருந்திக் கொடிபோற் றுவளுகின்ற மிருதுவான இடையையுடைய பெண்கள் பக்கங்களிலே நெருங்கி வெண்சாமரம் வீசவும், இருள் நிறமான சோலைகள் சூழ்ந்த அக்கன்னமாபுரியினுடைய மதிலையும் அகழியையுங் கடந்து அப்பாற் சென்றார்கள். அப்போது சந்திரமதியை வழியனுப்பும்பொருட்டு வந்தவர்களும், காந்தள்மலர்போலும் சிவந்த கரங்களை யுடையவர்களுமாகிய சில பெண்கள் தங்கள் கைகளால் அவளை வணங்கி, "பெண்ணரசியே! நீ சந்தோஷமாகப் போய்வருவாயாக," என்று சொல்லித் திரும்பிச் சென்றார்கள்; சந்திரதயன் குடும்பத்தைச் சார்ந்த மற்ற

அரசர்களும், மந்திரிகளும், பிரதானிகளும், சந்திரமதிக்கு நல்வார்த்தைகள் கூறி அரிச்சந்திரனை வணங்கிக்கொண்டு திரும்பினார்கள்; அன்பின் மிகுதியால் பின் தொடர்ந்து சென்ற நகரத்து ஜனங்களும் சந்திரமதியையும், அரிச்சந்திரனையும் பன்முறை வாழ்த்தியும் வணங்கியும் திரும்பினார்கள்; சந்திரமதியைச் சார்ந்த பரிவாரங்களும், அரிச்சந்திரனைச் சார்ந்த நால்வகைச் சேனைகளும் அவர்களைச் சூழ்ந்து மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்துச் சென்றன.

இவ்வாறு சேனைகள்சூழ அவ்விருவரும் கன்னமாபுரியைக் கடந்துசென்று, இதழ்கள் நெருங்கின தாமரை மலரின்மேலே தன்னுடைய ஆணுடனே கூடியிருந்த ஒரு பெட்டையன்னமானது அவ்வாணின் பக்கத்திலே ஆகாயத்தினுள்ள சந்திரனுடைய நிழல் ஒரு பெட்டை யன்னத்தைப் போலத்தோன்ற அதைக்கண்டு, "ஒரு பெட்டை யன்னம் நம்முடைய சேவலுடனே கூடிக்கொண் டிருக்கிறது; நம் சேவல் நம்மையும் பக்கத்தில் வைத்துக்கொண்டே அதனுடனும் கூடி யிருக்கின்றது; ஆதலால் இதனிடத்தே நாம் விசுவாசித் திருப்பது தகாது," என்று பிணங்கி வேறொரு புஷ்பத்திற் சென்று கோபத்தோடு தங்கும் சிறப்பையும் செழிப்பையுமுடைய நீர்சூழ்ந்த மருதநிலச்சார்பை யடைந்தார்கள். அப்போது அரிச்சந்திரன் அம்மருதநிலத்தில் மாக்கொம்புகள் நீண்டுள்ள பூஞ்சோலைகளையும், குளிர்ந்த தடாகங்களையும், அவற்றில் சார்ந்த நீண்ட சிறகுகளையுடைய பக்ஷிக் கூட்டங்களையும், நிறைந்த நீர்க்குளங்களிலே நீராடுகிறவர்களையும், மேற்கூறிய சோலைகளிலே மலர்களைக் கொய்து சூடிக்கொள்ளுகிறவர்களையும், சந்திரமதிக்குக் காட்டி, மேலும் அங்குள்ள விசேஷங்களை அவளுக்குக் காட்டத்தொடங்கி, அவளை நோக்கி, "இலக்குமிபோன்ற சிறப்பு வாய்ந்தவளே! இந்தப் பூஞ்சோலைகளி லெல்லாம் அழகிய பெட்டை வண்டுகள் சிவந்த புஷ்பங்களிலே சேர்ந்து அவற்றிலுள்ள தேனைப் பருகாமல் தங்களுக்குரிய ஆண் வண்டுகள் வருகிற வழியைப் பார்த்துக்கொண்டிருக்

கும் தோற்றமானது, உலகத்திலே உத்தமகுல ஸ்திரீகள் அறுசுவை யுண்டிகளைச் சமைத்து வைத்துக்கொண்டு தம் நாயகர் வரவை எதிர்பார்த் திருப்பதுபோன் றிருக்கின்றது பார்; நீட்சியும் கூர்மையும் பொருந்திய கண்களை யுடைய வளே! காவலையுடைய தங்கள் வீட்டிலே தம்மைச் சேர்ந்த வர்களைமட்டும் இருக்கச்செய்து அன்னியரை நீக்கித் துரத்து கின்ற கொடுஞ் செய்கையையுடைய மனிதர்கள்போல இச் சோலைகளிற் செறிந்த மரங்களில் கட்டப்பட்ட தங்கள் கூடு களிலே தாங்கள் பொரித்த குஞ்சுகளை மாத்திரம் இருக்கச் செய்து அவற்றின் சமீபத்தில் நெருங்குங்கருங்*குயில்களைத் துரத்தும் செய்கையைப் பார்ப்பாயாக; முத்துக்களைப்போ லும் அழகிய பல் வரிசையையுடைய மயிலே! வரம்புகள் நீண்டுள்ள வயல்களுக்கு நீர்பாயும் நீண்டமடைகளையுடைய மருதநிலத்திற் பாயும் வெள்ளமானது அம்மருதநிலத்தார் களிலேயே தங்காமல் நடுவே பள்ளமாயுள்ள கால்களின் வழியாகத் தாழ்ந்து சென்று தூரமாகவோடி வெறும் நிலங் களிலே பாய்ந்து பரவுந் தோற்றமானது, மனைவியானவள் இல்லத்தில் தனித்திருந்து வருந்த அவளைவிட்டு ஒருவரு மறியாமல் மறைந்து சென்று தாசியர் வீட்டைச் சாருகின்ற கள்ளமிகுந்த தூர்த்தர் செய்கையைப் போன்று விளங்கு கின்றதுபார்; எனது குலத்துக்கேற்ற பெண்ணே! தனவந் தர் பரிசு கொடுக்கப்பெற்று மகிழ்ந்து அவர்களிடம் பாட் டுக்களைப் பாடுவதுபோல இச் சோலையிலுள்ள மலர்கள் தேனைக்கொடுக்க அதனை விருப்பத்துடன் பருகி வண்டுகள் பாடவும், அப்பாடல்களுக் கிசையச் சிறப்புற்ற மயில்கள் நடனஞ் செய்யவும், தென்றற் காற்றுவந்து வீசுவதனாலே தடாகங்களில் அலைகளுண்டாய் மத்தளம்போ லொலிக்கவும்,

* குயில், காக்கைக் கூட்டில் அக்காக்கையின் முட்டைகளோடு அக்காக்கை யறியாமல் முட்டை யிட்டுவிட்டு அக்காக்கை தன் முட்டைகளோடு குயில் முட்டைகளையும் சேர்த்து அடைகிடந்து குஞ்சு பொரித்தவுடன் குயில் தன் குஞ்சுகளுக்கு மாத்திரம் தந்திர மாக இரை யூட்டுதற்குக் காக்கைக் கூட்டினருகே செல்லும். அப் போது காக்கை அதனைத் துரத்தும்.

பாடுவோருக்கும் ஆடுவோருக்கும் சிலர் பாக்கையும் சிலர் வெற்றிலையையும் கொடுப்பதுபோலப் பக்கத்திலுள்ள கமுக மரங்களும் வெற்றிலைக் கொடிகளும் பாக்கையும் வெற்றிலையையும் தாங்கி நிற்கவும், நாடகக்காரர்களுக்குப் பொன்னை அள்ளிச் சொரியும் செல்வர்களைப் போலக் கொன்றை மரங்கள் பொன்னிறமான மலர்களைச் சொரியவும் இச்சோலை ஒரு நாடகசாலைபோல் விளங்கும் அழகைப் பாரப்பாயாக; மயில்போலுஞ் சாயலையுடையாளே! மதகிற் பாயும் நீரானது மங்கலவாத்தியம்போல ஒலிக்கவும், வண்டுகள் பல்லாண்டுகள் கூறி வாழ்த்துவனபோல இசை பாடவும், செந்தாமரை மலர்கள் ஓமாக்கினிகள் போல விளங்கவும், இத்தடாகத்தில் புதிதாக மலர்ந்த ஒருதாமரைப்பூவிலே சோடாகக்கூடியிருக்கின்ற இளமையான ஆணன்னமும் பெட்டையன்னமும் விவாகஞ்செய்துகொள்வனவற்றைநிகர்த்திருக்கின்றன பார்; பெண்கொடியே! மேலே தூக்கியவாலையுடைய எருமைக்கன்றுகள் தங்கள்தாய்களிடத்தே பாலைக்குடித்துச் சந்தோஷமிகுதியினாலே இத்தடாகத்திலுள்ள மலர்ந்த தாமரைப்பூவைக் கடித்திழுத்துக்கொண்டு நிற்குந் தோற்றமானது, பெண்கள் பிணங்கிய சமயத்திலே நாயகர் சமாதானப் படுத்தும்பொருட்டு அவர்களுடைய கையைப் பிடித்திழுப்பதுபோன்றிருக்கின்றது பார்; பெண்ணே! இன்னும் நீர்ப்பறவைகள், இங்கேயிருக்கின்ற குளத்திலேயிறங்கி மீன்களையெல்லாம்பிடித்துத்தின்றுவிட்டு உடனேபறந்துபக்கத்திலுள்ளமற்றொரு குளத்திலே போயிறங்குந் தன்மையானது, ஒருவரிடத்திலிருந்த திரவியங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு அவர் தரித்திரானவுடன்அவர்களைவிட்டு நீங்கிமற்றொருதனவந்தரிடத்திற் போய்ச் சேரும் வேசையர் தன்மையை நிகர்த்திருக்கின்றது பார்; திருத்தமான ஆபரணங்களையணிந்தவளே! இந்தக் குளத்திலே மேலே பாய்கிற நீர்ப்பறவைகள் சேற்கெண்டையைப் பிடித்துத் தின்ன அதைக்கண்டஞ்சிப் பாய்கிற மற்ற கயல்மீன்கள் செந்தாமரைமலரிலே விழுந் தோற்றமானது, தன்தாயைப்பார்க்கிலும் அன்புடைய நாயகன் சண்டையிலே

இறக்க, அவனை யிழந்து அவ்விசனம் பொறுக்கமுடியாமல் உடனே அக்கினியிற் பாய்ந்திறக்கின்ற பதிவிரதைகளின் செய்கையை நிகர்த்திருக்கின்றது பார்ப்பாயாக; அழகிற் சிறந்தபெண்ணே! இந்தக்குளத்தில்கூட்டமாகக் கூடியிருக்கின்ற அன்னங்கள் தனித்தனியே பிரிந்து ஜலத்தில் நீந்தி இரை தேடித்தின்ன, அவற்றோடு பிணங்கிய ஓரன்னமானது அவற்றோடு சேர்ந்திரைதேடாமல் காம்பினுலுயர்ந்த வொரு தாமரைமலரிற் சேர்ந்து தனியே யிருக்குந் தோற்றமானது, ஒரு கழைக்கூத்தாடிச்சி சபையினடுவே நீண்ட மூங்கிலின்மேலேறிக் கழைக் கூத்தாடுவதை நிகர்த்திருக்கின்றது பார்; இளங்கொடிபோலும் பெண்ணே! அந்தக் குளத்தினீரிலேயுள்ள தாமரைமலரில் வண்டுகள் நெருங்கி மொய்த்துக் குடைந்து தேனைக்குடிக்குந்தன்மையானது, தங்களிடத்தே மிகுந்த பொருள்களை வைத்துக்கொண்டு அண்டினோர்க்குதவாமலிருக்கும் கருமிகள்பால் பல திருடர் சென்று அவர்களைப் பிடித்தடித்து அப்பொருள்களைக் கவர்ந்துகொள்ளுந் தன்மையைப்போன்றிருக்கின்றது பார்; வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய என் கண்ணே! இந்நிலத்திலே நெற்கதிரோடு சேர்ந்து அறுபட்டுக் கிடக்கும் தாமரைமலரானது, தம் நண்பருக்குக் கேடுவந்தபோது அவரைப் பகைவர்க்குக் காட்டிவிட்டு நீங்கிச் செல்லும் மகாபாவிகளைப்போலாமல் அந்நேயருடனே கூடி அவர்க்கு வந்த துன்பத்தைத் தாங்களும் அனுபவித்து அவரிறக்கும்போது தாங்களும் உயிர்விடும் உத்தம சிநேகிதர்களைப் போன்று விளங்குகிறதுபார்; பெண்களுக் கரசியானவளே! நல்ல பூவிதழ்களைக் கொண்டஇந்தக்குளத்துநீரிலே ஸ்நானஞ்செய்யும்பொருட்டு அழகியபுருவங்களும், கூந்தலும், நெற்றியும்விளங்கப்பெண்கள் விழுந்தோற்றமானது பல மின்னல்கள், நீண்ட விற்களையும், மேகத்தையும், மூன்றும் பிறைச் சந்திரனையும் தாங்கிக்கொண்டு கடலிலே வீழ்வதுபோன்றிருக்கின்றது பார்; பசுங்கொடிபோன்ற பாவையே! இளமைமிகுந்த ஒருபெண்ணானவள், இக்குளத்தின் நீரிலே மூழ்கியெழுந்து தன்னுடைய

கூந்தலை நீர்வடியும் பொருட்டுக் கையினாலே சேர்த்து முறுக்கி, அவ்வாறு முறுக்கப்பட்ட கூந்தலும், அதன் கீழ்ச் சார்ந்த முகமும், அக்கூந்தலை முறுக்கிப் பிடித்த கையும் சேர்ந்து விளங்கநிற்கும் தோற்றமானது, காந்தள்மலருள்ளிடத்தைச் சார்ந்திருக்கும் ஒரு சந்திரனை ஒரு கரும்பாம்பு பற்றிப் பிடித்திருப்பதை நிகர்த்திருக்கின்றது பார்; எனதாருயிர்த் துணைவியே! சிறிய நெற்றியையும், விசாலித்த கண்களையுமுடைய ஒரு பெண் இக்குளத்து நீரிலே மூழ்க, அவளுடைய மணங்கொண்ட மலர்மாலையை யணிந்த கூந்தலிலிருந்த வண்டுகள் மேலே கிளம்பி ஆகாயத்திற் சுழன்றலைவது, தரும நீதியுடன் உலகத்தை யாண்ட மன்னன் இறந்து போக அவனால் ஆளப்பட்ட குடிஜனங்கள் வருந்தியழுது அலைவதுபோன் றிருக்கிறது பார்ப்பாயாக; பெண் மணியே! ஒளி பொருந்திய நெற்றியையுடைய ஒரு மங்கையானவள் இத்தடாகத்தின் நீரிலே மூழ்கி விளையாடி ஒரு தாமரைப்பூவின் இதழ்களைத் தடவி அதன்மேல் கையை வைத்திருக்குந் தோற்றமானது தன் முகத்தினழகைக் கண்டு நாணி வருந்தியழும் அத்தாமரைமலரை நோக்கி அவள், "நீ கண்ணீர்விட்டு வருந்தாதே; பயமடையாதே," என்று சொல்லித் தன் கையாற் றடவித் தேற்றுவதை நிகர்த்திருக்கின்றது பார்; சந்திரகுலந் தனைழக்கவந்த தையலே! இச்சோலையிலுள்ள மாவரிசைகளின் நிழலிலே வருகின்ற ஒரு மங்கையினுடைய வண்டுகள் நிறைந்த கூந்தலினுள்ளே செருகப்பட்டு உரோமங்களி னிடையிடையே வெண்மையாக விளங்கும் புஷ்பங்கள், நீலநிறம் பொருந்திய ஆகாயத்தில் படர்ந்த கரிய மேகத்தி னிடையிடையே பல நக்ஷத்திரங்கள் தோன்றி விளங்குவனபோன் றிருக்கின்றது பார்; என் மனத்திற் கிசைந்த பெண்ணே! பல மலர்களும் பூத்து நிறைந்திருக்கின்ற இக்குளத்திலே மூழ்குகின்ற ஒரு பெண்ணானவள் இடைவிடாது வாசனையைக் கிரகிப்பதற்காக ஒரு நீலோற்பல மலரைப் பறித்துத் தன் நாசியில் அழுத்தி வைக்க அப்புஷ்பம் நாசியில் ஒட்டிக்கொண்டு விளங்கும்

தோற்றமானது, உலகத்தில் ஒருவர்க்குத் தோல்வியடைந்தவர் அவரோடு சமாதானஞ் செய்துகொள்ள விரும்பி மற்றொருவரிடஞ் சென்று தம்மை ஜெயித்தவர்க்குச் சமாதான வார்த்தைகள் கூறும்படி அவரை வேண்டுதல்போலக் கண்களுக்குத் தோற்ற அந்நீலோற்பல மலரானது அக்கண்களோடு சமாதானஞ் செய்துகொள்ள விரும்பி நாசியினிடஞ் சென்று தன்னை ஜெயித்த கண்களுக்குச் சமாதான வார்த்தைகள் கூறும்படி அந்நாசியை வேண்டுவதை நிகர்த்திருக்கின்றது பார்ப்பாயாக; எனக் கினிமையைத் தரும் பெண்ணமுதமே! இந்தப் பொய்கையிலுள்ள செவ்வல்லி மலரானது இதில் நீராடும் வெற்றியைக் கொண்ட வேல்போலுங் கண்களையுடைய ஒரு பெண்ணின் வாயைக் கண்டு அவ்வழகைத் தானும் பெற்றுக்கொள்ள விரும்பி முகமலர்ந்து இனிய வார்த்தைகள் கூறி அவளுடைய பாதங்களைப் பற்றிக்கொண்டு வணங்குதல்போல இதழ்கள் விரிந்துயர்ந்து, மேனி பசந்து உட்டுளையாயிருக்கும் தன்னுடைய கொடிகளால் அப்பெண்ணின் பாதங்களிற் பின்னிக்கொண்டு அப்பாதங்களி னடியிலே தலை சாய்ந்து வீழ்ந்து வீழ்ந்தசைய அம்மலருள்ள அச்செவ்வல்லிக் கொடிப் பின்னலை நீக்கமுடியாமல் அக்கொடியையும் இழுத்துக்கொண்டு அதனுடன் நீரில் மூழ்கி வெளியேறும் அவள் படுந் துன்பத்தைப் பார்ப்பாயாக; பரிமளமிகுந்த மலர்மாலையை யணிந்தவளே! இக்குளத்தின் நீர்த்துறையிலே நீராடும் இப்பெண்ணின் பக்கத்திலே ஸ்நானஞ் செய்யும் ஓரடவனை அவனுடைய நாயகி கண்டு பிணங்கிக் கண்கள் சிவந்து கோபங்கொண்டு பார்க்க, அவள் தன்மையை யெண்ணி அவன் ஆச்சரியமுற்றுப் புன்சிரிப்புடன் அவளைப் பார்க்கும் விநோதத்தைப் பார்," என்று எல்லா விநோதங்களையும் காட்டிக்கொண்டே சென்றான்; சந்திரமதியும் அவ்விநோதங்க ளெல்லாம் தனக்குப் புத்தியை விருத்தி செய்யக்கூடியவைகளா யிருந்தபடியால் அவற்றை மிக்க விருப்பத்துடன் பார்த்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றாள்.

இவ்வாறு அரிச்சந்திரனும் சந்திரமதியும் தங்கள் சேனைகளுடன் எல்லா விநோதங்களையும் பார்த்துகொண்டு நல்ல வளப்பத்தையுடைய அம்மருதநிலத்தையுங் கங்கையையுங் கடந்து சென்று செல்வதற் கரிதான பாலைவனத்திற்குப் போய், அரிச்சந்திரன் முன்னேசெல்லும்போது அவனுக்குப் பொற்றேர் முதலியன உதவி வரங்கொடுத்த காளிதேவி வீற்றிருக்கும் பொன்மயமான கோவிலைக்கண்டார்கள். அதன்மேல் அவ்விருவரும் அக்கோவிலுக்குட் புகுந்து முற்றத்தில் நின்று அநேகம் யோகினிக்கூட்டங்கள் சூழச் சிறப்புடன்சிம்மாசனத்திலமர்ந்திருக்கும் அக்காளியைத்துதித்து வணங்கி மீண்டு கங்காநதிதீரச் சார்பாகச் சென்று அக்கங்கையிலே நீராடினார்கள்.

அரிச்சந்திரன் அயோத்தி யடைதல்.

மேற்கூறியபடி கங்காஸ்நானஞ்செய்த அரிச்சந்திரனும் சந்திரமதியும் அதற்கப்பாற் புறப்பட்டு மூங்கில்கள் வளர்ந்துள்ள பெரிய மலைகளையும், பிரப்பங்காடுகள் சூழ்ந்த அருவிகளையும், அவ்வருவிகளி னிடையிடையே தோன்றும் திட்டுக்களையும், இன்னும் ஆங்காங்கே வட்டமாக வளைந்து சக்காவாளகிரியைப்போல விளங்கும் பல சிறு குன்றுகளையும், மரங்களடர்ந்த பல காடுகளையும் கடந்து சென்று மதில்களுயர்ந்துள்ள அயோத்திமாநகரைச் சார்ந்தார்கள்; அங்ஙனஞ் சார்ந்த பின்னர் யானைகளின் தொனி முழங்குவதான அழகிய கோட்டை வாயிலுக்குள்ளே நுழைந்து, தோரணங்கள் கட்டப்பெற்று அலங்காரத்துடன் விளங்கும் தெருக்களைத் தாண்டி அநேகம் பெண்கள் மங்கள வாழ்த்துக்களைப் பாடவும், சில பெண்கள் ஆலத்தி யெடுக்கவும், சில பெண்கள் திருஷ்டிபரிகாரஞ் செய்யவும், வேதவோசைகள் முழங்கவும், வாத்தியவோசைகள் சப்திக்கவும், சுற்றத்தார் மனமகிழ்ச்சியோடு எதிர்கொண்டழைக்கவும் நிறை நீர்க்குடம் போன்ற சிகரத்தைத் தாங்கியிருக்கின்ற சுவர்ணமயமான அரண்மனைக்குட் புகுந்தார்கள். அதன்மேல் சில தினங்கள்

வரை அவ்வரண்மனையில் விருந்தும் வேடிக்கைகளும் நடந்தன; அந்நகரத்திலுள்ள பெரியோர்களும், அரிச்சந்திரனுடைய நேயர்களும் வந்து அவனுக்கு மணமுடிந்த சுபகாரியத்தைப்பற்றி விசாரித்துச் சென்றார்கள்; அந்நகரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் சந்தோஷங் கொண்டாடினார்கள்; தேவாலயங்களிலெல்லாம் திருவிழாக்கள் நடந்தன; பல சிற்றரசர்களும், கோசலநாட்டிலுள்ள குடித்தனக்காரரும் தாங்கள் கொண்டுவரத் தக்க பல பொருள்களையும் கொண்டுவந்து அரிச்சந்திரனுக்கு முன்னே வைத்து அவனை வணங்கி அவனால் கொடுக்கப்பட்ட சன்மானங்களை வாங்கிச் சென்றார்கள்; பின்னர் இவ்விதச் சிறப்புக்களுடன் அந்த அரிச்சந்திரமன்னன் அவ்வயோத்திமாநகரத்திற் றங்கிச் செங்கோல் செலுத்தியும், அந்தப்புரத்தில் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்ற பஞ்சணைமேல் சுருங்கிச் சிறிதாயிருக்கிற இடையையுடைய சந்திரமதியுடன் கூடிப் பிரியா நேயங் கொண்டும் வாழ்ந்திருந்தான். இவ்வாறு அரிச்சந்திரனும், சந்திரமதியும், இரதியும் மதனும்போலப் பொருந்தி இல்லறம் நடத்திவரச் சில தினங்கள் கழிந்தன.

தேவதாசன் உற்பத்தி.

மேற்கூறியபடி சில தினங்கள் கழிந்தபின் கற்பகவிருக்ஷத்தை நிகர்த்த ஈகை பொருந்திய கையையுடைய அரிச்சந்திரமகாராஜன், அச்சந்திரமதியை ஒருநாளும் பிரியாமல் அவளுடன் நேயங்கொண்டு இல்லறம் நடத்திவருங் காலத்திலே, மணமிகுந்த மலரையணிந்த கூந்தலையுடைய அந்தச் சந்திரமதியின் திருவுதரத்திலே கருப்பமுண்டாயிற்று. அவ்வாறு கருப்பமுண்டானவுடனே அரிச்சந்திரனுக் குயிர்போலும் நலத்தையுடைய அச்சந்திரவதியின் அழகான உடம்பெல்லாம் உரோமஞ் சிலிர்த்துப் புளகாங்கிதமும் அதிகரித்தன; கொலைத்தொழிலையுடையனவாய் நீண்டு மருட்சியடைந்திருந்த அவளுடைய கண்களும் குழிந்து பள்ளமாயின; குளிர்ந்த முகமும் சோடச கலைகளையுடைய சந்திரனைப்போல

வெள்ளை நிறத்தை யடைந்தன; இப்படியே இன்னும் கருப்பத்திற்குரிய பல குறிகளும் விளங்க நாளுக்குநாள் அக்கருப்பம் வளரவே, அவள், தொடுத்த மலரை யணிந்த கூந்தலுஞ் சோர, செழுமையாய் அரையி லுடுத்தப்பெற்ற வஸ்திரங் குலைய மிருதுவாக நடக்கலாயினள்; அவளுடைய உடம்பிலுள்ள நரம்புகளும் பச்சை நிறத்தை யடைந்தன; அப்போது பார்த்தோர், 'இடையுஞ் சிறிது இருக்கிறது,' என்று கூறும்படி மருங்குலும் சற்றுப் பருத்து விளங்கிற்று. இவ்வாறு இடை பருத்துத் தேகம் முதலியன தளர்ந்து ஒன்பது மாதங்களுங் கழிந்து பத்தாவது மாதம் வந்தவுடனே அச்சந்திரமதியானவள் முன்னிலும் அதிகமான கருப்பவேதனை யடைந்து நடக்கவுஞ் சக்தியற்றவளாய்த் தோழிமார்கள் இருபுறத்திலு நின்று கைகளைத் தாங்கி முன்னே செல்ல வருந்தி நடந்து சஞ்சரித்துப் பத்துமாதமும் பூரணமாக நிரம்பினவுடனே ஒரு சுபதினத்தில் யாதொரு தோஷமு மில்லாமல் சிறந்த புத்திரனைப் பெற்றாள். அவ்விசேஷத்தை உடனே தாதிமார்கள் பிரபுவாகிய அரிச்சந்திரனுக்குத் தெரிவித்தார்கள். அந்த அரிச்சந்திர மகாராஜன் தனக்குப் புத்திரன் பிறந்த சந்தோஷ செய்தியைத் தாதிகள் கூறக்கேட்ட மாத்திரத்திலே அடங்கா மகிழ்ச்சி யடைந்து முதலில் தெய்வங்களுக்குச் சிறப்பு நடத்தும்படிச் செய்து, அதன்மேல் தன் பொக்கிஷ சாலையைத் திறந்துவிட்டு ஏழுநாள்வரை யாசக ரெல்லோரும் கூடித் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாரிக்கொள்ளுமாறு செய்யும்படி பிரதானிகளுக்கு உத்தரவளித்தான்; அரண்மனையை அலங்கரித்து அன்னதானம், சுவர்ணதானம், கோதானம், பூதானம் முதலிய தானங்களையுஞ் செய்தான்; நகரத்தி லுள்ளவர்களை யெல்லாம் சந்தோஷங் கொண்டாடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

அதனால் அயோத்திமாநகரத்தி லுள்ளவர்கள் தங்கள் தங்கள் வீடுகளையும் முற்றங்களையும் சுத்திசெய்து சந்தனக் குழம்பால் மெழுகி மலர்களாலும் தோரணங்களாலும் அலங்

கரித்து, வீதிகளிலெல்லாம் பானைகளிலே பனிநீரையும், மற்ற வாசனைத் திரவங்களையும், புழுகையும், கஸ்தூரியையும், சந்தனத்தையும் விட்டுக் கரைத்து அவ் வாசனைக்கலவைநீரைத் தெளித்து, நவரத்தினப் பொடிகளால் கோலமிட்டு, எங்கும் மாவிலைகளாலும் புஷ்பமாலைகளாலும் தோரணங்கள் தொடுத்துக்கட்டி, அந்த வீதிகளிலும் விநோத அலங்காரத்தைச் செய்தார்கள். அவ்விதம் நகரெங்கும் அலங்கரித்து முடிந்தவுடன் அரண்மனையிலும் நகரத்திலுமுள்ள பெண்களெல்லோருங் கூடி அரிச்சந்திரமன்னனுக்குப் புத்திரன் பிறந்த சந்தோஷத்தினாலே மஞ்சணீராடத் தொடங்கி மரத்தொட்டிகளிலும், பானைகளிலும், தோணிபோ லிருக்கிற பாத்திரங்களிலும், கடாரங்களிலும் மஞ்சணீரைக் கரைத்தூற்றி நிரப்பி வீதிகளிலெல்லாம் அவற்றை வைத்தார்கள். அங்ஙனம் எங்கும் மஞ்சணீர்ப் பாத்திரங்களை வைத்துக்கொண்ட பின்னர் அப்பெண்கள் தெருக்களிலே கூடி இடையிலே சேலைகளை நழுவாமல் இறுகக் கட்டிக்கொண்டும்,இரவிக்கைகளை இறுக்கி யணிந்துகொண்டும், கூந்தலைப் பின்னிக்கொண்டும், ஆபரணங்களைத் திருத்தமாக அணிந்துகொண்டும், மின்னுகின்ற பொற்கின்னங்களையும், பொற்றுருத்திகளையும், நெருங்கின தந்தக்குழல்களையும், தோற்றுருத்திகளையும் கைகளிலே கொண்டு அவற்றில் மஞ்சணீரை நிரப்பி, ‘நில்லும்! நில்லும்!!’ என்று ஒருவர்முன்னொருவர் எதிர்த்து அம் மஞ்சணீரை ஒருவர்மீ தொருவர் ஊற்றியும், சிதறியும், பீச்சியும் தாங்க ளணிந்த மோதிரங்கள் கழன்றுபோகவும், முத்துமாலைகள் அற்றுச் சிதறவும், அம்மஞ்சணீர் விளையாட்டை நடத்தினார்கள். அவ்வாறு விளையாடும்போது அவ்விளையாட்டிற் கேற்ப உடுக்கை, இடக்கை, சங்கு, நகாரா, துந்துமி, பேரிகை, சின்னம், எக்காளம் முதலிய வாத்தியங்களெல்லாம் இடியைப்போன்று முழங்கின; அங்ஙனம் வாத்தியங்கள் முழங்க விளையாடி வீதிகளிலே நெருங்கிய பெண்களெல்லோரும் பல மின்னல்களைப் போலவும் விளங்கினார்கள். இன்னும் அம்மஞ்சணீர் விளையாட்டிலே முருக்கம்பூவைப்

போலும் வாயையுடைய ஒருத்தியின் முகத்திலே மற்றொருத்தி, அழகிய பீச்சுக் குழலிலே கொண்ட செழுமையான மஞ்சணீரை யிறைக்க, அத்தோற்றமானது சூரியனுக்கு எப்போதும் அர்க்கியங் கொடுக்கிற ஜலத்தை சாற்கால சந்திரனுக்குங் கொடுக்குஞ் செய்கையைப்போன் றிருந்தது; மான் போலுங் கண்கள் பொருந்திய ஒருத்தியின் குளிர்ந்த முகத்தில் மற்றொருத்தி தன் துருத்தியிலுள்ள மஞ்சணீரைப் பீச்ச அந்நீர் ஒரே தாரையாக நீண்டு சென்று அம்முகத்திற் படுந் தோற்றமானது கடலிலே தோன்றுகின்ற வெண்மையான சந்திரனைக் கவ்விக்கொண்டு விளங்குகின்ற கேதுவென்னும் பாம்பின் தோற்றத்தை நிகர்த்திருந்தது. இவ்வாறு பல விநோதங்களெல்லாம் தோற்றும்படி அவர்கள் மஞ்சணீரை ஊற்றி விளையாடியதோடு இன்னும், புனுகு, சந்தனம், குங்குமம், பனிநீர், பொன்னிறமான கந்தபொடி, வாசனைத் தைலங்கள் முதலியவைகளையும் இறைத்து விளையாடினார்கள். அதன்மேல்எல்லோரும் ஸ்நானஞ்செய்து அரிச்சந்திரனுடைய புத்திரன் யாதோ ரிடையூறுமின்றி வாழ்ந்தோங்கும்பொருட்டுத் தெய்வத்தைத் தொழுது பல சிறப்புக்களையும் நடத்தி மகிழ்ச்சியுற் றிருந்தார்கள். இன்னும் அந் நகரத்திலுள்ள மற்றப் பெண்களுக்கும், புருஷர்களுக்கும், அரிச்சந்திரனுக்கும், சந்திரமதிக்கும் அப்போது உண்டான சந்தோஷமானது, பாற்கடலிலே அரிதான அமுதம் தோன்றியபோது தேவர்களுக்கும் தேவேந்திரனுக்கும் உண்டான சந்தோஷம்போல் விளங்கிற்று.

மேற்கூறியபடி எல்லோரும் அளவற்ற ஆனந்தத்தை யடையுமாறு புத்திரன் பிறந்தபின் அரிச்சந்திரனும் சந்திரமதியும் ஜாதக கருமம் முதலிய சிறப்புக்களை யெல்லாம் செய்து, மேன்மக்களுக்குள்ள புத்தியையும், நீதியை யுடையவர்களுக்குள்ள குணத்தையும், மனுதருமசாஸ்திர கேள்வியையும் அக்குழந்தைக்குப் பாலுடன்கலந் தூட்டுவதுபோல எல்லாஞானமும் உண்டாகும்படி பாலூட்டித் தாலாட்டி வளர்த்தார்கள். பின்னர், மும்மூர்த்திகளை யொப்பான தவ

முனிவர்கள் வந்து அப் புத்திரனை ஆசீர்வதித்து நிகரற்ற சிறப்பினையுடைய அவனுக்குத் தேவதாசனென்னும் திருநாமஞ் சூட்டினார்கள். அவ்வாறு நாமஞ்சூட்டியதன்மேல் தாய் தந்தையாகிய அந்த அரிச்சந்திரனும், சந்திரமதியும், சுற்றத்தாரும், தாதியரும்கூடி அத் தேவதாச னென்னும் புத்திரனுக்குப் பொன்னாலே செய்யப்பெற்ற காப்பையும், புலிநகத்தாலே செய்யப்பெற்ற பதக்கத்தையும், தண்டைகளையும், முத்துமாலையையும், கிண்கிணியையும், துர்த்தேவதைகளா லேற்படும் இடரினின்றுங் காத்தற் பொருட்டுக் காவற் கடவுளாகிப விஷ்ணுமூர்த்தியின் சங்கு, சக்கரம், கதை, வாள், கோதண்டமென்னும் ஐம்படைகளையும் அமைத்துச் செய்யப்படும் பஞ்சாயுதப் பூணையும், மோதிரங்களையும், பொன்னரைஞாணையுமணிந்து அவனைப் பெருமை மிகுந்த இரத்தினத்தொட்டிலேற்றி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவன் வளர்ச்சி யடைவதற் கேதுவான காரியங்களை நடத்தி வந்தார்கள். அப்புத்திரனும் மகிழ்ச்சியுடன் வளர்ந்து ஐந்துவய தடைந்தவுடன் வித்தியாப்பியாசஞ் செய்விக்கப் பெற்றுக் கல்விபயின்று ஏழுவயதுடையவனுய்த் தாய் தந்தையர்க்கு மகிழ்ச்சியைச் செய்து அவரிடத்தே வதிந்துவந்தான். அரிச்சந்திரனும் சந்திரமதியும் தங்களுக்குச் சிறந்த புத்திரன் கிடைத்த சந்தோஷ மிகுதியால் அங்கம்பூரித்து எங்கும் இசைபரவத் தங்கியிருந்தார்கள். அப்படி யிருக்கும்போது அரிச்சந்திரன் சத்தியந் தவறுதவனும், உயிர்போனலும் பொய் கூறுதவனும், தன்னுயிர்போல மன்னுயிரையும் பாதுகாக்கத் தக்கவனும், முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும் தகுதியுடையவனையும், இல்லையென் றிரப்போர்க் கில்லையென்னுத இதயம் படைத்தவனும், பருந்தும் கோழிக்குஞ்சும் ஒரு கூட்டிலிருந்து வாசஞ்செய்பவும், புலியும் பசுவும் ஒரு துறையில் நீருந்தவும், விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நஷ்டம் என்னும் எட்டு வகையாலும் ஏற்படும் நாட்டுக் குற்றங்களை நீக்கிச் செங்கோலோ

ச்சி வந்தபடியால் அவனுடைய கீர்த்தியானது மூவுலகங்களி னும் சென்று வியாபித்திருந்தது. இப்படி அரிச்சந்திரன் தன் மனைவி மக்களுடன் வாழ்ந்துவருங் காலத்தில் அதன் மேல் அவனுக்குவந்து சம்பவித்த விஷயங்களை இனிக் கூறுவாம்.

விவாககாண்டம் முற்றுப்பெற்றது.

இந்திரகாண்டம்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இம்மை யம்மை மறுமை யென்னு
விசைத்து மாமறை கூறிய
மும்மை யுந்தெளி வுற்று நெஞ்சினின்
முக்கு றும்பு மறுத்திடுஞ்
செம்மை யன்பர் மனத்து வைகிய
தெய்வ நாயகர் தேவிமற்
றெம்மை யாளுடை யம்மை தாள்க
ளிரண்டு மேத்தி யிறைஞ்சுவாம்.

மனிதருக்கு இப்பிறப்பும், முற்பிறப்பும், வருபிறப்பு மாகிய மூன்றும் உண்டென்று சிறந்த வேதங்கள் வற்புறுத்தி முழங்கிக்கூறிய அம்மூவகைப் பிறப்புக்களின் வகைகளைத் தெளிந்து அவை உண்டாகா திருக்குமாறு, அவற்றிற் கேது வாயிருக்கும் காமம், வெகுளி, மயக்கமென்கின்ற மூவகைத் தோஷங்களையும் மனத்திற் சாராமற் போக்கிய செம்மை யான குணத்தையுடைய அன்பு நிறைந்த அடியார்களது இருதய கமலத்தில் தங்கிய தேவர் நாயகனாகிய பரமசிவக் கடவுளின் தேவியும், எங்களை யாட்கொள்ளுந் தொழிலை யுடையவளுமாகிய உமையின் இரண்டு பாதங்களையும், இனி மேற் சொல்லப்போகும் விஷயங்கள் இனிது முடிதற்பொரு ட்டுத் துதித்து வணங்குவாம்.

இதுவரை மகாகீர்த்திமானாகிய அரிச்சந்திரனுடைய செங்கோன் முறைமையையும், அவனுடைய உன்னதமான இல்

வாழ்க்கைச் சிறப்பையும் கூறினேம்; இனி இந்திரன் சபையில் வசிஷ்டர் அரிச்சந்திரனுடைய சத்தியத்தைப் புகழ்ந்துரைத்தபோது விசுவாமித்திரர் மறுத்துரைத்ததையும், அதன்மேல் விசுவாமித்திரர் தாம் கூறியபடி அரிச்சந்திரனைத் துன்பப்படுத்தியாவது பொய் கூறும்படிச் செய்யக் கருதி முதலில் மிருகங்களைச் சிருஷ்டித்துக் கோசல நாட்டின் வளத்தை யழிக்கும்படியேவ, அம்மிருகங்கள் அவ்வாறே சென்றழித்தபோது அரிச்சந்திரன் வேட்டையாடும் பொருட்டுக் காட்டிற்குச் சென்றதையும், அங்கே நடந்த விசேஷங்களையுஞ் சொல்லத்தொடங்கி, முன்னர் இந்திரனுடைய அமராவதிப்பட்டணத்தின் சிறப்பையும், அவன் கொலுச் சிறப்பையுங் கூறிப் பின்னர் மற்றவற்றை முறையே கூறுவாம்.

பொன்னகர்ச் சிறப்பு.

திருமாலின் உந்திக்கமலத்திலே தோன்றிய சதுர்முகப் பிரமதேவன் பெற்ற காசிபருடைய மனையாளான அதிதியென்பவளால் பெற்றுக் குலபுத்திரனாக வளர்க்கப்பெற்று வளர்ந்து தனது பலத்தினாலே முன்னாளில் கோபங்கொண்டு மலைகளினுடைய சிறகுகளையறுத்த வச்சிராயுதபாணியாகிய மேற்கூறிய இந்திரனனவன் அரசாட்சி செய்கின்ற சிறப்பு வாய்ந்த அமராவதிப்பட்டணம் எத்தகையதெனில், அங்கே மாடங்கள், மண்டபங்கள், மேடைகள், பெரிய மதில்கள், வருவதற்கும் போவதற்கு மேதுவாயிருக்கும் வாயில்கள், அவற்றிலுள்ள கதவுகள், நீண்ட கூடங்கள், கோபுரங்கள், உயர்ந்த உப்பரிகைகள், அழகான திண்ணைகள், கோவில்கள், ஆட்டங்கற்றுக்கொள்ளுகிற நாடகசாலைகள், அரண்மனைச் சிகரங்கள் ஆகியவைகளெல்லாம், வெண்ணாவற்கனிரசம் பெருகிப் பாய்ந்ததனா லுண்டான சாம்பூநதம் என்னும் பொன்னாலே செய்யப்பட்டும், இடையிடையே உயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்றும் அநேகமாய் விளங்கும்; வேதசாலைகளும், யாகசாலைகளும், யோகசாலைகளும், மின்னலுக் கொப்

பான தேவரம்பைகள் பாடுகிற கீதசாலைகளும், சுருதிகூட்டி மீட்டுவனவாகிய கின்னரிகளை வாசிக்கும் சாலைகளும், நாயகர்நாயகிகள் சயனிக்கும் பள்ளியறைகளும், பெரியபூஜையை நடத்துகிற சாலைகளும், எல்லோரும் கூடி விரோதமில்லாமல் பலவிளையாட்டுக்களை நடத்திச் சந்தோஷத்தை யனுபவிக்கத் தக்க சாலைகளும் எவ்விடத்தும் அமைந்திருக்கும். தங்களுக்குயிரென்று சொல்லத்தக்க அன்புவாய்ந்த நாயகருடனே தேவகன்னிகைகள் கூடிச் சந்தோஷமாக வாழுகின்ற வீடுகளிலெல்லாம் அநேகம் பதுமராகமணிகள் மிக்க ஒளியுடன் பிரகாசிக்கும் தோற்றம், தேவர்களுக்குப் பகையை உண்டாக்குகின்ற அசுரர்களிருந்து வாசஞ்செய்கின்ற திரிபுரத்திலே பற்றிய நெருப்பின் சோதியைப்போன்று விளங்கும்; இன்னும் அவ்வீடுகளில் பதிக்கப்பெற்றிருக்கும் வயிரங்களும் முத்துக்களும் ஒளிவிடுந்தோற்றம் அத்திரிபுரத்திலே பற்றிய நெருப்பினுண்டான புகையை நிகர்த்திருக்கும்; மதிலாற் சூழப்பெற்ற அந்நகரத்திலேயுள்ள மாளிகைகளில் நாகரத்தினங்களும், முத்துக்களும், இந்திரநீலமணியும் ஆங்காங்கே பதிக்கப்பெற்றிருத்தலின் ஒருபக்கத்தில் சூரியனுடைய சிவந்தபிரகாசமும், ஒருபக்கத்தில் சந்திரனுடைய வெள்ளிய பிரகாசமும், ஒருபக்கத்தில் நீலநிறமாகியஒளியும் பாவி ஒரே சமயத்தில் எரிக்கின்ற வெயிற்காலமும், இளநிலாக்காலமும், இராக்காலமுந் தோன்றி மிக்க ஆச்சரிய முண்டாகும்; ஆதிசேடனுடைய உச்சியிலிருக்கின்ற மணிபோற் சிறந்த நாகரத்தினங்கள் பதிக்கப்பெற்று உயர்வாக விளங்கும் வரிசையான சாலைகளினும், பெரிய மரகதமணிகள் பதிக்கப் பெற்று விளங்கும் வரிசையான தாழ்வாரங்களினும், துதிக்கையினாலே பாந்த அலைகளையுடைய சமுத்திரத்தையும் உறிஞ்சுவனவாகிய மதயானைகளும் குதிரைக் கூட்டங்களும் இரண்டு கோடானுகோடிக் கணக்காக நிற்கும்; பந்து முதலியன ஆடுதலும், நீராடுதலும், மலர்கொய்து சோலைகளிலே விளையாடுதலும், தேவர்க்காடுதலும், பாடுதலும், பூங்கொத்துக்களைச் சூடுதலும், பலவிதமான பொம்மைகள் பச்சைக்கிளி

கள் ஈாகணவாய்ப் புட்கள் வீணைகள் முதலியவைகளைத் தேடிக்கொள்ளுதலும், பூஞ்சோலைக்குப் போதலும், அங்கே உல்லாசமாக வசித்தலும், மனக்குறைவு தீர்தலும், தங்கள் நாயகருடன் கூடலும் பிணங்கலும் ஆகிய இவ்வகைத் தொழில்களை எந்த நேரமும் அங்குள்ள பெண்களிடத்திற் குடிகொண்டிருக்கும்; இன்னும் எதிர்த்த ஆடவர்மீது போர்செய்யுந் தன்மையும், உரிய நாயகர்மீது அன்பைச் செலுத்துந் தன்மையு முள்ள கண்கள் காதுகளுடனே மோதிச் சண்டைசெய்பவும், இடையில் வஸ்திரத்துடன் அணியப்பட்டிருக்கும் மேகலாபரணங்கள் வீசுகின்ற பிரகாசஞ் சூழவும், ஒவ்வொரு முற்றத்திலும் அரம்பா ஸ்திரீகள் வயிரமணிகள் பதிக்கப்பெற்ற பலகையிலிருந்து ஊசலாடுந் தோற்றம் ஆகாயத்தில் மின்னற்கொடி உலாவுவதைப்போன் றிருக்கும்; அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்னும் ஐந்துவிருக்ஷங்களையும்கொண்ட சோலைகளெல்லாம் மிகவுஞ் சிவந்திருக்கின்ற தளிர்களை யீனுகின்றனவாயும், அரும்புகளை விடுகின்றனவாயும், அவ்வரும்புகள் மலர்ந்த மலர்களிலே தேனைச் சொரிகின்றனவாயும், இலைகளை உதிர்க்கின்றனவாயும், இனிமையான மலர்களைச் சிந்துகின்றனவாயும்,இரத்தினங்களை உதிர்க்கின்றனவாயும், ஆபரணங்களைச் சிந்துகின்றனவாயும், பழுத்த கனிகளைச் சொரிகின்றனவாயும் விளங்கும்; தேவஸ்திரீகள் கச்சை யிறுக்கிக் கட்டிக்கொண்டு இரத்தினமயமாக விளங்கும் பெரிய உப்பரிகைகளின்மேலேறிப் பூவையணிந்து கூந்தலையு முடித்துக்கொண்டு கழற்காய், பந்து, அம்மானை ஆகிய இவைகளைக் கூர்மையான நகங்களைக் கொண்ட கைகள் சிவக்க விளையாடுங் காலத்தில் அவைகள் வரிசையாக மேலெழுந்து விளங்கும் தோற்றம் பொன்மயமான பெரிய சிகரங்களையுடைய மேருமலையின்மேல் பலகாலும் நக்ஷத்திரக்கூட்டங்கள் படிந்தெழுவதுபோன் றிருக்கும்; உடுக்கைபோன்று துவளுகின்ற இடையையுடைய பெண்கள் கைகளிலே யணிந்த வளையல்களி னொலி மிகுந்திருக்கும் உப்பரிகைகளின்மேல், அடிப்

பாகந் துவளவும், நடுப்பாகந் துவளவும், நுனிப்பாகந் துவளவும் அழகிய கொடிகள் துவண்டாடுவதா லுண்டாகு மொலியானது கலியுக முடிவிலே பொங்கியெழுந் தொலிக்கின்ற சமுத்திர வோசையையும், அக்காலத்திற் பெய்யும் மழையினு லுண்டாகும் இடிமுழக்கத்தையும் நிகர்ப்பதல்லது வேறொன்றையும் நிகர்க்காது; அதிசயிக்கத்தக்க நிலா முற்றத்திலே முன் கணவரோ டூடிய பெண்களால் அறுத்தெறியப்பட்ட மாலைகளினின்றுஞ் சிதறிய முத்துக்களும், மாணிக்கங்களும், பின்னர் அப்பெண்கள் அந்நாயகரோடு சேர்ந்து ஜலக்கிரீடை செய்து விளையாடுங் காலத்தில் அந்நீரால் சிறிய ஜலதாரைகளின் வழியே தள்ளிக்கொண்டு போகப்பட்டு அப்பட்டணத்தின் தெருக்களில் சிவப்பும் வெளுப்புமாய்ப் பரவிக்கிடக்கும் காட்சியானது, சூரியனும் சந்திரனும் இரவென்னும் கன்னிகையிடம் சார்ந்து அவள் கையைப் பற்றிக்கொண்டு, "நீ எனக்கே உரியவளாவாய்," "நீ எனக்கே தலைவியாகக்கடவாய்," என்று ஒவ்வொருவரும் தனித்தனியே சொல்வதுபோன்று விளங்கும்; இன்னும் ஆங்கே மிக்க விருப்பத்தோடு கொடுத்தற் கெண்ணுகின்றவரே நிறைந்திருப்பதன்றிக் கிடைப்பதை ஆசையோடு பெற்றுக்கொள்ளும் தன்மையுடையவ ரில்லையாதலின், பாடுகின்ற பெண்களும், அழகிய வீணையைக் கற்று வாசிக்கும் பெண்களும், நாடகமேடையிலே ஆடுகின்ற பெண்களும் தங்களுக்கு நற்பரிசாகப் பெற்றுக்கொள்வது ஆகாயவாசிகளுடைய மனவிருப்பமல்லாது வேறொன்றில்லை; இளம்பிறையை நிகர்த்த நுதலில் பெருமை பொருந்திய ஒளியையுடைய பட்டம் விளங்கவும், காதுகளில் சோதிநீளும் தோடுகள் அசையவும், மூங்கிலையொத்த தோள்களுக்கு மேலே இரத்தினமாலைகள் மின்னவும், சிக்கறுத்து வாரி முடித்துப் பருத்திருக்கும் கொண்டை நிலைகொண்டு குலுங்கவும் அந்த அமராவதிப் பட்டணத்தின் வீதியிலே செல்லும் பெண்களை மேலே காணும்போது அவர்களுடைய அந்த நெற்றிப்பட்டத்தை மின்னலென்றும், கொண்டையை

மேகமென்றும் இவ்வுலகத்தவர் சொல்லுவார்கள்; இன்னும் அது, அநேகம் சாஸ்திரங்களை யுணர்ந்த கவிவாண ரெல்லோ ரும் உலகத்தில் ஒரு சிறந்த நகரத்தை வருணிக்கும்போது, "இது பொன்னகருக்குச் சமமானது," என்று வருணிக்கக் கூடிய சிறப்புவாய்ந் திருத்தலின் அதற்கு நிகராக எந்த நகரத்தையும் சொல்லுதல் இயலாது.

இந்திரன் சபாமண்டபச் சிறப்பு.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட அந்தப் பொன்னக ரிலே, அலர்ந்த மலர்களுடனே உயர்ந்தெழுந்து நிற்கும் கற்பகக்காட்டினடுவே, அசுரர்களுக் குதவியான மலைகளி னிறகுகளை வெட்டி ஒளி வீசுகின்ற வச்சிராயுதத்தைக் கையிலே தாங்கிய தேவேந்திரன், பலவகை இரத்தினங்க ளோடு சமுத்திரத்திலே அழுந்தின மைநாகமலைபோல வீற் றிருந் தரசுபுரியும் சபாமண்டபமானது எத்தன்மையுடைய தெனில், அதில், பலமான அஸ்திவாரமிட்டு, வெண்மைநிறம் பொருந்திய பளிங்குக் கற்களினாலே தளவரிசையிபற்றி அத னிடையிடையே வேடிக்கையாகச் சுவர்ணத்தாலே சந்து பதிவுசெய்து, அத்தளத்தில் உயரமாகக் கட்டியிருக்கிற திண்ணைக்குறடுகளின்மேலே ஒவ்வொரு வரிசைக்கும் ஆயிர மாயிரம் வீதமாகப் பருத்த பவளத்தூண்களை நிறுத்தி, அவைகளின்மேலே சேர்த்திருக்கிற போதிகைகளும், உத் தரங்களும் அநேகம் வயிரங்களாற் செய்யப்பட்டு விளங்கும்; மேற்கூறியபடி இபற்றப்பட்டிருக்கும் பத்திகளையுடைய அவ் விடத்தைச் சுற்றிலும் இந்திரநீலக்கற்களை அடுக்கிச் சுவ ருயர்த்தி, அச்சுவரின்மீது அளவற்ற பிரகாசத்தையுடைய மாகதத்தாலே மேற்றளமியற்றி அதற்குக் கீழே உட்செல் வதற் கேற்படுத்தப்பட்ட வாயிலில் நாட்டப்பட்டிருக்கும் கோமேதகத்தூண்கள் மிக்க சோதியை வீசிக்கொண்டிருக் கும்; இன்னும் அம்மண்டபத்தின் முகடெல்லாம் மாணிக் கத்தா லியற்றப்பெற்று அளவற்ற பிரகாசத்துடன் விளங் கும்; அதன் முன் முகப்பெல்லாம் முத்துக்களால் அலங்கரிக்

கப்பெற்றிருக்கும்; இஃதன்றி மேற்கூறியபடி நிறுத்தப்பட்ட அம்மண்டபத்தின் தூண்வரிசைகளிலெல்லாம் பல யாளிக் கூட்டங்களும், சிங்கக்கூட்டங்களும், யானைக்கூட்டங்களும், குதிரைக்கூட்டங்களும், அன்னங்களும், கிளிகளும், வைடூரியம் முதலிய பல இரத்தினங்களாலும் பொன்னாலும் செய்து வைக்கப்பெற்று அழகுடன் பிரகாசிக்கும்; இன்னும் இத்தகைய சிறப்புள்ள அம்மண்டபத்தின் உச்சியிலே வைக்கப் பெற்றிருக்கும் பூரண கலசமானது, "ஆதிசேடனுடைய சிரோரத்தினத்தை இம்மண்டபத்தின் முகடு பெற்றுக் கொண்டதோ! அல்லது இங்கே இடிவந்து சேர்ந்திருந்து கொழுந்துவிட்டெரிகிறதோ! அல்லது ஒளி மிகுந்த பல சூரியர்களும் கூடி இங்கே வந்து ஒருருவமாய்த் தங்கியிருக்கின்றனரோ!" என்று பார்த்தோர் சொல்லும்படி நேர்த்தியாய் விளங்கும்; இத்தகைய பூரணகலசத்தையுடைய அச்சபாமண்டபமானது நான்கு பக்கத்திலும் ஆயிரங்காத வளவுள்ளதாய் விசாலித்து, ஆயிரங் கோடானுகோடி பூதங்கள் வெளியே நின்று தன்னைத் தாங்குவதுபோலச் சுற்றிலும் பூதங்களை யமைத்துச் செய்யப்பட்ட தோற்றத்துடன் மேலே உயர்ந்து, தெய்வலோகத்துக் கப்பாலுள்ள உலகங்களையுங் கடந்து சென்று எல்லா வுலகங்களுக்கும் முதன்மைத்தாகிய பிரமதேவனுடைய சத்தியலோகத்தையுந் தனக்குக் கீழ்ப்படுத்தி வளர்ந்திருக்கும்.

இந்திரன் கோலச்சிறப்பு.

"பிரமதேவன் ஆராய்ந்து சிருஷ்டித்த அண்டங்களெல்லாம் இதற்குச் சமமாகமாட்டா," என்று பார்த்தோர் கூறும்படி தெய்வத்தச்சனாகிய மயன் தன்னுடைய புத்தி நுட்பத்தைக் கொண்டு சமைத்த அச்சித்திரமண்டபத்திலே தேவர்க்கரசனாகிய இந்திரன் தன்னுடைய சிறப்பிற்குத் தகுதியாக அம்மயனாலேயே செய்யப்பெற்ற சிங்காதனத்தின்மேல் தன் நாயகியாகிய இந்திராணியுடனே கூடி வேத சாஸ்திரங்களின் பிரயோசனங்களை யுணர்ந்த பெரியோர்க

ளுடன் வழக்கப்படி ஒரு தினம் கொலுவிருந்தான். அங்ஙனம் கொலுவிருந்தபோது அவன், பாதாளலோகத்திலுள்ள இருளையும் தன்னுடைய சிறந்த இரத்தினகிரீடத்தின் ஒளி சென்று நீக்கவும், ஒருகோடி சூரியர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடி விளங்கினாற்போல மகரதோரணமானது தானிருக்குமிடத்திற்குமேல் மிக்க பிரகாசத்துடன் விளங்கவும், கோடி அரம்பாஸ்திரீகள் பக்கத்தேநின்று அழகிய சாமரங்களை வீசவும், வெண்மையான பிரகாசத்தையுடைய முத்துக்குடையானது, அவனுடைய ஆயிரங்கண்களின் கரியவொளி பாய்ந்து பாய்ந்து விலகுவதனாலே அடிக்கடி கருமைநிறத்தை யடைந்து மீண்டும் வெண்மை நிறத்தோடு இடைவிட்டுப் பிரகாசிக்கவும், இந்திராணியின் கருமேகம்போன்ற கூந்தலின் நிழல் அவனுடைய திருமேனியிலே வீசவும், தேவர்களும், அசுரர்களும், * கேசரர்களும், தும்புருக்களும், சித்தர்களும், கந்தருவர்களும், † சாரணர்களும், பூதர்களும், பைசாசர்களும், கின்னரர்களும், நாரதனும், நாகர்களும், இயக்கர்களும், அரக்கர்களும் கூடித் துதிசெய்யவும், மிகவுஞ் சிறப்புற்று விளங்கினான்.

அப்போது சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, அக்கினி, வாயு, வருணன், யமன், குபேரன் முதலியவர்களெல்லோரும் அச்சபையிலே வந்து கூடினார்கள். பின்னும், சனகன், சமதக்கினி, சனற்குமாரன், அநகன், பிருகு, அத்திரி, சத்தி, அகத்தியன், கனகன், சுகன், காசிபன், கௌதமன், ஆபஸ்தம்பன், பனகன், உபமன்னியன், சங்கன், உரோமபாதன், பாத்துவாசன், குமுதாக்கன், பராசரன், அருந்ததி நாயகனாகிய வசிஷ்டன், வீரியம் மிகுந்த விசுவாமித்திரன் ஆகிய முனிவர்களும் வந்து கூடினார்கள்.

அரிச்சந்திரனைப்பற்றி வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் ஏற்பட்ட விவாதம்.

மேற்கூறியபடி முனிவர்களும், மற்றவர்களும் இந்திரன் சபையில் வந்து கூடியவுடனே அவ்விந்திரன் அவர்களெல்

---

* கேசரர் - வித்தியாதரர். † சாரணர் - ஒற்றர்.

லோருக்கும் தகுதியான ஆசனங்களுதவி அவர்களை உட்காரும்படிச் செய்து எல்லோரு மிருந்தபின்பு, தான் கொவ்வைக்கனிபோன்ற தன்னுடைய வாயைத் திறந்து சில வார்த்தைகளைப் பேசத் தொடங்கினவனுய் அவர்களுள் முனிவர்களை நோக்கி, "பெரிய தவத்தை யுடையவர்களே! கரையை மோதும் அலைகளையுடைய பெரிய சமுத்திரத்தாற் சூழப்பெற்ற பூவுலகத்திலுள்ள அரசர்களுள், தாம் ஆளுகிற நாடு நகரங்களிலே பாவங்களும் துன்பங்களும் நடப்பதற் கிடங்கொடாமல், மெய்ம்மையையும் நல்ல சாஸ்திர விசாரணையையும், அதற்கேற்ற நல்லொழுக்கத்தையும் பெற்று, அறத்தை வளர்த்துவரும் யோக்கியர்களாகிய அரசர்களை எனக்குத் தெரிவிப்பீராக," என்று கூறினன். பரிமள மிகுந்த கூந்தலையுடையவளான இந்திராணிக்கு நாயகனுகிய தேவேந்திரன் அவ்வாறு கூறிய வார்த்தைகள் அங்குக் கூடியிருந்த எல்லாருடைய செவிகளிலும் புகுந்த மாத்திரத்தில், அவர்களுட் சிறந்தவரும்,அன்னவாகனத்திலேறிவருகின்ற பிரமதேவருக்குப் புத்திரரும், தெய்வத்தன்மை பொருந்தியவரும், வேதங்களின் பொருள்களை ஐயமறத் தெரிந்தவருமாகிய வசிஷ்ட மகாமுனிவர் அவ்வினுவுக்கு விடை கூறத் துணிந்து, இந்திரனை நோக்கி, "தேவர்க்கதிபதியே! தாம் கூறியபடி பூவுலகத்தில் எல்லா நீதிகளும் பொருந்தியவன் அயோத்தி நாட்டை யாளும் அரிச்சந்திர னெருவனே; அவன் உலகத்தில் எல்லா நலங்களினும் நிகரற்றவன்; அன்னியர் மனைவியர்க்குச் சகோதரனுனவன்; வெவ்விதான போரைச் செய்வதிலும் இணையில்லாதவன்; இன்னும் கீர்த்தியினுலும், வேதார்த்த வுணர்ச்சியினுலும், மனுதரும சாஸ்திரக் கிரமப்படி நடக்கும் நடக்கையினுலும், மோக்ஷத்தைக் கொடுக்கும் வேதாந்தசாஸ்திர ஞானத்தினுலும், பொறுமையினுலும், பொய் கூறுமையினுலும், முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்குந்தன்மையினுலும், ஈகையினுலும், செல்வத்தாலும், வடிவத்தாலும், எவரும் மெச்ச இல்லறநடத்தும் நல்லறிவாலும், தன்னுயிரைப்போல மற்றெல்லா வுயிர்களையும்

பாவித்துப் பாதுகாக்கும் ஜீவகாருணியத்தாலும், கோன் முறை வழுவாது அரசாட்சிபுரியுந் தன்மையாலும், தெய்வ பக்தியாலும், குருவிசுவாசத்தாலும் மிகவுஞ் சிறப்புற்ற வன்," என்று கூறினர்.

அதைக் கேட்டவுடனே அங்கு வந்திருந்த காதிராஜன் புத்திரராகிய கோசிகரென்னும் விசுவாமித்திரமுனிவர், தாம் முன்னே அரசராயிருந்தபோது வசிஷ்டமுனிவர் தவஞ் செய்த காட்டிற்கு வேட்டையாடச் சென்று, அவ்வசிஷ்ட முனிவர் காமதேனுவால் உபசரித்திட்ட விருந்துண்டு அக் காமதேனுவைத் தமக்கு வேண்டுமென்று கேட்டு அவர் கொடாததால் அதனை வலிதிற் பிடிக்க முயல, அஃது உடல் சிலிர்த்ததினின்று முண்டான மிலேச்சர் தம் சேனையை யழிக்க, அப்போது தம்முடைய நூறு புத்திரர்களும் அவ் வாறு நேர்ந்தது வசிஷ்டருடைய வஞ்சனையென்றுன்னி அவ ரோடு போர்க்கெழுந்து அவர் விழித்துப் பார்த்தமாத்திரத் தில் எரிந்து சாம்பலானது கண்டு தாமும் அவருடன் போர் செய்யத் தொடங்கி ஆற்றுமல் வெட்கத்தை யடைந்து, "அரசரினும் முனிவரே சிறந்தவர்," என்று துறவடைந்து இக்காரணத்தால் எப்போதும் அவ்வசிஷ்டர்மீது பொருமை யும் கோபமுங் கொண்டிருப்பவராதலின், அவர் வார்த்தை களை மறுக்கவேண்டுமென்னுங் கருத்துடையவராய் அவ் வசிஷ்டமுனிவரை நோக்கி, "வசிஷ்டரே! உலகத்தில் மிக வும் பொல்லாதவனும், மகாபாதகனும், பரதார இச்சையுள்ள வனும், பிறருக்குப் பயன்படாதவனும், பொய்யனும், சிறி தேனும் அடக்கமில்லாதவனும், பொறுமையற்றவனும், அற் பனும், வஞ்சகனும், புத்தியீனனுமாகிய அரிச்சந்திரனை மிகவும் நல்லவனென்று வாய் கூசாமல் இந்தத் தேவராஜன் சபையில் பலரறியக் கூறினீர்; இதனுல் உமக்கு யாது பயன்?" என்று சொன்னர். அவ்வாறு சொல்லவே வசிஷ்டமுனிவர் மனம் பொறுதவராய்க் கோபங் கொண்டு, "கௌசிகமுனி வரே! உலகத்தில் தீய செய்கைகளை யெல்லாம் நீக்கி நற் செய்கைகளையே செய்யும் செம்மைக் குணத்தையுடைய

மெய்யனுகிய அரிச்சந்திரனை மகா பாவியென்றும், பொய்ய னென்றும் கூறி உம்முடைய இயற்கையான துர்க்குணத்தை இப்போது விளக்கிக் காட்டினீர்; ஒரு மகா புண்ணிய புருஷனுகிய அரசனை இகழ்ந்துரைத்த உம்முடைய வாய் இன்னும் வேகாதிருக்கிறது! உமது மனமும் வேகாதிருக்கிறது! நீரும் வெந்து சாம்பலாகா திருக்கிறீர்! இப்படி யிருப்பதனுலே இச்சமயம் தெய்வமும் உம்மைத் தண்டனை புரியாமல் உம் மோடிணங்கி யிருக்கின்றது; எப்படி யிருந்தாலும் நல்லோரைப் பழிக்கும் நீர் நற்கதி யடையமாட்டீர்," என்று படபடப்புடன் கூறினர். வசிஷ்டமுனிவர் மேற்கண்டபடி தெய்வத்தைநொந்து விசுவாமித்திரரைக் கடிந்துகூறவே, கொடுஞ் செய்கைக்கே இருப்பிட மானவராகிய அவ் விசுவாமித்திரர் அடங்காக் கோபங்கொண்டு அவ் வசிஷ்டரைப் பார்த்து, "ஒரு கொடியனை நல்லவனென்று பொய்கூறிய உம்முடைய வாயிற் புழுவுண்டாகிச் சிந்துமேயன்றி மெய்யையே கூறுவதான என்னுடைய வாயும் மனமும் வேகமாட்டா," என்று கூறினர். அதைக் கேட்டவுடன் காட்டிலே பிடித்த நெருப்பானது மேகமண்டலத்தளவு முயர்ந்து வளர்ந்தாற்போல வசிஷ்டமுனிவர் மனத்திலே மிக்க ஆத்திரமுண்டாகி வளர அதனுலே அவர், எல்லாம் தகனமாகும் பிரம கற்பத்தின் முடிவில் தோன்றுகிற கால ருத்திரனைப்போன்று கண்களிலேயுண்டான நெருப்புப்பொறி எல்லாத்திக்கிலுஞ் சிதறக் கோபங்கொண் டெழுந்தார்; விசுவாமித்திரரும் அவருடைய கோப வார்த்தைகளைப் பொருதவராய் அவரைப்போலவே கோபங்கொண் டெழுந்து பலவிதமான கடுஞ்சொற்களைக் கூறி அதட்டிக்கொண்டு நின்றுர்; அப்படி நிற்கும்பொழுது அவ் விருவரிடத்திலு முண்டான கோபாக்கினியானது மிகவும் அதிகரித்து வளர்ந்து கொழுந்துவிட் டெரிந்து அப் பொன்னுலக மெல்லாம் பரவிப் பிரமலோகத்திலும் தாவிச் சென்றது.

அவ்வாறு அவர்களுடைய கோபாக்கினியானது, வண்டுகள் மதுவையுண்டு களித்து இராகம் பாடத்தக்க தாமரை

மலரிற் பிறந்தவனாகிய பிரமதேவனுடைய உலகம்வரையி லும் பரவி வீசும்போது, தேவர்களுக் கதிபனாகிய இந்திரன் அக் கோபாக்கினியின் உக்கிரத்தைக் கண்டு, "இப்போதுண் டாகியிருக்கும் இவர்களுடைய கோபாக்கினியின் மிகுதியால் ஆகாயம், பூவுலகம் ஆகிய எல்லா வுலகங்களும் அழியும்; ஆதலால், இதனைத் தணிக்கவேண்டும்," என்று பயந்து உடனே எழுந்திருந்து அவ்விருவருக்கு மிடையிற்போய் நின்று, "முனிவர்களே! நீங்கள் கோபங்கொள்வது தகாது; சமாதானத்தோடு உங்கள் சொற்களை உறுதிப்படுத்தும் மார்க்கத்தைத் தேடுங்கள்," என்று சொல்லி அவர்களுடைய கோபத்தை ஆற்றி மனத்தையுந் தேற்றித் தன்னுடைய சிவ ந்த தாமரைமலர்போலுங் கரங்களால் அமைத்து, அவர்களை உட்காரும்படிச் செய்து மீண்டும் அவர்களை நோக்கி, "முனி சிரேஷ்டர்களே! உங்களுடைய வார்த்தைகள் நீங்கள்கோபஞ் செய்துகொள்வதால் உறுதிப்படமாட்டா; அரிச்சந்திர னுடைய குணங்களைப் பரீக்ஷித்தறிந்தால்மட்டும் அவைவெளி ப்படும்; ஆதலின், அவ்வரிச்சந்திரன் சத்தியந் தவறுதவன் றானு வென்பதைப் பற்றிப் பரீக்ஷித் தறியவேண்டும்; அங்ங னம் பரீக்ஷிக்கும்போது எவர்சொற் றவறுகுமோ அவர் செய்யத்தக்க காரியம் யாது? அதை முடிவு செய்துகொண்டு உங்கள் சொற்களின் உண்மையை வெளிப்படுத்துங் காரியத் திற் பிரவேசிப்பீராக," என்று சொன்னான். அவ்வாறு சொன்னவுடன் கடல்போற் பெருகும் அன்பினை யுடையவ ராகிய வசிஷ்டர் முன்னுண்டான கோபத்துடனே, "நான் சொல்வதற்கு மாற்றமாக அரிச்சந்திரன் பொய்யனென்பதை இந்த விசுவாமித்திரன் காட்டுவானாகில் அப்போதே நான் என்னிடத்திலுள்ள தவத்தையெல்லா மிழந்து தாழ்ந்த புலைச்சேரிக்குப் போய்த் தலையோட்டிலே பிச்சைவாங்கி யுண்டலைந்து யமலோகத்துக்குத் தனித்துப் போகக்கட வேன்," என்று சபதங் கூறினர். அதன்மேல் அங்கிருந்த நாரதமகாமுனிவர் விசுவாமித்திரரைப் பார்த்து, "கௌசிக ரே! நீர் சொல்லுகிறபடி அரிச்சந்திரன் பொய்யனாயிருப்பா

ஞுகில் மாறுபடாத நீதியையுடைய வசிஷ்டர், இத்தகைய சபதத்தைச் சொல்வாரோ? ஒருபோதும் சொல்லமாட்டார்; அவர் கூறியபடியே அரிச்சந்திரன் சத்தியசீலனுகவே யிருப்பான்; நீர் கூறியபடி அவன் கெட்டவனு யிருக்கமாட்டான்; ஆயினும், அவன் அசத்திய முடையவ னென்பதை உம்மால் உறுதிப்படுத்தக் கூடுமானுல் நீரும் வசிஷ்டரைப்போலவே ஒரு சபதத்தை இந்திரனுக்கு முன்னே கூறும்," என்று சொல்லி அவரையும் கிளப்பிவிட்டார்; நாரதர் அவ்வாறு தூண்டவே அந்த விசுவாமித்திரரும் நாரதரை நோக்கி, "நல்லது; அவ்வாறே செய்கிறேன்; ஆனுல் வசிஷ்டரைப்போல அவ்வளவு கடுஞ்சபதங்கூற என்னுல் முடியாது; நான், அரிச்சந்திரன் பொய்யனென்பதை உறுதிப்படுத்தாமல் தோற்றுப்போவேனுனல், நான் செய்திருக்கிற மெய்யான தவத்திலே பாதித் தவத்தை அவருக்கு மனப்பூர்வமாகக் கொடுத்துவிடுவேன்," என்று கூறினுர். விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய்யனுக்குவது சந்தேகமாதலால் அவர் வசிஷ்டர் கூறியபடி கடுஞ்சபதங்கூறத் துணியவில்லை.

அதன்மேல் நாரதர் விசுவாமித்திரரை நோக்கி "கௌசிகரே! நீர்சொன்ன இந்தச் சபதமே போதும்! போதும்!! இனி அரிச்சந்திரனிடத்தில் நான் சென்றுல் இங்கு நடந்த இந்த விசேஷத்தை அவனிடஞ் சொல்லாதிருக்க முடியாதாகையால் நான் அங்கே போகாதபடி என்னைத் தேவர்களுடைய காவலுக்குள் வைத்து, இந்தச் சமாசாரங்கள் அவனுக்குத் தெரியாதிருக்கும்படிச் செய்து, இந்தக்ஷணமே நீர் இவ்விடத்தை விட்டுச்சென்று அயோத்தி நாடடைந்து சூரியகுலத்திற் பிறந்தவனுகிய அரிச்சந்திரனிடம் சார்ந்து, அங்கமைந்த அவனுடைய நீதிக்கிரமங்களையும், தருமத்தினது நேர்மையையும், பரிசோதித்தறிந்து உம்முடைய விடாமுயற்சியினுலும் சாமர்த்தியத்தாலும் எந்தவகையினுலாவது அவன் அசத்தியமுடையவ னென்பதை வெளிப்படுத்துவீராக," என்று கூறினுர். இந்திரனும் அவ்வாறே செய்யும்படி கட்டளையிட்டு, அவ் விசுவாமித்திரர் சபதம் நிறை

வேறும்வரையிலும் அரிச்சந்திரனிடம்இரகசியத்தை வெளிப் படுத்தா திருக்கும்பொருட்டு நாரதரையும் தேவர்களுடைய காவலுக்குள் இருக்கும்படிச் செய்தான்; அந்த நாரதரும் அவ்வாறே தேவர் காவலுக்குள் ளிருந்தார். அதன்மேல் அத்தேவசபை கலைந்தது. நாரதர்தவிர அங்கே கூடியிருந்த முனிவர்க ளெல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேர்ந் தார்கள்; விசுவாமித்திரர் கரியமேகம்போலும் நிறத்தை யுடைய இந்திரனை ஆசீர்வதித்து அரிச்சந்திரனிடம்போய்த் தாம் உத்தேசித்த காரியங்களை நிறைவேற்றும்பொருட்டுத் தமக்குரிய விடமாகிய மேருகிரிச்சாரலிலுள்ள சோலைக் கேகினர்.

இந்திரகாண்டம் முற்றுப்பெற்றது.

வஞ்சனைக் காண்டம்.

கலிவிருத்தம்.

“திருந்து செஞ்சொற் செழுமறைக் கௌசிகர்
பொருந்து நீர்க்கடற் பூதலஞ் சார்ந்துபண்
டருந்த வம்புரி சாலை யணைந்துபுக்
கிருந்த னர்பின் னிகழ்ந்த தியம்புவாம்.”

திருத்தமான செவ்விய சொற்களைப் பேசுவதில் வல்ல வரும், செழித்த வேதப்பொருளை யுணர்ந்தவருமாகிய கௌசிகர், முன்கூறியபடி சென்று நீர் நிறைந்த கடலாற் சூழப்பட்ட பூவுலகை யடைந்து, ஆதிகாலத்தில் மேருகிரிச் சாரலிலிருந்து தாம் அரிய தவத்தைச் செய்த சாலையைச் சார்ந்து அதற்குள்ளே புகுந்திருந்தனர். இனி அதற்குப் பின்னால் நடந்த செய்தியைக் கூறுவாம்:

விசுவாமித்திரர் மேலே சொன்னவாறு தவச்சாலையிற் சேர்ந்திருந்தவுடன், “நாம் சத்தியந் தவறாதவனாகிய அரிச் சந்திரனைப் பொய்யனென்று இந்திரனுக்கு முன்னே பல ரறியக் கூறினோம்; வசிஷ்டருடைய விரோதமே இவ்வாறு

கூறுதற்குக் காரணமாயிருந்தது; ஆகலின், இனி எப்படியாவது அரிச்சந்திரனைப் பொய்யனாக்கி இந்திரனுக்குக் காட்டி நம்முடைய சொல்லை உறுதிப்படுத்தவேண்டும்; இதற்கு என்ன உபாயத்தைச் செய்யலாம்," என்று ஆலோசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஆகாயகமனிகளாகிய பல முனிவர்கள் மேருகிரிச்சாரலை யடைந்து விசுவாமித்திரரைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பத்தால் ஆகாயத்தைவிட்டுப் பூமியிலிறங்கிப் பூஞ்சோலைக்குள் தவச்சாலையி லமர்ந்திருந்த அவ் விசுவாமித்திரரைக் கண்டு தங்கள் தேகம் பூமியிலே படிய விழுந்து வணங்கினார்கள். அவ்வாறு வணங்கவே விசுவாமித்திரர் ஆசி கூறி அவர்களுக்கு ஆசனமளித்து எல்லோரையும் உட்காரும்படிச் செய்தார். அவர் விருப்பத்தின்படியே அம்முனிவர்க ளெல்லோரும் தங்கள் தங்களுக்குரிய ஆசனங்களி லமர்ந்தார்கள். அப்படி யிருந்தபின்பு அவர்கள் கௌசிகரை நோக்கி, "விசுவாமித்திரரே! நீர் தேவர்கள் வாசஞ்செய்யும் பொன்னுலகத்திற்குப் போய்வந்தீரே; அங்கு என்ன விசேஷங்கள் நடந்தன? அவற்றையெல்லாம் எங்களுக்குக் கூறவேண்டும்," என்றுரைத்தார்கள். அப்போது விசுவாமித்திரர், "தெய்வலோகத்தில் நடந்த அரிச்சந்திரனுடைய விஷயத்தை இவர்களிடம் தெரிவித்தால் அஃது உலகத்தில் வெளிப்பட்டு நாம் உத்தேசித்திருக்கும் காரியத்திற்கு அதனால் இடையூறுண்டாகும்; ஆதலால் அதைக் கூறாமல் மறைத்து வேறொரு விஷயத்தைச் சொல்லி இவர்களையே அரிச்சந்திரனிடமனுப்பியாகத்திற்குப்பொருள் கேட்டு வரும்படிச் செய்து அவன் சம்மதித்துக் கொடுக்கும் பொருளினாலும் வேறு வழிகளினாலும் அவனுக்கு வஞ்சனைகளையும் துன்பங்களையும் படிப்படியாக இயற்றி நாம் உத்தேசித்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும்," என்று தமக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு அவர்களிடம், தெய்வலோகத்தில் இந்திரன் வினவியதையும், அதற்கு வசிஷ்டர் கூறியதையும், அவர் வார்த்தையைத் தாம் தடுத்துரைத்ததையும் கூறாமல், அவர்களை நோக்கி, "முனிவர்களே! நான்

பொன்னுலகத்திற்குப் போயிருக்கும்போது சிறந்த வேதப் பொருள்களை அறிந்திருக்கும் தேவர் சபையின்மேல கூடியிருந்த முனிவர்களுக்குள் யாகத்தின் உயர்வைப்பற்றிப் பேச்சு நடந்தது; அப்போது அம்முனிவர்கள் யாகங்களிற் சிறந்த ஒரு யாகத்தைத் தெரிவித்தார்கள்; அதைக் கேட்டமாத்திரத்தில் எப்படியாவது அந்த யாகத்தைச் செய்துமுடிக்கவேண்டுமென்ற விருப்பம் எனக்குண்டாயிற்று; அதனால் அந்த யாகத்தை முடிக்கும்பொருட்டு ஒலிமிகுந்த கடல்சூழ்ந்த இவ்வுலகத்திற்கு விரைந்துவந்தேன்; இதுதான் தெய்வலோகத்தில் நடந்த விசேஷம்; இதற்காக நீங்கள் செய்யவேண்டிய காரியமொன்றுண்டு; அஃதை என்பொருட்டுச் செய்ய இணங்குவீர்களாயின் அஃதின்னதென்பதை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன்," என்று சொன்னார்.

இந்த வார்த்தைகளை அம்முனிவர்கள் கேட்டவுடன் மிகவும் மனமகிழ்ந்து விசுவாமித்திரரை நோக்கி, "முனிசிரேஷ்டரே! நீர் எந்தக் காரியத்தைச் சொன்னாலும் தடையின்றிச் செய்ய நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்; ஆதலால், அவ்விஷயத்தை உடனே தெரிவிப்பீராக," என்று கூறினார்கள். அதன்மேல் விசுவாமித்திரர் முகமலர்ந்து அவர்களிடம், "முனிவர்களே! நான் செய்யக்கருதியிருக்கும் அந்த யாகத்திற்கு அளவற்ற திரவியம் வேண்டியிருக்கின்றது; அதைக் கொடுக்கத்தக்கவன் உலகத்தில் அரிச்சந்திரனொருவனேயாவன்; ஆதலால், நீங்கள் அயோத்திக்குச்சென்று அரிச்சந்திரனைக் கண்டு இந்த யாகத்திற்குரிய திரவியம் வேண்டுமென்று யான் கேட்டதாக அவனிடம் தெரிவித்து அவனுடைய சம்மதத்தைப் பெற்று வருவீராக; இதைச் செய்வீர்களானால் உங்களுக்கு மிகவும் புண்ணியமுண்டு," என்று தெரிவித்தார்.

அரிச்சந்திரனிடம் பணங் கேட்கும்பொருட்டு விசுவாமித்திரரால் அனுப்பப்பட்ட முனிவர்கள் அயோத்திக் கேகுதல்.

மேற்கூறியபடி விசுவாமித்திரர் தெரிவித்தவுடனே முனிவர்கள் அவருடைய வார்த்தைக்கிணங்கி எழுந்திருந்து

அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, மலைச்சாரலிலுள்ள அச் சோலையைவிட்டுப் புறப்பட்டு வழியிலுள்ள பரிமள மிகுந்த வனங்களையும், மருதநிலச்சார்பான விடங்களையும் கடந்து சென்று குளிர்ந்த கங்காஜலம் பாய்ந்து பெருகுவதான கோசலநாட்டை யடைந்தார்கள். அவ்வாறடைந்த அவர்கள் பின்னர், கரும்புகள் வளர்ந்திருக்கின்ற வயல்களிலெல்லாம் பொன்னிறமான நெற்கள் தென்றற்காற்றாலசைந்து சாமரம் போல் வீசத் தாமரைமலராகிய சயனத்திலே தூங்குகின்ற சிறப்பினையுடைய அன்னப்பறவைகள் எங்கும் சஞ்சரிப்பதான அந்நாட்டின் மருதநிலத்தைக் கடந்து அழகு பொருந்திய அயோத்தியாபுரிக்குள்ளே சென்று அரசர்க்கரசனான அரிச்சந்திரன் கொலுவிருக்கும் சபாமண்டபத்திற்குள்ளே போனார்கள்.

அவ்வாறு அவர்கள் சென்றமாத்திரத்தில் அரிச்சந்திரன் அவர்களைக் கண்டு வணங்கி, அவர்களுக்குத் தக்க ஆசனங்களளித்து எல்லோரையும் உட்காரும்படிச் செய்து, விரைவில் அந்த முனிவர்களுடைய திருமுகங்களை நோக்கி, "வேதவொழுங்கின்படி நடக்கின்ற பெரிய தவசிரேஷ்டர்களே! நீங்கள் எதைக்குறித்து இவ்வெளியேனிடம்வந்தீர்கள்? கிருபைசெய்து வந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டும்," என்றுரைத்தான். அதற்கு அம்முனிவர்கள், "அரசனே! கேட்பாயாக; விசுவாமித்திரர் உன்னிடம் ஒருவிஷயத்தைத் தெரிவிக்கும்படி எங்களை யனுப்பினர்; அவ்விஷயத்தை நீ நிறைவேற்றுவதாக வாக்குக் கொடுப்பாயானால் அதனை இப்பொழுது தெரிவிக்கின்றோம்," என்று கூறினார்கள். அதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன், "முனிவர்களே! உலகத்தில் துறவிகள் தங்களால் செய்து முடிக்கக்கூடாத காரியத்தைச் செய்யும்படி அரசர்களை வேண்டினால், அக்காரியங்களால் கெடுதி வருவதானாலும் அவற்றைச் செய்து முடிக்க அரசர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்; ஆதலின், யான் விசுவாமித்திரர் விரும்பிய காரியத்தைத் தடையின்றி நிறைவேற்றுவேன்; நீங்கள் விரைவில் அதனைத் தெரிவிப்பீராக," என்று சொல்ல,

அம்முனிவர் அரிச்சந்திரனை நோக்கி, "சத்தியமிகுந்த கொற்றவ! சந்திரன், சூரியன், அசுரர்கள், தேவர்கள், இந்திரன் ஆகியவர்களுள் எவராலுஞ் செய்யமுடியாத ஒரு சிறந்த யாகத்தைச் செய்துமுடிக்க விசுவாமித்திரர் கருதியிருக்கின்றார்; அதற்கு அளவற்ற திரவியம் வேண்டியிருக்கின்றது; அத்திரவியத்தை எவரிடம் பெற்றுக்கொள்ளலாமென்று அவர் ஆலோசித்தார்; அங்ஙனம் ஆலோசிக்கும்போது உன்னுடைய ஞாபகம் அவருக்குண்டாயிற்று; அதனால் அவர் நீயே அத்திரவியத்தைக் கொடுத்தற்குத் தகுதியானவனெனத் தீர்மானித்து அதைக் கேட்டுவரும்படி எங்களை உன்னிட மனுப்பினர்; அதன்பொருட்டே இப்போது நாங்கள் இங்கு வந்தோம்," என்று தெரிவித்தார்கள்.

உடனே அரிச்சந்திரன் அங்கம் பூரித்து அவர்களிடம், "முனிவர்களே! யாகத்திற்குப் பொருள் கொடுக்கத் தகுந்தவன் அரிச்சந்திரனொருவனேயென்று விசுவாமித்திரர் கருதுமாறு யான் தவஞ்செய்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்; இதைக்காட்டிலும் யான் அடையத்தக்க புண்ணியம் வேறு யாதுளது? எள்ளளவுந் தடையின்றி அத்திரவியத்தை இப்பொழுதே தருகின்றேன்," என்று கூறி அவர்கள் வேண்டும் திரவியத்தைக் கொண்டுவரும்படி பிரதானிகளுக்குக் கட்டளையிட்டான். அதைக் கேட்டவுடன் முனிவர்கள் அரிச்சந்திரனுடைய உதாரகுணத்தை மெச்சி அவனை நோக்கி, "வள்ளற்றன்மையிற் சிறந்த மன்ன! உன்னுடைய தாராளசிந்தையைப்பற்றி நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்; விசுவாமித்திரர் இப்பொழுதே அத்திரவியத்தைப் பெற்றுவரும்படி கட்டளையிடவில்லை; உன்னுடைய சம்மதத்தைமட்டும் தெரிந்து வரும்படி கட்டளையிட்டார்; ஆதலின், நீ கொடுப்பதாகவாக் களித்ததே போதும்; யாகஞ் செய்யத் தொடங்குங் காலத்தில் நீ அப்பொருளைக் கொடுக்கலாம்," என்று சொல்ல, அரிச்சந்திரன் அதற்கிணங்கினன். அதன்மேல் அம்முனிவர்கள் எழுந்து அவனை ஆசிர்வதித்து அவனிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்வயோத்திமாநகரை விட்டுப் போனார்கள்.

பின்னர் அம்முனிவர்கள் சிவந்த நெல்லும், வெள்ளை நெல்லும் விளைவதான வயல்களையும், கரும்புகள் விளைகிற இடங்களையும், கனிகள் மிகுந்து பழுக்கின்ற சோலைகளையும், அன்னங்கள் சஞ்சரிக்கின்ற குளங்களையும், காடுகளையும், மலைகளையும் கடந்துபோய் விசுவாமித்திரரிருக்கும் பன்னசாலையையுடைய சோலைக்குள்ளே புகுந்து அவரைக் கண்டு அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி அரிச்சந்திரன் திரவியங் கொடுக்க இசைந்ததைத் தெரிவித்துத் தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் செல்லுதல்.

அதன்மேல் சில மாதங்கள் கழிந்த பின்பு விசுவாமித்திரர், ஒளிதங்கி நீண்டு கூர்மையான வேலாயுதத்தையுடைய அரிச்சந்திரனிடம் சென்று அவன் யாகத்திற்குக் கொடுப்பதாகச் சம்மதித்த பொருளை வாங்கி அவனிடமே வைத்து வரவேண்டுமென் றெண்ணங்கொண்டு அவனைக் காணுதற்குக் கோசலநாட்டிற்குச் சென்றார். அப்படி அவர் செல்லும்போது அந்தக் கோசலநாட்டிலுள்ள மடுக்களிலும், தாமரைத்தடாகங்களிலும், சோலைகளிலும் தென்றற்காற்றுமோத அவை அசையுந் தோற்றம் எப்படியிருந்ததெனில், "அரிச்சந்திரனுக்குக் கெடுதி செய்ய மிகவுங் கொடுமையையுடையவனாகிய விசுவாமித்திரன் வருகிறான்," என்று தென்றற்காற்று மனம் வருந்திச் சொல்ல அதைக் கேட்டு அம்மடுக்களும், குளங்களும், சோலைகளும் நடுக்கங்கொண்டு அலைவதுபோன் றிருந்தது; இளமையான குரங்குகள் சோலைகளை விட்டுத் தாவி அப்பாற் செல்வது, "மிகவும் வஞ்சனையைக் கொண்ட விசுவாமித்திரன் வருகின்றான், ஆகலால், இவனுடைய முகத்தில் விழிக்கலாகாது," என்று நினைத்தோடுவதுபோன்றிருந்தது; குளக்கரைகளில் நீர்ப்பறவைகள் உறங்கிக்கொண்டிருக்கும் தோற்றம், விசுவாமித்திரனைக் கண்டு அவனுடைய கொடுஞ் செய்கைக் கஞ்சி மயக்கங்கொண்டிருப்பதுபோன்றிருந்தது; அலைகளைக் கரையில் வீசி அகன்

திருக்கின்ற குளங்களில் மீன்களெல்லாம் விசுவாமித்திருடைய வஞ்சனைக் கஞ்சி யோடுவதுபோலப் பக்கங்களில் துள்ளித் துள்ளிப் பாய்ந்தோடின; வாழைமரங்களெல்லாம் தாறுகளை யீன்று தலை சாய்ந்துநின்ற தோற்றம், விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்கு வஞ்சனை செய்யப்போவதை அவை யுணர்ந்து அதன்பொருட்டு வருந்தித் தலை வணங்கிநின்றது போன்றிருந்தது; விளைந்த செந்நெற்கள் தலை சாய்ந்துநின்ற தோற்றமும அவ்வாறே வருந்தித் தலை வணங்கி நின்றது போன்றிருந்தது; எட்டுணையும் அறிவில்லாக் கிளிகள், எவர் கையி லெடுத்தாலும் மகிழ்ந்து பேசும் சுபாவ முடையவைகளாதலால், அரிச்சந்திரனை நாட்டைவிட்டுப் போகும்படி துரத்தும் விசுவாமித்திரன் வருவதைக் கண்டும் வருந்தாமல் அவனிடத்து மகிழ்ச்சியைக் காட்டுவனபோன்று மலர்கள் சிந்துகின்ற சோலைகள் முழுதும் மகிழ்ந்து பாடிக்கொண்டிருந்தன; நீடித்த நாளாகப் பழகித் தமக்கிதஞ்செய்யும் நேயரைக் கெடுக்கப் பகைவர் வரும்போது தம்முடைய சுயநயத்தைக் கருதி அந்நேயரைக் கைவிட்டு அப்பகைவரோடு சேர்ந்து சந்தோஷங் கொண்டாடும் மகா பாவிகளைப்போல மயில்களெல்லாம் விசுவாமித்திரருக்கு முன்னே ஆடிக்கொண்டு நின்றன; கட்குடியர்கள் தம் உறவினர்க்குத் துன்பம் வரும்போதும் அத்துன்பத்தை இன்னதென் றுணராமல் வெறிகொண்டு களித்தாடுவதுபோல வண்டுகளெல்லாம் மதுவையுண்டு மயங்கிச் சுழன்றுகொண் டிருந்தன.

இவ்வாறு பல விசேஷங்களும் நடக்க விசுவாமித்திரர் சென்று, அயோத்தியைச் சார்ந்து, மாடங்கள், உப்பரிகைகள், மண்டபங்கள், பெரிய மதில்கள், நாடகமாடும் சாலைகள், அகழ்க்கிடங்குகள் முதலியவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து அவ்விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்குக் கெடுதி செய்ய வருவதை யுணர்ந்து சப்தமிட்டு நடுங்குவதுபோல முரசம் முதலிய பல வாத்தியங்களும் முழங்கிக்கொண்டிருக்கும் அப்பட்டணத்திற்குட் புகுந்து, பொன்மயமான கோட்டைவாயிலைக் கடந்து அரண்மனை யடைந்து, ஒளி மிகுந்த

சூரியனும் தோற்றுப்போகும்படி வளர்கின்ற பிரகாசத்தை யுடைய பெரிய சபாமண்டபத்தில் மிக்க இளைப்புடன் சேர்ந்தார். பெருமை பொருந்திய விசுவாமித்திரர் மேற்கூறியபடி மந்திரமலைபோ லுயர்ந்திருக்கும் அச் சபாமண்டபத்திற்குச் சேர்ந்தவுடன் அரிச்சந்திரன் அவரைக் கண்டு உடனே எழுந்து வணங்கி ஆசனத்தி லமரச்செய்து அவர் திரு முகத்தை நோக்கி, "முனிவர்பெருமானே! யான் செய்த தவப்பயனே தம்மை இங்குக் கொண்டுவந்து சேர்த்தது; அடியேன் தம்மைத் தரிசிக்கப்பெற்றதனாலே இன்று கிருதார்த்தனானேன்; இவ்வெளியேனை ஒரு பொருட்டாக எண்ணி இங்கெய்திய காரணம் யாது? கிருபை செய்து உரைத்தருளவேண்டும்," என்று வினவினான். அதற்கு அவ் விசுவாமித்திரர், "உலகத்தை இரக்ஷிக்கின்ற அரசனே! தேவர்களாலே காக்கத்தக்க வேதமந்திரங்களைக் கொண்டு யான் செய்யப்போகும் யாகத்திற்கு, என்னா லனுப்பப்பட்ட முனிவர் முன்னே நீ கொடுப்பதாகச் சம்மதித்த பொருளை யானே நேரில் உன்னிடம் பெற்றுக்கொள்ள விரும்பி வந்தேன்," என்று கூற, அரிச்சந்திரன் மிகவும் முகமலர்ச்சி யடைந்து, "முனிசிரேஷ்டரே! அப்பொருளைப் பெறுதற்குத் தாங்கள் எப்பொழுது வருவீர்களோ என்று எதிர்பார்த்திருந்தேன்; இப்போது தாங்கள் அதன்பொருட்டு வந்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சி யடைகின்றேன்; வேண்டும் பொருள் இவ்வளவென்பதைத் தெரிவித்தால் உடனே தருகிறேன்," என்றுரைத்தான். அந்தப் புண்ணியசீலனாகிய அரிச்சந்திரன் அவ்வாறு கூறவே விசுவாமித்திரர் உண் மகிழ்ந்து அவனை நோக்கி, "அரசனே! அந்த யாகத்திற்குப் பட்டத்து யானையை நிறுத்தி அதன்மேல் வலி மிகுந்த ஒரு புருடன் ஏறிநின்று கையிற் கவண்கல் கொண்டு சுழற்றி யெறிந்தால் அக்கல் எவ்வளவு உயரம் போகுமோ அவ்வளவு உயரம் பசும்பொன் வேண்டும்; அவ்வளவு திரவியத்தையும் நீ கொடுப்பாயானால் நான் பொருளைப்பற்றிய கவலை நீங்கி மௌனமாயிருந்து உத்தேசித்த அப் பெரிய யாகத்தைச்

செய்து முடிப்பேன்," என்று சொன்னார். அதைக் கேட்ட வுடனே அரிச்சந்திரன், "சுவாமி! அப்படியே திரவியத் தைத் தருகின்றேன்; பெற்றுக்கொள்வீராக," என்றுரைத்து அப்பொழுதே, "பொக்கிஷ வறையைத் திறந்து வைத்துக் கொண்டு, பட்டத்து யானையை இங்கே கொண்டுவரும்படிச் செய்து, ஒரு வலியுள்ள வீரனையும் கவணுடன் வரவழைப்பா யாக," என்று பிரதானிக்குக் கட்டளையிட்டான். அவன் உடனே யானைப்பாகனுக்குத் தெரிவித்து ஒரு வீரனுக்கு மறிவிக்க, அவ்வாறே யானைப்பாகன் சந்திரதுண்டம்போலும் தந்தங்களையுடைய பெரிய யானையைக் கொண்டுவந்து நிறு த்தினன்; வீரனும் கவணுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

அவ்வாறு சேர்ந்தவுடனே விசுவாமித்திரர், அரிச்சந் திரனை நோக்கி, "அரசனே! யான் குறித்த யாகஞ் செய் தற்கு இன்னும் சில தினங்கள் கழியவேண்டி யிருக்கின் றன; ஆதலின், இப்போது இந்தத் திரவியத்தைப் பெற்றுக் கொண்டால் பரதேசியா யிருக்கும் யான் யாகத்தை ஆரம் பிக்கும்வரை இதனை வைத்துக் காப்பாற்றுவது கஷ்டமாகும்; நீ கொடுப்பதாகச் சம்மதித்ததே போதும்; இவை என் னுடைய பொருள்களாக உன்னிடத்திலேயே இருக்கட்டும்; யான் பரிசுத்தமான அந்த யாகத்தைச் செய்யும்போது வந்து இவற்றைப் பெற்றுக்கொள்வேன்," என்று கூறினர். அரிச்சந்திரன் அதற்குச் சம்மதித்தான்.

அயோத்திநாட்டின் வளத்தை யழிக்கும்படி விசுவாமித்திரர் மிருகங்களையும், பக்ஷிகளையும் ஏவுதல்.

பின்னர் விசுவாமித்திரமுனிவர், "நாம் எண்ணிய காரி யம் நிறைவேறிற்று; இனி இதைக் கொண்டே இவனுக்குப் பலவிதமான துன்பங்களைச் செய்பலாம்," என்று தமக் குள்ளே மகிழ்ச்சியடைந்து, அரிச்சந்திரனிடம் விடைபெற் றுக்கொண்டு புறப்பட்டு அரிய காடுகளையெல்லாம் கடந்து சென்று தம்முடைய பன்னகசாலையை அடைந்து ஒரு பெரிய மரத்தின் நிழலிலே யிருந்துகொண்டு அரிச்சந்திர

னுடைய நாட்டில் பலகேடுகளை விளைவிக்கும்பொருட்டு, "உலகத்திலுள்ள மிருகக்கூட்டங்கள், பக்ஷிக்கூட்டங்கள் ஆகியவைகளெல்லாம் சீக்கிரத்திலே இங்குவந்து சேரவேண்டும்," என்று மனத்திற் சிந்தித்தார். அவர், நினைத்ததை யெய்தும் தவத்தினை யுடையவராதலின் அவ்வாறு நினைத்த மாத்திரத்தில் காடுகளிலுள்ள மிருகங்களெல்லாம் பயந்து தங்கள் வாய்களினாலே கௌவித்தின்ற இரைகளையும் அப்படியே விட்டுவிட்டு மிகவும் சீக்கிரத்தில் அவருக்குமுன்னே செல்வதற்குப் புறப்பட்டன; அவ்வாறு புறப்பட்ட அவற்றுள் ஒரு கோடி சிங்கங்கள் வளைவான வால்களைத் தூக்கி நீட்டி, யுகமுடிவிலே எழும்பும் வடவைத் தீயைப்போலக் கண்சிவந்து உரோமங்களை விரித்துச் சிலிர்த்து உதறிக்கொண்டு பெருங் கூட்டமாக வந்தன; ஒருகோடி புலிகள் வால்களை வளைத்துயர்த்தித் தலை நிமிர்ந்து வாய்களைத் திறந்துகொண்டு பிரளய காலத்தில் உலகத்தையழிக்கப் புறப்படும் கடலைப்போலத் திரண்டுவந்தன; சப்திக்கின்ற கருமேகங்கள் கூடித்திரண்டனவென்று பார்த்தோர் கூறும்படி வீரிடுகின்ற கன்றுகளும், பிடிகளும் பின்னே தொடர்ந்துவர, வெண்மையான தந்தங்களையும், கருமையும் வெண்மையுமான புள்ளிகள் நிறைந்த முகத்தையும் கொண்ட கோடி யானைகள் விரைந்து வந்து கூடின; கண்களெல்லாம் நெருப்புப் பொறிகளைச் சிந்தவும், வாயிலிருந்து கடுமையான விடம் வெளிப்பட்டுப் பூமியெல்லாம் சிதறவும், தலையிலுள்ள இரத்தின வொளியானது ஆகாயமுழுதும் வீசவும் வாயைத் திறந்துகொண்டு அளவற்ற பாம்புகள் வந்து நிறைந்தன; இன்னும் மான்கள், ஆமைகள், *கடமைகள், கானக்குதிரைகள், தாவுகின்ற கலைமான்கள், பன்றிகள், புழுகுபூனைகள், எலிகள், பெருச்சாளிகள், முள்ளம்பன்றிகள், காட்டெருமைகள், காடிகள், செந்நாய்கள், நரிகள், குரங்குகள் ஆகியவைகளும் கணக்கற்று வந்துகூடின; இவையன்றி மயில்கள், நாகணவாய்ப்புட்கள், கிளிகள், செம்போத்துகள், சக்கரவாகப்புட்கள், நாரைகள்,

---

* கடமை - காட்டுப்பசு.

அன்னங்கள், குயில்கள், காக்கைகள், அன்றில்கள், சிவற்காடைகள், கௌதாரிகள், காடைகள் முதலிய பறவைகளும் விரைந்துவந்து எண்ணற்றவைகளாய்க் கூடின.

அவ்வாறு எல்லாம் வந்துகூடிய பின்பு மிக்க கோபத்தைக்கொண்ட அம்மிருகங்களும், பக்ஷிகளும் விசுவாமித்திரருக்கு முன்னே சென்று அவரைவணங்கி அவரிடம், "முனிசிரேஷ்டரே! பூமியில் தழைத்திருக்கிற புற்களையும், இலைகளையும், கனிகளையும் விரும்பித்தின்று இஷ்டம்போல் எங்கள் செய்கைகளை நடத்தி நீண்டகாட்டிலே மகிழ்ச்சியோடு சஞ்சரித்துத் திரிந்த எங்களை நீர் எதற்காக அழைத்தீர்? கிருபைசெய்து அதைத் தெரிவிக்கவேண்டும்," என்று கேட்டன. அதற்கு விசுவாமித்திரர், "மலைகளிற் சஞ்சரிக்கும் மிருகங்களே! பக்ஷிக்கூட்டங்களே!! ஒரு அவசியமான காரியத்தை யுத்தேசித்தே உங்களை இப்போது வரவழைத்தேன்; நீங்கள் இப்போதே சென்று பூமாலைக ளணியப்பட்டு அழகுடன்விளங்கும் தோள்களையுடைய அரிச்சந்திரனது நாட்டிலுள்ள பெரிய ஜீவன்களையும், பசுமையான சோலைகளையும், குளிர்ந்த பயிர்களையும் அழித்து நாசஞ்செய்து சீக்கிரத்திலே மீண்டும் இங்கே வரவேண்டும்," என்று கூறினர். அவர் அவ்வாறு கூறிய அந்த க்ஷணத்திலேயே பக்கத்திலே நின்ற மிருகங்களும் பக்ஷிகளும் வணங்கி அவரிடம் விடைபெற்று விரைந்துசென்று அழகுபொருந்திய கோசல நாட்டின் பக்கங்களிலுள்ள காடுகளில் நிறைந்து குடியேறின.

அங்ஙனங் கூடியபின்பு வெவ்விய புலிகளும் சிங்கங்களும் அந் நாட்டிலுள்ள வெண்மையான பசுக்கூட்டங்களையெல்லாம் கொன்றுதின்றன; கொல்லைகளிலும், சோலைகளிலும், வள்ளைக்கொடிகள் படர்ந்திருக்கின்ற வயல்களிலும், தினைப்புனங்களிலும் கிளிகளும், மயில்களும் நெருங்கி ஆங்காங்குள்ள வளங்களையெல்லா மழித்தன; மந்திகளும் வண்டுகளும் அகன்ற பாலைவனம் முதலிய இடங்களிலெல்லாம் நிறைந்து அவ் விடங்களிற் சஞ்சரிப்பவர்களுக்குத் துன்பஞ்

செய்வனவாயின; யானைகளெல்லாம் படர்ந்துயர்ந்திருக்கின்ற ஆலமரங்களும், காய்களையுடைய மற்ற மரங்களும் அடர்ந்த சோலைகளை அழித்துத் திரிந்தன; பன்றிக் கூட்டங்களெல்லாம் அலைகள் முழங்குகின்ற நீர்க்குளங்களை யுடைத்து, நீர் பாய்கிற மடைகளையும் தூர்த்து, வயல்களிலுள்ள நெற்களையெல்லாம் சிதைத்துத் தழைகளையும், கொடிகளையும், கிழங்குகளையும் அழித்தன; கலைமான்களும், கடமாக்களும், கானக்குதிரைகளும்கூடி அந்நாட்டிலுள்ள புனங்களையெல்லாமழித்தன; அவ்வாறழிக்கும்போது அவற்றை ஓட்டுதற்கு வந்த மனிதர்களை, சில யானைகள் ஒதுக்கிடங்களிலே நின்று பாய்ந்து கொன்றன; இரவில் பயிர் முதலியவற்றைக் காத்துக் கொண் டிருக்கின்றவர்களைப் பாம்புகளும், தேள்களும், அரணைகளும் கடித்துக் கொன்றன; வேறு சில புலிகளும், காடிகளும் மறைவிடங்களிலே யிருந்துகொண்டு மனிதர்கள் கிட்டிவரும்போது அவர்களைக் கொன்றழித்தன; மதத்தைச் சிந்துகின்ற வேறுசில யானைகளும், மான்களும், மரைகளும், பன்றிகளும் குளிர்ந்த தாமரைமலர்கள் நெருங்கின வயல்களிலேபுக, அவற்றுமேலே செழுமையான செந்நெற் பயிர்களும், வெண்ணெற் பயிர்களும் சேற்றிலேயமுந்தி வேரோடழிந்தன; அப்போது அந்த வயல்களில் சில மிருகங்கள் நெற்பயிர்களை வாயினுலே கௌவிக்கொண்டு சென்றன; அவ்வாறு சென்ற தோற்றம் எப்படி யிருந்ததெனில், பெரிய அரசர்கள் தங்களுடைய புஜபலங்குறைந்து தளர்ந்தொழிந்தகாலத்தில் கற்பு நிறைந்த அவர்களுடைய பெண்களை, மலைகளிலுள்ளகுறவர்கள்கூந்தலைப்பற்றிஇழுத்துக்கொண்டுபோவது போன்றிருந்தது; இன்னும், செழுமையான வயல்களிலுள்ள நெற்பயிர்களை மிருகங்கள் தின்று மிதித் தழிக்கும்போது அவற்றை விலக்கச்சென்ற மனிதர்களைச் சிங்கக் கூட்டங்கள் வாயினுலே கௌவிக்கொண்டு சென்றன.

மிருகங்கள் முதலியவற்றுலேற்பட்ட துன்பங்களைச் சகிக்காமல் குடிகள் அரிச்சந்திரனிடம் சென்று முறையிடல்.

இவ்வாறு அந்நாடெங்கும் மிருகங்களாலும் பக்ஷிகளாலும் பல துன்பங்கள் விளையவே, அந்நாட்டிலுள்ள குடி-

ஜனங்க ளெல்லோரும் அத்துன்பங்களைச் சகிக்காமல் ஒன்று கூடி அரிச்சந்திரனிடம் சென்று தங்கள் பரிதாபமான நிலைமையைக் கூறி முறையிட வெண்ணி உடனே அவன் சமுகத்தை யடைந்து, "அரசர்பெருமானே! நாங்கள் பண்டைக் காலந்தொட்டுப் பரம்பரையாக இந்நாட்டில் எவ்வித இடையூறுமின்றி இன்பத்தை யனுபவித்து வந்தோம்; இப்போது என்ன விபரீதகாலமோ தெரியவில்லை, அச்சுகமெல்லாம் மாறி எங்களுக்கு மிக்க இடையூறுகள் விளைந்திருக்கின்றன; காட்டிலுள்ள மிருகங்களாலே நாட்டிலுள்ள நெற்பயிர்களும், கரும்புகளும், தினைப்புனங்களும், தேனிறைந்த சோலைகளும் அழிந்துபோயின; கலைமான்களும், புள்ளிமான்களும், பன்றிகளும், யானைகளும், காட்டெருமைகளும் கூடி மற்றுமுள்ள பயிர்களைபெல்லா மழித்தன; அவற்றை ஓட்டப்போன மனிதர்களைச் சிங்கங்களும், புலிகளும், கரடிகளும் கூடிக் கொன்று குவித்தன; இன்னும் யானைகளெல்லாம் கூடி நீர்க்குளங்களை அழித்துவிட்டன; வேறு சில பன்றிகள் கூடி வள்ளிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, கருணைக்கிழங்கு முதலியவற்றை யெல்லாம் சிதைத்தழித்துவிட்டன; பின்னும் சில மான்களும் மரைகளும் கூடி நெற்கதிர், தினைக்கதிர் முதலியவற்றை யெல்லாம் தின்று கால்களால் மிதித்துதிர்த்துச் சிதைத்துவிட்டன; மயில்களும், கிளிகளும், தூக்கணாங்குருவிகளும், சிட்டுக்குருவிகளும் நெருங்கி, விளைந்த நெற்களை உருவித் தின்று வயல்களை வெறுமையாக்கிவிட்டன; மேற்கூறியபடி பயிர் முதலியவற்றை யழித்த அம்மிருகங்களை ஓட்டப்போய்ச் சிங்கம் புலி முதலியவற்றால் இறந்தவர்களுக் களவில்லை; பாம்புகளும், தேள்களும், அரணைகளும் பல மனிதர்களைக் கடித்துக் கொன்றுவிட்டன; இந்நாட்டில் வெற்றிட மில்லாமல் எங்கும் அநேகம் சிங்கங்களும், அநேகம் பாம்புகளும், அநேகம் யானைகளும், பல கரடிகளும், கணக்கற்ற நரிகளும், எண்ணிறந்த மான்களும், அளவற்ற புலிகளும், என்னைத் தொலையாத தேள்களும், வண்டுகளும், கோடிக்கணக்கான மயில்களும், இலட்சக்

கணக்கான கிளிகளும், நாகணவாய்ப்புட்களும், வௌவால்களும், குயில்களும், அன்றில்களும், செம்போத்துக்களும், காகங்களும், கூகைகளும், ஆந்தைகளும், காடைகளும், கௌதாரிகளும், காட்டுக்கோழிகளும், புறாக்களும், கொக்குகளும், நாரைகளும், அன்னங்களும் நெருங்கி நிறைந்திருக்கின்றன; அவற்றை ஓட்டுதற்கு எள்ளளவும் எங்களால் சாத்தியப்படவில்லை; மோப்பம் பிடித்துக்கொண்டுவந்து எங்களைக் கடித்து வருத்துகின்ற மிருகங்களாலும், கதிர்களையழிக்கும் பக்ஷிகளாலும் இப்போது எங்களுக் கேற்பட்டிருக்கும் துன்பத்தை நீ உடனே ஒழித்தருளவேண்டும்; அவ்வாறு செய்யாவிடின் நாங்கள் பிழைத்தல் அரிது; எங்களால் அத்துன்பத்தைச் சகித்தல் முடியாது," என்று கூறி முறையிட்டு அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கித் துதித்தார்கள்.

அவ்வாறு, இவ்வுலகத்திற் சிறந்த கோசலநாட்டிலுள்ள குடிஜனங்கள் கூறவே அரிச்சந்திரன் அவர்கள்மீ திரக்கங்கொண்டு, "நம் நாட்டில் எப்பொழுதும் நடக்காத துன்பம் நடந்திருக்கின்றது; சந்திரனைச் சிரத்திற்சூடிய பரமசிவனுடைய திருவிளையாடல் இப்படியிருக்கின்றது; இதற்கு நாம் செய்யத்தக்கது யாது? எவ்வகை உபாயத்தையாவது செய்து இக் குறைவை நீக்கவேண்டும்," என்று தனக்குட் சிந்தித்துப் பின்னர் அக் குடிகளுக்குத் தேறுதல் கூறத்தொடங்கி, அவர்களை நோக்கி, "குடிஜனங்களே! நீங்கள் அஞ்சவேண்டாம்; இத்துன்பத்தா லேற்பட்ட கவலை நீங்கும்பொருட்டு, உங்களிடம் வாங்கவேண்டிய பகுதிப்பொருள்களை இரண்டு வருஷங்கள்வரை வாங்காமல் விட்டுவிடுகிறேன்; விலங்கினங்களாலும் பக்ஷிகளாலும் உண்டான தீங்கை அகற்றுதற்கு விரைவில் முயற்சிசெய்வேன்; நீங்கள் உங்களிடங்களுக்குப் போய்ச் சுகமாக வாழ்வீர்களாக," என்றுகூறி அவர்களுக்கு அநேகம் பொருள்களையும், வஸ்திரங்களையும் கொடுத்து அன்போடு அவர்களை யனுப்பினன்.

வஞ்சனைக்காண்டம் முற்றுப்பெற்றது.

வேட்டஞ்செய் காண்டம்.

கலிவிருத்தம்.

“நிலவு காலு நெடுங்குடை மன்னவன்
புலவு வாய புலிமுத லியாவையும்
சுலவு தானை தொடர்தர வேட்டஞ்செய்
செலவு மேவிய செய்தி விளம்புவாம்.”

இதுவரை, விசுவாமித்திரர் மிருகங்களையும், பக்ஷிகளையும் கோசலநாட்டிற் கேவித் திங்கு விளைத்த செய்தியைக் கூறினோம்; இனி, சந்திரிகையை வீசுகின்ற நீண்ட வெற்றிக் குடையையுடைய அரிச்சந்திரமகாராஜன், இறைச்சி தங்கிய வாயையுடைய புலி முதலிய எல்லாவற்றையும் வேட்டையாடிக் கொல்லுதற்கு, நெருங்கிச் சூழ்ந்த சேனைகள் பின் தொடர்ந்துவரக் காட்டுக்குச் சென்ற செய்தியை விளம்புவாம்:

அரிச்சந்திரன் முற்கூறியபடி குடிகளுக்கு வேண்டியவற்றைக் கொடுத்துத் தேறுதல் சொல்லி அவர்களை யனுப்ப, அவர்கள் அவனை வணங்கித் துதித்து மகிழ்ச்சியோடு சென்றார்கள். அதன்மேல் பகைவரைவெல்லத்தக்க வெவ்விய சேனைகளையுடைய அம்மன்னன் குடிகளுக்கு வந்த தீங்கை விலக்கக் கருதியவனாய்த் தன் அமைச்சரை நோக்கி, “மந்திரிகளே! மிருகங்களும் பக்ஷிகளும் நம் நாட்டிலே திரண்டு குடிஜனங்களைக் கொன்று அவர்களுக்கு நஷ்டத்தை யுண்டாக்கிய இத் தீங்கை விலக்குதற்கு என்ன உபாயத்தைச் செய்யலாம்? நீங்கள் உங்களுடைய மதிநுட்பத்தால் ஆராய்ந்து சொல்லுவீராக,” என்று வினவினான். அதற்கு அம்மந்திரிகள் வணங்கி, “மன்னர்க்கு மன்ன! மிருகங்கள் முதலியவற்றால் குடிகளுக்குத் துன்பம் நேருங்காலத்தில் அரசன் வேட்டையாடி அவற்றைக் கொன்று அத்தீங்கை நீக்கலாமென அரசநீதி ஏற்பட்டிருக்கின்றது; ஆதலின், நீர் எவ்

வித யோசனையுமின்றி இப்பொழுதே கூட்டமான வேடர்களுடனும், விற்களுடனும், அம்புகளுடனும், கூரிய வேல்களுடனும், நாய்க்கூட்டங்களுடனும் காட்டிற்குச் சென்று வேட்டையாடி அம்மிருகங்கள் முதலியவற்றை யெல்லாங் கொன்று இந்நாட்டை இரக்ஷிப்பீராக; இதனால் எவ்வித தோஷமுமில்லை; மிக்க நன்மையேயாம்,'' என்றுரைக்தார்கள்.

அரிச்சந்திரன் வேட்டையாடச் செல்லல்.

மேற்கூறியபடி மந்திரிகள் சொன்னவுடன் அரிச்சந்திரன் "நல்லது" என்று சம்மதித்து அப்பொழுதே பக்கத்தில் நின்ற தூதர்களை நோக்கி, "நீங்கள் விரைவிற் சென்று மலைகளிலே வாழும் வேடர்களை அழைத்து வருவீராக," என்று கட்டளையிட்டான். உடனே அந்தத் தூதுவர்கள் அக் கட்டளையை ஏற்று மலைச்சார்பான குறிஞ்சி நிலத்திற்குச் சென்று வேடர் தலைவரைக் கண்டு, "நம்முடைய அரசர் வேட்டையாடக் காட்டிற்குச் செல்லும்பொருட்டு வேடர்களையெல்லாம் அழைத்துவரும்படி கட்டளையிட் டிருக்கின்றனர்; ஆகலின், நீங்கள் தாமதமின்றி உங்களினத்தவர்களாகிய வேடுவர்களை யெல்லாம் ஆயுதபாணிகளாக அழைத்துக்கொண்டு அயோத்தி நகரத்திற்குவந்து சேருவீராக," என்று கூறினார்கள். அங்ஙனங் கூறவே அவ்வேடர் தலைவர்கள், நினைத்தபோது தம்மினத்தவர் ஓரிடத்திற் கூடுதற்கறிகுறியாக முழக்கப்படும் குறிஞ்சிப் பறையாகிய துடியென்னும் வாத்தியத்தை முழக்கினார்கள். அவ்வாறு முழக்கவே அவ்வாத்தியவோசையைக் கேட்டு முருகன் வாசஞ் செய்வதாகிய குறிஞ்சிநிலத்திலுள்ள வேடர்களெல்லோரும் பல ஆயுதங்களுடன் புறப்படத் தொடங்கினார்கள்; அப்படிப் புறப்படத் தொடங்கி அவர்களுள் அநேகர், மயிலிறகுகளாலே செய்யப்பட்ட * சிராவை உடம்பிலே தரித்து, அதன் மேலே இருபுறத்திலும் ஒளி விளங்குகின்ற மயிலிறகுகளைச்

---

* சிரா - கவசம்.

செருகித் தங்க ளுருவத்தை மயிலைப்போலச் செய்துகொண்டு, நீண்ட தந்தமணிமாலைகளு மணிந்து, சிரசிலே நெற்கதிரையும் காக்கணம் பூவையுஞ் சூடி, காலிலே செருப்பணிந்து, வீரக்கழல்களையுந் தரித்து, கையில் கூர்மையான வேல்களைத் தாங்கி, நெடிதான துடி முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு உடம்பெல்லாம் வியர்வை யொழுக அதிக சீக்கிரத்தில் வந்து சேர்ந்தார்கள்; மேகம்போற் கருத்த நிறத்தையுடைய சில வேடர்கள், கொலைத்தொழில் மிகுந்த யமனிருக்கத்தக்க கூடென்று சொல்லக்கூடிய அம்புக்கூட்டிலே எட்டுக் கலைகளைக்கொண்ட சந்திரனை யொப்பான பிறைமுகக் கணைகளையும், மூன்று தலைகளையுடைய பாணங்களையும் நிரப்பிக்கொண்டும், விசாலமான மார்பிலும், மலைகளைச் சுமக்கத்தக்க தோள்களிலும் தோற்சட்டைகளை யிறுக்கிப் போட்டுக்கொண்டும், கையிலே வில்லைப் பிடித்துக்கொண்டும், கண்கள் நெருப்பைப்போலச் சிவந்து தோன்ற வந்து சேர்ந்தார்கள்; பின்னும் வேறு சில கோடானுகோடி வேடர்கள், சங்குகளுக் கொப்பான பலகறைகளாற் செய்யப்பட்ட பலவிதமான சட்டைகளை யணிந்து, அநேகங் கொடிகளைப் பிடித்துக் கண்ணெதிர்ப்பட்டவைகளும், மறைவிலே யிருக்கின்றவைகளுமாகிய காடிகளையும், மதயானைக் கூட்டங்களையும், புலிகளையும், பன்றிகளையும் துண்டுதுண்டாகச் செய்யத்தக்க குறுந்தடிகளைத் தாங்கிவந்து சேர்ந்தார்கள்; மற்றும் கோடரியைக் கையிலேகொண்ட ஒருகோடி வேடர்கள், வெற்றிபொருந்திய மதயானைகளினுடைய கொம்பிலுள்ள முத்துக்களையும், குன்றிமணிகளையும் விரவிக்கோத்துப் பன்றியின் கொம்புகளை நடுவிற்சேர்த்துச் செய்யப்பட்ட கண்டிகைகளை மார்பிலணிந்துகொண்டு, உயிர்களைக்கொன்று மிருகங்களின் தசையைத் தின்னும் விருப்பினை யுடையவர்களாய் வந்து சேர்ந்தார்கள்; அவ்வாறு பல திக்குகளினுமிருந்து வேடர்கள் வரும்போது, கட்டின கயிறுகள் அற்றுப்போகவும், பூண்ட சங்கிலிகள் பொருத்துவிட்டுப் போகவும், தங்களுக்குள்ளே கோபங்கொண்டு பாய்ந்து சிங்கக்

குட்டிகள்போல ஊளையிடும் நூறுகோடி வெள்ளை நாய்கள் அவர்களுக்குப் பின்னே தொடர்ந்து வந்தன; பின்னும், ஆகாயத்தி லுண்டாகும் இடிபோற் குலைத்து, கடல் முழக்கத்தைப்போ லுறுமிப் பெரிய கழுத்தி லணிந்த தோல்வாரானது இறுகும்படி அதட்டி, இரண்டு முன்னங்கால்களையு மடக்கிக்கொண்டு முன்னே பாய்ந்து தங்களுக்குள்ளே வயிரங்கொண்டு வெவ்விய கண்களிலே நெருப்புப்பொறி சிதறக் கோபிக்கின்ற நூறுகோடி சிவப்பு நாய்களும் தொடர்ந்து வந்தன; இவையன்றி வெண்டையங்களையும், பலகறைகளையும், மணிகளையும், தோல்வாரிலே சேர்த்தணிப்பட்டு அழகு விளங்காநின்ற கழுத்துக்களும், தண்டை, கிண்கிணி, சிலம்பு முதலியவைகளை யணிந்து ஒலியோடு விளங்குகின்ற கால்களும், இரண்டு சந்திர துண்டங்களைப்போன்று விளங்குகின்ற சிங்கப்பற்களும் பொருந்திய வேறு நூறுகோடி பன்னிறநாய்களும் பின்பற்றி வந்தன; வாலானது நீண்டு நுனி சுருண்டும், பெரிய மார்பானது அகன்றும், இடை சிறுத்தும், முதுகுயர்ந்தும், அழகிய தலை பருத்தும் தோன்றவும், நீண்ட வாளாயுதங்களைப்போன்ற சிங்கப்பற்கள் விளங்கவும், தொங்குகின்ற மணிமாலைகளைக் கடித்து மென்றுகொண்டு, நெடிய நாவானது தொங்கக் கால்களுயர்ந்து நகங்கள் வெளுத்துத் தோன்ற, இளைப்புடனே நூறுகோடி கருநாய்களும் விரைந்து தொடர்ந்து வந்தன; இந்நாய்க்கூட்டங்களுடன், நீண்ட வலைகளையும், கண்ணிகளையும், இன்னும் பிராணிகளைப் பிடிக்கும் மற்றக் கருவிகளையும் நிரப்பப்பெற்ற அநேகம் வண்டிகளை, நிலைவிட்டெழுந்து சஞ்சரிப்பனவாகிய நீலமலைகளை நிகர்த்த எருமைக்கடாக்கள், அகன்ற வாயிலே நுரைகள் விளங்கவும், நாக்கள் முழநீளந் தொங்கவும் இழுத்துக் கொண்டுவந்தன.

இவ்விதம் பல வேடர்களும் வந்து கூடியபின்பு அவ் வேடுவர் தலைவன் அரசன் கட்டளையைத் தெரிவிக்க, உடனே எல்லோரும் புறப்பட்டு அயோத்திநகரை யடைந்து மேரு மலைபோல்வதான சிறப்பினையுடைய சபாமண்டபத்தில்

கொலுவிருந்த திரிசங்கு புத்திரனான அரிச்சந்திரமகாராஜனைக் கண்டு வணங்கி, "எமதிறைவ! தங்கள் உத்தரவின் படியே நாங்களெல்லோரும் இங்குவந்து சேர்ந்தனம்; இனி நாங்கள் செய்யத்தக்க காரியம் இன்னதெனத் தெரிவித்தால் உடனே அதை நிறைவேற்றுவோம்," என்று கூறினார்கள். அதைக் கேட்டவுடனே அரிச்சந்திரன், அவர்களை நோக்கி, "வேடர்களே! சிங்கங்கள், புலிகள், யானைகள், காடிகள், பன்றிகள், மான்கள், கானக்குதிரைகள் முதலிய பல மிருகங்களும், எண்ணிறந்த பக்ஷிகளும் கூடி நம்முடைய திருநாட்டின் வளங்களையெல்லா மழித்து அநேகம் மனிதர்களையும் கொன்றொழித்தன; ஆதலால், அரசநீதிப்படி காட்டிற்குச் சென்று வேட்டையாடி அவற்றைக் கொன்று குடிகளுக்கு நன்மையைச் செய்ய நாடினேன்; அவ்வேட்டைக்குதவியா யிருக்கும்பொருட்டே உங்களை வரவழைத்தேன்; நீங்கள் தாமதமின்றி முன்னே காட்டிற்குச் செல்லுங்கள்; நான் சேனைகளுடன் பின்னே வருவேன்," என்று சொல்லி அவர்களுக்குத் தக்க ஆடையாபரணங்களை யெல்லாங் கொடுத்து அவர்களை யனுப்பிவிட்டுப் பின்னர் மந்திரிகளை நோக்கி, "நீங்களும் சேனைகளுடன் இப்பொழுதே காட்டிற்குச் செல்லுங்கள்," என்று கூறி அவர்களையும் அனுப்பி அதன்மேல் தன் பத்தினியாகிய சந்திரவதியிருக்கும் அரண்மனைக்குள்ளே சென்றான்.

அவ்வாறு சென்றவுடன் அவன் வேட்டைகாலத்திலணியத்தகுந்த நீலச்சல்லடத்தையும், நீலநிறமாகிய சட்டையையு மணிந்து, மார்பிற் கவசத்தை யிறுக்கிக் கட்டி, சிரசில் இரத்தினகிரீடஞ் சூட்டி, ஜெயத்தைக்கொண்ட உடைவாளையும், வேலாயுதத்தையும், கத்தியையும் இடைக்கச்சையிலே சேர்த்துக்கட்டி, காளிதேவி கொடுத்த பொன்மயமான வில்லைக் கையிலே தாங்கி, அநேகம் அம்புகளடங்கிய அம்புக்கூட்டை முதுகிலே பொருந்தக் கட்டி, சந்திரமதி வேட்டை விநோதம் பார்க்கவருகிறேனென்று சொன்னபடியால் அவளையு மழைத்துக்கொண்டு விரைவில் வெளிப்பட்டு அரண்மனை

வாயிலில் அலங்கரித்து நிறுத்தப்பட்டிருந்த பொற்றேரி லேறிப் புறப்பட்டான். அப்போது கிரகங்களெல்லாம் ஓரிடத் திற் கூடினாற்போலப் பிரகாசம் பொருந்திய பல குடைகள் செறிந்து நிழலைச் செய்து சென்றன; யுகமுடிவிலே பொங்கி யெழுகின்ற கடலைப்போல அரசர் சேனைகள் முழங்கி எங் கும் பாவி நடந்தன; அப்படைகளிலுள்ள வீரர்களாற் பிடிக் கப்பட்ட வாளாயுதங்களினின்று மெழுந்த சுடர்கள் எட்டுத் திக்குகளிலுஞ் சென்று பாவி அவ்விடங்களை யெல்லாம் மறைத்தன; அச்சேனைகள் செல்வதனு லெழுந்த தூளிகள் மேகத்தையும் ஒதுக்கித் தள்ளிக்கொண்டு ஆகாயத்தில் நிறைந்தன; அநேகம் யானைப்படைகளும் சென்றன; பல குதிரைப்படைகளும் வேகங்கொண்டு முன்னே சென்றன. இவ்விதம் படைகள் சூழ்ந்துவரச் சென்ற அரிச்சந்திரன், தன்னைச் சூழ்ந்த படைகளிலுள்ள குதிரைகளின் வாயிலே வெளிப்படும் வெள்ளிய நுரையும், மதத்தைச் சிந்துகின்ற யானைகளின் வாயிலே வெளிப்படும் வெள்ளிய நுரையும், பொற்காம்புள்ள வெண்சாமரைகளும், நெருங்கி எங்கும் சந் திரப்பிரகாசத்தைப் போன்று விளங்க, அண்டமுகடுவரை உயர்ந்திருக்கின்ற மாடங்கள் நிறைந்த வீதிகளைக் கடந்து செம்பொன்மயமான மதிலையுடையகோட்டையையுந்தாண்டி நெடுந்தூரஞ் சென்று காட்டுக்குச் சமீபத்தில் பாற்கடலா னது கருங்கடலிலே போய்க் கலப்பதுபோலத் தன் சேனைக ளுடனே முன்னே சென்ற கரிய நிறம்பொருந்திய வேடர் கள் சேனையுடன் கலந்தான்.

அங்ஙனஞ் சேர்ந்தவுடன், வேடர்களெல்லோரும் கூடி அரிச்சந்திரனை வணங்கி மிருகங்களை ஓரிடத்தில் ஒதுக்கும் பொருட்டுக் காட்டைச் சார்ந்த விடங்களிலும், அக்காட்டின் பக்கத்திலுள்ள மருதநிலம் முல்லைநிலம் முதலிய விடங்களி லும் பாவி நீண்ட அலைகளைக் கொண்ட தாமரைக்குளங்களி லும், வயல்களிலும், ஓடைகளிலும், அழகிய சோலைகளி லும், மிருகங்கள் ஓடும் வழிகளிலும் வலைகளைக் கட்டிக் கண்ணிகளையும் நட்டுத்திரைகளையும் வளைத்து, ஆங்காங்கே

பதுங்கியிருந்த மிருகங்களைப்போலவும், பக்ஷிகளைப்போல வும் ஓசை காட்டினார்கள். அவ்வோசையைக் கேட்டமாத் திரத்திலே கலைமான் கூட்டங்கள், புள்ளிமான் கூட்டங்கள், கடமைகள், பன்றிகள், புலிகள், சிங்கங்கள், காடிகள், யானை கள், நரிகள், மரைகள், புல்வாய்கள், சவ்வாது பூனைகள், ஆமைகள், புழுகுபூனைகள், கருங்குரங்குகள், எலிகள், அணில்கள், காட்டெருமைகள், காண்டாமிருகங்கள், வரை யாடுகள், உடும்புகள், முயல்கள் ஆகிய அநேகம் மிருகங்க ளும், காடை, கௌதாரி, மயில், குயில், கொக்கு, புறா, அன் றில், கழுகு, கோட்டான், பருந்து, நாகணவாய்ப்புள், கிளி, அன்னம், நாரை முதலிய பக்ஷிகளும் வலைக்குள் வந்து கூடின. அவ்வாறு கூடவே அரிச்சந்திரனும், மற்ற அரசர் களும், வீரர்களும் வில்லை வளைத்து, நாணேறிட்டு, அம்பு களைப் பூட்டி வேட்டையாடத் தொடங்கினார்கள். அப்படி அவர்கள் வேட்டையாடும்போது அவர்களுடைய அம்புகள் பாய்வதனாலே அநேகம் மிருகக்கூட்டங்கள் கீழே விழுந் துழன்று உடல் பதைபதைத் திறந்தன; வேடர்கள் கையிலே கொண்டு வீசிய வேல்களும், வளைதடிகளும் பட்டு அநேகம் மிருகங்கள் துண்டுதுண்டாகி வீழ்ந்திறந்தன; அவ்வேடர்க ளேவிய நாய்கள் வாயினாற் கடித்திழுக்கக் கீழ் விழுந்து பல மிருகங்களொழிந்தன; இன்னும், மிருகங்களி னுடலிற்பட்டு ஊடுருவி மேலெழுந்த அம்புகளும், ஆயுதங்களை வீசிய வேகத்தினாலே அறுபட்டு மேலெழுந்த மிருகங்களின் தலை களும், மிக்க வலிமையையுடைய வீரர்களும் மண்டலீகர் களும் எய்து மேலே உயர்ந்த வில்லுண்டைகளும், மேலே பறக்கும்போது அம்பு முதலியனபட்டு உயிர்துறந்த பக்ஷி களும் எல்லாத் திக்குகளிலும் மழை சொரிவதுபோல விழ்ந்து பூமியிற் குவிந்தன; பின்னும், வீரர்கள் வீசுகின்ற கவணினின்றும் விடுபட்ட கற்கள் பட்டு அநேகங்கோடி பிராணிகள் உயிர் நீங்கின; கண்ணிகளிற் சிக்கிப் பல பிரா ணிக ளிறந்தன; அநேகம் பிராணிகள் தேருருளைகளிம்பட்டு நசுங்குண் டொழிந்தன; வில்லுண்டைகள் பட்டு ஒருகோடி

பிராணிக ளிறந்தன. அவ்வாறு அவைகள் இறந்து விழும் போது அவற்றின் தொடைகள் வெவ்வேறாக அறுபட்டு வீழ்ந் தன; தலைகள் அநேகந் துண்டுகளாகச் சிதைந்து வீழ்ந்தன; குரங்குகளின் இடுப்பும் கைகளும் பற்பல கூறாக அறுபட்டு வீழ்ந்தன; குடல்கள் சின்னாபின்னமாகத் துண்டுபட்டு வீழ்ந் தன; கொழுப்புகள் எங்கும் வெண்மையாகச் சிதறின; நரம்புகளும் மூளைகளும் பற்பல விடங்களிற் சிதைந்து வீழ்ந் தன; அவ்விதம் அம்மிருகங்களின் அவயவங்கள் அறுபட்டு விழவே யுகமுடிவிலே பொங்குகிற கடல்போல இரத்தவெள் ளந் திரண்டு பொங்கிப் புரண்டோடியது. இன்னும் இருள் போன்ற சரீரத்தையுடைய ஆண்யானைகள் செத்துச் சுற்றி லும் உயரமாகக் குவிந்தபடியினாலே சில பெண் யானைகள் ஓடுவதற்கு வழியில்லாமல் தயங்கிநின்று வீரர் கையாயுதங் களினா லிறந்தன; புலிகளும், காடிகளும், மான்களு மிறந்து சுற்றிலும் குவிந்து மலைபோ லுயர்ந்துபோனபடியினாலே அவற்றினடுவி லகப்பட்ட சில கலைமான்கள் ஓடுவதற்கு வழி யில்லாமல் நின்று அரசர் கையம்பு தைத்திறந்தன; எலிக ளும், ஆமைகளும், அணில்களும் மடிந்து நான்கு பக்கங் களிலும் குவிந்துயர்ந்தபடியினாலே நடுவி லகப்பட்ட பல முயல்கள் ஓடுதற்கு வழியில்லாமற் கலங்கி நின்று வேடர் களா லெறியப்பட்ட வளைதடிகள் பட்டிறந்தன; வலிமையைக் கொண்ட சிங்கங்களும், யாளிகளு மிறந்து எல்லாத் திக்கு களிலுங் குவிந்து சுவர்போ லுயர்ந்தபடியினாலே மத்தியி லகப்பட்ட சில மறைகள் தவறிபோட முடியாமல் வீரர் களின் வேலுக்கிரையாயின.

இவ்வாறு எல்லோரும் வேட்டையாடியதனால் எண் ணிறந்த மிருகங்களும் பக்ஷிகளும் இறந்து குவிந்த பின்பு வேடர்கள் கூடி மேற்கூறியபடி இறந்த மிருகங்களை யெல் லாம் எடுத்துக்கொண்டுபோய்ப் பருத்த விறகுக் கட்டை களையடுக்கி அவற்றின்மேல் வைத்து நெருப்பிட்டுக் கொளுத் திச் சுட்டு அவ்வாறு சுட்ட தசைகளையும், கள்ளையும் தங்கள் குலதெய்வத்திற்கு வைத்துப் படைத்து அக் கள்ளை

வயிறாரப் பருகி மாமிசங்களையுந் தின்று அக்கள் வெறியினாலே தம்முடன் உறுமிக்கொண்டு நிற்கின்ற நாய்களுக்கும் மாமிசங் கொடாமல் அடிக்கடி சூரிய வெப்பத்தால் விடாய் கொண்டு அதனாலே குளங்களில் விழுந்து நீரைக் குடித்துச் சந்தோஷமாக ஆடிப்பாடி, வெற்றிமாலை புனைந்த கொற்றவனாகிய அரிச்சந்திரனிருக்கு மிடத்திற்கு வந்து அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி, அவன் திரு முகத்தை நோக்கி, "ஐயனே! நாம் ஆடிய வேட்டையினாலே இக்காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் இறந்தொழிந்தன; ஆயினும், நாங்க ளெறிந்த வேலுக்குத் தப்பியும், வலைகளைக் கிழித்துக்கொண்டும், வெப்பமான விஷ மூட்டின அம்புகளுக்குத் தவறியும் சில மிருகங்கள் வேற்றிடங்களுக்கு ஓடியிருக்கின்றன; ஆதலின், இனி நாங்கள் அம் மிருகங்க ளோடிய விடங்கட்குச் சென்று அவற்றையுங் கொல்லவேண்டுமா? அல்லது எங்க ளிருப்பிடத்திற்குச் செல்லலாமா? அல்லது தங்களோடு அயோத்திக்கு வர வேண்டுமா? இன்னது செய்யவேண்டு மென்பதை எங்களுக்குக் கட்டளையிட்டருள வேண்டும்," என்று கூறினார்கள். அதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன், "வேடர்களே! மிக்க பலத்தைக் கொண்ட மிருகங்களில் ஒன்றையும் விடலாகாது; ஒன்றிருந்தாலும் அதன் மூலம் மிருகங்கள் விருத்தி யடைந்து நாட்டிற்குக் கேடுண்டாகும்; ஆதலின், அம் மிருகங்கள் சென்ற விடங்களெல்லாம் நாமும் சென்று அவற்றை யெல்லாங் கொன்று அதன் பின்னர்தான் நகர்க்குத் திரும்பவேண்டும்," என்று கூறினான். வேடர்கள் அதற்கிசைந்தார்கள்.

அதன்மேல் அரிச்சந்திரன் தேர்மேலேறித் தவறியோடிய மிருகங்கள் தங்கியிருக்கும் மற்றக் காடுகளுக்குச் சென்றான்; வேடர் சேனைகளும், அரசர் சேனைகளும் பின்றொடர்ந்து சென்றன; அவ்வாறு சேனைகளுடன் அரிச்சந்திரன் வேறு காடுகளிற் சென்று புகுந்திறங்கியவுடன், வேடர்களும், வீரர்களும் மறைந்திருக்கின்ற மிருகங்களை

யும் பக்ஷிகளையும் தேடிக்கண்டு கொல்லத் தொடங்கினவர்களாய் அவர்களுட் சிலர், சிங்கங்களாற் கொல்லப்படும் யானைகள் பயந்து கதறும் ஓசையைக் கேட்டு, 'இங்கே சிம்மங்கள் சஞ்சரிக்கின்றன,' என்று அத்திசையை நோக்கிச் சென்றார்கள்; சிலர், யானைகளுண்ட விளாங்கனிகள் சிதைந்து கிடக்கும் குறிப்பை யுணர்ந்து, 'இங்கே யானைகள் சஞ்சரிக்கின்றன,' என்று நிச்சயித்து அத்திக்கை நோக்கிச் சென்றார்கள்; சிலர், வேங்கைகளின் வாயி லகப்பட்ட மான்கள் கதறும் சப்தத்தைக் கேட்டு, 'இங்கே வேங்கை யிருக்கின்றது,' என்று சொல்லி வில்லை வளைத்துக்கொண்டு அந்தத் திசையை நோக்கிப் போனார்கள்; சிலர், உயர்ந்த மணற்றரையைக் கிண்டிக் கோரைக் கிழங்குகளைத் தின்னும் பன்றிகள் ஒன்றுடனொன்று சண்டையிட்டுக் கத்தும் ஒலியைக் கேட்டு, 'இங்கே பன்றிகள் சஞ்சரிக்கின்றன,' என்று தீர்மானித்து அவ்வொலி கேட்ட திசையை நோக்கி ஆயுதங்களுடன் வேகமாக நடந்தார்கள்; சிலர், வெள்ளைக்குருகுகள் சப்திக்கின்ற ஒலியையும், குளங்களில் யானைகள் தும்பிக்கையாலே நீரை மொண்டு குடிக்கிற சத்தத்தையும் கேட்டு அவ்வவ்விடங்களுக்கு விரைந்து சென்றார்கள்; சிலர், மாச்சருகுகள் காய்ந்தொலிக்கிற நாதத்தைக் கேட்டு அதனை இலைமானோசையென்று கருதி அத்திசையைநாடி யோடினார்கள்; சிலர், வாசனை மிகுந்த சோலையில் மாக்கிளைகள் காற்றினு லசையு மோசையைக் கேட்டுக் கானக்குதிரை முழங்குகிறதென்று நினைத்து அங்கே ஓடினார்கள்; சிலர் மயிலோசை, கிளியோசை, குயிலோசை, சிவற்காடையோசை ஆகிய இவற்றைக் கேட்டு ஆங்காங்கேயோடினார்கள்; சிலர், நாகரத்தினத்தின் பிரகாசத்தைக் கண்டு, 'இரத்தினத்தையுடைய பாம்பிருக்கின்றது,' என்று சொல்லி அங்கே யோடினார்கள்; சிலர் மரைகள் முழங்கு மோசையைக் கேட்டு அத்திக்கில் கும்புகூடி யோடினார்கள்.

இவ்வாறு பல வீரர்களும் பல திக்குகளி லோடி ஆங்காங்குள்ள மிருகங்களையும் பக்ஷிகளையும் கொன்று குவிக்க,

வேடர் சேனைகள், மலைகளைச் சேர்ந்த விடங்களிலும், நீல மலர்கள் பூத்த குளங்களைச் சார்ந்த விடங்களிலும் போய்ப் போய் ஆங்காங்கு சஞ்சரித்துத் திரிந்த மிருகங்களின் காலடியைக் கண்டு தொடர்ந்து சென்று அவற்றை எல்லாம் கொன்று கொன்று குவித்துப் பின்னரும் அவற்றை நெருப் பிற் போட்டுச் சுட்டு அவற்றின் கொழுத்த மாமிசங்களைத் தின்று தின்று அதனால் நாவறண்டு அடிக்கடி நீரைக் குடித் துக் களிப்படைந்து பின்னர் தவறிய மிருகங்களெல்லாம் கூடிப் பதுங்கி யிருக்கின்ற ஒரு காட்டைக் கண்டார்கள். அதைக் கண்ட மாத்திரத்திலே அவர்களெல்லோரும் ஒரே மனதாய், "மிருகங்களெல்லாம் இவ்விடத்திற்குள் கூடி யிருக்கின்றன; இக்காட்டை நெருப்பிட்டுக் கொளுத்திவிட் டால் எல்லாம் ஒழிந்துபோம்," என்று நிச்சயித்து, இராத் திரியைக் காட்டிலும் அதிகமா யிருண்டு, எறிந்த அம்பும் ஊடே செல்ல முடியாமல் திரும்பி வரும்படி முட்டைகள் செறிந்து நெருங்கி யிருக்கின்ற அக்காட்டின் பக்கத்திலே சென்று அதிலுள்ள பாம்புக் கூட்டங்களும், காடிகளும், புலிகளும், சிங்கங்களும், பன்றிகளும், ஆமைகளும், உடும்புக ளும், எலிகளும் இன்னுமுள்ள பிராணிகளும் வெந்தொழி யும்படி அக்காட்டைச் சுற்றிலும் நெருப்பை மூட்டினார்கள்; அப்போது அக்காட்டிற் பற்றிய வெப்பமான நெருப்பானது தனக்குப் பசியுண்டாகிக் கொதித்து உலகத்தையெல்லாம் புசிக்க எழுந்தாற்போலப் பொங்கி யெழுந்து நவகண்டங் களு மெரியத்தக்க நெருப்புப் பொறிகளை நாலா பக்கங்களி லும் சிதறிற்று; மேகக் கூட்டத்தைப்போல அந் நெருப்பி னின்றும் புகை யெழுந்து கம்மிப் பாவி எவ்விடத்தும் சூழ் ந்து ஆகாயத்திற் கப்பாலுஞ் சென்றது; அந் நெருப்புச் சுவாலையானது கொழுந்துவிட் டெழுந்து அண்டமுகட்டை யளாவி யெரித்தது. அவ்வாறு நெருப்புமூண் டெரியவே அந் நெருப்பினாலே அநேகங்கோடி மிருகக்கூட்டங்கள் வெந்து உடலெல்லாம் சுருண்டன; பல மிருகங்கள் அந் நெருப்பிற் பாய்ந்து தாவி வெளியேறி வெந்த அவயவங்க

ளோடு ஓடின; அவற்றுள் சிலவற்றை வேடர் ஏவி விடப்பட்ட நாய்கள் கடித்துக்கொன்றன; சில மிருகங்கள் அந் நாய்களுக்குந் தவறி விரைந்தோடி விசுவாமித்திரர் சமூகத்தில் விழுந்தன.

அரிச்சந்திரனால் துயரடைந்த மிருகங்கள் விசுவாமித்திரரிடம் சென்று முறையிடல்.

விசுவாமித்திரர், மேற்கூறிபபடி ஓடிவிழுந்த மிருகங்களைக் கண்டு, "நாம் அளவில்லாத மிருகங்களைச் சிருஷ்டித்தனுப்பினேம்; இப்போது சில மிருகங்களே துன்பத்தோடு இங்கு வந்திருக்கின்றன; அரிச்சந்திரன் நாமனுப்பிய மிருகங்களுட் பலவற்றைக் கொன்று குவித்துவிட்டான்போலும்; இங்கு வந்தவைகள் அவன் கையினின்றும் தவறிவந்தவைகளா யிருக்கலாம்; நல்லது! இப்படியா செய்தான்! அவனுடைய வல்லமையை நான் அறிகிறேன்," என்று கடுங்கோபங் கொண்டு துடிதுடித்து, மீண்டும், "ஐயோ! நானனுப்பிய மிருகங்களில் எட்டிலொருபங்குகூட இங்கே திரும்பி வாவில்லையே!" என்று கிலேசித்தார். அவ்வாறு கிலேசித்த உடனே அம்மிருகங்களைப் பார்த்து, "நீங்கள் கலங்கவேண்டாம்; உங்களுக்குத் துன்பத்தைச்செய்த அரிச்சந்திரனுக்குத் தக்க தண்டனை புரிவேன்; இப்போது நீங்கள் அங்கே சென்ற விவரத்தையும், சென்று, கோசலநாட்டை யழித்த விதத்தையும், அதை யறிந்து அரிச்சந்திரன் வந்து உங்களினங்களைக் கொன்று உங்களுக்குத் துயர்செய்த விதத்தையும், அதனால் நொந்து நீங்கள் இங்கே ஓடிவந்த விதத்தையும் விளக்கமாகக் கூறுங்கள்," என்று கூறினர். அதைக்கேட்டு அம்மிருகங்களெல்லாம் கால்கள் நடுங்கவும், கண்களிலே நீர் சிந்தவும், தலை நடுக்கங் கொள்ளவும், உடம்பெல்லாம் நடுங்கவும், வீசுகின்ற வால்கள் நடுங்கவும் யமனைக்கண்ட உயிர்கள் பதைப்பதுபோலப் பதைத்து அந்த விசுவாமித்திர முனிவரைப் பார்த்துத் துதித்து, "எம்பெருமானே! உம்முடைய கட்டளைப்படியே நாங்கள் கோசலநாட்டிற்குப் போனேம்; போன

வுடனே அங்குள்ள செழுமையான பயிர்களையெல்லாம்அழித் தோம்; அவற்றைக் காத்திருந்த மனிதரையும் கொன் றோம்; அதன்மேல் நாட்டி லுள்ள குடிஜனங்களெல்லோரும் அரிச்சந்திரனிடம்போய் எங்கள் செய்கையைச் சொல்லி முறையிட, அவன் உடனே கோபித்து அநேகம்வேடர்களுட னும், வீரர்களுடனும், வேட்டை நாய்களுடனும், ஆயுதங்க ளுடனும் புறப்பட்டுக் காட்டிற்குவந்து வலைகளைக்கட்டி எங் களை அதற் குட்படும்படிச் செய்து எங்களில் அநேகம் மிரு கங்களைக் கொன்று குவித்தான்; அப்போது நாங்களும் வேறுசில மிருகங்களும் அவ்வலைகளை யறுத்துக்கொண்டு பாய்ந்து தவறியோடி வேறொரு காட்டிற்புகுந்து பயந்து மறைந்திருந்தோம்; அந்தோ! நாங்கள் என்ன சொல்வோம்! அம்மன்னன் அங்கும் தேடிவந்து எங்களைக்கண்டு வேடர்க ளைக்கொண்டு அக்காட்டைச் சுற்றிலும் நெருப்பிட்டுக் கொளுத்தும்படிச் செய்து அங்கு மறைந்திருந்த எல்லா மிருகங்களையும் நாசமாக்கி விட்டான்; நாங்கள் மாத்திரம் தைரியங்கொண்டு அந் நெருப்பிற் பாய்ந்து அவயவங்கள் வெந்து புண்பட்ட தேகத்தோடு ஓடிவந்தோம்; அப்போது நாய்களை யேவி எங்களிலும் சிலவற்றைக்கொன் றொழித்து விட்டான்; கடைசியாகத் தவறிய நாங்கள்மட்டும் உமது சமு கத்தை யடைந்தோம்; இன்னும் எங்களோடு வாராமல் அக் காட்டினடுவே அகப்பட் டுயிருடனிருந்த சில மிருகங்களும் இந்நேரத்திற்குள் இறந்தொழிந்திருக்கும்,'' என்று கூறின.

விசுவாமித்திரர் ஒரு பன்றியைச் சிருஷ்டித்து அரிச்சந்திரனிட மனுப்புதல்.

மிருகங்க ளுரைத்த வார்த்தைகளைக் கேட்டவுடனே விசுவாமித்திரர் மேலும் அதிகரித்த கோபத்தை யடைந்து நெருப்புத் தோன்றும்படி கண்களா விழித்துப்பார்த்து, 'நல் லது! நல்லது!!' என்று கோபச்சிரிப்பாகச் சிரித்துக் கையை மூக்கின்மேல் வைத்துத் தலையை யசைத்து, 'இப்போது அரிச்சந்திரனை வெல்லக்கூடிய ஒரு மிருகத்தைச் சிருஷ்டி

த்து அவனிடமனுப்பி முன்சென்ற மிருகங்களுக் கெல்லாம் துன்பத்தைச் செய்த அவனுக்குத் துன்பத்தைச் செய்யும் படி புரிகின்றேன்?' என்றுசொல்லி உடனே மிக்க வீரம்பொருந்திய ஒரு பன்றியைத் தம்முடைய தவப்பெருமையினாலே சிருஷ்டித்தார். அப்பன்றி எப்படி யிருந்ததெனில், பொன்னிறமான உடம்பையும், வெண்ணிறமான நகங்களையும், புட்பராகம்போன்ற கழுத்தையும், செம் பவளத்தைப் போன்ற நான்கு கால்களையும், மேகநிறமான கண்களையும், பச்சை நிறமான முகத்தையும், நீலநிறம் பொருந்திய உரோமங்களையும், வயிரம்போன்ற பற்களையு முடையதாய் விளங்கிற்று; இன்னும் அது, தன்னுடைய வயிற்றினடியிலே மண்ணுலகத்தையெல்லா மடக்கி மறைக்கத்தக்க பெரிய உருவத்தையுடையது; கொம்பினாலே உயர்ந்த ஆகாயத்தையும் சப்த லோகங்களையும் எடுக்கத்தக்க வல்லமையை யுடையது; பாசத்தைக்கொண்டு உயிர்களைப் பிடிக்க வருகின்ற எமனையும் கலங்கச்செய்ய வல்லது; இவ்வாறு அது யமனையும் நடுங்கச் செய்ய வல்லமை வாய்ந்ததானால் வேறெதைத்தான் நடுங்கச் செய்யமாட்டாது! அதன் பெருமை எவ்வாறு அளவிட்டுக் கூற முடியும்?

இப்படிப்பட்ட வல்லமையுள்ள பன்றியைப் படைத்தவுடன் விசுவாமித்திரர் அதைப்பார்த்து, "வராகமே! ட இப்பொழுதே அரிச்சந்திரனிருக்கு மிடத்திற்குச் சென்று அவனுடைய சேனாதிபதிகளையும், வீரர்களையும், வேடர்களையும் தப்பாமற்கொன்று அவனுக்குமுன்னே பாய்ச்சல்காட்டி அவனிடம் அகப்படுவதுபோல நடித்துப் பையப்பைய முன்னோடி அவன் உன்னைப் பின்பற்றி வரும்படிச்செய்து மெல்ல அவனை இக்காட்டிற்குள்ளே அழைத்துக் கொண்டுவந்து விட்டுவிட்டு அதன்மேல் வேற்றிடம் செல்வாயாக," என்று கட்டளையிட்டார். அவ்வாறு சொன்னவுடனே அந்தப்பன்றி விசுவாமித்திரரை வணங்கி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் தன்னுடைய நீண்ட கொம்புகளாலே மலைகளையெல்லாம் தூளாகும்படி குத்திப் பெயர்த்து வீழ்த்தி,

உயர்ந்த மலைச்சிகரங்களையெல்லாம் பொடிப்பொடியாக்கி, ஆங்காங்கே நிலைகொண்டு கண்களில் நெருப்புப் பொறிகள் சிதற நான்கு பக்கங்களையும் பார்த்துச்சென்று முடிவில் அரிச்சந்திர மகாராஜனுடைய சேனைகள் தங்கியிருக்குமிடத்திற் புகுந்தது. அங்ஙனம் புகுந்தவுடன் அந்த மாயாரூபமான பன்றி சில வீரர்களுடைய தலைகளறுபடவும், நீண்டகைகள் முறியவும், ஈரற்குலைகள் கலங்கவும், கொலைபொருந்திய வேடர்களுடைய விற்கள் ஒடியவும், செவ்வையான அம்புகள் முறியவும், சில யானைகள் வீழ்ந்திறக்கவும், திரைச்சீலைகளும் வலைகளும் கிழிபடவும் அப்படையிற் சாடி, நாய்களுடைய வயிறும், ஈரலும், பித்தும், நீண்ட குடல்களும் சரிய, கால்களும், மார்பும் ஒடிந்து பிளக்க அவற்றைக் கொன்று மேலும் பல வீரர்கள்மீது மோதி அவர்களுடைய தோள்களைமுறித்து அவர்கள் கையிற் கொண்டிருந்தவாள்களையும் ஒடித்துப் பற்பலவிடங்களிலும் பாய்ந்து ஆர்ப்பரித்து அந்தச்சேனையைக் கலக்கியது. அவ்வாறுபாய்ந்து மோதியதனால், அரிச்சந்திரன் படையிலுள்ள யானைகளெல்லா மிறந்தன; காலாட்படைகளு மிறந்தன; கடிவாளம்பூண்ட குதிரைகளெல்லா மிறந்தன; அப்பன்றியின் கண்களிலிருந்து சிதறிய நெருப்புப்பொறிகளினால் இரதங்களெல்லா மழிந்தன; நாய்களும், இடுப்பும் கால்களும் துண்டுதுண்டுகளாகி யிறந்தன. இப்படியெல்லா மிறப்பது கண்டு எஞ்சிநின்ற வீரர்களெல்லோரும், 'இது மாயாரூபமான பன்றி,' என்று பயந்து ஆச்சரியப்பட்டுக் கலங்கி மேகங்கள் சஞ்சரிக்காநின்ற மலைகளிலும், மரங்களிலும் ஏறி மறைந்துகொண்டு, வேலாயுதங்களையும், வளைதடிகளையும், அர்த்தசந்திரன்போன்ற முகத்தையுடைய மழுக்களையும், அம்புகளையும் அதன்மீது எவினார்கள். அப்படி எவியும் அந்தப் பன்றியானது அவ்வாயுதங்களையெல்லாம் தூள்தூளாகப் பண்ணிற்று. அங்ஙனம் செய்ததோடு அவர்கள் ஏறிநின்ற மலைகளிலும் மரங்களிலும் மோதி அவற்றைச் சிதைத்து அவற்றில் மறைந்திருந்த அவ்வீரர்கள் மீதும் சாடியது; அப்போது அந்த வீரர்களுடைய குடல்கள்சரிந்தன; தொடைகளும்

முறிந்தன! கொடிய கைப்புறங்களும் பிளந்தன; வாய்களும் கிழிந்தன; உடல்களும் இருபிளவாகப் பிளந்தன; மார்புகளும் பிளந்தன; தலைகளும் அறுபட்டுருண்டன; கடல்பொங்கினாற்போல இரத்தம் பெருகி அந்தவனமெல்லாம் பாவிற்று; அவ்வுதிரப்பிரவாகத்திலே பலதலைகள் மிதந்தன; பிணக்கூட்டங்களும் மிதந்தன; ஒடிந்தகைகளும் மிதந்தன; கால்களும் மிதந்தன; கண்களெல்லாம் உருண்டுருண்டு மிதந்து சென்றன; குதிரைக்குளம்புகளும் துண்டுபட்டு மிதந்தன; குதிரைகளும் மிதந்தன; வளைதடிகளும், வேல்களும், அம்புகளும் மிதந்து சென்றன. பின்னும் அந்தப்பன்றி வேறுபக்கத்தில் மறைந்து நின்ற வேடர்கள்மீது பாய்ந்து அவர்களுடைய தோள்களை வீழ்த்தியது; தொடைகளையு மொடித்தது; கால்களையுமொடித்தது;நீண்ட கைகளையு முறித்தது; தயிர்க்கட்டிகள்போல விழும்படி மூளைகளையும் சிதறிற்று; காற்று வீசும்போது தென்னமரத்தின் பாளைகளிலுள்ள மலர்கள் சிந்துவதுபோல அவர்களுடைய பற்களும் சிதறும்படிச் செய்தது. இவ்வாறு வேடர்களைக் கொல்லவே அவ்விடத்தினின்றும் சுரந்த இரத்தவெள்ளம் பெருகி, முந்தின இரத்த வெள்ளத்தோடு கலந்து பொங்கிப்புறப்பட்டு அநேகம் மலைக்குன்றுகளை யுருட்டிக்கொண்டும் மரங்களை முறித்துக்கொண்டும், விற்களையும் அம்புகளையும் கட்டிவளைத்த திரைச் சீலைகளையும், வலைக்கயிறுகளையும் வாரிக்கொண்டும் வேகமாகச் சென்று அலைகளைக் கொண்ட நீர்க்கடலிற் பாய்ந்து கலந்தது.

இவ்வாறு போன போன திக்குகளிலெல்லாம் அந்தப் பன்றி மனிதர்களைக் கொன்று எங்கும் பிணக்குவியல்கள் தோன்றும்படிச் செய்யவே, மிகவும் வீரத்தைக்கொண்ட அரிச்சந்திரனுடைய சேனையானது நிலைகுலைதலாயிற்று; அவ்வாறாகவே ஒருவீரன் அரிச்சந்திரனிருக்குமிடத்திற்கு விரைந்து சென்று, அவனைக்கண்டு வணங்கி அந்தப் பன்றி வந்த விதத்தையும், வந்து சேனைகளைக் கொன்ற திறத்தையும் அவன்பாற் றெரிவித்தான். அவன் வார்த்தைகளைக் கேட்ட அரிச்சந்திரன் கடுஞ்சினமடைந்து, "அந்தப்பன்றி எந்தவழி

யாக வந்தது? நம்முடைய வீரர்களை எவ்வாறு கொன்றது? ஒவ்வொன்றையும் விவரமாகக் கூறுவாயாக," என்று அவ் வீரனிடமுரைக்க, அவன், "ஐயனே! அப்பன்றியின் தோற் றத்தை நான் என்னென்று கூறுவேன்! அது முன்னே மேலேழுலகங்களையும், கீழேழுலகங்களையும் ஒரு கொம் பிலே தாங்கின வராகந்தானோ! திரிபுர தகனஞ்செய்த பரம சிவனுடைய உலகத்தை யெல்லாம் எரிக்கத்தக்க வல்லமை யுள்ளபன்றி இதுதானோ! அல்லது உயிர்களையெல்லாம் கொல்லத்தக்க எமனே ஒரு பன்றி வடிவமெடுத்து வந்த தோற்றந்தானோ! அதனுடைய பயங்கரமான வடிவத்தை இன்னதென்று தெரிந்து சொல்லுதல் முடியாது; அதன் முகமும்தலையும்பச்சைநிறமுள்ளவை; அதனுடலமோ பொன் னிறமானது; அதனுடைய கொடுமையான கண்களோ மேக நிறம் பொருந்தியவைகள்; அதன் குளம்புகளோ வெண்மை நிறம் பொருந்தியவை; அதனுருவமோ மலையினும் பெரிய தானது. இவ்வாறு ஒப்பற்ற இலக்ஷணங்களையுடைய அது வடமேற்குத் திசையிலிருந்து வந்து நம்முடைய சேனையிற் புகுந்து தன்னுடைய வளைவான பெரிய கொம்புகளினாலே நம்முடைய காலாட்படைகளையும், பெரியதேர்களையும், பலம் பொருந்திய குதிரைக் கூட்டங்களையும், யானைகளையும், கொடிய நாய்களையும் குத்திச் சிதைத்து எங்கும் பிணக் காடாகச் செய்து, இன்னும் நம்முடைய சேனைகளை நாசஞ் செய்துகொண்டிருக்கின்றது; தேனொழுகுகின்ற மலர்மாலை யை யணிந்த அரசர்பெருமானே! உம்முடைய தேரை விரை வில் அங்கே திருப்பியருளவேண்டும்; இல்லையேல் அப்பன்றி நம்படை முழுவதையுமே நாசஞ் செய்துவிடும்," என்று கூறினான்.

அவ்வாறு கூறவே அரசர்க்கரசனான அரிச்சந்திரன் முன்னினும் அதிகமாகக் கோபத்தை யடைந்து, "ஒரு பன்றியா இவ்வாறு நம்முடைய படைகளை நாசஞ் செய்தது! நான் இப்பொழுதே சென்று அதன் சமர்த்தை யறிகின் றேன்; அஃது என்னைக் கொல்லத்தக்கதா யிருந்தாலும்

யான் அதற்கஞ்சிச் சிறிதும் பின் வாங்கேன்; இப்போது இறந்தவர்களுயிரைக் காட்டினும் என்னுடைய உயிரென்ன சிறந்ததா! யான் உயிரிழப்பதற் கஞ்சாமல் விரைவில் சென்று அதன் வல்லமையைக் கெடுத்து என் சேனைகளைக் காப்பாற்றுகிறேன்,'' என்று சொல்லி உடனே பத்திரகாளி கொடுத்த வலிமை தங்கிய வில்லை வளைத்துக் கையிற் பிடித்துத் தன்னுடைய தேரை அப்பன்றி திரியும் திசையை நோக்கிச் செலுத்தும்படி தேர்ப்பாகனுக்குக் கட்டளையிட்டான். அங்ஙனங் கூறவே தேர்ப்பாகரில் மிகவும் சிறப்புற்றவனும், சாரத்தியத் தொழிலின் இலக்ஷணங்களை நன்கு போதிக்கக் கூடிய சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவனும், சாரத்தியஞ் செய்வதில் மிகவும் வல்லவனுமாகிய அவனுடைய தேர்ப்பாகன், சூரியகுலத் தரசர்களுட் சிறப்புற்றவனாகிய அவ்வரிச்சந்திரனை வணங்கி, சர்ப்பாபரணம் பூண்டவளும், சடைத்தலை யுடையவளுமாகிய பத்திரகாளி கொடுத்த அந்தத் தேரைப் பன்றி சஞ்சரிக்கும் பக்கத்திற் றிருப்பிச் செலுத்தினன். அவ்விதம் செலுத்தவே அந்தத் தேரானது வாயுவைப்போல அளவற்ற வேகத்துடன் சென்றது; அப்படி அது செல்லும்போது அதன் வேகத்தாலே, சென்ற வழியெல்லாம் பூமியும் பள்ளமாயிற்று; தூளிகளும் மேலே கிளம்பிப் பரவி ஆகாயத்தை மறைத்தன; பற்பல வகையான காட்டு மரங்களும் சாய்ந்து விழுந்தன; அண்டமுகடுவரை உயர்ந்திருக்கின்ற மலைகளெல்லாம் நெரிந்தன; அண்டமுகடும் அதிர்ச்சி யடைந்தது; தூளிகளால் சூரியனு மறைவுற்றான்; மேகங்களெல்லாம் நான்கு பக்கங்களிலும் சிதறியோடின; கடல்நீரும் குதித்து மேலெழுந்து சிதறிற்று; இன்னும் அத்தேரின் சக்கரங்களில் அநேகம் மிருகங்களகப்பட்டு நசுங்கி யிறந்தன; அதனால் வழியெல்லாம் ஆறுபோல இறந்த வெள்ளம் பெருகியோடிற்று.

இப்படிப்பட்ட வேகத்தோடு அத்தேரானது தன்னுடைய சக்கரங்களால் எதிர்ப்பட்ட மாஞ்செடி முதலியவற்றைப் பிடுங்கிக்கொண்டு சென்று மிகவும் கொடுமைதங்கிய

அப்பன்றி சஞ்சரிக்கு மிடத்திற்குச் சமீபத்திற் சார்ந்தது. அவ்வாறு சேரவே, தங்கக் கிரீடத்தையும், ஒப்பற்ற வெள்ளைக் குடையையுமுடைய திரிசங்குபுத்திரனுன அரிச்சந்திரனுக்கு முன்னே, சந்திரனைப்போல வெண்மையான ஒளி விளங்குகின்ற கொம்புகளினுலே வெவ்விய கண்களையுடைய மதயானைகளையும், அநேகம் வில் வீரர்களைப் போர்செய்து வெல்லத்தக்க குதிரைகளையும் மோதிக்கொன்று, அவற்றினுடல்களைப் பஞ்சுபோற் பறக்கச்செய்த அந்தப் பன்றியானது வந்தெதிர்த்தது. அவ்வாறு அது வந்தெதிர்த்த மாத்திரத்தில் முன்னினும் மிக்க கோபத்தையும் வேகத்தையுங் கொண்டு மூங்கிற்காடுகள் மிகுதியாகவளர்வனவாகிய அஷ்டகுல பர்வதங்களின் மேலும் பாய்ந்தும், மேகக்கூட்டங்களேழையும் நீருடனே பூமியில் விழும்படிச் சிதறியும், தன் வாயிலுள்ள நுரையை நாலுதிக்கிலுஞ் சிந்தி, உயர்ந்த ஆகாயத்திலுஞ் சிதறியும், கண்களிற் ருேன்றிய நெருப்பினுலே முத்துக்களை வீசும் அலைகளையுடைய கடலையும் அதனடுவேயுள்ள வடவாமுகாக்கினியையும் எரித்தும், மதம்பொருந்திய எட்டுத்திக்கு யானைகளின் துதிக்கைகளிலே தன் கொம்புகளாற் குத்தி அவற்றிற்கு நோவை யுண்டாக்கி அவை உடம்பு கூசி நடுங்கிப் பயப்படவும், ஆதிசேடன் முதலிய நாகர்களுடைய தலைகள் நடுங்கவும், நாற்றிசைகளினும் ஓடியும், வேகங்கொண்டு மேற்கிளம்பியும், நீண்ட மண்ணுலகத்தை நீர் பெருகும்படி கிழித்து முகத்தினுலே கிண்டியும், பாகர்களாற் செலுத்தப்பட்டு வரும் மதயானைகளை மண்புழுதியிலே புரளும்படி குத்தித் தள்ளியும், வீரர்களாற் செலுத்தப்பட்டு வரும் உயர்ந்த தேர்களைச் சக்கைசக்கையாகப் பெயர்த்துத் தள்ளியும், குதிரை வீரர்களால் அதட்டிச் செலுத்தப்பட்டு வரும் குதிரைகளைக் கடலின் சேற்றிலே புதையும்படி வீழ்த்தியும், பல கொடூரமான செய்கைகளைச் செய்து முடிவில் தன்னை யேவிய விசுவாமித்திரரிட்ட கட்டளைப்படியே அரிச்சந்திரனுடைய பொன்மயமான தேரையும் உடைக்கவேண்டுமென்று தன் மனத்திலெண்ணி வலப்

புறத்திலுள்ள கொம்பைச் சாய்த்துக்கொண்டு அத்தேரை நோக்கிச் சென்றது.

அவ்வாறு சந்திரப்பிறைபோன்ற கொம்பைச் சாய்த்துக்கொண்டு அந்தப் பன்றியானது செல்லவே அரிச்சந்திரன் அதனுடைய செருக்கைக் கண்டு அடங்காக் கோபங்கொண்டு உடனே பலம் பொருந்திய தன்னுடைய வில்லில் ஒரு அக்கினிமயமான அம்பைத் தொடுத்து அதன் நெற்றிக்கு நேராகக் குறிவைத்து இழுத்துவிட்டான். அங்ஙனம் விடவே அக்கணையானது வில்லினின்றும் விடுபட்டு வாயுவேகத்தினு மதிகமான வேகங்கொண்டு சென்று அப்பன்றியின் நெற்றியிலே பாய்ந்து அதனைப் பின்பக்கமாகத் தள்ளி அதனுடலமெல்லாம் நடுங்கும்படி வேறொரு மலையிலே கொண்டுபோய் வீழ்த்தியது. அவ்வாறு பத்து யோசனை அகலமும் நீளமுமுள்ள அம்மலையிலே அக்கணையானது அப்பன்றியை வீழ்த்தியவுடனே அப்பன்றியானது வாய்வழியே இரத்த மொழுகச் சக்கரம்போலச் சுழன்று தவமுனிவராகிய விசுவாமித்திரர் வாசஞ்செய்யும் சோலைக்குச் செல்லக் கருதி ஓடிற்று. அப்படி ஓடவே முன்னே அப்பன்றிக்கு அஞ்சிக் கடலைப்போல ஆரவாரித்து நாற்றிசைகளிலும் சிதறியோடிய சேனைகளெல்லாம் அச்சம் நீங்கி மகிழ்ச்சி தங்கிய மனத்துடனே நெருங்கி யோடிவந்து அரிச்சந்திரனைச் சூழ்ந்தன; அப்போது அச்சேனையிலுள்ள வீரர்களெல்லோரும் அரிச்சந்திரனுடைய வில்லின் திறத்தைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடித் தாமரை மலர்போன்ற அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள்; அங்ஙனம் வணங்கியவுடனே அரிச்சந்திரன் அவர்களை நோக்கி, "வீரர்களே! இனி நீங்கள் அஞ்சவேண்டாம்; என்னுடைய ஒரே பாணத்தினால் அப்பன்றியின் வலிமை யனைத்தையும் குறைத்துவிட்டேன்; அது பயங்கொண் டோடுகின்றது; அஃது எங்குச் சென்றாலும் விடாமல் பின்பற்றிச் சென்று அதனைக் கொன்றுவிடுகிறேன்; நீங்கள் தைரியத்தோடு எனக்குப் பின்னே தொடர்ந்து வருவீராக," என்று சொல்லித் தன்னுடைய தேரை

வேகமாகச் செலுத்திக்கொண்டு அப்பன்றி செல்லும் திசையை நோக்கிச் சென்று, முன்னே அப்பன்றியால் கொழுப்பும் குடல்களும் அறுபட்டு வீழ்ந்து தன்னுடைய சேனைகள் சிதறிக்கிடக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தான்.

அங்ஙனம் வந்து சேர்ந்தவுடன் அந்த அரிச்சந்திரமகாராஜன், தன்னுடைய சேனைகளிலே தங்கியிருந்த யானைகளும், குதிரைகளும், மனிதர்களும் அளவில்லாமற் செத்துக் கடந்த ஆச்சரியத்தைக் கண்டு, "ஆஹா! என்ன பாவத்தால் இக்கொடுமை நேர்ந்தது; எல்லாம் சிவன் செயலே," என்று சொல்லி இறந்தவர்கள்மீ திரக்கங்கொண்டு, அதன் மேல், "இவ்விதம் கொடுமை செய்த அப்பன்றியை விடலாகாது; அது சென்ற பக்கத்தில் விரைவாகத் தேரைச் செலுத்துவாயாக," என்று சாரதிக்குக் கட்டளையிட்டான்; உடனே தேர்ப்பாகன் குதிரைகளை முடுக்க அந்தக்குதிரைகள் பொன்மயமாக விளங்கும் தேரை யிழுத்துக்கொண்டு காற்றைப்போலக் கடுகிச்சென்றன. அவ்வாறு செல்லவே அரிச்சந்திரன் அத் தேருடன், முன்னே பன்றி போய் விழுந்த மலையைக் கண்டு அதன்மேலேறி யிறங்கி அப்பன்றியைப் பார்த்து வில்லில் அம்பைத் தொடுத்துவிட ஆரம்பித்தான். அதைக் கண்டவுடனே அப்பன்றியானது மிகவுங் கலக்கமுற்று உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கருதி அவ்விடத்தை விட்டு அப்பால் விரைந்தோடி அரிச்சந்திரனுடைய கண்ணுக்குத் தோற்றாமல் மறைந்தது. அப்படி மறைந்தும், அரிச்சந்திரன் எப்படியாவது அதனைத் தேடிக் காணவேண்டுமென் றுறுதிகொண்டு போகக்கூடாத காடுகளி லெல்லாம் போய் முடிவில் அஃது அகப்படாமற்போகவே உடலம்மிகவும்வேர்த்துக் களைப்புற்று முகத்திலும் திருமேனியிலும் தூளிகள் படியவிடாய்ப்பட்டு, "இனிமேல் அப்பன்றியைக்காணமுடியாது," என்று அப்பாற் செல்வதை விடுத்து இளைப்பாறும்பொருட்டு ஒரு சோலையி னிடையே தாமரைமலர்கள் நிறைந்து நறுமண மிகுந்திருந்த ஒரு தடாகக்கரையிற் சேர்ந்தான். அப்போது அத்தடாகத்தின்மே லுயர்ந்து மலர்ந்திருந்த

தாமரைமலர்களிலும், பாவிய நீலமலர்களிலும் மொய்த்த வண்டுகளின் பாட்டொலியானது நான்கு திசைகளிலும் கேட்க அத்தடாகம் மிகவும் அதிசயத்தைத் தருவதா யிருந்தது; இன்னும் அந்தக் குளத்திலுள்ள மீன்கள் தாவுவதா லுண்டாகும் ஓசையானது ஊழிக்காலத்திலே பொங்கி யெழுகின்ற யுகாந்தக்கடலின் முழக்கத்தை நிகர்த்திருந்தது; சக்கரவாகப் பக்ஷிகள் முழங்கும் ஓசையானது மேகத்தின் முழக்கத்தை நிகர்த்திருந்தது; இன்னும் அதில் முழக்கத்தை யுடைய அலைகள் வீசுகின்ற ஓசையும், பல பக்ஷிகள் முழங்குகின்ற இசையும், தெய்வகன்னிகைகள் வந்து நீராடுகிற முழக்கமும், பல அருவிக ளோடிவந்து பாய்கிற சத்தமும், இருள் நிறமான மதயானைகள் வந்து துதிக்கையாலே நீரை மொண்டு சிந்துகிற பேரொலியும், குரவமலர்கள் பரிமளிக்கின்ற வனத்திலுள்ள முனிவர்கள் வந்து கமண்டலத்தில் நீரை மொள்ளும்போது களகளவென்றுண்டாகும் சத்தமும், முதலைகள் கூட்டமாகக் கூடித் தங்களுக்குள்ளே கோபங்கொண்டு சீறிச் சண்டை செய்கிற முழக்கமும், குடத்தைப் போன்ற வடிவமுள்ள வெண்சங்குகள் கருப்ப வேதனைப் பட் டிரைச்சலிடுஞ் சத்தமும், அவ்வோசைக்கஞ்சி வெள்ளைக் குருகுகள் பறந்தோடுகிற சத்தமும், மீன்குத்திக்குருவிகள் ஆகாயத்திலிருந்து குறிப்பாக மீன்களின்மேல் வீழ்கிற சத்தமும், புலிகள் வந்து நீரைப் பருகும் ஓசையும் இடைவிடாமல் அதிகரித்திருந்தன. இவையன்றி அக்குளத்து நீரில் தினந்தோறும் மூழ்கும் முனிவர்களுடைய காவிவஸ்திரங்களினின்றுங் கழிந்த காவியும், கரையிலுள்ள தருக்களின் மலர்களிலிருந்து வடியும் பொன்னிறமான தேனும், கோபத்தைக் கொண்ட யானைகளின் மதப்பெருக்கும், நீரருந்த வரும் காட்டெருமைகளின் மடியினின்றும் வடிந்த பாலும், அடியில் பிரகாசத்துடன் தங்கி பச்சை சிவப்பு பவளம் வயிரம் முத்து ஆகியவைகளும் கலந்து, பல நிறங்களும் விளங்குவதனாலே, அந்நீர் இன்ன நிறத்தை யுடையதென்று ஆராய்ந்து எவராலுஞ் சொல்லமுடியாத தன்மையை யுடை

யதாயிருந்தது; இஃதன்றி, வெண்டாமரை, செந்தாமரை, செவ்வல்லி, செங்கழுநீர்,கருங்குவளை ஆகிய பல மலர்களெல்லாம் அலரப்பெற்று அக்குளம் விளங்கிய தோற்றமானது, அளவில்லாத சூரியர்களும், சந்திரர்களும், நக்ஷத்திரங்களும் நிறைந்திருக்கின்ற ஆகாயத்தைப் பிரமதேவன் பூமியி லுண்டாக்கி அக்காட்டினடுவே வைத்ததுபோன் றிருந்தது; இன்னும் அக்குளத்தினுள்ளே நிறைந்திருந்த ஜலத்துக்கும், சங்குகளுக்கும், மலர்களுக்கும், மீன்களுக்கும் அக்குளத்தினிடம் போதாம லிருந்தது; அதன் மேற்பாகத்தில் பறந்து சஞ்சரித்த வெள்ளைக் குருகுகளுக்கும், அன்னங்களுக்கும், நாரைகளுக்கும் ஆகாயத்தினிடம் போதாம லிருந்தது; அன்றியும், அக்குளத்தில் இராகத்தைப் பாடும் வாயைக் கொண்ட வண்டுகள் மொய்க்கப்பெற்ற தாமரை மலர்கள் கண்களுக் கடங்காமலும், மனத்தால் அளவிடக்கூடாமலு மிருந்தன; நீலோற்பலமலர்களும் அத்தன்மையை யுடையனவாகவே யிருந்தன; பின்னும் அக்குளத்தினீர்மேல் அலைகள் புரண்டுகொண்டிருந்தன; அவ்வலைகளின்மேலெல்லாம் தாமரைமலர்கள் அசைந்துகொண்டிருந்தன; அந்தமலர்களின்மேலெல்லாம் சூற்கொண்ட சங்கினங்கள் ஊர்ந்துகொண் டிருந்தன; அந்தச் சங்குகளின்மே லெல்லாம் தாமரைமலரினுள்ள மகரந்தம் படிந்திருந்தது; அந்த மகரந்தத்தின்மேலே வண்டுகள் மொய்த்துக்கொண் டிருந்தன; அந்த வண்டுகளின் கால்களிலெல்லாம் மலர்களிலிருந்து படிந்த தேனொழுகிக்கொண்டிருந்தது; இவையன்றி அக்குளத்தில் ஸ்திரீகளின் முகத்தையும், கால்களையும் போன்ற தாமரைமலர்களும், அழகிய கூந்தலை நிகர்த்த கொடிப்பாசியும், இதழை நிகர்த்த அல்லிமலரும், கண்களை நிகர்த்த கயல்மீன்களும், காதுகளை நிகர்த்த வள்ளைக் கொடிகளும் நிறைந்து விளங்கிய தோற்றம் எப்படி யிருந்ததெனில், அந்த நீர்க்குளமாகிய பெண் அரிச்சந்திரனைக் கண்டு விரும்பி தாமரைமலர்களாகிய முகத்தையும் பாதங்களையும், கொடிப்பாசியாகிய கூந்தலையும், செவ்வல்லிமலராகிய இதழையும், கயல்மீன்களாகிய கண்களையும்,

வள்ளையாகிய காதுகளையும் அழகோடு தோன்ற விளக்கிக் காட்டி மிக்க மகிழ்ச்சியுடன் முகமலர்ந்து புன்சிரிப்புடன் அவனை எதிர்கொண் டழைப்பதுபோன் றிருந்தது.

இவ்வகைச் சிறப்புக்கள் பொருந்தியதும், வெண்மையான அலைகளால் முத்துக்களை வாரிக் கரைமேல் வீசுவதுமாகிய குளக்கரையில் மேற்கூறியபடி அரிச்சந்திரன் சேர்ந்தவுடன், அதன் பக்கத்தில் மலையின்மேலிருந்து ஒளிபொருந்திய மணிகளை ஒதுக்கிக்கொண்டுவரும் அருவி பாய்வதான பரிமளமிகுந்த ஒருமலர்ச் சோலையிலே தங்கினான். அப்போது சூரியனும் மேற்றிசைக் கடலிற்போய்ச் சேர்ந்தான். அச்சமயம் அரிச்சந்திரனைச் சார்ந்த அரசர்களும், மந்திரிகளும், படைத்தலைவர்களும், மற்றைய வீரர்களும், தாங்களேறிவந்த யானைகளையும், இரதங்களையும், குதிரைகளையும் விட்டிறங்கி எல்லோரும் ஒன்றுகூடித் தேனை நிகர்த் தினிக்கின்ற அக்குளத்தி னீரிலே மூழ்கியும், அந்நீரைப் பருகியும் இளைப்பாறி மேற்கூறிய சோலையில் தங்கள் தங்களுக் கிஷ்டமான விடங்களிற் றங்கினார்கள்; அரிச்சந்திரனும், தன் மனைவியாகிய சந்திரமதியுடன் அக்குளத்திற் படிந்து இளைப்பாறியிருந்தான். இப்படி அரிச்சந்திரனும் அவனுடைய சேனைகளும் அங்கே தங்கியிருக்கும்போது, காட்டில் சஞ்சரித்துத் தாகவிடாய்கொண்டு அத்தாகத்தைத் தணித்துக் கொள்ளும்பொருட்டு, நீர் பருக அக்குளத்திற்கு வந்த சில முனிவர்கள், பெண்களுக்கு விளக்கமான சந்திரமதியும், அயோத்திக்கரசனான அரிச்சந்திரனும், அவனுடைய சேனைகளும் அவ்விடத்தி லிறங்கியிருப்பதைப் பார்த்து, "முனிவர் தங்குமிடத்தில் எவனோ ஓர் அரசன் வந்து அச்சமில்லாமல் தங்கியிருக்கின்றான்; இச்செய்கை இவனுக்குத் தகுமா?" என்று கோபங்கொண்டு உடனே அரிச்சந்திரன் சமீபத்திற் சென்று, "அரசனே! இவ்விடம் முனிவர் வாசஞ்செய்தற் குரியது; விசுவாமித்திரரைச் சார்ந்தது; ஆதலால், நீ இங்கே வந்திறங்கினது தகாதகாரியம்; விசுவாமித்திரமுனிவர் கண்டால் உனக்குக் கடினமான சாபங் கொடுத்து உன்னை எரி

த்துவிடுவார்; நீ விரைவில் இவ்விடத்தைவிட்டு நீங்குவா யாக," என்று கூறினார்கள். அதற்கு அரிச்சந்திரன் அம் முனிவர்களை நோக்கி, "அந்தணர்களே! நானும் என்னைச் சார்ந்தவர்களும் அந்த விசுவாமித்திரமுனிவருக்கு அடிமை கள்; அப்படியிருக்க அவர் எங்கள்மீது எதற்காகக் கோபங் கொள்ளப்போகிறார்? நாங்கள், அவர் கோபங்கொள்ளத்தக்க குற்றமொற்றுஞ் செய்யவில்லை; அப்படியே நாங்கள் அறியா மல் அவருக்குக் குற்றஞ் செய்திருந்தபோதிலும் அவரை வணங்கிச் சமாதானஞ் செய்துகொள்வோம்," என்று சொன் னான். அதைக்கேட்டு அம்முனிவர்கள் மிக்க இறுமாப்போடு தலையசைத்து, "அப்படியானால் இங்கேயிரு; பின்னே நடக் கும் விபரீதத்தை நீயே தெரிந்துகொள்வாய்; இப்போது நாங்கள் கூறும் சொல் உன் செவிக் கேறாது," என்று சொல் லித் தங்க ளிருப்பிடஞ் சென்றார்கள்.

அரிச்சந்திரன் காட்டிற் கனவு காணுதல்.

அவ்வாறு சிறந்த தவத்தையுடைய அம்முனிவர்கள் சென்றபின் மாலைக்காலமானது நீங்கி இராக்காலமானது வந் தது. அப்போது அரிச்சந்திரன், விசுவாமித்திரர் தனக்குச் சிநேகமானவராதலால் தன்மீது கோபங்கொள்ளாரென்று உறுதிகொண்டு அவரைப்பற்றி முனிவர்கள் கூறிய வார்த்தைக ளால் கலக்கமடையாமல் அவற்றை மறந்து, தனக்கென்றேற் படுத்தப்பட்டிருந்த சித்திர கூடாரத்திற்குள் நுழைந்து அப் போது சித்தப்படுத்தப்பெற்றிருந்த உணவுகளையும், காட்டி லகப்பட்ட மதுரமான கனி, காய், கிழங்கு முதலியவற்றையு மருந்திச் சந்திரமதியுடன் சந்தோஷமாக வார்த்தையாடிக் கொண்டிருந்து பின்பு சயனத்திற் படுத்து நித்திரை செய் தான்; சந்திரமதியும் சயனித்தாள்; மதம்பொருந்திய யானைக ளும், குதிரைகளும் நித்திரை செய்தன; அரிச்சந்திரனோடு தொடர்ந்து சென்ற மற்றைய அரசர்களும், மந்திரிகளும், சேனைத் தலைவர்களும் வீரர்களும் நித்திரை செய்தார்கள். அங்ஙனம் எல்லோரும் நித்திரைசெய்ய அவ் விராக்காலம்

நீங்கி விடியற்கால நேரமாயிற்று; அச்சமயத்திலே சிவந்த உச்சிக் கொண்டையையுடைய சேவல்கள் கூவின; கரிக் குருவிகள் சத்தமிட்டன; கிழக்குத்திக்கிலே சூரியனும் உதய மாயினான். அவ்வாறாகவே பூமண்டலத்தை மறைப்பதாய்க் கவிந்திருந்த இருளானது நீங்கிற்று; சூரியவொளி கிழக்கே சிறிது விளங்கிற்று; அத்தருணத்தில் மேற்கூறியபடி நித் திரைசெய்த அரசர்களும், மந்திரிகளும், படைத்தலைவர்க ளும், வீரர்களும் விழித்தெழுந்தார்கள்; யானைகளும் விழித் தெழுந்தன; குதிரைகளும் நித்திரை தெளிந்தன; சந்திரமதி யும் விழித்தெழுந்தாள். அரிச்சந்திரன் மாத்திரம் விழிக்க வில்லை; அதனால் சந்திரமதி அவன் விழிக்குஞ் சமயத்தை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். அப்படி யிருக்கும் போது அரிச்சந்திரன் ஒரு பயங்கரமான சொப்பனத்தைக் கண்டு உடனே உடல் பதறி மனத்திடுக்கத்தோடு விழித் தெழுந்தான். அப்படிப் பதறியெழுந்த மாத்திரத்தில் கொடி போன்ற இடையினையுடைய சந்திரமதி மனக் கலக்கமுற்று அரிச்சந்திரனுடைய நடுக்கத்தைக் கண்டு, நேர்ந்தது யாதோ வென்று பயந்து உடனே அவன் முகத்தை நோக்கி, "மன் னர்க்கு மன்னரே! தம்முடைய நித்திரையில் என்ன நேர்ந் தது? எதற்காக இவ்வாறு பதறியெழுந்தீர்? ஏதேனும் பயங் கரமான கனவுகண்டு விழித்தீரோ? நேர்ந்ததை விரைவில் அடியாளுக்குத் தெரிவித் தருளவேண்டும்," என்றுரைக்க அதற்கு அரிச்சந்திரன் அவளிடத்தில், "பெண்மணியே! நான் மிகவும் அஞ்சத்தக்க ஒரு சொப்பனத்தைக் கண்டு விழித்தேன்; அதனாலேயே என்னுடைய தேகம் இவ்விதம் நடுங்குகின்றது; அக்கனவின் பயனால் என்ன தீங்கு விளையு மோ வென்று என் மனம் கலக்கத்தை யடைகின்றது," என்று கூறினான். அதைக் கேட்டவுடனே சந்திரமதி மிக வும் முகவாட்டத்தை யடைந்தவளாய் அரசன் முகத்தை நோக்கி, "என் நாயகரே! நாம் உலகத்திற்கு என்ன தீங்கைச் செய்தோம்? மனமறிய ஒரு பாவத்தையும் செய்யவில்லை; அப்படியிருக்க நமக்கு என்ன துன்பம் வரும்? ஒன்றுமே

வராது; அப்படியே ஒருவாறு வந்தாலும் அது தெய்வச் செயலாகும்; அதற்கு நாமென்ன செய்யலாம்? எது எப்படியிருந்தாலும் சரி; இப்போது தாம் கண்ட சொப்பனத்தை இன்னதென்று விளக்கமாக உரைத்தருளவேண்டும்," என்று வேண்டினாள். அப்போது அரிச்சந்திரன் அவளிடத்தில், "பெண்கணுபகமே! நான் இப்போதே மந்திரிகளை வரவழைத்து அவர்களிடம் அந்தக் கனவைத் தெரிவித்து அதனுடைய பயனைத் தெரிந்து சொல்லும்படி கூறுகிறேன்; அப்படிக் கூறும்போது நீ அக்கனவையும் அதன் பயனையும் தெரிந்துகொள்ளலாம்," என்று சொல்லிவிட்டு அந்தக்ஷணமே தூதுவர்களை யழைத்து; "நீங்கள் விரைந்து சென்று மந்திரிகளை யழைத்துவருவீராக,"என்று கட்டளையிட்டான்.

அவ்வாறு கட்டளையிடவே அந்தத் தூதுவர்கள் விரைந்தோடி மந்திரிக ளிறங்கியிருக்கும் கூடாரங்களைச் சார்ந்து அவர்களிடம் அரசனிட்ட கட்டளையைத் தெரிவித்து உடனே அவர்களை யழைத்து வந்தார்கள். அந்த மந்திரிகள் விரைவாக நடந்து சென்று, விசுவாமித்திரரால் ஏவப்பட்ட மிருகங்களை யெல்லாம் கொன்று வெற்றியடைந் திருக்கிற அரிச்சந்திரனைக் கண்டு அவனுடைய தாமரைமலர்போலும் பாதங்களை வணங்கித் துதித்து அவனை நோக்கி, "அரசர்க்கிறைவ! நீர் எங்களை விரைவாக அழைத்து வரும்படி கட்டளையிட்டதற்குக் காரணம் யாது? அதனைக் கிருபையோடு எங்களுக் குரைக்கவேண்டும்," என்று வினவினர்கள். அப்படி மந்திரிகள் வினவியதைக் கேட்டு, உலகத்தை யெல்லாம் ஆளுகின்ற அரசனுகிய அரிச்சந்திரன் அவர்களைப் பார்த்து, "மதியிற்சிறந்த மந்திரிகளே! நான் சற்று நேரத்திற்குமுன் தூக்கத்தில் மிகவும் கலக்கத்தைத் தருவதான ஒரு சொப்பனத்தைக் கண்டு விழித்தேன்; அதனல் என்ன தீங்குவிளையுமோ தெரியவில்லை; ஆதலால், நீங்க ளெல்லோரும் அக்கனவைக் கேட்டு அதனல் இன்னது நேருமென்பதை உங்கள் மதிநுட்பத்தா லாராய்ந்து எனக் குரைப்பீராக," என்று கூறினன். உடனே மந்திரிகள், "அவ்வாறே சொல்கிறோம்;

அக்கனவை விரைவில் தெரிவிப்பீராக," என்று அரசனிடம் தெரிவிக்க, அவன் அவர்களிடத்தில், "அமைச்சர்களே! கேட்பீராக; நான் சற்று நேரத்திற்குமுன் அயர்ந்து தூங்கும்போது என்னைப் பெற்று வளர்த்த தந்தையாகிய திரிசங்குமன்னர் தேகத்துடனே சுவர்க்கலோகம்போய்த் தேவர்களால் தள்ளப்பட்டுக் கீழேவந்து நக்ஷத்திர மண்டலத்தில் நிலைகொண்டிருந்த காலத்திற்குப் பின்பு, நான் தேனிறைந்த மலர்மாலைகளை யணிந்த கூந்தலையுடைய ஐந்து பெண்களைப் பூர்வபுண்ணியவசத்தினாலே கூடியுறவாடி அவர்களால் இன்பத்தை யடைந்து வந்ததாகவும், அப்படி யின்பமனுபவித்து வருங்காலத்தில் எனக்குத் தீவினையானது வந்துசேர அதனாலே அவ்வைந்து பெண்களுள் ஒருத்தியை அருமையான தவத்தையுடைய ஒரு முனிவனுக்கு நானே சம்மதித்துக் கொடுத்து விட்டதாகவும், இன்னுமொருத்தி தானேபோய் அம் முனிவனோடு கூடிக்கொண்டதாகவும், மற்றொருத்தி உணவுமுதலியவை யில்லாமல் என்னைவிட்டு நீங்கியதாகவும், வேறொருத்தி என்னைவிட்டு நீங்கிக் கண் குருடாய்விட்டதாகவும், ஒருத்திமாத்திரம் எப்போதும் என்னைவிட்டு நீங்காமலிருந்து இம்மை மறுமைகளுக்குரிய நன்மைகளை யெல்லாம் எனக்குக் கொடுத்ததாகவும் ஒரு தோற்றத்தைக்கண்டு உடல்பதறி விழித்தேன்; இக்கனவின் பயன் யாது? இதனால் என்ன விஷயங்கள் நேரும்? நீங்கள் நன்றாக உங்கள் புத்தியைக் கொண்டு ஆராய்ந் துரைப்பீராக," என்று கூறினான்.

இவ்வாறு அரிச்சந்திரன் சொல்லி முடித்தவுடனே அந்த மந்திரிகளுக்குள்ளே சிரேஷ்டனும், நல்ல சாஸ்திரங்களை யெல்லாம் வழுவாமற் கற்றுணர்ந்தவனுமாகிய சத்தியகீர்த்தி யென்னும் மந்திரி அக்கனவின் பயனை ஆராய்ந்து சொல்லத் தொடங்கினவனாய் எழுந்து அரிச்சந்திரனுடைய பாதங்களை வணங்கி அவனை நோக்கி, "எம்மிறைவ! தாம் இப்பொழுது கண்ட கனவின் பயனைத் தெரிந்து கூறுகிறேன் கேட்பீராக; விசுவாமித்திரமுனிவர் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு உமக்கு அளவற்ற வஞ்சனைகளையும் தீங்குகளை

யும் செய்யத் தொடங்கியிருக்கின்றார்; இப்பொழுது நம் நாட்டில் விளைந்த கேடும் அவராலேயே உண்டாயிருக்கின்றது; இன்னும் அவரால் அளவற்ற தீங்குக ளுண்டாம்; அதற் கறிகுறியாகவே இந்தச் சொப்பனம் உம்முடைய கனவி லேற்பட்டிருக்கின்றது; நீர் கனவிற் கண்ட முனிவர் விசுவாமித்திரராவர்; ஐந்து பெண்களுள் ஒரு பெண் அரசாட்சியாம்; ஒரு பெண் செல்வமாம்; ஒரு பெண் உம்முடைய மனைவியாகிய சந்திரமதியாவள்; ஒரு பெண் உம்முடைய அருமைப் புதல்வனுவன்; ஒரு பெண் உமது சத்தியமாம்; நீர், ஒருத்தியை ஒருமுனிவருக்கு நீரே சம்மதித்துக் கொடுத்ததாகக் கண்டதனுல் உம்முடைய அரசாட்சியை ஒரு காரணத்தை முன்னிட்டு நீரே விசுவாமித்திருக்குக் கொடுத்துவிடுவீர்; ஒருத்தி தானே அவரிடம் சோக்கண்டதனுல், உம்முடைய செல்வமும் அவ்வரசாட்சியுடன்தானே அவரிடம் போய்ச் சேரும்; ஒருத்தி உணவு முதலியவை இல்லாமல் உம்மைவிட்டுப் பிரிந்துபோகக் கண்டதனுல் உம்முடைய மனைவி உம்மைவிட்டுப் பிரிந்து உணவுமுதலியன இல்லாமல் வருந்தியலேயும் காலம் நேரும்; ஒருத்தி உம்மைவிட்டு நீங்கிக் கண் குருடாய்ப்போகக் கண்டதனுல் உம்முடைய புத்திரனும் உம்மைவிட்டுப் பிரிந்து தீங்கடைவான்; ஒருத்தி உம்மைவிட்டு எப்போதும் நீங்காதிருக்கக் கண்டதனுல் உம்முடைய சத்தியம் மாத்திரம் உம்முடனே சார்ந்திருந்து இம்மை மறுமைக்குரிய பயன்களைத் தரும்; இவ்வுலகத்தில் நீர் எவ்வளவு துன்பத்தை யடையினும் முடிவில் உம்முடைய சத்திய மகிமையால் நன்மை யடைவீர்; இக்கனவும் விடியற்கால நேரத்தில் ஏற்பட்டிருக்கின்றபடியால் கனுநூல் முறைப்படி இதன் பயனுகிய செய்கைகளெல்லாம் சீக்கிரமாகவே நடைபெறும்; உம்முடைய தலைவிதி யிப்படி யிருக்கின்றது; நீர் மிக்க சிறப்போடிருக்கப் பார்த்த எங்களுடைய கண்களால் இனி நாங்கள் உம்மைத் தாழ்ந்த நிலையில் பார்க்கப் போகின்றோம்; நான்முகன் விதியை விலக்க யாவரால் முடியும்?" என்று சொல்லிக் கண்ணீர்விட்டு மிகவும் வருந்தினுன்; மற்ற மந்திரி

களும், "நம்மிறைவர்க்கு இத்தகைய துன்பங்களும் நேரலாமோ," என்று முகம் வாடி மனங் கலங்கினார்கள்.

அப்போது சந்திரமதி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்து தன் வாழ்வுக்குக் கேடு வருவதை யுணர்ந்தும் அதன்பொருட்டு மனத்தைக் கலங்கவிடாமல் தைரியங்கொண்டு அரிச்சந்திரனுக்குத் தேறுதல் சொல்லக் கருதி அவனை வணங்கித் துதித்து அவன் திருமுகத்தை நோக்கி, "பரிதி குலத் துதித்த பார்த்திப! நீர் அரசாட்சியை யிழந்தாலும், செல்வத்தை யிழந்தாலும், என்னை யிழந்தாலும், அருமைப் புத்திரனை யிழந்தாலும் தேவரீருடைய நீதிமுறைமை ஒன்றைமாத்திரம் இழக்காமல் காப்பாற்றுவீராக; எங்களாலும், உலக செல்வத்தாலும் ஏற்படும் இன்பம் நிலையற்றது; சத்தியத்தா லேற்படும் பயனே எப்பொழுதும் அழியாச் சுகத்தைத் தருவதாகும்; எல்லாம் நீங்கினும் அச்சத்திய மொன்று மட்டு மிருந்தால் அதனால் அளவற்ற நன்மை யுண்டாகும்; ஆதலால், நீர் எங்கள்பொருட்டும் அரசாட்சியின்பொருட்டும் கவலை யடையவேண்டாம்; எல்லாம் தெய்வச் செயலின் படியே நடக்கும்," என்று கூறினாள். அவ்வாறு கூறியமாத்திரத்தில் அங்குக் கூடிய மந்திரிகள் முதலிய எல்லோரும் முன்னிலும் அதிகமாகக் கண்ணீர் பெருகப் பெருமூச்சு விட்டுக் கைகளால் முகத்தை மூடிக்கொண்டழுது ஆறுத்துயரத்தை யடைந்து மயங்கினார்கள். அப்படி எல்லோரும் வருந்தி யழும்போது வாசனை பரிமளிக்கின்ற அழகிய மலர் மாலையை யணிந்த மார்பினை யுடையவனாகிய அரிச்சந்திரன், அவர்களை நோக்கி, "மதியிற் சிறந்த மந்திரி முதலியவர்களே! நீங்கள் என் பொருட்டுக் கண்கலங்கி மிகவும் வருத்தத்தை யடையவேண்டாம்; வரும் விதி வந்தால் எப்பேர்ப்பட்டவர்களும் அதனை யனுபவித்தே தீரவேண்டும்; ஆதலால் அறிவிற் சிறந்த நீங்களெல்லோரும் இவ்வாறு வருந்துதல் தகாது," என்று சொல்லி அவர்களைத் தேற்றிச் சந்திரமதி மனங் கலங்காம லுரைத்த வார்த்தைகளுக்காக மகிழ்ந்து அவளைப் பலவாறு கொண்டாடிக் காலக்கடன் முதலிய

வற்றை முடித்துக்கொண்டு அன்றையத்தினம் அவ்விடத்தி லேயே தங்கியிருந்தான். அதற்கப்பால் நடந்த விஷயங்களை இனிமேற் கூறுவாம்.

வேட்டஞ்செய்காண்டம் முற்றுப்பெற்றது.

சூழ்வினைக் காண்டம்.

அரிச்சந்திரனுடைய பாணம் பட்டு வருந்திய பன்றி விசுவாமித்திரரிடம் போய் முறையிடல்.

மேற்கூறியபடி அரிச்சந்திரன் தன் பரிவாரங்களோடு குளக்கரையிலே தங்கியிருக்க, முன்னே அவனுடைய வெவ் விய பாணம் பட்டதனல் வருந்தி மயங்கி மறைந்தோடிய பன்றியானது வாய் வழியே இரத்த மொழுக உடல்பதறி விசுவாமித்திருக்கு முன்னே போய்ச் சுழன்று விழுந்தது. அதைக் கண்டவுடனே விசுவாமித்திரர் மிகவும் பதறி அத னுடைய துன்பத்திற் கிரங்கி, "பன்றியே! உனக்கு நேர்ந் தது யாது? அந்தக் கொடியனுகிய அரிச்சந்திரன் உனக்கு என்ன செய்தான்?" என்று வினவினர். அதற்கு அப்பன்றி, "என்னை அடிமையாகக் கொண்ட முனிவரே! உம்முடைய உத்தரவின்படியே நான் விரைந்து சென்று அரிச்சந்திரனைச் சார்ந்த அரசர்களையும், வீரர்களையும், யானைகளையும், குதிரை களையும், வேடர்களையும், நாய்களையும் கொன்று குவித் தேன்; அதனல் அவ்வரிச்சந்திரனுடைய சேனை சிதைந்து நான்கு பக்கங்களிலு மோடிற்று; அதன்மேல் அவ்வரசன் என்னுடைய செய்கையை யறிந்துவந்து மிகவுங் கோபங் கொண்டு என்மீது ஒரு பாணத்தைப் பிரயோகித்தான்; அந்தோ! அப்பாணத்தின் கொடுமையை நான் என்னென்று சொல்வேன்; அது மிகவும் வேகங்கொண்டுவந்து என் நெற்றி யிற் பாய்ந்து என்னைத் தூக்கி நெடுந்தூரத்திற் கிப்பாற் கொண்டுவந்து போட்டுவிட்டது; இனி அவனே டெதிர்த் தால் பிழைப்ப தரிதாகுமென் றுறுதிகொண்டு உயிர்தப்பி

ஓடிவந்துவிட்டேன்; இப்போது நீர் கிருபை செய்தால் மாத்திரம் பிழைப்பேன்; இல்லையேல் என் உயிர் நில்லாது,” என்று கூறிற்று.

விசுவாமித்திரர் கோபத்தால் இரண்டு பெண்களைச் சிருஷ்டித்து அரிச்சந்திரனைக் கெடுக்குமாறு அவனிடமனுப்புதல்.

மேற்கூறியபடி பன்றி சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடனே விசுவாமித்திரர் அப்பொழுதே அப்பன்றிக்கு உண்டான துன்பத்தை மாற்றி அதை அனுப்பிவிட்டு, “நல்லது! இப்படியா செய்தான்! அவனுடைய சாமர்த்தியத்தை நான் அறிகிறேன்,” என்று துடிதுடித்துக் கூறி வடவாமுகாக்கினியைப்போலக் கண்கள்சிவந்துதோன்ற, மனங்கொதிக்க, ஊழிக்காலத்திலே வீசுகின்ற சண்டமாருதக் காற்றைப் போலப் பெருமூச்சுவிட்டுக் கடலிலேதோன்றிய விஷம்பொங்கினாற்போலக் கோபமதிகரித் தெழுந்தார். அவ்வாறு அவர் துடிதுடித்துப் பொங்கியெழவே அவருடைய கோபமிகுதியினா லுண்டான பெருமூச்சினின்றும், பேச்சினாற் கிளியையும், நடையினால் பெட்டை யன்னத்தையும், இடையினால் மின்னலையும் நிகர்த்த இரண்டு மோகினிப் பெண்கள் கறுப்பு நிறத்தோடு பிறந்து, கடலினிடத்தே நிலைகொண்டு நிற்கும் இரண்டு நீலக்கொடிகள் போலவும், செவ்வியையுடையவளான இலக்குமி பாற்கடலிலே அமுதத்தோடு பிறக்கும்போ துண்டாகிய நஞ்சுடனே தோன்றிய இரண்டு கரிய இலட்சுமிகள் போலவும், கருமை நிறத்தையுடைய சந்திர சூரியர்போலவும், ஆகாயத்திலுள்ள இரண்டு மின்னல்கள் கறுத்து விளங்கினாற்போலவும், இந்திர நீலக் கொம்புகளிரண்டு பூமியில்வந்து தோன்றினாற்போலவும், கரியகடலிலே இரண்டு பவளக்கொடிகள் கறுத்து நின்றாற்போலவும், பாற்கடலைக் கடைந்தகாலத்தில் பாம்புகக்கின விஷக்கடலிலே முழுகி அந்த விஷநிறமாக எழுகின்ற இரண்டு அன்னங்கள் போலவும், விஷகண்டத்தையுடைய சிவபெருமானது நெற்

றிக் கண்ணுலே மன்மதன் எரிபட் டிறந்தகாலத்தில் புற முதுகுகாட்டி யோடாமல் அச்சிவனுடனே எதிர்த்துநின்று அச்சிவனுடைய நெற்றிக்கண் ணெருப்பால் நீலத்தைப்போல் மேனிகருகி வெம்பிப் பின்னர் அம் மன்மதன் அநங்கனாய் உயிர்த்தெழுந்தகாலத்தில் அவனோடுசேர்ந்து அவன்செல்லு மிடங்க ளெல்லாஞ் சென்று, அவன் நினைத்தபோது அவன் மனத்திற் சார்ந்து, அவனுடைய நினைப்பின்படியே நடந்து, அவனிடத்தில் விசுவாச முடையவர்களாய் அவனுக்கினிமை செய்யும் நேயமாகிய ஆசாரத்தினு லுயர்ந்தவர்களாகிய அம் மன்மதனுடைய சேனைகளிலுள்ள இரண்டுபெண்களைப்போல வும், மேற்கூறியபடி சிவனுடைய நெற்றிக்கண்ணு லிறந்து சாம்பலாகிய மன்மதன், பழியைவாங்க எண்ணிக் காலபாசத் தையே கண்களாகக் கொண்டு, தவறில்லாத வரங்களையும் பெற்றுத் தோன்றிய இரதிதேவியும், அவளுடைய சகனத்தி யும்போலவும், திருமாலின் உந்திக்கமலத்திலே தோன்றியவ னும், சிருஷ்டித் தொழிலில் வல்லவனுமாகிய பிரமனைத் தாழ்மைப்படுத்த நினைத்து விசுவாமித்திரர் வாதுகொண்டு நீலமையினாலே எழுதிய இரண்டு சித்திரங்கள்போலவும், அவ்விசுவாமித்திரருக் கெதிரே நின்று காந்தள் மலர்போ லும் கைகளால் அவரை வணங்கினார்கள். குற்றமில்லாத நான்கு வேதங்களையுந் தெளிவாகத் தெரிந்த பரிசுத்தமான குணத்தையுடைய பெரியோர்களுக்குக் கோபமுண்டானால் அக்கோபத்தைச் சண்டாளமென்று அறிந்தோர் கூறுவர்; ஆதலின், அதற்கிணங்க மேற்கூறிய பெண்களிருவரும் தவத் திற் சிறந்த விசுவாமித்திரருடைய மூக்கிலே பொருந்திய கோபத்தின் வழியாகப் பிறந்தவர்க ளாதலாலே அவர்கள் சண்டாளிக ளானார்கள்.

அவ்வாறு சண்டாளிகளாகி வணங்கிய அப்பெண்களை விசுவாமித்திரர் பார்த்து அன்போடு அருகில் வரும்படி யழைத்து உட்காரச்செய்து, அவர்களுக்குப் பலவிதமான எழுத்துக்களின் பேதங்களையும், சொற்களின் வகைகளையும் முதலிற்கற்பித்து, அதன்மேல் அறுபத்துநான்கு கலைஞானங்

களையு முணர்த்தி, சங்கீதத்தையும், வீணை வித்தையையும், கின்னர வித்தையையும், பாதசாஸ்திரத்தையும் விசேஷமாகக் கற்றுக்கொடுத்தார். அவ்வாறு கற்றுக்கொடுக்கவே அப்பெண்கள் எல்லாவித்தைகளையும் முற்றுறக்கற்றுத் தேர்ச்சியடைந்து, அத்தேர்ச்சியை விசுவாமித்திரருக் குணர்த்தும்பொருட்டு இசையில் ஒப்பில்லாத நாரதரும், கின்னரர்களும், கந்தருவர்களும் கேட்டு வெட்கத்தை யடையும்படி இனியகுரலாற் பாடினார்கள். அங்ஙனம் பாடவே, தீய்ந்து காய்ந்துபோன பயிர்களெல்லாம் செழிப்புற்றுத் தழைத்து விளைவு மிகுந்தன; பட்டு நெடுங்காலமாகக் காய்ந்துபோயிருந்த மரங்களெல்லாம் தளிர்த்துச் செழித்தன; முன்னாளிலே இறந்துபோனவர்களுடைய எலும்புகளும் உயிர்பெற்றுத் தசைநரம்பு உதிரம் உரோமம் முதலியவைகளுடன் எழுந்தன.

அச் சமயத்தில் முன்னே அரிச்சந்திரனைக் குளக்கரையிற் கண்டு சென்ற முனிவர்கள் வாசனைபொருந்திய நீண்ட சடாமுடியையுடைய விசுவாமித்திரரிடம் வந்து அவரை வணங்கித் துதித்து அவரிடம், மேற்கூறிய குளத்தருகே அரிச்சந்திரன் சேனைகளுடன் வந்திறங்கி யிருப்பதையும், தாங்கள் கண்டுவந்த விதத்தையும் கூறினார்கள். அவ்வாறு புண்ணியமெல்லாந் திரண்டு வடிவெடுத்தாற்போலும் தேகத்தையுடைய அரிச்சந்திரன் குளத்தருகே தங்கியிருக்கின்றானென்று அவர்கள் கூறவே விசுவாமித்திரர், "சரி! சரி!! நாம் நினைத்தபடியே அவன் சமீபத்தில் வந்தான்; இனி நம் முடையஎண்ணமெல்லாம்தடையின்றிநிறைவேறும்," என்று தமக்குத்தாமே சொல்லிக்கொண்டு பின்னர், மதுரமான சொற்களைக்கொண்ட பவளம்போலும் வாயையும், செவ்வையான வேல்போலுங் கரிய கண்களையுமுடைய அவ்விரண்டு பெண்களையும் பார்த்து, "பெட்டை யன்னம்போலும் நடையையுடைய பெண்களே! சமீபத்திலுள்ள குளக்கரையிலே அயோத்திநாட்டிற்கிறைவனாகிய அரிச்சந்திரன் தன் சேனைகளுடனே வந்திறங்கி யிருக்கின்றான்; இப்பொழுதே நீங்

கள் அவனிடத்திற் சென்று இனிமையான இசைப் பாடல்களைப் பாடி அப்பாடல்களினுலே அவன் மனத்தை யுருக்கி மயக்கி அவனுடைய வெற்றிக் குடையைச் சன்மானமாகக் கேட்டு வாங்கி வாருங்கள்; அது கைகூடாமற்போயின் எப்படியாவது அவனோடுறவுகொண்டு அவனைக்கணவனுக்கிக்கொள்ளுங்கள்; இவ்விரண்டிலொரு காரியத்தை அவசியம் செய்து நிறைவேற்றுவீர்களாக," என்று கட்டளையிட் டனுப்பினர். அவ்விருவரும் அவ்வாறே அவர் கட்டளையை நிறைவேற்றுவதாகச் சொல்லி அவரை வணங்கிப் புறப்பட்டுக் கைகளிலே நல்ல மகாவீணையும், புல்லாங்குழலும் பிரகாசிக்கவும், இடையிலணிந்த மேகலாபரணமும், பாதங்களிலணிந்த செம்பொற் சிலம்புகளும் சப்திக்கவும், தொடுத்தணியப்பட்ட பூமாலைகள் அவிழ்ந்து சோரவும், மேலவயவங்களின் பாரத்தால் இடை தளரவும் தாமிருந்த பூஞ்சோலையை விட்டு நடந்து சென்று அரிச்சந்திரன் தங்கியிருக்கும் அக் குளத்தருகே சேர்ந்து அவனுடைய சேனைக்குட் புகுந்தார்கள். அங்ஙனஞ் சேர்ந்தவுடனே சப்திக்கின்ற வீரக்கழல்களை யணிந்த கால்களையுடைய வீரர்களடங்கிய அச்சேனையின் நடுவே அரிச்சந்திரன், கொலைத் தொழிலைச் செய்யும் வேல்போன்ற கண்களையுடைய அப் பெண்களைக் கண்டு, "இவர்களியாவர்?" என்று சந்தேகங் கொண்டான். அவ்வாறு ஐயங் கொள்ளுகிற சமயத்திலே அப்பெண்க ளிருவரும் அவன் சமீபத்திற் சென்று அவனைப் பலவாறு துதித்து வணங்கி நின்ருர்கள்.

அப்படி வணங்கி நின்ற அவர்கள் அதன்மேல் அந்த அரிச்சந்திர மகாராஜனுடைய தோள்களையும், அத்தோள்களிலே யணியப்பட்ட பிரகாசம்பொருந்திய இரத்தினகேயூரங்களையும், தாமரைமலர்போற் சிவந்த பாதங்களையும், அந்தப் பாதங்களிலே யணியப்பட்ட வீரகண்டைகளையும், முழங்கால்வரை நீண்டு தொங்குகின்ற கைகளையும், இடையிற் கட்டிய மந்திரவாளையும், நீண்ட மலர்மாலையையணிந்த மார்பையும், செழிப்புற்ற முகத்தையும் பார்த்து மிக்க ஆச்சரியங்கொண்டு, "மன்மதனும் இம் மன்னனுக்கு நிகராகமாட்

டான்," என்று புகழ்ந்து மேலும் அவனைத் துதிக்கத்தொடங்கினவர்களாய் அவன் திருமுகத்தை நோக்கி, "உலகத்தில் மிக்க அழகைப்பெற்ற அரசர்களுக்குட் சிறப்புற்ற அழகு வாய்ந்த மன்னவ! உம்மைச் சேரும் பொருட்டாக எங்களைப் படைத்தவன் வீணர்களுக்குள்ளே முதன்மைபெற்ற வீணனுவன்; ஏனென்றால், அவன் எங்களைப் படைக்குங் காலத்திலேயே இந்திரனுக்கும், வாணாசுரனுக்கும், ஆதிசேடனுக்கும் அமைத்ததுபோல உம்மைப் பார்த்தற்கும், வணங்குதற்கும், துதிப்பதற்கும் ஆயிரக்கணக்காகவும் இரண்டாயிரக்கணக்காகவும் கண்களையும், கைகளையும், நாக்களையும் எங்களுக் கமைக்காமற் போயினன்; உம்முடைய உயர்வு எங்களால் அளவிடற் கரிதாகும்; உலகமுழுதும் உமக்குரிய நகரமாம்; செம்பொன்மயமான வடமேருகிரியே உமக்குச் சிங்காசனமாம்; சூரியனே உமக்கு விளக்காம்; கடலே உமக்குத் திருமஞ்சனமாடுந் தடாகமாம்; இலக்குமியே உமக்கு நாயகியாவள்; சந்திரனே உமக்குக் குடையாம்; இப் பூமண்டலத்தில் உமக்கு எவரும் நிகராக மாட்டார்கள்," என்று புகழ்ந்து கூறினார்கள்.

அப்படி அப்பெண்க ளிருவரும் தன்னைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடியதை அரிச்சந்திரன்கேட்டு அதிசயித்து அவர்களை நோக்கி, "பெண்களே! நீங்களியாவர்? உங்கள் நகரமியாது? என்னிடம் எக்காரியத்தை முன்னிட்டு வந்தீர்கள்?" என்று வினவினன். அதற்கு அந்தப் பெண்கள், "அக விதழ்களையுடைய அழகிய பூமாலையை யணிந்த மார்ப! நாங்கள் இந்த வனத்திலேயே வாசஞ்செய்பவர்கள்; இழிவுள்ள ஜாதியிற் பிறந்தவர்களாகிய புலைச்சிகள்; வேதத்திற் சிறந்தவராகிய விசுவாமித்திரமுனிவர் வாசஞ்செய்யும் மலைச்சாரினின்றும் புறப்பட்டு உம்மைக் கண்டு வணங்கும் பொருட்டு இவ்விடத்திற்கு வந்தோம்; நாங்கள் ஞானமும், அதற்கேற்ற அனுஷ்டானமு மில்லாத ஈனசாதியிற் பிறந்த பெண்களானாலும் நல்ல வீணை வாசிப்பதிலும், கண்டப் பாடல் பாடுவதிலும் மிகத் தேர்ச்சியடைந் திருக்கின்றோம்; நீர் எல்லாக் கலைகளிலும் வல்லவரென்றும், இசைநூல் முழு

தும் இசையுடன் கற்றவரொன்றும், மிகவும் மதிநுட்பமுடை யவரொன்றும், வித்தைகளின் திறமையை யுணர்ந்து தக்க சன்மானஞ் செய்து வித்வான்களை யாதரிப்பவ ரென்றும், வரைவின்றிக் கொடுக்கும் வள்ளலென்றும் பலர்சொல்ல நாங்கள் கேட்டிருக்கின்றோம்; எங்களுடைய சங்கீதவித்தை யின் திறத்தை உம்மிடம் காட்டவேண்டுமென நாங்கள் மிக வும் விருப்பங்கொண் டிருக்கின்றோம்; ஆதலால், நீர் எங்க ளுடைய வீணை வாசிப்பையும், கண்டப்பாடலையும் சிறிது கேட்டருளவேண்டும்," என்றுரைத்து மிகவும் சிறந்த மகா வீணையைக் கையிலேகொண்டு, தளர்ந்திருந்த முறுக்காணிக ளாலே தந்திகளை முறுக்கி, அதன்மேல் மார்பிலே அவ்வீணை யைச் சாத்திச் செவியிற் பொருந்தும்படி சுருதிகூட்டி விரல் களின் வழியாகக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசைகளும் பொருந்திய அமிர் தம்போன்ற இனிமையையுடைய பாடல்கள் தோன்றுமாறு அவ்வீணையை விரல்களால் வாசித்து அவ்விசைக் கேற்பக் கிராமமாகக் கண்டத்தாலும் பாடினார்கள். அவ்வாறு அவர் கள் பாடும்போது அவர்களுடைய நீலோற்பல மலர்போன்ற கண்களும் மூடவில்லை; இரண்டிதழ்களும் கோணவில்லை; தாமரை மலர்போலும் முகஞ் சுழிக்கவில்லை; மூன்றாம் பிறையை நிகர்த்த நெற்றியும் புருவங்களும் மேலேறவில்லை; மிடறு வீங்கவில்லை; உடலசையவில்லை; இவ்விதம் அவயவங்க ளில் ஒன்றுமசையாமல் அவர்கள் சுவரில் எழுதப்பட்ட சித் திரம்போன் றிருந்தார்கள். கரும்பினிரசத்தையும் வெல்லத் தக்க மதுரம்பொருந்திய சொற்களையும், மேகத்தை நிகர்த்த கூந்தலையுமுடைய அந்தப் பெண்கள் மேற்கூறியபடி அசை வற்றிருந்து பாடுங்காலத்தில் அவர்களுடைய பவளம்போ ன்ற இதழ்களையுடைய வாயினின்றும் பிறக்கும் இசை எத் தன்மையுடையதா யிருந்ததெனில், குளிர்ந்த சந்திரனைக் கண்டு முதலிற் சதங்கை வடிவமாயிருந்த முகம் சிறிது விரிந்து பின்பு முழுதும் மலர்கின்ற செவ்வல்லிமலரில் வண்டுகளிருந்து பாடும் இசையைப்போன் றிருந்தது.

அப்போது அப் பெண்களுடைய இசைப்பாடலைக் கேட்டும், வடிவத்தைப் பார்த்துமிருந்த அரசர்களுட் பலர், அவர்களுடைய கண்களை நோக்கி "இப் பெண்களுக்குக் கண் இமைப்ப தில்லையோ?" என்றார்கள்; சிலர், அவர்களுடைய புருவங்களை நோக்கி, "இப் பெண்களுக்குப் பிரமன், ஒருவர் எடாமலும் தொடாமலு மிருக்கும் விற்களையே புருவங்களாகப் படைத்தானோ?" என்றார்கள்; சிலர், அவர்களுடைய பற்களைப்பார்த்து, "இவ்விருவருடைய பல்வரிசைகள் முல்லையரும்புகளோ! முருந்தின் துண்டுகளோ! முத்துக்களோ! இவற்றுள் இன்னவைதாமென் றுறுதியாகச்சொல்ல நம்மால் முடியவில்லையே," என்றார்கள்; சிலர், அவர்களுடைய பாடலைக் கேட்டு, "அடி பெண்களே! நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்கள்! நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்கள்!!" என்று அதிசயித்துச் சொன்னார்கள்; சிலர், "வட்டமான பூரணச்சந்திரன்போலும் முகத்தையுடைய இப்பெண்கள் பாடும் பாட்டைக் கேட்டு முன்னே நம்மாற் கொல்லப்பட்ட எல்லாப்பக்ஷிகளும், எல்லா மிருகங்களும் இனி உயிர்பெற் றெழுந்துவிடும்," என்று கூறினார்கள்; சிலர், "நம்மாலே சுடப்பட்ட காடுகளெல்லாம் இனி இப் பெண்களுடைய இசையைக் கேட்டுச் சோலையாகத் தளிர்க்கும்," என்றுரைத்தார்கள்; சிலர், "இனி இவர்களுடைய கண்டப்பாடலால் முன்னே பன்றியாலிறந்த நம்முடைய வாள்வீரர்களெல்லோரும்உயிர்பெற்றெழுவார்கள்," என்று சொன்னார்கள். இவ்வாறு எல்லோரும் சொல்லிப் புகழ, முன்னே அரிச்சந்திரன் வேட்டையாடும்போது பயக்தோடித் தங்களுயிரைக் காப்பாற்றும்பொருட்டு மறைந்த மிருகங்களெல்லாம் மேற்கூறிய அந்தப் பெண்கள் பாடிய மதுரகீத நாதத்தைக் கேட்டு வெளிப்பட்டு அவ்விடத்தில் நெருங்கிச் சஞ்சரித்தன; அவ்வாறே மறைந்த பக்ஷிக் கூட்டங்களுங் கேட்டு வெளிப்பட்டு அங்கே நெருங்கிப் பறந்து திரிந்தன; கடின வோசையைக் கேட்டு வருந்து மியல்பினையுடைய அசுணமா வென்னும் இசையறிவிலங்கு முதலியன, அரிச்சந்திரன் படையிலெழும் இடிபோன்ற முரசொலி

முதலியவற்றைக் கேட்டு அஞ்சி யிறக்காமல் அப்பெண்க ளுடைய இனிய குரலோசையால் மனமகிழ்ந்து அங்கே நெரு ங்கிவந்து திரிந்தன; தும்புரு முதலானவர்க ளெல்லோரும் அவ்விரு பெண்களுடைய கண்டப்பாடலோசையைக் கேட்டு வீணையின் நாதமென்று நினைத்து, "இந்த வீணுகானம் எங்கே யுண்டாகிறது?" என்று ஆலோசித்தார்கள்; நல்ல இசைநூ லிலக்கணப்படி யமைந்த மகாவீணையின் நாதமும், தங்கள் கண்டப்பாடலும் ஒரே தன்மையா யிருக்குமாறு அப்பெண்கள் மேற்கூறியபடி பாடிய இசையானது சந்திர மதியினுடைய செவிகளிலும், வெற்றிபொருந்திய அரிச்சந் திரனுடைய செவிகளிலும் நுழைந்தவுடனே அவர்கள் மிக வும் சந்தோஷித்து, அப்பெண்களைப் புகழ்ந்து கொண்டாடி, அவர்களுக்கு இரத்தினங்கள் பதித்த கங்கணங்களையும், செம்பொன்னுற் செய்யப்பெற்ற வளையல்களையும், நெருப் பைப்போன்று பிரகாசிக்கும் இரத்தினமாலைகளையும், பொன் மாலைகளையும் மற்றுமுள்ள ஆபரணங்களையும் கொடுத்து, "பெற்றுக்கொள்வீராக," என்று அவர்களிடம் கூறினுர்கள்.

அவ்வாறு கூறவே அப்பெண்க ளிருவரும் அரிச்சந்தி ரனை நோக்கி, "நெருங்கின ஒளியைக்கொண்ட கிரீடாதி பதியே! நாங்கள் உம்மிடம் ஆபரணங்களையும், வஸ்திரங்களை யும், திரவியங்களையும் பெற்றுக்கொள்ள வரவில்லை; நீர் சம் மதித்துக்கொடுக்கும் இவற்றை நாங்கள் விரும்பமாட்டோம்; நாங்கள் உம்மிடத்திற் பெறவேண்டிய பொருள் வேருென் றுண்டு; அதாவது: மும்மூர்த்திகளும் சந்தோஷிக்குமாறு நீர் முடிசூட்டிக்கொண்ட நாளிலிருந்து பிடித்துவரும் வெண்மையான வெற்றிக்குடையேயாம்; ஆதலால், நீர் அதனை எங்களுக்குச் சம்மதத்தோடு கொடுப்பீராஞல் மனத் திருப்தியோடு ஏற்றுக்கொள்வோம்," என்று தெரிவித்தார் கள். அதைக்கேட்டவுடன் அரிச்சந்திரன் அவர்களை நோக்கி, "பெண்களே! பழிப்பான மார்க்கத்திற் செல்லாத நீதியை யுடைய சூரியகுலத் தரசர்களால் தலைமுறை தலைமுறையாகப் பிடிக்கப்பட்டுவந்து இப்போது என்னிடம் சேர்ந்திருக்கிற

வெற்றிக் குடையை நீங்கள் கேட்பது தகாது; இதுவே அரச சின்னங்களுட் சார்ந்தது; இஃதில்லையேல் என்னுடைய அரசாட்சிக்குச் சிறப்பில்லாமற் போய்விடும்; இதனால் உங்களுக்கு ஒரு பிரயோசனமு மேற்படாது; இதைக் கொண்டுபோய் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களுக்குதவாத இக்குடையைக் கேட்கவேண்டாம்; இவ்விடத்தி லுள்ள பொருள்களுள் வேறெதையேனும் கேளுங்கள்; தடையின்றித் தருகிறேன்," என்று சொன்னான். அதன்மேல் அப்பெண்கள் அரிச்சந்திரனை நோக்கி, "அடுத்துவந்தவர் விரும்பியதை யெல்லாம் தடையின்றிக் கொடுக்கும் வள்ளற்றன்மை வாய்ந்த மன்னவ! எங்களுக்கு இக்குடையினால் பிரயோசன மேற்பட்டாலும் சரி, ஏற்படாமற் போனாலுஞ் சரி; இதையே பெறவேண்டுமென்று விரும்பி வந்தோம்; உலகத்திலுள்ள பெண்கள், தாங்கள் விரும்பிய நாயகரை யடைந்தால் மாத்திரம் இன்பத்தை யடைவார்களே யன்றி வேறொருவரால் திருப்தியடைய மாட்டார்கள்; அதுபோல், நாங்கள் விரும்பிய பொருள் கிடைத்தால் மாத்திரம் திருப்தி யடைவோமே யன்றி வேறொன்றால் திருப்தி யடையமாட்டோம்; ஆதலால், இக்குடையையே எங்களுக்கு மறுக்காமல் கொடுத்தருள வேண்டும்; அவ்வாறு செய்ய உமக்குச் சம்மதி யில்லாவிட்டால் எங்களை மணமாவது செய்துகொள்ளும்," என்று கூறினார்கள். இப்படி அவர்கள் சொல்லவே அரிச்சந்திரன் ஆச்சரியத்தை யடைந்து, "இவர்களுக்கு நாம் விடை கூறுவது தகாது," என்று சத்தியகீர்த்தியென்னும் மந்திரி முகத்தை நோக்கினான்; அரசன் குறிப்பை யுணர்ந்த சத்தியகீர்த்தி அப்பெண்களை நோக்கி, "கன்னியரே! பிறர் ஆசைப்பட்ட பொருள்களை இல்லை யென்னுமற் கொடுக்கும் மன்னனிடத்தில் நீங்கள் கேட்கத் தக்கவைகளை யறிந்து கேளுங்கள்; உங்களுக்கு எவ்விதத்தாலும் பொருத்தமற்றதும், நீங்கள் கேட்கத் தகாததுமாகிய பொருளைக் கேட்க வேண்டாம்; இன்னும் நீங்கள் இரண்டாவதாகக் கூறிய வார்த்தை மிகவும் வெறுக்கத்தக்கது; நீங்கள் சிறிதும் அச்ச

மின்றி இந்த வார்த்தையைக் கூறியது மிகவும் ஆச்சரியமா யிருக்கின்றது; இனி இத்தகைய வார்த்தைகளைக் கூறவேண் டாம்; தூரமாகத் தள்ளி நிற்பீராக," என்று சற்று வெறுப் போடுரைத்தான்.

அதைக் கேட்ட அப்பெண்கள், சத்தியகீர்த்தியை நோக்கி, "அமைச்சரே! உம்முடைய அரசர் கேட்டதை யெல்லாம் தரக்கூடியவரென்று உலகமெங்கும் இசைபரவி யிருக்கின்றது; நீரும் அப்படியே சொல்லுகிறீர்; ஆனால், நீர் சொல்லுகிறபடி கேட்டதை யெல்லாம் தரக்கூடிய தன்மை இவரிடத்தி லிருப்பதாகத் தெரியவில்லை; இவர், பிறர் விரும்பி யதைக் கொடுக்கத்தக்கவரானால் எந்தப் பொருளைக் கேட்டா லும் தடையின்றிக் கொடுப்பதன்றோ முறை; அப்படியின்றி நாங்கள் கேட்ட குடையையும் கொடாமல் மறுத்துவிட்டார்; எங்களை மணஞ்செய்து கொள்ளும்படி நாங்கள் வேண்டின தற்கும் விடை கூறவில்லை; ஐயோ! நாங்கள் இவரிடத்தில் வைத்திருந்த அன்பெல்லாம் வீணாய்ப் போயிற்று; எங்கள் எண்ணமும் பாழாயிற்று; இவரிடத்தில் கேட்டதை மறுக் கும் கடின சித்தத்தை இப்போது கண்டோமேயன்றி, விரும்பியதைக் கொடுக்கும் அன்பான சித்தத்தைக் காண வில்லை; இன்னும் நாங்கள் கேள்விப்பட்டபடி இவரிடத்தில் வேறு நற்குணங்களும் பொருந்தியிருப்பதாகத் தெரிய வில்லை; நீரும் அவரைப்போலவே கடிந்து பேசுகின்றீர்; நீங் கள் இவ்வாறு பேசினால் நாங்கள் என்ன செய்வோம்; மனத் திருப்தியில்லாமல் நாங்கள் திரும்பிப்போவது தகுதியாகு மா?" என்று பல விபரீத வார்த்தைகளைப் பேசினார்கள். சத் தியகீர்த்தி இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் மீண்டும் அவர்களிடத்தில், 'பேதையரே! நீங்கள் சிறிதும் அறிவில் லாமற் பேசுகின்றீர்கள்; சூரியகுலத் துதித்த அரசர்கள் பிறர் விரும்பியவற்றை யெல்லாம் கொடுக்கத்தக்க வள்ளற் றன்மை வாய்ந்தவர்களா யிருந்தாலும் கொடுக்கத்தக்கவை களைக் கொடுப்பார்களே யன்றிக் கொடுக்கத்தகாதவைகளைக் கொடுக்கமாட்டார்கள்; எக்காலத்திலும் விடத்தக்கவைகளை

விட்டுவிடுவார்கள்; விடத்தகாதவைகளை விடமாட்டார்கள்; ஆதலால், நீங்கள் கேட்கத்தக்கவைகளை நியாயத்தோடு கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்; வீணே பொருத்த மற்றவைகளைக் கேட்டு மனத்திற்கு வேதனையை யுண்டாக்கவேண்டாம்; நீங்கள் நீதிக்கு விரோதமாக இவ்விடத்தில் வார்த்தையாடத் தொடங்குவீர்களானல் மிக்க துன்பம் வரும்; நான் மேற்கூறியபடி கேட்கத்தக்க பொருள்களைக் கேட்க இஷ்டமிருந்தால் மன்னனிடத்திற் கேளுங்கள்; இல்லையேல் ஒன்றுஞ் சொல்லாமல் உங்க ளிருப்பிடஞ் செல்லுங்கள்," என்றுரைத்தான்.

இவ்வாறு மந்திரி கூறியும் கேளாமல் அச்சண்டாளிகள், மந்திரியை நோக்காமல் மீண்டும் அரசன் சமீபத்தில் நெருங்கி, "மன்னர் பெருமானே! நீர், எதைக் கேட்டாலும் கொடுக்கத்தக்க குணம் பொருந்திய வள்ளலென்று மதித்து வந்தோம்; இப்போது நெருங்கிப் பார்க்கையில் நீர் மிகவும் கடின சித்தமுள்ள உலோபியா யிருக்கின்றீர்; நீர் இவ்வித வஞ்சனை நிறைந்த உலோபகுண முடையவரென்பதை நாங்கள் முன்னரே அறிந்திருப்போமானல் உம்மிடம் வரவேமாட்டோம்," என்றுரைத்தார்கள். அதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் மனமுங் கண்களும் கொதிக்க அடங்காக் கோபங் கொண்டு, 'தகாத வார்த்தையைக் கூறும் இப்பாவிகளுடைய முகத்தில் விழிக்கலாகாது,' என்று கருதி உடனே சேவகரையழைத்து, "கொடிய சண்டாளிகளும், அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களும், நச்சு வார்த்தை யுடையவர்களுமாகிய இப்பாவிகளை இவ்விடத்தினின்றுந் தள்ளி இங்கே நிற்காமலோடும்படி துரத்துவீராக," என்று கட்டளையிட்டான். அப்படி அரசன் உத்தரவிடவே, பப்பரென்னும் வீரர்களாகிய அச்சேவகர் அவ்வார்த்தைகளைக் கேட்டு உடனே கண்களில் நெருப்புப்பொறி சிந்தக் கோபித்து அப்பெண்களிடம் நெருங்கிச் சென்ருர்கள். அவ்வாறு அவ்வீரர் தள்ளவருவதைக் கண்டமாத்திரத்தில் அவ்விரண்டு பெண்களும் பயங் கொண்டழுது, உடம்பெல்லாம் நடுங்கவும், கைகளும் கால்க

ளும் நடுங்கவும், மார்பிலே அணைத்துப் பிடித்திருந்த வீணைகளையும் அவ்விடத்திலேயே போட்டுவிட்டு மிகவும் விரைவாக வந்த திசையை நோக்கி ஓடினார்கள்.

அரிச்சந்திரனால் துரத்தப்பட்ட நீசப்பெண்கள் விசுவாமித்திரரிடம் சென்று அரிச்சந்திரன்மீது பொய்யாகக் குற்றங் கூறி முறையிடல்.

மேற்கூறியபடி ஓடிய அந்தப் பெண்கள் தாங்கள் கொண்ட பயத்தினாலே மனிதர்கள் செல்லத்தக்க வழியிற் செல்லாமல் எவர்களும் செல்லமுடியாத காட்டு வழியிற் சென்று, உடம்பெல்லாம் முட்களாற் கிழிக்கப்பட்டு இரத்த மொழுகவும், மேகத்தையும் பழிக்கும் கருமை வாய்ந்த கூந்தலைப் பலமுட்செடிகள் பற்றி யிழுத்துச் சிக்குப்படுத்த அது சின்னபின்னப்பட்டுச் சோரவும், உடுத்திய வஸ்திரங்களை மரக்கிளைகள் பற்றி யிழுக்க அவை பல பீற்றல்களாகக் கிழிபட்டுத் தோன்றவும், கண்ணீர் வடித்துக்கொண்டு அளவற்ற துக்கத்துடன் தங்களை முன்னே யனுப்பிய விசுவாமித்திரருக்கு முன்னேபோய் விழுந்து புலம்பினார்கள். அப்படி அவர்கள் வீழ்ந்து பாசாங்கு செய்து புலம்பிய மாத்திரத்திலே விசுவாமித்திரர், அப்பெண்களுடைய வஸ்திரம் கிழிபட்டுப் பூமியில் இழுபடுவதையும், மார்பிலே பட்ட காயங்களினின்றும் வடிகின்ற இரத்தத்தையும், சிவந்த இதழ்கள் பயத்தால் நடுங்குவதையும் கண்டு, அப்பெண்களை அரிச்சந்திரன் அடித்து வருத்தினானென்று நினைத்து, யுகமுடிவிலே தோன்றுகின்ற நெருப்பைப்போலக் கடுங் கோபங்கொண்டு கண் சிவந்தெழுந்து அப்பெண்களை நோக்கி, "கன்னியரே! நீங்க ளிப்படி வஸ்திரஞ் சோரவும், இரத்த மொழுகவும் அலங்கோலமாய்க் கண்ணீர் வடித்துக்கொண்டுவந்து வீழ்ந்து புலம்புதற்குக் காரணமியாது? அந்தச் சண்டாளன் என்ன செய்தான்? விரைவிற் கூறுவீராக," என்று துடிதுடித்துக் கேட்டார். அப்போது அப்பெண்கள், "ஐயனே! நாங்கள் பட்டபாட்டைக் கேளும்; உம்முடைய உத்தரவின்படியே

அரிச்சந்திரனிடம் போய் அவன் சமீபத்திலிருந்து வீணையை மீட்டி ஏழிசைகளையுங் கூட்டி வாசித்து அவ்விசைக்கேற்பக் கண்டத்தாலும் பாடி அவனை மகிழ்வித்து அதன்மேல் அவனுடைய வெற்றிக்குடையைக் கேட்டோம்; அதற்கு அவன் இணங்கவில்லை; பின்னர் எங்களை மணஞ்செய்துகொள்ளுமாறு தெரிவித்தோம்; அவ்வாறு தெரிவித்தவுடனே அவன் கடுஞ் சினமடைந்து, நாங்கள் உம்மைச் சார்ந்தவர்களென்பதையும், உம்மால் அனுப்பப்பட்டவர்களென்பதையும் தெரிந்துகொண்டு, எங்களைப் பலவிதமாக அடித்து உடம்பெங்கும் காயப்படுத்தி, வஸ்திரங்களைக் கிழித்துக் கூந்தலைப் பிடித்திழுத்துச் சிதைத்து, நாங்கள் அஞ்சிக் கதறியும் நெஞ்ச மிரங்காமல் வருத்தி மிக்க அவமானஞ் செய்து துரத்திவிட்டான்; அவன் எங்களுக்குச் செய்த தீங்கிற்களவேயில்லை; நாங்கள் அவனைப்போன்ற வன்னெஞ்சனையும் சண்டாளனையும் இதுவரை உலகத்திற் பார்த்ததில்லை; அவன் கையினின்றும் இவ்வாறு தவறி ஓடிவாராவிடின் நாங்கள் பிழைத்திருக்கமாட்டோம்; அந்தோ! எங்கள் உடம்பெல்லாம் நோவதிகரிக்கின்றது; மனமும் வேதனையடைகின்றது; இதற்குத் தக்க பரிகாரத்தை நீர் செய்யாவிட்டால் எங்கள் மனம் திருப்திபடைய மாட்டாது," என்று பொய்யுமெய்யுங் கலந்து கூறி அவ் விசுவாமித்திரருக்கு அளவற்ற கோபத்தை யுண்டாக்கினார்கள்.

இவ்வாறு அந்தப் பெண்கள் மித்திரபேதமான வார்த்தைகளைக் கூறிக் கோபத்தை யுண்டாக்கவே அந்த விசுவாமித்திர முனிவர் உடம்பெல்லாம் வியர்வை பொங்கவும், இரண்டு கண்களினும் நெருப்புப் பொறிகள் சிதறவும், அந்நெருப்பினால் இரண்டு பக்கங்களினுமுள்ள காடுகள் கரிந்து புகையவும் அடங்காக் கோபங்கொண்டு, இடி முழங்கினாற்போலக் கோபச்சிரிப்புச் சிரித்து, "ஆ! ஆ!! அந்த அரிச்சந்திரனுக்கு என்ன தைரியம்! கொஞ்சமும் இரக்கமின்றி இப்பெண்களுக்குத் துன்பத்தைச் செய்திருக்கின்றான்; இத்தகைய பாவிக்கு இனி நாமும் துன்பத்தைச் செய்வதே சரி;

அரைநிமிஷமும் தாமதியாமல் இப்பொழுதே அவனிடத்திற் சென்று அவனுக்குத் தக்க தண்டனை புரிகின்றேன்,'' என்று சொல்லி உடனே எழுந்து வைதிகரான பல முனிவர்கள் பின்தொடர அரிச்சந்திர னிருக்குமிடத்தை நோக்கிக் காற்றைப்போலக் கடுகிக் கூற்றைப்போலக் கொதித்துச் சென்றார்.

அப்படிச் சென்ற அவர், கையிலே கொண்ட அழகிய தருப்பைப் புல்லும் படபடவென்று நடுங்கவும், விரைவாகச் செல்வதனால் கால்கள் வருந்தவும், மலர் முடிக்கப்பெற்றுப் பொன்னிறமாக நீண்ட சடைகள் பூமியிற் படும்படி தொங்கவும், அவர் கோபத்தோடு செல்லும் வேகத்தைக் கண்டு, 'என்ன விளையுமோ,' என்று தேவர்கள் மிகவும் நடுக்கங் கொள்ளவும், மேருவை வில்லாகப் பிடித்துத் திரிபுரத்தை எரிக்கச் சென்ற பரமசிவனை நிகர்த்துப் பலமரங்க ளடர்ந்த வனத்தைக் கடந்து அரிச்சந்திரன் இறங்கி யிருக்கும் தடாகக் கரையிற்போய்ச் சேர்ந்தார். மயிற்கூட்டங்களும், வேறு பக்ஷிஜாதிகளின் கூட்டங்களும் நீங்காது வசித்திருக்கின்ற அக் குளக்கரையில் மேற்கூறியபடி விசுவாமித்திரர்போய்ச் சேர்ந்தவுடன், ஆதிசேடன் தாங்கிக்கொண்டிருக்கும் இப் பூமிபாரத்தை மாற்றித் தன்னுடைய தோள்வலிமையினாலே தாங்கத்தக்க அரிச்சந்திரன் அவரையும் அவருடைய கோபக் குறிப்பையும் கண்டு, "விசுவாமித்திரர் மிகுந்த கோபத்தோடு வருகின்றார்; இதற்கு முன்வந்த இரண்டு நீசப்பெண்களும்போய் இவரிடம் பொல்லாங்கான வார்த்தைகளைக் கூறியிருப்பார்கள்; அதனாலேயே இவருக்கு இவ்விதம் கோபம் அதிகரித் திருக்கின்றது; இவருடைய கோபத்தைப் பார்த்தால் மிகவும் பயங்கரமாயிருக்கின்றது; இந்தக் கோபத்தைத் தணிக்காமல் இப்படியே விட்டுவிட்டால் இதனால் கடல் நீரும் வறண்டுபோகும்; நீண்ட திக்குகளெல்லாம் எரிந்து சாம்பலாகும்; அகன்ற ஆகாயமும் தீய்ந்துபோகும்; உலகத்திலுள்ள உயிர்களின் சரீரங்களெல்லாம் நாசமாம்; அந்த உயிர்களும் ஒழிந்துபோம்; உலகமும் சாம்பலாகும்; ஆதலால், நாம் தாமதியாமல் எழுந்து எதிர்சென்று சமா

தானமாகிய வார்த்தைகளைக் கூறி இவருடைய கோபத்தைத் தணிக்கவேண்டும்,'' என்று கருதி விரைவிலே எழுந்து எதிர்கொண்டு நடந்து அந்த விசுவாமித்திர முனிவருக்குச் சமீபத்திற் சென்று அவர் முகத்தை நோக்கி, "முனிசிரேஷ்டரே! தாம் இவ்வாறு கோபங்கொண்டு வருதற்குக் காரணம் யாது? யான் தமக்கு என்ன குற்றம் செய்தேன்? மனமறிய ஒன்றும் செய்யவில்லையே; அப்படியே நான் ஒருவாறு அறியாமல் குற்றஞ் செய்திருந்தாலும் மன்னித்தருள வேண்டும்; அவ்வாறு மன்னிக்காவிடின் அடியேன் தாங்க மாட்டேன்; தம்முடைய கோபத்தைப் பிரமா,விஷ்ணு,உருத்திரன் ஆகிய மூன்று தேவர்களுமே சகிக்கமாட்டார்கள்; அவர்களாலேயே சகிக்க முடியாமற்போனல் அடியேன் எம்மாத்திரம்; சுவாமி கோபஞ் செய்யவேண்டாம்! கோபஞ் செய்ய வேண்டாம்!!'' என்று கூறி அவருடைய இரண்டு பாதங்களையும் இரண்டு கைகளாலும் பற்றிக்கொண்டு பூமியில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினன்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரன் முடியை உதைத்துத் தள்ளல்.

அவ்வாறு விழுந்து வணங்குஞ் சமயத்தில் சிறிதும் நெஞ்சிரக்கமற்ற அந்த விசுவாமித்திர முனிவர், அம்மன்னன் கைகளாற் பற்றியிருந்த பாதங்களை உதறிப் பிடுங்கிக்கொண்டு சிறிதும் கோபந்தணியாமல் மேன்மேலும் அதிகரித்த கோபத்தை யுடையவராய், "அடா பாவி! நீ எனக்கு முன்னே வந்து வணங்குதல் தகுமா? மகா சண்டாளனாகிய உன் கரங்கள் என் பாதங்களிற் படலாகுமா? சீ! சீ!! விலகிப்போ,'' என்று பேரிடிபோற் கூறி முழங்கிப் பற்களை நெறநெறவென்று கடித்து, அரிச்சந்திரன் சிரசிலணிந்திருந்த கிரீடத்தின் இரத்தினங்கள் பல திக்குகளிலும் சிதறிவிழவும், மார்பிலணிந்திருந்த ஆபரணங்கள் அறுபட்டுக் கீழே விழவும், அவனுடைய கிரீடத்தின்மேல் காலினல் ஓங்கியுதைத்தார். அவர் அப்படி அகங்காரங் கொண்டுதைத்தும் அதற்காக அரிச்சந்திரன் சிறிதும் மனவாட்டத்தை யடை

யாமல் மீண்டும் அவர் சமீபத்தில் நெருங்கி, "சுவாமி! தாம் எத்தனை உதை உதைப்பினும் அவற்றைத் தாங்கிக்கொள்ள அடியேன் கடமைப்பட் டிருக்கின்றேன்; ஆயினும், இப்பொழுது வலிமைகொண்டு இரத்தினக் கற்கள் பதித்த என் கிரீடத்தில் நீர் தாமரை மலர்போன்ற பாதத்தினு லுதைத்தபடியால் அப்பாதம் மிகவும் சிவப்புற்று வருந்துமே; இவ்வருத்தத்தை யடைவதற்கு யானும் என்னுடைய முடியும் ஏதுவா யிருந்ததைப்பற்றி என்மனம் மிக வாதனைப்படுகின்றது; ஐயோ! மலரினும் மெல்லிய இப்பாதம் என்ன வேதனையை அடைகின்றதோ," என்று அப்பாதத்தைக் கைகளாற் பிடித்துத் தடவினுன். அவ்வாறு தடவி இதத்தைச்செய்து அவருடைய ஆத்திரத்தைச் சிறிது தணித்துப் பின்னர் அவரை நோக்கி, "முனிவர் பெருமானே! என்னுடைய தந்தையும்,யானும்,என்னைச்சார்ந்தவர்களும் உமக்குக் குடியடிமைகளா யிருக்கின்ருேம்; அவ்வாறு நாங்கள் அடிமைகளா யிருந்து பணிவிடைசெய்வதில் எவ்வித குறைவுமியற்றினதில்லை, அப்படியிருக்க நீர் அடங்காக் கோபங்கொண்டு உம்முடைய பாதம் நோகும்படி என் கிரீடத்தில் உதைத்ததற்குக் காரணமியாது? நான் இப்பொழுது என்னுடைய சிரம் நோவதற்கு வருந்தவில்லை; உம்முடைய பாதம் வேதனை யடைந்ததற்காகவே வருந்துகின்றேன்; எல்லாமறிந்த சாதுவாகிய தாம் இவ்வாறு கோபங்கொள்ளுதல் தகுதியாகுமா?" என்று கூறினுன்.

இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி, "அடா துஷ்டா! நீ மிகவும் பரிசுத்தன்போலப் பேசுகின்ருய்; உன்னுடைய பசப்பு வார்த்தைகள் மிகவும் நன்ரு யிருக்கின்றன; நீ எனக்குச் செய்திருக்கும் குற்றங்களுக் களவேயில்லை; நான் சிருஷ்டித்து உன்னுடையநாட்டில் வாழும்படியனுப்பிய மிருகங்களையெல்லாம் சிறிதும் ஜீவகாருணிய மின்றிக் கொன்ருய்; என்னு லனுப்பப்பட்ட விநோதமான பன்றிக்கு மிக்க துன்பத்தை யுண்டாக்கினுய்; மிகவும் செழிப்புற்றிருந்த என்னுடைய சோலையை

யும் நெருப்பிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கினுய்; நான் பெற்றுப் பிரியமாக உன்னிட மனுப்பின இரண்டு பெண்களை யும் தூஷணையாகப் பேசியடித்துத் துன்பப்படுத்தி யனுப்பி னுய்; சிறிதும் ஞானமில்லாதவனே! மிருகங்களும் பக்ஷிக ளும்கூட சங்கீதத்தின் இனிமையை யுணர்ந்து மகிழ்ச்சி யடைகின்றன; நீ அப்பெண்களை வேண்டாவிடினும் அவர்க ளுடைய பாட்டிசையையாவது விரும்பினுயில்லை; ஆதலால், நீ மிருகங்களினும் தாழ்ந்தவனு யிருக்கின்றுய்; நன்முக யோசிக்குமிடத்து நீ மிகுந்த பாவச்செய்கை யுடையவனுய் விளங்குகின்றுய்; பசுவானது புலியின்றோலைப் போர்த்துக் கொண்டு பயிர்களை மேய்வதுபோல நீ மேலுக்குமாத்திரம் மகா சத்திய சீலன்போல நடித்துக்கொண்டு பாவச்செய்கை களையே நடத்தி வருகின்றுய்; உன்னுடைய இரகசியத்தை யுணராத சில அறிவீனர் உன்னை மிகுந்த நீதிமானென்று புகழ்கின்றுர்கள்; உன்னுடைய கொடுஞ் செய்கைகளை யெல் லாம் நான் நன்று யறிந்துகொண்டேன்; இனி உன்னை எள் ளளவும் மதியேன்," என்றுரைத்தார். அதற்கு அரிச்சந்திர மகாராஜன், "சுவாமி! தாம்கூறியபடி நான் கொடியனல்லன்; மிருகங்களும், பக்ஷிகளும்கூடி என்னுடைய நாட்டின் வளங் களையெல்லா மழித்துக் குடிஜனங்களையுங் கொன்று எண் ணிறந்த தீங்குகளைச் செய்தன; அவற்றுலுண்டான துன்பங் களைச் சகிக்கமுடியாமல் குடிஜனங்க ளெல்லோரும் கூடி வந்து என்னிடம் முறையிட்டார்கள்; குடிகளுக்கு வந்த தீங்கை நீக்கி நாட்டிற்கு க்ஷேமத்தையுண்டாக்குதல் அரசர்க் குரிய நீதியாதலால் நான் அவர்களுடைய துன்பத்தை நீக் கும்பொருட்டு மிருகங்களையும் பக்ஷிகளையும் கொன்று அவை தங்கியிருந்த காடுகளையும் சோலைகளையு மழித்தேன்; இவ் வாறுசெய்தல் அரசர்க்குரிய நீதியாயிருந்தாலும் அம்மிருகங் களும் பக்ஷிகளும் தம்மா லனுப்பப்பட்டவையென்று எனக் குத் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் நாட்டிற்கு என்ன தீங்கு நேர்ந்தாலும் அவற்றை நான் இவ்வாறு அழிக்கமாட்டேன்; அவை தம்மைச் சார்ந்தவை யென்பது எனக்குச் சிறிதும்

தெரியாது; அறியாமையினாலேயே அவ்விதம் செய்துவிட்டேன்; உலகத்தில் சிறியோர் அறியாமையாலும், வேறு காரணங்களாலும் குற்றஞ் செய்வது இயற்கை; அவ்வாறு சிறியோர் தவறிக் குற்றஞ் செய்துவிடினும், பெரியோர் அக்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுதல் முறைமை; நானோ அறியாத சிறியன்; நீரோ எல்லா விஷயங்களையு முணர்ந்த பெரியர்; ஆதலின், அற்பனாகிய என்னை ஒருபொருளாக மதித்து என்மீது கோபங்கொள்ளாமல் அடியேன் செய்த குற்றங்களை மன்னித்தருளவேண்டும்," என்று வணக்கத்தோடு சொன்னான்.

இவ்வாறு கூறியும் விசுவாமித்திரர் சாந்தத்தை யடையாமல் மீண்டும் அம்மன்னனை நோக்கி, "அடா பாவி! நீ எனக்கு முன்னேநின்று என்சொற்களைத்தடுத்துக் கற்றவித்தைகளை யெல்லாங் காட்டிச் சாமர்த்தியமாகப் பேசுகின்றாய்; என்னா லனுப்பப்பட்ட மிருகங்களையும் பக்ஷிகளையும் கொன்றழித்ததற்குத்தான் காரணஞ் சொன்னாய்; அதுபோகட்டும்; உன்னிடத்தில் சங்கீதவித்தையின் சாமர்த்தியத்தைக் காட்டிச் சன்மானம் பெறவந்த என்னுடைய பெண்களிருவரையும் நீ அடித்துத் துரத்துவதற்குக் காரணமியாது?" என்று கேட்டார். அப்போது அரிச்சந்திரன் மீண்டும் அந்த விசுவாமித்திருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு முகம் வாடி நாவுலர்ந்து, "சுவாமி! இன்னமும் அடியேன்மீது கோபத்தைச் செலுத்தலாகாது; இக்கோபத்தைத் தணித்தருளவேண்டும்; நான் அந்தப் பெண்களையும் வெறுத்துத் துரத்தியதற்குக் காரணத்தைக் கூறுகின்றேன் கேட்டருள்வீராக; அந்தக் கன்னியர்கள் இங்கேவந்து வீணையை மீட்டி நன்றாகவாசித்துக் கண்டத்தாலும் இனிமையாகப் பாடினார்கள்; அவர்களுடைய பாடலைக் கேட்டு நான் மகிழ்ந்து அவர்களுக்குத் தக்க ஆடையாபரணங்களைக் கொடுத்தேன்; அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளாமல் மறுத்து என்னுடைய அரசாட்சிக்கு முக்கியமான வெற்றிக்குடையைக் கேட்டார்கள்; அக்குடை கொடுக்கத்தகாததும், அவர்களுக்கு அவசியமில்லாததுமாயிருந்த

படியால் நான் அதைக் கொடுக்கமனமிசையாமல் வேறெதை யேனும் கேட்கும்படி அவர்களிடம் தெரிவித்தேன்; அதன் மேலவர்கள், தங்களை மணந்துகொள்ளும்படி என்னிடம் வேண்டினார்கள்; அது மிகவும் எனக்குப் பொருந்காத செய்கையாதலால் நான் அவர்கள்மீது சிறிது வெறுப்புற்று அவர்களை இவ்விடத்தினின்றும் தள்ளிவிடும்படி சேவகருக் குக் கட்டளையிட்டேன்; அவ்வாறு அவர்கள் தள்ளப்போகும் போது அப்பெண்களை இங்குநில்லாமல் ஓடிவிட்டார்கள்; இதுதான் இங்கே நடந்தவிஷயம்; நான் அவர்களை அடித்தது மில்லை, வேறுவிதமாகத் தொந்தரவு செய்ததுமில்லை; இவ் வாறு வெறுத்துப் பேசியதுங்கூட, நான், அவர்கள் உம்மைச் சார்ந்தவர்களென்பதை அறியாக்குறைவினாலேயே ஏற்பட் டது; அவர்கள் தம்முடைய பெண்களென்பதை யான் சிறி தேனும் அறிந்திருப்பேனானால் அவ்வாறு அவர்கள் தகாத மொழிகளைக்கூறினாலும் நான் வெறுத்துப்பேசவுமாட்டேன்; இஃதும் அறியாமையால் நேர்ந்த குற்றம்; ஆகலால், இதனை யும் நீர் பொறுத்தருளவேண்டும்,'' என்று கூறினான்.

அதைக்கேட்டவுடன் விசுவாமித்திரர் தலையை அசைத் துக்கொண்டு, ''அரிச்சந்திரா! நீ சொல்லும் வார்த்தைகள் மிகவும் நன்றாயிருக்கின்றன; ஒருவன், மற்றொருவனுடைய கழுத்தை யறுத்துவிட்டு, 'ஏன் இப்படிச்செய்தாய்?'' என்று நீதிமான்கள் விசாரிக்கும்போது, 'தைதவறுதலாகச் செய்து விட்டேன்'' என்பதுபோல நீசெய்யத்தகாதகாரியங்களையெல் லாம் செய்துவிட்டு, 'அறியாமற் செய்துவிட்டேன்,' என்று அஞ்சாமற் சொல்லுகின்றாய்; இன்னும் நீ அப்பெண்களை அடிக்கவில்லை யென்று சொல்வதும் நம்பத் தகுந்ததில்லை; முதிர்ந்த சங்கீத ஞானத்தையுடைய அப்பெண்கள் விரும்பிய தைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷத்தோ டனுப்பாமல் கேட்டதைக் கொடுத்தற்கு மனம் பொருந்தாமல் உலோப குணத்தை யடைந்து அதனால் அவர்களை மிகவும் துன்பப் படுத்தி யனுப்பியிருக்கின்றாய்; உலகத்தில் ஒரு தனவந்த ரிடத்தே சென்று இதமான வார்த்தைகளைக் கூறி யாசிப்பவ

ருக்குப் பொருள் கொடுக்க அந்தத் தனவந்தர்களுக்குச் சம்மதியில்லாவிட்டாலும் அவர்கள் சமாதானமாகிய வார்த்தைகளையேனும் அந்த யாசகருக்குச் சொல்லி யனுப்புவார்கள்; இன்னும் கீழோர் சொல்லத்தகாத வார்த்தைகளைக் கூறினும் உலகத்தை யாளும் அரசர்கள் அவற்றைப் பொறுத்துக் கொள்வது முறையாம்; உலகத்தின் இயற்கைகள் இப்படியிருந்தும் நீ இந்த இரண்டுவகைக் கொள்கைகளையும் தழுவிக் கொள்ளாமல்விட்டு யாசித்தவர்க்கு இதமானவார்த்தைகளைக் கூறாமலும், அவர்கள் செய்த அற்பகுற்றத்தை மன்னிக்காமலும் அவர்களை அடித்துத்துரத்தியிருக்கின்றாய்; இஃதென்ன நியாயம்? நீ கேட்டதைக் கொடுக்கும் வள்ளலென்றும் மன்னனென்றும் பெயர் வைத்துக்கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்?" என்று பின்னுங் கோபங்கொண்டார்.

இவ்வாறு கோபங் கொண்டவுடனே அரிச்சந்திரன் யாதொரு குற்றமும் செய்யாதவனாயிருந்தும் அந்த விசுவாமித்திருடைய படபடப்பான வஞ்சக வார்த்தைகளினால் மிருந்த குற்றத்தைச் செய்தவன் போலாகிப் பூமியைத் தோண்டி ஒருவன் புதைத்துவைத்த பொருளை யெடுத்துக் கொண்டுபோன திருடனை அடித்து வருத்தி உண்மை கூறும்படி நியாயாதிபதி தண்டிக்க அவன், "நான் அதனை யெடுக்கவில்லை," என்று பொய்கூறிச் சாதிக்கும்போது அவன் அப்பொருளில் செலவுசெய்ததுபோக மீதிப்பொருள் அவனுடையமடியிலிருக்கக்கண்ட தலையாரி அதனைக்காட்டிய வுடனே அவன்கிலேசித்துப்பெருமூச்சுவிட்டு அடங்கிப்பேசுவதுபோல அடங்கி, மிருதுவான வார்த்தைகளைப் பேசி அம் முனிவருடைய கோபத்தைத் தணிக்கவெண்ணி, அதிகரித்த கவலையுடன் அவர் முகத்தை நோக்கி, "முனிசிரேஷ்டரே! அடியேன்செய்த காரியங்களெல்லாம் தவறானவைகளேயாம்; அஞ்சனம் விளங்குகின்ற கண்களையுடைய அந்தப்பெண்களை அடித்த என்னுடையகைகளை நீர் அறுத்தாலும் அஃதெனக்குச்சம்மதமேயாம்; அவர்களை வெறுத்துப்பார்த்தகண்களைத் தோண்டினாலும் சம்மதமே; அவர்களுக்கிதஞ்செய்யாத என்

னுடலத்தைப் பல துண்டுகளாக அறுத்தாலும் சம்மதமே; நீர் எனக்கு எவ்வித தண்டனையைச் செய்யவிரும்புகின்றீரோ அதைத் தடையின்றிச் செய்துகொள்ளலாம்,'' என்று மிகவுந் தாழ்ந்துகூறினன்; அதன்மேல் அந்தக்கொடியசுபாவமுடைய விசுவாமித்திரர், சிறிது சாந்தத்தையடைந்து அரிச்சந்திரனை நோக்கி, "திரிசங்கு புத்திரா! நீ செய்திருக்கும் குற்றங்கள் எவ்வித காரணங்களைக்கொண்டும் பொறுத்துக்கொள்ளக்கூடியவைகளல்ல; ஆயினும், நீ என்னுடைய கன்னிகைகளாகிய அப்பெண்களிருவரையும் விவாகஞ் செய்துகொள்வாயானல், நீ, என்னா லனுப்பப்பட்ட மிருகங்களையும் பக்ஷிகளையும் கொன்று குவித்த குற்றத்தையும், பன்றியை அம்பாலெய்து துரத்தின குற்றத்தையும், அந்தப் பெண்களுடைய சங்கீதத்தைக் கேட்டு அவர்கள் விரும்பியதைச் செய்யாமல், அவர்கள்மீது வெறுப்புற்று அவர்களை அடித்துத் துன்பப்படுத்தித் துரத்திய குற்றத்தையும் பொறுத்துக் கொள்ளுகிறேன்,'' என்று கூறினர். இதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன், 'சிவசிவா,' என்று இரண்டு செவிகளையும் கைகளால் மூடிக்கொண்டு, அவரை நோக்கி, "சுவாமி! உலகத்தில் எவரேனும் நீதிக்கு விரோதமான காரியங்களைச் செய்தால் அவர்க்குத் தக்க புத்தி கூறி அக்குற்றங்களை நீக்கியருளத்தக்க தேவரீரே இந்த அநீதமான வார்த்தைகளை என்னிடம் கூறுவது மிக்க ஆச்சரியத்தை யுண்டாக்குகின்றது; உலகத்தை நீதியோடாளத்தக்க அரசர்கள் மிகவும் தாழ்ந்த நீசஸ்திரீகளை விவாகஞ் செய்துகொள்ளுதல் தகுதியாகுமா? அதனை நீரே ஆலோசித்துப்பாரும்; உலகத்தில் உமக்குத் தெரியாத விஷயம் என்ன விருக்கின்றது,'' என்று மனவேதனையோடுரைத்தான். இவ்வாறு கூறியும் அந்த விசுவாமித்திரர் தம்முடைய எண்ணத்தைப் பிடிவாதத்தோடு நிறைவேற்ற வேண்டுமென்னும் விருப்புடையவராய் அரிச்சந்திரனிடத்தில், "மன்ன! நீ அப்பெண்களை மணஞ் செய்துகொள்வதால் ஒரு தோஷமு முண்டாகமாட்டாது; முன்னே மலைகளிற் சஞ்சரிப்பவராகிய வசிஷ்டமுனிவருடைய சாபத்தால்

உன் தந்தையாகிய திரிசங்கு நீசனாயினான்; அவனுக்கு நீ புத்திரனானபடியால் நீயும் நீசனே; ஆகலால், நீ இந்த நீசப் பெண்களை மணம் புரிந்துகொள்வது மிகவும் பொருத்தமுடையதாகும்; என் வார்த்தையைத் தடைசெய்யாமல் அவர்களை விவாகஞ் செய்துகொள்; அவ்வாறு செய்யின் மிகவுஞ் சுகப்படுவாய்," என்றுரைத்தார்.

அதைக்கேட்டவுடன் அரிச்சந்திரன் மேலும் மனவாட்டத்தை யடைந்தவனாய் அந்த விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! முன்னாளிலே வசிஷ்டமுனிவரின் சாபத்தால் என் தந்தைக் கேற்பட்ட நீச்சத்துவத்தை நீரே தீர்த்தருளினீர்; அப்படியிருக்க நீரே இக்காலத்தில் அவருக்கு நீச்சத்துவத்தைக் கற்பித்து என்னையும் நீசனாக்க முயற்சிக்கின்றீர்; இது தகுதியாமா?" என்று அவ்விசுவாமித்திரருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு கூறினான். அதற்கு விசுவாமித்திரர், "கிரீடாதிபதிகளாகிய அரசர்களுக்கு அரசனே! நீ கூறுவது சரி; நீ சொன்னபடியே முன் உன்னுடைய தந்தைக் கேற்பட்ட நீச்சத்துவத்தைப் போக்கினேன்; அத்தகைய என்னால் உனக்கு வரும் நீச்சத்துவத்தைப் போக்குதலும் எளிதாகும்; இப்பொழுது என் சொற்படி அந்தப் பெண்களை நீ மணம்புரிந்து கொள்வதால் உனக்கு நீச்சத்துவமுண்டானாலும் அதை நானே போக்கி உன்னைப் புனிதனாக்குவேன்; ஆதலின், என் வார்த்தைகளைத் தடை செய்யாதே; நான் தெரிவித்தபடியே என்னுடைய பெண்களை விவாகஞ் செய்து கொள்ளக்கடவாய்," என்று தந்திரமாகவும், சாந்தமாகவுஞ் சொன்னார். அவர் அவ்வாறு தந்திரமாகக் கூறியும் அரிச்சந்திரன் சிறிதும் அதற் கிசையாதவனாய் அவரை நோக்கி, "சுவாமி! நல்ல வார்த்தையைக் கூறினீர்! நீர் என்னை எவ்வாறு தாழ்மைப்படுத்தினாலும், உம்முடைய கோபக் கண்களினுண்டாம் நெருப்பினால் என்னை எரித்துச் சாம்பலாக்கினாலும், என்னுடைய உயிரை உடம்பை விட்டுப் போகும்படிச் செய்தாலும், என் தேகத்தை வெட்டிப் பல துண்டுகளாகச் செய்தாலும், நான் அவற்றிற் கெல்லாம்

இசைவேன்; இப்போது நீர் சொல்லும் தகாதவார்த்தைக்கு மாத்திரம் உடன்பட மாட்டேன்," என்று கூறினான். அப்படிச் சொல்லவே விசுவாமித்திரர் மீண்டும் அடங்காக் கோபங்கொண்டு கண்களில் நெருப்புப்பொறி சிதற விழித்து அரிச்சந்திரனைப் பார்த்து, "அடா கொடிய சண்டாளா! என் பெண்களைத் திண்டி யடித்துக் கெடுத்து அவர்களுடைய கன்னித்தன்மையை அழித்தது மல்லாமல், நான் அவர்களை மணஞ் செய்துகொள்ளும்படிச் சொல்லும் சாந்தமாகிய வார்த்தைகளையும் தடை செய்கின்றாய்; இப்போது நீ அவர்களை மணம் புரிந்துகொள்ளத்தான் வேண்டும்; அப்படியின்றித் தடை செய்வாயானால் நான் உனக்கு மிகவுங் கடினமான சாபங் கொடுப்பேன்," என்று தெரிவிக்க, அரிச்சந்திரன் அதற்காகப் பயந்து தன் மனவுறுதி கெடாமல், "முனிவர் பெருமானே! தாம் கூறும் இழிவான காரியத்தைச் செய்து உயிர்வாழ்வதினும் தாம் கொடுக்கும் சாபத்தால் நான் கெட்டு உயிரிழப்பது மிகவும் நன்மையாகும்; ஆதலால், நீர் எத்தகைய சாபத்தை எனக்குக் கொடுப்பினும் ஏற்றுக்கொள்கிறேன்," என்று கூறினான்.

அதன்மேல் விசுவாமித்திரர், அரிச்சந்திரனுடைய மனம் சத்தியத்திற் பற்றிநிற்கும் உறுதியை நோக்கி, "இவனைப் போல நற்குணங்களிலும் பொறுமையிலும் சிறந்தவர் உலகத்தில் ஒருவருமிரார்; நாம் நயமாகக் கூறினும், பயமாகக் கூறினும் இவன் தன்னுடைய ஒழுங்கை விடாதவனாயிருக்கின்றான்; இப்போது நாம் கொண்டிருக்கும் கோபமெல்லாம் வீணாகப் போகாமல் அவற்றை இவன்மீது செலுத்திவிடுவோமானால் இந்திரனுக்கு முன்னே நாம் கூறியவார்த்தை நிறைவேறுதற் கேதுவில்லாமற் போகும்; ஆதலால், இன்னும் பலவித உபாயங்களைச் செய்து சிறிய சாபமிட்டுப் பயமுறுத்தி இவனை நம்முடைய வழிக்குத் திருப்பவேண்டும்," என்று தமக்குள்ளே ஆலோசித்து உடனே அரிச்சந்திரனைக் கோபத்தோடு பார்த்து, "உடுக்கை போன்ற இடையினையுடைய என்னுடைய பெண்களை விவாகஞ் செய்துகொள்ளுதல்

குற்றமென்று தெரிவிக்கின்ற திருடனே! என் வார்த்தையை நீ தடுத்தபடியாலும், என்னுடைய பெண்களை நீசஸ்திரீக ளென்று இகழ்ந்தபடியாலும் உன்னை அந்த நீசகுலத்தின னுக்கே அடிமையாகும்படி சபிக்கின்றேன்; நீ விரைவில் நீசனுக் கடிமையாவாய்; இது சத்தியம்; இதனைப் பின்னே தெரிந்துகொள்வாய்," என்று சாபமிட்டார். அவ்வாறு சாப மிட்டவுடனே அரிச்சந்திரமகாராஜன் அம்முனிவரை நோக்கி, "சுவாமி! தம்முடைய வார்த்தையை நான் தடுத்த தாகிய அற்பக்குற்றத்திற்காகஇத்தகையகொடுஞ்சாபமிட்டீர்; மழலைச் சொற்களையுடைய குழந்தையின் சொற்குற்றத்திற் காகத் தாயானவள் தன்னுடைய தனப்பாலுடன் விஷத் தைக் கலந்தூட்டினால் அதைக் கண்டு தடுப்பவரியாவர்? அக் கொடுஞ் செய்கையை அந்தத்தாயே மனதிரங்கி விலக்கினால் விலக்கலாமே யன்றி வேறொருவராலாகுமோ? பெரிய கடல் நீரே வெப்பங்கொண்டு கொதிக்குமானால் அவ் வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சி செய்வதற்குத் தகுதியான குளிர்ந்த நீர் எங்கே அகப்படும்? அக்கடல் நீரே குளிர்ச்சி யடைந்தா லடையலாமேயன்றி வேறு நீரால் அது குளிர்ச்சி பெறுமோ? இச் செய்கைகள்போல என்னை யடிமையாகக்கொண்ட தாம் எனக்குச் சாபங் கொடுத்தால் அதனை விலக்கத்தக்கவ ரியா வர்? நீரே மனமிரங்கி அதனை விலக்கினால் விலக்கலாமே யன்றி வேறொருவரா லாகுமோ? ஆதலால், அடியேன் அறி யாமற்செய்த குற்றத்தை மன்னித்து இக்கொடிய சாபத்தை நீக்கியருளவேண்டும்," என்று பணிந்தான். அச்சமயத் தில் சந்திரமதியும், தேவதாசனும், சத்தியகீர்த்தி முதலிய மந்திரிகளும் விசுவாமித்திரர் கூறிய சாபத்தைக் கேட்டு நடுங்கி, 'அந்தோ! என்ன விபரீதம் விளைந்தது!' என்று விசனமுற்று அம்முனிவருக்கருகே சென்று பூமியில் விழு ந்து நமஸ்கரித்து அவருடைய இரண்டு பாதங்களையும் பிடித் துக்கொண்டு, "எங்களை ஆட்கொண்டருளும் தவசிரேஷ்ட ரே! எங்களுக்கும் எங்க ளரசருக்கும் தாயும், தகப்பனும், தெய்வமும், ஆதாரமும் நீரேயென்று நாங்க ளெல்லோரும்

நினைத்திருக்கின்றோம்; அப்படி யிருக்கத் தாம் இவ்வாறு எங்க ளரசருக்குச் சாபங் கொடுத்தல் தகுதியாமா? மன திரங்கி மன்னித்து இக்கொடுஞ் சாபத்தை நீக்கியருளவேண் டும்; எங்களுக்கு உம்முடைய பாதமே கதி; வேறு கதி யில்லை," என்று கூறிச் சாபத்தை விலக்கும்படி வேண்டி னார்கள்.

அரிச்சந்திரன் அரசாட்சியை விசுவாமித்திரருக்குக் கொடுத்தல்.

மேற்கூறியபடி சந்திரமதிமுதலியோர் பலவாறு துதி த்து வேண்டியும் கடின சித்தத்தையுடைய அந்த விசுவா மித்திரமுனிவர் சிறிதும் இரக்கங்கொள்ளாமல் அவர்களைக் கடிந்து அப்பால் விலக்கிவிட்டு மீண்டும் அரிச்சந்திரனை நோக்கி, "அடா நடிப்பு வித்தைகள் கற்ற துடுக்கனே! நீ மிகவும் இந்திரஜாலம் கற்றவன்; உன்னுடைய ஜாலவித்தை யெல்லாம்என்பாற்செல்லாது; நீ சமயத்தில் என்னைத்தாயென் றுங் கூறுவாய்; தந்தையென்றுங் கூறுவாய்; சகோதரனென் றுஞ் சொல்வாய்; செல்வத்தைக் கொடுத்த தெய்வமென் றுஞ் செப்புவாய்; இவ்வாறு பல புகழ்ச்சியான வார்த்தை களைக் கூறி எவரையும் ஏமாற்றுவதில் நீ மிகவுஞ் சிறந்தவன்; ஆயினும், உன்னுடைய பசப்புவார்த்தைகளாகிய மாயவலை யிற் சிக்கி நான் ஏமாந்துபோகமாட்டேன்; இந்தத் தந்திர மான வார்த்தைகளால் நான் எள்ளளவேனும் திருப்தியடை வேனென்று நீ கருதாதே; நான் கூறியபடி என்னுடைய பெண்களை நீ மணஞ்செய்துகொண்டால் மாத்திரம் நான் மகிழ்ச்சியடைவேனேயன்றி வேறெவ்விதத்தாலும் திருப்தி யடைந்து உன் குற்றத்தை மன்னிக்கமாட்டேன்," என்று கூறினார். அதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் முன்னினும் அதிகமான முகவாட்டத்தை யடைந்து அம் முனிவருடைய பாதங்களில் வணங்கி, "சுவாமி! நான் எவ்வளவோ தாழ் ந்து என் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டியும் நீர் சிறி தும் மனமிரங்காமல் மீண்டும் அவ்விழிவான காரியத்தையே செய்யும்படி வற்புறுத்துகின்றீர்; இனி நான் முடிவாகச்

சில வார்த்தைகள் கூறுகின்றேன்; அவற்றைக் கேட்ட பின்னராவது அவ்விஷபத்தை என்னிடம் தெரிவியாம லிருப்பீராக; முனிவர் பெருமானே! இப்பொழுது நான் சொல்லும் வார்த்தைகள் சத்தியமானவைகள்; அவ் வார்த்தைகளினின்றும் நான் சிறிதும் மாறுபடமாட்டேன்; இஃதுறுதி; ஐயனே! நீர் இப்போது என் கண்ணைக் கேட்டாலும் கொடுக்கின்றேன்; நான் ஆளுகின்ற உலகத்தைக் கேட்டாலும் செல்வத்துடனே சேர்த்து அதனைத் தருகின்றேன்; அந்த நீசப்பெண்களை மணஞ்செய்துகொள்வதற்கு மாத்திரம் ஒருபோது மிணங்கேன்," என்றுரைத்தான்.

அரசர்க்கரசனாகிய அரிச்சந்திரன் இவ்வாறு கூறவே விசுவாமித்திரர், 'சரி! சரி!! அரிச்சந்திரன் தன்னுடைய வார்த்தைகளினாலேயே நம்மிடம் அகப்பட்டுக்கொண்டான்; இவன் உலகத்தைக் கேட்டாலும் தருவதாகச் சொன்ன வார்த்தையையே உறுதிப்படுத்தி இவனுடைய அரசாட்சியைக் கைப்பற்றி இவனைப் பரதேசியாக்கிவிடலாம்," என்று தமக்குள்ளே மகிழ்ச்சியடைந்து, உடனே பரபரப்புடன் எழுந்து அம்மன்னனை நோக்கி, "அரிச்சந்திரா! நீ இப்பொழுது, 'அரசாட்சியைக் கேட்டாலும் தருவேன்,' என்று கூறியவார்த்தை உறுதிதானா," என்று வினவினார்; அதற்கு அரிச்சந்திரன், "சுவாமி! சந்திரசூரியர் திசைமாறிச் சென்றாலும் என்னுடைய வார்த்தை எள்ளளவும் மாறுபடமாட்டாது; நான் கூறியது முக்காலும் சத்தியமே," என்றான். இவ்வாறு சொன்னவுடனே விசுவாமித்திரர் அங்கம் பூரித்து, 'அரிச்சந்திரனால் ஆளப்படும் உலகமெல்லாம் இனி என்னுடையதே,' என்று சொல்லிச் சடைகள் புரளும்படி ஆனந்தக் கூத்தாடிப் பின்னர் அரிச்சந்திரனை நோக்கி, "செம்மையாகிய குணத்தையுடைய அரசனே! நீ சொன்ன வார்த்தையிற் பிசகமாட்டாயென்பது சத்தியமே; ஆதலால், நீ தெரிவித்தபடியே நான் உன்னுடைய அரசாட்சியைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்; இப்போது உன்வசமாயிருக்கின்ற வளம்பொருந்திய கோசலநாட்டையும், செல்வச்சிறப்பு மிகு

ந்த அயோத்திமா நகரத்தையும், அளவற்ற செல்வத்தையும் எனக்குக் கொடுப்பாயாக," என்று சொன்னார். இந்த வார்த்தைகள் அரிச்சந்திரனுடைய செவிகளிற் புகவே அவன் சிறிதும் மனங்கலங்காமல் முகமலர்ச்சியுடனே அவரை நோக்கி, "சுவாமி! தாம்கூறிய நீசப்பெண்களை நான் விவாகஞ்செய்து கொண்டு இவ் வரசாட்சியிலிருந்து எப்பொழுதும் நீங்காத இழிவடைவதைக் காட்டிலும், அவர்களை மணஞ் செய்யாமல் என் செல்வத்தை யெல்லாம் தமக்குக் கொடுத்து என்னுடைய இராச்சியத்தையும் உமக்குரிமையாக்கி என்றுமழியாப் புகழெய்துவது மிக்க நன்மையாம்; ஆதலால், என்னுடைய நாடு, நகரம், செல்வம் முதலிய எல்லாச் சிறப்புக்களையும் உமக்கே இப்பொழுது நான் கொடுத்துவிட்டேன்; நான் சொன்னசொற் றவறமாட்டேன்; இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!" என்று கூறினான்.

அப்பொழுது விசுவாமித்திரர் அம்மன்னன் திருமுகத்தை நோக்கி, "அரிச்சந்திரா! நீ எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டதாகச் சொன்னதற்காக மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்; ஆயினும், பெரிய அரசாட்சியையும் செல்வத்தையும் கொடுத்துவிட்டேனென்று வாயினாற் சொல்வது மாத்திரம் போதாது; வாய்ச்சொல்லினால் அவ்வாறு கொடுத்தது உறுதியாகமாட்டாது; ஆதலால் நீ, நாடு நகரம் செல்வம் முதலிய எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்லி என்கையில் நீயும், உன் மனைவியும், புத்திரனும் சம்மதித்துத் தாரை நீர் வார்க்கவேண்டும்; அப்படிச் செய்தால் மாத்திரந்தான் நீ சொன்ன வார்த்தை உறுதியாகும்," என்றுரைத்தார். அப்போது அரிச்சந்திரன், "சுவாமி! அப்படியே செய்கின்றேன்," என்றுசொல்லி உடனே பக்கத்திலுள்ள குளத்துநீரைக் கெண்டியில் மொண்டுகொண்டு வரும்படி சந்திரமதிக்குக் கட்டளையிட்டு அவள் அவ்வாறே கொண்டுவந்தவுடன் விசுவாமித்திரர் உள்ளங்கைக்குமேலே தன் உள்ளங்கையைச் சாய்த்துப் பிடித்துக் கெண்டியைச் சந்திரமதியும் தேவதாசனும் பற்றி அதிலுள்ள நீரைத் தன்

கைமேற் கவிழ்த்து வார்க்கும்படிச்செய்து, அந்நீரை விசுவாமித்திரர் கையிற்சொரிந்து விசுவாமித்திரரை நோக்கி, "முனிசிரேஷ்டரே! என்னால் இதுவரை ஆளப்பட்டுவந்த கோசல நாடு முழுமையும் இனி உம்முடையதே; சிறப்பு மிகுந்த அயோத்தியாபுரியும் உம்முடையதே; பொன்னாலாகிய தேர்களும் உம்முடையனவே; மிக்க வேகத்தையுடைய குதிரைகளும் உம்முடையனவே; வலிமிகுந்த யானைகளும் உம்முடையனவே; செல்வமும் உம்முடையதே; என்னிடத்திலே பணிவிடை செய்யும் பெண்களும் உமக்குச் சொந்தமானவர்களே; என்னுடைய சேனைகளும் உம்முடையனவே; இன்னும் எனக்குரிய எல்லாவற்றையும் மனப்பூர்வமாக உமக்குத் தானமாகக் கொடுத்துவிட்டேன்; இன்றுமுதல் என்னுடைய அரசை நீரே நடத்துவீராக; நான் எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துவிட்டதற் கறிகுறியாகவிடும் இந்தத் தாரை ஜலத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும்," என்று தாரை வார்த்தான்.

மேற்கூறியபடி அரிச்சந்திரன் சொல்லித் தாரை வார்த்த நீரை விசுவாமித்திரர் உள்ளங்கையிலே ஏற்றுக்கொண்ட பின்பு உடனே தம்மோடு கூடவந்த முனிவர்களை யழைத்து, "நீங்களெல்லோரும் நம்முடைய அரசு நீடூழி வாழும்படி வாழ்த்தி ஆனந்தகோஷ்டம் செய்வீராக," என்று கூறினர். அப்படி விசுவாமித்திரர் கூறவே அந்த முனிவர்களெல்லோரும், "விசுவாமித்திரரே! நீரும் உம்முடைய அரசும் நீடூழி வாழ்க," என்று பன்முறைவாழ்த்தி ஆனந்தகோஷ்டம் செய்தார்கள்; சடைகளை விரித்துக்கொண்டு சுழன்றாடினர்கள்; காவி வஸ்திரங்களைக் கையிலேகொண்டு வீசினர்கள்; 'நீரே உயர்ந்தவர்,' என்று விசுவாமித்திரரைக் கொண்டாடினர்கள்; விசுவாமித்திரர் திடீரென்று செல்வமுடையவரானதைப் பற்றி அவர்மீது மிக்க நேசங் கொண்டார்கள்; எப்பொழுதும் அடையாத சம்பத்தை அவர்களடைந்தபடியால் அவர்களுக்கு அப்போது உண்டான சந்தோஷத்திற் களவில்லை. இவ்வாறு எல்லா முனிவர்களும் ஆனந்தக் கூத்தாடியவுடனே

விசுவாமித்திரர் மீண்டும் அவர்களை நோக்கி, "முனிவர்களே! நீங்கள் இப்பொழுதே கோசலநாட்டின் ஊர்களிலும், அயோத்திமா நகரத்திலும் சென்று ஆங்காங்குள்ள மனிதர்களுக்கு, 'அரசாட்சி விசுவாமித்திரர் வசமாகிவிட்டது; இனி நீங்களெல்லோரும் அவரிடம் பகுதிசெலுத்தி அவருக்கடங்கி நடக்கவேண்டும்,' என்று தெரிவித்து எங்கும் தோரணங்களைக் கட்டிச் சிறப்புச்செய்வீராக," என்று சொன்னார். அப்படியே அவர்கள் கோசல நாட்டைச்சார்ந்த பல ஊர்களிலும் அயோத்தியிலும் சென்று, எல்லோரிடத்தும், "அரசாட்சிவிசுவாமித்திரருக்குச் சொந்தமாகிவிட்டது; இனியாவரும் அவருக்கடங்கி நடக்கவேண்டும்," என்று தெரிவித்து நாட்டைச்சார்ந்த ஒவ்வொரு ஊரின்வீதிகளிலும், அயோத்திமாநகரத்தின் வீதிகளிலும் அடிமையாட்களை ஏவி மிகுந்த அலங்காரங்களைச் செய்து பூரணகும்பங்களை வரிசையாக நிறைத்துத் தோரணங்களைக் கட்டும்படிச் செய்தார்கள். திடுமெனநேர்ந்த இச்செய்கையைக்கண்டு ஜனங்களெல்லோரும், "இஃதென்ன விபரீதகாலம்!" என்று அதிசயித்தார்கள்.

இஃதிப்படியிருக்க, மேற்கூறியபடி முனிவர்களையனுப்பியபின் விசுவாமித்திரர் பின்னும் வெற்றியைக்கொண்ட அரிச்சந்திரனுக்கும், அன்னம்போன்ற நடையையுடைய சந்திரமதிக்கு முன்னே போய்நின்று அரிச்சந்திரனை நோக்கி, "மன்னா! நீ எல்லாவற்றையும் தடையின்றி எனக்குக்கொடுத்ததைப்பற்றி மனமகிழ்ச்சியடைந்தேன்; நீ மகா தருமகுணசீலன்; நீ அரசாட்சியை எனக்குக்கொடுத்தது சரி; ஆயினும், அரசாள்வதற்குரிய சின்னங்கள் என்னிடத்தி லில்லாவிட்டால் நான் பூமியை ஆள்வதெப்படி? என்னை எவர் மதிப்பார்? ஆதலால், நீ அவற்றையும் எனக்குக் கொடுக்கவேண்டும்," என்று கேட்டார். அரிச்சந்திரன் அவரை நோக்கி, "சுவாமி! அவற்றைக் கொடுப்பதில் எள்ளளவும் தடையில்லை; இதோ அவற்றையும் கொடுக்கின்றேன்; மனமகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்ளும்," என்று முதலில் அரசனென்பதற்கு முக்கிய அறிகுறியாயமைந்தகணையாழியைக் கொடுத்து, அதன்மேல்

கிரீடம், குடை, சாமரம், கொடி, தோட்டி, சக்கரம், நிறைகுடம், யானை, இணைக்கயல், தோரணம், விளக்கு, கண்ணாடி, முரசு, வெற்றிமாலை, சங்கு, மகரம், ஆமை, சிங்கம், இடபம், கடல், மதில் முதலிய சின்னங்களையுங் கொடுத்து அவர் பாதங்களை வணங்கி, "சுவாமி! நீர் கேட்டபடியே அரச சின்னங்களையுங் கொடுத்தேன்; இனி அடியேனுக்கு விடை கொடுத்து என்னையனுப்பிவிட்டு நீர் அயோத்திக்குச்சென்று அரசுபுரியலாம்," என்று கூறினான். இவ்வாறு அரசசின்னங்களையும் கொடுத்து வணங்கிய அம்மன்னனை மிகவுங் கடின சித்த முடையவராகிய விவாமித்திரர் பின்னரும் விட்டுவிடாமல், அவனை நோக்கி, "அரசனே! நீ இன்னும் உன்னுடைய பொருள்களைப் பூரணமாக எனக்குக் கொடுக்கவில்லை; பேராசைகொண்டு சிலவற்றைத் தந்திரமாகக் கொண்டுபோகலாமென்று வைத்துக்கொண்டிருக்கிறாய்; இந்த எண்ணம் கூடாது; இது நீ வாக்களித்ததற்கு விரோதமாகும்; நீயும், உன் மனைவியும், புத்திரனும் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள் யாருக்குச் சொந்தமானவை? உன் அப்பனுடையவைகளா? பாட்டனுடையவைகளா? சீ! அவற்றையும் கழற்றி வைத்துவிட்டு அப்பாற் போகக்கடவாய்; கபடமாக அவற்றைக் கொண்டுபோகலாமென்று நினைத்தாயோ? திருடா! உன்னுடைய தந்திரம் என்னிடத்திற் செல்லாது; சீக்கிரம் எல்லா ஆபரணங்களையும் கழற்றிவை," என்று கோபித்துச் சொன்னார். அதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் மிகவும் மனங்கலங்கி, "சுவாமி! அரசாட்சியையே சம்மதத்தோடு கொடுத்துவிட்ட நான் இந்த அற்பமான நகைகளை அபகரிக்க விரும்புவேனா? இவற்றை நான் கபடமாகக் கொண்டு போகவேண்டுமென்று நினைக்கவில்லை; இவற்றையுங் கழற்றிக் கொடுக்கவேண்டு மென்பதை நான் மறந்துவிட்டேன்; ஆதலால், என்மீது தவறில்லை; என்னைப் பேராசைக்காரனென்று உம்முடைய வாக்கினாற் சொல்லலாகாது; இதோ எல்லா ஆபரணங்களையும் தருகின்றேன்; பெற்றுக்கொள்வீராக," என்று சொல்லி உடனே தன்னுடைய மார்பிலணியப்பட்டிருந்த இர

த்தினமாலை, தோள்களிலணியப்பட்டிருந்தமாணிக்ககேயூரங்கள், கைகளி லணியப்பட்டிருந்த கங்கணங்கள் முதலிய ஆபரணங்களையும், சந்திரமதி யணிந்திருந்த ஆபரணங்களையும், தேவதாசன் அணிந்திருந்த ஆபரணங்களையும் கழற்றி அந்த விசுவாமித்திரருக்கு முன்னேவைத்து, அவருடைய பாதங்களில்விழுந்து வணங்கி, "முனிசிரேஷ்டரே! இனிமேலாவது நான் போகும்படி எனக்கு விடைகொடுத்தருளும்," என்று பணிவோடு கூறினான். அதன்மேலும் விஷம்போன்ற மனத்தையுடைய அம்முனிவர் சிறிதும் இரங்காமல், "அரிச்சந்திரா! நீ ஆபரணங்களைக் கொடுத்தது சரி; இன்னும், நீயும், உன் மனைவியும், புத்திரனும் உயர்ந்த வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டிருக்கின்றீர்கள்; இவைகளோ உயர்ந்தவிலை பெறக் கூடியவைகள்; இவற்றை விட்டுவிட்டால் எனக்கு மிகவும் நஷ்டமாகும்; இவற்றை விற்றுப் பணத்தை வட்டிக்குக் கொடுத்தாலும் அப்பணம் தினந்தோறும் குட்டிப்போட்டுக் கொண்டுபோகும்; ஆதலால், இவ்வஸ்திரங்களை நீங்கள் கொண்டுபோவது தகாது; விரைவில் இவற்றையும் அவிழ்த்து வைத்துவிடுங்கள்," என்று கடினமாக வுரைத்தார்.

அப்போது அரிச்சந்திரன் அடங்காத் துயரடைந்து, "தெய்வமே! நான் யாருக்கு என்ன தீங்கைச் செய்தேன்; எனக்கு இத்தகைய பரிதாபமான நிலைமை வந்து வாய்த்ததே; எல்லாவற்றையுங் கொடுத்தும் திருப்தியடையாமல் இம்முனிவர் இப்போது கட்டியிருக்கின்ற வஸ்திரங்களையும் கேட்கின்றாரே; நாங்கள் வேறு வஸ்திரங்களைச் சம்பாதித்து உடுத்திக்கொண்டல்லவா இவ்வஸ்திரங்களைக் கொடுக்க வேண்டும்; அவ்வாறு செய்வதற்கு இக்காட்டில் எங்கே வஸ்திரங்கள் கிடைக்கும்? எவர் கொடுப்பவர்? எப்படியாவது இந்த ஆடைகளை யவிழ்த்துக்கொடுத்துத்தானே தீரவேண்டும்; நான் என் செய்வேன்; ஈசா! எனக்கொன்றும் தோற்றவில்லையே," என்று தலையி லடித்துக்கொண்டு உயிர் சோர்ந்து மனங் கலங்கிக் கண்ணீர் தாரைதாரையாக ஒழுக ஒன்றும் பேசாமல் மௌனமாக நின்றான். அதைக்கண்டு மிகவுங்

கொடியாகிய விசுவாமித்திரர், "அடா இந்திரஜால வித்தைகள் கற்ற தந்திரக்காரனே! மிகவும் பாசாங்கு செய்து கண்ணீர்விடுகின்றாய்; வேறு வஸ்திரம் கிடைக்கவில்லையென்று காரணஞ் சொல்லி என்னுடைய விலையுயர்ந்த வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டுபோகப் பார்க்கின்றாயோ; இந்தத் தந்திரத்தால் நான் ஏமாந்துபோகமாட்டேன்; இதோ உங்களுக்கு வேறு புனிதமான வஸ்திரங்கள் தருகின்றேன்; அவற்றை உடுத்திக்கொண்டு என்னுடைய பணம் பெற்ற வஸ்திரங்களை அவிழ்த்து வைத்துவிட்டு அப்பாற் செல்லுங்கள்," என்று கூறித் தாம் அரையி லுடுத்திருந்த காவி வஸ்திரத்தில் ஒரு துண்டு கிழித்து அதனை மூன்று துண்டுகளாகக். கிழித்து அரிச்சந்திரனுக்கொன்றும், சந்திரமதிக்கொன்றும், தேவதாசனுக்கொன்றும் கொடுத்தார். அம்மூவரும் ஒன்றும் பேசாமல், "எல்லாம் தலைவிதிப்படியே நடக்கும்," என்று சிலைப்பேன் பிடித்து நாற்றமிகுந்து பழமையான அவ்வஸ்திரங்களை வாங்கி யுடுத்திக்கொண்டு தாங்கள் முன் கட்டியிருந்த ஆடைகளைக் கொண்டுவந்து அவருக்கு முன்னே வைத்தார்கள். அப்போது அவர்களுடைய கோலத்தை மந்திரி முதலியவர்களும், படைத்தலைவர்களும், மற்ற மனிதர்களும் பார்த்து, "நம்மிறைவனுக்கும் இத்தகைய கேடு சம்பவிக்கலாமோ," என்று மனங் கலங்கி மிகவும் முகவாட்டத்தை யடைந்து கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றார்கள்.

அப்படி எல்லோரும் கலங்கி நிற்கும்போது மேற்கூறியபடி அழுக்கும் சிலைப்பேனும் நிறைந்த காவிவஸ்திரத்தைத் தரித்துக்கொண்ட அரிச்சந்திரன் விசுவாமித்திருக்கு முன்னே பூமியில் விழுந்து நமஸ்கரித்து அவருடைய இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டு, "சுவாமி! இனியாவது எனக்கு விடை கொடுத்தருளவேண்டும்," என்று கேட்டான். அவ்வாறு கேட்கவே விசுவாமித்திரர், முன்னே தாம் யாகத்திற்கு அவனிடம் பெற்று அவனிடமே வைத்துச் சென்ற பொருளைக் கேட்டு வருத்த நினைத்து, "இப்

போது இந்த அரிச்சந்திரன் தன் கையிலொன்றுமில்லாமல் எல்லாவற்றையும் நம்மிடம் கொடுத்துவிட்டான்; இனிமேல் நாம் முன்னே கொடுத்துவைத்த திரவியத்தைக் கொடு வென்று கேட்டால் இவன் அப்பொருள் திரவியசாலையி லிருக்கிறதென்றும், அங்குப் போய் அதனை எடுத்துக் கொள்ளுமென்றும் தெரிவிப்பான்; அவ்வாறு தெரிவிக்கும் போது நாம், 'நீ அயோத்தியிலுள்ள எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேனென்று தாரை வார்த்தபடியால் அப் பொருளும் அந்த தானத்திற்குள்ளடங்கி எனக்குச் சொந்த மாகிவிட்டது; இனி நீ உன் கையிலிருந்து எனக்கு அப் பொருளைக் கொடுக்கவேண்டும்,' என்று சாதித்து இவனை நம்மிடம் கடன்பட்டவனாக்கி அக்கடனுக்காக வருத்தி அதன் மூலம் எப்படியாவது பொய் கூறும்படிச் செய்து நம்முடைய சபதத்தை நிறைவேற்றவேண்டும்; ஆயினும், இவன் இச்சம யம் அதிக துன்பத்தை யடைந்திருப்பதால் இப்பொழுதே அதைக் கேட்டால் பெருங் கலக்கத்தை யடைவான்; ஆத லால், இவன் மனக்கலக்கம் சிறிது சாந்தியடையும்படி விடை கொடுத்து இவனை யனுப்பிச் சிறிது தூரம் சென்ற வுடன் மீண்டும் அழைத்து அந்தத் திரவியத்தை இவனிடம் கேட்கவேண்டும்," என்று தீர்மானித்து, வஞ்சனை பொருந் திய மனத்துடன் அந்த மகா புண்ணியசீலனாகிய அரிச்சந் திரமகாராஜனை நோக்கி, "அரசனே! மிகவும் சந்தோஷ மாயிற்று; இனி நீ உன்னிஷ்டம்போல் எவ்விடத்திற்கும் செல்லலாம்," என்று உத்தரவளித்தார்.

அவர் அவ்வாறு உத்தரவு கொடுக்கவே அரிச்சந்திரன் "எல்லாச் சங்கடமும் ஒழிந்தது; இனி ஒன்றுமில்லை; நாம் நம்மனைவி மைந்தனுடன் எங்கேனும் சென்றுவசித்து வாழ் நாளைக் கழிக்கலாம்," என்று மனத்திருப்தியோடு சந்திரமதி யும், தேவதாசனும் பின் தொடரச் சிறிது தூரம் சென்றான். அப்படிச் செல்லவே விசுவாமித்திரர், தாம்முன்னே ஆலோ சித்தபடியே செய்யக்கருதி, "அரிச்சந்திரா! இங்கேவா!! இங்கேவா!!! ஒருமுக்கியமான விஷயத்தை மறந்துவிட்

டேன்," என்று கூவிபழைத்தார். அவர் இவ்வாறு கூவியழைத்த சப்தம் செவியிற் புகுந்தவுடனே அரிச்சந்திரன் இடியோலி கேட்ட நாகம்போலத் திடுக்கிட்டு, "அந்தோ! முனிவர் மீண்டும் அழைக்கின்றாரே; இன்னும் என்ன கலக்கத்தையுண்டாக்க நினைத்தழைக்கின்றாரோ ஒன்றும் தெரியவில்லையே," என்று மனம் பதறி உடனே திரும்பி அவர்சமீபத்தில் வந்து, "சுவாமி! என்ன விசேஷம்? எதற்காக என்னையழைத்தீர்கள்? இன்னும் நான் கொடுக்கத்தக்கது யாது? தம்முடையஎண்ணம்இன்னதென்பதைஎனக்கறிவித்தால்அதன்படியே நடக்கின்றேன்," என்று தாழ்மையோடு கூறினான். அப்போது விசுவாமித்திரர் அம் மன்னனுடைய திருமுகத்தை நோக்கி, "சிவந்த தேன்பாய்வதான குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருநாட்டையுடைய அரசனே! நீ எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டாய்; என்னிடத்திற் கொடுத்த பொருள்களில் இனிமேல் உனக்கொன்றும் சொந்தமில்லை; நான் முன்னே யாகத்திற்காக வாங்கி உன்னிடத்தில் வைத்த பொருளெங்கே? அதைக் கொடுத்துவிட்டல்லவா நீ போகவேண்டும்; நான் முந்தியே அதைக் கேட்க மறந்துவிட்டேன்; நான் அவ்வாறு மறந்துவிட்டாலும் நீ மோசஎண்ணங்கொண்டு பேசாமற் செல்லலாமா? இவ்வித மோசக்காரனை நான் எங்கும் கண்டதில்லை; ஆகலால், இப்பொழுதே அப்பொருளைக் கொடுத்துவிட்டு அப்பாற் செல்," என்று கூறி அவனுடைய பயணத்தைத் தடை செய்தார்.

விசுவாமித்திரர் இவ்வாறு தடைசெய்தவுடனே அரிச்சந்திரன் பெருங்கலக்கத்தை யடைந்து," அந்தோ! இஃதென்ன கஷ்டகாலம் நேர்ந்தது," என்று புண்பட்டமனத்துடன் அவரை நோக்கி, "எல்லா நீதிகளையுமுணர்ந்த முனிவரே! நான் முந்தியே அந்தப் பொருளை உமக்குக் கொடுத்துவிட்டேன்; நீர் அக்காலத்தில் அதனை உம்முடைய பொருளாக என்னுடைய பொக்கிஷசாலையி லிருக்கும்படி வைத்துச் சென்றீர்; அவ்வாறு வைத்திருந்தாலும் அது உம்முடைய பொருளேயன்றிஎன்னுடையபொருளன்று; ஆதலால், எனக்

குரிய பொருள்கள்மாத்திரம் இப்போது நான்செய்த தானத்திற் சேருமேயன்றி அப்பொருள் சேராது; நீர் வைத்தபடியே அந்தத் திரவியம் அரண்மனையி லிருக்கின்றது; தயவு செய்து என்னைத் துன்பப்படுத்தாமல் அதனை எடுத்துக்கொள்வீராக," என்று நீதியோடு கூறினன். அதற்கு விசுவாமித்திரர் நகைத்து, "அரிச்சந்திரா! இந்த மோசச் செய்கை எங்குக் கற்றாயோ நானறியேன்; நீ பேசும் வார்த்தைகளெல்லாம் நீதிக்கு விரோதமானவைகளா யிருக்கின்றன; நான் எப்போது என் பொருளை உன்னிடங் கொடுத்தேனோ அப்போதே அஃது உன்வசமாகிவிட்டது; பின்னர் நீ எனக்கு அதனைக் கொடுத்தால் மாத்திரம் அஃதென் கைவசமாகும்; அவ்வாறு நீ கொடுக்ும்வரை நீ என்னிடம் கடன் பெற்றுக்கொண்டவன்போலாவாய்; உன் கைவசப்பட்டது என்னுடைய திரவியமா யிருந்தாலும் எனக்குக் கொடுக்கும்வரையில் அதனை உன்னிஷ்டம்போற் செலவு செய்யலாம்; நான் கேட்கும்போது மாத்திரம் நான் எவ்வளவு தொகை கொடுத்தேனோ அவ்வளவு தொகையைக் கொடுக்க நீ கடமைப்பட்டிருக்கின்றாய்; நான் கொடுத்ததை அப்படியே வைத்திருந்து கொடுக்க வேண்டுமென்னும் அவசியமுமில்லை; அதற்கிடாக வேறு பொருளையும் தரலாம்; ஆதலால், மேற்கூறியபடி என்பொருளும் உன் கைவசமாகி யிருக்கும்போது நீ அதை விலக்காமல், "என்னிடமுள்ள யாவும் உமக்குச் சொந்தமாம்," என்று சொல்லித் தாரைவார்த்தபடியால் நான் கொடுத்து வைத்திருந்த பொருளும் உன் சொந்தப் பொருள்போலாகி எனக்குத் தானப் பொருளாகச் சேர்ந்துவிட்டது; இனிமேல் அதில் உனக்கு எள்ளளவும் பாத்தியமில்லை; அது நான் கொடுத்துவைத்த பொருளுமாகாது; 'அது உம்முடைய பொருளாகவே தானத்திற் சேராமல் விலகி உம்மிடம் சேர்ந்துவிட்டது,' என்று நீ சொல்வது சிறிதும் நியாயமாகாது; நீ தாரைவார்க்குங்காலத்தில், 'நீர் கொடுத்துவைத்த பொருளன்றி மற்றவை யெல்லாம் உமக்குச் சொந்தம்,' என்று சொல்லியிருந்தால் மாத்திரம் அப்பொருள் நீ எனக்குக் கொ

டுத்தற் குரியதாய்த் தானத்திற் சேர்ந்திருக்கும்; இப்போது நான், நீ அப்பொருளைக் கொடுத்துவிட்டதாக நினைத்துக் கைப்பற்றிக் கொள்வேன்; நீ அவ்வாறு விலக்கிச் சொல்லாமல் தாரை வார்த்தபடியால் அப்பொருள் உனக்கும் சொந்தமில்லாமல் எனக்கும் உரியதாகாமல் தானத்திற் சேர்ந்துவிட்டது; இனி மறுவார்த்தை பேசாமல் நீ எனக்கு அந்தத் திரவியத்தைக் கொடுத்து விட்டுத்தான் போக வேண்டும்; இது நியாயமான காரியமாகும்; இதனை அனியாய மென்று சொல்லுதல் எவராலு முடியாது; இது நியாய மென்பதற்கு ஒருதாரணங் கூறுகின்றேன் கேள்: ஒரு மனிதனிடத்தில் மற்றொருவன் ஒரு பொருளை அடைக்கலமாக வைத்திருக்கும்போது அப்பொருள் திருடர் கைவசப்பட்டுப் போய் விட்டால் முன் கொடுத்தவனுக்கு அந்தப் பொருளுக் கீடான பொருளைக் கொடுக்க அடைக்கலம் பெற்றவன் கடமைப் பட்டவனாவானா ஆகமாட்டானா? அவன் கடமைப்பட்டவனே யாவான்; இஃது உலகவியற்கை; இதுபோலவே நான் கொடுத்த பொருளும் தானத்திற் சேர்ந்து சோரம்போனது போலப் போய்விட்டபடியால் அதற்கீடாக வேறு பொருளை எனக்கு நீ கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றாய். ஆதலால் அதனை நீ கொடுத்துத்தான் தீரவேண்டும்; புத்தியில்லாதவனே! என்னை ஏமாற்றப்பார்க்கின்றாயோ; உனதெண்ணம் நிறைவேறமாட்டாது; நன்றாக ஆலோசித்துப் பார்த்து இது நியாயமென்று தெளிந்து என் பொருளைக் கொடுப்பதற்கு வழிதேடு; சூரியகுலத்தரசர்கள் சொன்ன வார்த்தை பிசகமாட்டார்களென்பது உலகறிந்த விஷயம்; அப்படியிருக்க நீ சொன்ன வார்த்தை தவறிப் பேசுகின்றாய்; இஃது உனக்குத் தகாது; சீக்கிரம் என் பணத்தைக் கொடுத்துவிடு; பணமோ ஒவ்வொரு நிமிஷத்துக்கும் ஊற்றுச்சுரப்பதுபோல வட்டி பெருகிக்கொண்டுபோகக் கூடியது; ஆதலால், ஒரு நிமிஷ நேரமாவது உன்னிடம் என் பணமிருந்தால் எவ்வளவோ வட்டி அதிகரித்துவிடும்; வீணே வட்டி நஷ்டமாகாமல் இப்பொழுதே அப்பொருளைக் கொடுத்துவிடு," என்று கூறினர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் மிகவும் மனம் நொந்து, "ஐயோ! இனிமேல் ஒன்றுமில்லை; எங்கேனும் சென்று பிழைக்கலா மென்றல்லவா நினைத்தோம்; இப்போது இவருக்குக் கடன்கொடுக்க வேண்டியதாக நேர்ந்துவிட்டதே; நான் இவர் கேட்கும் திரவியத்தை எங்கே தேடிக் கொடுப்பேன்; கையி லொன்றுமில்லாத வறிஞனு யிருக்கின்றேனே," என்று பலவாறு கலங்கிப் பின்னர் விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! என்னை மோசக்காரனென்று நிந்திக்கவேண்டாம்; தாம் கூறுகிற நியாயப்படி நான் தமக்கு அந்தத் திரவியத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டே யிருக்கின்றேன்; நான் இப்படி நேருமென்று நினைக்கவேயில்லை; தாம் என்னிடம் வைத்தபொருள் நான்செய்த தானத்திற் சேரவில்லை யென்றும், அதை நீர் பிரத்தியேகமாக எடுத்துக் கொள்வீரென்றும் நினைத்தேன்; இவ்வாறு வருமென்று தெரிந்திருந்தால், நான் அதை விலக்கி மற்றப் பொருள்களை மாத்திரம் குறிப்பிட்டுத் தாரைவார்த்திருப்பேன்; அறியாமையால் இக்கடன் எனக்கு நேர்ந்துவிட்டது; ஆதலால், அதை எப்படியாவது கொடுத்துவிடுவேன்; ஆயினும், நீர் அப்பொருளை இப்பொழுதே கொடுக்கவேண்டுமென்று கேட்பது தகாது; நீர் அவ்விதம் பிடிவாதமாகக் கேட்டால், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்து அடிக்கடியுண்டாகும் உம்முடைய கோபக்கொடுமையால் நினைவு தடுமாறிப் பயித்தியம் பிடித்தவன்போன்றிருக்கும் நான் எவ்வாறு அப்பொருளைக் கொடுப்பேன்? எங்கே தேடுவேன்? எனக்கெவர் கொடுப்பவர்? என்கையிலென்ன விருக்கின்றது? நீர் எனக்கிப்போது எவ்வளவு துன்பத்தைச் செய்யினும் கடன் கொடுப்பதற்கு வகை யொன்றுமில்லை; இந்த ஏழை மீது கிருபைசெய்து ஒரு தவணையை யேற்படுத்தினால் அதற்குள் நான் எவருக்கும் விலைப்பட்டாவது அந்தப் பொருளைக் கொடுத்துவிடுவேன்; எல்லாமுணர்ந்த தேவரீருக்குந் தெரியாத தொன்றுமில்லை," என்று சொல்லித் தவணை கொடுக்கும்படி அவரை வேண்டினன். அவ்வாறு வேண்டியும் கல்

லைப்போன்ற மனமுடையவராகிய அந்த விசுவாமித்திரர் சிறிதும் மனமிளகாமல், அரிச்சந்திரனைக் கோபத்தோடு பார்த்து, "அடா முழுமோசக்காரனே! உனக்குத் தவணை கொடுத்து உன்னை விட்டுவிட்டால் நீ எங்கேனும் ஓடி மறைந்துகொள்வாய்; பின்பு உன்னைக் கண்டு பணம் வாங்குவ தரிதாகும்; ஆதலால், இப்போது நான் உன்னோடு கூடவே வந்து தவணைநாளில் உன்னிடம் பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்; அவ்வாறு பெற்றுக்கொள்ளும்வரையில், நீ செல்லும் நகரங்களிலும், நாடுகளிலும், மலைகளிலும், காடுகளிலும் நானும் திரிந்து அலையவேண்டும்; அப்படித் திரிந்தலைவதற்கு நானென்ன வேலையற்ற வீணனா? எனக்கு இராஜ காரியங்களில்லையா? அது முடியாது! முடியாது!! ஒருநாளும் தவணை கொடுக்கமாட்டேன்; நீ இப்பொழுது பொருளைக் கொடுத்துவிட்டுத்தான் போகவேண்டும்; கடனைக்கொடாமல் அப்பாற் போகக்கூடாது" என்று அவனைச் சுற்றிலும் கோடு கீறி அதற்குள் நிறுத்தித் தடைசெய்தார்.

அங்ஙனம் தடைசெய்யவே அரிச்சந்திரன் அவ் வாணையைக் கடவாமல் அக்கோட்டிற்குள் நின்று விசுவாமித்திரரை வணங்கி அவருடைய பாதங்களைச் சிரசின்மேற் சூட்டிக்கொண்டு, ஒருவனுக்குக் கக்குகல்வந்தபோது மற்றொருவன் வந்து அவனுடைய தொண்டையைப் பிடித்துக்கொண்டால் அவனுக்கு எப்படி விக்கலும் பொருமலு முண்டாகுமோ அவ்விதமே விக்கலும் பொருமலும் மேலுமேலுந் தோன்றக் கண்ணீர் சொரிந்து வாயிலூறுகின்ற நீரும் வற்றிப்போக நாவுலர்ந்து அம்முனிவரை நோக்கி, "சுவாமி! 'அரசாட்சியைக் கொடுத்துவிட்டால் நீ செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்கிறேன்,' என்று முன்னே நீர் கூறியபடியே மனத்திருப்தியுடனே நான் என்னுடைய அரசாட்சியைக் கொடுத்துச் சென்றேன்; மீண்டும் அழைத்துக் கடன் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தீர்; அதையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன்; அவ்வாறு ஒப்புக்கொண்ட நான் தவணை கேட்டால் மறுக்கின்றீர்; இது தருமமாகாது; உம்

முடைய இச்சைப்படியெல்லாம் நடந்த எனக்குத் தவணை கொடுத்து என் மனவேதனையை அகற்றலாகாதா? எப்படியாவது இந்த ஏழைக்கிரங்கித் தவணை கொடுக்கத்தான் வேண்டும்; அவ்வாறு தவணை கொடுத்துவிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நீர் என்னோடுகூட வரவேண்டிய அவசியமில்லை; உம்மைச் சார்ந்தவர்களில் எவரேனு மொருவரை அனுப்பினல் அவரிடம் தடையின்றித் தவணைப்படியே பணத்தைக் கொடுத்துவிடுகின்றேன்; நீர் இவ்வாறு செய்வீரானுல் உமக்கு மிக்க புகழுண்டாய்; புண்ணியமும் அதிகரிக்கும்; இன்னும் என்னுடைய விருப்பத்தின்படி தவணை கொடுக்காமல் நீர் மறுத்து இப்பொழுதே பணத்தைக் கொடுக்கும்படி என்னை வருத்தினல் நான் எவ்விடத்திற் சென்று சிக்கிரமாகப் பணம் தேடிக் கொடுப்பேன்? பக்கத்தில் எங்கேனும் சென்று பொருளைத் தேடிக்கொடுக்கலா மென்ருல் சுற்றிலுமுள்ள காடுகளும் வனங்களும் சூழ்ந்த ஊர்களெல்லாம் உம்மைச் சார்ந்தவைகளா யிருக்கின்றன; அவற்றில் நான் பணந் தேடினல் அப்பணமுழுதும் உம்முடையதே யாகுமாதலால் கடன் தீர்ப்பதற்குதவாது; ஆதலால், உம்மைச்சாராத வெளி நாடுகளிற் சென்றே பணம் சம்பாதிக்கவேண்டும்; அதற்காகவே உம்மிடம் தவணை கேட்கின்றேன்; இவ்விஷயத்தை நீர் நன்ருக ஆலோசித்து இது நியாயமென்று தோன்றினல் எனக்குத் தவணையுங்கொடுத்து நான் பொருள் தேடவேண்டிய இடத்தையுஞ் சொல்லி என்னை யனுப்பும்; இல்லையேல் என் கடன் தீர்வதற்கு வேறு ஏதேனுமொரு மார்க்கத்தை நீரே காட்டும்; அப்படிச் செய்யாமல் என்னைத் துன்பப்படுத்துவதால் பயனென்றுமில்லை; இதற்குமேல் எனக்கொன்றும் சொல்லத் தெரியாது; இனி நீர் என்ன கட்டளை யிடுகின்றீரோ அதன்படியே நடக்கின்றேன்,'' என்று சொன்னுன்.

இவற்றை யெல்லாம் விசுவாமித்திரர் கேட்டு, "நாம் இவனை மிகவும் கஷ்டத்திற் குள்ளாக்கி முடிவில் இந்த நாட்டைவிட்டு வேறு நாட்டிற்குப் போகும்படி துரத்திவிட வேண்டுமென்றே நினைத்திருந்தோம்; இப்பொழுது இவனை

வேறு நாட்டிற்குச் சென்று பொருள்தேட வேண்டுமென்று கூறுகின்றான்; ஆதலால், இனி இவனுக்குத் தவணை கொடுத்துவிடுவதே நலம்," என்று ஆலோசித்துப் பின்னர் அரிச்சந்திரனை நோக்கி, "திரிசங்குபுத்திரா! நீ கடனுக்காக இந்த நாட்டிற் பொருள்தேடக் கூடாதென்று உன்னிடம் நான் தெரிவிக்கக் கருதியிருந்தேன்; அதற்கிணங்க நீயே இப்போது அன்னிய நாடு சென்று பணந்தேடித் தருகிறேனென்று சொல்வதாலும், மிகவும் வருத்தத்தை யடைவதாலும் உன்மீ திரக்கங்கொண்டு இப்போது உனக்குத் தவணையுங் கொடுத்து நீ பொருள் தேடத்தக்க இடத்தையும் தெரிவிக்கின்றேன்; ஏமகூட பர்வதமும் காசியும் நீங்கலாக அவற்றிற்கிப்பாலுள்ள ஊர்களெல்லாம் உன்னால் எனக்குக் கொடுக்கப்பட்டவைகள்; ஆதலால், நீ இந்த வூர்களில் பொருள் தேடாமல் இவற்றிற் கப்பாற்சென்று அங்குள்ள நாடுகளில் பொருள் சம்பாதித்துக் கொடுப்பாயாக; நீ இவ்வாறு செய்வது உறுதியாயிருந்தால் உன் விருப்பப்படியே தவணையும் பெற்றுக்கொள்; அப்படி நீ தவணையைப் பெற்றுக்கொண்டு சென்றும் பணங் கொடுக்கத் தவறிவிட்டால் என்ன செய்கிறது; நீ தவறாமற் கொடுத்துவிடுவாயா? அங்ஙனம் கொடுக்கத் தவறினால் நீ என்ன பாவத்திற் குள்ளாவாய்? அதையும் தெரிவித்து எனக்குறுதி சொல்லிவிடு," என்று கூறினர். அரிச்சந்திரன் இந்த வார்த்தைகளைக் கேட்டு, "சுவாமி! நான் உமக்களிக்கும் வாக்கினின்றும் எள்ளளவுந் தவறமாட்டேன்; அவ்வாறு தவறும் பக்ஷத்தில், பதிவிரதா தர்மந்தவறாது இல்லறநடத்திக்கணவனுக்குமிக்கபுகழையுண்டாக்கும் ஒரு உத்தமியை இச்சித்து இல்லறதர்மந்தவறிய பாவி என்ன கதியைபடைவானோ அக்கதியையானடைவேன்; இது சத்தியம்; குற்றமில்லாத பெரிய தவத்தையுடைய முனிவரே! இன்னுங் கேளும்; உம்முடைய எல்லைக்கப்பாலுள்ள தேசங்களில் காசிதேசமே செல்வத்திற் சிறந்தது; அதுவே நான் பணஞ் சம்பாதித்தற்குத் தகுதியான விடமாகத் தெரிகின்றது; ஆதலின், நீர் தவணை கொடுத்தால் அந்தக் கெடுவுக்குள் மேற்

கூறிய காசிநகரஞ் சென்று அங்குச் சேர்ந்த அப்பொழுதே உம்முடைய பொருளைக் கொடுத்துவிடுவேன்; 'இத்தனை நாட்களில் பொருள் கொடுக்கவேண்டும்,' என்று ஒரு தவணை ஏற்படுத்துவீராக," என்று வேண்டினான். அதற்கு அவர், "அரிச்சந்திரா! நீ இருபது நாட்களுக்குள் காசிநகரஞ் சென்று பணத்தைக் கொடுத்துவிடு," என்று தெரிவித்தார்.

அவ்வாறு கூறவே அரிச்சந்திரன், விசுவாமித்திரரை நோக்கி, "முனிவர் பெருமானே! அந்தக் காசிநகரத்திற்குப் போய்ச் சேர்வதற்கு மாத்திரம் நாற்பது தினங்களுக்கு மேற் செல்லும்; அப்படி யிருக்கத் தாம் இருபது நாட்கள் தவணையாகக் கொடுத்தால் நான் அந்த நாட்களுக்குள் என்ன செய்யமுடியும்? நன்றாக யோசித்து இன்னும் சிலநாட்கள் அதிகமாகக் கொடுப்பீரானால் நன்மையாயிருக்கும்," என்று சொல்ல, விசுவாமித்திரர், "அப்படியானால் என்மேல் ஒரு குற்றமு மில்லாமல் நாற்பத்தெட்டு நாட்களைத் தவணையாகக் கொடுத்தேன்; இந்த தினங்களுக் குள்ளாவது நீ பணத்தைச் செலுத்திவிடு; இந்தத் தவணைக்குள் நீ செலுத்தாவிட்டால், அஃது உன் குற்றமாகவே முடியும்," என்று கூறினார். பின்னர் அரிச்சந்திரன் இந்தத் தவணைக்குச் சம்மதித்து, அந்த விசுவாமித்திரர் பாதங்களில் விழுந்து வணங்கி, "சுவாமி! இந்த நாற்பத்தெட்டு நாட்களுக்குள் நான் தவறாமல் கடனைக் கொடுத்துவிடுவேன்; நான் இப்பொழுதே காசி நகரஞ் செல்கின்றேன்; நீர் பின்னே என்னிடம் வந்து சேரும்படி ஒரு ஆளை யனுப்பும்; அந்த ஆள் வரும்வரை நான் நடுவழியில் ஓரிடத்திற் றங்கி யிருக்கின்றேன்," என்று சொல்லி முடிவாக அவரிடம் விடைபெற்றுக்கொண்டு நடந்தான்.

அரிச்சந்திரன் தாரை வார்த்தபடி அரசாட்சியை
விசுவாமித்திரரிடம் நேரில் ஒப்புவித்துத் தன்னுடைய
பொருள்களையும் அவர் வசப்படுத்துவதற்குக்
காட்டிலிருந்து அவருடன் அயோத்திக்குச் செல்லல்.

மேற்கூறியபடி அரிச்சந்திரன் விசுவாமித்திரரிடம் விடை பெற்றுக்கொண்டு சிறிது தூரம் நடந்து செல்லும்

போது மீண்டும் அந்த விசுவாமித்திரர், "அரிச்சந்திரா! இங்கேவா! வா!! இன்னுமொரு விஷய மிருக்கின்றது," என்று கூப்பிட்டார். அவ்வாறு அழைத்தவுடனே அரிச்சந்திரன், "ஐயோ! இன்னும் என்ன பேரிடி என் தலைமேல் விழப்போகிறதோ; முனிவர் மீண்டும் அழைக்கின்றாரே; என்ன துன்பம் விளையுமோ தெரியவில்லையே," என்று நடுக்கங்கொண்டு விரைவாக மீண்டுவந்து அவரை வணங்கி, "முனிசிரேஷ்டரே! எல்லா விஷயங்களும் முடிந்து விட்டனவே; மறுபடியும் எதற்காக அழைத்தீர்? இன்னும் அடியேனால் ஆகவேண்டிய காரிய மியாது? அதைத் தெரிவித்தால் உடனே செய்கின்றேன்," என்று கூறினான். அப்படிச் சொல்லவே விசுவாமித்திரர், "அரிச்சந்திரா! விசேஷமான காரிய மொன்றுமில்லை; நீ, 'என்ன விளையுமோ,' என்று அஞ்சவேண்டாம்; இனி நீ செய்ய வேண்டியது ஒரு சிறிய வேலைதான்; அதை நீ செய்தால் மாத்திரந்தான் என்னுடைய மனம் திருப்தியாகும்; அஃதியாதெனில், நீ எனக்கு எல்லாவற்றையும் தாரை வார்த்துக் கொடுத்தது சரியே; ஆயினும், இப்போது நான் மாத்திரம் அயோத்திக்குச் சென்று அரசாளத் தொடங்கினால், அங்குள்ள உன்னுடைய ஊழியக்காரர்களெல்லாரும் என்னை வெறுத்து, "பரதேசிப் பையலே! உனக்கிந்த இராஜ்ஜியத்தை எவர் கொடுத்தவர்? காட்டில் இரிந்தலையும் நீ நாட்டையாளுதல் தகுமோ?" என்று நிந்தித்துப் பேசி அடித்துத் துரத்திவிடுவார்கள்; அவர்கள் அவ்வாறு செய்யின் பரதேசியாகிய என்னால் என்ன செய்ய முடியும்; நீயே அவ்விதம் செய்யும்படி அவர்களிடம் ஓர் ஆளை யனுப்பித் தூண்டிவிடும்படி செய்திருந்தாலும் செய்திருப்பாய்; உனக்கு என்மீது அதிகப் பகை ஏற்பட்டிருக்கின்றது; அதை நினைக்கும்போது எனக்கு அயோத்திக்குச் செல்வதற்கு மிகவும் பயங்கரமா யிருக்கிறது; ஆதலால், நீ என்னோடு கூடவந்து அயோத்தியிலுள்ள எல்லாப் பொருள்களையும் எனக்குக்காட்டிப் பின்னர் என்னைச் சிம்மாசனத்தேற்றி என் சிரசில் கிரீடஞ் சூட்டி எனக்கு இராஜ்ஜிய

பட்டாபிஷேகமும் செய்து எல்லோரும் என்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி அங்குள்ளவர்களிடத்தில் தெரிவித்துவிட்டு அதன் பின்னரே காசிக்குச் செல்ல வேண்டும்; இவ்விதம் செய்ய உனக் கிஷ்டமில்லாவிடின் எனக்குக்கொடுத்த இராஜ்ஜியத்தை நீயே எடுத்துக்கொண்டு "நான் உமக்கு இராஜ்ஜியம் கொடுக்கவில்லை," என்று ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லிவிடு; நான் இப்பொழுதே காட்டிற் கோடி என்னுயிரைக் காப்பாற்றிக் கொள்கின்றேன்," என்று கூறினர்.

இந்த வார்த்தைகள் செவிகளுட் புகுந்தவுடனே அரிச்சந்திரன் 'சிவ! சிவா!' என்று செவிகளை மூடிக்கொண்டு விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! என்ன வார்த்தைகளைக் கூறினீர்கள்! நான் மனமொப்பி அரசாட்சியைக் கொடுத்துவிட்டுப் பின்னர் இல்லையென்று சொல்வேனே? உமக்குத் துன்பஞ்செய்யும்படி அயோத்தியிலுள்ளவர்களைத் தூண்டிவிடுவேனே? உம்மால் எனக்கொரு தீங்கும் நேரவில்லையே; நீர் செய்தவைகளெல்லாம் நியாயமான விஷயங்கள்தாமே; அப்படியிருக்க நான் எதற்காக உம்மீது பகை கொள்ளப் போகின்றேன்; நீர் எனக்கிதமே செய்யாமல் ஆயுள்வரை துன்பங்களையே செய்துவந்தாலும்நான் எள்ளளவும் வெறுப்படையமாட்டேன்; உம்மை என்னுடைய குலதெய்வமென்றே கருதுவேன்; நீர் தாமதிக்காமல் இப்பொழுதே அயோத்திக்குப் புறப்படும்; அடியேனும் உம்முடன் வந்து உம்முடைய விருப்பத்தின்படியே எல்லாக் காரியங்களையும் நடத்திவிட்டுச் செல்கின்றேன்," என்றுரைத்தான்.

அவ்வாறு கூறவே விசுவாமித்திரர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, அரிச்சந்திரனைப் பார்த்து, "திரிசங்கு புத்திரா! நீ மிகவும் நல்லவன்! நல்லவன்!! இதோ உன் சொற்படியே அயோத்திக்குப் புறப்படுகின்றேன்; நீயும் பின் தொடர்ந்து வரக்கடவாய்," என்று சொல்லி உடனேயெழுந்து முன்னே அரிச்சந்திரன் ஏறிவந்த தேர்மேலேறிப் புறப்பட்டார்; அவ

ரால் முன்னே நாட்டிற்கனுப்பப்பட்ட முனிவர்கள் தவிர அவரோடு கூடவிருந்த மற்ற முனிவர்க ளெல்லோரும் யானைகளின்மேலும், குதிரைகளின்மேலும் ஏறிப் புறப்பட்டார்கள்; சேனைகளெல்லாம் அவர்களுக்குப் பின்னே சென்றன; யுத்த சாமார்த்தியத்தை யுடைய அரிச்சந்திரனும் சந்திரமதியும், தேவதாசனும் அவர்களுடைய கெட்ட காலத்தால் அந்தச் சேனைகளுக்கு நடுவே மண்மீது கால்நடையாக நடந்து கால்களிற் பல முட்கள் பாயவும், பாற்கற்க ளழுத்தவும், புழுதியின் வெப்பந் தாக்கவும் துடிதுடித்து வருந்தித் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு முகம் வியர்த்து உடல் வெதும்பி மனங் கலங்கிச் சென்றார்கள். சத்தியகீர்த்தி முதலிய மந்திரிகள், இவர்களுடைய பரிதாபமான நிலைமையைப் பார்த்து மனம்பொறாதவர்களாய்க் கண்ணீர்விட்டுப் பின்னே சென்றார்கள். இப்படிச் சென்ற எல்லோரும் காடுகளையும், மலைகளையும், கான்யாறுகளையும், முல்லை நிலத்தையும் கடந்து மருதநிலத்தைச் சார்ந்து கரும்புகள் விளையும் நிலங்களையும், தேனிறைந்த சோலைகளையுந் தாண்டி முடிவில் இரத்தின வொளி மிகுந்து சிறப்புடன் விளங்கும் அயோத்திமாநகரத்தின் மதிலுக் கருகிற்போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது, முன்னரே விசுவாமித்திரரைச் சார்ந்த முனிவர்கள் சென்று, 'அரசாட்சி விசுவாமித்திரருக்குச் சொந்தமாய்விட்டது,' என்று சொல்லக் கேட்டுக் கலங்கியிருந்த அந்நகரத்து ஜனங்க ளெல்லோரும் முகவாட்டத்துடன் எதிர்கொண்டு சென்று விசுவாமித்திரரும், அவரைச் சார்ந்த முனிவர்களும் வாகனங்களி லேறிக்கொண்டும் அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும், மற்ற மந்திரி முதலியோரும் கால்நடையாக நடந்தும் வருவதைக் கண்டு மதிமயங்கி வயிறெரிந்து, "அந்தோ! இஃதென்ன கொடுங்காலம் நேர்ந்தது; முன்னே அந்த முனிவர்கள் வந்து கூறியது சரியாயிருக்கின்றதே; நாம் அவர்கள் கூறும்போது யாரோ பயித்தியக்காரர்கள் உளறுகிறார்க ளென்றல்லவோ நினைத்தோம்; அவர்கள் வார்த்தை மெய்யாய்விட்டதே;

நமக்குத் தந்தையாகிய மன்னரும், தாயாகிய அரசியும், நம்மை இனி ஆளத்தக்க புத்திரனும் காவிவஸ்திரந் தரித்து ஆபரணங்க ளொன்றுமின்றி அழகிழந்து பரதேசிகளாய்ப் பாதம் வருந்தப் பூமியில் நடந்துவர இந்தப் பேய்க்குண முடைய பரதேசி இரதத்திலேறி வருதல் தகுதியாமா? இப்படி இவர்கள் நம் கண்ணெதிரே காணப்படும் தோற்றம் பொய்த்தோற்றமா? மெய்த்தோற்றமா? நம்மரசன் இவ்வாறு பரதேசி யாவதற்குக் காரணமில்லையே; இங்குக் கீழே நடந்து வருபவர் நம்மிறைவரோ வேறு பரதேசியோ? ஒன்றும் விளங்கவில்லையே," என்று பல சந்தேகமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு அரசன் சமீபத்திற் சென்று பரதேசிக் கோலத்துடன் சென்ற அரிச்சந்திரனைத் தங்கட் கிறைவனென்று நிச்சயமாகத் தெரிந்து, "ஐயோ! நம்மிறைவருக்கு இந்தப் பரதேசி வேடம் ஏன் உண்டாயிற்று? நம் தாயாகிய சந்திரமதிக்கும் இக்கோல முண்டாகலாமோ? தெய்வமே! நாங்கள் எங்களரசனை இவ்வித கோலத்தோடு பார்த்தற்கு என்ன பாவத்தைச் செய்தோம்? நாங்கள் மகாபாவிகளாய் விட்டோமே," என்று கைகளால் முகத்திலும் வயிற்றிலு மறைந்து கொண்டு கோவென்று கதறியழுதார்கள். அப்படி யழுத அவர்களுட் சில பெண்கள் ஓடிச் சந்திரமதியையும், அவளுடைய புத்திரனையும் தாங்கி யணைத்துக்கொண்டு கதறினார்கள்; சிலபுருஷர்கள்விரைந்தோடி அரிச்சந்திரனுடைய பாதங்களிலே விழுந்து மெய்சோர்ந்து கைகளாலே ஓங்கி யோங்கி முகத்தி லடித்து முகங் கன்றி வீங்கக் கண்ணீர் வடித்துப் புலம்பினார்கள். இவ்வாறு எல்லோரும், "ஐயோ! நம்மரசனுக்கும் அரசிக்கும் அரசபுத்திரனுக்கும் என்ன கொடுங்காலம் சம்பவித்தது!" என்று சொல்லிப் பலவித அலங்கோலத்துடன் விழுந்து விழுந்து மண்மேற் புரண்டழுதுகொண்டு சூழ்ந்து பின்செல்ல, இவ்வித துன்பங்களை யெல்லா முண்டாக்கின விசுவாமித்திரர் கோட்டை வாயிலுக்குட் புகுந்து தேரைவிட் டிறங்கினர். மற்ற முனிவர்களும் தங்கள் தங்கள் வாகனங்களிலிருந் திறங்கினார்கள்.

அப்படி எல்லோரும் இறங்கியவுடனே அரிச்சந்திரன் அந்த விசுவாமித்திரரை அழைத்துக்கொண்டு பெரிய பட்டணத்திற்குள்ளே நுழைந்து, தனக்கு முன்னே சொந்தமாயிருந்த குதிரைச் சாலைகளையும், தேர்ச்சாலைகளையும், யானைக் கூடங்களையும், பொக்கிஷசாலையையும், பூஜைவீட்டையும், வஸ்திரசாலைகளையும், பள்ளியறைகளையும், தனக்கு முன்னிருந்து அரசாண்டுவந்த இருபத்தொரு அரசர்களால் சேகரித்து வைக்கப்பெற்ற செம்பொன்னுள்ள அறைகளையும், தான் பொன்னிறைத்துவைத்திருந்த அறைகளையும், அன்னசத்திரங்களையும், நாடகசாலைகளையும், பொதுச்சாவடிகளையும், மடங்களையும், சிங்காரமாளிகைகளையும், வசந்த மண்டபங்களையும், திருமஞ்சனச் சாலைகளையும், கூடகோபுரங்களையும், ஆயுதச்சாலைகளையும், மடைப்பள்ளிகளையும், அந்தப்புரங்களையும், கோவில்களையும், சிங்காரத் தோட்டங்களையும், செய்குன்றுகளையும், பீடங்களையும், ஆசனங்களையும், மற்றுமுண்டானவைகளையும் அவருக்குக் காட்டி அவர் திருமுகத்தை மனமகிழ்ச்சியோடு நோக்கி, "முனிசிரேஷ்டரே! இவை யாவும் அரசாட்சியும் உமக்குச் சொந்தமானவைகளே; இன்றுமுதல் இவற்றை நீரே ஆண்டனுபவித்துக் கொள்வீராக," என்று கூறிப் பின்னர் அவரை அழகிய கொலுக்கூடத்திலுள்ள சிங்காசனத்தின்மேலேற்றிவேதவிதிப்படி அவருக்கு முடிசூட்டி இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். அவன் அவ்வாறு வணங்கவே கூடச்சென்ற மற்ற அரசர்களும், மந்திரிகளும், படைத்தலைவர்களும், வீரர்களும், இராஜ குடும்பத்தைச்சார்ந்த பெண்களும் கண்ணீர்விட்டழுதுகொண்டே துக்கத்தோடு அந்த விசுவாமித்திரரை வணங்கினார்கள்.

அதன்மேல் அரிச்சந்திரன் மேற்கூறியபடி வணங்கி யெழுந்தவுடன் தன்னை நோக்கிக் கண்ணீர் சொரிய மனங்கலங்கி நிற்கும் அரசர், மந்திரிகள், பிரதானிகள், வீரர்கள், முதலிய எல்லோரையும் பார்த்துக் கையமர்த்து, "நீங்கள் என்பொருட்டாகத் துக்கப்படவேண்டாம்; எல்லாம்

தலைவிதிப்படியே நடக்கும்; வரும் விதியை விலக்கவல்லவ ரியாவர்? என்னுடைய வாழ்வு மாறவேண்டியகாலம் வந்த படியால் இப்போது நான் எல்லாவற்றையும் இந்தவிசுவாமித் திர முனிவருக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டேன்; இதற்காக நான் மனத்திற் சிறிதும் கவலைகொள்ளவில்லை; என் சத்தியமட்டும் நிலைநின்றாற் போதுமென்று திருப்தியடைந் திருக்கின்றேன்; ஆதலால், நீங்களும் என்னைப்போலவே மனங்கலங்கா திருக்கவேண்டும்; இன்னும், நீங்கள் என் மனநோக்கம்போல எப்பொழுதும் நடக்கக் கூடியவர்களாத லால் இப்பொழுதும் நானிருப்பதுபோலவே மனக்கலக்கங் கொள்ளாதிருந்து எனக்கு மேன்மையையும் கீர்த்தியையு முண்டாக்குவீராக; நான் எப்பொழுது மனமொப்பி அர சாட்சியை விசுவாமித்திரருக்குக் கொடுத்துவிட்டேனே அப்பொழுதே நீங்களெல்லோரும் எனக்கடங்கி நடந்தது போல அவருக் கடங்கி நடக்கக் கடமைப் பட்டவர்களாய் விட்டீர்கள்; இம் முனிவருடைய கட்டளைப்படியே இனி நீங்களெல்லோரும் நடந்தால் மாத்திரம் எனக்கு நற்கீர்த்தி யுண்டாகும்; இல்லையேல் நான் உங்களுக்குத் துர்ப்போதனை செய்து உங்களை அவருக் கடங்காமற் செய்துவிட்டதாக உல கத்தில் எனக்குக்கெட்டபெய ருண்டாகும்; நீங்கள் எனக்கு நற்பெயரை யுண்டாக்க வேண்டுமானால் இவருக்கு முன்னே யாதொரு குற்றமு மில்லாமல் நடந்துகொள்ள வேண்டும்; இந்த முனிவரோ எல்லோருக்கும் நல்லவர்; தவத்தில் வல்ல வர்; புத்தியிற் பெரியவர்; திரிபுரத்தை நகைத்தெரித்த பரம சிவனுக்கும் மேற்பட்ட கீர்த்தி வாய்ந்தவர்; செங்கண்மா லான விஷ்ணுவுக்கு மேலானவர்; சதுர்முகனான பிரமாவினு முயர்ந்தவர்; தேவர்களினுஞ் சிறந்தவர்; இவரைப்போன்ற மகான் உங்களுக் கிறைவராக அமைவதரிதாகும்; நீங்கள் செய்த தவப்பயனாலேயே இவர் இப்போதுங்களுக் கிறைவரா யமைந்தார்; இவருக்கெவர் நல்லவரோ அவரே எனக்கும் நல்லவர்; நீங்கள் நான் இப்போதுரைத்த வார்த்தைகளை யெல்லாம் நன்றாக ஆலோசித்து மனத்தில் வைத்து இந்தத்

தவசிரேஷ்டருக் கிதமாக நடந்து கொள்ளுங்கள்,'' என்று கூறினன்.

சப்த தீவுகளையும் தன்னுட்சிக்குள் ளடக்கியாண்ட அரிச்சந்திர மகாராஜன் அவ்வாறு கூறவே சிற்றரசர்கள், மந்திரிகள் முதலிய எல்லோரும் தங்கள் வாயைக் கையால் மூடிக்கொண்டு அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி, "ஐயனே! உம்முடைய வார்த்தைகளை மீறி நடப்பவர்கள் இங்கே யாரிருக்கின்றார்கள்? நாங்கள் ஒருபோதும் உம்முடைய நோக்கத்திற்கு விரோதமாக நடக்கமாட்டோம்; உம்முடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு இன்றுமுதல் இம்முனிவருக் கடங்கி நடந்து உமக்கு நற்கீர்த்தியை யுண்டாக்குவோம்; அதைப்பற்றி நீர் எங்களுக்கு அதிகமாகச் சொல்லவேண்டாம்," என்றுகூறி அவ்வரசன் தங்களை விட்டுப்பிரியப் போவதைக் கருதி அளவற்ற துக்கங்கொண்டு முகத்திற் கையால்மோதி யடித்துக்கொண்டு அழுது புலம்பினார்கள்.

அப்போது விசுவாமித்திரர், சிம்மாசனத்திலிருந்தபடியே அரிச்சந்திரன் தன்னைச் சார்ந்தவர்களிடம் கூறிய உறுதி வாக்கியங்களையும், அவர்கள் அவன்மீது விசுவாசம் வைத்துப் பதிலுரைத்த வார்த்தைகளையுங் கேட்டு, "உலகத்தில் இந்த அரிச்சந்திரனைப்போன்ற நீதியுள்ள அரசனையும், இவர்களைப்போன்ற இராஜபக்தி நிறைந்த பிரஜைகளையும் காண்பதரிதாகும்; இத்தகைய மன்னனை நாம் வருத்துவதால் நமக்கென்ன பயனுண்டாகப் போகிறது? நாம் புத்தியில்லாமல் வீணே அவசரப்பட்டு இந்திரனுக்கு முன்னே சபதஞ் செய்துவிட்டோம்; அதை நிறைவேற்றும் பொருட்டு இவனுக்குப் பல துன்பங்களைச் செய்தே தீரவேண்டியது நமக்கவசியமா யேற்பட்டுவிட்டது; அவ்வாறு துன்பத்தைச் செய்யும்போது மிகவும் தருமகுணமுள்ள இவன் அளவற்ற துக்கத்தை யடைகின்றான்; அவ்வாறடைவதைப் பார்த்தால் நமக்கே மனமுருகுகின்றது; ஆயினும், என்ன செய்யலாம்?

சொன்ன சபதத்தை நிறைவேற்றித்தானே தீரவேண்டும்? அப்படி நிறைவேற்றுவதற்கு இவன் ஏதேனுமொரு இழிவான காரியத்தைச் செய்துவிட்டால் அதுவே போதும்; இவனுக்கு அதிக கஷ்டமேற்படாது; நாம் அதன்மேல் ஒன்றுஞ் செய்யாமற் போய்விடலாம்; இவனை எவ்விதத்தாலும் கெட்டகாரியத்தைச் செய்யாதவனாயிருக்கின்றான்; பலவிதத்திலும் நமக்கு மனவேதனை அதிகப்படுகின்றது; இவனை எவ்வாறு கெட்டவனாகும்படிச் செய்யலாம்?" என்று பலவாறு யோசித்துப் பின்னர், "'அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும்,' என்பதற் கிணங்கத் துன்பத்தின்மேற் றுன்பஞ் செய்தால் எத்தகையினரும் மனவுறுதி கெட்டுப்போவார்கள்; ஆதலால், இவன் முன்னே கெட்டகாரியத்திற் கிணங்காமல் மனவுறுதியோடிருந்தாலும்இப்போது அளவில்லாத துன்பங்களையடைந்து பரதேசியாகி யிருப்பதால் இச்சமபம் தன்னுறுங்கைக் கைவிட்டு ஒரு அற்பக்காரியத்தைச்செய்ய இணங்கினு மிணங்குவான்; நம்முடைய மோகினிப் பெண்களை மணஞ் செய்துகொண்டால் இராஜ்ஜியத்தை யெல்லாம் இவனுக்கே திருப்பிக் கொடுத்துவிடுவதாக நாம் இப்போது இவனிடம் தெரிவிப்போம்; ஒருவாறு இவன் அதற்கிசைந்துவிட்டால், 'நம்மைப் பிடித்த சனியன் விட்டது,' என்று நாம் விரைந்து சென்று இந்திரனுக்கு முன்னே நம் சபதம் நிறைவேறிவிட்டதென்று கூறிவிடலாம்," என்று தீர்மானித்து, உடனே அரிச்சந்திரனைச் சமீபத்தி லழைத்து அவனுடைய முதுகின் புறத்தைத் தடவி, "மன்னவ! உன்னைப் போல் பொறுமையும் திறமையும் வாய்ந்த அரசனை நான் எங்கும் கண்டதில்லை; மிகவும் தருமகுணமுள்ள நீ துக்கத்தை யடைவதைப் பார்த்து என் மனம் அளவற்ற வேதனை யடைகின்றது; நீ வீணுகப் பிடிவாதம் செய்து என் இவ்வித கஷ்டத்தை யடைகின்றாய்? நீ அடைவதுமன்றி உன்னுடைய அருமையான மனைவியும் புத்திரனு மடைகின்றார்கள்; இவர்கள் உன்னோடு பசியாலும் வெயிலாலும் மழையாலும் வருந்தித் திரிந்தலைவது தகாது; மிக்க சுகத்தை யடை

ந்த நீயும் போய்க் கஷ்டப்பட்டலைவது நல்லதாகக் காணப்பட வில்லை; அப்படியே நீ உன்னுடைய மனைவி மைந்தனுடன் கஷ்டப்பட்டு ஊரூராகத் திரிந்தலைந்தாலும் என் கடனைத் தீர்ப்பதற்குரிய அளவற்ற திவியம் உனக்குக் கிடைப்பது அரிதாகும்; நீ என்ன உபாயத்தைக் கொண்டு பணந்தேடுவாய்? இஃதெல்லாம் வேண்டாம்; நீ சுகப்படுவதற்குத் தகுந்த உபாயமொன்று சொல்லுகிறேன் கேள்; நீ எள்ளளவும் தடை செய்யாமல் இப்பொழுதாவது என் குமாரிகளை மணம் புரிந்துகொள்வதற் கிணங்கு; அவ்வாறு சம்மதிப்பாயானால் இந்த நாடு நகரம் செங்கோல் முதலிய எல்லாவற்றையும் உனக்கே திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்; நீ கொடுக்க வேண்டிய கடனையும் தள்ளிவிடுகிறேன்; நீ அந்தப் பெண்களோடு அரசாட்சியைப் பெற்றுக்கொண்டு மீண்டும் அரசனாய்ச் சுகத்தோடு வாழலாம்; என் சொல்லைத் தடை செய்யாதே; உலகத்தில் நாம் ஜென்ம மெடுத்ததற்குரிய பயன் இன்பத்தை யடைவதே யல்லாமல் வேறொன்று மில்லை; தலையால் வரும் சீதேவியைக் காலால் தள்ளாதே; என்னுடைய பெண்களோ மணமாகாத கன்னிப் பெண்கள்; அவர்களை மணஞ் செய்துகொள்வதால் எவ்வித தோஷமு மில்லை; ஒருவருக்கு மணமான பெண்ணை விரும்பினால் மாத்திரம் தோஷமுண்டாகும்; வேறொருவர்க் குரிய மனையாள்களையே இந்திரன் முதலிய தேவர்களும் விரும்பியலைகிறார்கள்; அவ்வாறு திரியினும் அவர்களுடைய கௌரவத்தில் ஏதேனும் குறை யேற்பட்டிருக்கின்றதா? ஒன்றுமில்லையே; அப்படியிருக்க நீ மணமாகாத கன்னிப்பெண்களையும் மணம் புரிந்துகொள்ளத் தடைசெய்வது ஆச்சரியமா யிருக்கின்றது; எல்லாச் சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த உனக்கு இந்த நியாயம் என் தெரியாமற் போய்விட்டது? நீ எவ்வளவோ கற்றிருந்தும் கற்றறி மூடனாய் மதியீனத்தால் வருந்துகின்றாய்; அரிச்சந்திரா! பிடிவாதம் வேண்டாம்; இதோ உன் செங்கோலைப் பெற்றுக்கொள்; என் கன்னியரை மணம் புரிந்துகொள்வதாக ஒரு வார்த்தை கூறு; அவர்களுக்கு நீ தகுதியான மாப்

பிள்ளையென்று கருதியே இவ்வாறு உன்னைத் துன்பப்படுத்தி வற்புறுத்துகின்றேன்," என்று சொல்லி உடனே எழுந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு தாடையைத் தாங்கி வேண்டினர்.

அப்படி அவர் கையைப் பிடித்துக்கொண்டு மிக்க சாமர்த்தியமான வார்த்தைகளைக்கூறி வேண்டவே, அரிச்சந்திரன் அவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, "சுவாமி! நல்ல வார்த்தைகளைக் கூறினீர்; நான் என் மனைவியொருத்தியை விரும்புவதன்றி மற்றப் பெண்களின்மேல் இச்சைகொள்ளாத நித்திய விரதம் பூண்டவன்; என் மனைவியன்றி மற்றப் பெண்களெல்லோரும் எனக்குத் தாய்மாராவர்; இந்திரன் முதலியோர் பிறர் தார இச்சைகொண்டதால் தங்கள் கௌரவத்தை யிழக்காவிடினும், அதற்குரிய தண்டனையைமட்டும் அடைந்தே யிருக்கின்றார்கள்; எவர் எப்படியாயினு மாகுக; யான் என்னுடைய விரதத்தைக் கைவிடமாட்டேன்; நீர், உம்முடைய கன்னியரைக் கூடினல் தோஷமில்லையென்று கூறினீர்; அது சரியன்று; அவர்கள் கன்னியராயிருந்தாலும் பாத்தையர் தன்மையையும், நீச்சத்துவத்தையு மடைந்திருக்கிறார்கள்; உலகத்தில் பரத்தையரைக் கூடுவதும், பொய் கூறுவதும், இன்னும் தருமமல்லாத காரியங்களைச் செய்வதும் கீர்த்தியை அழிப்பதற்கேதுவான செய்கைகளாதலால் பரத்தையாகிய உம்முடைய கன்னியரை மணம் புரிந்துகொள்வதும் பழிப்பிற்கிடமான செய்கையேயாம்; பல வார்த்தைகளை எதற்காகப் பேசவேண்டும்? என் உயிர் போனாலும் நான் என்னுடைய மனையாள் தவிர வேறொருத்தியையும் விரும்பமாட்டேன்; நிலையற்ற உலகவாழ்வைக் கருதி நீதியைக் கைவிடேன்; இன்னும் மனுவுக்குப்பின்னே தோன்றி எனக்கு முன்னே அரசாண்ட மகாநீதிமான்களாகிய வலிமிகுந்த மன்னர்களேயன்றி, அவர்காலத்துக்கு முன்னும் பின்னும் வேறு எவராலும் தாங்கமுடியாத இந்தப் பூமிபாரத்தைத் தாங்குதற்கு நான் வல்லமை பெற்றவனல்லேன்; ஆகலின், இப்பாரத்தை நீரே தாங்குவீராக; மீண்டும் என்னிடம் அதனைச்

சுமத்தவேண்டாம்; இனி இவ்வித அநீதியான வார்த்தைகளை என்னிடம் கூறுவதை விட்டுவிடுவீராக; நான் கொடுப்பதாகச் சொன்ன பொருளைத் தவணைப்படி பெற்றுக்கொள்வதற்கு ஓராளை மாத்திரம் என்னுடன் கூட்டியனுப்பும்; நான் என்னபாடுபட்டாவது பணம் சம்பாதித்துக் கொடுத்தனுப்புவேன்," என்று கூறினான்.

அவ்வாறு கூறவே விசுவாமித்திரர் அதிசயித்து, "இவன் இவ்வளவு துன்பத்தை யடைந்தும் மனவுறுதி கெடவில்லை; இன்னும் இவனைக் கஷ்டப்படுத்துவதற்குரிய வழிகளைப்பற்றிப் பின்னால் ஆலோசித்துத் தீர்மானித்துக் கொள்ளலாம்; இப்போது இவனை யனுப்பிவிடுவதே நலமாம்," என்று கருதி அரிச்சந்திரனை நோக்கி, "திரிசங்கு புத்திரனே! நீ என்சொல்லைத் தடைசெய்கின்றாய்; நல்லது; உன்னிஷ்டப்படியே செய்; நான் நாளைக்கு ஓராளை உன்னிடமனுப்புவேன்; நீ இப்போதே இந்நகரத்தி லில்லாமல் வெளியேறிப் போய்விடு," என்று கட்டளையிட்டார். அப்படிக் கட்டளையிட்ட மாத்திரத்தில் அரிச்சந்திரன் அவருடைய பாதங்களைச் சிரசின்மேற் சூடி வணங்கி, "சுவாமி! தம்முடைய கட்டளைப்படியே நான் வெளியேறிச் செல்கின்றேன்; இந்த அடியேன் உமக்கு அறியாமையால் ஏதேனும் குற்றங்கள் செய்திருந்தால் அவற்றை மன்னித்தருள வேண்டும்," என்று சொன்னான். அதற்கு அம்முனிவர், "அப்படியே மன்னித்தேன்; நீ போகலாம்," என்றுரைத்தார். அதன்மேல் பிரபுவான அரிச்சந்திரன், தன்னுடைய மந்திரிகளைக் கைப்பற்றி அம்முனிவருக்குச் சுட்டிக் காட்டி, "ஐயனே! இவர்களெல்லோரும் உமக்கடைக்கல மானவர்கள்; இவர்கள் ஏதோ ஒரு சமயத்தில் மதிமருண்டு உம்மை வைதாலும், உம்முடைய கட்டளையை மறுத்தாலும், வேறு குற்றங்கள் செய்தாலும் அவற்றை யெல்லாம் பொறுத்து இவர்களையும் ஆட்கொள்ள வேண்டும்; இது தான் நீர் முடிவாக எனக்குக் கொடுக்கத் தக்க வரம்," என்று சொல்லி அவர்களை அம்முனிவரிடம்

ஒப்புவித்தான். அவரும் அவ்வாறே செய்வதாகத் தெரிவித்து அவர்களை யேற்றுக்கொண்டார்.

பின்னர், அம்மன்னன், சிம்மாசனத்திலிருந்து குடை நிழலின் கீழே விளங்கிய விசுவாமித்திருடைய பாதங்களிலே கொடிபோன்ற இடையையுடைய சந்திரமதியும், புத்திரனுகிய தேவதாசனும் வணங்கும்படிச் செய்து தானும் முடிவாக வணங்கி, 'சுவாமி! இனிமேல் இந்தப் பூமிபாரம் உம்முடையதே,' என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு தன்னைச் சூழ்ந்துநின்ற சேனைகளைப் பார்த்து, "நீங்கள் இவ்விடத்திலேயே நில்லுங்கள், எனக்குப் பின்னை தொடர்ந்து வரவேண்டாம்," என்று சொல்லிவிட்டு மனைவியையும் மைந்தனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

அவன் அவ்வாறு புறப்பட்டவுடனே, திரிபுரதகனம் பண்ணினசிவனையொப்பான விசுவாமித்திரர் தம்முடையஒழுங்குப்படி உலகத்தை யாளுதற்குரிய காரியங்களைச் செய்யத் தொடங்கினர்; அப்போது சண்டை செய்து ஆயாசந் தீர்ந்திருக்கின்ற வீரர்கள் கூடின சபைகளிலும் தெருக்களிலும் விசுவாமித்திரரைச்சார்ந்த பிரமசாரியப்பிராமணர்கள் உள்ளக் களிப்புடனேகூடினர்கள்; அந்தபுரத்திலும், அரண்மனையிலும் தம் நாயகரிடத்தே விருப்பத்தைச் செலுத்தக்கூடிய பெண்களெல்லோரும், அரசன் நீங்கியதால் தங்களுக் கேற்பட்ட துக்கம் மேலிட்டவர்களாய் வருந்தியபடியினலே, அவர்கள் மேலுப்பரிகைகளி லிருந்து கூந்தலை யுலர்த்துவதற்கு அகிற் புகையிடும் சிறப்பெல்லாம் நீங்கி, எவ்விடத்தும் பிராமணர்கள் வாசனைமிகுந்த மலர்களும் தருப்பைகளும் நிறைந்து விளங்குவதான ஓமம் செய்ய, அதனலே யெழும்புகையே மிகுந்திருந்தது. இன்னும் கொடிகளுயர்ந் தாடுகின்ற அந்தபுரத்தின் வீதிகளிலெல்லாம் யானை வீரர்களும், குதிரை வீரர்களும், வேல் வீரர்களும், வாள் வீரர்களும், இவர்களைச் சார்ந்த பெண்களும் கூடி நிறைந்திருப்பது போய், சாஸ்திரம் படிக்கிற பிரமசாரியர்களும், இடை அரைநாணும் கௌ

பினமுமுள்ள முனிவர்களும்,நெருங்கிச் செல்வதானகூட்டம் அதிகரித்திருந்தது; இராஜ குமாரர்களும், வீரர் குமாரர்களும் வீதிகளில் நெருங்கி விளையாடுவதா லுண்டாகும் கோஷ்டமடங்கி முனிவர்கள் வேதபாராயணஞ் செய்யும் கோஷ்டமே அதிகரித்திருந்தது; குளங்களிலும், ஏரிகளிலும்இராஜஸ்திரீகள் ஜலக்கிரீடை முதலியன செய்து விளையாடுவதா லுண்டாகும் கோஷ்ட மடங்கி, முனிவர்களும், குடும்ப சந்நியாசிகளுடைய மனைவிபரும், அவர்களுடைய புத்திரரும் ஸ்நானஞ் செய்வதாலும் மந்திரங்கள் சொல்வதாலும் ஏற்படும் முழக்கம் மிகுந்திருந்தது. இராஜகுமாரர்கள் சேர்ந்து வில்வித்தை பயிலு மிடங்களிலெல்லாம் முனிவரின் குமாரர்கள் சஞ்சரித்துத் திரிந்தார்கள். இவ்விதம் பல செய்கைகள் நடந்தபடியால் அயோத்திநகரமானது அப்பொழுதே முன்னிலைமை மாறி வேற்றுமையடைந்து, 'இது புது அயோத்தியோ,' என்று பார்த்தோர் சொல்லக்கூடியதா யிருந்தது. இவ்வாறு அந்நகரத்தின் நிலைமை மாறித் தோன்ற விசுவாமித்திரர், பரிசுத்தமான முனிவர் சூழவும், சிற்றரசர் வணங்கவும் திருத்தமான இரத்தின சிங்காசனத்தமர்ந்து சந்தோஷமாக உலகத்தை யாளத் தொடங்கினர்.

சூழ்வினைக்காண்டம் முற்றுப்பெற்றது.

நகர் நீங்கிய காண்டம்.

அரிச்சந்திரன் செங்கோல்முதலிய எல்லாவற்றையும்
விசுவாமித்திரருக்குக் கோடுத்துப் பரதேசியாய்
மனைவிமைந்தனுடன் அயோத்தியைவிட்டு
வெளியேறிச் செல்லல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"தலமுழுதுந் தவமுனிவன் றனக்களித்தோ மினியுறைதகுதி யன்றென்
திலகுமணி மண்டபமு மெழின்மணிச்சிங் காதனமுமிழிந்து போந்து

பலவரச ருடனமைச்ச ரழுதுடன்போய்ப் பாதவிக்கப்
பதாதி மொய்க்கக்
குலமகனு மடமயிலு முன்னடக்கப் பின்னடந்தான்
கொற்ற வேந்தன்,"

மேற்கூறியபடி விசுவாமித்திரரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட வெற்றிபொருந்திய அரிச்சந்திர மகாராஜன், "நமக்குச்சொந்தமாயிருந்தபூமிமுழுவதையும் தவத்திற் சிறந்த விசுவாமித்திர முனிவருக்கு மனமொப்பி நாம் கொடுத்துவிட்டோம்; ஆதலின், இனி இவ்விடத்திற் றங்கியிருப்பது நீதிக்கு விரோதமான செய்கையாகும்; நாம் அரை நிமிஷமும் தாமதிக்காமல் இந்நகரைவிட்டு வெளியேறிச் செல்வதே தகுதி," என்று கருதிப் பிரகாசிக்கின்ற இரத்தின சபா மண்டபத்தையும், சிங்காசனத்தையும் விட்டு நீங்கி அரண்மனையினின்றும் வெளியேறிப் பல சிற்றரசர்களும், மந்திரிகளும் அழுதுகொண்டே பின் சென்று வருந்தவும், சேனைகளெல்லாம் பிரிவாற்றாமையால் துக்கத்தோடு கண்ணீர்விட்டுச் சுற்றிலும் நெருங்கிச் சூழவும், தன் குலத்தை விளக்கவந்த புத்திரனாகிய தேவதாசனும், மயில்போன்ற சாயலையுடைய சந்திரமதியும் முன்னே நடக்கத் தான் பின்னே நடந்து வீதியிற் சென்றான்.

அவ்வாறு மாலையுமில்லாமல், கிரீடமுமில்லாமல், ஆபரணங்களு மில்லாமல், உடுக்கை பம்பை பேரிகை முதலிய வாத்தியங்களு மில்லாமல், குடையுமில்லாமல், வெண்சாமரக் கூட்டங்களு மில்லாமல், யானைக்கூட்டம் குதிரைக்கூட்டம் தேர்க்கூட்டம் காலாட்படைக்கூட்டம் ஆகியவைகளு மில்லாமல், அரண்மனைவாயிலைக் கடந்து வீதியிற்சென்ற அம்மன்னனுடைய அழகியமுகத்தை அந்நகரத்திலுள்ள மனிதர்கள் பார்த்து, அவர்களுக்கு அளவற்ற துக்க முண்டானபடியால் அவர்களெல்லோரும் மனங்கலங்கியுருகிக் கைகளால்முகத்திலறைந்துகொண்டுஅழத்தொடங்கினார்கள். அங்ஙனந் தொடங்கிய அவர்கள் உரோமங்களுடனே இறகையு மிழந்த பக்ஷி

களைப்போலவும், வேலியுடனே சிறுவரம்புமில்லாமல் அழிந்து கிடக்கும் பயிர்போலவும், துதிக்கை யறுபட்ட யானையைப் போலவும், சூஸ்திரமற்ற பாவையைப்போலவும், உயிரற்ற உடலைப்போலவும், மத்தினுலுடைபட்டுக்கட்டுவிட்டுச்சிதறும் தயிரைப்போலவும் நிலைதளர்ந்து மனமயங்கிக் கண்ணீரைத் தாரைதாரையாக வடித்துக்கொண்டு அறிவற்றவராய்த் தங்கள் தங்களுக்குத் தோன்றியவைகளை யெல்லாம் சொல்லிப் புலம்பினார்கள். அப்படிப்புலம்பிய அவர்களுட் சிலர் அரசனை நோக்கி, "அந்தோ! மேலே கொடிகள் கட்டியிருக்கப்பெற்ற தேரின்மேலும், யானையின்மேலும், பொற்பல்லக்கு முதலிய வாகனங்கள்மீதும் மிருதுவாக ஏறித் தாமரை மலர்போல் அசையாமலிருந்து வரும் நம்மரசருடைய மெல்லிய பாதங்கள் மண்மீது நடக்கவும் கற்றிருக்கின்றனவோ," என்று கூறினார்கள்; சிலர் தேவதாசனை நோக்கி, "ஐயோ! தினந்தோறும்வந்து வணங்குகின்ற அரசர்களுடைய தலையின்மேலும் மடியின்மேலும் சஞ்சரித்த நம்மிராஜ புத்திரனுடைய மலரடிகள் வெப்பமிகுந்ததூளிகளின்மேலே நடந்துசெல்கின்றனவே; இவை இந்த வெப்பத்தைத் தாங்குமோ," என்று சொன்னார்கள்; சிலர், சந்திரமதியை நோக்கி, "ஐயோ! அழகிய அன்னத் தூவிகளாலும், பஞ்சினாலும், அனிச்ச மலர்களாலும் அமைந்த மெல்லிய அணையின்மேலும் நடக்கச் சகிக்காத நம்மரசியினுடைய தாமரைமலர்போன்ற பாதங்கள் பூமியில் வருத்தத்தோடு நடக்குங்காலமும் வந்ததே," என்று கூறினார்கள்; சிலர், "தெய்வமே! சிவந்த நெல்விளைவதான கோசலநாட்டையும், மற்ற சிற்றரசர்களுடைய சிரேஷ்டமான நாடுகளையும், தேவருடைய நாடுகளையும் பகைவர்க்கஞ்சாமல் காத்தருளத்தக்க வல்லமைவாய்ந்த எங்களரசருக்கு இந்த விதியோ வந்தது!" என்றுரைத்தார்கள்; சிலர், "இளமையும் வனப்புமுள்ள சந்திரமதி, தன் நாயகர் வெளியேறிச் செல்வது கண்டு தானும் அவரோடு கூடச் சேர்ந்து இந்த வீதி வழியே நடக்க, நீண்ட நாளாக அவருடன் கலந்திருந்த இந்தப் பட்டணமாகிய பெண் அம்மன்னர் பெருமானை விட்டுப்

பிரிந்து விசுவாமித்திர முனிவரை விரும்பித் தங்கினாள்; ஒருவரைப் புகழ்ந்து சொல்லி அவர் கொடுப்பதை வாங்கிக்கொண்டு பின்னும் மற்றொரு கொடையாளியிடத்தில் யாசகத்திற்குச் செல்லும் இயல்பினையுடைய இந்த முனிவரோ, மிக்க வள்ளலாகிய அரிச்சந்திர மகாராஜருடைய பெண்ணாகிய இந் நகரமாதுக்கு மணவாளனாகத் தக்கவர்!" என்று சொன்னார்கள்; சிலர், "முல்லையரும்பு போன்ற பல் வரிசைகளையுடைய சந்திரமதியும், கிரீடாதிபதியான அரசனும், இவர்களுடைய புத்திரனும் மணவறையிலும், புஷ்பமெத்தையிலும் சஞ்சரிப்பதைவிட்டு இவ்வாறு வெளியேறிச் செல்கின்றார்களே; இவர்கள் போகுமிடங்களிலெல்லாம் கற்களிலும் முட்களிலுமன்றோ படுக்கவேண்டும்; அவ்வாறு படுத்தால் இவர்களுடைய தேகம் சகிக்குமா; இவர்கள் வருந்தாதிருக்குமாறு இவர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் மணவறை வீடும் புஷ்பமெத்தையும் அமைந்திருக்குமோ," என்று சொல்லித் தூக்கித்தழுது கீழே விழுந்தார்கள்; சிலர், "ஐயோ! யாசகத்திற்குவந்த ஒரு முனிவனுக்கு நம்மரசர் முன்னே விதிப்பயனாலே அவன் கேட்டதையெல்லாம் இல்லையென்னுமற் கொடுத்தார்; அப்படிக் கொடுத்தவர் அந்தக் கொடைக்குரிய பயனாக நன்மையொன்றையு மடையவில்லையே; பரதேசிபோலச் செல்கின்றனரே; யாசகர் விரும்பியதை யெல்லாம் இல்லையென்னுமற் கொடுக்கும் வள்ளற்றன்மை யுடையோர்க்கு ஏற்படும் பயன் இதுதானோ," என்றுசொல்லிக் கண்ணீர்விட்டுப் பூமியில் விழுந்து புரண்டார்கள்; சிலபெண்கள், தங்களுடைய பேதைமைக் குணத்தால் பக்கத்தில் நின்ற பெண்களைப் பார்த்து, "வண்டுகள் விரும்பி மொய்க்கப்பெற்று இருள்போன் றிருக்கும் கூந்தலையுடைய பெண்களே! உலகத்தில் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்துமுடிக்க வல்லமை பெற்றவராயினும் பெறாதவராயினும் அவரிடத்தில் வீரம் அவசியமா யிருக்க வேண்டும்; அவ்வாறு வீரமிருப்பின் அவ்வீரத்தால் அவருக்கு நலமுண்டாகும்; ஆதலால், இப்பொழுது நம்மன்னர் இளைத்திருப்பினும் வீரத்தைக் கைக்கொள்வாரானல் விசுவா

மித்திரரோடு போர்செய்து இராஜநீதிப்படி அவரை வென்று பூமியைக் கைப்பற்றிக் கொள்ளுதல் கூடும்; எப்பொழுது நம்மன்னர் பூமியை அம்முனிவருக்குக் கொடுத்துவிட்டாரோ அப்பொழுதே அஃது அவருக்குச் சொந்தமாய்விட்டது; அதன்மேல் எவரும் அவரோடு போர்செய்து அதைக் கைப்பற்றிக் கொள்ளலாம்; இந்த நியாயப்படி நம்மாசர் போர்செய்து பூமியைக் கைப்பற்றிக் கொள்ளுவதால் தோஷமாகாது; இவர் வீரத்தைக் கைவிட்டுப் பொறுமையைக் கொண்டதனாலேயே இவ்வித சங்கடம் நேர்ந்தது; இந்தப் பொறுமையால் என்னபயன்?" என்று சொன்னார்கள்; வேறு சிலர் அப்படிச் சொன்னவர்களைத் தடுத்து, "எவருக்கும் வீரம் வேண்டுவதின்று; தருமமே அவசியம் வேண்டுவதாகும்; அதனால் மிக்க நன்மை யுண்டாகும்," என்று கூறினார்கள்; பின்னுஞ் சிலர் அவ்வாறு சொன்னவர்களை நோக்கி, "நீங்கள் சொல்வது சரியே; உங்கள் சொற்படி தருமம் நல்லதானால் அதைச் செய்யும் எல்லோருக்கும் அது சமமாக நன்மையையே தரவேண்டுமன்றோ? அப்படியின்றிச் சிலருக்கு நன்மையையும், சிலருக்குத் தீமையையும் கொடுத்தற்குக் காரணமியாது? நம்மன்னர் அறத்தைச் செய்தும் அவருக்கு என் அந்தத் தருமம் இவ்வித துன்பங்களைக் கொடுத்தது? நன்றாக ஆராயும்போது தருமத்தால் நலமில்லையென்பது விளங்குகின்றது," என்று கூறினார்கள்; சிலர், "நம்முடைய அரசனும், அரசியும், இராஜபுத்திரனும், தாங்கள் நிலைகொண்டிருந்த நாட்டையும், தங்களுடைய குறையாத செல்வத்தையும், கொடிகள் கட்டப்பெற்ற தேரையும், ஆண்யானையையும் ஊழியக்காரரையும் மனமொப்பி விசுவாமித்திருக்குக் கொடுத்துவிட்டுத் தரித்திரரைப்போல வெளியேறிச் செல்ல, இவர்களுடைய பரிதாபமான நிலைமையைப் பார்த்து இரங்காதிருக்கின்ற அந்த விசுவாமித்திருடைய மனது கல்லோ!" என்று சொன்னார்கள்; சிலர், செம்மைக்குணத்தினாலே உலகமுழுவதையும் தனக்குக் கொடுத்துவிட்டு மனந்தளர்ந்து நகரத்தை விட்டு வெளியேறிச் செல்கிற நம்மாசனை

யும், அரசியையும், இராஜபுத்திரனையும் அழைத்து ஒரு வீடேனும் கொடுத்து இருக்கும்படிச் சொல்லாத வன்னெஞ்சனான இந்த விசுவாமித்திரனோ நம்மைக் காத்திரட்சிக்க வல்லவன்!" என்று கூறி உடல் நடுங்கப் பெருந்துக்கங் கொண்டு பெருமூச்சுவிட்டார்கள்; சிலர், "ஐயோ! இந்த ஊரிலே மின்னலில்லாமல் இடிவிழுந்ததே," என்று சொல்லியழுதார்கள்.

இவ்வாறு எல்லோரும் பர்பலவிதமான வார்த்தைகளைச் சொல்லித் துக்கித்து, வயிற்றிலேயடித்துக்கொண்டு அழுக, மேற்கூறியபடி வீதியிற் சென்ற அரிச்சந்திரன், கன்றோடு கூடிப் பெண்யானை பக்கத்திலே வர ஒரு ஆண்யானையானது தன்னினத்துடனே காட்டிற்குச் செல்வதுபோல, "நாம் இப்போது கொடுத்த யாவும் முனிவர்க்குச் சம்மதியாயினவோ இல்லையோ," என்று துக்கித்துக்கொண்டு மலையை நிகர்த்த மதிலைக் கடந்து, பிரிய மனமின்றித் தன்னைப் பின்பற்றிவந்த அன்பர்களுடனும், மனைவி மைந்தனுடனும் நடந்துபோய்ச் சரயுநதியை யடைந்தான். அவ்வாறடைந்த அவன், கீர்த்தி பெற்ற சூரியகுலத்தரசர்களுக்கு வமிசபாம்பரையாகச் சொந்தமாயிருக்கும் அச்சரயு நதியானது, "இந்த அரிச்சந்திரமகாராஜனுக்கு இந்த விதி எதனாலே வந்தது?" என்று சொல்லி மணமிகுந்த தாமரைமலர்போலும் பாதங்களைப் பிடித்துக்கொண்டு அழுவதுபோலத் தன் கால்களைச் சுற்றி வேகமாகச்சென் றிரைச்சலிட, அந்நதியிலிறங்கி அதனைக் கடந்தப்பாற் சென்று கரையேறிக் கீழே பாவிக்கிடக்கின்ற மணலிலே பல மலர்களை யுதிர்த்துப் பரிமளித்துக்கொண்டு நிற்கின்ற தருக்கள் செறிந்த ஒரு சோலைக்குள்ளே புகுந்தான். அங்ஙனம் புகுந்தபின் அம்மன்னன் அச்சோலையின் ஒரு பக்கத்தில் மணல் நிறைந்த ஓரோடையி லமர்ந்தான்; அவன் அப்படியிருந்தவுடனே பரிமளிக்கின்ற மலர்மாலையை யணிந்த கூந்தலையுடைய சந்திரமதியும், தேவதாசனும் நெருங்கி அவ்வாசனுக் கிருபுறத்திலுமிருந்தார்கள். மற்றவர்களும் பக்கத்திற் றங்கினார்கள்; அப்போது சூரியன் அவர்களுடைய

துக்கத்தைக் கண்டு சகிக்கமுடியாமல் மறைவதுபோல மேற்றிசைக்கடலிற்போய் மறைந்தான்; அப்படிச் சூரியன் போய் மறைந்தவுடனே அரிச்சந்திரன் முதலியோர் பேசிக்கொள்ளும் பேச்சுக்களையும், செய்யும் செய்கைகளையும் மறைந்திருந்து அறியும்பொருட்டு மிக்க வஞ்ச நெஞ்சம் படைத்த விசுவாமித்திரர் அங்கே சென்று ஒருபுறத்தில் ஒளித்திருந்தார்.

அப்போது மந்திரிகளெல்லோரும் எழுந்து அந்த ஜெயங்கொண்ட மன்னனாகிய அரிச்சந்திரனுடைய பாதங்களை வணங்கி அவனுடைய திருமுகத்தை நோக்கி, "எம்மிறைவரே! இப்பொழுது நாங்களெல்லோரும் துக்கசாகரத்தில் மூழ்கும்படி எங்களைவிட்டு நீங்கிச் செல்கின்றீர்; இவ்வாறு செல்கின்ற நீர், நாங்கள் இத்துக்கம் நீங்கி மகிழ்ச்சியுடையும்படி இனி எக்காலம் இந்நகரத்துக்குத் திரும்பிவருவீர்?" என்று வினவினார்கள்; அதற்கு அரிச்சந்திரன் தன்னிரண்டு கண்களாலும் அவர்களை நோக்கி, "அமைச்சரே! நான் இப்போது மனசம்மதத்தோடு எல்லாவற்றையும் விசுவாமித்திரருக்குக் கொடுத்துவிட்டேன்; இந்த இராஜ்ஜியத்தில் எனக்கு எவ்வித பாத்தியமுமில்லை; ஆதலால், இனி எந்தக்காலத்திலும் அயோத்திநகரத்திற்கு வருவதற்கேதுவொன்றுமில்லை; ஆயினும், தெய்வச்செய லெப்படியிருக்குமோ;

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்."

என்று பெரியோர் கூறியிருப்பதனால் ஈசன் செயலை எவராலு மறித லருமையாம்; நான் எதையும் உறுதியாகக் கூறுதல் முடியாது; எல்லாம் ஈசன் திருவுளப்படியே நடக்கும்," என்று கூறினான். அதைக் கேட்டவுடன் மந்திரிகளெல்லோரும் துக்கித்துக் கண்ணீர் சொரியத் தேம்பித் தேம்பி அழு

தார்கள். அச்சமயத்தில் அரசன்மீது மிக்க விசுவாசமுடைய சிலர், தங்களுக்கு அளவற்ற துக்க மதிகரித்தபடியால் அறிவு கலங்கி, இன்னதைத்தான் சொல்லவேண்டுமென்னும் ஒழுங்கின்றி, அரசனை நோக்கி, "அந்தோ! அரசர்பெருமானே! நீர் இவ்வித நிலைமையை யடைதற்குக் காரணம் முன்னே செய்திருந்த பாவந்தானோ? அல்லது விசுவாமித்திரமுனிவர் முன்னே உமக்கு ஏதேனும் உபகாரஞ் செய்ய நீர் முதல் பெற்று அதற்குக் கைம்மாருக இப்போது அவருக்கு அரசாட்சியைக் கொடுத்துவிட்டீரோ? இவ்வாறு நீர் இந்தப் பெரிய அரசாட்சியைக் கொடுத்து மனைவி மைந்தனுடன் பரதேசியாய் வெளியேறியதற்குக் காரணமியாது? ஒளிவீசுகின்ற நீண்ட வேலாயுதத்தையுடைய மன்னரேறே! வேலைக்காரருக்கும்,குடிஜனங்களுக்கும் இதமாகநடப்பவனே அரசனாவான்; அவ்வாறு அவர்களுக்குப் பிரியமாக நடக்காதவன் அரசனாகமாட்டான்; ஆதலால், அவர்கள் மனத்திற்குப் பொருந்தாத அரசனை நீக்கிவிட்டு வேறு அரசனை நியமித்துக் கொள்ள நியாயமுண்டு; அந்த நியாயப்படியே விசுவாமித்திரர் எங்களுக்குச் சம்மதமில்லாத அரசாதலின், நாங்கள் அவரை வேண்டாமென்று தள்ளிவிட்டால் அவர் என்ன செய்வார்?" என்று கூறினார்கள்; சிலர், "உம்மை இவ்வாறு துரத்திய அந்த விசுவாமித்திரரோடு சண்டை செய்வதற்கு நாங்கள் இப்பொழுதே செல்கின்றோம்," என்றுரைத்தார்கள்; சிலர், "அந்த வன்னெஞ்சனாகிய விசுவாமித்திரன் மான்றோல் பூணுவதான தன்னுடைய மார்பிலே பூமாலை பூணவும், தருப்பைகளை நுனியிலே சுருக்கிட்டு முடிந்து அவற்றை மோதிரங்களாக அணிந்துகொள்ளும் கையிலே செங்கோல் பற்றவும், திரிதண்டம் பிடிக்கின்ற கையிலே வேலாயுதம் பிடிக்கவும், மாசடைந்து நாறும் சடையிலே சுவர்ணகிரீடந் தரிக்கவும், நாங்கள் நேத்திரங்களாற் பார்த்து அந்தப் பரதேசியினுடைய ஆளுகைக் குள்ளிருந்து வீணாக அவனுடைய பாதங்களைத் தொழுது வாழ்வதைப் பார்க்கிலும் நெருப்பிலே மூழ்கி யிறப்பதே தகுதியாம்," என்றுருகினர்

கள்; சில சிற்றரசர்கள் அரிச்சந்திரனை நோக்கி, "நற்குண மெல்லாம் நிறைந்த கொற்றவ! நீரோ சம்மதித்து உம்முடைய அரசாட்சியை அந்த முனிவனுக்குக் கொடுத்துவிட்டீர்; இனி உமக்கும் அதற்கும் எவ்வித தொடர்புமில்லை; அது விசுவாமித்திருக்கே சொந்தமாய்விட்டது; அதை நீரே மீண்டும் கைப்பற்றினால் மாத்திரம் ஒருவாறு அது தோஷமாகும்; வேறு எவரேனும் அம்முனிவனோடு சண்டைசெய்து அவ்வாட்சியைக் கைப்பற்றிக்கொள்ள நியாயமிருப்பதால் அந்த நியாயப்படியே நாங்கள் அவனிடமிருந்து அதனைக் கைப்பற்றிக்கொள்வதால் தோஷமில்லை; ஆதலால், நாங்கள் இப்பொழுதே சென்று அந்த வஞ்சகனாகிய முனிவனோடு சண்டைசெய்து அவனுடைய சடையைப் பிடித்திழுத்தும், கைகளைப் பற்றியிழுத்தும், கால்களைப் பற்றியிழுத்தும், அவன் இடையிலணிந்திருக்கும் மாவுரியைப் பற்றியிழுத்தும் அவனைப் பலவாறு துன்பப்படுத்தி க்ஷணநேரத்திற்குள்ளே காட்டிற் கோடும்படித் துரத்திவிட்டு உடனே அரசாட்சியைக் கைப்பற்றி நாங்கள் சம்மதித்து உமக்குக் கொடுத்துவிடுகிறோம்; நீர் சந்தோஷமாக எங்களிடமிருந்து அதனை யேற்றுக்கொண்டு நீர் பாய்கிற வாய்க்கால்களையுடைய வயல்களாற் சூழப்பெற்ற வளம்பொருந்திய நாட்டை யாளுதற்கு வருவீராக; இதனால் எவ்வித தோஷமு மேற்படாது," என்று ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு அரிச்சந்திரனுடைய பாதங்களில் விழுந்து வணங்கினார்கள்.

இவ்வாறு பலரும் பலவிதமாகக் கூறிய வார்த்தைகளை அரிச்சந்திரன் கேட்டு இரண்டு கைகளாலும் செவிகளை மூடிக்கொண்டு, "அன்பர்களே! இஃதென்ன புத்தி; அந்தோ! பாவம்! பாவம்!! நீங்கள் என்மீதேற்பட்ட அன்பினாலும், துக்க மிகுதியாலும் இந்த வார்த்தைகளைக் கூறுகின்றீர்கள்; ஆயினும், நீங்கள் இவ்வாறு கூறுதல் தகாது; என்குடி கெட்டாலும், என்னுயிர் போனாலும் நான் மனமொப்பிக் கொடுத்த இராஜ்ஜியத்தை இனி எப்பொழுதும், எவ்வகையினாலும் திரும்ப ஏற்றுக்கொள்ளேன்; நீங்களே இந்தக் காரியத்தை

விரும்பிச் செய்யினும் நான் உங்களைத் தூண்டிவிட்டு இத னைச் செய்வித்ததாக விசுவாமித்திரர் கருதுவார்; ஆதலால், இனிமேல் இத்தகைய வார்த்தைகளைக் கூறுதிருப்பீராக," என்று சொல்லி மேலும் அவர்கள் மனந் தேறுமாறு வேறு பல நீதிகளையும் உரைத்தான். அவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும்போது அங்கே மறைந்து நின்ற விசுவாமித்திரர் மேலும் சில பொய் வார்த்தைகளைக் கூறி அரிச்சந்திரனுக்கு மிக்க கலக்கத்தை யுண்டாக்கக் கருதித் திடீரென அவன் முன்னே வந்து நின்றார். அப்படி நின்றமாத்திரத்தில் அரிச் சந்திரன் அவரைக் கண்டு திடுக்கிட்டு உடனே எழுந்து அவ ருடைய இரண்டு பாதங்களையும் சிரசின்மேற் சூடிக்கொண்டு வணங்கிக் கோபந்தங்கிய அவருடைய முகத்தை நோக்கி, "சுவாமி! இன்னும் அடியேனுலாகவேண்டிய காரியமியாது? எதை முன்னிட்டு இப்போது இவ் வேளையிடம் வந்தீர்? தயவுசெய்து அதைத் தெரிவிக்கவேண்டும்," என்று கூறி னன். அவன் அவ்வாறு வணங்கிக் கூறியும் விசுவாமித்திரர் முகமலர்ச்சி யடையாமல் கோபத்தாற் சிவந்த கண்களுடன் அவனைப் பார்த்து, "அடா துஷ்டா! நீ முன்னே வேடர் களை யேவி என்னு லனுப்பப்பட்ட மிருகங்களை யெல்லாம் அவர்களாற் கொல்லுவித்தாய்; நீயும் அவற்றைக் கொன்று குவித்தாய்; பின்னும் நீ கோபங்கொண்டு என்னு லனுப்பப் பட்ட பன்றியையும் அம்பாலெய்து வருத்தினுய்; என்னு டைய பெண்களிடம் பாட்டுக்கேட்டு அவர்களுக் கொன்றுங் கொடாமல் அவர்களைத் தீண்டியடித்து மானபங்கப்படுத்தித் துரத்தினுய்; இப்போதோ உன்னைச் சார்ந்தவர்களோடு சேர் ந்திருந்து புறங்கூறி என்னைத் திட்டினுய்; நீயே சம்மதித்து அரசாட்சியை எனக்குக் கொடுத்துவிட்டு மீண்டும் அதைப் பெற விரும்பித் தூரத்தில் வந்திருந்து இம் மனிதரோடு சேர்ந்து என்னைக் கெடுக்கச் சதி யாலோசனை செய்பலாமா? அரசாட்சியை நான் பெற்றுக்கொண்டபடியினுற்றுனே நீ இவ்வாறு என்னைக் கெடுக்க முயல்கின்றுய்? நீ இவர்களோடு சேர்ந்து பேசிக்கொண்டிருந்ததை நான் மறைவிலிருந்து

கேட்டுக்கொண்டேன்; இதை நன்றாக ஆராய்ந்து பார்க்கும் போது என்னுடைய உயிருக்கே அபாயம் வரும்போலிருக்கின்றது; அரிச்சந்திரா! இனி நான் எனக்குக் கேடாயிருக்கும் இராஜ்ஜியத்தை வேண்டேன்; அதை நீயே திரும்பப் பெற்றுக்கொள்; நான் உயிர் தப்பிப்போனால் போதும்; உலகத்தில் உன்னைப்போன்ற வஞ்சகனை நான் பார்த்ததேயில்லை; நான் சொல்லுகிறபடி நீ அரசாட்சியை இப்போது பெற்றுக் கொள்ளாவிடில் இவர்கள் செய்யுங் குற்றங்களை யெல்லாம் நீ செய்தவனாவாய்; நீ இவ்வாறு இவர்களோடு கலந்து யோசிப்பாயென்று நான் முன்னமே அறிந்திருந்தால் உன்னுடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன்; எனக்குப்பயமாயிருக்கிறது; விரைவில் இராஜ்ஜியத்தைப் பெற்றுக்கொண்டு என்னை அனுப்பிவிடு," என்று துடிதுடித்துக் கூறிக் குற்றமில்லாத அவன்மீது குற்றஞ் சுமத்தினர்.

அதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் மிகவுங் கலக்கங் கொண்டு அம் முனிவருக்குப் பன்முறை நமஸ்காரஞ்செய்து அவரை நோக்கி, "முனிவர் பெருமானே! அடியேன் இப்போது எவ்வித சதி யாலோசனையும் செய்யவில்லை; உம்மை நிந்தித்துப் பேசவுமில்லை; நீர் மறைந்து நின்று நாங்கள் பேசியதைக் கேட்டபடியால் நான் உமக்கு விரோதமாக ஒன்றும் பேசவில்லையென்பது உம்முடைய மனத்திற்கே தெரியும்; இவர்கள் விசேஷ ஞானமில்லாத சாதாரண மனிதர்களானபடியாலும், என்மீதேற்பட்ட அன்பினால் என்பிரிவுக் காற்றாமல் துக்கங்கொண்டிருப்பதாலும் மதிமயங்கி அறிவின்மையால், 'இன்னதைச் சொல்லலாம், இன்னதைச் சொல்லக் கூடாது,' என்னும் ஆலோசனையின்றிச் சில வார்த்தைகளைக் கூறினார்கள்; நான், அவ்வாறு கூறலாகாதென்று இவர்களுக்குப் புத்தி கூறினேன்; இவ்வாறு நான் கூறியதை நீர் கேட்டிருக்கும் என்மீது குற்றஞ் சுமத்துதல் நியாயமாகாது; இவர்கள் சிறியோர்களானபடியால் முன் பின் யோசியாமல் மதியீனமாகிய வார்த்தைகளைப் பேசிவிட்டார்கள்; இச் சிறியோர் அறியாமற் செய்த குற்றத்தை நீர் பொறுத்தருள

வேண்டும்; அவ்வாறு பொறுக்காவிட்டால் அச்செய்கை உம் முடைய பெருமைக்கும், பொறுமைக்கும், நீதிக்கும், அறிவுக்கும் சிறப்பை யுண்டாக்கமாட்டாது; நான் எட்டுணையும் அரசாட்சியை விரும்பவேயில்லை; இனி நீர் என்னைக் கொல்லுகிறதாயிருந்தாலும் உமக்குக் கொடுத்த அரசாட்சியை மீண்டும் நான் பெற்றுக்கொள்ளமாட்டேன்," என்று கூறினான்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரன்மேல் பொய்க் குற்றங் கூறி அவன் மனத்தைக் கலக்கி அரசாட்சியை மீண்டும் அவன் ஒப்புக்கொள்ளும்படிச் செய்து இச்சமயத்திலேனும் அவனை அநீதிக்குள்ளாக்க வேண்டுமென்று கருதிச் சென்றவராதலின், அவன் மேற்கூறியபடிச் சொல்லவே அம்முனிவர், "இந்த அரிச்சந்திரன், முன்னே நாம் யாகத்திற்குப் பொருள் வேண்டுமென்று கேட்க அவ்வாறே தடைசொல்லாமல் அப்பொருளைக் கொடுத்தான்; பின்னால் அரசாட்சியைக் கேட்க அதனையுங் கொடுத்தான்; அதன்பின் எத்தனையோ உபாயங்களைச் செய்தும் இவன் நீதியைவிட்டுச் சிறிதும் பிசகவில்லை; ஆதலால் இப்போது இவனை வருத்துவதால் நம்முடைய நோக்கமொன்றும் நிறைவேறமாட்டாது; இனி இவனுடைய குற்றங்களை மன்னித்துவிட்டதாக நடித்து இவன் சீலத்தைக் கெடுத்தற்கு வேறு சூழ்ச்சிகளைத் தேடிப் பின்னே இவனை நம்முடைய வழிக்குத் திருப்ப வேண்டும்; இப்போது இவனுடனே ஓராளை யனுப்பி இவன் நமக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக இவனைப் பலவாறு துன்பப்படுத்தும்படிச் செய்தால் ஒருவாறு இவன் அத்துன்பங்களைச் சகிக்கமுடியாமல் நீதி தவறி ஏதேனுமொரு காரியத்தைச் செய்வான்; அவ்வாறு செய்யின் நம்முடைய நோக்கம் நிறைவேறிப்போகும்; அல்லது இவன் பணங் கொடுக்க வேண்டிய கெடுவுக்குள் பொருள் கொடுக்க முடியாமல் தவறினுந் தவறுவான்; அப்படி நேர்ந்தாலும் நலமேயாம்; எப்படியாவது இனி இவனை ஒருபொய்யேனும் கூறும்படிச் செய்து நம்முடைய சபதத்தைப் பின்னால் நிறைவேற்றலாம்," என்று தமக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு அதன்

மேல் அவர் அரிச்சந்திரனை நோக்கி, "சத்தியத்திலும் கொடையிலுஞ் சிறந்த மன்னனே! நீ மிகவும் வணங்கிக் கேட்டுக்கொள்வதால் இப்போது உன்னுடைய குற்றங்களைப் பொறுத்துக்கொள்கிறேன்; நீ எனக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பணத்தைக் கொடுப்பாயோ கொடுக்கமாட்டாயோ என்று எனக்கு மிக்க சந்தேகமுண்டாகின்றது; அப்படி உன்னால் கொடுக்கமுடியாவிட்டால் இப்பொழுதே பணமில்லையென்று சொல்லிவிடு; நான் சந்தோஷமாகப் போய்விடுகின்றேன்," என்று கூறினார்.

அவ்வாறு கூறவே அரிச்சந்திரன், "சுவாமி! நான் உமக்குக் கொடுப்பதாகச் சம்மதித்த பொருள் பின்னை என்னாற் செய்யப்பட்ட தானத்தோடு உம்மிடமே சேர்ந்திருப்பினும், மீண்டும் அதை உமக்கு நான் தேடிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதால் அந்த வார்த்தைக்கு விரோதமாக எள்ளளவும் நடக்கமாட்டேன்; என்ன பாடுபட்டாவது நீர் கொடுத்த கெடுவுக்குள்ளே அந்தத் திரவியத்தைக் கொடுத்தே தீருவேன்; இவ்விஷயத்தில் நீர் சிறிதும் சந்தேகங் கொள்ளவேண்டாம்; நான் முன்னே கூறியபடி ஓராளை என்னுடன் வரும்படி அனுப்புவீரானால் அடியேன் அப்பொருள் முழுவதையும் அந்த ஆளிடம் தவறுமற் கொடுத்துவிடுவேன்," என்றுரைத்தான்.

விசுவாமித்திரர், துன்பப்படுத்திப் பணத்தை வாங்கும்படி அரிச்சந்திரனுடன் சுக்கிரனை யனுப்புதல்.

அப்போது விசுவாமித்திரர், "நல்லது அப்படியே செய்கிறேன்," என்றுரைத்து உடனே சுக்கிரபகவானை யழைத்து இரகசியமாக அவனிடத்தில், "சுக்கிரபகவானே! நீர் எனக்காக ஒருகாரியஞ் செய்யவேண்டும்; அஃதியாதெனில், இந்த அரிச்சந்திரனுடனே சென்று நாற்பத்தெட்டு நாட்களுக்குள் இவன் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கும் பணத்தை வாங்கி வரவேண்டும்; அப்பணம், ஒரு யானையின்மேல் வீரமுள்ள ஒரு மனிதனேறிக் கவண்கல்லைச் சுழற்றி மேலெறிந்தால்

அஃது எவ்வளவு உயரம்போகுமோ அவ்வளவு உயரமுள்ள குவியலாகும்; இந்த அளவுள்ள பொருளை நீர் இவனிடம் பெற்றுக்கொள்வதோடு இப்பொருளை வாங்குவதற்குள் இவனுக்கு அளவற்ற கஷ்டங்களையெல்லா முண்டாக்கவேண்டும்; இன்னும் அவ்வாறு கஷ்டப்படுத்தி இந்தக்கடன் பொருளைப் பெற்றுக்கொள்ளுவதல்லாமல் நீர் கூடச்சென்றதற்கு உமக்கு வேறு கூலிப்பொருளும் கணக்கிட்டு வாங்கிக்கொள்ளும்; நீர் இவனுடனே தொடர்ந்து ஆகாரமகப்படாத காடுகளிற் செல்லுங்காலத்தில், இவன் பசிக்கு அன்னங்கிடையாமல் காய் கனி கிழங்குகளைத் தேடிவருவான்; அப்போது நீர் உமக்கு மட்டும் நல்ல சோறு வேண்டுமென்று கூறி இவனைக் கஷ்டப்படுத்தவேண்டும்; அப்படியே ஒருவாறு இவன் உமக்கு அன்னந்தேடிக்கொடுத்தாலும், 'இது வயிற்றிற்குப் பற்றாது, ஆகையால் இந்தப் பற்றாச்சோற்றை நான் வேண்டேன்,' என்று சொல்லுவீராக; இவன் எங்கேனும் சோறு கிடைத்துண்ணும்போது, 'எனக்குப் பொருளைக் கொடுத்துவிட்டுப் பின்பு சாப்பிடு,' என்று நீர் இவனைத் தடுக்கவேண்டும்; இவன் பொருள் கொடுப்பதற்குள் நாம் கொடுத்த தவணை நாட்கள் கழிந்துவிட்டால் உடனே நீர் அங்கேயிருக்கும் மனிதர்களைச் சாக்ஷி வைத்துவிட்டு அப்பொழுதே என்னிடம் திரும்பி வந்துவிடவேண்டும்; இன்னும் நீர் இவனைப் பலவாறு துன்பப்படுத்தி முடிவில் இவனை நோக்கி, 'அரிச்சந்திரா! நீ எதற்காக இவ்வளவு கஷ்டப்படுகின்றாய்; விசுவாமித்திருக்கு நீ கொடுப்பதாகச் சொன்னபொருளை இல்லையென்று சொல்லிவிடு; அப்படிச் சொல்வாயானால் நான் இப்பொழுதே அவரிடமிருக்கும் உன்னுடைய அரசாட்சியை வாங்கி உனக்குக் கொடுத்துவிடுகிறேன்; நீ இல்லையென்று சொல்லும் ஒரு வார்த்தையினால் எல்லாச் சுகமும் கிடைக்கும்,' என்று நயமாகவும் தந்திரமாகவும் சொல்லவேண்டும்; அப்படிச் சொல்லும்போது இவன் ஒருவாறு பொருளை இல்லையென்று சொல்வதற்கு இணங்கினாலு மிணங்குவான்; அவ்வாறிணங்கி இவன் பொருளில்லையென்று சொல்லும்

பக்ஷத்தில் இவனை உடனே நம்மிடம் அழைத்துக்கொண்டு வந்துவிடும்; இந்த ஒரு காரியம் நிறைவேறினாலே நமக்குப் போதும்; இதனால் என் சபதம் நிறைவேறிவிடும்; எப்படியாவது உம்முடைய சாமர்த்தியத்தையெல்லாம் காட்டி நான் தெரிவித்தவைகளுள் ஒன்றையேனும் நீர் நிறைவேற்றி வர வேண்டும்," என்று வஞ்சனைகளையெல்லாம் உபதேசித்து அவனை ஒரு நச்சுவாய்ப் பார்ப்பானைப்போல வேடந்தரித்துக் கொள்ளும்படிச் செய்து அரிச்சந்திரனிடம் அழைத்துவந்து அவனை அம்மன்னனுக்குக் காட்டி, "அரிச்சந்திரா! இவ் வந்தணர் உன்னுடன் வருவார்; இவரை மிகவும் மரியாதையாகவும், கஷ்டமின்றியும் அழைத்துக்கொண்டுபோய்த் தவணைக்குள் பொருளைக் கொடுத்தனுப்பிவிடு; என்மேல் மனஸ்தாபங் கொள்ளாதே," என்று சொல்லி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றார்.

அப்படி விசுவாமித்திரர் செல்லவே அரிச்சந்திரன், பிரிவாற்றாமையால் தன்னோடுகூட வந்திருந்த மனிதர்களைப் பார்த்து, "அன்பர்களே! நீங்கள் இதுவரை என்னுடன் தொடர்ந்து வந்தது போதும்; இனி விசுவாமித்திருடனே திரும்பிச் செல்லுங்கள்; அவருக்கு நல்லவர்களே எனக்கும் நல்லவர்களாதலால், நீங்கள் அவர் நோக்கம்போல் நடந்து கொள்ளுகலே என்னிஷ்டம்போல் நடந்துகொண்டதாகும்," என்று சொல்ல, அவர்களெல்லோரும் அழுதுகொண்டே அம் மன்னனுரையை மறுக்காமல் திரும்பிச் சென்றார்கள். அதன்மேல் விடியற்கால நேரத்தில் பனிகாய்வதற்கு முன்னே அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும், சுக்கிரனும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். அப்போது சத்தியகீர்த்தியென்னும் மந்திரிமாத்திரம் அரசனை விட்டுப் பிரிந்து திரும்பிச் செல்வதற்கு மனமில்லாமல் அவர்களுக்குப் பின்னே தொடர்ந்து சென்றான்.

அப்படிப் பின்றொடர்ந்து சென்ற சத்தியகீர்த்தியை அரிச்சந்திரன் வருத்தத்தோடு பார்த்து, "மந்திரி! உனக்கு

என்மீதேற்பட்ட அன்பினால் நீ கண்ணீரொழுக உருகுகின்ற மனத்துடனே என்னோடு வந்துவிடுவாயானால், அயோத்தியில் விசுவாமித்திருக்கு உற்றவர் யாரிருக்கின்றார்கள்? அவரருகிலிருந்து அரசாட்சியை நடத்துவிக்கத் தக்கவர் ஒருவருமில்லை; நீ என்னோடு நீண்டகாலமாகச் சேர்ந்து அரசாட்சியை நடத்தி வந்தபடியால் உனக்கு அவ்விஷயத்தில் மிகவும் அனுபவமுண்டு; நானில்லாத சமயத்தில் நீயேனுமிருந்தால் குடிகளுக்குச் சிறிது திருப்தியா யிருக்கும்; ஆதலால், நீ இப்போது அயோத்தி நகரத்திற்கே திரும்பிச் செல்வாயாக," என்று கூறினான். அவ்வாறு கூறவே சத்தியகீர்த்தி மிகவும் மனக்கலக்கத்தை யடைந்து அரசன் முகத்தை நோக்கி, "மன்னர் பெருமானே! இதுவரை உம்முடைய ஊழியங்களை யெல்லாம் பாவிபாகிய யான் செய்துகொண்டு வந்தேன்; இப்போது என்னை யனுப்பிவிட்டு நீர் தனியாகச் செல்வீரானால், அவ்வாறு போகும் பாலைவனம் முதலிய கஷ்டமான விடங்களிலெல்லாம் உமக்குக் குற்றேவல் செய்வாரியாவர்? என் தாயாகிய சந்திரவதியும், என் சகோதரனாகிய தேவதாசனும் உம்முடனே கூடவர, நான் மாத்திரம் வாராமற் றிரும்பிச் செல்வேனானால் என்னைப்போன்ற பாவி உலகத்தி லொருவனுமிரான்; நீர் செல்வத்தோடு வாழுங்காலத்தில் உம்முடனிருந்து உம்முடைய சோற்றையுண்டு எல்லா நலங்களையு மனுபவித்து மகிழ்ச்சியடைந்த யான், உமக்குக் கேடுவருங் காலத்தில் அக் கேட்டையும் அனுபவியாமற் போவேனானால் நான் மனிதருட் பதராவேன்; ஏரியில் நீர் நிறைந்தகாலத்தில் தாமும் செழிப்புற்றிருந்து அந்நீர் வறண்டு அவ்வேரி காயும்போது தாமும் வறண்டு காய்கின்ற கொட்டி, ஆம்பல் முதலியவற்றைப்போல உத்தமர்கள், தம்முடைய நேயர் செழித்தபோது தாமும் செழித்து, அவர் கெடும்போது தாமும் அக்கேட்டை யனுபவிக்கவேண்டும்; குளத்தில் நீர் நிறைந்திருக்குங் காலத்தில் சேர்ந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து அந்நீர் வறண்டகாலத்தில் எள்ளளவும் அன்பின்றி வேற்றிடஞ் செல்லும் நீர்க்காகம் முதலிய பறவை

களைப்போல நேயர்க்குத் தீங்குவருங்காலத்தில் தம் சுயநபத்தைக் கருதிப் பிரிந்து செல்வோர் நாயினும் தாழ்ந்தவராவார்; ஆதலால், இச்சமயத்தில் உம்மைவிட்டு நீங்கிச் செல்ல என் மனம் அணுவளவும் இணங்கவில்லை; நான் நீங்கிச் செல்வேனானல் உயிருடன் வாழ்வதரிதாகும்; என்மீதன்பற்று நீர் என்னைப் போகும்படிச் செய்வது அழகன்று," என்று சொல்லி இடிவிழுந்த மரம்போல அடியில் விழுந்து பெருமூச்சுவிட்டுத் தேம்பியழுதான்.

சத்தியகீர்த்தி அப்படி அடியற்ற மரம்போல் படியில் வீழ்ந்து புலம்பவே அரசன், அவனுடைய அன்பையும் மனவுறுதியையும் நோக்கி மனங்கரைந்து கண்ணீர் விட்டு, உடனே அம்மந்திரியை யெடுத்து மார்போடணைத்து அவனுடம்பிலுள்ள புழுதிகளை யெல்லாந் துடைத்து அவன் தலையைத் தடவிக் கண்ணீரைப் போக்கி மனக்கலக்கத்தை நீக்கி, "மந்திரி! உன் மனத்தின்றன்மையை நான் உணர்ந்து கொண்டேன்; நீ என்னைவிட்டுப் பிரிந்தால் நிச்சயமாக உயிர் விடுவாயென்பது எனக்கு நன்ருக விளங்குகின்றது; ஆதலால், உன்னிஷ்டப்படியே நீ என்னுடன் வருவாயாக; இனிச் சிறிதும் வருந்தாதே; நான் நல்வினைவசத்தினால் வாழ்வடைந்தகாலத்தில் நீ என்னுடனிருந்து வாழ்வடைந்தாய்; நான் தீவினை வசத்தினல் தாழ்வடைந்த இக்காலத்தில் நீயும் என்னோடு வந்து தாழ்வடைதற் கிசைந்தாய்; உன்னைப் போன்ற பெருங்குணம் படைத்த மதிமந்திரியை எங்கும் எப்போதும் காணபதரிதாகும்; இப்போது நமக்கு வந்திருக்கும் துன்பங்களெல்லாம் ஊழ்வினைப் பயனாலேயே வந்திருக்கின்றன; விதியை விலக்கவல்லோ ரியாவர்? ஆதலால், இப்போது இந்தத் தாழ்வை நினைத்து நாம் வருந்தலாகாது," என்று பல தேறுதலான வார்த்தைகளைக் கூறி அவனையும் தன்னோடழைத்துக்கொண்டு சென்றான்.

அப்படிச் சென்ற அரிச்சந்திரன் மேற்கூறிய சத்தியகீர்த்தி பின்பற்றி வரவும், விஷத்தைப்போலும் கொடிய

செய்கையையுடைய சுக்கிரன் முன்னே செல்லவும், சந்திரமதியும் தேவதாசனும் பக்கத்தில் வரவும் மிக்க வளத்தைக் கொண்ட அயோத்திநாட்டின் எல்லையைக் கடந்துபோனான். அப்போது சந்திரமதி, தான் எல்லையைவிட்டுக் கடந்துசென்ற நெடுந்தூரத்திற் கப்பாலுந் தோற்றும் அயோத்திநகரத்தில் மின்னலைப்போன்று பிரகாசிக்கும் பொன்மாளிகைகளையும், ஆகாயம்வரையி லுயர்ந்து தோன்றும் கோபுரங்களையும், மேகமண்டலம்வரை மேலோங்கி விளங்கும் மதிலையும் பார்த்து, "உங்களுறவு இன்றோடு தொலைந்தது," என்று சொல்லிக் கண்ணீர்விட் டழுதுகொண்டு, மலர்போன்ற பாதங்களில் முள்ளுங் கல்லு மழுத்துவதால் துடிதுடித்துத் தள்ளாடி நடந்து சென்றாள். அவ்வாறு சந்திரமதி தாமரை மலர்போன்ற பாதங்கள் துடிதுடிக்க அடியெடுத்து வைத்து நடக்கும் விதத்தை, அரசர்க்கரசனான அரிச்சந்திரன் பார்த்து அனலிவிட்ட மெழுகைப்போல மனமுருகி, "ஈசுரனுடைய கிருபை இவ்வாறாயிற்றே," என்று வருந்தினான்.

அரிச்சந்திரன் முதலியோர் நகரைவிட்டு நீங்கி ஒரு பாலைவனத்திற் சென்று வருந்துதல்.

மேற்கூறியபடி மனம் வருந்திச் சென்ற அரிச்சந்திரனும், மற்றவர்களும் பின்னர் நெடுந்தூரம் நடந்து நடுப்பகல் நேரத்தில் சூரியனாலே தாங்கவொண்ணாத வெப்பங்கொண்டு கொதிக்கும் ஒரு பாலைவனத்திற்குள்ளே சென்றார்கள். அந்தோ! அவர்கள் அவ்வாறு சென்றவுடன் மிகவும் கொதிப்புற்ற பூமியானது நெருப்பைப்போன்று அவர்களுடைய பாதங்களைச் சுடவும், அப்பூமியிலிருந் தெழுகின்ற தூளிகள் உடம்பிற் படிந்து சுடவும், எல்லாவற்றையும் தகிக்கின்ற கொடிய வெயிலானது தலைமேற் சுடவும் மிகவும் பதைபதைத்து நெருப்புச்சுவாலையிலே பூங்கொடி சிக்கி வதங்குவதுபோல வதங்கினார்கள். அப்படி எல்லோரும் வாடிச் செல்கின்ற காலத்தில் அப்பாலைவனத்தின் வெப்பத்

தைக் கண்டு இளம்பாலனாகிய தேவதாசன் சகிக்கமாட்டா னென் றஞ்சிச் சத்தியகீர்த்தி அப்பாலனைத் தூக்கிக்கொண்டு நடந்தான். அத்தருணத்தில் சந்திரமதி வெப்பஞ் சகிக்கா மல் அடையும் துன்பத்தை அரிச்சந்திரன் கண்டு அவள் சமீபத்திற் சென்று, "என் ஆருயிர்த்துணைவியே! நீ இப் பாலைவனத்தின் வெப்பத்தா லடையுங் கஷ்டத்தைப் பார்த்து என் மனம் வெயி லெதிர்ப்பட்ட வெண்ணெய்போன் றுரு கிக் கரைகின்றது; ஐயோ! அனிச்சம்பூவினு மெல்லிய உன் பாதமானது இக்கொடிய வெப்பத்தைத் தாங்காது; ஆத லால், என் தோள்மே லேறிக்கொள்வாயாக," என்று கூறி னன். அந்த வார்த்தையைக் கேட்டவுடனே சந்திரமதி, 'சிவ சிவா!' என்று செவிகளை மூடிக்கொண்டு, அரிச்சந்திரனை நோக்கி, "அச்சத்தைத் தருவதான வேலாயுதத்தைக் கையி லே தாங்கிய மன்னர் பெருமானே! என்ன வார்த்தையைச் சொன்னீர்கள்! இலக்குமிதேவியும், பூமிதேவியும் தங்கி யிருக்கத்தகுந்த தங்களுடைய தோள்களிலே கேவலம் நாயி னுந் தாழ்ந்த பெண்பாலாகிய யான் ஏறத்தகுமோ? நான் அவ்வாறு செய்வேனானால் மீளா நரகிற் காளாவேன்; இனி இவ்வித வார்த்தையைக் கூறவேண்டாம்; தாங்களே இந்த வெப்பத்தைச் சகித்து நடந்து செல்லும்போது அடியாள் நடந்துவரக்கூடாதா? என் னுயிர்போயினும் யான் தங்க ளுடைய தோள்மீதேறேன்," என்று கூறினாள். அதைக் கேட்டு அரிச்சந்திரன் கண்களிலே நீரொழுக, 'அந்தோ! என்னகாலம் வந்தது,' என்று பெருமூச்சுவிட்டு மனம் நொந்து சந்திரமதியைப் பார்த்து, "பரிமள மிகுந்த கூந்தலை யுடைய பெண்மணியே! நீ எல்லா நீதியும் தெரிந்தவள்; அறிவிற் சிறந்தவள்; உன் புத்திக்குத் தக்கபடியே தாழ்மை யான வார்த்தைகளைக் கூறுகின்றாய்; நீ சொல்வது ஒழுங்காயி னும் நீ படும் துன்பத்தைக் கண்டு என் மனம் பதைக்கின் றதே; என்னாற் சிறிதேனும் சகிக்க முடியவில்லையே; என் செய்வேன் பாவி," என்று சொல்லி அழுது மிருதுவாக அவளை அழைத்துக்கொண்டு சென்றான்.

அவ்வாறு செல்லும்போது விசுவாமித்திரர், பாலை வனத்தின் வெப்பத்தால் அவர்கள் படுந் துன்பம் போதாதென்று மேலும் பல துன்பங்களைச் செய்யக் கருதிக் கொழுந்துவிட்டெரியும் நெருப்பிலே மேலும் நெய்யைச் சொரிவதுபோல அவர்களுடைய பாதங்களெல்லாம் வெம்பிக் கரியாகும்படி சுடுகின்ற அப்பாலைவனத்திலே கட்டெறும்பு, தேள், பாம்பு, கருங்குளவி, பூரான் ஆகியவைகளை அளவில்லாமல் சிருஷ்டித்து வழியில் சஞ்சரிக்கும்படியனுப்பினர். அப்படி யனுப்பவே அப்பாலைவனத்தில் பட்டுப்போன மரங்கள், மேடுகளிற் சூழ்ந்த பாறைகள் ஆகியவிடங்களில் பாம்புகள் முட்டையிட்டு அடைகிடந்து படமெடுத்தாடியும், அட்டைகள் ஆங்காங்கே ஊர்ந்து பாவியும், கட்டுவிரியன், தேள், அரணை ஆகியவைகள் இடையிடையே குறுக்கிட்டோடியும் இவையெல்லாந் திரண்டு எங்கும் கால் வைக்க இடமில்லாமல் நிறைந்தன. அக்கொடிய ஜெந்துக்கள் அங்ஙனம் நிறைந்தமாத்திரத்தில் அரிச்சந்திரன் முதலியவர்கள் நடக்கும்போது அவர்களுடைய பாதங்களி னுட்புறத்திலே பல எறும்புகள் கூடிக் கடித்தன; நெருங்கின பல வகைப் பூரான்களுடனே அட்டைகளும் கடித்தன; நீண்ட பாம்புகள் தொடர்ந்து சென்று அவர்களுடைய கால்களிற் சுற்றிக்கொண்டு வேதனை செய்தன; பலவகைக் கருங்குளவிகள் சூழ்ந்து தேகத்திற் கொட்டித் துன்பப்படுத்தின; அவ்வாறு அவைகள் கடித்தும், கொட்டியும், சுற்றியும் வருத்தியதனல் அவர்களுடைய தேகமெங்கும் காயமாகியும் வெப்பத்தினுல் கால்களிற் கொப்புளங்களுண்டாகியும் அவர்களெல்லோரும் சகிக்க முடியாத வேதனையை யடைந்து, "ஐயோ! இவ்வாறு துன்பத்தை யடைவதைக் காட்டினும் இறந்து போவது நலமாம்," என்று சொல்லி வருந்தினர்கள். அவர்களுடைய மேனிகள்கருகி அழகுங்கெட்டு நெஞ்சங்கள் துடித்தன. அப்படி எல்லோரும் நடுங்கிவருந்துங்காலத்தில் சந்திரமதி தன்னுடையபொன்போன்ற தேகங்கறுப்பாகித் தனக்கு முன்னே படம் விரித்துச் சீறிக்கொண்டு வரும் பல அரவங்

களைக் கண்டு திடுக்கிட்டுப் பதறித் துடிதுடித் தோடினாள்; அவள் அவ்வாறு பயந்தோடுவதை ஆகாயத்திலுள்ள தெய்வப்பெண்கள் கண்டு பயந்து, "இந்த உத்தமிக்கும் இவ்விதி வரலாமோ," என்று கூறித் தங்கள் தாமரைமலர்போன்ற கைகளால் கண்களை மூடிக்கொண்டார்கள். இன்னும், அந்தச் சந்திரமதியும், அரிச்சந்திரன்முதலிய மற்றவர்களும் சூரியகிரணத்தால் வெதும்பி நாவறண்டு தாகங்கொண்டு அங்கே ஜலமுங் கிடையாமல், ஒதுங்குதற்கு நிழலு மகப்படாமல் கண்சுழன்று மயங்கிப் பேய்த்தேராகிய கானலைத் தண்ணீரென்று நினைத்து அது தோன்று மிடங்களிலெல்லாம் விரைந்தோடி யோடி மேன்மேலும் தளர்ச்சியடைந்து கால்கள் சிவந்து மனங் கலங்கினார்கள். அங்ஙனங் கலக்கத்தை யடைந்த அவர்கள் அதன்மேல் வேருடனே வெந்து கிடந்த மரத்தின் நிழலிலாவது ஒதுங்கி இளைப்பாறலாமென்று கருதி அந்நிழல்களிற் சென்று அங்கே கிடந்தபாம்புகள் சீறித் தங்கள்மீது பாயப் பின்னும் மனக்கலக்கத்தோடு விலகி யோடி வாட்டமுற்றார்கள். அப்படிப் பலவிதத்தாலும் எல்லோரும் வாட்டத்தை யடைந்து கண்ணீர் விடுஞ் சமயத்தில் எல்லோரையுங் காக்க வல்லவனாகிய அரிச்சந்திரன் அந்தத் துன்பங்களை யெல்லாங் கண்டு, "ஐயோ! உலகத்தில் எங்களைப் போலத் துன்ப முற்றவர்கள் ஒருவருமிரார்; எங்களுடைய தலைவிதியினாலேயே இத்தகைய துன்பம் நேர்ந்தது; இத்துன்பம் மும்மூர்த்திகளாலும் நேர்ந்ததன்று; அந்த விசுவாமித்திரராலும் நேர்ந்ததன்று; மற்றத் தேவர்களாலும் நேர்ந்ததன்று," என்று கூறி வேறெவரைப்பற்றியும் வருந்தாமல் தன்னுடைய தலைவிதியையும், தன்னைச் சேர்ந்தவர்களுடைய தலைவிதியையும்பற்றி நொந்துகொண்டான்.

அரிச்சந்திரன் கோமதியாற்றை யடைதல்.

மேற்கூறியபடி நொந்து சென்ற அரிச்சந்திரன் அந்தப் பாலைவனத்திலே பின்னும் நெடுநேரம் வரை பலவிதமான கஷ்டங்களை யெல்லா மடைந்து சென்று அதன்மேல் சந்திர

மதி முதலியவர்களுடன் கொடிதான அந்தப் பாலைவனத்தைக் கடந்து குளிர்ச்சி பொருந்திய நீர் நிறைந்த கோமதியாற்றினருகேயுள்ள முல்லைநிலத்திற் போய்ச் சேர்ந்தான். அப்போது, "இம்முல்லைநிலத்திலுள்ள மிருகங்கள் நம்மை வருத்தும்," என்று அஞ்சிப் பயந்தோடி மறைவதுபோல் சிவந்த நிறத்தையுடைய சூரியன் தன்னுடைய கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்றிசைக்கடலிலே மூழ்கி மறைந்தான். அவ்வாறு சூரியன் மறைந்த சமயத்தில் அங்குப் போய்ச் சேர்ந்த அரிச்சந்திரன், மேகங்கள் தவழுகின்ற மலைச் சிகரத்திலிருந்து கீழிறங்கிக் குறிஞ்சிநிலத்தைத் தாண்டி முல்லைநிலத்திற் பாய்ந்து வருவதான அந்தப் பெரிய கோமதியாற்றின் சமீபத்திற் போய் அழகான துறையிலே சந்திரமதி முதலியவர்களுடனிறங்கி நீருண்டு அந்நதிக்கரையிலுள்ள ஒரு மணல்மேடையில் தங்கி விசுவாமித்திரர் செய்த தீங்குகளை நினைத்துக் கண்ணீர் வடித்துக்கொண்டு இளைப்பாறியிருந்தான். பாலைவனத்தில் உண்டான கஷ்டங்களெல்லாம் விசுவாமித்திரரால் ஏற்பட்டவைகளாதலால் அவற்றால் சுக்கிரனுக்குத் துன்பமுண்டாகவில்லையாயினும் அவனும் கஷ்டப்பட்டவன்போல் நடித்திருந்தான். அப்படியிருக்கும்போது சத்தியகீர்த்தியென்னும் மந்திரியானவன், தான் பாலைவனம் முதலிய விடங்களில் நடந்து காலோய்ந்து வருந்தியிருந்தும் அவ்வருத்தத்தைப் பெரிதாக எண்ணாமல், அரசன் முதலியோருடைய பசியை நீக்கக் கருதி உடனே யெழுந்து பக்கத்திலுள்ள சோலையிற் சென்று காய், கனி, கிழங்கு முதலியவற்றைத் தேடிக்கொண்டுவந்து அரிச்சந்திரனுக்கு முன்னே வைத்து அவனை நோக்கி, "எம்மிறைவனே! இவற்றை நீரும் மற்றவர்களும் தின்று இளைப்பாறுவீராக," என்று கூறி அவனுடைய பாதங்களை வணங்கினான். அவ்வாறு கொடுத்தவுடனே அரிச்சந்திரன் அவற்றை வாங்கி அவைகளில் மிகுந்த சுவையுள்ள பழங்களைத் தேர்ந்தெடுத்து வைதிகப் பிராமண வடிவங்கொண்டு அவனுடன் சென்றிருந்த சுக்கிரனுக்கு முன்னே வைத்து அவனை

நோக்கி, "சுவாமி! நீர் வெயிலால் இளைத்து மிகவும் வாட்டமுற்றிருக்கின்றீர்; ஆதலால், இந்தக் கனிகளைத்தின் றிளைப்பாறுவீராக," என்று சொல்லி வேண்டினான். அவ்வாறு அரிச்சந்திரன் அன்புடனே சொன்ன வார்த்தையைக் கேட்டவுடன் அச்சுக்கிரன் உதட்டை மடித்து நீண்ட பற்களாலே கடித்துக்கொண்டு மிகவுங் கோபமுற்றுக் கண் சிவந்து அம்மன்னனைப் பார்த்து, "அரிச்சந்திரா! நல்ல காரியஞ் செய்தாய்! தயிர், நெய், பால் ஆகியவைகளுடன் சேர்த்து அறுசுவை பதார்த்தங்கள் நிறைந்த சோற்றை யுண்டு சுகமாக வாழ்ந்துவந்த யான் இப்போது மிருகங்களைப்போன்று இந்தக் காய் கனி கிழங்குகளை எவ்வாறு தின்று பசியைத் தணித்துக்கொள்வேன்? நீ விசுவாமித்திரருக்குக் கடன் படுவாயென்பதும், அக்கடனை வாங்கும்பொருட்டு நான் உன்னுடன் வந்து இந்தக் காட்டில் ஆகாரமின்றி வருந்துவேனென்பதும் முன்னமே எனக்குத் தெரிந்திருக்குமானால் அப்பொழுதே இந்தக் காய் கனி கிழங்குகளைத் தின்று பழகியிருப்பேன்; நான் இவ்விஷயத்தை யறியாதபடியால் அவ்வாறு இவற்றைத் தின்று பழகவில்லை; பழக்கமில்லாத யான் இவற்றைத் தின்னவேமாட்டேன்; நீதான் உன்னுடைய கெட்டகாலத்தால் இவற்றைத் தின்ன விசைகின்றாய்; நான் ஏன் தின்னவேண்டும்? இவற்றைத் தின்றால் என் உடம்புக்குக் கேடுண்டாகும்; நான் இவற்றிற் சிறிதும் தின்னமாட்டேன்; எனக்கிப்போது அறுசுவைநிறைந்த அன்னந் தேடிக் கொடுத்தால் மாத்திரம் நானுண்பேன்; இல்லையேல் நீ விசுவாமித்திரருக்குக் கொடுக்கவேண்டிய கடனை இல்லையென்று சொல்லிவிடு; நான் இப்பொழுதே திரும்பிச் செல்கின்றேன்," என்று துடிதுடித்துக் கூறினான்.

அவ்வாறு சுக்கிரன் கூறவே அரிச்சந்திரன் மிகவும் மனங்கலங்கி, வார்த்தை தடுமாறி, நாவறண்டு அந்தச் சுக்கிரனெதிரே முகவாட்டத்துடன் நின்று, அவனுடைய பாதங்களை வணங்கி, "சுவாமி! நான் என்னுடைய நாட்டையும் நகரத்தையும் விசுவாமித்திருக்குக் கொடுத்துவிட்டு மிகவும்

தரித்திரனாகி மனிதர் செல்லமுடியாத பாலைவனங்களிலும், முட்கள் நிறைந்த காடுகளிலும், மேடுகளிலும் நடந்து வருந்தி வருவதைத் தாமும் கூடவே யிருந்து தெரிந்துகொண்டு வருகின்றீர்; உமக்குத் தெரியாததொன்றுமில்லை; இந்நடுக் காட்டில் நீர் அன்னங் கேட்டால் அஃது எங்கே கிடைக்கும்? நான் எவ்விடம் சென்று அதைக்கொண்டுவருவேன்? நானே பலவிதத்தாலும் மிகவும் தளர்ச்சி யடைந்திருக்கின்றேன்; இச்சமயத்தில் நீரும் என்னைக்கஷ்டப்படுத்துவது சரியன்று; என்மீது பரிபூரண கிருபைசெய்து இக் கனிகளை இப்போது தின்றால் பின்னர் ஒரு நகரத்திற் சேர்ந்தவுடன் உமக்கு அறுசுவை யுண்டி தேடிக்கொடுப்பேன்; இவ்வாறு என்னைக் கலக்கி விசுவாமித்திரருக்குக் கொடுக்கவேண்டிய கடனை இல்லையென்று சொல்லும்படி நீர் வற்புறுத்துவது நியாய மாகாது; என் தலைபோனாலும் நான் அவ்வாறு கூறமாட்டேன்," என்று தாழ்மையான வார்த்தைகளைக் கூறினான். அச்சமயத்தில் சந்திரமதியும் வணங்கி அச்சுக்கிரனிடத்தில், "அந்தணர்பெருமானே! விசுவாமித்திரர்தாம் வன்னெஞ் சுடையவரென்று நாங்கள் நினைத்திருந்தோம்; உம்முடைய தன்மையைப் பார்த்தால் நீரும் அவரைப்போலவே கன்னெஞ்சமுடையவராயிருக்கின்றீர்; சிறிதேனும் இரக்கமின்றி நடுக்காட்டில் எங்களை இவ்வாறு துன்பப்படுத்துதல் தகாது; ஏழைகளாகிய எங்கள்மீது கிருபை செய்வீராக," என்று சொன்னாள். அதன்மேல் சுக்கிரன் அரிச்சந்திரனுடைய முக வாட்டத்தையும், சந்திரமதியினுடைய கலக்கத்தையும்பார்த்துச் சிறிது மனமிளகி, "ஆரம்பத்திலேயே இவர்களுக்கு மிகுந்த கலக்கத்தை யுண்டாக்கலாகாது; பின்னே பார்த்துக் கொள்ளலாம்," என்று கருதி அரிச்சந்திரனை நோக்கி, "அரசனே! நான் இனிமேல் வருந்துவதிற் பயனில்லை; தெரியாமல் உன்னிடம் வந்தகப்பட்டுக்கொண்டேன்; அரசமரத்தைப் பிடித்த சனியன் விநாயகரையும் சேர்த்துப் பிடித்ததுபோல் உன்னைப்பற்றிய தரித்திரம் என்னையும் பற்றிக்கொண்டது; இப்போது இவற்றைத் தின்றுதான் தொலைக்கவேண்டும்;

வேறு வழியில்லை; என் செய்வேன்; என்னுடைய தலைவிதி இப்படி ஏற்பட்டிருக்கின்றது," என்று சொல்லி முகத்தைச் சுழித்துக்கொண்டு சம்மதியில்லாதவன்போன்று நடித்துப் பின்னர் அந்தப் பழங்களை வயிறு கொள்ளுமட்டும் தின்று தெளிவான ஜலத்தைப் பருகி ஏப்பமிட்டான். அதன்மேல் அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும், சத்திய கீர்த்தியும், சுக்கிரன் தின்று மீதியாயிருந்த பழங்களையும், தங்களிடமிருந்த காய் கனி கிழங்கு முதலியவற்றையும் அந்தச் சுக்கிரன் கட்டளையிட்டதன்மேல் தின்று தண்ணீர் குடித்து மண்மீது படுத்துக்கொண்டார்கள்; சுக்கிரனும் ஒரு பக்கத்தில் விழுந்து கிடந்தான். அச்சமயத்தில் அரிச்சந்திரன், மண்மேற் படுத்திருக்கும் தன்னுடைய புத்திரனாகிய தேவதாசனைப் பார்த்து ஆறாத்துபர மடைந்து, "என் குலம் சிறப்புற வந்துதித்த கோமகனே! உனக்கும் இவ்வாறு நேர்ந்ததே," என்று சொல்லி அவன்மீது கண்ணீரை வடித்தான்; அதைக் கண்டு சந்திரமதியும் தன் தோள்களின் வழியே கண்ணீரொழுக அழுதுகொண்டு படுத்திருந்தாள்.

அரிச்சந்திரன் மழையினால் துன்பமுறல்.

அப்படி எல்லோரும் அவ்விடத்திற்படுத்திருக்கும்போது நஞ்சினை நிகர்த்த நெஞ்சினையுடையவராகிய விசுவாமித்திரர் மேலும் அவர்களுக்குத் துன்பத்தை யுண்டாக்கக்கருதி உடனே சப்தமேகங்களையு மழைத்து, "நீங்கள் அரிச்சந்திரன் முதலியோர் படுத்திருக்குமிடத்திற்சென்று ஆகாயமும் பூமி மறைய இருண்டு அண்டங்கள் வெடிபடும்படி இடித்து முழங்கிஅளவற்றமழையைச்சொரிந்து அவர்களுக்கு மிகுந்த துன்பத்தைச் செய்யுங்கள்," என்று கட்டளையிட் டனுப்பினார். அவ்வா றனுப்பவே அந்த மேகங்களெல்லாம் திரண்டு வந்து அரிச்சந்திரன் முதலியோர் படுத்திருக்கு மிடத்திற் கூடி யுகாந்தகாலத்தைப்போல எங்கும் மூடி உலகமெல்லாம் அதிரும்படி முழங்கி மின்னிச் சண்டமாருதப் பெருங்காற்று வீச விடாமழையைச் சொரிந்தன. அப்படிச்சொரிந்த மழை

யினால் அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும், சத்தியகீர்த்தியும், நனைந்து தேகமெல்லாம் நடுக்கங்கொள்ளவும், பாதங்கள் சேற்றிலே யழுந்தவும், பற்கள் கிடுகிடென்ருடி ஒன்ருேடொன்று மோதவும், மழைத் துளிகளால் உடம்பு வருந்தவும் மிகவும் கலக்கமுற்றுப் பதறினார்கள். அவ்வாறு பதறும்போது எங்கும் ஜலம் திரண்டு கான்யாறுகள் பெருக்கெடுத்தோடத் தலைப்பட்டன. அப்போது அரிச்சந்திரன், தான் செல்லக் கருதியிருக்கும் வழியிற் குறுக்கே சென்றுகொண்டிருந்த ஒரு கான்யாற்றைக் கண்டு, "இன்னும் சிறிதுநேரம் சென்றால் இந்த ஆறு மிகவும் பெருகி நம்முடைய பயணத்தைத் தடுத்துவிடும்; ஆகலால், இதனை விரைவில் கடந்துவிடவேண்டும்," என்று கருதி உடனே சுக்கிரனை நோக்கி, "அந்தணரே! மழையோ உபாமற் பெய்கின்றது; எங்கும் ஜலம் பெருகி போடுகின்றது; இன்னும் சிறிது நேரத்திற்குள் நமக்கெதிரே யுள்ள கான்யாருனது அதிகமாகப் பெருகி நம்முடைய பிரயாணத்தைத் தடுத்துவிடும்; நாம் இப்போதே இந்த ஆற்றைக் கடந்து அப்பாற் சென்றுவிடவேண்டும்; அவ்வாறு இதனைக்கடந்து செல்வோமானல் வேறெங்கேனும் ஒரு தகுதியான விடத்தைத் தேடி அங்கே படுத்துக்கொள்ளலாம்; தாமதியாமல் புறப்படுவீராக," என்றுரைத்தான்.

அதைக் கேட்டவுடனே சுக்கிரன், அத்துன்பங்களெல்லாம் விசுவாமித்திரரால் நேர்ந்தவையென்று தானறிந்து கலங்காதிருந்தும் வெளிக்கு அச்சமுற்றவன் போன்று நடித்து அடைகிடக்கும் அரவத்தைப்போலச் சீறிக்கோபித்து, "அரிச்சந்திரா! நீ மிகவும் இரக்கமற்ற பாவியாயிருக்கின்றாய்; இவ்வாறு எங்குமிருண்டு மேகந் திரண்டு நெஞ்சந் திடுக்கிட முழங்கி விடாமழை பெய்யும்போது புறப்படவேண்டுமென்று சொல்லி என்னைத் துன்பப்படுத்துகின்றாய்; நீ மிகவும் அஞ்சாநெஞ்சம் படைத்தவன்; இந்த இருளில் நான் எப்படி நடப்பேன்? என்னை இந்த இருளில் அழைத்துக் கொண்டுபோய்க் கொல்லப் பார்க்கின்றாய்; நீ நினைத்த

போதெல்லாம் புறப்பட என்னால் முடியாது; நீ போகுமூர்களுக்கெல்லாம் நானும் வரவேண்டிய அவசியமில்லை; என்னைக்கொன்றாலும்நான்இப்போது இவ்விடத்தைவிட்டுவரவே மாட்டேன்; நீ விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய கடனை இப்பொழுதே கொடுத்துவிடு; நான் இப்படியே திரும்பிச் செல்கின்றேன்; உன்னோடு வந்து கஷ்டப்பட என்னால் முடியாது; ஐயோ! உடம்பெல்லாம் நடுக்குகிறது," என்று கடினமான வார்த்தைகளைக் கூறினன். அதைக்கேட்டு அரிச்சந்திரன், "சுவாமி! உம்மைப் பல வூர்களுக்கு அழைத்துச் சென்று உமக்குத் துன்பத்தை யுண்டாக்கவேண்டுமென்பது என்னுடையகருத்தன்று; இப்பொழுதுமழையினால் அபாயம் வருவதுபோலத் தோற்றுவதால் இவ்விடத்தை விட்டு வேற்றிடஞ் செல்ல வேண்டுமென்று நான் கூறுகின்றேனே யன்றி வேறு கெடுதியான வார்த்தையொன்றுங் கூறவில்லை; இதற்காக நீர் விபரீதமான வார்த்தைகளைக் கூறுகின்றீர்; இன்னும் நாம் ஒரூருக்கும் செல்லவில்லையே; அப்படியிருக்க நீர், 'நான் உன்னோடு பல வூர்களுக்கும் வரமுடியாது,' என்றும், 'இப்பொழுதே பணத்தைக் கொடுத்து விடவேண்டும்,' என்றும் கூறுவது நியாய மாகுமா? இதுதானு பணம் கொடுக்கும் சமயம்! நாம் இந்தக் காடுகளைக் கடந்து ஒரூருக்குச் சென்றால் அப்பொழுது நான் பணம் தேடி உமக்குக் கொடுத்துவிடுவேன்; தயவு செய்து தடைகூறாமல் என்னுடனே வருவீராக," என்று சொல்லி மிகவும் வேண்டினன். அவ்வாறே சந்தியகீர்த்தியும் சந்திரமதியும் அந்தச் சுக்கிரனுடைய காலைப் பிடித்துக்கொண்டு வேண்டினர்கள்.

அப்படி அவர்கள் பல தாழ்மையான வார்த்தைகளைக் கூறிவேண்டவே சுக்கிரன் சிறிது மனதிரங்கி, மேலும் விசுவாமித்திரர் தன்னிடம் சொல்லிய காரியங்களை நிறைவேற்ற உத்தேசித்து அவர்கள் வார்த்தைகளுக் கிணங்கியவன் போன்று நடித்து, அரிச்சந்திரனை நோக்கி, "அரசனே! நான் என்ன செய்வேன்; தெரியாமல் உன்னிடம் வந்தகப்பட்டுக் கொண்டேன்; இனி நீ சொல்வதை யெல்லாம் கேட்டுத்தான்

தீரவேண்டும்; நீ எங்குச் செல்லவேண்டுமோ அங்குச் செல்; நானும் கூடவருகிறேன்,'' என்று சொல்லி எழுந்து நடந்தான். அவன் அப்படி நடக்கவே அரிச்சந்திரன் அந்தச் சுக்கிரனுடைய மனமிரங்கினதற்காக மகிழ்ச்சியடைந்து உடனே சந்திரமதியின் கையைப் பற்றிக்கொண்டு நடந்தான். சத்தியகீர்த்தி தேவதாசனைத் தூக்கிக்கொண்டு முன்னே நடந்தான். அவ்வாறு அவர்களெல்லோரும் புறப்பட்டு இருள் மிகுந்திருந்தபடியால் வழிதெரியாமல் தங்கள் கால்களாலே தடவித் தடவி வழியைத்தேடிக் கட்டைகள், முளைகள், வேர்கள் முதலியவைகள் அப்பாதங்களிற் பட்டு வேதனையை உண்டாக்கவும், நஞ்சைக் கக்குகின்ற பல பாம்புகளையும், வேறு சில விஷஜெந்துக்களையும் மிதித்துக்கொண்டு, மின்னல் வெளிச்சத்திலே இடையிடையில் முன்னே தோற்றும் இடத்தைக் கண்டு, தடியைக்கொண்டு முன்னே ஊன்றி நீரின் ஆழத்தைத் தெரிந்து நடந்து மேற்கூறிய கான்யாற்றிலிறங்கினார்கள். அப்படி யிறங்கிய அவர்கள் அந்த ஆற்றின் நீரோடு கலந்து செல்லும் சங்குகள் கால்களிற் கற்களைப்போன்று மோத, மேடுகளிலும், பள்ளங்களிலும், சேறுள்ள விடங்களிலும் காலிடறி விழுந்து பன்முறை ஜலத்தைக் குடித்து உடம்பும் வஸ்திரங்களும் சேறுகத் தட்டுண்டு தடுமாறித் தளர்ந்து இளைப்புடன் பெருமூச்சுவிட்டு வருந்தி மிருதுவாக அசைந்தசைந்து நடந்து மிக்க பிரயாசையுடன் சிறிது நேரத்திற்குள் அவ்வாற்றைக் கடந்து சிங்கங்களும் புலிகளும் கதறிக்கொண்டு திரியும் அவ்வாற்றின்கரைமேலேறினார்கள். அங்ஙனம் அவர்களெல்லோரும் நீரில் நீந்தி அவ்வாற்றைக் கடந்து கரையேறியவுடன் அரிச்சந்திரன் மனத்திலிருந்த பயத்தை நீக்கி, ''இனி இங்கே தங்கியிருந்து விடிந்தபின் இவ்விடத்தை விட்டுச் செல்லலாம்,'' என்று கூறினான். அதன்மேல் அவர்கள் நனைந்த வஸ்திரங்களுடன் தலையிலிருந்து பாதம் வரையிலும் நீர் வழிந்தோட, உடல் நடுங்கி அவ்வாற்றங்கரையின் பக்கத்திலுள்ள ஒரு காட்டிற் சென்று தங்கினார்கள்.

அரிச்சந்திரனுக்கு வழியில் துன்பம் செய்யும்படி விசுவாமித்திரர் பூதங்களை அவனிட மனுப்புதல்.

மேற்கூறியபடி மரங்களடர்ந்து வளர்ந்து பசுமையாயிருக்கும் அந்தக் காட்டிலே அரிச்சந்திரன் முதலியோர் கஷ்டத்தோடு தங்கியிருக்குங் காலத்தில் மகா வஞ்சகராகிய அந்த விசுவாமித்திரமுனிவர் அரிச்சந்திரனுக்குத் துன்பஞ் செய்யும்படி அநேகம்பூதங்களையும், பைசாசங்களையும் சிருஷ்டித்து அவ்விடத்திற் கனுப்பினர். அவைகளெல்லாம் அப்பொழுதே அரிச்சந்திரன் முதலியோர் தங்கியிருக்கும் காட்டில்வந்து கூடின. அவ்வாறு கூடின அவற்றுள் சிலபூதங்கள், அக்காட்டினிட மெல்லாம் ஆகாயமட்டும் வளர்ந்துயர்ந்து பயங்கரமான வடிவத்தோடு நின்றன; சில பூதங்கள், ஆகாயத்திலே மேகங்கள் நிறைந்தாற்போல கரிய நிறத்தோடு நிறைந்து விளங்கின; சில பூதங்கள், வெடித்த இரண்டு புண்கள்போலவும், இரண்டு சூரியர்கள்போலவும் பிரகாசிக்கின்ற கண்களோடு செறிந்து விளங்கின; சில பேய்கள், பின் வளைந்து தோன்றுகிற இளஞ்சந்திரனை நிகர்த்த கோரப்பற்களாலே இதழைக் கடித்துக்கொண்டு, அரிச்சந்திரன் முதலியவர்களைப் பார்த்து, "உங்களை இப்பொழுது கொன்று உதிரத்தைக் குடிப்போம்," என்று சொல்லிப் பயமுறுத்திப் பக்கங்களிலோடி மலைகளையெல்லாம் பிடுங்கியெறிந்தன; அப்பூதங்களின் தலைகளில் நெருங்கி யெழுந்து வளர்ந்துள்ள செம்மயிர்கள் மேகமண்டலத்தளவு முயர்ந்து அதற்கப்பாலுஞ்சென்று அண்டமுகட்டினுந் தாவி நெருப்பைப்போன்று விளங்கின. இன்னுஞ் சில பூதங்கள், அரிச்சந்திரனைச் சுட்டிக்காட்டி, "இந்த அரசனுடைய தசையை நாங்கள் தின்போம்," என்று கூறின; சில பூதங்கள், சத்தியகீர்த்தியைச் சுட்டிக்காட்டி, "நாங்கள் இந்த மந்திரியினுடைய மாமிசத்தைக் கடித்துத் தின்போம்," என்று முழங்கின; சில பூதங்கள், சுக்கிரனைச் சுட்டிக்காட்டி, "நாங்கள் இந்த வேதியனுடைய குடலைப் பிடுங்கித் தின்னுவோம்," என்று கூவின; சில பேய்கள் சந்திரமதியைச் சுட்டிக்காட்டி, "நாங்கள் இந்தப்

பெண்ணினுடைய மாமிசத்தைத்தின்போம்," என்று கூறின; சில பைசாசங்கள் தேவதாசனைச் சுட்டிக் காட்டி, "இந்தச் சிறுவனுடைய தசை பல்லுக்கு மெல்லியதாயிருக்கும்; ஆதலால், இவனுடைய தசையை நாங்கள் மிகவும் பிரியத்தோடு தின்று ஏப்பமிடுவோம்," என்றுரைத்தன. அவ்வாறு அவைகள் பற்பலவிதமான வார்த்தைகளைக் கூறி, மேலும் வீராவேசத்தோடு ஆர்ப்பரித்து, "நெருங்கிச் செல்லுங்கள்; இவர்களைக் கொல்லுங்கள்; இவர்களுடைய மாமிசங்களைப் பங்கிட்டு மென்று தின்னுங்கள்; உதிரத்தைப் பருகுங்கள்; சந்தோஷக் கூத்தாடுங்கள்," என்று பயங்கரமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே பின்னும் முன்னும் நெருங்கி அரிச்சந்திரன் முதலியவர்களை வளைந்துகொண்டன.

அப்படி வளைந்துகொள்ளவே அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும் பயந்து ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு, "இச்சமயத்தில் நமக்குத் தருமமே துணை," என்று அந்தத் தருமத்தையே மனத்தில் உறுதியாக நினைத்துக்கொண்டு நின்றார்கள். சத்தியகீர்த்தியும், "எல்லாம் சிவன் செயல்," என்று மனம் நொந்து நின்றான். சுக்கிரனுக்கு இந்தப் பேய்கள் விசுவாமித்திரரால் அனுப்பப்பட்டவையென்பது தெரியுமாதலால் அவன் மனத்திற்குள் சிறிதும் அச்சங்கொள்ளாமல் வெளிக்குமாத்திரம் மிகவும் அச்சங் கொண்டவன்போன்று நடித்துத் துள்ளித் துடித்து அரிச்சந்திரனை நோக்கி, "அடா பாவி! என்னை வஞ்சனையாகக் கொல்லக் கருதி இந்தப் பேய்க்காட்டிற் கொண்டுவந்து விட்டுவிட்டாயே; இந்தப் பூதங்களெல்லாம் உங்களைப்பார்த்த போது உங்களுடைய மாமிசங்களைத் தின்பதாகச் சொல்லி, என்னைப் பார்த்தபோது மாத்திரம் என்னுடைய குடலைப் பிடுங்கித் தின்பதாகக் கூறுகின்றனவே! அந்த வார்த்தையைக் கேட்டவுடனே என் ஈரற்குலையெல்லாம் நடுங்குகின்றதே; நான் இனி என்ன செய்வேன்! நான் என்னுடைய தாய்க்கு ஒரேபிள்ளை; அடா வஞ்சகா! பிராமணன் பாவத்தை ஏற்றுக் கொண்டாயே; நான் முந்தியே உன்னோடு வரமாட்டே

னென்று கூறினேன்; என் வார்த்தைகளைச் சிறிதும் கேளாமல் ஏதேதோ சமாதானமான வார்த்தைகளைக் கூறி அழைத்துவந்து இந்த ஆபத்துக்குள்ளாக்கி விட்டாயே,'' என்று கதறினன். அவன் வார்த்தைகளைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் மிகவும் விசனமுற்று, "சுவாமி! உமக்குமாத்திரம் இத்துன்பம் நேரவில்லை; எல்லோருக்குமே நேர்ந்திருக்கின்றது; அப்படியிருக்க என்னைப் பாவியென்றும், வஞ்சனைக்காரனென்றும் இச்சமயம் நிந்தித்துப் பேசலாகாது; முதலில் நாங்கள் இந்தப் பேய்களுக்கு எங்களுடைய உயிரைப் பலிகொடுக்கிறோம்; எங்களுக்கு அபாயம் வந்தால் உமக்கும் வரும்; நாங்கள் உயிரோடிருக்கும்வரை உமக்கொன்றும் தீங் கேற்படமாட்டாது; நீர் பதறவேண்டாம்,'' என்று தைரியங் கூறி அதன்மேல், "இந்தப்பூதங்கள் விசுவாமித்திரராலேயே ஏவப்பட்டு வந்திருக்கலாம்; ஆதலால் இவற்றிற்குச் சமாதானமாகிய வார்த்தைகளைக் கூறுவோம்; அவற்றைக் கேட்டு இவை விலகிச்சென்றாலும் செல்லட்டும்; அல்லது கேட்காமல் நம்மைக் கொன்றாலும் கொல்லட்டும்,'' என்று தைரியங் கொண்டு, அந்தப் பூதங்களை நோக்கி, "பூதங்களே! நீங்கள் விசுவாமித்திரமுனிவர் கூறியபடியே எங்களைக் கொல்ல வந்திருக்கின்றீர்கள்; நாங்கள் உங்களுக்கு உயிர் கொடுக்கச் சித்தமா யிருக்கின்றோம்; உங்களை ஜெயிக்கலா மென்றாலோ எங்களிடத்தில் வில்லுமில்லை, அம்புகளுமில்லை, வாளுமில்லை, வேலுமில்லை; அப்படியிருக்க நீங்கள் ஏன் இன்னும் எங்களைக் கொல்லாமல் வீணாகப் பயங்கரமான வார்த்தைகளை மாத்திரம் கூறிக்கொண்டு நிற்கின்றீர்கள்? சீக்கிரம் எங்களைக் கொல்லுங்கள்; அப்படி எங்களை நீங்கள் கொன்றுவிடுவீர்களானால் எங்களுடைய துன்பமும் அடியோடு ஒழிந்துபோம்; உங்களுடைய பசியுந் தீரும்; தாமதிக்கவேண்டாம்; சமீபத்தில் வாருங்கள்,'' என்று தாழ்ந்து கூறினன். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் பூதங்களெல்லாம், "விசுவாமித்திரமுனிவர் நம்மை அனுப்புங்காலத்தில் இம்மன்னனையும் மற்றவர்களையும் கொல்லும்படி நம்மிடம் சொல்லியனுப்பவில்லை;

இவர்களுக்குப் பயங்காட்டும்படிக்கே சொல்லியனுப்பினர். ஆதலால், இவ்வளவு கலக்கஞ் செய்தது போதும்," என்று கருதி உடனே அங்கு நில்லாமல் விலகிப்போயின.

அதன்மேல் சூரியன் தன்னுடைய குலத்திற் பிறந்தவனாகிய அரிச்சந்திரன் இரவிற்படுந் துன்பத்தை அகற்ற வருபவன் போன்று உயர்ந்த தேரின்மீதேறிக் கிழக்குத் திக்கில் உதயமானான்; அவ்வாறு சூரியன் உதயமாகவே இடைவிடாமற் சொரிந்துகொண்டிருந்த மழைத் தாரைகளும் ஓய்ந்தன; இரவும் நீங்கி எங்கும் வெளிச்சமாய்ச் சூரியப்பிரகாசம் பரவிற்று. அப்படி விடிந்தவுடன் அரிச்சந்திரன் முதலியோர் மனந்தெளிந்து அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச்செழுமையான கனிகள் கிழங்குகள் முதலியவற்றை நடுவழியில் தின்றுகொண்டே இடையிலெதிர்ப்பட்ட மலைகளையெல்லாங் கடந்து அழகிய மலர்போலும் பாதங்கள் வருந்த நடந்து குளிர்ச்சி பொருந்திய கங்கையாற்றினருகேபோய்ச் சேர்ந்தார்கள். அப்படி அவர்கள் அங்குச் செல்லும்போது அந்தக் கங்கையாற்றின் அலைகளில் சிவந்த மணிகளும், முத்துக்களும் புரண்டுகொண் டிருந்தன; இன்னும் அவ்வாற்றின் கரைகளில் அகில் விருக்ஷங்களும், சந்தன விருக்ஷங்களும் செழிப்புற்று வளர்ந்து காற்றினலைசைந்துகொண்டிருந்தன; அக் கங்கை நீரின் அலைகளிற் றோன்றும் நுரைகளெல்லாம் மெல்லிய மலர்களைப்போன்று பிரகாசித்துக்கொண் டிருந்தன; அந் நுரைகளோடு கலந்து மிதந்து செல்லும் மலர்க்கொத்துகளில் வண்டுகள் பறந்து தேனைப் பருகும்பொருட்டு மொய்த்துக்கொண்டிருந்தன. இன்னும் அந்தக் கங்காஜலத்தினூடே துவாரமிடத்தக்க வயிரமணிகளும், வெண்மையான பற்களையுடைய நாகங்களிலிருந்து தோன்றின நாகரத்தினங்களும், தேமலைப்போன்று விளங்குகின்ற புஷ்பராகமணிகளும் ஒளியை வீசிக்கொண்டிருந்தன; அந்தக் கங்கைக் கரையிலுள்ள மணற் குவியல்களிலெல்லாம் வேறு பலவகை இரத்தினங்களும், மதயானைகளினுடைய கொம்பிலிருந்து உண்டான மணிகளும், சங்குமணிகளும் நிறைந்து பிரகாச

த்தை வீசிக்கொண்டிருந்தன. இவையன்றி அக்கங்காஜலத்தி லுள்ள செந்தாமரைமலர்களிலும், அக்கங்கைக் கரையிலுள்ள புன்னை விருக்ஷங்களின் மலர்களிலும் வண்டுகள் நெருங் கித் தேனைப்பருகிக் களிப்புற்று முழங்கும் ஒலியானது அக் கங்கையின் அலை முழக்கத்தை அடங்கச் செய்துகொண் டிருந்தது; அந்தத் தெளிவான கங்கை நீரிலே பல பக்ஷிகள் முழுகிப்போய்த் தங்கள் சிறகுகளை யுலர்த்திக் கொள்ளும் பொருட்டு அந்தக் கங்கைக்கரைப் பக்கங்களிலுள்ள மணற் குவியல்களில் இடைவிடாமல் நெருங்கி அச்சிறகுகளை விரித் துக்கொண் டிருந்தன.

அவ்வாறு கங்கையானது பலவகைச் சிறப்புகளுடன் விளங்குவதைக் கண்டு, அரிச்சந்திரன், சந்திரமதியினுடைய மனக்கலக்கம் சிறிது தணியும்பொருட்டு அக் கங்கையைச் சார்ந்துள்ள அலங்காரங்களை யெல்லாம் அவளுக்குக் காட் டத் தொடங்கினவனாய், அவளை நோக்கி, "இந்திரவிற்க ளிரண்டைக் கொண்ட மூன்றாம்பிறைச் சந்திரன்போல இரண்டு புருவங்களுடன் விளங்கும் அழகிய நெற்றியை யுடைய பெண்ணே! இந்தத் தெளிவாகிய கங்கா ஜலத்திலே பல நீர்ச்சுழிகள் உன்னுடைய உந்தியைப் போன்று சுழிக்கும் விநோதத்தைப் பார்ப்பாயாக; முகத் திற் புள்ளிகளையுடைய யானைகள் இந்தக் கங்கா ஜலத் திலே விழுந்து அடியிலுள்ள இரத்தினங்களைக் கையி னால் வாரி வீசி மேலெறிய அவை சிதறி விழுந்தோற்றம் ஆகாயத்திலிருந்து நக்ஷத்திரங்கள் உதிர்வதுபோன் றிருக் கின்றது பார்; இந்தக் கங்கை யோரத்திலுள்ள மணற்சேற் றில் தன் பெட்டையைப் பிரிந்த ஓர் ஆணன்னமானது அங்கே யிருக்கின்ற வெண்டாமரைமலரைத் தன்னுடைய பெட்டையென்று நினைத்துச் சமீபத்திற் சென்று பார்த்து அஃதில்லாமையால் திகைக்கின்ற விநோதத்தைப் பார்; இந் தப் பரிசுத்தமான ஜலத்திலே சஞ்சரித்த பக்ஷிகள் நம்மைக் கண்டு மேலே பறந்து செல்லுந் தோற்றமானது, அவை, 'நமக்கு இந்தப் பூமியிலிடமில்லை; ஆகாயத்திலேயே

இடமிருக்கின்றது; ஆகையால், அங்குச் செல்வோம்,' என்று கருதிப் பறப்பதுபோன் றிருக்கின்றது பார்; இந்நீரி லிருந்து பிரியும் கால்வாய்கள் இத்தக் கங்கையாகிய பெண் ணுக்குக் கால்களாகவும், இங்குள்ள சங்குகள் கழுத்தாக வும், பவளங்கள் வாயாகவும், கயல்மீன்கள் கண்களாகவும், வெண்மையான மணற்குவியல்கள் கொங்கைகளாகவும், நூறுகோடிக் கணக்காய் விளங்குவதைப் பார்; இரண்டு கண் களையும், இரண்டிதழ்களையும், ஒரு கழுத்தையும், இரு பாதங்களையும், கொண்ட பார்வதிதேவி அவற்றால் பரமசிவ னுக்கு மிக்க விருப்பத்தை யுண்டாக்கி அவன் மேனியிற் பாதியைப் பெற்றுக்கொண்டாள்; மேற்கூறியபடி நூறுகோ டிக் கணக்கான அவயவங்களைக் கொண்ட இந்தக் கங்கா தேவி அந்தச் சிவனுக்கு எவ்வளவு விருப்பத்தை யுண்டா க்குவா ளென்பதை நீயே யோசித்துப் பார்," என்று கூறி இன்னும் அங்குள்ள மற்ற விநோதங்களையுங் காட்டி அவள் மனத்திலிருந்த விசனத்தை யகற்றிச் சிறிது மகிழ்ச்சியை யுண்டாக்கினன். அவ்வா றுண்டாக்கவே சந்திரமதி சற்று விசனத்தை மறந்து முகமலர்ச்சியடைந்து அரிச்சந்திரனை நோக்கி, "என் பிராணநாத! உலகத்திலுள்ள எல்லாப் பெண்களுக்கும் சில அவயவங்களேற்பட்டிருக்க கங்காதேவி க்குமாத்திரம் இவ்வாறு பல அவயவங்க ளேற்பட்டதற்குக் காரண மென்ன?" என்று வேடிக்கையாக வினவினள். அத ற்கு அரிச்சந்திரன், "பெண்மணே! உலகத்திற் சில பிள்ளை களைமாத்திரம்பெற்றுவளர்க்கும்மற்றப்பெண்களுக்கு அவர்க ளுடைய நிலைமைக்குத் தக்க சில அவயவங்க ளேற்பட் டன; இந்தக் கங்காதேவியானவள் உலகத்திலுள்ள எல்லா வுயிர்களையும் காப்பாற்றக் கூடியவ ளாதலின் இவளுக்குப் பல அவயவங்க ளேற்பட்டன," என்று கூறினன். அதைக் கேட்டவுடன் சந்திரமதி அரிச்சந்திரனை நோக்கி, "மன்னவர் பெருமானே! என் கேள்விக்குத் தகுதியான விடைகூறி னீர்," என்று சொல்லி அவனுடைய புத்தி விசேஷத்தை மெச்சினள்.

அதன்மேல் அரிச்சந்திரனும், சந்திரமதியும், மற்றவர்களும் அந்தக் கங்கையி னருகேயுள்ள மற்ற விநோதங்களையும், பார்த்துக்கொண்டே போய் நல்ல துறையிலிறங்கி, "நாங்கள் செய்த தவப்பயனெல்லாம் இன்று வந்து கைகூடியது," என்று சொல்லி அக்கங்கையின் நீரிலே ஸ்நானஞ் செய்தார்கள். அவ்வாறு வேதசாஸ்திர விதிப்படி அவர்கள் ஸ்நானஞ்செய்த பிறகு அத்துறையை விட்டு நீங்கி அந்த விரிவான நீரிலிறங்கி விரைவாக நடந்து அதனைக் கடந்து கரையேறி ஒரு சோலைக்குள்ளே போய்ச் சேர்ந்தார்கள். அப்படி அவர்கள் அந்தச் சோலைக்குள்ளே போய்ச் சேர்ந்தவுடன் சூரியன் மேற்குக்கடலிற் போய் மறைந்தான். அங்ஙனம் சூரியன் மறைந்து இரவு வரவே எல்லோரும், "இவ்விடத்திலேயே தங்கியிருந்து விடிந்தபின் செல்லலாம்," என்று யோசித்து அன்றிரவு அவ்விடத்திலேயே தங்கினார்கள்.

அரிச்சந்திரன் கங்கையோரத்தில் தங்கியிருக்குங் காலத்தில் விசுவாமித்திரர் மிருகங்களை யனுப்பி அவனுக்குத் துன்பஞ் செய்தல்.

அப்படி அரிச்சந்திரன் முதலியோர் அந்தச் சோலையிலே தங்கி யிருக்கும்போது விசுவாமித்திரர் மேனும் அரிச்சந்திரனுக்குத் துன்பஞ் செய்யக் கருதி அநேகம் மிருகங்களைச் சிருஷ்டித்து அவைகளை நோக்கி, "நீங்கள் இந்த இரவிற் சென்று ஆர்ப்பரித்து அரிச்சந்திரனுக்குக் கலக்கத்தை யுண்டாக்குவீராக," என்று கட்டளையிட் டனுப்பினர். அவ்வாறனுப்பவே ஜெயம் பொருந்திய பல சிங்கங்களும், பெரிய புலிகளும், மலைகளைப்போன்ற மதயானைகளும், பன்றிகளும், கரடிகளும், மற்றுமுள்ள மிருகங்களும் அரிச்சந்திரன் தங்கியிருக்கும் அச் சோலையிலே வந்து கூடி எங்கும் நிறைந்தன. அப்படி நிறைந்த மாத்திரத்தில் அவற்றுள் சில யானைகள் மலைகளதிரும்படி முழங்கித் துதிக்கையை வீசிக் கொம்புகளை நீட்டிக்கொண்டு அரிச்சந்திரன் முதலியவர்கள்மீது

பாயச் செல்வனபோன்று நெருங்கிச் சென்றன; சண்டை செய்யக்கூடிய புலிகளும், சிங்கங்களும், சிவந்த கண்களி லும் வாயிலும் நெருப்புச் சிதறக் கோபித்து நெருங்கின. அப்படி அந்த மிருகங்களெல்லாம் நெருங்கின தோற்றம் எப் படி யிருந்ததெனில், அரிச்சந்திரன் முன்னே வேட்டை யாடுங்காலத்தில் தங்களுடைய இனங்களைக் கொன்றதற்காக அவை கோபங் கொண்டு, அரிச்சந்திரனை நோக்கி, "நீ முன் னே எங்களுடைய இனங்களை யெல்லாம் கொன்றாய்; ஆத லால், அந்தப் பழியைத் தீர்ப்பதற்காக இப்போ துன்னைக் கொன்று உன்னுடைய உதிரத்தைக் குடிக்கிறோம்; மாமிசத் தையுந் தின்று பசி தணிகிறோம்," என்று சொல்லிச் சூழ் வதுபோன்றிருந்தது. அப்படி மிருகங்கள் வந்து சூழ்ந்த தைக் கண்டு அரிச்சந்திரனும், சந்திரமதியும், சத்தியகீர்த்தி யும், தேவதாசனும் அவற்றிற்குச் சிறிதும் அஞ்சாதவர்க ளாய், "நாம் இவ்வளவு துன்பங்களையும் அடைந்துகொண்டு உயிர் வாழ்வதைக் காட்டினும் இவற்றா லிறந்துபோவது மிகவும் நலமாம்; ஆதலால், இவை நம்மைக் கொன்றாலுங் கொல்லட்டும்," என்று துணிவுகொண் டிருந்தார்கள். சுக்கிரன், அம் மிருகங்கள் விசுவாமித்திரரா லனுப்பப்பட் டவை யென்பதைத் தெரிந்தவனானபடியால் அவன் இயற் கையிலேயே பயமற்றவனா யிருந்தான். மேற்கூறியபடி அரிச் சந்திரன்முதலியோர் துணிவுகொண்டிருப்பதை அம்மிருகங் கள் தெரிந்து, "நாம் இவ்வளவு பயங்காட்டினது போதும்; நம்முடைய ஆர்ப்பரிப்பால் இவர்களுடைய மனம் சிறிதும் கலங்கவில்லை; ஆதலால், இனி நாம் பயமுறுத்துவதால் பய னில்லை," என்று கருதித் தாங்கள் சஞ்சரிக்கின்ற காட்டிற் கேகி மறைந்தன.

நீதிவழுவாத அரிச்சந்திரன் முதலியவர்களுடைய குணங்களைத் தெரிந்து மேற்கூறியபடி பல ஜாதி மிருகங்க ளும் தாங்கள் சஞ்சரிக்கு மிடங்களுக்குப் போகவே அத் தருணத்தில் சுக்கிரன், விசுவாமித்திரர் தனக்குக் கூறியபடி சில உபாயங்களைச் செய்யக் கருதினவனாய்த் தனக்குள்,

"இப்போது அரிச்சந்திரன் அளவற்ற துன்பங்களை யடைந்திருக்கின்றான்; அவற்றோடு சிறிதுநேரத்திற்கு முன் மிருகங்களாலும் கலக்கத்தை யடைந்திருக்கின்றான்; ஆகலால், இத்தருணத்தில் நாம் நலஞ்செய்வதாகச் சொல்லி ஏதேனுமொரு அநீதியைச் செய்யும்படி இவனிடம் தெரிவித்தால் இவன் அவ்வாறே செய்ய இணங்கினு மிணங்குவான்," என்று திர்மானித்து உடனே அரிச்சந்திரனை நோக்கி, "அரசனே! இதுவரை உனக்குப் பலவகைத் துன்பங்க ளேற்பட்டிருக்கின்றன; ஆயினும் இவையெல்லாம் மிகவும் அற்பமாம்; இனிமேல் உனக்கு வரப்போகுந் துன்பங்களோ அளவிடக் கூடாதவைகளாம்; அவற்றை உன்னால் சகித்தல் முடியாது; இந்தத் துன்பங்களெல்லாம் நீ சத்தியத்தைக் கைவிடமாட்டேனென்று பிடிவாதஞ் செய்வதாற்றானே வருகின்றன? அந்த வீணாகிய சத்தியத்தால் உனக்குத் துன்பமேயன்றி வேறொரு நற்பயனுமில்லை; ஏன் துன்பத்திற் கேதுவாகிய இந்தப் பயனற்ற கொள்கையை யனுசரிக்கின்றாய்? வேண்டாம்; இதை விட்டுவிடு; இனிமேல் அளவற்ற துன்பங்கள் வருவதற்குள்ளாக நீ திரும்பி அயோத்திக்குச் சென்று விசுவாமித்திருக்கு அரசாட்சியைக் கொடுக்கமாட்டேனென்று சொல்லி அவரைத் துரத்திவிட்டு உன் அரசாட்சியை நீயே பெற்றுக் கொண்டு சுகத்தோடு வாழக்கடவாய்; இப்படிச் செய்ய உனக்குச் சம்மதி யில்லாவிட்டாலும் 'விசுவாமித்திருக்குக் கொடுக்க வேண்டிய பொருளை நான் கொடுக்கமாட்டேன்,' என்ற ஒரு வார்த்தையாவது கூறிவிடு; இந்த ஒரு வார்த்தை சொல்லும்பக்ஷத்தில் விசுவாமித்திரரே உன்னுடைய அரசாட்சியை உனக்குக் கொடுத்துவிடுவார்; அப்படி அவர் கொடுக்காவிடினும் நானே அதை வாங்கித்தருவேன்; அதில் எவ்வளவும் சந்தேகமில்லை; நீ வீணாப் பிடிவாதத்தை விடமாட்டேனென்று சொல்கிறபடியினாலேயே விசுவாமித்திரரும் பிடிவாதத்தை விடாமலிருக்கின்றார்; நீ அதை விட்டுவிடுவாயானால் அவரும் விட்டு உன்னுடைய நாட்டை உன்னிடமே கொடுத்துவிடுவார்; கொடுப்பதாகச் சொன்ன

பொருளை இல்லையென்று ஒரு வார்த்தை சொல்லுவது உன்னைப் பொறுத்தது; அரசாட்சியை வாங்கிக் கொடுப்பது என்னைப் பொறுத்தது; நீ பொருள் இல்லையென்று ஒரு வார்த்தை சொல்வதுதான் தாமதம்; அப்படிச்சொல்வாயானால் சொன்ன அந்த நிமிஷமே அரசாட்சி உன்வசமாய்விடும்; ஒளி வீசுகின்ற வேலாயுதத்தைத் தாங்கிய மன்னனே! நீயும், உன்னைச்சார்ந்தவர்களும் படுந் துன்பத்தைப் பார்த்து என் மனம் மிகவும் வேதனை யடைகின்றது; உங்களுடைய பரிதாபமான நிலைமையைப் பார்த்துச் சகித்திருக்க என்னால் முடியவில்லை; என் வார்த்தையைத் தடை செய்யாதே; நான் சொன்னபடி ஒரு வார்த்தை கூறிவிட்டு இப்பொழுதே அயோத்திக்குத் திரும்பு; வீணே நீ துன்பப்படுகிறதுமன்றி என்னையும் ஏன் துன்பப்படுத்துகின்றாய்?" என்று இதமாகக் கூறினான்.

சுக்கிரன் அவ்வாறு கூறிய வார்த்தைகளை அரிச்சந்திரன் கேட்டவுடன் மிகவும் விசனித்து அந்தச் சுக்கிரனை நோக்கி, "சுவாமி! இச்சமயத்தில் நல்ல வார்த்தைகளைக் கூறினீர்! எல்லாமுணர்ந்த அந்தணராகிய நீர் இவ்வாறு கூறலாமா? இன்னும் அளவற்ற துன்பங்கள் வருவதா யிருந்தாலும், நானும், என் மனைவியும், என் புத்திரனும், என்னுடைய மந்திரியும் இறந்துபோவதா யிருந்தாலும், நான் முன்னே மனமொப்பிக் கொடுத்ததை எப்பொழுதும் இல்லையென்று சொல்லமாட்டேன்; நீர் இனிமேல் இவ்வித வார்த்தைகளைக் கூறவேண்டாம்," என்று தடுத்துரைத்தான். அதற்குச் சுக்கிரன் அரசனை நோக்கி, "இடம்பமான குணத்தையுடைய அரிச்சந்திரா! நீ புத்தியில்லாமல் தற்புகழ்ச்சியை விரும்பி இவ்வாறு என் வார்த்தைகளைத் தடைசெய்கின்றாய்; நான் சொல்வது இப்போதுனக்குத் தெரியாது; பின்னை நீ அளவில்லாத துன்பங்களை யடையுங்காலத்தில் தெரியும்; நீ என்ன செய்வாய்; உன் தலைவிதி இப்படி யிருக்கின்றது," என்று கூறினான். அந்த வார்த்தைகளையும் அரிச்சந்திரன் சிறிதேனும் மதித்தேற்றுக்கொள்ளவில்லை.

அப்படி அவர்கள் வார்த்தையாடிக்கொண்டிருந்த சமயத்தில் இருள் கழிந்து பொழுது புலர்ந்தது. அவ்வாறு விடிந்தவுடனே அரிச்சந்திரன், சந்திரமதி முதலியவர்களையும், சுக்கிரனையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு விரைவாக நடந்து அதற்கப்பால் ஆட்டுக்கூட்டங்கள் மிகுந்து மேய்கின்ற ஒரு முல்லை நிலத்திற் புகுந்து, சிறிது நேரத்திற்குள் அதனையுந் தாண்டி, அதற்கப்பாற் சென்று புலிகள் வாசஞ் செய்கின்ற குறிஞ்சிநிலத்திற் புகுந்து அதிலுள்ள பல மலைகளிலெல்லா மேறியிறங்கி அவற்றையுங் கடந்து பின்னர் கோபத்தைக் கொண்ட சிங்கங்களும், அச்சிங்கங்களால் அறையுண்டு செத்துக்கிடக்கின்ற யானைகளும், அந்த யானைகளின் கால்களாலே நசுங்கி யிறந்துகிடக்கின்ற புலிகளும், அந்தப் புலிகளாலே அறையப்பட் டிறந்து கிடக்கின்ற மான்களும் நெருங்கிய ஒரு காட்டிற்குள்ளே போனான். அவ்வாறு செல்லும்போது அக்காட்டில் சவ்வாது மணமும், கஸ்தூரி வாசனையும், அன்றலர்ந்த மலர்களையுடைய சோலையின் வாசனையும், சந்தனவிருக்ஷங்களின் மணமும், அகில்விருக்ஷங்களின் மணமும், தேன்வாசனையும், * பாம்புகள் மண்டல மிட்டு அடைகிடக்கின்ற ஸ்தானங்களின் மணமும், யானைமதநாற்றமும் ஒன்றாகக் கலந்து நிறைந்து மிகுந்த பரிமளம் வீசுவதனாலே அவை இன்ன இன்ன மணமென்று பகுத்தறியக் கூடாதவைகளா யிருந்தன; இன்னும் அங்கே நல்ல ஆபரணங்களையணிந்த அரம்பையர்களும், வித்தியாதரப் பெண்களும், வலிமை பொருந்திய தோள்களையுடைய தங்கள் நாயகரோடு சேர்ந்து விளையாடுங் காலத்தில் உதிர்ந்த கற்பகமலர்களும், அவர்கள் படுத்திருந்த தளிர்ப்படுக்கைகளும் சிற்சில விடங்களிற் றோன்றின.

இத்தகைய விநோதங்களை யெல்லாம் அரிச்சந்திரன் முதலியவர்கள் பார்த்துக்கொண்டே நடந்து அக்காட்டையுங் கடந்து, இறாலினின்றும் உடைந்து சிந்துகிற தேனும்,

* அரவம் அடை கிடக்குமிடம் மாம்பழவாசனை வீசும்.

வண்டுகள் மொய்ப்பனவாகிய மலர்களினின்றும் வடிகிற தேனும் பெருகி அருவிபோலப் பாய்ந்து வெள்ளத்தோடு கலந்து சென்று இரண்டு பக்கத்துக் கரைகளின் ஓரங்களில் முத்துக்களை ஒதுக்கும் விசேஷத்தையுடைய சோணமா நதியினருகே போய்ச் சேர்ந்தார்கள். அப்படி அவர்கள் போய்ச் சேர்ந்து அந்நதியின் வளப்பத்தை நோக்கியபோது அது மிகவுஞ் சிறப்புடையதாய்த் தோன்றியது; மதயானைக ளிறங்கத்தக்க அந்த ஆற்றின் நீர்த்துறையிலே மலர்கிற தாமரைமலர்களினின்றும் வெளிப்பட்ட முத்துக்களும், பெரிய சிங்கங்களிறங்குந் துறையிலே சரிந்து கிடக்கும் சிவந்த பொன்மணலும், படத்தையுடைய பாம்புகளிறங்குந் துறையிலே சிதறிக்கிடக்கும் நாகரத்தினங்களும் அந்த ஆற்றின் இருபுறங்களிலும் வெற்றிடமில்லாமல் நிறைந்து பிரகாசித்துக்கொண்டிருந்தன; இன்னும் அவ்வாற்றின் பக்கங்களில் பருத்த மணலையுடைய சேறும், அதன்மே லூரு கின்ற சங்குகளும், கரிய மணல்மேடுகளும், தெளிந்த நீரலையி னால் மணிகளோடு சேர்த்து எக்கலிடப்பட்ட வெள்ளை மணற் குன்றுகளும், அவ்வாற்றி னீரினிடையே சந்தன விருக்ஷங்களின் வாசனையோடு தோன்றும் நீர்ச்சுழிகளும், அந்நீரிற் சஞ்சரிக்கும் அன்னங்களும், கொக்குகளும், குருகு களும், நாரைகளும், சக்கரவாகப் பக்ஷிகளும், ஒன்றோ டொன்று மாறுகொண்ட நீர்நாய்களும், முதலைக் கூட்டங்க ளும், நீர்க்காக்கைகளும், சப்பங்கோழிகளும், அவ்வாற்றங் கரையருகே மேய்கின்ற திரட்சியான புறாக்கூட்டங்களும் மிகுந்து அரிச்சந்திரன் முதலியவர்களுடைய கண்களுக்கு அழகாகத் தோன்றின. அவ்வாறு அழகாகத் தோன்றின அவ்விசேஷங்களை யெல்லாம் அரசன் பார்த்துக்கொண்டு மற்றவர்களுடனே பக்கங்களில் மேய்கிற காட்டெருமைக ளின் மடியிளகி ஒழுகுகின்ற பாலுடனே கலந்து செல்லும் அவ்வாற்றின் நீரிலே யிறங்கி அதனைக் கடந்து வெள்ளை மணல் பரவிக்கிடக்கின்ற கரைமே லேறினான். அச்சமயத் தில் சூரியன் அஸ்தமித்துவிட்டபடியால் மேற்கூறியபடி கரை

யேறின அரிச்சந்திரன் அக்கரையிலிருந்த சோலையில் அன்றிரவு தன்னைச் சார்ந்தவர்களுடன் தங்கி விடிந்தபின்பு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு வெவ்விய பல காடுகளையும், மலைகளையும் கடந்து சென்று பின்னர் யமுனையாற்றங்கரையைச் சார்ந்தான்.

அப்போது அந்த யமுனையானது பெருகி இரண்டு கரைகளின் பக்கங்களிலுள்ள பூமியை யிடித்து எவரும் இறங்கிச் செல்லமுடியாத வேகத்தோடு சென்றுகொண்டிருந்தது; அஃது அவ்வாறு சென்ற தோற்றம் எப்படி யிருந்ததெனில், பூமிதேவியை நோக்கி, "நீ உன்னை இதுவரை தாங்கிக்கொண்டிருந்த இந்த அரிச்சந்திரனை விட்டு நீங்கி ஒரு முனிவனுடனே கூடினுயே! இவ்வாறு கூடியதனல் உன்னுடைய கற்பு மிகவும் நன்றுயிருக்கின்றது!" என்று சொல்லிக் கோபித்து அவளை மோதிவிட்டு உடனே அரிச்சந்திரனை நோக்கி, "நீ சீக்கிரத்திலே திரும்பிச் செல்வாயாக; இந்தப் பக்கம் போக உன்னை விடமாட்டேன்," என்று சொல்லித் தடுப்பதுபோன்றிருந்தது. இன்னும் அந்நதியானது அரிச்சந்திரனை நோக்கி, "மன்னனே! நீ சேகரித்து வைத்திருந்த உன்னுடைய நல்ல பொருள்களை யெல்லாம் விசுவாமித்திரனுக்குக் கொடுத்துவிட்டாய்; ஆதலால் உனக்கு, அவற்றிற்குப் பிரதியாக இப்பொருள்களை நான் தருகின்றேன்; சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வாயாக," என்று சொல்லிப் பொருள்களைக் குவிப்பதுபோல அழகிய சந்தன விருக்ஷங்களையும், அகில்விருக்ஷங்களையும், அளவில்லாத முத்துக்களையும், இரத்தினங்களையும், பொன்களையும் அலைகளால் வாரி யிறைத்து அரிச்சந்திரனுக்கு முன்னே குவித்துக்கொண்டிருந்தது. அந்நதி அவ்வாறு அலைகளால் ஒதுக்கி அரிச்சந்திரனுக்கு முன்னே எறிந்த சிவந்த இரத்தினங்களும், பொன்னும், அவன் விசுவாமித்திருக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட திரவியத்தைக் காட்டிலும் எட்டுப்பங்கு அதிகமாயிருந்தன. ஆயினும் அவ்விடம், தான் விசுவாமித்திருக்குத் தாரை வார்த்துக் கொடுத்த பூமியின் எல்லைக்குட்பட்டிருந்தபடியால் அங்குத்

தனக்கு முன்னே நிறைந்த அப்பொருள்கள் கடன் கொடுத்தற்குதவா வென்று நினைத்து அரிச்சந்திரன் அவற்றைத் தள்ளிவிட்டான்.

யமுனையாற்றங்கரையில் விசுவாமித்திரர் சென்று அரிச்சந்திரனைச் சந்தித்தல்.

மேற்கூறியபடி வனம்நிறைந்த யமுனையாற்றங்கரையில் அரிச்சந்திரன் சேர்ந்தவுடன், அவனும், சந்திரமதியும், மற்றவர்களும் அந்நதியிலே யிறங்கி முழுகி ஸ்நானஞ் செய்தார்கள். அப்படி எல்லோரும் ஸ்நானஞ் செய்துகொண் டிருக்குந் தருணத்தில் விசுவாமித்திரமுனிவர் அரிச்சந்திரனைக் கண்டு சில தந்திரவார்த்தைகள் கூறவேண்டி அவ்விடத்திற்குச் சென்றார். அவ்வாறு சென்ற அவர், நாகரத்தினத்தை முகப்பாகப் பதித்த அரைப்பட்டிகை, மாவுரியைத் தரித்த இடையிலே பிரகாசிக்கவும், பிரணவத்தை நாவினாலே யுச்சரித்து உருவை யெண்ணுகிற விரல்களையுடைய கையானது செவிப்புறத்தைச் சார்ந்து விளங்கவும், திருமுடிமேலே குரவம்பூவும், வெள்ளெருக்கம்பூவும், நொச்சிப்பூவும், அலரிப்பூவும், கொன்றைப்பூவும் சூட்டப்பெற்றுப் பன்னிறமாகத் தோன்றவும், இடையானது துவளவும், சுருண்டும் நீண்டும் அசைகின்ற சடைகள் குலையவும், அவ்வாறு குலையும் அச்சடாமுடி அடிக்கடி திரட்டிக் கட்டுந்தோறும் அவிழ்ந்தவிழ்ந்து பூமியிலே விழுந்து புரளவும், கொடிதான வடவாமுகாக்கினியும், விண்ணுலகமும், மண்ணுலகமும் வெந்து தீயும்படி அடிக்கடி கோபத்தைக்கொண்டு விளங்கும் இரண்டு கண்களும் பிரகாசமாக விளங்கவும், தாம் கௌசிகராஜனா யிருந்தபோது மோதிரங்களணிந்த கையிலே தருப்பை மோதிரங்களும் குடையும் விளங்கவும், மற்றொரு கையிலே கமண்டலம் விளங்கவும் விரைந்து நடந்து, முன்னே சுவை பொருந்திய நீர்பாயும் வளத்தைக்கொண்ட வயல்கள் சூழ்ந்த நாட்டையும், செல்வச் சிறப்பினையுடைய நகரத்தையும், அரசாட்சியையும், திரவியத்தையும் தமக்குத் தானமாகக் கொடுத்த

அரிச்சந்திரன் சமீபத்தை யடைந்து அவனுக் கெதிரில் நின்றார்.

கிருபைக் கடலாகிய அரிச்சந்திரன், அவ்வாறு கடுமை யான வேகத்துடனே சென்று எதிரில் நின்ற விசுவாமித்திரரைக் கண்டு நடுங்கிப் பயந்து, "ஐயோ! முனிவர், கோபம் பொருந்திய முகத்துடனே வந்திருக்கின்றாரே; இவர் இப்படி வருவதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே; அயோத்தியில் மண்டலிகர், மந்திரிகள், சேனைத்தலைவர்கள், குடிஜனங்கள் முதலியவர்கள் இவருக்கடங்காமல் விரோதமான காரியங்களைச் செய்தார்களோ; அப்படிச் செய்திருந்தால் அக்குற்றம் என்னைச் சார்ந்ததாகுமே; நான் என்செய்வேன்," என்று விசனமுற்று இரண்டு கண்களிலும் கண்ணிர் வடிய உடனே எழுந்து சென்று அந்த விசுவாமித்திரருக்கு வணக்கஞ்செய்து அவருடைய இரண்டு பாதங்களையும் தன்னுடைய கரங்களாற் பிடித்துக்கொண்டு, "என்னுடையகுலதெய்வமே! நீர்இங்குஇவ்வளவு விரைவுகொண்டு வந்ததற்குக் காரணமியாது? என்னுடைய மந்திரி முதலானவர்கள் உமக்கடங்கி நடக்காமல் பெருங்குற்றத்தைச் செய்தார்களோ? நான் உமக்கு முன்னே கொடுத்த திரவியங்களில் ஏதேனும் சிலவற்றை மறைத்துவைத்துக் கொண்டதுண்டோ? அல்லது அயோத்தியில் அடிமையாளர்கள் உம்முடைய ஏவலைக் கேட்டு நடவாமல் உம்மை அவமதித்தார்களோ? உமக்கு நேர்ந்ததை இப்பொழுது இன்னதென்றுரைத்தருளவேண்டும்; உம்முடைய மனத்திற்கு விரோதமான செய்கை நிகழ்ந்திருந்தால் அதை இப்பொழுதே நிவர்த்தி செய்து உமக்குத் திருப்தியை உண்டாக்குகிறேன்; கிருபைசெய்து உமது மனத்திலுள்ளதைத் தெரிவிப்பீராக," என்று கூறினன். அவ்வாறு அரிச்சந்திரன் வணங்கிக் கூறவே விசுவாமித்திரர் அவனுடைய திருமுகத்தை நோக்கி, "அறிவிற்சிறந்த அரசனே! உன்னைச் சார்ந்தவர்களால் எனக்கொருகஷ்டமும் நேரவில்லை; உன்னாலும் துன்பம் நேரவில்லை; அன்றியும் நான் என்னுடைய கஷ்டத்தைத் தெரி

விக்க உன்னிடம் வரவில்லை; நான்வந்ததனாலே என்ன விளையு மோ என்று நீ பயங்கொள்ளவேண்டாம்; உனக்கு நன்மை செய்ய உத்தேசித்தே நான் இங்கு வந்தேன்; நீ மிகவும் தருமகுண முடையவன்; நான் சொன்னதை யெல்லாம் தட்டாமற் செய்தாய்; என் மனம்போல் நடந்தாய்; இவ்வாறு சற்குணம் பொருந்திய நீ இந்த வெவ்விய காடுகளிலும், பாலைவனங்களிலும், மலைகளிலும் வந்து பலவிதமான துன்பங்களை யடைவது சரியன்று; நான் அயோத்தியி லிருக்கும் போது நீ அளவற்ற கஷ்டங்களை யடையக்கூடுமென்று நினைத்தேன்; அவ்வாறு நினைத்தவுடனே என் மனம் அனலி லிட்ட மெழுகுபோல உருகிப்போயிற்று; அதனால் சிறிதும் தாமதிக்காமல் எப்படியாவது உன்னுடைய துன்பங்களை நீக்கி உனக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்று கருதி விரைவாக ஓடிவந்தேன்; இப்பொழுது நான் சொல்வதைத் தடை செய்யாமற் கேட்பாயாக; நீ வீணே என்னுடைய சில வார்த்தைகளைத் தட்டுவதனாலேயே இவ்வித கஷ்டங்கள் ஏற்படுகின்றன; நீ பிடிவாதஞ் செய்வதனால் நானும் உன்னை என்னுடைய வார்த்தைக் கிணங்கி நடக்கும்படிச் செய்ய வேண்டுமென்று பிடிவாதஞ் செய்கின்றேன்; இல்லாவிட்டால் நான் அவ்வாறு செய்யும்படி உன்னை வற்புறுத்தமாட்டேன்; நாமிருவரும் வார்த்தையாடிக்கொண் டிருக்கும் போதே நீ, "சொன்ன வார்த்தை தவறமாட்டேன்," என்று கூறினாய்; அதனால், நீ சொன்ன வார்த்தை தவறும்படிச் செய்யவேண்டுமென்று எனக்கு வைராக்கிய மேற்பட்டுவிட்டது; எண்ணியதை விடாது நிறைவேற்றுவது முனிவர்களுடைய சுபாவமாதலால் நானும் அந்த வைராக்கியத்தை நிறைவேற்றவேண்டுமென்று உறுதிகொண்டிருக்கின்றேன்; ஆதலால், நீ எனக்குக் கொடுத்த நாட்டையும் நகரத்தையும், 'கொடுக்கவில்லை,' என்று ஒரு வார்த்தை கூறிவிடு; அதனால் என்னுடைய வைராக்கியம் நிறைவேறிப்போகும்; அப்படிச் சொல்வதனால் உனக்கொன்றும் குறைவில்லை; அதனால் நீ, நீதி தவறியவனாய்விடமாட்டாய்; எத்தனையோ சக்கர

வர்த்திகள் வேடிக்கையாகச் சில வார்த்தைகளைக் கூறிவிட்டுப் பின்னர் அவற்றைக் கூறவில்லையென்று சொல்லிவிடுகிறார்கள்; அவர்களைப்போல நீயும் இந்த வார்த்தையை வேடிக்கையாகச் சொல்லிவிடு; நாட்டைப் பெற்றுக்கொண்ட நானே இவ்வாறு கூறும்படி வற்புறுத்துவதால் நீ சந்தோஷமாக இந்த வார்த்தையைக் கூறலாம்; இதனால் எனக்கேற்படும் இலாபமொன்றுமில்லை; உனக்கேற்படும் நஷ்டமும் ஒன்றுமில்லை; இஃதொரு வேடிக்கையான விஷயம்; நான் விளையாட்டாகவே உன்னிடம் பல காரியங்களை யெல்லாம் நடத்தினேன்; இவற்றில் ஏதேனும் எனக்குப் பிரயோசனமிருக்கின்றதா வென்று நீயே யோசித்துப்பார்; எல்லாம் விளையாட்டுக் காரியங்களாகவே யிருப்பதால் நீயும் விளையாட்டாகக்கொடுத்த அரசாட்சியைக் கொடுக்கவில்லையென்று சொல்லிவிடு; இப்போதே அவற்றை மீண்டும் உன்னிடமே கொடுத்துவிடுகிறேன்; உடனே அயோத்திக்கு வந்து சுகமாக வாழக்கடவாய்; நீ மிகவும் புத்தியுடையவன்; உனக்கு நான் அதிகமாக ஒன்றும் சொல்லவேண்டியதில்லை; வினாவில் என் சொற்படியே செய்,'' என்று மிகவும் தந்திரமான வார்த்தைகளை இதமாகக் கூறினார்.

இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டவுடன் அரிச்சந்திரன் மிகுந்த மனவருத்தத்தோடு அந்த விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! சமயமறிந்து நல்ல வார்த்தைகளைக் கூறினீர்! நான் மிகவும் துன்பத்தை யடைந்திருப்பதால் அநீதியைச் செய்ய இணங்குவேனென் றெண்ணினீர்போலும்; என்னுடைய உயிரும், என்னைச் சார்ந்தவர்களுடைய உயிரும் அழிந்தாலும், எங்களுடைய உடம்பு பதைக்க எங்களை நரகத்திலே கொண்டுபோ யமிழ்த்தினாலும், முன்னே பிராமணர்களெல்லோரு மறியும்படி நான் மனமிசைந்து உமக்குக் கொடுத்த பொருள்களை மீண்டும் என்னுடைய வாக்கினால் இல்லையென்று சொல்லமாட்டேன்; உலகத்தில் பசியினால் வருந்தி வந்த பரதேசியினுடைய பாத்திரத்திலே மனமிரங்கி அன்ன மிட்டவர் பின்னர் என்ன தரித்திரத்தை

யடைந்தாலும் தமக்கேற்பட்ட பசிக்கு அந்த அன்னத்தைத் தங்களுடைய கையா லெடுத் துண்பார்களோ? ஒருநாளும் அவ்வாறு செய்யமாட்டார்கள்; அவர்களைப்போலவே, நீர் விரும்பிக் கேட்க மனமிசைந்து அரசாட்சியைக் கொடுத்த நான் பின்னர் என்ன தரித்திரத்தை யடைந்தபோதிலும் மீண்டும் அதனைப் பெற்றுக்கொள்ளச் சிறிதும் மனமிசை யேன்; அப்படிச் செய்வேனுயின் பிச்சையிட்ட சோற்றை மீண்டும் கையா லெடுத் துண்டவனாவேன்; நீர் இந்தச் சம யத்தில் இவ்விதமான வார்த்தைகளைக் கூறுவது அழகன்று," என்று சொல்லி அவருடைய இரண்டு பாதங்களையும் பிடித் துக்கொண்டு வணங்கினுன். அவ்வாறு அவன் கூறியும் விசுவாமித்திரர் தம்முடைய கொள்கையை விடாமல் கோபம் பொருந்திய முகத்தோடு அரிச்சந்திரனை வெறுத்துப் பார் த்து, "திரிசங்கு மகனே! நான் எவ்வளவோ உன் விஷயத் தில் பரிந்துரைத்தும் என் வார்த்தைகளை மறுத்துப் பேசு கின்றாய், இதுவரை உனக்கு வந்திருக்கும் துன்பங்களோ மிகவும் சொற்பம்; இனி வரும் துன்பங்களோ அநேகமுண்டு; நீ செல்லு மிடங்களிலெல்லாம் பலவகையான மிருகங்கள், ஒரு சேர்க்கையாகிக் கூடிவந்து உன்னுடம்பையும், உன் னைச் சார்ந்தவர்களுடைய உடம்பையும் கிழித்து வருத்தஞ் செய்யும்; நீ இப்போது வந்திறங்கியிருக்கும் இந்த யமுனு நதிக்கரையிலேயே சிப்புள் முதலிய பெரும் பறவைகளா லும், பல விலங்குகளாலும் இதைவிட்டுக் கடப்பதற்குள் ளாகவே எண்ணிலடங்காத் துன்பங்கள் நேரும்; இதன் பக் கத்திலுள்ள மலைகளிலும் அவ்வகைப் பிராணிகளே நிறைந் திருக்கின்றன; ஆதலால், அவ்விடங்களிலும் சகித்தற்கொண் ணுத் துன்பங்க ளுண்டாகும்; மேற்கூறியபடி இனிமேல் வரப்போகுந் துன்பங்கள் மிகவும் பயங்கரமானவைகளா யிருப்பதனுற்றுன் உன்மீது நான் இரக்கங்கொண்டு இவ் வாறு கூறினேன்; நீ அந்த வார்த்தைகளை அலட்சியம் செய்துவிட்டாய்; அந்தோ பாவம்! நீ என் வீணுக இத் தகைய கொடுந் துன்பங்களை யெல்லாம் அடைந்துகொண்டு

இந்தக் கஷ்டமான வழியிற் செல்கின்றாய்; வேண்டாம்; நான் முன்னே கூறியபடி சொல்ல உனக்குச் சம்மதியில்லாவிட்டாலும் என்னால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த இரண்டு பெண்களையும் மணஞ் செய்துகொள்வதற்காவது இணங்கு; அந்த ஒரு காரியத்திற்கு நீ இசைந்தாலும் நான் அரசாட்சியைக் கொடுத்துவிடுகிறேன்; இப்பொழுதே நீ திரும்பிவந்து அரசாட்சியைப் பெற்றுக்கொண்டு அப்பெண்களுடன் சந்தோஷமாக வாழலாம்," என்று கூறினர்.

விசுவாமித்திரர் மேலும் அவ்வாறு கபடமாகச் சொன்ன வார்த்தைகளை அரிச்சந்திரன் கேட்டு மீண்டும் ஆற்றொணுத் துயரமுடையவனாய் அவரை நோக்கி, "முனிசிரேஷ்டரே! தாம் முந்திக் கூறியவார்த்தைகளைக் காட்டினும் இந்த வார்த்தைகள் மிகவும் விசேஷமுடையவைகளா யிருக்கின்றன; உலகத்தில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்றும் மனிதரை மயக்கிப் பிறவிக்கடலுள் அமிழ்த்தத்தக்கவைகள்; அவற்றுள்ளும் பெண்ணாசையாகிய காமமோ மிகவும் கொடியது; கண்ணும் தெரியவொட்டாமல் மயக்கக்கூடிய கொடிதாகிய அப்பெண் விருப்பானது ஒருவர் மனத்தைப் பற்றுமானால் அம்மனத்தில் வேறொரு எண்ணத்தையும் தோற்றவிடாமல் அம்மனத்தைக் கலக்கி வருத்தி உயிரையும் அழித்துப் பழியையு முண்டாக்கிவிடும்; இப்போது அத்தகைய பெண்ணாசையைக் கைக்கொண்டு அந்தப் பெண்களை விவாகஞ் செய்துகொள்ளும்படி நீர் சொல்கின்றீர்; இஃதெள்ளளவும் பொருந்தாத வார்த்தையாகும்; முந்தியே இவ்விஷயத்தில் நான் அருவருப்புக்கொண்டு இதை மறுத்துக் கூறிவிட்டேன்; அப்படியிருந்தும் மீண்டும் மீண்டும் அதற்கிணங்கும்படி வற்புறுத்திக் கூறுவது அழகன்று; உண்ணத்தகாத ஒருவஸ்துவை உண்ணும்படி ஒருவரை மற்றொருவர் வற்புறுத்தி அவர் வாய்க்குச் சமீபத்திற் கொண்டு போகும்போதே அருவருப்புக்கொண்டு வாந்திசெய்த அவர் மீண்டும் அதனை வாங்கி விருப்பத்தோ டுண்பார்களோ? ஒருபோதும் உண்ணமாட்டார்கள்; அவர்களைப்போலவே நானும்

முந்தியே வெறுத்த இவ்விஷயத்திற்கு மீண்டும் இணங்க மாட்டேன்; ஆதலால், நீர் வீணே என்னைச் கருவமுடையவனென்றும், அடக்கமில்லாதவனென்றும் நிந்தித்து அடுத்தடுத்து இவ்விதமான வார்த்தைகளை என்னிடம் கூறுவதை விட்டுவிடும்," என்றுரைத்தான். அதைக்கேட்டுப் பின்னரும் விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி, "மன்ன! நீ ஏதேதோ உன்புத்திக்குத் தோற்றியதையெல்லாம் கூறுகின்றாய்; என் சொற்களைத் தள்ளுகின்றாய்; உலகத்திலுள்ள அறிவுடையவர்கள் கொடுக்கு மிடத்தின் றகுதியை யுணர்ந்து தம்முடைய சக்திக்குத் தகுந்தபடி பிச்சை யிடுவார்கள்; கொடுக்கத்தகாத விடத்தில் தம்முடைய சக்திக்கு மிஞ்சித் தானஞ் செய்யமாட்டார்கள்; செய்யுங் காரியங்களையும், 'இன்னது செய்தால் திங்காகும்,' 'இன்னது செய்தால் நலமாகும்,' என்று ஆராய்ந்து அவற்றில் நலந்தரத்தக்கவைகளையே செய்வார்கள்; திமை தரத்தக்கவைகளைச் செய்யமாட்டார்கள்; தம் வலியும் மாற்றான் வலியும் அறிந்து தமக்கு ஜெயமுண்டாகுமென்று தெரிந்தால் மாத்திரம் பகைவரோ டெதிர்ப்பார்கள்; அபஜெயமுண்டாவதாயிருந்தால் எதிர்க்கமாட்டார்கள்; இப்படி ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்யும் அறிவுடையார்க்கு ஒருநாளும் திங்கு வராது; ஆதலால், நீயும் ஆராய்ந்து காரியங்களை நடத்தவேண்டும்; நீ இப்போது செய்திருக்கும் காரியங்களெல்லாம் யோசனையின்றிச் செய்யப்பட்டவைகள்; உன் சக்திக்கு மிஞ்சிய காரியங்களையும் செய்திருக்கின்றாய்; 'தனக்கு மிஞ்சிய தானமில்லை,' 'தனக்குக் கண்டு தானம்,' என்ற பழமொழிகளின்படி உன் சௌகரியத்துக்கு வேண்டிய பொருள்களை வைத்துக்கொண்டு ஏதேனும் சிறிது பொருளையல்லவா நீ தானஞ் செய்யவேண்டும்? அப்படியின்றி உன் கையி லொன்று மில்லாமல், எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டாய்; இது மிகவும் அறிவீனமான காரியம்; ஆதலின், நீ செய்யத்தகாத காரியங்களைச் செய்தாவது உன் உரிமைகளை யெல்லாம் மீண்டும் கைப்பற்றிக்கொள்வது உத்தமமான காரியமாகும்; இன்னும் என்

னுடைய பெண்களால் உனக்குச் சுகம் வருவதாயிருந்தும் அவர்களை மணஞ்செய்துகொள்ளும் விஷயத்தில் அருவருப்புக்கொண்டு அம்மணத்தையுந் தடை செய்கின்றாய்; இது வும் முழுமூடத்தனம்; உலகத்தில் எவரேனும் சுகத்தைக் கைவிடுவார்களோ? இஃது எவ்விதத்தாலும் தீங்கான காரியமாகமாட்டாது; இதனால் மிக்க சுகமே கிடைக்கும்; இதை நீ தடை செய்யாமல் ஏற்றுக்கொள்வதால் மிக்க புகழு முண்டாகும்; நீ இன்னும் நான் கூறிய இந்த வார்த்தைகளை யெல்லாம் நன்றாக ஆராய்ந்து மேற்கூறிய இரண்டு காரியங்களி லும் ஏதேனு மொன்றைச் செய்யத்துணி," என்று வேறு விதமான ஜாலங்கள் பொருந்திய உபதேச வார்த்தைகளைக் கூறினர்.

அவர் அவ்வாறு மாயாவிநோத வார்த்தைகளைக் கூறியும் அரிச்சந்திரன் அவருடைய பசப்பு வார்த்தைகளாகிய அவ்வலைக்குட் சிக்கிக்கொள்ளவில்லை. அதனால் அவன் மிக வும் பணிவோடு மீண்டும் விசுவாமித்திரரை நோக்கி, "தவ சிரேஷ்டரே! நீர் இப்பொழுது கூறும் நியாயங்களெல்லாம் வேறொரு வழியைப்பற்றினவைகளா யிருக்கின்றன; இவற் றுள் சில நியாயமானவைகளா யிருப்பினும், மற்றவைகள் நீதிக்கு விரோதமானவைகளா யிருக்கின்றன; நீர் நன்மை யான சில வார்த்தைகளையும், கெட்ட பல வார்த்தைகளையுங் கலந்துரைத்து என் மனத்தைக் கலக்குகின்றீர்; இவைகளெல் லாம் என் செவிக்கேறமாட்டா; இந்த வார்த்தைக ளெல்லாம் செய்யத்தகாத காரியங்களைச் செய்வோர் சமயத்துக்குத் தக்கபடி நியாயமாய்ச் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள்; கட்குடியன், 'கள் உடம்புக்கு மிகவும் வலிமையைக் கொடுத்து அறிவை விருத்திசெய்து தைரியத்தை உண்டாக்கும்,' என்றும், கஞ்சாக்குடியன், 'கஞ்சாவானது பஞ்சவிஷயங் களையுமொடுக்கி ஒரு நிலைமையை யுண்டாக்கி ஆத்மஞானத் தைக் கொடுக்கத்தக்கது,' என்றும் கூறும் வார்த்தைக ளோடு இவைகளும் சார்ந்தவைகளாம்; இவற்றை அறிவுடை யோர் எட்டுணையும் மதிக்கமாட்டார்கள்; நீரே விரும்பிக்

கேட்க நான் இராஜ்ஜிய முழுமையும் கொடுத்திருந்தால்மாத்திரம் அஃது என்சக்திக்குமிஞ்சி அறியாமையாற்செய்ததான மாகும்; அப்படி நான் அரசாட்சியைக் கொடுக்கவில்லை; நீர் நீசப் பெண்களை மணப்புரிந்து கொள்ளும்படி என்னை வற்புறுத்தினதற்காக நான், 'இராஜ்ஜியத்தையேனும் கொடுத்துவிடுவேன், இக்காரியத்தைச் செய்யமாட்டேன்,' என்று கூறினேன்; நீர் அந்த வார்த்தையையே உறுதிப்படுத்தி அரசாட்சியைக் கொடுக்கும்படி கேட்டீர்; நான் என் வார்த்தைக்குப் பங்கம் வாராமல் அப்படியே அதனைக் கொடுத்து விட்டேன்; ஆதலால், இது பயித்தியக்காரத்தனமாக என் கையிலொன்றுமில்லாதபடி கொடுத்ததானமாகாது; இதனைத் திரும்பப்பெற்றுக்கொள்ள நினைப்பது மிகுந்த அநீதியாகும்; இதன்றி நீசப்பெண்களை விவாகஞ் செய்து கொள்ளுதல் எவ்வித சுகமுமில்லை, கீர்த்தியுமில்லை; என்னை நீர் நெருப்பிலேபோட்டாலும், என்தேகத்தை வெட்டி இருபிளவுசெய்தாலும் மேற்கூறிய இரண்டு காரியங்களுக்கும் எப்பொழுதும் இணங்கமாட்டேன்; நான் உம்முடைய வார்த்தைகளைத் தடுத்துரைத்ததற்காக என்மீது கோபங்கொள்ளாமல் நீர் தயவு செய்து போய்வரலாம்," என்று கூறி அவருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து வணங்கினான். விசுவாமித்திரர் அவனுடைய மனவுறுதியைப்பற்றி ஆச்சரியங்கொண்டு, "ஆ! ஆ!! இவன் இப்போது மனந்தளரவில்லையே; இன்னும் தாங்க முடியாத பல துன்பங்களைச் செய்தால்மாத்திரந்தான் இவன் நம்முடைய வழிக்குத் திருப்புவான்; இனி மிகுந்த துன்பங்களை இவனுக்குச் செய்யவேண்டும்," என்று தமக்குள் முடிவுசெய்துகொண்டு அதன்மேல் அரிச்சந்திரனை நோக்கி, மிகுந்த கோபத்தோடு கண்களில நெருப்பெழ விழித்து, "வீண் பிடிவாதங்கொண்ட பைத்தியக்காரனே! உன்னுடைய வலிமையை நான் அறிகிறேன்; நீ என் சொல்லை இப்போது தடை செய்ததனால் பல கஷ்டங்களைப் பின்னர் அநுபவிப்பாய்; இனி நடக்கும் காரியங்களைத் தெரிந்து கொள்," என்று கூறி உறுமி மொறுமொறுத்துக்கொண்டு அவ்விடத்தினின்றும் நீங்கிப் போய்விட்டார்.

அப்படி அந்த வஞ்சக நெஞ்சம் படைத்த விசுவாமித்திரர் கோபித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கிப்போகவே அரிச்சந்திரன், "ஐயோ! இந்த முனிவர் வஞ்சனையால் இன்னும் என்ன தீங்குகள் வருமோ," என்று மனங் கலங்கிக் குளிர்ந்த தாமரைமலர்போன்ற முகம்வாடிப் பின்னர், "நாம் விசுவாமித்திரருக்குக் கொடுத்த அரசாட்சியைத் திரும்பிப் பெற்றுக்கொள்ளுதலும், அந்த நீசப் பெண்களை மணஞ் செய்துகொள்ளுதலுமல்லாமல் வேறு என்ன வந்தாலும் வரட்டும்; இவ்விரண்டு காரியங்களையும் செய்வதைப் பார்க்கிலும் இனிமேல்வரும் எண்ணிலாத துன்பங்களைச் சகித்துக்கொள்ளுதல் நலமாம்," என்று மனந்தேறி யிருந்தான். அந்தருணத்தில் மேற்கூறியபடி நீங்கிச் சென்ற விசுவாமித்திரர், பக்கத்தில் நிறைந்த மலர்களோடு விளங்கிய ஒரு சோலையில் மறைந்து நின்றுகொண்டு, சப்திக்கின்ற வீரக்கழலை யணிந்த அரிச்சந்திரனுடனே தங்கியிருந்த வேதியனாகிய சுக்கிரன் தன்னிடத்திற்கு வரும்படி மனத்திற் சிந்தித்தார். அவ்வாறு சிந்தித்தவுடனே அவருடைய மனக்குறிப்பைச் சுக்கிரன் அறிந்து, அரிச்சந்திரனிடம், 'மலர்பறித்து வருகிறேன்,' என்று பொய்கூறிவிட்டு உடனே எழுந்து தந்திரமாக நடந்து விசுவாமித்திரரிருக்கும் சோலைக்குள்ளே புகுந்து அவர் சமீபத்தை யடைந்தான். அப்போது மிகுந்த கோபத்தையுடைய விசுவாமித்திரர் அந்தச் சுக்கிரனை அருகிலழைத்துக் கொல்லுங் குணத்திற் சிறந்த பச்சை நாவியைப் பாம்பின் விஷத்தோடு கலந்தாற்போல மகா வஞ்சனை பொருந்திய அவனுடைய மனத்திலே இன்னும் பல வஞ்சனைகள் பொருந்தும்படி அவனுக்கு அநேகம் தந்திரங்களை யெல்லாம் எடுத்துக் கூறி அரிச்சந்திரனுக்கு மேலும் அளவற்ற துன்பங்களைச் செய்து அவனை வருத்தும்படிச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுத் தம் மிருப்பிடத்திற்குப் போய்விட்டார். அதன்மேல் சுக்கிரன், தான்சொல்லி வந்ததற் கடையாளமாகச் சில மலர்களைப் பறித்துக்கொண்டு திரும்பி அரிச்சந்திரனிடம்போய்ச் சேர்ந்தான்.

அரிச்சந்திரன் செல்லும் வழியில் விசுவாமித்திரர் அக்கினியை யுண்டாக்கி அவனுக்குத் துன்பஞ்செய்தல்.

அதன்மேல் அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும், சத்தியகீர்த்தியும், சுக்கிரனும் மேற்கூறிய யமுனநதியில் நீர்வற்றிய தருணமறிந்து இறங்கி அந்நதியைக் கடந்தப்பாற் போனார்கள். அப்படி அவர்கள் அந்நதியைக் கடந்து செல்லும்போது விசுவாமித்திரர் கோபித்து மேலும் அரிச்சந்திரனுக்குத் துன்பத்தைச் செய்ய நினைத்து உடனே அக்கினிபகவான் தமக்குமுன்னே வரவேண்டுமென்று சிந்தித்தார். அவ்வாறு தியானிக்கவே அக்கினிபகவான் பிராமண வடிவந் தரித்து உடனே விசுவாமித்திரருக்கு முன்னேவந்து அவரை நோக்கி, "அருமையான வேதப்பொருள்களைத் தெரிந்த தவசிரேஷ்டரே! என்னை இச்சமயம் வரவழைத்ததற்குக் காரணமியாது? அதை விரைவில் தெரிவிக்கவேண்டும்," என்று கேட்டான். அதற்கு விசுவாமித்திரர் அங்கினி பகவானை நோக்கி, "அக்கினிதேவரே! நீர் என் சபதம் நிறைவேறும் பொருட்டாக அரிச்சந்திரன் செல்லும் வழியிற் சென்று எங்கும் மூண்டெரிந்து பாவி அவனை அப்பாற் செல்லவொட்டாமல் தடுத்து அவனையும் அவனைச் சார்ந்தவரையும் சுட்டு அவனுக்கு மிக்க துன்பத்தை யுண்டாக்க வேண்டும்," என்று கூறினர். அதைக் கேட்டவுடன் அக்கினி பகவான், விசுவாமித்திரரை நோக்கி, "முனிசிரேஷ்டரே! அரிச்சந்திரனே மிகவும் நீதிபொருந்தியவன்; சந்திரமதியோ பதிவிரதா தருமத்திற் சிறந்தவள்; ஆகையால், நான் அவர்களை எவ்வாறு சுடுவேன்; என் வல்லமை அவர்களிடத்திற் செல்லாது; அவர்களை ஒருபோதும் சுடமாட்டேன்; அவர்கள் செல்லும் வழியில்மாத்திரம் பாவியெழுந்து அவர்களை அப்பாற் செல்லவொட்டாமற் சிறிது நேரம் தடுத்துத் துன்பஞ் செய்து பின்னர் விலகிவிடுகிறேன்," என்று சொன்னன். விசுவாமித்திரர் அப்படியே செய்யும்படி சொல்லியனுப்பினர்.

பின்னர் அக்கினிதேவன் விரைந்து சென்று அரிச்சந்திரன் செல்லும் வழியில் நெடுந்தூரத்திற் கப்பால் ஓரிடத்

தில் ஆகாயமட்டும் சுவாலை விட்டெரிந்து குறுக்கே விசாலித்துப் பாவி வழியை மறித்து எங்கும் நெருப்பு மயமாகச் செய்துகொண்டிருந்தான். அப்படி வழியில் எங்கும் நெருப்பு மூண்டெரிந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் அரிச்சந்திரன், தன்னைச் சார்ந்தவர்களோடு நடந்து பல காடு மலைகளையெல்லாம் கடந்து நெடுநேரஞ் சென்றபின் அவ்விடம் போய்ச் சேர்ந்து அதற்குச் சமீபத்திலிருந்த ஒரு மூங்கிற்காட்டில் நடந்து சென்றான். அங்ஙனஞ் செல்லும்போது மேற்கூறிய நெருப்பானது மிகுந்த நெருப்புப் பொறிகளுடனும், பெரியபுகைப் படர்ச்சியுடனும் அரிச்சந்திரனுக் கெதிரே தோற்றிற்று. அவ்வாறு அந் நெருப்பானது தோற்றலே அரிச்சந்திரனும், மற்றவர்களும் அதைக்கண்டு, 'யாது காரணத்தினால் இங்கே இவ்வாறு நெருப்பெரிகின்றது?' என்று நினைத்தார்கள். அப்படி நினைத்த சிறிது நேரத்திற்குள் அந்த நெருப்பு முன்னினும் அதிகமாகச் சுடர்விட்டெரிந்து வளர்ந்து ஆகாயத்தையளாவி அண்டமும் வெடிக்கும்படி முழங்கிக் கோட்டைபோல முன்னே நெருங்கி எங்கும் வளைந்துகொண்டது. அப்படி அந்நெருப்பானது வளைந்தசமயத்தில் கொழுந்துவிட்டெரிந்து நாலாபக்கங்களிலும் பயந்தோடும் மிருகங்களின்மீது தாவிப்பாவிய சுவாலைகள் எப்படித்தோன்றினவென்றால், அம்மிருகங்களைப் பிடித்தற்கு விரைந்து பின்றொடர்ந்து செல்வனபோன்றிருந்தன. அவ்வாறு பயங்கரமான சுவாலைகளுடனே நெருப்பானது வளைந்துகொள்ளவே அரிச்சந்திரன் சுக்கிரனை நோக்கி, "சுவாமி! இந்த நெருப்பைப் பார்க்கும்போது மிகுந்த பயங்கரமாயிருக்கின்றது; இஃது எக்காரணத்தால் இங்கே உண்டாகியிருக்கின்றது?" என்று வினவினான். அதைக் கேட்டவுடன் அந்த நெருப்பைப்போலவே வெப்பம் பொருந்திய குணத்தினையுடையவனாகிய சுக்கிரன், தனக்கு அந்நெருப்பு விசுவாமித்திரரால் உண்டானதென்று தெரிந்திருந்தும் அவ்வுண்மையைக் கூறாமல் மேலும் பயங்கரமான வார்த்தைகளைக் கூறி அரிச்சந்திரனுக்கு மிகுந்த கலக்கத்தை யுண்டாக்கவேண்டுமென்று

கருதி உடனே அரிச்சந்திரனை நோக்கி, "மன்னனே! அண்டமுகட்டை யளாவிப் பொங்கி யெழுந்திருக்கின்ற இந் நெருப்பானது அடங்காப் பசிகொண் டெழுந்திருக்கின்றது; இஃது இப்போது அரசர்குலத்திற் பிறந்த ஒருவரை உண்டால் மாத்திரம் தணியும்; வேறு எந்த வகையாலும் அடங்காது; இன்னும் சிறிதுநேரம் வரை இந்நெருப்பானது தணியாதிருக்குமானால் நாமெல்லோருமே அழிந்துபோவோம்; ஐயோ! நீங்கள் போவதுமல்லாமல் வீணே பிராமணனாகிய நானும் தொலையப்போகின்றேன்; இதற்காகத்தான் நான் முந்தியே உன்னோடு வரமாட்டேனென்று கூறினேன்; நீ என் சொல்லைக் கேளாமல் என்னைக் கட்டாயப்படுத்தி அழைத்துக்கொண்டுவந்து இந்தப்பெருநெருப்பின் முன்னே விட்டுவிட்டாய்; என் பாவம் வீணே போகாது; இதனால் நீ மீளாநரகிற் காளாவாய்," என்று துடிதுடித்துக் கூறிக் கதறினான்.

சுக்கிரன் அவ்வாறு கூறியதைக் கேட்டவுடன் அரிச்சந்திரன் இரக்கமுடைந்து சுக்கிரனை நோக்கி, "அந்தணரே! நீர் எதற்கு மஞ்சவேண்டாம்; நானிருக்கும்போது உமக்கோ ரபாயமும் வாராது; அரசர்குலத்திற் பிறந்த ஒருவரைப் புசித்தால் இந்த அக்கினி தணிந்துவிடுமென்று நீரே கூறினீர்; ஆதலால், நான் இச்சமயம் இந்த நெருப்பிற் கிரையாகி இதன் உக்கிரத்தைத் தணித்து உம்மைக்காப்பாற்றுகிறேன்," என்று அவனுக்குத் தேறுதல் கூறிப் பின்னர் சந்திரமதியையும், தேவதாசனையும், சத்தியகீர்த்தியையும் நோக்கி, "அரசர் குலத்திற் பிறந்த ஒருவரைப் புசித்தால் இந்த நெருப்பு வேக மொடுங்கிவிடுமென்று இந்த அந்தணர் கூறுகின்றார்; ஆதலால், நான் இதற்கிரையாகி இதன் வேகத்தைத் தணிக்கின்றேன்; நீங்கள் உயிர் பிழைத்துப்போய் விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தை எந்த வழியினாலாவது தேடி இந்த அந்தணர்வசம் கொடுத்துவிடுங்கள்; இவ்வாறு நான் உயிர்கொடுக்கத் துணியாவிட்டால் எல்லோரும் அழிந்து போவதற் கேதுவுண்டாகும்; அப்படி எல்

லோரு மழிந்தால் எனக்கு மிக்க பழி யுண்டாவதுமன்றி விசுவாமித்திருக்குச் சொன்ன வாக்குப்படி அவருடைய கடனும் தீராது; ஆதலால் நான் இப்பொழுது நெருப்பில் விழுவதே உத்தமமான காரியமாகும்; நீங்கள் என்பொருட்டுக் கவலைப்படவேண்டாம்," என்று சொல்லிக் கண்களிலே நீர் தாரைதாரையாக ஒழுக அந் நெருப்பிற் கெதிரே சென்றான். அவன் அவ்வாறு செல்வதைக் கண்டவுடன் சத்திய கீர்த்தி யென்னும் மந்திரி இடிவிழுந்த மரம்போற் படிமேற்சாய்ந்து கதறிக் கண்ணீர்விட்டழுது அவனுடைய இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டு, "மன்னர் பெருமானே! என்னகாரியஞ் செய்யத் துணிந்தீர்; அடியேனிருக்கும்போது தாம் உயிரிழப்பது தகுதியாமா? நீரிறந்துவிட்டால் என் அன்னையாகிய சந்திரமதியும், தேவதாசனும், நானும் எவ்வாறு உயிர்வைத்திருப்போம்; ஒன்றுக்கு முதவாத யானிறந்து நீ ரிருந்தால் எல்லோரையும் காப்பாற்றுவீர்; எங்களைவிட்டு நீர் உயிர்விட்டால் என்னையும், உம்முடைய மனைவியையும், மைந்தனையும் காப்பாற்றுவா ரியாவர்? நீர் நெருப்பிற் பாயவேண்டாம்; நில்லும்! நில்லும்!! நான் இதிற் பாய்ந்து உயிர் விடுகின்றேன்," என்று கூறி அந் நெருப்பிற் கெதிரே சென்றான். அப்போது அரிச்சந்திரன் சத்தியகீர்த்தியினுடைய விசுவாசத்தைப் பார்த்து மேலும் அதிகமாகக் கண்ணீர் வடித்து விரைந்து சென்று அவனுடைய கையைப்பற்றி அவனை மார்போ டணைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி யழுது, "மந்திரி! உன்னைப் போல் என்மீது அன்புடையவர் உலகத்தில் ஒருவருமிரார்; முன்னே எல்லாச் சுகங்களையு மிழந்து காடுகளிலும் மலைகளிலும் கஷ்டப்பட்டு என்னுடன் தொடர்ந்து வந்தாய்; இப்பொழுதோ எனக்காக உயிர் கொடுக்கவுந் துணிந்தாய்; உன்னை நான் எம்மையினு மறவேன்; நீ உனக்கு என்மீதேற்பட்ட அன்பினால் இவ்வாறு உயிரிழக்கத் துணிகின்றாய்; ஆயினும், எனக்காக நீ இறப்பது தகாது; அன்றியும், இந்த அக்கினியானது அரசர்குலத்திற் பிறந்த ஒருவரை

உண்டால்மாத்திரம் தணியுமென்று இவ்வேதியர் கூறினர்; ஆதலின், நான் இதற்கிசையானால் மாத்திரந்தான் இது தணியும்; நீ இசையாவதால் தணியமாட்டாது; நீ என்னுடைய சாவைப் பார்த்தற்கு மனஞ்சகியாமல் எனக்கு முன்னே இறந்துவிட்டாலும் நானும் இறந்துதான் தீரவேண்டும்; அப்படி இருவரும் இறந்துவிடுவோமானால் இவர்களை ஏதேனு மோரூரில் கொண்டுபோய்ச் சேர்த்தற்குத் துணையான மனித ரொருவருமில்லை; ஏதேனு மோருபாயத்தைச் செய்து விசுவாமித்திரருடைய கடனைத் தீர்ப்பதற்கும் தக்க மனிதருமில்லை; ஆதலால், நீ நெருப்பில் விழவேண்டாம்," என்று சொல்லித் தடுத்தான்.

அப்படி அரிச்சந்திரனும் சத்தியகீர்த்தியும் ஒருவர்க்கொருவர் சமாதானங்கூறி மிகுந்த வியாகுலமுற்று நிற்குந் தருணத்தில் இலக்குமிபோன்ற அழகும், அருந்ததிபோன்ற கற்புமுள்ள சந்திரமதியானவள் அவ்விருவருக்கும் முன்னே சென்று அரிச்சந்திரன் முகத்தை நோக்கி, "என் பிராணநாயகரே! அடியாளாகிய யானிருக்கும்போது தாங்களும், சத்தியகீர்த்தியும் எதற்காக உயிர்விடவேண்டும்? புருஷர்க்கு ஆபத்துவருங்காலத்தில் அவர் பொருட்டாகத் தாங்கள் உயிர்விடுதலும், புருஷர் வாழுங்காலத்தில் அவரோடு சேர்ந்து தாமும் வாழுதலும் கற்புடைய மங்கையருக்குரிய குணங்களாம்; ஆதலால், ஒன்றுக்கு முதவாத பெண்பாலாகிய நான் இப்பொழுது இந்த அக்கினியில் வீழ்கின்றேன்; நான் பதிவிரதாதர்மத்திற் சிறந்தவளாதலின் இந்த அக்கினி என்னைக் கொல்லமாட்டாது; ஒருவாறு நியாயமில்லாமல் இஃது என்னைக் கொன்றாலுங் கொல்லட்டும்; அதனால் பாதகமொன்றுமில்லை; எனக்கும் உமக்கும் மிக்ககீர்த்தியும் நற்பதவியு முண்டாம்; நீர் என்பொருட்டு மனங்கலங்காதிருப்பீராக," என்று சொல்லிப் பின்னர் சத்தியகீர்த்தியை நோக்கி, "மதியிற்சிறந்த மந்திரியே! நீ நமதரசரை விட்டுவிடாமற் காத்துக்கொள்; நான் இந் நெருப்பிற் பாய்கின்றேன்; தைரியத்தை விடாதே; என் சொல்லைத் தடைசெய்

யாதே,'' என்று சொல்லிவிட்டு உடனே பயங்கரமான அந் நெருப்பினருகே சென்றாள். அப்பொழுது அரிச்சந்திரன், சந்திரமதியின் கற்பின் மகிமையால் அந் நெருப்பானது அவளை எரிக்கமாட்டாதென்பதை அறிந்திருந்தும், 'என்ன விளையுமோ,' என்று சந்தேகித்து அவளைத் தடுக்கவுங் கூடாமல் விட்டுவிடுவதற்கும் மனமிசையாமல் இருதலைக் கொள்ளியி லகப்பட்ட எறும்புபோல மனங்கலங்கிப் பிரமைகொண்டவன்போன்று ஒன்றுஞ் செய்யாமல் மௌனமாகி நின்றான். சத்தியகீர்த்தியும் அரசனைத் தடுத்தபடியே மௌனமுற்று நின்றான். அச்சமயத்தில் தேவதாசன் தன் தாயாகிய சந்திரமதி மேற்கூறியபடி நெருப்பில் விழப்போவதை யுணர்ந்து அலறியழுதுகொண்டோடி அவளுடைய பாதங்களின்மேல விழுந்து, "தாயே! நீயும், என் தந்தையும் உங்களுக்குத் துன்பம்வந்த காலத்தில் உதவியாய் அத்துன்பத்தை நீக்குதற்கன்றோ என்னைப் பெற்றீர்கள்; அப்படியிருக்க இச்சமயத்தில் நீ யிறக்க நான் உயிர்வைத்துக்கொண் டிருப்பது தகுதியன்று; நீ நெருப்பிற் பாயவேண்டாம்; பூர்வகர்மானுசாரத்தால் இந் நெருப்பில்வீழ்ந் திறக்கவேண்டிய விதி எனக்கேற்பட்டிருக்கின்றது; ஆதலால், நான் இதில் வீழ்ந்திறக்கின்றேன்; நீயும், என் தந்தையும், சத்தியகீர்த்தியும் பிழைத்திருந்து விசுவாமித்திரருக்குக் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்துத் தீர்த்து நற்புகழை யடைவீராக,'' என்று கூறி அவளைத் தடுத்தான். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சந்திரமதி, அப்புத்திரனை வாரியெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து அவனுடைய கண்ணீரைத் துடைத்து அவன் திருமுகத்தை நோக்கி, "அப்பனே! என்குலம் விளங்கவந்த கோமானே! இன்னமும் உன் சிவந்த வாயினின்றும் பற்கள் விழவில்லை; நீ குடித்தபாலும் மறக்காதிருக்கின்றாய்; இன்னும் உனக்கு மழலைச்சொல்லும் மாறவில்லை; இத்தகைய இளம் பருவத்திலேயே உனக்கு இந்தப் பேரறிவு எப்படியடா வந்தது கண்மணி! இந்தத்துணிவும் எங்கிருந்து வந்ததடா என் செல்வனே,'' என்று கைகளாலே முகத்தி லடித்

துக்கொண்டு கண்களில் அருவிபோல் நீரொழுகக் கதறி யழுது பின்னர் தன் மனத்தைத் தானே தேற்றிக்கொண்டு மீண்டும் அப்புதல்வனை நோக்கி, "என்னுடைய தவப்பய னாலே தோன்றிய புத்திரனே! நான் இந்த நெருப்பில் வீழ்வ தால் இறந்துவிடுவேனென்று நினைத்து நீ மனங் கலங் காதே; நாம் எவருக்கேனும் வஞ்சனை செய்திருந்தாலன்றோ இந்நெருப்பு என்னைக் கொல்லும்; நாம் எவருக்குத் தீங்கு செய்தோம்? எவர் குடியைக் கெடுத்தோம்? ஒருநாளும் ஒரு குற்றமும் செய்ததில்லை; நானும் கற்பில் எள்ளளவுந் தவறின தில்லை; ஆதலால், என்னை இது கொல்லமாட்டாது; நான் ஏதேனும் கற்பில் தவறியிருந்தால் இது என்னைக் கொல்லட் டும்; நீ எதற்குமஞ்சாதே; விலகி அப்பாற்போய்நில்," என்று சொல்லி அவனைக் கீழேவிட்டாள். அதன்மேல் தேவதாசன் சந்திரமதியினுடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்து மனந் தேறிப் பக்கத்தில் விலகி நின்றான்.

பின்னர் சந்திரமதி விரைவாக நடந்து அந்த அக்கினிக் குச் சமீபத்திற் போய் நின்று அந்நெருப்பை நோக்கி, "புண்ணியம் நிறைந்த யாகங்களில் முதன்மைபெற்று விளங் கும் அக்கினியே! மகா நீதிபொருந்திய அழற்கடவுளே! நாங்கள் வேதநெறியைக் கடந்து நடந்திருந்தாலும், எங்க ளிடம் வந்த விருந்தினரை உபசரிக்காமல் இகழ்ந்திருந்தா லும், நீதிவழியே அரசு செலுத்தாமல் அநீதியாக நடந் திருந்தாலும்,பெரியோரை இகழ்ந்திருந்தாலும்,என் கணவர் பிறர் மனையாளை யிச்சித்திருந்தாலும், நான் வேறு புருஷனை எண்ணியிருந்தாலும், இன்னும் எவ்வகைத் தீங்குகள் செய் திருந்தாலும் நீ இப்பொழுது என்னைக் கொல்லக்கடவாய்; அவ்வாறின்றி நாங்கள் நீதியாக நடந்திருப்போமானால் நீ உன்னுடைய உக்கிர மொடுங்கிக் குளிர்ந்து தணிந்துபோகக் கடவாய்," என்று சொல்லி மிகுந்த தைரியத்தோடு தன் கணவனுடைய பாதங்களைச் சிந்தித்துக்கொண்டு அந்நெருப் பிற் பாய்ந்தாள். அவ்வாறு பாய்ந்தமாத்திரத்திலே எல்லோ ரும் அதிசயிக்கும்படி அந்நெருப்பானது, "மதுரமான

வார்த்தைகளையுடைய இந்தச் சந்திரமதியின் கற்பென்னும் பெரிய நெருப்பானது என்னைச் சுட்டெரித்துவிடும்," என்று சொல்லிப்பயந்து மறைவதுபோல் உடனே சுவாலையொடுக்கி உக்கிரந் தணிந்து, பயங்கரமான முழக்கமும் மாறி உதய காலத்துச் சூரியனைக் கண்ட இருள் நீங்குவதுபோல ஆறி மறைந்துபோயிற்று. உடனே அந்நெருப்புப் பற்றியெரிந்த அந்த மூங்கிற்காடெங்கும் நிறைந்திருந்த சாம்பலும் கரியும் மறைந்து பல தாமரைக் குளங்களுண்டாகி அவற்றில் வெண் டாமரைமலர்களும், குமுதமலர்களும், நீலோற்பலமலர்களும், செந்தாமரைமலர்களும் மலர்ந்து மிகுந்த பரிமளத்தை வீசிக் கொண்டு விளங்கின. அவ்வாறு அங்கெரிந்துகொண்டிருந்த நெருப்படங்கி அவ்விடத்தில் பல தாமரைத்தடாகங்களுண் டாகிய விசேஷத்தைக் கண்டு அரிச்சந்திரன் முதலியோர் மனக்கலக்கந் தீர்ந்து, ஆச்சரிய மடைந்து, பேருவகைக்கட லுள் மூழ்கிச் சந்திரமதியினுடைய கற்பின் உயர்வைப் பல வாறு புகழ்ந்து கொண்டாடினர்கள்.

அதன்மேல் அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவ தாசனும், சத்தியகீர்த்தியும், சுக்கிரனும் அவ்விடத்தை விட்டு நீங்கிச் சிறிது தூரம் நடந்து அதற்கப்பால், நீரலைக ளால் ஓரங்களிற் படிந்திருக்கும் வண்டற்பூமியில் முத்துக் களை ஒதுக்கும் வாரணவாசியின் சமீபத்திற்போய்ச் சேர்ந் தார்கள். அவ்வாறு சேர்ந்தவுடன் அரிச்சந்திரன் மற்றவர்க ளுடனே அந்த வாரணவாசியின் அழகிய தீர்த்தத்துறை யிலே யிறங்கி வேதவிதிப்படி அங்குத் தீர்த்தமாடி அதைக் கடந் தப்பாற் சென்று சந்திரமதியும், புத்திரனும், சத்திய கீர்த்தியும், சுக்கிரனும் பின்னே தொடர்ந்துவரக் காசிநக ரின் பக்கத்திலேயுள்ள நல்ல வளம் பொருந்திய நாட்டைச் சேர்ந்தான்.

நகர்நீங்கிய காண்டம் முற்றுப்பெற்றது.

காசி காண்டம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"மாவெலா மளிகள் பாட மகிழ்ந்துநல் வாச மன்னும்
பூவெலாஞ் செழுந்தே னல்கப் பூவையுங் கிளியு மோதும்
பாவெலா முருகக் கேட்டுப் பலகனிப் பரிசி னல்கிக்
காவெலாந் தலைப சைக்குங் காசிநாட் டியல்பு சொல்வாம்."

மருதநிலத்தின் ஒரு பக்கத்திற் சோலைகள் சூழ்ந்த வயல்களின் ஓரங்களிலெல்லாம் வண்டுகள் நெருங்கி இசையைப் பாட, அச்சோலையின் தருக்களிலுள்ள மலர்களெல்லாம் அப்பாடலுக்கு மகிழ்ந்து சன்மான மளிப்பதுபோல அந்த வண்டுகளுக்கு நல்ல வாசனை பொருந்திய தேனைப் பருகுமாறு கொடுக்க, மற்றொரு பக்கத்தில் சோலைகளிற் றங்கியிருக்கும் நாகணவாய்ப்புட்களும்,கிளிகளும் பாடுகின்ற பாடல்களை யெல்லாம் மன முருகக் கேட்டு அச்சோலைகளெல்லாம் அப்பாடல்களுக்குக் கொடை கொடுத்துச் சிக்கம்பம் செய்வதுபோல அந்த நாகணவாய்ப்புட்களுக்கும், கிளிகளுக்கும் பல கனிகளாகிய பரிசிலைக் கொடுத்துக் காற்றினு லாடித் தலையசைக்கும் சிறப்புவாய்ந்ததும், மேற்கூறிய படி அரிச்சந்திரன் போய்ச் சேர்ந்ததுமாகிய காசிநாட்டின் இயல்பைச் சிறிது கூறுவாம்:

மேற்கூறியபடி அரிச்சந்திரனும், சந்திரமதியும், மற்றவர்களும் காசிநாட்டை யணுகி நடக்கின்ற காலத்தில் மருதநிலத்திலுள்ள தடாகங்கள் செந்தாமரைமலரையும், நீலோற்பல மலர்களையும், செவ்வல்லி மலர்களையும் தோற்றுவித்துக் கொண்டு விளங்கின; அவற்றைப்போலவே சந்திரமதியினுடைய முகமும் தன்னுடைய வடிவமான தாமரைமலரையும், கண்களாகிய நீலோற்பல மலர்களையும், இதழாகிய செவ்வல்லிமலரையும் விளக்கிக் காட்டிக்கொண்டிருந்தது; அதனுல் குளங்களில் மலர்ந்த தாமரைமலர் முதலியவற்றிலுள்ள தேனைப் பருகுதற்கு அவற்றிற்போய் நெருங்கும் வண்டுகள்

சந்திரமதியினுடைய முகத்தைக் கண்டு அதற்கும் குளங்களுக்கும் பேதம் தோற்றுதபடியால் அதனையும் குளமென்று நினைத்து அதன் சமீபத்தில் நெருங்கிக் கண்கள் முதலிய அவயவங்களிற் சார்ந்து அவை அம்மலர்களைப் போலத் தேனைக் கொடுக்காமையினாலே மேலே பறந்து, 'இஃதென்ன புதுமையான குளமாயிருக்கிறதே!' என்று மயங்கிச் சுழன்றலைந்தன; வயல்களி லெல்லாம் செந்நெற் பயிர்கள் நிறைந்திருந்தன; அந்நெற்களி னிடையே கயல் மீன்கள் களிப்போடு துள்ளிச் சஞ்சரித்துக்கொண்டு திரிந்தன; அக்கயல்மீன்களி னுடம்பெல்லாம் தாமரைமலர் வாசம் முதலிய பலவகை மணங்கள் வீசிக்கொண்டிருந்தன; சோலைகளி லெல்லாம் மேகங்கள் படிந்திருந்தன; அவற்றினோடு ஓமப்புகைகள் பரவிப் பேதந் தெரியாம லிருந்தன; அந்தப் புகையி னூடெல்லாம் அகில்விருக்ஷங்கள் வளர்ந்திருந்தன; அந்த அகில்விருக்ஷங்களி னருகே சந்தனவிருக்ஷங்கள் வளர்ந்து நிறைந்திருந்தன; அந்தச் சந்தனவிருக்ஷங்களி னருகே தேவதாரவிருக்ஷங்கள் செறிந்து வளர்ந்திருந்தன; குளங்களிலுள்ள நீரெல்லாம் அவற்றில் நீராடும் பெண்களுடைய கலவைச்சாந்தின் வாசனையே வீசிக்கொண்டிருந்தது; சிறிய நீர்த்துளிகளைச் சிதறும் அலைக்கூட்டங்களும் அம்மணமே வீசிக்கொண்டிருந்தன; அவற்றிலுள்ள மீன்களும் அந்த வாசனையே வீசிக்கொண்டிருந்தன; செந்தாமரைமலர்களும் அந்தப் பரிமளத்தையே வீசிக்கொண்டிருந்தன; வெள்ளைச்சங்குகளும் அவ்வாசனையைப் பரப்பிக்கொண்டிருந்தன; அந்தக் குளங்களின் கரைகளிலும் அந்த மணம் பரிமளித்துக்கொண்டிருந்தது. இன்னும் அம்மருதநிலத்திலே உழவர்கள் கரும்புகளை ஒடித்துக்கொண்டு ஏறிற் பூட்டிய எருமைக்கடாக்களை அடித்தோட்ட அக்கரும்புகளினின்றுஞ் சிதறிய முத்துக்கள் எங்கும் பாவி நீண்ட சந்திரப்பிரகாசத்தை வீசிக்கொண்டிருந்தன; அவை அப்படிப் பாவிப் பிரகாசத்தோடு விளங்கிய தோற்றம் எப்படியிருந்ததெனில், பல நக்ஷத்திரங்கள் பூத்த ஆகாயத்தைப்போன் றிருந்தது;

அவற்றி னிடையிடையே பெரிய இரத்தினங்கள் இடியிற்றோ ன்றும் மின்னல்களைப் போன்று பிரகாசித்துக்கொண் டிருந் தன. மேற்கூறியபடி உழவரால் அடித்தோட்டப்பட்ட வெவ் விய கோபத்தையுடைய எருமைக்கடாக்கள் மிதித்துச் சிதை த்தபடியால் அவ்வயல்களின் சேற்றி லெல்லாம் தாமரைமலர் கள் நசுங்கிக்கிடந்தன; சங்குகளெல்லாம் முத்துக்கள் வெளிப் பட உடைந்து கிடந்தன. இன்னும் மலர்கள் நிறைந்த தடா கங்களிலே எருமைகள் போய் விழ அவ்வதிர்ச்சியினால் பய ந்து பக்கத்திலுள்ள சேற்று நிலத்திற் பாய்ந்த வாளைமீன்க ளாலேற்பட்ட குழிகளில் மேலேயுள்ள பலாமரங்களின் கனி களிலிருந்து வடியும் தேன் நிறைந்து ததும்பிக்கொண்டிருந் தது. அங்கே உழத்தியர்கள் பாடும் குரவைப்பாட்டி னொலி யைக் கேட்டுக் கிளிகள் பயங்கொண்டு பறந்து சோலைகளிற் சேரும் தோற்றம் எப்படியிருந்ததெனில், அக்கிளிகள் அவ் வுழத்தியர்களுடைய குரலோசையைக் கேட்டு வெட்கியோ டிச் சோலைக்குள்ளே புகுந்து மறைவதுபோன் றிருந்தது. வாய்க்கால்களில் ஓடும் ஜலத்துடனே முத்துக்கள் உருண்டு புரண்டோடும் தோற்றம் எப்படி யிருந்ததெனில், அவை அந்த உழத்தியர்களுடைய பல்வரிசைகளைக் கண்டு வெட்கத் தையடைந்து அந்நீருடனேகலந்து வேறோரிடத்திற் புகுந்து மறைவதற்குச் செல்வதுபோன்றிருந்தது. தித்திப்பான கள் ளைப் பருகும் உழவர்கள் முன்னே ஆலோசித்து நல்லநாட் கேட்டு அந்நாளிலே வயல்களில் நெல் முளைகளை விதைத்து அவை பயிராகி விளைந்த செந்நெற்களை அறுத்துக்கொண்டு போன பின்பு அந்த நெற்களினடிகள் தளிர்த்துப் பயிராகி அவை ஆலைகளி லாட்டப்படும் கருப்பஞ் சாற்றிற் சிந்தி யோடும் சாற்றுப் பெருக்காலே விளைந்து தரையிற் படிந்து, அவ்விளைவா லேற்பட்ட நெற்கள் அறுப்பாரின்மையால் மீண்டும் வெண்மையாக முளைத்து எங்கும் தோன்றின. அப் படி விளங்கிய தோற்றம் எப்படி யிருந்ததெனில், பொன்னிற மாக விளைகிற நெற்கதிர்களுக்கு வெள்ளிவால்கள் முளைத் தாற்போன் றிருந்தது. இன்னும் மற்றொரு பக்கத்தில் ஈகை

யின் தன்மையைத் தெரிந்த அறிவாளர்கள் தாம் செல்வத்தோடு வாழுங்காலத்தில் தம்மிடமிருந்த பொருள்களையெல்லாம் கொடுக்கப் பெற்றுக்கொண்டு சுகத்தை யடைந்த உத்தமர்கள், பின்னர் அக்கொடையாளர்கள் கைவறண்டு போன காலத்தில் அவர்களுக்குப் பிரதியுபகாரஞ் செய்யப் போய் அவருடன் கலப்பதுபோல, முன்னை கார்காலத்தில் மேகம் மழையைச் சொரிந்ததால் செழிப்படைந்த செங்நெற்பயிர்கள், அம்மேகம் மழையைச் சொரியாத முன்பனிக்காலத்தில் அம்மேக மண்டலம் வரை வளர்ந்து அம்மேகத்தோடு கலந்து விளங்கின.

அரிச்சந்திரன், சந்திரமதி முதலியவர்களுடன் காசிநகரஞ் சேர்தல்.

மேற்கூறிய வளங்களெல்லாம் நிறைந்த காசி நாட்டைச் சேர்ந்தவுடன் அரிச்சந்திரன் முதலியோர் அங்குள்ள விசேஷங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே நடந்து அந்த நல்ல நாட்டைக் கடந்து காசிநகரத்தை யடைந்து மேகந் தவழுவனவாகிய உயர்ந்த கதவுகள் பூண்ட கோட்டை வாயிலிற் புகுந்து அந் நகரத்துக்குள்ளே சென்றார்கள். அப்போது அந்நகரத்தின் சிறப்பு அளவிடக்கூடாததாய் விளங்கிற்று. அதில் வேதாத்தியயனஞ் செய்யுஞ் சாலைகள் கோடிக்கணக்காக விளங்கின; கடைவீதிகள் கோடிக்கணக்காகத் தோன்றின; ஒளி பொருந்திய சந்திரகாந்தக்கற்களாற் செய்யப்பட்ட மாளிகைகள் கோடிக்கணக்காக விளங்கின; தோரணங்கள் கட்டப்பெற்ற அம்மாளிகைகளின் வாயில்கள் கோடிக்கணக்காக விளங்கின; மேலே வரிசைபெற வைத்த பூரண கும்பங்களையுடைய மண்டபங்கள் கோடிக்கணக்காக விளங்கின; யானைச்சாலைகளும் கோடிக்கணக்காக விளங்கின; குதிரைச்சாலைகளும் கோடிக்கணக்காக விளங்கின; நாடக மேடைகளில் அநேகம் நிருத்த மாதர்கள் நாட்டியமாடிக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அப்படி யாடுவதை அநேகம் பெண்கள் கூடி மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு நின்றார்

கள்; ஆங்காங்குள்ள வீதிகளில் பல கோடி பெண்கள் திரண்டு அலங்கரித்துக்கொண்டு திருவிழா முதலிய விசேஷங்களைப் பார்த்தற்பொருட்டுக் கூட்டங் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தார்கள்; அநேகம் பெண்கள் அலங்காரமாகிய மண்டபங்களிலிருந்து உல்லாசமாகப் பாடிக்கொண்டிருந்தார்கள். இன்னும் இலட்சுமியை நிகர்த்த அழகுவாய்ந்த சில பெண்கள், உத்தரவரிசைகள் பொருந்திய மாளிகைகளின் மேலுப்பரிகைகளிலிருந்து சன்னல்களைத் திறந்து அதன் வழியாக அரிச்சந்திரன் முதலியவர்களைப் பார்த்து, "இவர்கள் இராஜகுடும்பத்தைச் சார்ந்தவர்கள் போன்று தோற்றுகின்றார்களே; இத்தகைய இவர்கள் கஷ்டத்துடன் இவ்வீதியிற் கால் நடையாக நடந்து செல்வதற்குக் காரணம் யாது?" என்று அதிசயித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்; மேற்கூறியபடி வீதிகளிற் பெண்கள் நெருக்கமாகக் கூடிச் செல்லுங்காலத்தில் அவர்களுடைய கூந்தல்களெல்லாந் திரண்டு இருள் நிறைந்த காட்டைப்போலவும், கண்களெல்லாம் அவற்றிற் சஞ்சரிக்கின்ற மான்களைப்போலவும் விளங்கின.

அவ்வாறு அந்நகரத்தில் பல விநோதங்கள் தோற்றவே அரிச்சந்திரனும், சந்திரமதியும், மற்றவர்களும் அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே நடந்து பல தெருக்களைக் கடந்து பின்னர் இரத்தினங்கள் பதித்த சிகரத்துடன் விளங்கும் விசுவநாதர் கோவிலுக்குள்ளே சென்று அங்கமர்ந்திருந்த கங்காநதியைத் தரித்த சடையினையுடைய விசுவநாதரைத் துதித்து வணங்கினார்கள். அதன்மேல் அரசர்க்கரசனான அரிச்சந்திரன், அக் கோவிலைவிட்டு வெளியேறிச் சந்திரமதி முதலியவர்களை அழைத்துக்கொண்டுபோய்ப் பக்கத்திலிருந்த அழகிய சிகரத்தையுடைய ஓர் அம்பலச் சாவடியைச் சேர்ந்தான். அவ்வாறு அந்தப் பெரிய பொதுச் சாவடிக்குள்ளே போய்ச் சேர்ந்தவுடன் சத்திபகீர்த்தியென்னும் மந்திரி கடைவீதிக்குச் சென்று சமையலுக்கு வேண்டிய வஸ்துக்களையெல்லாம் தேடிக்கொண்டுவந்து அரசனிடம் கொடுத்தான்; உடனே அரிச்சந்திரன் அவற்றில் சுக்

கிரனுக்கு வேண்டியவற்றை யெடுத்துக்கொடுத்துவிட்டு மீதியைச் சந்திரமதியிடம் கொடுத்தான். சந்திரமதி அவற்றைப் பெற்றுக்கொண்டு ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளே சமையல் செய்து அரசன் முதலியோருக்குச் சுவை மிகுந்த அன்னமிட்டு அவர்கள் புசித்தபின்பு தானும் ஆகார முண்டு பசி தணிந்தாள். சுக்கிரனும் தனக்குக் கொடுத்த வஸ்துக்களைக் கொண்டு தனியாகச் சமையல் செய்து, வேண்டிய நெய், பால், தயிர் முதலியவற்றையும் சேர்த்து விலாப்புடைக்கவுண் டிளைப்பாறி அடிக்கடி ஏப்பமிட்டுக் கொட்டாவிவிட்டு அங்கே ஒரு மூலையிற் படுத்து ஆட்டை விழுங்கிய மலைப் பாம்பைப்போலப் புரண்டுகொண்டிருந்தான். அன்றிரவு எல்லோரும் அந்தச் சாவடியிலே தங்கியிருந்தார்கள்.

அப்படி யிருக்கும்போது மறுநாள் பொழுது விடிந்தது. அவ்வாறு விடிந்தவுடனே நஞ்சைப்போன்ற குணத்தையுடைய சுக்கிரன் அரிச்சந்திரனுக்கு மிக்க துன்பத்தைச் செய்யக் கருதிக் கண்களில் நெருப்பெழும்படி அடங்காக் கோபங்கொண்டு அரிச்சந்திரனைநோக்கி, "அரசனே! நீ முன்னே, 'ஏதேனு மொரு நகரத்திற் சென்றவுடன் விசுவாமித்திரர் கடனைக் கொடுத்துவிடுகிறேன்,' என்று சொல்லி என்னை அழைத்துவந்தாய்; இப்போது எல்லோரும் காசிநகரம் வந்து சேர்ந்துவிட்டோம்; இங்கு வந்து சேர்ந்து இரண்டு நாளாகியும் நீ கடனைப்பற்றிச் சிறிதும் சிந்தியாமல் விநோதங்களைப் பார்ப்பதிலும், அறுசுவை பதார்த்தங்களோடு அன்னஞ் சமைத்து விலாப்புடைக்க உண்பதிலும் பொழுதைப்போக்குகின்றாய்; இப்படியே காலங் கடத்திப் பணத்தைக் கொடாமல் எடுத்துக்கொள்ளலாமென்று பார்க்கின்றாயோ; உன்னுடைய மோச எண்ணம் பலிக்காது; இப்பொழுதே பணத்தைக் கொடுப்பதற்கு மார்க்கத்தைத் தேடு; அப்படிக் கொடுக்க முடியாவிட்டால் இல்லையென்று சொல்லிவிடு; நான் உடனே புறப்பட்டுப் போய்விடுகின்றேன்; வீணே எதற்காக நான் இங்கே காத்திருக்கவேண்டும்?" என்று சிறிதேனும் தயை தாக்ஷணியமின்றிப் பேசினான்.

அவன் அவ்வாறு பேசவே அரிச்சந்திரன் மிகவும் மனக்கலக்க முற்று உடனே சுக்கிரனை வணங்கி அவன் முகத்தை நோக்கி, "சுவாமி! நான் விசுவாமித்திருக்குப் பணத்தைக் கொடுக்கக்கூடாதென்று ஒருபோதும் நினைக்க மாட்டேன்; பணந்தேடிக் கொடுப்பதற்காகவே உம்மை இங்கு அழைத்துவந்தேன்; நேற்றுத்தான் எல்லோரும் இங்குவந்து சேர்ந்து சிறிது இளைப்பாறினேம்; பணந்தேடும் விஷயத்தில் உம்மைக் காட்டிலும் எனக்குப் பதின்மடங்கு அக்கரை யுண்டு; இன்றுமுதல் பணந் தேடுவதற்கு நான் முயற்சி செய்கின்றேன்; நீர் கவலைப்படவேண்டாம்," என்று சமாதானமாகிய வார்த்தைகளைக் கூறிவிட்டு அதன்மேல், "இனிப் பணந் தேடுவதற்கு என்ன உபாயத்தைச் செய்ய லாம்; எனக் கொன்றுந் தோற்றவில்லையே; தவணைநாளும் நெருங்கிவிட்டதே; தெய்வமே! நான் என்ன செய்வேன்," என்று மதிமயங்கிக் கண்களில் முத்துப்போன்ற நீரொழுக வாட்டமுற்றுக் கலங்கினன். அரசன் அவ்வாறு சுக்கிரனுடைய கடுஞ்சொற்களைக் கேட்டுக் கண்ணீர்விட்டுக் கலங்கு வதைச் சந்திரமதி பார்த்து அனலிலிட்ட மெழுகுபோல் மனமுருக அரசன் பக்கத்திற் சென்று, "என் உயிர்த்துணை வரே! எதற்காக மனங் கலங்குகின்றீர்? நீர் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு இச்சமயத்தில் விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுப்பதற்கு ஓர் வழியைத் தேடாமல், பசித்திருக்கும் ஒரு பூனையினெதிர்ப்பட்ட எலியைப்போன்று இந்த வேதியருடைய கடுஞ் சொற்களைக் கேட்டு வருந்துவ தழகன்று," என்று தேறுதலான வார்த்தைகளைக் கூறினள். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அரிச்சந்திரன் மதியிற் சிறந்த அந்தச் சந்திரமதியை நோக்கி, "பெண்ணே! நீ சொல்வது சரிதான்; விசுவாமித்திருக்குப் பணங் கொடுக்கவேண்டியதைப்பற்றி ஆலோசிக்கின்றேன்; எனக்கொரு மார்க்கமுந் தோற்றவில்லையே; கடுமையான நெஞ்சையுடைய விசுவாமித்திரர் நம்முடைய செல்வத்தை யெல்லாம் தந்திரமாகக் கவர்ந்துகொண்டார்;

நம் கையிலோ ஒரு காசும் கிடையாது; அந்த முனிவருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் தேடிக் கொடுக்கலாமென்றாலோ அப்பணம் நம்முடைய கையிற் கிடைப்பதற்கு எவ்வித மார்க்கமுமில்லை; நம்முடைய நிலைமை இப்படியிருப்பதால் நான் எதையும் செய்வதற்குச் சத்தியற்றவனாயிருக்கின்றேன்; என்னுடைய மனதும், உன்னுடைய மனதும் ஒரே தன்மையை யுடையனவாதலால் என் மனத்திலுள்ள எண்ணங்களை உன் மனத்திலு மிருக்கும்; நான் பணத்திற் கொன்றும் வழியில்லை யென்பதை உணர்ந்திருப்பதுபோலவே நீயும் உணர்ந்திருப்பாய்; ஒருவாறு உன் மனத்தில் ஏதேனும் பொருளுக்கு வழியிருப்பதாகத் தோற்றுகின்றதா? அப்படி ஏதேனும் வழியிருந்தால் எனக்குக் கூறு; நம்முடைய தேகங்களைத்தவிர நம்மிடத்தில் வேறொரு பொருளுமில்லையே; நான் எவ்வாறு கடனைத் தீர்ப்பேன்," என்று சொல்லி மேலும் அதிகமாகக் கண்ணீர்விட்டான். அப்போது சந்திரமதி அடங்காத் துயரத்தோடு தேம்பியழுது அரிச்சந்திரனை நோக்கி, "மன்னவர் பெருமானே! கவலையை விட்டுவிடு; நம்மிடத்தில் பொருளொன்று மில்லையென்பதை அந்த விசுவாமித்திரர் நினைக்கவேண்டுமேயன்றி நாம் நினைப்பதாற் பயனில்லை; அவர் அவ்வாறு நம் கஷ்டநிலைமையை உணர்ந்து நம்மீது இரக்கங்கொண்டு நம்மைக் கடனுக்குத் தொடாமல் மன்னித்துவிடவேண்டியது அவரைப் பொறுத்தது; அவ்வாறு விட்டிருந்தால் அவருக்கு மிக்க புண்ணியமுண்டாம்; ஆயினும், அவர் அவ்வாறு நம்மை விட்டுவிடாமல் அவசியம் பொருள் கொடுக்கவேண்டுமென்று கண்டித்து அப்பொருளை வாங்கிவரும்படி இந்த வேதியரையும் நம்முடன் அனுப்பியிருக்கின்றார்; அப்படியிருக்கும்போது நாம் கையிற் பொருளில்லை யென்பதைப்பற்றிச் சிந்திப்பதாலாவதென்ன? எப்படியும் அப்பொருளைக் கொடுத்தே தீரவேண்டும்; கெடுவுரைத்த நாளோ சமீபித்துவிட்டது; இனித் தாமதிக்கலாகாது; நானும் புத்திரனுமே இச்சமயம் உமக்குரிய பொருளா யிருக்கின்றோம்; சிறிதும் யோசனை

யின்றி எங்களை விற்றுக் கடனைத் தீரும்," என்று தெளிவோடு கூறினாள்.

அப்படிச் சந்திரமதி சொல்லவே, அரிச்சந்திரன் அடங்காத் துயரடைந்து உயிர் சோர்ந்து, வெயிலெதிர்ப்பட்ட வெண்ணெய்போல் மனமுருகிச் சந்திரமதியை நோக்கி, "அந்தோ! என்கண்மணியே! உன்னையும் என்புத்திரனையுமா விற்றுக் கடனைத் தீர்க்கவேண்டும்? ஆ பிராணநாயகியே! நான் இதற்காகவா உன்னைத் திருமணம்புரிந்தேன்? என்புத்திரனையும் விலைக்கு விற்கிறதற்காகவா தவஞ்செய்து பெற்றேன்? இப்படியும் நமக்கு விதியேற்பட்டதே; இக்காரியத்தைச் செய்வதற்கு என் மனம் சிறிதுந் துணியவில்லையே; நான் என் செய்வேன்," என்று சொல்லிக் கண்களில் நீரைத் தாரை தாரையாக ஒழுகவிட்டுக்கொண்டு தலைகுனிந்து மௌனமாகி நின்றான். அவன் அவ்வாறு மனங்கரைந்தழுது நிற்பதைக்கண்டு சந்திரமதி மீண்டும் அவன் திருமுகத்தைத் தன் மலர்முகத்தால் நோக்கி, "கூர்மையான வேலாயுதத்தைத் தாங்கிய அரசர்பெருமானே! நீர் எங்களை விலை கூறி விற்பதற்குச் சிறிதும் மனங்கூசவேண்டாம்; யோசிப்பதால் பயனொன்றுமில்லை; நாம் முன்னேயிருந்த நிலைமையை இப்போது சிறிதும் நினைக்கலாகாது; அப்படி நினைத்தால் காரியமொன்றும் நடவாது; எங்கள் தலையிலும் விலைப்படவேண்டிய விதி முந்தியே ஏற்பட்டிருக்கிறது; ஆதலால், இச்சமயம் எங்களை விற்றே தீரவேண்டும்; இவ்வாறு எங்களை விலை செய்வதை யன்றிக் கடனைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லை; நீர் இனிமேலும் மனங்கலங்கி மௌனமாய்நில்லாமல் உடனே எங்களை விலை கூறுவீராக; வருவதெல்லாம் வரட்டும்; நீர் சத்தியத்தையும் மனவுறுதியையும் கைவிடவேண்டாம்," என்று சொல்லி அவன் மனத்தைத் தேற்றினாள். சுக்கிரனும் சந்திரமதி கூறியபடியே, "இவர்களை விற்றுக் கடனைத் தீர்ப்பதே நல்ல காரியமாகும்," என்று அரிச்சந்திரனிடம் கூறினான். சத்தியகீர்த்தி அவர்களுடைய வார்த்தைகளையெல்லாம் கேட்டு அருந்துயரடைந்து, "ஐயோ! நம்மரசருக்கும்,

அவர் தேவிக்கும், அவருடைய புத்திரனுக்கும் இந்தக் கதி நேர்ந்ததே; இவர்கள் இவ்வாறடையுந் துன்பத்தைக் கண்ணால் பார்க்கவா நான் இவர்களோடு பின்தொடர்ந்து இங்கே வந்தேன்; ஆ தெய்வமே! சிலதினங்களுக்கு முன் சக்கரவர்த்தியாயிருந்த எம்மிறைவர் இவ்வளவு சீக்கிரத்தில் தம் நிலைமை மாறி மனைவியையும், மைந்தனையும் விற்கத்தக்க தரித்திரத்தை யடைந்துவிட்டனரே; இஃதென்ன ஆச்சரியம்! உலகத்தில் எவரும் எப்பொழுதும் ஒரே நிலைமையிலிரா ரென்பதை இப்பொழுது இவரிடத்திற் கண்டேன்; எல்லாம் நான்முகன் விதிப்படியே நடக்கும்," என்று பலவிதமான வார்த்தைகளைத் தனக்குத்தானே சொல்லிக் கண்ணீர்விட்டழுது கொண்டு மௌனமாகி நின்றான்.

அரிச்சந்திரன், மனைவியையும், மைந்தனையும் விலைகூறி விற்றல்.

அதன்மேல் அரிச்சந்திரன், சந்திரமதி கூறிய உறுதி வாக்கியங்களையும், சுக்கிரன்சொன்ன வார்த்தையையும் மனத்துட்கொண்டு ஆலோசித்துச் சந்திரமதியையும் தேவதாசனையும் விற்பதே அச்சமயம் செய்யத்தக்க காரியமா யிருந்தபடியாலும், அதைத் தவிரக் கடன் தீருவதற்கு வேறு மார்க்கமேற்படாதபடியாலும், "இப்பொழுது நம் பத்தினி கூறியபடி அவளையும் புத்திரனையும் விற்பதே தகுதி," என்று துணிந்தான். அவ்வாறு துணிவுகொண்டபின் அவன், சந்திரமதியையும், தேவதாசனையும் விற்பதற் கடையாளமாக அவர்களுடைய தலைகள்மேல் சிறு புற்களைவைத்துக் காசிமாநகரத்தின் பெரிய வீதியில் அவர்களை முன்னே நடத்திக்கொண்டு பின்னே மிருதுவாக நடந்துபோனான். சத்தியகீர்த்தியும், சுக்கிரனும் அவனுக்குப் பின்னே நடந்து சென்றார்கள். அவ்வாறு செல்லும்போது அரிச்சந்திரனுடைய மனமானது சுழல்காற்றி னிடையிலகப்பட்ட பஞ்சைப்போலக் கலங்கிச் சுழன்றுகொண் டிருந்தது; அவனுடைய இரண்டு கண்களினும் நீர் ஆறுப்பெருகி யோடிற்று; நாணத்

தால் அவன் தேகங் குன்றிப்போயிற்று; அவன், சந்திரமதியையும் தேவதாசனையும் பன்முறை விலைகூறத் தொடங்கியும் அவனுடைய நாவெழவில்லை; வார்த்தைகள் தடுமாறிப் போயின. இப்படியெல்லாம் அவன் கஷ்டப்பட்டுப் பின்னர், "நாம் எப்படியும் விலைகூறித்தானே தீரவேண்டும்," என்று மனத்தைச் சிறிது திடப்படுத்திக்கொண்டு, மேலும் மாடவீதி முதலிய பற்பல வீதிகளிற் சென்று அவர்களை விலைகூறத்தொடங்கி, ஆங்காங்குள்ள மனிதரை நோக்கி, "காசிமாநகரத்திலுள்ள கனவான்களே! நான் முன்செய்த தீவினையினாலே எனக் கிப்போது வந்து நேர்ந்த கஷ்டத்திற்காகக் கயல்போலுங் கண்களையுடைய என் மனைவியையும், மிகவும் இளம் பருவத்தையுடைய எனது குலபுத்திரனையும் எவருக்கேனும் விற்றுவிடத் தீர்மானித்திருக்கின்றேன்; இஷ்டப்பட்டவர்கள் தக்க பொருள் கொடுத்து இவர்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள்," என்று விலை கூறினன்.

ஒளிபொருந்திய திருமுடியைத் தரித்த அரிச்சந்திரன் அவ்வாறு வீதிகளிற்சென்று விலைகூறவே, வீதியிலே எதிர்ப்பட்டு அவ் விசேஷத்தைப் பார்த்தவர்களிற் சிலர், மனம் நொந்து, "ஐயோ! தாமரைமலர்மேலிருக்கின்ற இலக்குமியை நிகர்த்த இலக்ஷணம் பொருந்திய இந்தப் பெண்ணையும் முருகக்கடவுளை நிகர்த்த இக் குமாரனையும் இம்மனிதன் விற்றற்கு நேர்ந்த கஷ்டமிபாதோ?" என்று கூறி அரிச்சந்திரன் மீது இரக்க முற்றார்கள்; சிலர், "வேலை நிகர்த்த கண்களையுடைய இந்தப் பெண்ணைப் பார்க்கும்போது மகாலட்சுமியைப்போல விளங்குகின்றாள்; இந்த இளங்குமரனைப் பார்க்கும்போது அந்தத் திருமகள் புத்திரனாகிய சித்தசனை நிகர்த்து விளங்குகின்றான்; இத்தகைய இவ் விருவருக்கும் தக்க விலை கொடுத்து வாங்கத்தக்கவர்கள் இந்நகரத்தில் எவர்களிருக்கின்றார்கள்; ஒருவருக்கே விலை கொடுக்கத்தக்கவர்கள் இங்கில்லையே," என்று பேசிக்கொண்டார்கள்; சிலர், சந்திரமதியையும், தேவதாசனையும் பார்த்து, "இவர்களை வாங்கும் சக்தி இரும்பைப் பொன்னாக்கும் வாத வித்தையிற் சிறந்த

தவ சிரேஷ்டர்களுக்கே யுண்டு; அல்லது ஐராவதத்தை யுடைய இந்திரன் இவர்களை வாங்கினால் வாங்கலாம்; அல்லது அளகாபுரியை ஆளுகின்ற குபேரன் வாங்கினால் வாங்கலாம்; இவர்களையன்றி இந்தக் கடல் சூழ்ந்த வுலகத்திலே இவர்களுக்குத் தக்கவிலைகொடுக்கும் சக்திபெற்றவர் எவருமில்லை," என்று கூறினார்கள்.

சந்திரமதியையும், தேவதாசனையும் ஒருவேதியன் விலைக்கு வாங்குதல்.

மேற்கூறியபடி பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ள அரிச்சந்திரன் விலை கூறிக்கொண்டு பல தெருக்களையுந் தாண்டி முடிவாக ஒரு தெருவிற் சென்று அங்கும் விலை கூறினான். அவ்வாறு அவன், "என் மனைவியையும் மைந்தனையும் பொருளுள்ளவர்கள்விலைக்குவாங்கிக்கொள்ளுங்கள்," என்று கூறிய வார்த்தையைக் கேட்டு ஆகாயத்திலே தோன்றுகிற மின்னலைப்போன் றசைந்துவிளங்கும் முப்புரிநூலை யணிந்த மார்பை யுடையவனாகிய ஒரு வேதியன், அரிச்சந்திரனுடைய கண்களுக் கெதிரே கபடமாகத் தோன்றினான். அவன் யாரெனில், முந்தியே சந்திரமதியும் தேவதாசனும் விலைப்படுவார்க ளென்பதை யுணர்ந்து அவர்களை விலைக்கு வாங்கும் பொருட்டு அக்காசிமாநகரத்திலே வேதியர் குலத்தில் ஒரு பிராமணன் வடிவமாகத் தோன்றியிருந்து பின்னர் விசுவாமித்திரர் சொற்படிவந்த அக்கினிதேவன். அந்த அக்கினி பகவானாகிய வேதியன் மேற்சொல்லியபடி அரிச்சந்திரனுக்கு முன்னே வந்தமாத்திரத்தில் அவன் முகத்தை நோக்கி, "ஓ மனிதனே! நீ இப்போது யாது சொன்னாய்? முன்னே நீ கூறிய வார்த்தையை இன்னுமொருமுறை சொல்," என்றுரைத்தான். அதற்கு அரிச்சந்திரன், "சுவாமி! நான், என்னுடைய மனைவியாகிய இந்தப் பெண்ணையும், என் புத்திரனாகிய இக் குமாரனையும் விலைக்கு விற்றுவிடத் தீர்மானித்திருக்கின்றேன்; ஆதலின், உமக் கிஷ்டமிருந்தால் தக்க பொருள்கொடுத்து இவர்களைவிலைக்கு வாங்கிக்கொள்வீராக,"

என்று சொன்னான். அதைக் கேட்டு அவ்வேதியன், "அப்படி இவர்களை விலைக்கு விற்பதானால் என்ன விலைக்குக் கொடுப்பாய்?" என்று கேட்க, அரிச்சந்திரன் அவ்வேதியனை நோக்கி, "அந்தணரே! ஒரு யானையின் முதுகிலே வீரமுள்ள ஒரு புருஷனேறி அவன் கையிற் கவண்கல்கொண்டு சுழற்றி யெறிந்தால் அக்கல் எவ்வளவுபரஞ் செல்லுமோ அவ்வளவுபரம் திரவியங் கொடுத்தால் நான் இவர்களை விலைக்குக் கொடுத்துவிடுவேன்; இவ்வளவையுடைய திரவியந்தான் இவர்களுக்குரிய விலைப்பொருள்," என்று தெரிவித்தான். அவ்வாறு தெரிவித்தவுடனே அந்த வேதியன், "அப்படியானால் அந்தத் திரவியத்தை நான் கொடுத்துவிடுகின்றேன்; முல்லையரும்புபோன்ற பற்களையுடைய இந்தப் பெண்ணையும், இச்சிறுவனையும் எனக்கு விற்றுவிட்டதாக விலைச்சீட்டெழுதிக்கொடுத்து இவர்களை என்னிடமனுப்பிவிடு," என்று சொன்னான். அந்தணன் அவ்வாறு கூறவே அரிச்சந்திரன் அவ்வேதியனை நோக்கி, "பிராமணசிரேஷ்டரே! இவர்களை விலைக்கு வாங்கிக்கொள்ள உமக்கிஷ்டமானல் இபபோது நான் சொன்ன பொருளை நீர் கொடுத்துவிடும்; நான் விலைச்சீட்டெழுதித் தருகிறேன்," என்றுரைத்தான். அதைக் கேட்டு வேதியன், "அவ்வாறே நான் பணந்தருகிறேன்; அந்தப் பணத்தை எவரிடம் கொடுக்கவேண்டும்? அவ்விவரத்தை எனக்குத் தெரிவிப்பாயாக," என்றுரைக்க, உடனே அரிச்சந்திரன், சுக்கிரனைச் சுட்டிக் காட்டி, "இந்த வேதியரிடம் கொடுத்துவிடும்," என்று கூறினான். விலைகொடுக்கச் சம்மதித்த பிராமணனும் சுக்கிரனும் விசுவாமித்திரர் ஏவியபடி வந்தவர்களாதலாலும், இவர்கள் அரிச்சந்திரனுக்குத் துன்பஞ் செய்தற்பொருட்டு நடத்தவேண்டிய காரியங்களைப் பற்றி முன்னமே யோசித்திருந்தவர்க ளானபடியாலும் இவ்விருவரும் அப்போது, "அரிச்சந்திரன் விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய பொருள் வந்துவிட்டதாக பாவனை செய்துகொண்டால் போதும்; ஒருவர் கையிலிருந்து ஒருவர் பணம் வாங்கவேண்டியதில்லை," என்று சைகை செய்து

கொண்டார்கள். அதன்மேல் விலை கொடுக்கச் சம்மதித்த வேதியன் சுக்கிரனை யழைத்து அவனிடத்தில், "இந்த மனிதன் கூறியபொருளை இப்பொழுதே வாங்கிக்கொள்ளுகிறீரா? அல்லது என் வீட்டிற்கு வந்து பின்னால் வாங்கிக்கொள்ளுகிறீரா?" என்று கேட்டான். அதற்குச் சுக்கிரன், "நீர் இப்பொழுதே பணம் கொடுக்கவேண்டுமென்னும் அவசியமில்லை; என்னுடைய வேலையெல்லாம் தீர்ந்து நான் ஊருக்குப் போகுங்காலத்தில் அதை வாங்கிக்கொள்வேன்; நீர் பின்னே பணம் கொடுப்பதற் கடையாளமாக என் கைமேல் உம்முடைய கையை வைத்து உறுதிமொழி கூறிவிடும்; அதுவே போதும்," என்று கூறினான். விலை கொடுக்கவந்த பிராமணன் அவ்வாறே கைமேற் கைபோட்டு உறுதி வார்த்தை கூறினான். பின்னர் அரிச்சந்திரன் சுக்கிரனை நோக்கி, "சுவாமி! நான் விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய பணம் இந்த வேதியர்சொன்ன உறுதிமொழியின் மூலமாக உம்மிடம் சேர்ந்துவிட்டதா? இனிமேல் நான் விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய கடன் பொருளில் எதுவும் மீதியில்லையே?" என்று கேட்டான். அதற்குச் சுக்கிரன், "அரிச்சந்திரா! நீ விசுவாமித்திர முனிவருக்குக் கொடுக்கவேண்டிய பொருளனைத்தும் இந்த அந்தணர்மூலம் என்கைக்கு வந்துவிட்டது; ஆதலால், இனிமேல் நீ உன் மனைவியையும் மகனையும் இவரிடம் ஒப்புவித்து இவருக்கு விலைச்சீட்டெழுதிக்கொடு," என்று கூறினான். அரிச்சந்திரன் அவ்வாறே விசுவாமித்திருக்குத் தான் கொடுக்கவேண்டிய பொருளை அந்த வேதியரிடம் வாங்கிச் சுக்கிரன்பாற் சேர்த்து அதற்கீடாகச் சந்திரமதியையும், தேவதாசனையும் அந்த வேதியர்க்கு விற்றுவிட்டதாக விலைச்சீட்டெழுதி அதில் தன்னுடைய கையெழுத்துமிட்டுச் சத்தியகீர்த்தியிடம் சாக்ஷிக் கையெழுத்தும் வாங்கி அந்தச் சீட்டை அவ்வேதியனிடம் கொடுத்துச் சந்திரமதியையும், தேவதாசனையும் அவன்பா லனுப்பினான்.

அவ்வாறு விலைச்சீட்டெழுதி முடிந்தவுடன் சந்திரமதி, "நம்முடைய நாயகருக்கும் நமக்குமிருந்த தொடர்பு இன்றோடொழிந்தது; ஆதலால், அவரிடம் தேறுதலான வார்த்தைகளைக் கூறி விடைபெற்றுச் செல்வோம்," என்றெண்ணி அவன் சமீபத்திற் சென்று அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி, அவன் திருமுகத்தை நோக்கி, "என் நாயகரே! நாங்கள் பிரிந்து செல்வதைப்பற்றி நீர் மனம் வருந்த வேண்டாம்," என்று சொல்லிப் பின்னும் சில வார்த்தைகளைக் கூறுவதற்கு வாயைத் திறந்தாள். அவ்வாறு அவள், வாய்திறந்து தான் நினைத்த வார்த்தைகளைக் கூறுவதற்கு முன்னமே அவளுடைய மனத்திலுண்டான விசனம் அளவில்லாமற் பொங்கி மேலெழுந்தபடியால் விம்மலும் பொருமலு முடையவளாய்க் கண்ணீர் ஆறாகப்பெருகி முகத்தில் வழிந்தோட, "ஐயோ தெய்வமே! என் கதி இவ்வாறாயிற்றே," என்று கைகளால் முகத்தி லறைந்துகொண்டு அடியற்ற மரம்போல் திடீரென்று பூமியில் விழுந்து மூர்ச்சித்தாள். அப்படி அவள் விழுந்த மாத்திரத்திலே அரிச்சந்திரன் மனம் பதைத்து அவளைத் தூக்கி மூர்ச்சை தெளிவிக்க நினைத்தான். அப்படி நினைத்தும், அந்தணர்க்கு அவளை விற்றுவிட்டபடியால் அவளைத் தொடுவது நியாயமாகாதென்னும் எண்ணம் அவனுக் குண்டானபடியால் அவள் சமீபத்தில் நெருங்காமல் அனலிலிட்ட வெண்ணெய்போல் மனமுருகிக் கண்ணீர்விட் டழுதுகொண்டு, மந்திரத்தாற் கட்டுண்ட நாகம்போல சத்தியத்திற் கஞ்சி மதிமருண்டு தலை குனிந்து நின்றான். சந்திரமதி சிறிது நேரஞ்சென்று தானே மூர்ச்சை தெளிந்தெழுந்து மீண்டும் அரசன் முகத்தை நோக்கி, "மிகவும் பாவியாகிய என்னை மணம் புரிந்த மன்னரே! எங்களுக்கும் உமக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பு இன்றோடொழிந்து போயிற்று; நானும், மற்ற அரசர்களும் தினந்தோறும் மகிழ்ச்சியாகத் தரிசித்துக்கொண்டிருந்த தாமரை மலர் போலும் உமது திருமுகத்தை இன்று நான் கடைசியாகப் பார்க்கின்றேன்; இனிக்காணுவ தெந்தகாலமோ; நான் ஆயுள்வரை

உம்மோடு சேர்ந்திருந்து உமக்குப் பணிவிடை புரிதற்குத் தக்க தவஞ்செய்யாத பாவியாய்விட்டேன்; என்னுடைய வினைப்பயன் இவ்வாறு முடிந்தது; இனிமேல் நான் எவ்வளவு துக்கித்தாலும், எவ்வாறு புரண்டழுதாலும் உம்முடைய சேர்க்கையை அடையப்போகிறதில்லை; நான்முகன் முன்னாளிலேயே என் தலையில் இவ்வாறெழுதிவிட்டான்; என்னைப்போன்ற பாவிகள் உலகத்தில் ஒருவருமேயிரார்," என்று பல துக்கமான வார்த்தைகளைக் கூறிப் புலம்பினாள்.

அவ்வாறு புலம்பிய அவள் பின்னர், "நாம் இவ்வாறு வருந்திப் புலம்பினால் நம்முடைய நாயகர் மேன்மேலும் ஏங்கி மனந்தளருவார்; ஆதலால், நாம் வருத்தத்தை யடக்கிக்கொண்டு இவரிடம் விடை பெற்றுச் செல்வதே நலம்; இனிமேல் வருந்துவதால் பயனென்னை," என்று தானே தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு அரிச்சந்திரன் சமீபத்திற் சென்று, "நாயகரே! நீர் என் பொருட்டு மனங் கலங்குவதை விட்டு மேல் நடக்க வேண்டிய காரியங்களைச் செய்து சத்தியத்தை நிலை நிறுத்தும்; நான் போகிறேன்; விடை கொடுத்தருளும்," என்று சொல்லி அவனுடைய பாதங்களை நோக்கி வணங்கித் தன்னை விலைக்குவாங்கிய வேதியர் பக்கத்திற் சென்றாள். அப்போது தேவதாசன் மிகவுஞ் சிறுவனாகையாலும், தன்னை விலைக்கு விற்றபின் தான் தந்தையைத் தொடுதல் கூடாதென்பதை யுணராதவனாதலாலும், தன் தந்தையை விட்டுப் பிரிதற்கு மனம் பொருந்தாதவனாய் மிகவுங் கலக்கத்தை யடைந்து விரைந்தோடி அரசன் கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தொங்கி வாய்விட்டுக் கதறி, "எங்களையனே! என்னையும், என் அன்னையையும் இதுவரை நீர் இரக்ஷித்துக்கொண்டு வந்த சுமையை இப்போது இறக்கிவிட்டீரோ? அப்பாரம் நீங்கியதால் உமக்கித்தருணம் சுகமாயிற்றோ? நாங்களும்மைச் சேர்ந்திருந்த உறவு போதுமென்று கருதிநீர் எங்களை விலக்கிவிட்டீரோ? தந்தையே! இனி நான் எந்நாளில் உம்முடைய திருமுகத்தைக் காணப்போகிறேன்; நெடுங்காலம் உம்முடனிருந்து உமக்குப் பணிவிடை

செய்யும் பாக்கியத்தை நான் பெறாமற் போனேன்; இனி என் முகவாட்டத்தைக் கண்டு என்னை ஆதரிப்பரெவர்? ஐயோ நான் எப்படி உம்மைவிட்டுப் பிரிந்துபோவேன்; நான் செல்லுமிடத்தில் எனக்கென்ன துன்பம் விளையுமோ அறிகிலேனே; என் மனம் பதைக்கின்றதே,'' என்று பல துக்கமான வார்த்தைகளைக் கூறிக் கண்ணீர்விட்டழுதான். அவன் படுந் துன்பத்தைக்கண்ட அரசன் ஒன்றும் சொல்வதற்கு நாவெழாதவனாய்ப் பொங்கி யெழுந்த விசனத்தைத் தாங்க முடியாமல் கண்ணீ ரொழுக மனங்கலங்கி மௌனமுற்று நின்றான். அத்தருணத்தில் அவனை விலைக்கு வாங்கிய வேதியன் புலிபோற் சீறிப் பாய்ந்து மேற்கண்டவாறு அரசனுடைய கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறியழுத அப்புத்திரன் கையைப்பிடித்து அரசன் கழுத்திற்பற்றியிருந்த பற்று நீங்க விலக்கி யிழுத்து, மிகவுங் கோபங் கொண்டு அந்த தேவதாசனை நோக்கி, "அடா சிறுவா! நீ எனக்கு விலைப்பட்டபின் இனிமேல் உன்னை விற்ற அம்மனிதனுக்கும் உனக்கும் என்ன தொடர்பிருக்கின்றது? நீ அவனைக் கட்டிக்கொண் டழுவதாற் பயனென்ன? பேசாமல் என் வீட்டிற்கு வந்து நானேவியபடி எனக்குரிய வேலைகளைச் செய்,'' என்று மனதிரக்கமின்றிப் பல கடுஞ்சொற்களைக் கூறிச் சிறிது நேரமும் அவ்விடத்தில் தாமதிக்காமல் அப் புத்திரனையும், சந்திரமதியையும் அழைத்துக்கொண்டு விரைவில் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

சந்திரமதியையும், தேவதாசனையும் அவ்வேதியன் அவ்வாறு கோபத்தோ டழைத்துக்கொண்டு போகவே அரசன் அந்த வன்னெஞ்சனாகிய வேதியனுடைய கொடுஞ்செய்கையைப் பார்த்து, "ஐயோ தெய்வமே! என் மனைவிக்கும் புத்திரனுக்கும் இக்கதி நேர்ந்ததே,'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டு இடிவிழுந்த மரம்போலத் திடீரென்று படிமேல் விழுந்து சிறிதும் உடம்பசையாமல் மூர்ச்சித்தான். அங்ஙனம் அரசன் விழுந்தவுடனே, பக்கத்தில் நின்ற சத்தியகீர்த்தி மனம் பதறி, "ஐயோ! என் மன்னர்க்கு வரும்

இத்துன்பங்களை யெல்லாம் பார்த்தற்கோ பாவியாகிய நான் இங்கு வந்தேன்?" என்று கண்ணீர் விட்டழுதது உடனே அரசனைக் கையாலணைத்தெடுத்துத் தேற்றினன். அத்தருணத்தில் அரசன் சிறிது மூர்ச்சை தெளிந்து, "மந்திரி! என் பத்தினியையும், புத்திரனையும் இனி எத்தருணம் காணப்போகின்றேன்? அந்தவேதியருடைய கோபத்தையும் கொடுஞ்செய்கையையும் பார்க்கும்போது அவர் மிகவும் கடின சித்தமுடையவர் போன்று விளங்குகின்றார்; அந்தோ! அவர்களுக்கு அவர் எவ்விதகொடுமைகளைச் செய்வாரோ? எவ்வாறு தண்டிப்பாரோ? எத்தகைய கஷ்டமான வேலைகளைக் கொடுப்பாரோ? அவற்றை யெல்லாம் நினைக்கும்போது என்மனம் பதைக்கின்றதே; நான் என்ன செய்வேன்," என்று புலம்பியழுதான். அப்போது சத்தியகீர்த்தி தன்னுடைய வருத்தத்தை அடக்கிக்கொண்டு, அரசனை நோக்கி, "மதியிற் சிறந்த மன்னர்பெருமானே! நீர் மதியில்லார்போல மனம் வருந்திப் புலம்புவ தழகன்று; எல்லாம் தலைவிதிப்படியே நடக்கும்; நம் செயலால் ஆவதொன்றுமில்லை; ஆதலால், மனக் கலக்கத்தை நீக்கிச் சத்தியத்தை நிலை நிறுத்துவதற்குரிய வழியைத் தேடுவீராக," என்று கூறிப்பின்னும் அவனைத் தேற்றினன். அதன்மேல் அரசன், "தெய்வச் செயலுக்கு நம்மால் என்னசெய்ய முடியும்?" என்று மனந்தெளிந்தான்.

அரிச்சந்திரன் பறையனுக்கு விலைப்படுதல்.

அதன்மேல் அரிச்சந்திரன், எல்லா விஷயங்களையும் பார்த்துக்கொண்டு சிறிதும் மனமுருகாமல் கடின சித்தத்தோடு நின்ற சுக்கிரனாகிய பிராமணன் முகத்தை நோக்கி, "சுவாமி! என்னால் விசுவாமித்திரருக்குச் சேரவேண்டிய பொருளனைத்தும் உம்மிடம் சேர்ந்துவிட்டதன்றோ? உம்முடைய மனம் திருப்தி யடைந்ததா?" என்று வினவினன். அதைக் கேட்டவுடன் அந்தச் சுக்கிரன் கபடமாக அரிச்சந்திரனையும் விலைப்படுத்தக் கருதி, "அரிச்சந்திரா! நீ விசுவாமித்திருக்குக் கொடுக்கவேண்டிய பொருள் முழுவதும் என்

னிடம் சேர்ந்துவிட்டது; அதில் ஒன்றும் குறைவில்லை; ஆயினும், நீ செய்ய வேண்டிய காரியம் இன்னு மொன்றுண்டு; அதனைக் கூறுகிறேன் கேட்பாயாக: நீ விசுவாமித்திரருக்குரிய பொருளைக் கொடுத்தது சரிதான்; நான் பலவிதமான துன்பங்களையெல்லாம் அடைந்து உன்னோடு இதுவரை திரிந்தலைந்ததற்கு எனக்கு நீ கூலி கொடுக்கவேண்டும்; நான் என்னுடைய தொழிலையெல்லாம் விட்டு நீ சென்றவிடங்கட்கெல்லாம் கூடவே சென்றலைந்து வீணே திரும்பிச் செல்லுதல் நியாயமாகாது; ஆகையினால் எந்தவகையினாலாவது பொருள் தேடி எனக்குக் கூலி கொடுத்துவிடு," என்று கூறினான். அரசன் அப்போது சிறிதும் மனந் தளராமல் சுக்கிரனைப் பார்த்து, "சுவாமி! உமக்கு நான் கூலிப்பொருள் எவ்வளவு தரவேண்டும்?" என்று வினவினான். அதற்குச் சுக்கிரன், "பதினாயிரம் பொன் கொடுக்கவேண்டும்," என்றுரைத்தான். அவ்வாறு கூறவே அரிச்சந்திரன், "அந்தணரே! உம்மிஷ்டப்படியே உமக்கு நான் பதினாயிரம் பொன் தருகிறேன்; தயவுசெய்து என்னோடு வருவீராக," என்று சொல்லி அவனையும் மந்திரியையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு வேறு வீதியிற் சென்றான். சுக்கிரன், "நம்முடைய எண்ணம் பலித்தது," என்று மகிழ்ச்சியடைந்து அரிச்சந்திரனுக்குப் பின்னே தொடர்ந்துபோனான். அவ்வாறு போகும்போது அரிச்சந்திரன், சுக்கிரனுக்குப் பொருள் கொடுக்க வேண்டியதைப்பற்றி ஆலோசித்துத் தான் விலைப்படுவதைத் தவிர அதனைக் கொடுத்தற்கு வேறு வழியில்லை என்பதை யுணர்ந்து உடனே மந்திரியை நோக்கி, "சத்தியகீர்த்தி! நீ என்னை விலை செய்து இந்த வேதியர்க்குக் கொடுக்க வேண்டிய கூலிப் பொருளைக் கொடுத்துவிடக்கடவாய்," என்று கூறினான். அந்த வார்த்தையைக் கேட்டவுடனே மந்திரி திடுக்கிட்டு, "ஐயோ! நான் இதற்காகவா இங்கு வந்தேன்?" என்று மனம் வருந்தி மன்னன் முகத்தைப் பார்த்து "அரசர்பெருமானே! எனக்குத் தந்தையும் அரசனுமாகிய உம்மை நான் விலைகூறுவது நியாயமன்று; நானும்

உமக்குரிய பொருள்போல உம்மைச் சார்ந்தவனாகையால் நீர் என்னை விலைசெய்து இந்த பிராமணருக்குச் செலுத்தத்தக்க கூலிப்பொருளைச் செலுத்திவிடும்," என்று கண்ணீரொழுக விட்டுக் கீழே விழுந்து அவனுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு வணங்கினான். அப்படி மண்மீது விழுந்து வணங்கிய மந்திரியை மன்னனெடுத்து மார்போடணைத்துக் கொண்டு தன்னுடைய மதிபோலு முகத்தினொளி மழுங்கக் கண்களிலிருந் தொழுகிய கண்ணீரானது அச்சத்திய கீர்த்தியின் தேகத்தை நனைக்க அவன் முகத்தை நோக்கி, "சத்தியகீர்த்தி! விசுவாமித்திருடைய கொள்கைக்கு நீ கூறுவது சிறிதும் பொருந்தாது; நான் எப்பொழுது நீதியினின்றுந் தவறுவேனென்பதை அவர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்; அப்படி யிருப்பதனால் நான் உன்னை விற்று இவ்வந்தணருக்குப் பொருள் கொடுப்பேனாயின் விசுவாமித்திரர் உடனே 'அரிச்சந்திரன் நீதி தவறிவிட்டான்,' என்று கூறி என்மீது குற்றஞ் சுமத்திவிடுவார்; நான் கொடுக்க வேண்டிய பொருளுக்கு உன்னை விற்பது தகாது; ஆதலால், நீ தாமதமின்றி என்னை இந்தவூர்த் தெருக்களிலே கூட்டிச் சென்று விலைகூறி விற்று இவ்வேதியருக்குப் பொருளைக் கொடு; அதன்மேல் அந்த விசுவாமித்திரர் என்ன செய்வாரோ அதையும் அறிவோம்," என்று சொன்னான்.

அப்போது, மந்திரி அரசனுடைய வார்த்தைகளை மறுக்கமுடியாதவனாய், "ஐயோ! நான், என்னை யாதரித்துவந்த மன்னனை விலை கூறுதற்காகவா இங்கு வந்தேன்? இஃதென்ன விபரீதகாலம்," என்று வருந்திப் பொன்முடி சூடிய அரசனுடைய சிரசிலே, அவனை விற்பதற் கடையாளமாக ஒரு புல்லைச் சூட்டி அந்தக் காசிநகரின் கடைவீதிகளிலும், மற்ற வீதிகளிலும் அம்மன்னனை யழைத்துச் சென்று, "செல்வத்திற் சிறந்த புண்ணியர்களே! நான் ஒரு அவசர காரியத்தை முன்னிட்டு என்னுடைய மன்னனை விற்றுவிடப்போகின்றேன்; இவனை வாங்க இஷ்டமுடையோர், வேதசாஸ்திர பயிற்சியுள்ள வேதியர்களா யிருந்தாலுஞ் சரி; க்ஷத்திரியரா

யிருந்தாலுஞ் சரி, வைசியரா யிருந்தாலுஞ் சரி; சூத்திரரா யிருந்தாலுஞ்சரி; சண்டாளஜாதியாரானலுஞ்சரி; இவர்களுள் எவரேனும் தக்கபொருள்கொடுத்து இவளைவாங்கிக்கொள்ள லாம்,” என்று விலை கூறினன். அரசனுக்கு மிகவும் உரியவனான சத்தியகீர்த்தி யென்னும் மந்திரி, அவ்வாறு தெருக்களில் விலை கூறிக்கொண்டு செல்லும்போது, அந்த வார்த்தையைக் கேட்டு அந்நகரத்தில் வசிப்பவனும், மிகுந்த செல்வமுடையவனும், மிக்க சூரத்தன்மை யுடையவனும், வீரவாகுவென்னும் பெயரை யுடையவனுமாகிய ஒரு பறையன், குடம் நிறைந்த கள்ளைக் குடித்து மிக்க மயக்கங்கொண்டு, நீண்ட கைகளும் கால்களும் நடுங்கத் தள்ளாடி மெய்சோர்ந்து, ஊனோடு சேர்ந்த மாட்டுத்தோல், தசை ஆகியவற்றை இரண்டு கூடைகளிற் சேர்த்து அவற்றை ஒரு மூங்கிற்றடியிற் கோத்துக் காவடியாக்கி, அக்காவடியைத் தோளிற்றாங்கிக்கொண்டு சத்தியகீர்த்திக்கு முன்னே வந்து அக்காவடியைக் கீழேயிறக்கிவைத்துவிட்டு, மிகப்பணிவோடு இடையின் வஸ்திரத்தாலே வாயை மூடிக்கொண்டு மந்திரியை நோக்கி, “ஐயா! உங்களுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தால், எல்லாருடைய கட்டளைகளையுங்கேட்டு நடக்கும் இழிதொழிலாளராகிய எம்மைப்போன்றவர்களுக்கும் இவளை விலைசெய்வீர்களோ?” என்று வினவினன். அவன் யாரெனில், அரிச்சந்திரன் விசுவாமித்திரருடைய வஞ்சனைச் செய்கையால் விலைப்படுவானென்பதை முன்னரே யுணர்ந்து அவனை விலைக்கு வாங்கும்பொருட்டு அந்தக் காசிநகரத்திலே நீசர்குலத்திற் பிறந்து விசுவாமித்திரர் செய்கைக் கிணங்கிவந்த எமன்.

மேற்கூறியபடி அந்த வீரவாகுவென்னும் பறையன் வினவவே, அரிச்சந்திரன், “இந்த நகருக்குள்ளே நமக்குத் தக்க விலைப்பொருள் கொடுத்து நம்மை விலைக்கு வாங்கக் கூடியவன் இவனையன்றி வேறொருவனுமிரான்; ஆதலால், நாம் இவனுக்கே விலைப்படுதல் நலமாம்,” என்றாலோசித்து, உடனே மந்திரியைநோக்கி, “சத்தியகீர்த்தி! இந்தமனிதனுக்கே என்னை விலைசெய்துவிடு; இனி என்னை விலைக்கு வாங்குதற்கு வேறொருவன் வருவது சந்தேகம்,” என்று கூறினன். அப்

போது மந்திரி, "ஐயோ! நம்மிறைவரை விலைக்குவாங்குதற்கு உயர்ந்த சாதியிற் பிறந்த வேறொருவன் வரலாகாதா; இந்த நீசன்றானா வரவேண்டும்! அரசன் தலைவிதி இவ்வாறு ஏற்பட்டிருக்கின்றது; அதனை விலக்குதல் எவரால் முடியும்?" என்று விசனித்து, அதன்மேல் வீரவாகுவை நோக்கி, * "சாம்புவனே! விலைக்கு வாங்குவோர் எவராயிருந்தாலும் அவருக்கு இவரை விற்றுவிடுவதில் எள்ளளவுந் தடையில்லை; இப்போது நீ பணங் கொடுத்தாலும் இவரை நான் உனக்கு விற்றுவிடுவேன்," என்றுரைத்தான். அதற்கு வீரவாகு, "அப்படியானால் விலைப்பொருள் இவ்வளவென்பதைக் கூறும்; நான் அதைக் கொடுத்து இவரை விலைக்கு வாங்கிக்கொள்கிறேன்," என்று சொல்ல, மந்திரி, "இவருக்கு விலையாக நீ பதினாயிரம் பொன் கொடுக்கவேண்டும்," என்று கூறினான். உடனே அந்தப் பறையன் பதினாயிரம் பொன்னையுங் கொண்டுவந்து சத்தியகீர்த்தியிடம் கொடுத்து "விலைச்சீட்டெழுதிக் கொடும்?" என்றான். சத்தியகீர்த்தி அரசனுக்கு விலைப்பொருளாகப் பதினாயிரம் பொன்னையும் பெற்றுக்கொண்டு அவனை அந்த வீரவாகுவுக்கு விற்றுவிட்டதாக விலைச்சீட்டெழுதி அப்பறையனிடம் கொடுத்து அவன் கொடுத்த பொன்னை அரிச்சந்திரனிடம் கொடுத்தான். அரிச்சந்திரன் அப்பொன்னை வாங்கிச் சுக்கிரனிடம் கொடுத்து, "சுவாமி! இனிமேல் நீர் சுகமாகப் போய்வரலாம்," என்று கூறினான். சுக்கிரன் மனமகிழ்ச்சியோடு பொருளை வாங்கிக்கொண்டு, வீரவாகுவை நோக்கி அரிச்சந்திரனுக்குத் துன்பஞ் செய்யும்படி சாடை காட்டிவிட்டு அதன்மேல் அரிச்சந்திரனை நோக்கி, "மன்னனே! நான் பணத்திற்காக உன்னிடம் செய்த சில செய்கைகளை யுத்தேசித்து என்மீது வருத்தங் கொள்ளாதே; நான் விரைவில் சந்திரமதியை விலைக்கு வாங்கிய வேதியரிடஞ் சென்று அவரிடமிருக்கும் திரவியத்தையும் வாங்கிக்கொண்டு செல்கின்றேன்; எனக்கு விடை கொடுப்பாயாக," என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு, சந்திரமதியை

* சாம்புவன் - சுடலைகாப்பவன்; பறையன்.

விலைக்கு வாங்கிய, வேதியனிடம் செல்வதுபோலப் போக்குக் காட்டி விசுவாமித்திரரிடம் சென்றான்.

அதன்மேல் வீரவாகு, தான் கொண்டுவந்த மாமிசக் காவடியை அரிச்சந்திரன் தோள்மீதேற்றி, அவனை நோக்கி, "எனக்கு விலையான மனிதனே! நான் எப்போது பணங் கொடுத்து உன்னை விலைக்கு வாங்கினேனோ அப்போதே நீ எனக்குரிய வேலைகளையெல்லாம் செய்தற்குத் தக்கவனாய் விட்டாய்; ஆதலால், நீ இப்போது முதலிற் செய்யவேண்டிய வேலை இந்தக் காவடியைக் கொண்டுவருவதேயாம்; நீ உன் மனத்தில் சிறிதும் அருவருப்புக் கொள்ளாமல் இந்தக் காவடியைத் தூக்கிக்கொண்டு என்னோடு வரவேண்டும்," என்று கூறி முன்னே நடந்தான். அரிச்சந்திரன் அவ்வாறே செய்வதாகச் சொல்லி அந்த மாமிசக் காவடியைச் சுமந்து கொண்டு அவனோடு சென்றான். அரசன் அவ்வாறு செல்வதைக் கண்ட சத்தியகீர்த்தி, [illegible] தாழ்வான நிலைமையை யெண்ணி மனம்வருந்தி அவன்முன்னே விழுந்து கண்ணீர்விட்டழுது, "சூரியகுலம் சிறப்புறத்தோன்றிய தோன்றலே! உமக்கும் இக்கதியோ நேர்ந்தது! உலகத்தைத் தாங்கிய தோள்மீது நீர் அருவருப்பான மாமிசக்காவடியைத் தாங்கவும் விதியேற்பட்டதே; பாவியாகிய நான், நீர் இவ்வாறு செல்லும் கோலத்தைக் காணுதற்கோ உம்முடன் தொடர்ந்து வந்தேன்; ஐயோ! நான் நடுவிற் பிரிய மனமிசையாமல் உம்மோடு சேர்ந்துவந்தும் இப்[illegible]து உம்மைவிட்டு நீங்குங்காலம் [illegible]துவிட்டதே; உம்முடைய பாதங்களை வந்தடைந்த நாள்முதல் என் ஆயுள்வரை நான் உமக்கு ஊழியஞ் செய்யக் கடமைப்பட்டிருந்தும், அக்கடமை இன்றோடு நீங்கிப்போயிற்றே; நான் என்செய்வேன்? எவ்வாறு மனந்தேறுவேன்?" என்று பலவாறு புலம்பி யெழுந்து ஆறாத் துயரத்தோடு அரசனை விட்டுப்பிரிய மனமில்லாமல் அவனைத் தொடர்ந்து பக்கத்திலே சென்றான். சத்தியகீர்த்தி அவ்வாறு கண்ணீர்விட்டழுது கலங்கிவருவதை அரசன் பார்த்து, "அறிவிற் சிறந்த அமைச்சனே! எல்லா முணர்ந்த நீ இவ்வாறு மயங்

குவ தழகன்று; என்னுடைய தலைவிதியால் எனக்கு இக்கதி நேர்ந்துவிட்டது; இனி இதைப்பற்றி வருந்துவதாற் பயனென்னை? விதியை விலக்க எவராலாகும்? நீ என் பொருட்டு மனங் கலங்காதே; இந்த நகரில் எங்கேனும் சென்று ஒரு தொழிலைச் செய்து ஜீவித்திரு; நான் ஒருவருக் கடிமையாகி அவர் வீட்டில் வேலைசெய்யப் போகும்போது நீ என்னோடு வருவது கூடாது; அவ்வாறு நீ வரும் பக்ஷத்தில் நான் செய்யும் தாழ்ந்த வேலைகளைக் கண்டு மனம் வருந்தி அவற்றை நீயும் செய்யத் தொடங்குவாய்; அதைக் கண்டால் விலைகொண்டவருக்கு வெறுப்புண்டாகும்; ஆதலால், இப்பொழுது நீ என்னைவிட்டு நீங்குவதே நலம்," என்று பல தேறுதலான வார்த்தைகளைக் கூறினன். சத்தியகீர்த்திக்கு அரசன் கூறிய வார்த்தைக ளெல்லாம் நியாயமானவைகளாகத் தோற்றியபடியால் அவன் அவ்வாறே செல்வதற் கிசைந்து உடனே [illegible] விடை பெற்றுக்கொண்டு திருப்பி மதிமருண்டு பயித்தியம் பிடித்தவன்போன்று ஒரு பக்கத்திற் சென்றான்.

வீரவாகு, அரிச்சந்திரனை மயானங்காத்தற் கனுப்புதல்.

மேற்கூறியபடி சத்தியகீர்த்தி சென்றபின்பு அரிச்சந்திரன், முன்னே கேயூரங்களை யணிந்து நீக்கின தோளிலே வைத்த மாமிசக் காவடியானது ஊசல்போ லங்குமிங்கு மசைந்தாட அதனைச் சுமந்துகொண்டு வீரவாகுவுடனே தொடர்ந்து நடந்து பலவீதிகளையுந் தாண்டிப் புலால் நாறும் பறைச்சேரிக்குச் செல்லும் ஒரு பழையவழியைப் பற்றிப் பறைச்சேரியிற் சென்று அந்தப் புலையனிருக்கும் குடிசைக்குள்ளே புகுந்து, *பார்ப்பவர் கண்களுக்குமாத்திரம் மாமிசமாகத் தோற்றும்படி, வேதத்தை மாமிசமாக்கிக் கோக்கப்பட்டிருந்த அக்காவடியை வீரவாகுவின் உத்தரவுப்படி ஒரு பக்கத்தில் இறக்கி வைத்துவிட்டு அவனுக்கு முன்னே நின்

* காலன், பார்ப்பவர் கண்களுக்கு மாமிசமாகத் தோற்றும்படி வேதத்தையே அக்காவடியிற் கோத்திருந்தான்.

ளுன். அப்போது வீரவாகு மயானங் காத்தலாகிய தன்னுடைய இழிவான தொழிலை அரிச்சந்திரனுக்குக் கொடுக்க நினைத்து, உடனே அவனை நோக்கி, "அடிமை மனிதனே! நான் சொல்வதைக் கேள்; உனக்குத் தகுதியான தொழில் என் வீட்டிலில்லை; இந்த ஊர்ச்சுடுகாடு முழுவதும் எனக்குச் சொந்தமானது; அச்சுடுகாட்டில் வரும் பிணங்களை யெல்லாம் சுடுந்தொழில் எனக்குரியது; அவ்வாறு சுடுதற்கு எனக்கு இவ்வூரி லுள்ளோர் பிண மொன்றுக்கு வஸ்திர மொன்றும், காற்பணமும், வாய்க்கரிசியுங் கொடுப்பது வழக்கம்; இவற்றைக் கொடாவிட்டாலும், என்னுடைய உத்தரவைப் பெறாவிட்டாலும் எவரும் அச்சுடுகாட்டில் பிணஞ்சுடல் முடியாது; மேற்கூறிய மூவகை வரும்படிக்காக நான் மயானத்தைக் காத்துப் பிணஞ்சுட்டுவருகின்றேன்; இந்தத்தொழிலை உனக்குத் தருகின்றேன்; ஆதலால், நீ இப்பொழுதே மயானத்திற்குச் சென்று அதனைக் காத்து, அங்கே கொண்டுவரப்படும் பிணங்களுக்காக ஏற்பட்ட வஸ்திரம்முதலியவற்றைப் பெற்று அப்பிணங்களைச் சுட்டுக்கொண்டு அவ்விடத்திலேயே தங்கியிருப்பாயாக; ஒவ்வொரு பிணத்திற்கும் கொடுக்கப்படும் வஸ்திரத்தையும் காற்பணத்தையும் சேர்த்து எனக்காக வைத்துவிட்டு வாய்க்கரிசியை மாத்திரம் உன் ஆகாரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்; உரிய பொருள்களைப் பெறாமல் எவருக்கும் எக்காரணத்தை முன்னிட்டும் பிணஞ்சுடாதே; தினந்தோறும் சேரும் வஸ்திரங்களையும், பணங்களையும் எனக்கனுப்பிவிடு; நீ எனக்கு எவ்வளவும் வஞ்சனை செய்யாமல் இத்தொழிலைச் செய்துகொண்டு வரக்கடவாய்," என்று சொன்னான். அரிச்சந்திரன் அதற்கிசைய வீரவாகு உடனே அவனைச் சுடுகாட்டிற் கனுப்பினான்.

அதன்மேல் அரிச்சந்திரன், "ஐயோ தெய்வமே! நான் உலகத்தைக் காத்துவந்த தொழிலை நீக்கி முடிவில் எனக்குச் சுடுகாடு காக்குந் தொழிலையா ஏற்படுத்தினை," என்று வருந்தி வீரவாகுவினிடம் விடை பெற்றுக்கொண்டு சுடுகாடிருக்கு மிடத்தைக் கேட்டறிந்து நகரத்தை விட்டு நீங்கிச் சுடு

காட்டிற் சென்று, அங்கே சுடப்பட்ட பிணங்களோடு சேர்ந் தெரிந்து வெந்து கரிந்து கிடந்த குறைக்கொள்ளிக் கட்டை களையும், பாடைகளோடு சேர்ந்துவந்து சிதைந்து கிடந்த குறுக்குக் கொம்புகளையும் எடுத்துச் சேர்த்து அவற்றாலும், பாடைகளிற் கட்டப்பட்டுவந்து கிடந்த பச்சையாகிய தென் னங் கிடுகுகளாலும், தானிருத்தற்குக் குடிசை யொன்றைக் கட்டி, முன்னே பிணத்தை வைத்து மனிதரால் தூக்கிக் கொண்டு வரப்பட்டு அங்கே கிடந்த ஒரு கட்டிலைத் தூக்கி அக்குடிசையிற் போட்டு அதன்மேலேறி, அச் சுடுகாட்டைக் காத்திருந்தான். அப்படி யிருக்கும்போது அந் நகரிலிருந்து அநேகம் பிணங்கள் மனிதரால் கொண்டுவரப்பட்டன; அவ் வாறு கொண்டுவரப்பட்டவுடனே அரிச்சந்திரன் அவற்றிற் குக் கொடுக்கப்பட்ட வஸ்திரம், காற்பணம், வாய்க்கரிசி ஆகியவற்றை வாங்கி வைத்துவிட்டுப் பிணங்களைக் கொண்டு வந்த மனிதர்கள் அவற்றைக் கட்டைமேலிட்டு ஈமக்கடன் களை யெல்லாம் முடித்து நெருப்பை மூட்டிச் சென்றபின்பு எல்லாப் பிணங்களும் சரியாக வேகும்படி அவைகளை யெல் லாம் கவைக்கொம்பாற் புரட்டிப் புரட்டி முறைப்படி சுட் டெரிக்கத் தொடங்கினன். அப்படி அவன் சுட்டெரிக்கும் போது சூரியன் அஸ்தமிக்க இருள்வந்து மூடிக்கொண்டது; அவ்வாறு இருள் சூழ்ந்தவுடனே அச் சுடுகாட்டில் பிணங்க ளின் தசையைப் பிடுங்கித் தின்னும்பொருட்டு அநேகம் நரி களும், நாய்களும்கூடி ஊளையிட்டன; பல பூதங்களும், பைசா சங்களும் நெருங்கிப் பயங்கரமான தொனிகளைக் கிளப்பின; பிணங்கள் வெந்து கருகுவதா லுண்டாகும் சுடலை நாற்றம் எங்கும் பரவி அரிச்சந்திரனுக்கு மிக்க அருவருப்பை யுண் டாக்கிற்று; அன்று பகலெல்லாம் அவன் உணவருந்தா திருந் தும் மேற்கூறியபடி உண்டான பிண நாற்றத்தாலும், வாய்க் கரிசியின்மீதேற்பட்ட அருவருப்பாலும் அவ்வரிசியைச் சுத் தப்படுத்திச் சமைத் துண்ணுவதற்கு மனம் பொருந்தாமல் பட்டினியாகவே யிருந்து அங்குக் கூடிய நாய்களையும், நரி களையும், பூதங்களையும், பைசாசங்களையும் துரத்திக்கொண்

டும், பிணங்களைச் சுட்டுக்கொண்டும் அவ்விரவைக்கழித்தான். அடிக்கடி மீண்டும் மீண்டும் வந்து கூடின பேய்களும், நரிகளும், நாய்களும், பிணங்களை யிழுத்துக் கஷ்டத்தை யுண்டாக்கியபடியால் அவன் நித்திரை கொள்வதற்குச் சிறிதும் நேரம் வாய்க்காமற்போயிற்று; அதனால் அவன், "தெய்வமே! எனக்கித்தகைய கஷ்டத்தை யேற்படுத்தினையே; நான் என்ன பாவத்தைச் செய்தேன்; ஐயோ! என்னைச் சுற்றிலும், மந்திரிகளும், பிரதானிகளும், சேனைத்தலைவர்களும், அந்தணர்களும், முனிவர்களும் சூழ்ந்திருந்தது போய் இப்பொழுது பேய்களும், நாய்களும், நரிகளும் சூழ்ந்திருக்கின்றன; பல மலர் வாசனையும், சுகந்த தூபவாசனையும் என்னைச் சுற்றிப் பரவி யிருந்ததுபோய் இப்போது பிணநாற்றமே என்னைச் சூழ்ந்திருக்கின்றது; உயர்ந்த பஞ்சணை மெத்தையில் சந்தோஷமாக நான் தங்கியிருந்ததை விட்டு இப்போது பிணங் கொண்டுவந்த பழங் கட்டிலின்மேல் தங்கியிருக்கின்றேன்; இரத்தின சிகரங்களையுடைய விநோதமாளிகை எனக்கிருப்பிடமா யிருந்தது போய் இப்போது குறைந்த கொள்ளிக் கட்டைகளாலும், பாடைக்கொம்புகளாலும், பச்சைக் கிடுகுகளாலும் அமைந்த சிறு குடிசை தங்கு மிடமா யிருக்கின்றது; பாவியாகிய நான் முற்பிறப்பில் என்ன தீவினை செய்தேனோ? உண்பதற்கோ ஆகாரமில்லை; நித்திரை செய்பலாமென்றாலோ, பேய் முதலியவை செய்யும் உபத்திரவத்தால் சிறிதும் நித்திரை வரவில்லை; அவ்வாறு நித்திரை யின்மையால் இரண்டு கண்களும் எரிகின்றன; பிணங்களின் மண்டைகள் வெடிப்பதனாலும், பேய், நரி, நாய் முதலியவை கதறுவதாலு முண்டாகும் பயங்கரமான சப்தங்களால் அடிக்கடி மனந் திடுக்கிடுகின்றதே; ஆ! ஆ!! என்னைப்போலத் துன்பத்தை யடைபவன் உலகத்தில் ஒருவனு மிரான்," என்று பலவாறு புலம்பி அச்சுடுகாட்டைச் சுற்றிக்கொண்டு திரிந்தான். அப்படி அம்மன்னன் அளவில்லாத கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டு அச்சுடுகாட்டிற் சஞ்சரிக்கும்போது அவ்விரவு கழிந்து மறுநாள் உதயமாயிற்று. அவ்வாறு விடிந்த

மாத்திரத்தில் பேய்களும், நாய்களும், நரிகளும் மறைந்து போயின; அவற்றா லேற்படும் துன்பமும் நீங்கிற்று. அதன் மேல் அவன் தன் குடிசையிற்போய் உட்கார்ந் திளைப்பாறித் தன்னுடைய தலைவிதியைப்பற்றிச் சிந்தனை செய்துகொண் டிருந்தான்.

அரிச்சந்திரன் அவ்வாறு அளவிலாத் துன்பத்தோடு சுடுகாட்டில் தங்கியிருக்கும்போது, அன்றைக்கு முந்திய நாளில் அவனை விட்டு நீங்கி மனக்கலக்கத்தோடு சென்ற மந்திரி, அக்காசிநகரத்திற் சிற்சில விடங்களுக்குச் சென்று பொழுதைப் போக்கிச் சூரியன் அஸ்தமித்தவுடன் ஒரு மடத்தைச் சார்ந்து மன வருத்தத்தால் ஆகாரமின்றிப் படுத்துச் சிறிதும் நித்திரை கொள்ளா திருந்து பொழுது விடிந்த வுட னெழுந்து, "ஐயோ! நம்மரசர் நேற்று நீசனுக்கு விலைப்பட்டு அவனுடன் சென்றாரே; அவர் எங்கிருக்கின்றாரோ? என்ன கஷ்டமான வேலையைச் செய்கின்றாரோ; அவரைக் காணாதிருக்க என் மனம் சிறிதும் சகிக்கவில்லை; ஆதலால், இப்பொழுதே பறைச்சேரிக்குச் சென்று அவரை விசாரித்துக் கண்டு வரவேண்டும்," என்று சிந்தித்து உட னே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் பறைச்சேரிக்குச் சென்று அங்குப் பலவிடங்களிலும் புகுந்து பல பறையர்க ளிடமும் விசாரித்து முடிவாக வீரவாகுவின் குடிசையைச் சார்ந்து அங்குள்ளவர்களிடத்திலும் விசாரித்து, அவர்கள், 'அரசன் சுடுகாட்டி லிருக்கிறான்,' என்று சொல்லக் கேட்டு மிகவும் விசனமுற்று விரைந்தோடிச் சுடுகாட்டை யடை ந்து அவ்விடத்தில் அரசனிருக்கு மிடத்தைத் தேடினான். அவ்வாறு அவன் தேடி முடிவில், பிணங்கள் நெருக்கமாக வைக்கப்பட்டு நாற்றத்துடன் எரிந்து கரிந்து புகைந்து கொண்டிருக்கும் ஓரிடத்தில் கட்டப்பட்ட சிறு குடிசைக் குள் அரசனிருப்பதைக் கண்டு மனங் கரைந்துருகி அவன் சமீபத்திற் சென்று திடீரென்று அவனுடைய பாதங்களில் விழுந்து, "அந்தோ! இஃதென்ன கொடுங்காலம்; மன்னர் பெருமானே! நீர் உலகத்தைக் காப்பதைவிட்டு இப்பொழுது

சுடுகாடு காக்கவோ தலைப்பட்டீர்; இப்படிவருமென்பதை இந்தப் பாவி சிறிது மறியேனே; தெய்வத்திற்கும் இது சம்மதியாயிற்றோ? பலதேயத் தாசர்களும் நெருங்கி யிடம் போதாமல் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டுவந்து உம்முடைய பாதங்களில் விழுந்து வணங்கவும், அன்னம்போலும் மெல்லிய நடையையுடைய நாடகமாதர்க ளாடவும், அரம்பையரைப்போன்ற வேறு சில ஸ்திரீகள் பாடவும், முனிவர் ஆசீர்வதிக்கவும், சேனைத்தலைவர் துதிக்கவும், மந்திரிகள் ஆலோசனை கூறவும், கட்டியக்காரர்கள் கட்டியங் கூறவும், பல அழகிய ஸ்திரீகள் வெண்சாமரை வீசவும், அடைப்பைக்காரர்கள் அடைப்பை தாங்கவும், வித்வான்கள் புகழ்ந்து பாடவும் மிக்க கௌரவத்துடனே கொலுக்கூடத்திலிருந்து தேசவிசாரணை செய்த நீர் இப்பொழுது பேய்களும், நாய்களும், நரிகளும் சூழ்ந்த சுடுகாட்டிலிருந்து பிணங்களைக் காவல் செய்கின்றீரே; இந்த விதியோ உமக் கேற்பட்டது," என்று கூறிக் கண்ணீ ரொழுகவிட்டுப் புரண்டழுதான்.

அத்தருணத்தில் அரசனும், தன்னுடைய கண்களில் முத்துக்களைப்போன்ற கண்ணீர்த்துளிகள் சொரிய விசனித்து, மந்திரியை நோக்கி, "சத்தியகீர்த்தி! விசனங்கொள்ளாதே; உலகத்தில் விதியை விலக்க எவராலாகும்? எல்லோருக்கும் கதிகளை ஏற்படுத்தக்கூடிய பிரமாவும், அவனைப் பெற்ற விஷ்ணுவுமே விதியைக்கடக்க முடியாதவர்களாய்க் கஷ்டப்பட்டார்களென்றால் நாம் அதைத் தடுக்க வல்லமையுடையவர்களாவோமோ? ஒருபோதும் நம்மால் அது முடியாது; வந்த விதியை நாம் அனுபவித்தே தீரவேண்டும்; எல்லாம் உனக்குத் தெரியும்; ஆதலால் வருத்தத்தை யொழித்துவிடு," என்று கூறி அவனைத் தேற்றினான். அதன்மேல் மந்திரி மனந்தேறி அச்சுடுகாட்டில் அரசன் நடத்திவரும் காரியங்களைப்பற்றி விசாரித்தான். அதற்கு அரசன் சத்தியகீர்த்தியை நோக்கி, "மந்திரி! இந்த மயானத்தில் சுடுவதற்குக் கொண்டுவரப்படும் பிண மொன்றுக்கு வஸ்திர மொன்

றும், காற்பணமும், வாய்க்கரிசியும் அப்பிணத்தைச் சார்ந்தவர் வீரவாகுவுக்குக் கொடுக்க, அவற்றை அவர் பெற்றுக்கொண்டு அப்பிணத்தைச் சுடும் வழக்கம் இங்கே ஏற்பட்டிருக்கின்றது; இப்படியே இங்குவரும் பிணங்களையெல்லாம் சுடல்வேண்டும்; நான் வீரவாகுவுக்கு விலைப்பட்டு வீட்டிற்குச் சென்ற அப்பொழுதே அவர் எனக்கிந்த வேலையைக் கொடுத்து, இங்கே வரும் வஸ்திரம், காற்பணம் முதலியவற்றைச் சேகரித்து அவருக் கனுப்பிவிடும்படிக்கும், வாய்க்கரிசியை மாத்திரம் என் ஆகாரத்திற் குபயோகப்படுத்திக்கொள்ளும்படிக்கும் கட்டளையிட்டு என்னை இச்சுடுகாட்டிற் கனுப்பினர்; நான் அவர் கட்டளைப்படியே இங்குள்ள வேலைகளை நிறைவேற்றி வருகின்றேன்; நேற்றுவந்த வாய்க்கரிசிகளையெல்லாம் சேர்த்து வைத்திருக்கின்றேன்; ஆயினும், அவை நிஷேதமானவைகளாதலால் அவற்றைச் சமைத்துண்ண மனம் பொருந்தாமல் பட்டினியா யிருக்கின்றேன்," என்று கூறினன். அதைக் கேட்டுச் சத்தியகீர்த்தி, "ஐயோ! ஆகாரமு மில்லாமலோ வருந்தினீர்?" என்று சொல்லி விசனித்துப் பின்னர் மன்னனை நோக்கி, "அரசர்க்கரசனே! நீர் ஆகாரத்திற்கு வருந்தவேண்டாம்; நான் அந்த அரிசிகளைப் பரிசுத்தமாக்கிச் சமைத்துத் தருகிறேன்; அவற்றை என்னிடம் கொடும்," என்று கேட்க, உடனே அரசன் அவ்வரிசிகளில் ஒருவேளை ஆகாரத்துக்குப் போதுமான அரிசிகளை யெடுத்துக் கொடுத்தான். சத்தியகீர்த்தி அவற்றை வாங்கிப் புல்முடிக்குள் வைத்துப் பொதிந்து அப்புல்முடியை ஒருபசுவுக்கருத்தி, அஃதுண்டு அந்தப்புல் ஜீரணமாகிச் சாணியாய் வெளிப்பட்டவுடனே அந்தச் சாணியை யெடுத்துத் தண்ணீரிற் போட்டுப் பிசைந்து கழுவி அதனோடு சேர்ந்திருந்த அவ்வரிசிகளை யெடுத்துப் பரிசுத்தமாக்கி யுலர்த்திக் குத்திப் புடைத்து அவற்றால் அன்னஞ் சமைத்து அரசனுக்குக் கொடுத்தான். அரசன் அச்சோற்றை யுண்டு பசிதணிந்தான். அதன்மேல் சத்தியகீர்த்தி காசிநகரத்திற்கேகிப் பலரிடம் யாசித்து அரிசிமுதலியன பெற்று அவற்றைச் சமைத்

துண்டு பசி தணிந்தான். பின்னர் இவ்வாறே சத்தியகீர்த்தி அடிக்கடிவந்து அன்னஞ் சமைத்துக் கொடுத்துச் செல்ல அரசன் அதனை உண்டும், தினந்தோறும் சேரும் வஸ்திரம், பணம் ஆகியவற்றை வீரவாகுவுக் கனுப்பியும், அங்குவரும் பிணங்களைச் சுட்டும் அந்த மயானத்தைக் காவல் புரிந்து கொண்டிருந்தான். இனி, அதன்மேல் நடந்த விஷயங்களைக் கூறுவோம்.

காசிகாண்டம் முற்றுப்பெற்றது.

மயானகாண்டம்.

மேற்கூறியவாறு அரிச்சந்திரன் மயானங்காத்துக் கொண்டிருக்க, சந்திரமதியும், தேவதாசனும், அவர்களை விலைக்கு வாங்கிய பிராமணனுடன் அவன் வீடு சேர்ந்து அவனேவியபடி வேலைகளைச் செய்துகொண்டு அங்கே தங்கியிருந்தார்கள். அப்படி அவர்கள் தங்கியிருக்குங் காலத்தில் சந்திரமதி ஒவ்வொருநாளிலும் சூரியன் அஸ்தமிக்கும்வரையிலும் ஓயாமல் அந்தப் பிராமணன் சொன்ன வேலைகளையெல்லாம் குறைவறச் செய்துமுடித்துப் பின்னர் இராத்திரி இரண்டு சாமங்கழிந்ததற்குமேல் அவனூற்றின கூழைப் பருகி யுறங்கியும், மறுநாள் விடிய ஒருசாம மிருக்கும்போதே எழுந்திருந்து மீண்டும் வீட்டுவேலைகளைச் செய்தும் மிகுந்த கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டிருந்தாள். அப்படி அவள் வேலை செய்யுங்காலத்தில், காந்தள் மலர்போன்ற கைகளிலே உலக்கையைப் பற்றி, அக்கைகளிலே இரத்தங்கட்டி அவை சிவப்பாகவும், உடம்பெல்லாம் வியர்வை நீரொழுகவும், கண்களிலே அருவிபோல நீரொழுகவும், நெற்குத்துவதையும், பசுத்தொழுவிலுள்ள சாணிகளை யெடுத்துக் குவிப்பதையும், வீட்டின் முற்றங்களைப் பெருக்கிச் சாணங்கரைத்துத் தெளிப்பதையும், கோலமிடுவதையும், இன்னும் பலகஷ்டமானவேலைகளைச் செய்வதையும் பார்த்து, மையிட்டு வேல்போல விளங்கும் கண்களையுடைய அரம்பையரெல்லோரும், "ஐயோ!

அரிச்சந்திரன் மனைவியாகிய சந்திரமதிக்கும் இத்தகைய துன்பங்கள் வரலாமோ?" என்று மனந்திரங்கி வருந்தினார்கள்; இன்னும் அந்நகரத்திலுள்ள மனிதரும் அவளைப் பார்த்து அவள்மீது பரிவுகொண்டு வருந்தினார்கள். அவ்வாறு தெய்வ ரம்பைகள் முதலிய எல்லோரும் சந்திரமதியைப் பார்த்து அவள்மீ திரக்கமுற்று வருந்தினாலும், அவளை விலைக்கு வாங்கிய பிராமணன், மனத்திற் சிறிதும் அன்பில்லாதவனாயும், மிகவுங் கொடுஞ்சொற்களையுடையவனாயும், அடிக்கடி கோபங் கொள்ளக் கூடியவனாயும், சிறிதும் தாக்ஷணிய மில்லாதவனாயும், எந்த நேரமும் கண்டித்துத் துன்புறுத்தி அவளை வேலைவாங்கக் கூடியவனாயு மிருந்தான். அவனுடைய மனைவியோ அவனைக்காட்டிலும் பதின்மடங் கதிகமான கொடுமையுடையவளாயிருந்தாள். அவ்விருவரும் அத்தகைய கடின சித்த முடையவர்களா யிருந்தபடியால் சந்திரமதிக்கு மேன் மேலும் துன்ப மதிகரித்துக்கொண்டே யிருந்தது. சந்திரமதியினுடைய கதி இவ்வாறிருக்க, அவளுடைய புத்திரனாகிய தேவதாசனுடைய கதியும் பார்த்தோர் மிகவும் பரிதபிக்கக் கூடியதாகவே யிருந்தது. அந்த வேதியன் அவனை அடிக்கடி அடித்தும், அதட்டி வைதும், பயமுறுத்திப் பல கஷ்டமான வேலைகளை யெல்லாம் செய்யும்படி ஏவிக்கொண்டிருந்தான். அதனால் அந்தப் பாலகன் பயந்து ஒவ்வொரு நாளிலும் விடிவதற்கு முன்னரே யெழுந்து அவ்வேதியனுடைய நிலங்களுக்குச் சென்று அவற்றிலுள்ள பயிர்களிற் களைபிடுங்கி யெறிந்தும், அவனுடைய காவலுக்குள்ளான வனத்திற் சென்று இலைக்கறிகளையும், விறகுகளையும், தருப்பைகளையும், சமித்துக்களையும் சேகரித்துக் கட்டிப் பொற்கிரீட மணியத் தக்க தன்னுடைய முடியின்மேல் வைத்துச் சுமந்துகொண்டு வந்து அவ்வேதியனுக்குக் கொடுத்தும், இன்னும் பல கஷ்டமானவேலைகளைச் செய்தும், பசியால் வருந்தியும், இராத்திரி இரண்டு சாமத்திற்குமேல் தனக்கு அவ்வேதியன் ஊற்றும் கூழைப் பருகியும், அளவற்ற துன்பங்களை யடைந்துகொண்டிருந்தான். அவன் படுங் கஷ்டங்களைப் பார்த்துச் சந்திரமதி

மனஞ் சகிக்காதவளாகி, "அடா கண்மணியே! உனக்கும் இக்கதி நேர்ந்ததே," என்று சொல்லிக் கண்ணீர்விட்டழுது கொண்டிருந்தாள். அவ்விருவருடைய நிலைமையைப் பார்த்தால் எத்தகைய கன்னெஞ்சரும் மனமுருகி வருந்துவார்கள்.

தேவதாசன் காட்டிற் சென்று, தன்னை அரவு கடித்ததால் உயிர்விடல்.

மேற்கூறியபடி அவ்வேதியன் வீட்டிலிருந்து சந்திரமதியும், தேவதாசனும் பல கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள் தேவதாசன், தன் தாயாரிடம் விடை பெற்றுக்கொண்டு, விறகு முதலியன தேடிவருதற்காக அவ்வூரிலுள்ள சில பிள்ளைகளோடு கூடிக் காட்டிற்குச் சென்றான். அவ்வாறு அவன் செல்லும்போது சில அவசகுனங்களுண்டாயின; அச்சகுனங்களைச் சந்திரமதி கண்டு, "ஐயோ! தீயசகுனங்களுண்டாகின்றனவே; இன்று புத்திரனுக்கு என்ன தீங்கு விளையுமோ தெரியவில்லையே," என்று மனங்கலங்கினாள். அப்படி அவள் கலங்கியும் அவனைத் தடுத்துக் காட்டிற்குப் போகாமல் நிறுத்தினால் வேதியன் கோபிப்பானென்றஞ்சி, "என்ன வந்தாலும் வரட்டும்; எதுவும் தலைவிதிப்படியே நடக்கும்," என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு அவனைத் தடைசெய்யாம லிருந்துவிட்டாள்.

அதன்மேல் சிறுவர்களோடு சேர்ந்து சென்ற தேவதாசன் காட்டிற் புகுந்து பலவிடங்களிலும் அலைந்து நல்ல விறகுகளையும், சமித்துக்களையும், இலைக்கறிகளையும், தேடிக் கட்டிச் சுமையாக்கித் தலையில் வைத்துச் சுமந்து அப்பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு திரும்பிவந்தான்; அப்படி வரும்போது வழியிலே ஓரிடத்தில் கருப்பம்புல் அடர்ந்து செழிப்பாகப் பசுமையுடன் வளர்ந்தோங்கி யிருந்தது. தேவதாசன் அதைக் கண்டவுடனே, "இந்தக் கருப்பை மிகவும் பசுமையாயும், செழிப்பாயு மிருக்கின்றது; இதை அறுத்துக் கொண்டு போகாவிட்டால் நம்மை விலைகொண்ட வேதியர் கோபித்தடித்து வருத்துவர்; ஆதலின், இதனை அவசியம்

அறுத்துக்கொண்டு போகவேண்டும்," என்று கருதி ஓர் ஆலமரத்தடியிலே தான் கொண்டுவந்த சுமையை இறக்கி வைத்துக் கூடவந்த சிறுவர்களிடம், "நேயர்களே! நீங்கள் இவ்விடத்திற்றானே யிருங்கள்; நான் இந்தத் தருப்பையை அறுத்துக்கொண்டு வருகின்றேன்," என்று சொல்லி அவர் களை அங்கே நிறுத்திவிட்டு அந்தத் தருப்பைப் புதரின் சமீபத்திற் சென்றான். அப்போது, விசுவாமித்திரர் அப்புத்திரனைக் கொன்று அரிச்சந்திரனுக்கும், சந்திரமதிக்கும் மிகுந்த கலக்கத்தைச் செய்யவேண்டுமென்று கருதி அவ்வாறே அவனைக் கொல்லுதற்கு ஓர் அரவத்தை அப்புதரில் சிருஷ்டித்துவிட்டுத் தேவதாசனைக் கடித்துக் கொல்லும்படி அதற்குக் கட்டளை யிட்டிருந்தார். அவ்வரவமானது அவ்வாறே செய்தற்குத் தேவதாசனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு அப்புதருக்குள் மறைந்திருந்தது. அஃது அப்படி யிருக்குஞ் சமயத்தில் மேற்கூறியவாறு சென்ற தேவதாசன் அப்புதரின் சமீபத்தில் நெருங்கித் தருப்பையைக் கையினாற் பற்றி யறுத்தான். அப்படி யறுக்கும்போது அங்கே மறைந்திருந்த பெரிய அரவமானது சீறியெழுந்து கண்களில் நெருப்புப்பொறி சிதறக் கோபித்துப் பாய்ந்து தன்னுடைய பற்கள் அவனுடைய காத்திற் பதியும்படி கடித்தது. அவ்வாறு கடித்தவுடனே அவன் பயந்து துள்ளி அலறிக்கொண்டோடித் தன்னுடன் வந்த தோழரிருக்கு மிடத்திற்குப் பக்கத்திற் போய் மயங்கி விழுந்து புலம்பினான்.

ஆலமரத்தினிழலிலே இளைப்பாறிக்கொண்டிருந்த தோழர்களாகிய சிறுவர்கள், தேவதாசன் அவ்வாறு ஓடிவந்து மயங்கி விழுந்ததைக் கண்டு, "ஐயோ! இவனுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே," என்று சொல்லி விரைந்தோடித் தேவதாசனை யடுத்து, அவனை தூக்கிக் கைகளாலணைத்துக்கொண்டு அவன் முகத்தை நோக்கி, "ஐயோ! தோழனே! உனக்கிப்போது என்ன துன்பம் நேர்ந்தது? நீ இவ்வாறு ஓடிவந்து இங்கே மயங்கி விழுந்ததற்குக் காரணமியாது?" என்று வினவினார்கள். உடனே தேவதாசன் அவர்

களை நோக்கி, "அன்பர்களே! நான் அந்தப் புதரிற் சென்று தருப்பையை அறுக்கும்போது அதற்குள்ளிருந்து பெரிய படத்தையுடைய அரவமொன்று வெளியேறிக் கோபித்துச் சீறி என் காத்திற் கடித்தது; அதன் விஷம் என் தேகத்தில் வியாபித்துத் தலைக்கேறிவிட்டது; என் நினைவு தடுமாறுகின்றது; இனி நான் பிழைப்பதரிது; சிறிது நேரத்துக்குள் என்னுயிர் போய்விடும்; ஐயோ! என் அன்னைக்கு எவருந் துணையில்லையே; நான் அவள் மடியிற் படுத்து உயிர் விடுதற்குத் தக்க தவத்தையேனுஞ் செய்யாத பாவியாகி விட்டேனே; இந்த நடுக்காட்டில் எனக்குச் சாவு நேர்ந்ததே; என் தந்தை எவ்விடத்தி லிருக்கின்றாரோ; ஆ தெய்வமே! அவர் முகத்தைப் பாராமல் என் உயிர்போகப் போகின்றதே; இவ் விஷத்திற்குத் தக்க பரிகாரஞ்செய்து என்னைக் காப்பாற்றுவா ரொருவருமில்லையே; நான் திக்கற்ற பாவியாகிவிட்டேனே," என்று பலவாறு புலம்பிக் கண்ணீர்விட்டழுது அங்குமிங்கும் புரண்டான். அவனுடைய பரிதாபமான நிலைமையைக் கண்டு மற்றச் சிறுவர்க ளெல்லோரும் மனதிரங்கி, "ஐயோ! இவனுக்கு இத்தகைய தீங்கு சம்பவித்ததே; நம்மோடுசேர்ந்து இவன் வருவானென்று இவனுடைய அன்னை வழியைப் பார்த்துக்கொண் டிருப்பாளே; நம்மோடுவந்த இவன் சுகமாகத் திரும்பிச் சென்று வீடு சேராமல் இவ்வித ஆபத்துக் குள்ளானானே," என்று வருந்தி உடனே தங்கள் புத்திக் கெட்டியவரையில் ஏதேதோ சில பரிகாரங்களைச் செய்து பார்த்தார்கள்; ஒன்றும் பயன்படவில்லை; சிறிது நேரத்திற்குள் தேவதாசனுடைய கண்கள் சுழன்றன; நா வறண்டுபோயிற்று; பேச்சுந் தடுமாறிப் போயிற்று; மெய் சோர்ந்துவிட்டது; பற்கள் கறுத்துப் போய்விட்டன; உயிர் போகுந்தருணமும் சமீபித்துவிட்டது. அதனால் அவன் கால் கைகளை உதறிக்கொண்டு தலையை அங்குமிங்கும் புரட்டி யுருட்டி முடிவாக அச் சிறுவரைப் பார்த்து ஈனத் தொனியோடு, "தோழர்களே! என்னால் பேச முடியவில்லை; என்னுயிர் போகுந்தருணம் சமீபித்துவிட்டது; நீங்கள் என்

அன்னையிடம் சென்று இந்தப் பாவியாகிய நான் இறந்து போன விவரத்தைத் தெரிவிப்பீராக; அவள் மிகவும் வருந்துவா ளாதலின், அவ்வாறு வருந்த வேண்டாமென்று அவளுக்குத் தேறுதல் கூறுங்கள்,'' என்று சொல்லிச் சிறிது நேரத்திற்குள் பேச்சொடுங்கி மரணமானான்.

அதன்மேல் அந்தச் சிறுவர்கள் அளவில்லாத துக்கத்தை யடைந்து அவனை யெடுத்து ஒரு நல்ல விடத்திற்போட்டுச் சில இலைகளைப் பறித்து மேலிட்டு மூடி அவனுடலை மறைத்து அவரவர்கள் கொண்டுவந்த சமித்துக்களின் சுமைகளை யெடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு விரைவாகப் புறப்பட்டு நடந்து நீலோற்பலங்கள் மலர்ந்து விளங்கும் வயல்கள் சூழ்ந்த காசிப்பட்டணத்துக் குள்ளேபோய்ச் சேர்ந்தார்கள். அப்படி அவர்கள் சேர்ந்த சமயத்தில் சூரியனும் மேற்குக் கடலிற்போய் மறைய மாலைக்கால மாயிற்று. அவ்வாறு மாலைக்காலமாகி இருள் சூழ்ந்தவுடன் சந்திரமதி, மகனை நினைத்து வருந்தி, "ஐயோ! என் அருமைச் செல்வன் காலை நேரத்தில் பசியோடு காட்டிற்குச் சென்றானே; அவன் செல்லும்போது சில அவசகுனங்கள் நேர்ந்தனவே; அந்தச் சகுனங்களை நினைக்கும்போது என் மனம் பதறுகின்றதே; மாலைக்காலமாகி எங்கும் இருள் சூழ்ந்துவிட்டதே; இன்னும் அவன்வரவில்லையே; இதுவரை வாராததற்குக் காரணமியாதோ? அவனுக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ? தெய்வமே! நான் என்னுடைய நாயகரையு மிழந்து அவனையே நம்பி யிருக்கின்றேனே; அவனுக் கேதேனும் நேர்ந்தால் என்னுயிர் நிற்குமா? என் ஈரற்குலை கருகுகின்றதே; என் மனம் பதைக்கின்றதே,'' என்று பலவாறு புலம்பிக் கண்ணீர்விட் டழுதுகொண்டே வீட்டைவிட்டு வெளியேறித் தலைவாயிலைக் கடந்து தெருவிற்சென்று, தேவதாசன் வரும் வழியை அடிக்கடி பார்ப்பதும், மீண்டு வீட்டிற்குட் சென்று வேலையைப் பார்ப்பதும், சிறிது நேரத்திற்குள் மனம் பொறுமல் மறுபடியும் வந்து பார்ப்பதுமாய் மனமறுகி அங்கு மிங்கும் அலைந்துகொண்டிருந்தாள்.

அப்படி அலைந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் மேற் கூறியபடி இறந்த தேவதாசனைக் காட்டிற் போட்டுவிட்டுக் காசி நகரத்திற்குட் சென்ற சிறுவர்கள், அந்தத் தேவதாச னிறந்த விவரத்தை விரைவில் அவளிடம் தெரிவிக்கக் கருதி அவளிருக்கு மிடத்திற்குச் சென்றார்கள். அப்போது சந்திர மதி பின்னுமொருமுறை வெளியேறி மகன்வரும் வழியை நோக்கினாள். அவ்வாறு நோக்கிய அவள், தன்னுடைய புத்திரனொருவன் தவிர மற்றச் சிறுவர்கள் மாத்திரம் வரு வதைக் கண்டாள். அப்போது அவளுடைய மனந் திடுக்கிட் டது; அதனால் அவள், "என்னுடைய புத்திரனின்றி மற்ற வர்கள் மாத்திரம் வருவதற்குக் காரணந் தெரியவில்லையே; ஐயோ! என்ன நேர்ந்ததோ," என்று கையை நெரித்துக் கண்ணீர்விட்டாள். அதற்குள் அந்தச் சிறுவர்கள் அவள் சமீபத்தில் நெருங்கினார்கள். உடனே சந்திரமதி, மனந் தளரவும், உடல் துடிக்கவும் அவர்களை நோக்கி, "பிள்ளை களே! உங்களோடு சேர்ந்துவந்த என் புத்திரனெங்கே? நீங்கள்மட்டும் வரக் காரணமியாது? விரைவிற் கூறுவீராக," என்று வினவினாள். அங்ஙனம் அவள் பதறிக் கேட்பதை அச் சிறுவர்கள் பார்த்து, "ஐயோ! இவ்வளவு பதற்றத் தோடு கேட்கும் இவள் தன்னுடைய புத்திரனிறந்த செய் தியை அறிந்தால் என்னபாடு படுவாளோ; நாம் எப்படி இந்தத்துக்கமான சமாசாரத்தை இவளிடம் தெரிவிக்கலாம்?" என்று முகவாட்டத்தோடு மேலுங் கீழும் பார்த்துக்கொ ண்டு சிறிது நேரம் மௌனமாக நின்றார்கள். அப்படி அவர் கள் நிற்கவே அவள், "ஐயோ! நம்முடைய புத்திரனுக்கு நிச்சயமாக ஏதோ தீங்குதான் நேர்ந்துவிட்டது," என்று வயிற்றைப் பிசைந்துகொண்டு மேலும் அவர்களை நோக்கி, "சிறுவர்களே! ஏன் மௌனமாக நிற்கின்றீர்கள்? நேர்ந்த தென்ன?" என்று கேட்டாள். அதன்மேல் அச்சிறுவர்களுள் ஒருவன், "நாம் எப்படியும் இந்தத் துக்க சமாசாரத்தைச் சொல்லத்தானே வேண்டும்? மௌனமா யிருப்பதாற் பய னென்ன?" என்று ஆலோசித்து உடனே சந்திரமதியைப்

பார்த்து, "அம்மா! நீ சந்தேகித்தபடியே உன் மகனுக்குத் தீங்கு நேர்ந்துவிட்டது; ஏதோ கெட்டகாலத்தால் காட்டில் உன் புத்திரனை அரவந் தீண்ட அப்பாம்பின் விஷத்தினால் அவன் இறந்துபோய்விட்டான்," என்று அவள் வயிற்றில் நெருப்பைவாரிக் கொட்டுவதுபோல் சொல்லிவிட்டான்.

அந்தோ! அச்சந்திரமதி அத்தருணம் பட்டபாட்டை நாம் என்னென் றெடுத்துரைப்போம்! தேவதாசன் பாம்பின் விஷத்தால் மாண்டானென்ற வார்த்தை செவியிற் புகுந்தவுடனே அவள், "ஆ மகனே!" என்று பெருந்தொனியுண்டாகக் கூவி அடியற்ற மரம்போல் படிமேல் திடீரென்று விழுந்து மூர்ச்சித்தாள். அவளுக்குச் சிறிதும் பிரக்ஞையில்லாமற்போயிற்று; கூந்தலவிழ்ந்து ஒரு பக்கம் புழுதியிற் கிடந்தது; கண்களில் நீர் அருவிபோல ஒழுகிக்கொண்டிருந்தது; அப்படி மூர்ச்சித்த அவள் தோகையை விரித்தபடியே மயங்கிக் கிடந்த ஒரு மயில்போற் கிடந்தாள். அப்படி அவள் நினைவற்றுக்கிடந்த கோலத்தை அங்கு நின்ற சிறுவர்கள் பார்த்து மனமுருகி, "ஐயோ! திக்கற்ற இப்பெண்மணிக்கு இத்துன்பம் வரலாமா; இவளுடைய பரிதாபமான நிலைமையைப் பார்த்து நம்முடைய நெஞ்சம் பதைக்கின்றதே," என்று வருந்தி அவளைவிட்டு நீங்கிச் செல்ல மனமில்லாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்கள். அப்படி அவர்கள் மனம் வருந்தி நிற்கும்போது மேற்கூறியபடி மூர்ச்சித்து விழுந்த சந்திரமதிக்கு அம்மூர்ச்சை சிறிது நீங்கி நினைவுண்டாயிற்று; அவ்வா றுண்டாகவே அவள் துடித்தெழுந்து வயிற்றிலும், மார்பிலும், முகத்திலும் கைகளாற் பன்முறையறைந்துகொண்டு, "அடா என் குலம் விளங்க வந்த புத்திரனே! என் அருமைச் செல்வனே! என் தவமிகுதியால் வந்த தங்கமே! மாசிலாமணியே! மதிநிறைந்த மைந்தனே! என் பிள்ளைக்கலி தீர்க்கவந்த பேரமுதே! கரும்பே! கனிரசமே! கற்கண்டே! கொற்றவர் போற்றும் கோமானே! என் அப்பனே! ஒப்பில்லா மாணிக்கமே! ஒளிமிகுந்த முத்தே! பவளமே! பழியில்லாப் பாலகா! சூரியகுலத் தோன்றலே!

வீரிய மிகுந்த பேராசே! என் கண்ணே! என் கண்ணுள் மணியே! என்னுருயிரே! எனக்குற்ற துணையாயிருந்த உத்தமனே! என் அல்லலகற்றவந்த அருமருந்தே! என் சஞ்சலப்பிணி நீக்கும் சஞ்சீவியே! சுந்தரனே! எனக்கு முன்னே அக்கினியில் விழச்சென்ற என் னருமைப்புதல்வா! திரு மிகுந்த செம்மலே! உருமிகுந்த திருமகனே! என் சொற்றவருப் புத்திரனே! என் அன்பிற் சிறந்த ஐயனே! கற்பகத்தை நிகர்த்த கையனே! என்றும் பொய் சொல்லாத மெய்யனே! சூதொன்று மில்லாத் துய்யனே! ஆ தேவ தாசா! எனக்குரிய விசுவாசா! இந்தப் பாவியை விட்டுப் பிரிந்தாயே; உடல் துறந்தாயே; என்னை மறந்தாயே; இப்பொழு திறந்தாயே; உன்னைப் பத்துமாதமும் சுமந்துபெற்ற என்வயிறு பற்றி யெரிகின்றதே; நான் இனி எப்பொழு துன்னைப் பார்ப்பேன்; நீ அம்மாவென்றழைக்க என் காதால் எக்காலத்திற் கேட்பேன்; துணையற்றிருந்த எனக்கு இனி எவர் துணையாவர்? அம்மா நீ அழாதேயென்று எனக்குத் தேறுதல் சொல்வாரெவர்? என் நாயகரைப் பிரிந்தும் உன்னை நம்பி யிருந்தேனே; நீயும் இச் சமயத்தில் கைவிட்டாயே; எல்லாச் சிறப்பையு மிழந்து நீ சுற்றத்தாரு மின்றிக் காட்டில் தனியே யிறந்து கிடக்கின்றாயே; நான் இத்துயரை எவ்வாறு சகிப்பேன்? எப்படி உயிர்தரிப்பேன்? எவ்விதம் உன்னை மறப்பேன்; ஐயோ! அறியாப் பருவத்தில் உனக்கு இவ்வித அகாலமரணம் ஏற்பட்டதே; தெய்வத்திற்கும் இரக்க மில்லாமற் போயிற்றே; அரவம் உன்கரத்தில் எவ்வாறு கடித்ததோ; நீ எப்படிப் பதறி கதறினேயோ; எவ்விதம் உயிர் விட்டாயோ; என்ன நினைந்தாயோ; உன்னுடைய அறிவையும் அழகையும் நான் இனி எவரிடத்திற் காண்பேன்; யாரை மகனேயென் றழைப்பேன்; பாவியாகிய என்னோடு சேர்ந்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் உயிர்விடுவதே நலமென்று நினைத்து இவ்வாறு நீ என்னை வருந்தச்செய் திறந்தனையோ; எனக்கொன்றுந் தோற்றவில்லையே; என்மனந் திடப்பட வில்லையே; நீ இறந்தாயென்று கேள்விப்பட்ட மாத்திரத்தி

லேயே நான் ஓடிவந்து உன்முகத்தில் விழிக்கக்கூடாத பாவியாயிருக்கின்றேனே; அந்தோ! நீ உயிர்பெற்றிருக்க இந்தச் சண்டாளியாகிய நான் இறக்கலாகாதா; உன்னைப் பெற்ற பிதா ஏதோ ஒரு சமயத்தில் என்னைக் கண்டு 'தேவதாசனெங்கே?' என்று கேட்டால் நான் அவருக்கென்ன சொல்வேனடா ஏந்தலே; நீ எல்லாச் சுகத்தையுமிழந்து என்னோடு வந்து சங்கடப்படுவதைப் பார்த்து நான் ஒவ்வொரு நாளும் ஓயாத்துயர்க்குள்ளாகி வருந்தினேனே; அவ்வாறு வருந்திய எனக்கு நீ உயிரோடிருந்தேனுஞ் சிறிது திருப்தியை யுண்டாக்காமல் இப்போது திடுமெனவிறந்து மேலும் துன்பத்தை அதிகப்படுத்திவிட்டாயே; இனி நான் என்ன செய்வேன்,"என்று பலவாறு புலம்பிக் கீழேவிழுந்து புரண்டாள்; தரையில் முட்டினாள்; மோதினாள்; கதறினாள்; பதறினாள்; கூறாத வார்த்தைகளை யெல்லாம் கூறினாள்; தலையி லடித்துக் கொண்டாள்; தயங்கினாள்; மயங்கினாள்; அப்போது அவளுடைய நாவுலர்ந்து போயிற்று; அழுதழுது கண்கள் சிவந்துபோயின; கண்ணீர் ஆறாகப் பெருகி வழிந்து அவளுடைய வஸ்திரமுழுமையும் நனைத்தது; மேனி கருகிற்று; மதிபோன்ற முகம் வாட்டமுற்றது; பேச்சும் தடுமாறிற்று; அவள் அப்போதடைந்த துன்பத்தைக் கண்டால், எப்பொழுதும் இரக்கமென்பதையே அறியாத கன்னெஞ்சரும் மனங்கரைந் துருகுவார்.

அப்படி அவள், பார்த்தோர் பரிதபிக்கும்படி தரையிற் கிடந்துருண்டு வயிற்றி லறைந்துகொண்டழுது புலம்புவதை அங்குநின்ற சிறுவர்கள் கண்டு மிகவும் மனமுருகி அவளைப் பார்த்து, "அம்மா! நீ அழவேண்டாம்; ஏதோ காலகதியால் உனக்கு இத்தீங்கு நேர்ந்துவிட்டது; உன் மகனுக்கு அற்ப ஆயுளேற்பட் டிருந்தபடியால் அவன் இத்தகைய இளம் பருவத்திலேயே இறந்துவிட்டான்; இனி நீ எவ்வாறு அழுது புலம்பினும் அவன் உயிர்பெற்று மீண்டுவரப் போகின்றானா? உன் மனத்தி லுண்டான விசனத்தை அகற்றிவிடு; விரைவில் உன் மகனைத் தேடியெடுத்துத் தகனஞ் செய்வதற்குரிய

வழியைத்தேடு; இராக்கால மாய்விட்டபடியால் அவனை நாய் நரிகள் இழுத்துச் சென்றாலுஞ் செல்லக்கூடும்; ஆதலால், நீ தாமதிக்காமல் உன்னை விலைக்கு வாங்கிய வேதியரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவனிறந்துகிடக்கு மிடத்திற்குச் செல்வாயாக," என்று தேறுதலான சில வார்த்தைகளைக் கூறினார்கள். அதன்மேல் அவள் சிறிது மனந்தேறி அழுவதை நிறுத்தி, "எல்லாம் விதிப்படியே நடக்கும்; நம் செபலால் ஆவதொன்றில்லை; இனி நாம் அழுது புலம்புவதால் என்ன பயன்?" என்று சிந்தித்துப் பின்னர் அந்தச் சிறுவர்களை நோக்கி, "பிள்ளைகளே! என்னுடைய புத்திரன் எந்தவிடத்தில் இறந்து கிடக்கிறான்?" என்று வினவினாள். அதைக் கேட்டவுடன் அவர்கள், "அம்மா! நாங்கள் சென்ற காட்டின் மத்தியில் ஒருபெரிய ஆலமரம் நிற்கின்றது; அந்த ஆலவிருக்ஷத்திற்குப் பக்கத்திலே வடக்குத் திசையில் தருப்பைப்புதர் செறிந்த மேடொன்றிருக்கின்றது; அந்த மேட்டுக்குத் தென்புறத்திலே உன் புத்திரன் இறந்து கிடக்கிறான்; நீ, நாங்கள் சொன்ன அடையாளங்களைப்பற்றிச் செல்வாயானால் அவனைக் காணுவாய்," என்று சொல்லிவிட்டுத் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

அதன்மேல் சந்திரமதி, தனக்கு அளவில்லாத விசனமுண்டாகியிருந்தும், தான் அழுதுபுலம்புவதைக் கண்டால் தன்னை விலைக்கு வாங்கிய வன்னெஞ்சனாகிய வேதியனும், அவனுடைய மனைவியும் கோபிப்பார்களென்று பயந்து அவ்விசனத்தை யெல்லாம் மனத்துள் அடக்கிக்கொண்டு வாய் திறந்து கூவியழாமல் மிகவும் மெய் சோர்ந்து, புத்திரனையெடுத்துத் தகனஞ் செய்பச் செல்வதற்குப் பிராமணனிடம் போய் உத்தரவு கேட்கவேண்டுமென்று கருதினாள். அவ்வாறு கருதிய அவள், தான் செய்யவேண்டிய வேலைகளிற் சில வேலைகள் செய்யப்படாமல் குறைவாயிருந்தபடியால், "இவற்றை நாம் செய்யாமற் சென்றால் வேதியர் உத்தரவு கொடுக்கமாட்டார்," என்று ஆலோசித்து விரைவில் அவ்வேலைகளையெல்லாம் செய்துமுடித்துவிட்டுப் பின்னர் ஆறுத்

துயரத்தோடு அந்தணன் வீட்டுக்குள்ளே புகுந்தாள். அப்படிப் புகுந்தவுடனே நெஞ்சிரக்கமற்ற அவ்வேதியன் சந்திரமதியை நோக்கி, "அடியே ஊழியக்காரி! வேலைகளை யெல்லாம் செய்து முடித்துவிட்டாயா? இங்கே எதற்காக வந்தாய்? என்ன விசேஷம்," என்று படபடப்பாக வினவினன். அப்படி அந்த வேதியன் பேரிடிபோல் முழங்கிக் கேட்கவே சந்திரமதி கருடனைக் கண்ட அரவம்போல் நெஞ்சந் திடுக்கிட்டு, மேனிநடுங்கி, ஒரு கையால் வாயை மூடிக்கொண்டு மிகவும் மரியாதையாக அவனை ஸ்தோத்திரஞ் செய்து, பின்னர் சுடுகாடுபோன்ற அவனுடைய கொடுமையான முகத்தை நோக்கி, "சுவாமி! காட்டிற்குச் சமித்துக்கள் கொண்டுவரச் சென்றிருந்த என்னுடைய புத்திரன், அரவந் தீண்டியதனு லிறந்து போய்விட்டான்; ஆதலால், நான் அக்காட்டிற்குச் சென்று அவனை யெடுத்துத் தகனஞ் செய்தற்கு எனக்குத்தரவு கொடுத்தருளவேண்டும்," என்று கூறினுள். அவ்வாறு கூறியவுடனே அவ்வேதியன் எட்டுணையும் மனத்தில் இரக்கமின்றி மிகவுங் கோபங்கொண்டு புலிபோற் சீறிப் பற்களை நெறநெறவென்று கடித்துக்கொண்டு, சந்திரமதியின் நெஞ்சந் திடுக்கிடும்படி அவளை உக்கிரமாய்ப் பார்த்து, "அடியே வஞ்சனை நிறைந்த மகா மாயக்காரி! நீ மக னிறந்தானென்று சாக்குச் சொல்லிச் சென்று என் வேலைகளை யெல்லாம் செய்யாமற் கெடுத்துவிடப் பார்க்கின்றுயோ; உன் மக னிறந்தால் உனக்கென்ன நஷ்டம்? அதிக விலைகொடுத்து வாங்கின எனக்கன்றோ பொருள் நஷ்டமாய்விட்டது; நானல்லவோ அவனிறந்ததைப்பற்றி வருத்தப்படவேண்டும்; அவ்வாறு நஷ்டப்பட்ட நானே வருத்தப்படாம லிருக்கும்போது நீ எதற்காக வருந்துகின்றுய்? நான் பணங்கொடுத்து உன் மகனை விலைக்கு வாங்கியபின் உனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பிருக்கின்றது? அவனு லேற்படும் நன்மை தீமைகளை அடைதற்குரியவன் நானே; அவனிறந்துபோய்விட்டால் அவனையெடுத்துத் தகனஞ் செய்யவேண்டிய கடமை என்னுடையதே; நான் இஷ்டப்பட்டால் அவனையெடுத்துத் தகனஞ்செய்வேன்;

இல்லாவிட்டால் அவனுடைய தேகம் நாய் நரிகளுக் கிரையா கும்படி அவனை அவ்விடத்திலேயே போட்டுவிடுவேன்; நீ அவனைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கவேண்டாம்; ஐயோ! நான் அவனுக்காகக் கொடுத்த பணமெல்லாம் போய்விட்டதைப் பற்றி என் வயிறெரிகிறதே; இந்த வயிற்றெரிச்சலோடு நீ என்னுடைய வேலைகளையும் கெடுத்து எனக்கு மிகுந்த நஷ்டத்தை உண்டாக்கப்பார்க்கிறாய்; அடி பாவி! எனக்கு மேன் மேலும் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே; எனக் கெதிரில் நில்லாமல் சீக்கிரம் போய் வேலைகளைச் செய்; ஐயோ! இவ்வளவு நேரம் வீணாய்ப்போயிற்றே; வேலைசெய்தற்குச் சீக்கிரம்போ! போ !!" என்று கடிந்து பேசி அவளைத் துரத்தினான்.

அப்போது சந்திரமதி, "ஐயோ! எனக் கிப்படிப்பட்ட காலம் வந்ததே," என்று மனங் கலங்கி விசனம் பொங்கிக் கண்ணீர் அருவிபோ லொழுக அழுது அந்தப் பிராமணனை நோக்கி, "ஐயரே! என் புத்திரன் உமக் கடிமையா யிருந்தாலும் அவன்மீ தெனக்கேற்பட்ட புத்திரவாஞ்சை போய்விடுமா? அவன் காட்டி லிறந்துகிடக்கின்றானென்று சொல்லக் கேட்டவுடன் பத்து மாதமுஞ் சுமந்து பெற்ற என் வயிறு பற்றி யெரியாமலிருக்குமா? அவனைப் பார்க்காதிருக்க என் மனஞ் சகிக்குமா? நான் எவ்வளவு தாழ்மைப்பட்டிருந்தாலும் நீர் இத்தகைய விஷயங்களைத் தடை செய்வது நீதியாகாது; என்னுடையபரிதாபமான நிலைமையைப் பார்த்தால் விரோதிகளும் மன மிரங்குவார்; நீர் என்னை விலைகொண்ட வேதியராயிருந்தும் என்மீ திரக்கமுறாதிருப்பது ஆச்சரியம்! அவனை யெடுத்துத் தகனஞ் செய்யாமல் அவ்விடத்திலேயே போட்டுவிடுவது நியாயமாகுமா? இந்த வழக்கம் எங்கேனு முண்டா? எத்தகைய கடின சித்த முடையவர்களும் இந்த வார்த்தையைக் கூறமாட்டார்கள்; உலகத்தில் எவரேனும் நீர் சொல்லும் இவ்வாக்கியத்தைக் கேட்டால் மிகுந்த ஆச்சரிய மடைவார்கள்; சுவாமி! என்மீது கிருபை செய்யும்; உம் முடையவேலைகளில் எதுவுங்குறைவில்லை; எல்லா வேலைகளை யும் நான் செய்து முடித்துவிட்டேன்; நீர் தயவுசெய்து இந்

தப் பாவியாகிய எனக்கு உத்தரவு கொடுத்தால் இப்பொழுதே சென்று புத்திரனை யெடுத்துத் தகனஞ் செய்துவிட்டு விடிவதற்கு முன்னமே அடியாள் இங்குவந்து சேருவேன்; நீர் இவ்வாறு செய்வீரானுல் உமக்கு மெத்தப் புண்ணியமுண்டு," என்று சொல்லி அவனுடைய பாதங்களில் விழுந்து புலம்பினுள்.

அதன்மேல் அந்தப் பார்ப்பான் சிறிது மனதிரங்கி அவளை நோக்கி, "பெண்ணே! நீ மிகவும் அழுது புலம்புகிறபடியால் உன்னிஷ்டப்படியே உனக்கு உத்தரவு கொடுக்கின்றேன்; நீ விரைந்து சென்று உன் புத்திரனை யெடுத்துத் தகனஞ் செய்துவிட்டுப் பொழுதுவிடிவதற்குள் வந்து சேருவாயாக; நாளைக்கு என் வீட்டில் அதிகமாக வேலைக ளிருக்கின்றன; ஆதலால், நீ தாமதிக்காதே," என்று சொல்லி அவளுக்கு உத்தரவு கொடுத்தான்.

சந்திரமதி, இறந்த புத்திரனைத் தேடிச் செல்லல்.

மேற்கண்டவாறு உத்தரவு கொடுத்தவுடனே சந்திரமதி சிறிதும் தாமதிக்காமல் அப்பொழுதே விரைந்து புறப்பட்டுக் காவலைக்கொண்ட காசி நகரத்தைத் தாண்டிச் சென்றுள். அப்படிச் செல்லுங்காலத்தில் இருள் அதிகரித்துச் சிறிதும் வழிதெரியாம லிருந்தது. அவள் செல்லும் மார்க்கமானது எத்தகைய தைரியமுடையவர்களும் அஞ்சத்தக்கதாயிருந்தது. அப்படி யிருந்தும் சந்திரமதி தன் புத்திரனைக் காணவேண்டுமென்னும் ஆவலால் சிறிதும் அச்சங் கொள்ளாமல் விரைந்து நடந்தாள். அங்ஙனம் விரைந்து செல்லும்போதே அவளுக்கு மேன்மேலும் வருத்தம் அதிகரித்தபடியால் தேம்பித் தேம்பியழுது, "பாவியாகிய யான் பெற்ற புதல்வனே!" என்று பன்முறை கூவினுள்; அடியெடுத்துவைக்குந்தோறும் கற்களிலும்,மேடுகளிலும் காலிடறிப் பதைபதைத்துக் கீழேவிழுந்தாள்; அப்படி விழுந்தவுடனே பதறியெழுந்து, "ஐயோ மகனே! என் துன்பத்தைக் கண்டு எனக்கு இச்சமயம் துணைசெய்வா ரொருவரு மில்லையே,"

என்று சொல்லி மிருதுவான தன்முகத்திலறைந்துகொண்டு தாவிப்போய் மீண்டும் பலவிடங்களில் விழுந்தாள்; நீலமலர் போன்ற அவளுடைய கண்களிலே நீர்சிந்தக் கதறினாள். அப்படி அவள் கதறியும் பதறியும் அழுது காலிடறி வீழ்ந்து சிறிது தூரஞ் சென்று பின்னர் உயிரைத்தேடிச் செல்கின்ற உடம்புபோலத் தன் மகனைத் தேடிக்கொண்டு அவனிறந்து கிடக்கும் காட்டிற்குள்ளே புகுந்தாள். அந்தோ! அவள் காட்டிற் பட்டபாடு எவராலும் அளவிட்டுச் சொல்லுதற் கியலாது; மேற்கூறியபடி அவள் சென்ற அக் காட்டினிடையே பற்பல விடங்களில் தரை ஈரமாயிருந்தபடியால் அவ்விடங்களில் அவள் செல்லும் வழியெல்லாம் அவளுடைய பாதங்கள் தரையிற் பதிந்ததனு லேற்பட்ட பள்ளங்களில் அவள் கண்களினின் றொழுகிய கண்ணீர்த்துளிகள் சிந்தி நிறைந்தன; அங்கே அடர்ந்திருந்த முட்செடிகள் அவளுடைய கூந்தலையும் வஸ்திரத்தையும் பற்றி யிழுத்து உடம்பிற் கீறிப் பற்பல விடங்களிற் காயமுண்டாக்கின; அதனால் அவளுடைய தேகத்தில் இரத்தம் பெருகி யொழுகிக் கால்களின் வழியாக வடிந்து அவ ளடிவைத்த விடமெல்லாஞ் சிந்தி நிறைந்தது. அப்படி அவளுக்கு அவ்விருளில் சகிக்க முடியாத துன்பங்கள் நேர்ந்தும் அவள் அவற்றால் இளைப்படைந்து நிற்காமல் வருங் கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண்டு முன்னிலும் அதிகமாக விரைவுகொண் டோடினாள். புத்திரவாஞ்சையால் பின்னரும் மனமுருகிக் கரைந்தாள்; உடம்பெல்லாங் கருகி வாடினாள்; அதன்மேல் அவள் அவ்வித வாட்டத்தோடு மேலும் சிறிது தூரம் நடந்து மிக்க பிரயாசையுடன் முட்செடிகள் செறிந்த விடங்களையெல்லாங் கடந்து தன் மகன் இறந்துகிடக்கு மிடத்திற்குப் பக்கத்தில் அவன் விறகுச் சுமை இறக்கி வைக்கப்பட்டிருந்த ஆலமரத்தைக் கண்டாள். அதைக் கண்டவுடனே, "இனி என் மகனைக் காண்பேன்," என்று துணிவு கொண்டாள். அதன் பின்பு அவள் மிக்க ஆவலுடனே அந்தச் சிறுவர்கள் சொன்ன குறிப்பின்படியே ஆலமரத்திற்குப் பக்கத்திற் சென்று பார்த்தாள்.

அவ்வாறு பார்த்தபோது அந்தச் சந்திரமதி, பேய்களும், பூதங்களும், கழுகுகளும், நரிகளும், நாய்களும் சுற்றிக் கூடியிருக்க, அக்கூட்டத்தி னடுவே சவமாய்க் கிடந்த தன் புத்திரனைக் கண்டாள். அந்தோ! அவள் அங்ஙனங் கண்டமாத்திரத்தில் அங்குக் கூடியிருந்த பேய்கள் முதலிய யாவும் பயந் தொதுங்கும்படி ஓவென்று கதறிக்கொண்டு கீழே விழுந்து மூர்ச்சித்தாள். சிறிதுநேரம்வரை பிணம்போற் கிடந்தாள். பின்னர் மூர்ச்சை தெளிந்தெழுந்து முகத்திலும் மார்பிலும் கரத்தா லறைந்துகொண்டு அப்புத்திரன்மீது வீழ்ந்து புரண்டுருண்டழுது மிகுந்த வயிற்றெரிச்சலோடு பதறி அவனை வாரியெடுத்து மடிமேல் வைத்து அவன் மேனியிற் படிந்திருந்த மண்ணைத் துடைத்து தன் கன்னத்தோடு அவன் கன்னத்தை வைத்துப் பன்முறை அவன் தேகத்தைத் தழுவித் தன்னுடைய கண்களிலிருந் தொழுகும் நீரானது அவனுடைய தேகத்தி லொழுகி அதிற் படிந்திருந்த மாசை நீக்கத் தலை குனிந்து அவனது மதிமுகத்தை நோக்கித் துடித்துப் புலம்பத் தொடங்கி,

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

‘ “பனியா னனைந்து வெயிலா லுலர்ந்து
பசியா லலைந்து முலவா
தனியாய வெங்க ணரவா லிறந்த
வதிபாவ மென்கொ லறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியாரை நம்பி யுயிர்வாழ்வ மென்ற
னிறையோனும் யானு மவமே.

நிறையோசை பெற்ற பறையோசை யற்று
நிரையாய் நிறைந்த கழுகின்
சிறையோசை யுற்ற செடியூ டிறக்க
விதியா ரிழைத்த செயலோ
மறையோ னிரக்க வளநா டனைத்தும்
வழுவா தளித்த வடிவே
விறையோ னளித்த மகனே! யுனக்கு
மிதுவோ விதித்த விதியே.

வானின் றிழிந்து சொரிகின்ற தாரை
மழைபோல வீழ விழிநீர்
ஊனின் றி மேனி யுதிரங்கள் சிந்த
வுயிரின் றி வெம்பு தழலின்
மேனின்ற வெந்த தளிர்போல் மயங்கி
விதியாரை நொந்து தனியே
யானின் றிரங்க வேனென்ப தில்லை
யிதுவோவு னீதி மகனே !

செங்கோ லறத்தின் முறையே செலுத்து
திறலோ ரெவர்க்கு முரவோர்
வெங்கோப யானை விறன்மன்னர் நம்மை
விடுவிக்க வெண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கும்
வதன மகிழ்ந்த பரிவா
லெங்கே யெனுசை மகனென் றுரைக்கி
லெதிரேது சொல்வன் மகனே !

நீராழ வாவி செறிநா டனைத்து
நிறைமா தவர்க் குதவினும்
பாராளு நீர்மை தொடர்பற்ற தன்று
படியாளு மெந்தை முடியில்
காராள ரோர்கள் கடலோசை யோய்வில்
கன்னோசி நாடதனை மேல்
ஆராள வல்ல ரவமே வனத்தி
லாவா லிறந்த மகனே !

நல்லோர் வகுத்த முறையா மறங்க
ளெட்டி லொன்று குறையேம்
இல்லோரை யற்ப மிகழோ மிருக்கு
மிறைபன் றி யேற வுரவேம்
சொல்லோ மறுத்து முரையோ முரைத்த
துறவோர்கள் புத்தி கடவேம்
எல்லோர் தமக்கு மினிதே விளைப்ப
மேதாக வந்த திதுவே.

மறைநீதி யுற்ற புறநா டழித்து
வருசேனை யாள்வ தறியேம்

மறைநீதி முற்று முணரா வமைச்சை
யணிவாயில் வைத்து மறியேம்
குறையே யிழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்து மறியேம்
இறையே! தவத்தின் விளைவே யெமக்கு
மிதுவோ விதித்த விதியே.

கனமுந் தருக்கள் குலமுந் தரித்த
காமும் பெருத்த வுரமும்
தினமுஞ் சிறக்கு முகமுந் தரித்த
சிகையுங் கிடக்கு முறைகண்
டினமுந் தரித்த துயிரான பாவி
யிறவாம லென்றன் மகனே!
மனமுந் தரிப்ப திலைநொந்து பெற்ற
வயிறுந் தரிப்ப திலையே.

பாவாதி கட்கு மிகவே விளைத்த
படிபோ லுளத்தி லறமே
விரவாத துட்ட முனிகௌசி கர்க்கு
வினையே யிழைத்த குறைபோற்
காவே பிடித்து வறியே னளித்த
களிறுவி செற்ற கடுவாய்
அரவே யுனக்கு முளதோ பகைக்க
வளியே னிழைத்த வினையே.

என்னுய கன்றன் மணிமார்பி லேறி
விளையாடு கின்ற வெழிலோய்!
முன்னாள் விளைந்த கனன்மூழ்க வெம்மின்
முதலே நடந்த மதலாய்!
செந்நாய் திரண்டு செறிகா னிருந்து
தெளியா திரங்கு மெனைநீ
அன்னாய் வருந்த லையெனாத துன்ற
னறிவுக் கடாது மகனே!

மறவா ளெயிற்று மணிமா சுணத்தின்
வலியா லிறந்துள வேனோ
டிறவா திருக்கு மதிபாவி தன்னோ
டுறவே தெனக் கருதியோ

திறவாய் சிவந்த கனிவா யுரைத்தல்
செய்கிலாய் முகத்து விழியாய்
பிறவாத நித்த னடியே வழுத்து
பெருமா னளித்த மகனே!

வடியேறு வெற்றி நெடுவேன் மலர்க்கை
மகனே டிறந்து மடியாக்
கொடியேன் முகத்தில் விழிபார் முனிக்கு
வளநா டளித்த கொடையார்
இடியே றடர்த்த மாமாகி மண்ணி
னிடையே யுழைத்த லழகோ
அடிபேனை யொக்க முடியா திருத்த
லஷரியாய மிக்க யமனே!'

அரவத்தாற் கடிக்கப்பட்டு அதன் விடத்தினாலே நோய் அதிகரிக்கச் சகிக்காமல் தனியே தரைமேற்கிடந் துயிர் விட்ட என் புத்திரனே! நீ தினந்தோறும் பனியினாலே நனைந்து வெயிலாலே காய்ந்து பசியினாலே வருந்தி யலைந்தும் அவற்றா லுயிர்விடாமல் நிலைத்திருந்து, இப்போது கொடுஞ் செய்கையையுடைய பாம்பினா லிறந்தனையே; இவ்வாறு இறத்தற்கு மிகுதியாக எற்பட்ட பாவமியாதோ? ஐயோ! நான் ஒரு பாவத்தையுஞ் செய்தறியேனே; அடா அப்பனே! என் நாயகரும், நானும் உன்னையே நம்பி யிருந்தோமே; அப்படி யிருக்க நீ இப்போ திறந்துவிட்டபடியால் இனி நாங்கள் உலகத்தில் எவரை நம்பி உயிர் வாழ்வோம்? உன்னை யிழந்து நாங்கள் உயிர் வாழும் வாழ்க்கையானது இனி வீண் வாழ்க்கையே யாகும்; வேதசாஸ்திர பயிற்சியுள்ள விசுவாமித்திரர் விரும்பிக்கேட்க வளம் பொருந்திய நாட்டை யெல்லாம் சொன்ன வார்த்தை பிசகாமல் மன மொப்பிக் கொடுத்த கூர்மை தங்கிய வேலாயுதத்தையுடைய என் மன்னர் பெற்ற மகனே! நீ, நிறைந்த ஓசையையுடையசாப்பறைமுழங்குதலின்றி வரிசையாக நிறைந்த கழுகுகளின் சிறையோசை மிகுந்த இச்செடிகளினூடே யிறந்து கிடக்கின்றாயே; இப்படி யிறத்தற்குக் காரணம் நான்முக னேற்படுத்தின விதியோ? எல்லாச் சிறப்பையும் பெறத்தக்க புதல்வனே! இத்தகைய விதி

தீவினை யுடையோர்க்கன்றோ ஏற்படவேண்டும்? நற்குண சீலனாகிய உனக்கும் இந்த விதியையோ நான்முகன் விதித்தான்? அப்படி அவன் விதித்த விதிச்செயல் இதுதானோ? நான் செய்த மாதவத்தா லுதித்த என் மகனே! உன்னுடைய விசனத்தால் மேகத்தினின்றும் மிறங்கிச் சொரிகின்ற மழைத்தாரைபோல என் கண்களில் நீர் சொரிய, என் மேனி ஊனற்றதாகி யிளைத்து உதிரத் துளிகளைச் சிந்த, நான் உயிரில்லாத வெற்றுடம் புடையவள்போலாகிச் சுடுகின்ற நெருப்பிற் சிக்கி வெந்த தளிரைப்போல முகங்கருகி மயங்கி, இத்தகைய விதியை யேற்படுத்திய நான்முகனை வெறுத்து எவருந் துணையின்றி இக்காட்டில் தனித்திருந்து மனமுருகிப் புலம்பி யழுதுகொண்டிருக்க, நீ என்னை நோக்கி, 'அம்மா! ஏன் அழுகின்றாய்?' என்று ஒருவார்த்தையேனுங் கூறா திருக்கின்றாய்; உன்னுடைய நீதி இதுதானோ? தாமரை மலர்போல் விளங்குந் திருமுகத்தையுடைய என் செல்வனே! தருமத்தின் ஒழுங்குப்படியே செங்கோல் நடத்தும் திறமை வாய்ந்தவரும், எவரினும் மேலான வலிமையையுடையவரும், வெவ்விதான கோபம் பொருந்திய பட்டத்துயானையை யுடையவரும், மிகவும் வெற்றிபொருந்திய மன்னருமாகிய உன் தந்தை நம்மை, விலைப்பட்டதினின்றும் விடுவித்தற்கு இப்போது ஏதுவொன்று மில்லையாயினும், பின்னொரு காலத்தில் தெய்வச்செயலால் ஏதேனு மேதுவேற்பட்டு நம்மை விடுவிக்கவெண்ணி வருவாராயின் புதல்வனெங்கேயென்று கேட்பாரே; அப்படி அவர் வருங் காலத்தில் மன மகிழ்ந்த அன்போடு, 'என் விருப்பந் தங்கிய மகன் எங்கே?' என்று என்னிடங் கேட்டால் நான் அவருக்கெதிர் வார்த்தை யாதுரைப்பேன்? வீணாக இந்த வனத்தில் பாம்பின் விஷத்தா லிறந்த பாலகனே! ஆழமான நீரினையுடைய தடாகங்கள் செறிந்த கோசலநாட்டினைத்தையும், உன் தந்தை சிறந்த தவத்தினையுடைய விசுவாமித்திருக்குக் கொடுத்துவிட்டாலும், நீ வேதியருக் கடிமைப்பட்டிருந்தாலும் உலகத்தை யாளும் சம்பந்தம் உன்னைவிட்டு நீங்கிப்போய்விட

வில்லை; பூமியை யாளும் என் தந்தை காலஞ் சென்றால், காரா ளர்கள் ஏர்களைச் செலுத்துமோசை எப்பொழுது மோயாத சிறப்பினையுடைய கன்னோசி நாட்டை இனிமேல் ஆளவல்ல வர் உன்னை யன்றி எவரிருக்கின்றனர்? யாருமில்லையே; எப் படியாவது நீ விடுதலை யடைந்து அந்நாட்டையேனு மாள் வாயே; அதற்குள் நீ இறந்துபோய்விட்டனையே; குழந்தாய்! நாம், நல்லபெரியோர்ஏற்படுத்திய ஒழுங்கானமுப்பத்திரண்டு தருமங்களுள் ஒன்றேனும்குறையாமல்அவற்றை எப்பொழு தும் செய்வோம்; கையி லொன்று மில்லாமல் யாசிக்க வந்த தரித்திரரை அற்பமாக நினைத்து இகழமாட்டோம்; குடிகள் வழக்கமாகச் செலுத்தும் பகுதியையன்றி அதினும் அதிக மாகப் பெற விரும்பி அவர்களைக் கஷ்டப்படுத்தமாட்டோம்; ஒருவருக்குச் சொன்ன உறுதி வார்த்தையை மறுத்துப் பின் னால் பொய் கூறமாட்டோம்; முனிவர்கள் உரைத்த புத்தி யைக் கடக்கமாட்டோம்; உலகத்தில் எல்லோருக்கும் இனி மையான காரியத்தையே செய்வோம்; அப்படி நடந்திருக்க இந்த விதி எவ்விதமாக வந்தது? நன்மைக்குத் தக்க பய னைத் தரும் தெய்வமும் வஞ்சனை செய்ததே! ஓ கடவுளே! நாங்கள், வேத வொழுங்கு நிறைந்த புறநாடுகளை நியாய மில்லாமல் அழித்து வரும் அக்கிரமம் பொருந்திய சேனை களை வைத்து ஆளுந்தொழிலை யறியமாட்டோம்; சாஸ்திர வொழுங்குகளனைத்தையும் கற்றுணராத அமைச்சரை அழகு பொருந்திய எங்கள் ஆண்மனை முன்றிலிலே தொழிற் செய் யும்படி வைத்தறியோம்; எப்பொழுதும் குற்றங்களையே செய்து தீவினைகளை யுண்டாக்கிய குடிகளை எங்கள் நாட்டில் வைத்தறியேம்; இத்தகைய செய்கைகளையுடைய எங்களுக்கு விதித்த விதி இதுதானோ? நாங்கள் செய்த தவத்திற்குரிய பயனு மிதுவோ? என்றன் சுதனே! பிரதிப் பிரயோசனத் தை விரும்பாமல் உலகத்திற்குப் பேருதவி செய்யும் மேகத் தின் செய்கையையும், வேண்டியவற்றை நல்கும் தேவதருக் களின் தன்மையையும் கொண்ட உன் கையும், விசாலித்த மார்பும், தினந்தோறும் சிறந்து அழகுடன் விளங்கும்

முகமும், அழகைப்பெற்ற சிகையும் சோர்ந்து தரையிற் கிடக்கின்றன; இவ்வாறு கிடக்கும் விதத்தைக் கண்டும் பாவியாகிய என்னுயிரானது இறவாமல் இன்னும் நிலைபெற்றிருக்கின்றதே; அந்தோ! உன்னுடைய நிலைமையைப் பார்த்து என் மனமும் சகிக்காமல் வேதனை யடைகின்றதே; பத்து மாதமும் உன்னைச் சுமந்து வருந்திப் பெற்ற என் வயிறுஞ் சகிக்காம லெரிகின்றதே; தருப்பைக்குள் மறைந்திருந்து ஏழையாகிய நான் பெற்ற இளங்களிறுபோன்ற புத்திர னுயிரைக்கொன்ற விஷம் பொருந்திய வாயையுடைய அரவமே! ஒரு சமயவாதிகள், மற்றொரு புறச்சமய வாதிகள்மீது காரணமில்லாமல் பகைகொண்டு அவர்களுக்கு மிகுந்த துன்பங்களைச் செய்யும் விதம்போல மனத்தில் தருமசிந்தனை எள்ளளவு மில்லாமல் எங்களுக்குக் காரணமின்றிப் பல துன்பங்களைச் செய்த துஷ்ட செய்கையையுடைய கௌசிக முனிவருக்குத் தீவினையை யடைந்தவர்களாகிய நாங்கள் எக்குறைவும் செய்ததில்லை; மிகுந்த நன்மையே செய்தோம்; அப்படிச் செய்தும் அவர் அந்த நன்மையை யெல்லாம் தீமையாகக் கருதி எங்களுக்குத் துன்பங்களைச் செய்தார்; நாங்கள் அவர்பாற்செய்த நன்மை யெல்லாம் தீமையாய்விட்டது; அவ்வாறு அவர்க்குச் செய்த குற்றத்தைப்போல எளியவளாகிய நான் நீ பகைக்குமாறு உனக்குச்செய்த தீவினை ஏதேனுமுண்டோ? அவர் தீமையென்று நினைக்கத்தக்க நன்மையான காரியத்தைச் செய்ததுபோல உனக்கு நான் ஒரு நன்மையான காரியத்தையுங் கூடச் செய்யவில்லை; அப்படியேதேனு மொரு நன்மையான காரியத்தையாவது செய்திருந்தாலன்றோ நீயும் அதனைத் தீங்காகக் கருதிப் பகைகொண்டு என் மகனைக் கொல்லலாம்; ஒன்றுமே செய்யாமலிருக்கும்போது இக்கொடுஞ் செய்கையைச் செய்தனையே; இது நீதியாகுமா? என்நாயகரது அழகுபொருந்திய மார்பிலே ஏறி விளையாடுகின்ற சிறப்பினையுடைய என் புத்திரனே! முன்னாளிலே நாம் இந்நகருக்கு வரும்போது வழியில் மூண்டெரிந்து நம்மைத் தடைசெய்த நெருப்பிலே என் நாயக

ரும் நானும் சத்தியகீர்த்தியும் விழச்செய்றகாலத்தில் அதில் வீழுதற்கு எங்களைக் காட்டினும் முந்தி நடந்த புதல்வனே! செந்நாய்கள் திரண்டு கூடிச் சஞ்சரிக்கும் இக்காட்டில் தனித்திருந்து வருந்தித் தேறுத லடையாமல் அழும் என்னை நோக்கி, 'அன்னையே! வருந்தாதே' என்று ஒருவார்த்தையேயனுங்கூறிஎன்னைத்தேற்றுதிருக்கின்றாய்; இவ்வாறு நீமௌனமாயிருப்பது உன் அறிவுக்குத் தகாது; பிறப்பில்லாத கடவுளுடைய அடிகளைப் துதித்து வணங்கும் நற்குணத்தையுடைய என்நாயகர் பெற்ற அருமை மைந்தனே! நீ, 'வெற்றிபொருந்திய வாளாயுதம்போன்ற பற்களையுடைய அரவத்தின் விஷ வலிமையால் இறந்த என்னோடு இறவாதிருக்கும் என் அன்னையாகிய பாவியுடனே இனிமேல் எனக்கென்ன உறவிருக்கின்றது? இவளுடைய நேயம் எனக்குச் சிறிதும் வேண்டியதில்லை,' என்று கருதியோ சிவந்த கனிபோன்ற வாயைத் திறவாமலும், ஒரு வார்த்தையேனுங் கூறாமலும், என்முகத்தில் விழிக்காமலு மிருக்கின்றாய்? அனியாயமிகுந்த யமனே! கூர்மைதங்கிய வெற்றிவேலைத் தாங்கும் மலர்போன்ற கையையுடைய என்மகனோடு இறந்தொழியாத கொடியேனாகிய என்னை, விசுவாமித்திரருக்கு வளம்பொருந்திய நாட்டைக் கொடுத்த கொடைவள்ளலாகிய என் நாயகர் ஒரு சமயங் காணில், 'மகாபாவி,' என்று நிந்தித்து என் முகத்தில் விழிக்கமாட்டார்; அப்படி அவர் நிந்திக்கற் கேதுவாய் நான் உயிரோடிருந்து இடியினாலே மோதப்பட்டு வீழ்ந்த மரம் போல மண்ணிடையில் வீழ்ந்து வருந்திக்கொண்டிருத்தல் அழகாமோ? அடியேனையும் என் மகனோடு சேர்த்து நீ கொல்லாதிருத்தல் மிகுந்த பாவமாம்; ஐயோ! இனிமேல் இந்தப் பாதகி என்ன செய்வேன்? எப்படி மனந் தேறுவேன்?" என்று அத் தேவதாசனை விளித்தும், அரவத்தை வெறுத்தும், அரசனை நினைத்தும், தெய்வத்தை நொந்தும், யமனைப் பழித்தும், பற்பல துக்கமான வார்த்தைகளைக்கூறி நெடுநேரம்வரை அழுது வருந்தி அவனோடு உயிர்விடத் துணிந்தாள்.

சந்திரமதி மகனைத் தூக்கிச் சுடுகாட்டிற்குச் செல்லல்.

அவ்வாறு பிரலாபித்து உயிர்விடத் துணிந்த அவள் சிறிது நேரம் ஆலோசித்து அதன்மேல், "நாம் இப்போது புத்திரசோபத்தால் வருந்தி உயிர் விடுவோமானால் இவனை யெடுத்துக்கொண்டு போய் மயானத்திற் சேர்த்துத் தகனஞ் செய்தற்கு உரிய மனித ரொருவருமில்லை; அன்றியும், நாம் விடியுமுன் வந்துவிடுவதாக நம்மை விலைக்கு வாங்கிய வேதியருக்குச் சொல்லி வந்தோம்; அந்த வார்த்தைக்கும் பழுதுண்டாகும்; சொன்ன வார்த்தை பிசகாமல் நாம் சொல்லி வந்தபடி செய்து அங்குச் செல்லுதலே தகுதியாம்; நம்மை விலைகொண்ட வேதியரோ நமக்கென்ன தீங்கு நேரினும் சிறிதும் மனதிரங்கமாட்டார்; அவருடைய மனைவியோ அவரைக் காட்டிலும் மிகவும் பொல்லாதவள்; இன்னும் அவ்விருவரும் மிகக் கோபமுடையவர்கள்; நாம் சொல்லியபடி விடிவதற்கு முன்னே அங்குச் சேராமற்போனால் அவர்கள் நமக்கு மிக்க தண்டனை புரிவார்கள்; ஆதலால், விரைவில் இவனைக் கொண்டுபோய்ச் சுடுகாட்டில் தகனஞ் செய்துவிட்டுப் போகவேண்டும்; எல்லாம் விதியின்பயன்; நாம் வருந்தி உயிர்விடுவதால் பயனொன்று மில்லை," என்று தெளிந்து உடனே தன்னுடைய புத்திரனை யெடுத்துத் தோள்மீது சேர்த்தணைத்துக்கொண்டு மயானத்தை நோக்கிச் சென்றாள். அப்படிச் சென்ற அவள், தேவதாசனைப் பிடுங்கித் தின்ன விரும்பிக் காட்டிலும் மேட்டிலும் தனக்கு முன்னே செந்நாய்கள் திரண்டுநின்று தொடரவும், அந்த நாய்களுக்கு முன்னே தேவதாசனை மூக்கினுற் பற்றியிழுத்தற்குப் பல கழுகுகள் பறந்துவந்து மோதவும், 'நீ இந்தப் பிணத்தை எங்களுக் கிரையாகப் போட்டுவிடு! போட்டுவிடு!!' என்று சொல்லிப் பல விகார வடிவமுள்ள பேய்கள் பின்தொடரவும், 'நீ இந்தச் சிறு சவத்தைக் கொண்டுபோகாதே; எங்களுக்குணவாகும்படி இதனைப் போட்டுவிடு,' என்று கொடுமையான சில பூதங்கள் சூழ்ந்து நெருங்கவும், தேவதாசனைப் பிடுங்கிக்கொண்டு போவதற்குப் பல நரிகள் பக்கங்களில்

வந்து தாவிக் குதிக்கவும், அவிழ்ந்து தொங்குகிற, தன் கூந்தலையும், கிழிந்த வஸ்திரத்தையும் காட்டிலுள்ள முட்களும், மாறுகளும் பற்றியிழுக்கவும் பல கஷ்டங்களையும் பயத்தையு மடைந்து, வழியெல்லாம் முட்கள் நிறைந்து காலிற் பாய்ந்து வருத்துவதான அக்காட்டைக் கடந்து நெடிதான சுடுகாட்டிற்குப் பக்கத்திலே போய், அந்த மயானத்தில் பிணங்களை வைத்து எருவடுக்கித் தீமூட்டித் திரும்பிச் செல்லும் பறையர்கள் பேசும் இரைச்சலாலும், அந்தப் பிணங்களின் தலைகள் பிளந்து வெடிக்கிற பெரிய சத்தத்தினாலும், பிணங்களினுடைய கொழுப்புகள் சுறுசுறுவென்று கருகி நாறுகிற புலால் நாற்றத்தினாலும், பிணங்களிற் பற்றியெரியும் நெருப்புச்சுவாலைகளின் உயர்வாலும், பேய்க்கூட்டங்கள் மிகவுஞ் சந்தோஷித்துக் கூத்தாடுகிற சத்தத்தினாலும், நெருப்புப் பொறிகள் மிகுந்து சிதறுவதாலும், மிகுந்த புகை கிளம்புவதாலும், பல நாய்க்கூட்டங்கள் ஒன்றோடொன்று கோபங்கொண்டு குலைக்கும் ஆரவாரத்தாலும் அவ்விடமே சுடுகாடென்று நிச்சயித்து அந்தச் சுடுகாட்டிற்குட் போய்ப் புகுந்தாள்.

அவ்வாறு புகுந்தவுடன் அந்தச் சந்திரமதி, பிணங்களை வைத்தெரிக்கு மிடத்தைக் கண்டாள். அங்ஙனங் கண்டவுடனே, 'இதுதான் நம் புத்திரனை யெரித்தற்குரிய ஈமம்,' என்று மனதி லெண்ணி, அங்கே மயான காவலன் அனுமதியின்மேல் பிணஞ் சுடவேண்டுமென்னும் வழக்கத்தை யறியாதவளாய்த் தோள்மீது கிடந்த தன் புத்திரனை யிறக்கி, 'தெய்வமே இவனைக் காக்கக்கடவது,' என்று ஓரிடத்தில் தெய்வத்தின் காவலில் அவனை வைத்துவிட்டு, அவனைச் சுடும்பொருட்டுத் தானே விரைந்தோடி முன்னே எரிக்கப் பட்ட பிணங்களுக்கு அடுக்கப்பட்டு வெந்து தீய்ந்து கிடந்த குறைக்கொள்ளிக்கட்டைகளை யெல்லாந் தேடியெடுத்துச் சேர்த்துக்கொண்டு வந்து சுடலையில் வைத்தடுக்கி உடனே பக்கத்தில் வெந்துகொண்டிருந்த பிணத்தி னடியிலே பற்றி யெரிந்துகொண்டிருந்த ஒரு கொள்ளிக்கட்டையை யெடுத்து

முன்னே அடுக்கிய கட்டைகளில் வைத்து நெருப்பை மூட்டி அக்கட்டைகளின்மேல், மேற்கூறியபடி கீழே வைத்திருந்த புத்திரனைத் தூக்கிவைத்து முகத்தி லறைந்துகொண்டு, "ஐயோ! மகனே! நெருப்பில் வெந்து நீறாகப்போகின்றாயே; இன்னும் சிறிது நேரத்திற்குள் உன் தேகம் மறையப் போகின்றதே; இனி எப்போது உன்னை நான் காணப் போகின்றேன்; அந்தோ! உன்னைப் பெற்ற தந்தை இச்சமயம் உன் முகத்தில் விழிக்கும்படியான தவத்தை நீ செய்யாமற்போய்விட்டாரே; ஆ தெய்வமே! இச்சமயம் அவர் வரலாகாதா," என்று சொல்லியழுது தரைமேற் கிடந்துபுலம்பினாள். அப்போது தேவதாசனுக்கடியி லடுக்கப்பட்ட கட்டைகளிற் பற்றியெரியும் நெருப்பின் வெளிச்சத்தினாலே பக்கத்திற் காவலிருந்த அரிச்சந்திரன் அக்கட்டைகளின்மேற் பிணமாய்க் கிடந்த தேவதாசனையும், கீழே கிடந்து புலம்பும் சந்திரமதியையுங் கண்டான். அப்படிக் கண்டவுடன் அவன், தன்னுடைய அரசுக்குரிய இளங்குமரனை பாம்பினாற் கடிக்கப்பட்டுயிர்விட்டுப் பிணமாய் அக்கட்டைகளின்மேற் கிடக்கிறானென்பதைச் சிறிதும் உணராமல் மிகவுங் கோபங்கொண்டு, "நம்முடைய உத்தரவின்றி இந்த இராத்திரி நேரத்திலே சிறிதும் அஞ்சாமல் எவளோ ஒருத்தி ஒரு பிணத்தைக் கொண்டுவந்து சுடலையில் வைத்துச் சுடுகின்றாள்; இவள் யார்? நாம் சமீபத்திற் சென்று இவளை இன்னவளென் றறியவேண்டும்," என்று இருக்குமிடத்தைவிட்டெழுந்து விரைந்தோடிச் சந்திரமதியின்சமீபத்திற்சென்று, அவளை விட்டுப்பிரிந்து நெடுங்கால மாய்விட்டபடியாலும், அவள் மிகுந்த கஷ்டங்களை யடைந்து உருவ மாறியிருந்தபடியாலும் அவளைத் தன் நாயகியென் றறியாமல், அவளை நோக்கி மிகுந்த படபடப்போடு, "என்னடி மூடத்தன்மை மிகுந்தவளே! நீ ஒருத்தியாக இந்தப் பனிமிகுந்த இரவிலே பிணத்தைத் தூக்கிக்கொண்டுவந்து தகனத்திற்குக் கொடுத்தற்குரிய பொருள்களைக் கொடாமலும், என் உத்தரவைப் பெறாமலும் சிறிதும் அச்சமின்றி அப்பிணத்தைச் சுடலையில்

வைத்துத் திருட்டுத்தனமாகச் சுடுகின்றாய்; இச்செய்கை உனக்குத் தகுந்ததாமோ?" என்று சொல்லிக் கட்டைமே லிருந்த தன் பிள்ளையைக் காலா லுதைத்துத் தூரத்தே தள்ளினான்.

அப்படித் தள்ளினமாத்திரத்திலே தேவதாசன் தரையிலே அலங்கோலமாக வீழ, சந்திரமதி உடல் பதற விரைந்தோடி, 'ஐயோ! மகனே! உனக்கு இவ்விதியா நேர்ந்தது?' என்று அவனைத் தூக்கி ஒழுங்காக வைத்துவிட்டுப் பின்னர் உயிர் சோர அழுது கோடையிடியால் மோதப்பட்டு அடியோ டற்றுத் திடுமென விழுந்த மரத்தைப்போல அரிச்சந்திர னடி முன்னே வீழ்ந்து வார்த்தைகள் குளறவும், கண்களில் அருவிபோல் நீரொழுகவும் அவன் முகத்தை நோக்கி, "ஐயா! நான் வேற்றூரிலிருந்து இங்கு வந்தவளானபடியால் இவ்வூரில் நடக்கும் வழக்கங்களை அறியேன்; இச் சுடுகாட்டில் பிணஞ் சுடுவதற்குப் பொருள் கொடுக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியாது; அவ்வாறு தெரிந்திருந்தால் உம்முடைய உத்தரவின்றி இச்செய்கையைச் செய்யமாட்டேன்; தீராத பாவஞ் செய்தவளாகிய நானே யாருமற்றவள்; திக்கற்ற என் புத்திரன் பாம்பு கடித்ததா லிறந்துபோய்விட்டான்; ஆதலால், என் பிள்ளையைச் சுடுதற்கு நானொருத்தியாகவே வந்தேன்; இத்தகைய எளியவளான என்னிடத்தில் பொருள் எங்ஙனமிருக்கும்? என் கையில் உமக்குக் கொடுக்கத்தக்க பொருளொன்றுமில்லை; கையிற் பொருளிருந்தால் உமக்குக் கொடுக்கவேண்டியவற்றை இப்பொழுதேனுங் கொடுத்து நான் பிள்ளையைத் தகனஞ் செய்வேன்; கையி லொன்று மில்லாதபடியால் நான் மிகவுங் கலங்குகின்றேன்; இந்த ஏழை பொருளுடையவளாயும், உறவினருடையவளாயு மிருந்தால் இந்தப் பிள்ளையை நானே தூக்கித் தோள்மேல் வைத்துக்கொண்டு வந்து இந்த இருளில் சுடலையிற் சுடுவேனா? அங்ஙனஞ் சுடுதற்கு இங்கே எரிந்து கிடக்கிற குறைக்கொள்ளிக்கட்டைகளை யெடுத்தடுக்குவேனா? இவற்றையெல்லாம் நீர் நன்றாக ஆலோ

சித்துப் பார்ப்பீரானால் என்னுடைய நிலைமை தெள்ளிதாக விளங்கும்; தருமகுணம் நிறைந்தவரே! என்னுடைய பரிதாபமான நிலைமையை நோக்கி என் புத்திரனைச் சுடுவதற்கு அநுமதி கொடுத்தருளுப்; குறையாத இரக்கமுள்ளவரே! யாதொரு ஆதாரமு மற்ற எனக்கு உம்முடைய பாதங்களிரண்டுமே ஆதாரம்," என்று புலம்பினாள்.

சந்திரமதி அவ்வாறு புலம்புவதைப் பார்த்து அரிச்சந்திரன் சிறிது மனதிரங்கி அவள் முகத்தை நோக்கி, "இலக்குமியை நிகர்த்த பெண்ணே! நீ என் பாதத்தில் விழுந்து வணங்குவதைவிட் டெழுந்திரு; நீ சொல்லும் வார்த்தைகளைக் கேட்கும்போது என் மன முருகுகின்றது; ஆயினும், இங்கே நீ கொடுத்தற்குரிய பொருள்களைப் பெறுமல், பிணத்தைச் சுடுதற்கு உனக்கு அநுமதி கொடுக்க நான் முடியாதவனு யிருக்கின்றேன்; நீ என்னை இந்தச் சுடுகாட்டிற்குச் சொந்தமான பறையனென்று நினைத்தே இவ்விதமான வார்த்தைகளைக் கூறுகின்றுப்; நீ நினைக்கிறபடி நான் இச் சுடுகாட்டிற் கெஜமானனுகிய பறையனல்லேன்; வேறொருவர் இதற்குரியவர்; நானே அவருக் கடிமையானவன்; அவர் கட்டளைப்படியே நான் செய்யக்கடமைப்பட்டிருக்கின்றேன்; இங்கு வாங்கப்படும் பொருள்கள் எனக்குச் சொந்தமானவைகளல்ல; அவருக்கே சொந்தம்; இங்கே பிணங் கொண்டு வருபவர்களிடத்தில் பிண மொன்றுக்கு வஸ்திரமொன்றும், காற்பணமும், வாய்க்கரிசியும் வாங்கிக்கொண்டு பிணஞ் சுட அநுமதி கொடுக்கும்படிக்கும், அவற்றுள் வஸ்திரத்தையும் பணத்தையும் அவருக் கனுப்பிவிட்டு வாய்க்கரிசியை மட்டும் எனக்குபயோகித்துக் கொள்ளும்படிக்கும் அவர் கட்டளையிட்டிருக்கிறார்; எனக்குரிய வாய்க்கரிசியை மட்டும் நான் வாங்காமல் விடுகிறேன்; மற்ற இரண்டையுமாவது நீ கொடுத்துவிட்டுப் பிணத்தைச் சுட்டுக்கொள்; இந்த உபகாரந்தான் என்னுற் செய்யமுடியும்; வேறொன்றுஞ் செய்ய வியலாது," என்று அன்போ டுரைத்தான். அதைக் கேட்டவுடன் சந்திரமதி மீண்டும் அரிச்சந்திரனை நோக்கி, "மயானகாவலரே!

எவருந் துணையில்லாமலும், பணங் கொடுத்துக் கூலியாள் களைக் கொண்டேனும் புத்திரனைத் தூக்கிவரும்படிச் செய் தற்குச் சக்தியில்லாமலும், இறந்துபோன இப்புதல்வனைத் தோள்மீது தூக்கிக்கொண்டுவந்த ஏழையாகிய என்னிடத் தில் பணந்தான் எவ்வாறு கிடைக்கும்? வஸ்திரந்தான் எங் கிருந்துவரும்? மிகவும் துயர்க்கடலி லாழ்ந்து வருந்துகின்ற பாவியாகிய நான் எதையுங் கொடுத்தற்கு வழியில்லாதவளா யிருக்கின்றேன்; ஆதலால், என் முகவாட்டத்தை நோக்கி நீரே இன்னமும் தயவு செய்யவேண்டும்; எப்படியாவது என் புத்திரனைச் சுடுதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்; உமக்கு மிகவும் புண்ணிய முண்டு," என்று பணிவான வார்த்தைகளைக் கூறினாள். அப்படி அவள் சொல்லிக் கொண்டு நிற்கும்போது அரிச்சந்திரன் அந்த வார்த்தை களைக் கேட்டபடியே அவளுடைய முகத்தை நன்றாக உற்று நோக்கினான். அவன் சந்திரமதிக்குரிய நாயகனாதலின், சிவ னுடைய வரத்தால் யாருக்குந் தெரியாமல் அச்சந்திரமதியி னுடைய கழுத்தி லமைந்திருந்த திருமங்கலியம் மிகவும் பிரகாசத்துடனே அவ்வரிச்சந்திரன் கண்களுக்குத் தோற்றி யது. அவ்வாறு தோற்றவே அரிச்சந்திரன் மிகவும் ஆச்சரிய முற்று, "ஆ! ஆ!! இவளுடைய கழுத்திற் கிடக்கின்ற தாலி யானது உலகத்தையெல்லாம் தனக்கு விலையாகப் பெறக் கூடிய சிறப்பு வாய்ந்ததா யிருக்கிறது; இப்படியிருக்க இவள் கையிலொன்றுமில்லையென்று சொல்லி நம்மை ஏமாற்றிவிட் டாள்; இவளோ மகா மோசக்காரியா யிருக்கின்றாள்," என்று தனக்குள் நினைத்து உண்மையை உணராமல் மிகுந்த கோபங்கொண்டு அவளை வெறுப்பாக நோக்கி, "பெண்ணே! நீ மிகவும் நல்லவள்! நல்லவள்!! உலகத்தில் மகா சாமர்த் தியமுடையவள் நீயே; இந்திரஜால வித்தையிற் கை தேர்ந்த பெண்களெல்லாரினும் நீ மிகத் தேர்ச்சி பெற்றவளா யிருக் கின்றாய்; நீ இப்போது பேசிய வார்த்தைக ளெல்லாம் பொய் நிறைந்த வார்த்தைகள்; நீ இங்கே செய்யத் துணிந் தது மிகவும் மோசமான செய்கை; கையிலொருகாசு மில்லா

மல் இங்கே எரிந்து கிடந்த குறைக் கொள்ளிக்கட்டைகளை யெடுத்தடுக்கி மகனை வைத்துத் தீ மூட்டினேனென்று நீ சொன்னதும் பொய்; இங்கே பிணங்களுக் கடுக்கிய நல்ல கட்டைகளையே நீ திருடிக்கொண்டு வந்திருக்கின்றாய்; மிகுந்த விலைபெறக் கூடியதும், சிவந்த பொன்னாற் செய்யப்பட்டதுமாகிய தாலியானது உன் கழுத்திற் கயிற்றுடனே கிடந்து பிரகாசிக்கின்றது; இத்தகைய சிறப்பு வாய்ந்த தாலியை நீ வைத்துக்கொண்டு, 'நான் கையி லொன்று மில்லாதவள்,' என்றும், 'திக்கற்றவள்,' என்றும் கூறி ஏமாற்றிவிட்டாய்; அடிமோசக்காரி! இனி உன்னிடத்தில் நான் பெறவேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளாமல் உன் பிணத்தைச் சுடுதற்கு உத்தரவு கொடுக்கமாட்டேன்; ஆதலால், அப்பொருள்களுக் கீடாக உன் கழுத்திற் கட்டியிருக்கின்ற தாலியைக் கொடுத்துவிட்டு இப் பிணத்தைச் சுடக்கடவாய்," என்றுரைத்தான்.

சந்திரமதி, அவனைத் தன்னுடைய நாயகனென் றுணராமல் மயானங் காக்கும் பறையனென்று கருதியிருந்தபடியால், அவன் அவ்வாறு தாலியைக் கண்டு கூறியவுடனே, தன் நாயகனன்றி எவருங் காண முடியாத வரம் பெற்ற தாலியை ஒரு பறையன் கண்டுவிட்டானென்றும், அதனால் தன் கற்புக்குப் பங்கம் நேர்ந்துவிட்டதென்று மெண்ணி வேடர்களுடைய அம்புகள் நிறைந்த சேரிக்குள்ளே அகப்பட்ட மான்போல துடிதுடித்துப் பதறிக் கீழே விழுந்தாள்; உடம்பெல்லாம் வாடினாள்; மனத்தளர்ச்சி யடைந்தாள்; தாமரைமலர்போலும் முகங் கோணினாள்; பயந்தாள்; வருந்தினாள்; கொடிதான கேடு இப்போது வந்ததே என்று மிகுந்த துன்பமுற்றாள்; பெருமூச்சுவிட்டாள்; 'எக்காலத்தும் வருத்தத்தை யடையாத என் நாதராகிய அரிச்சந்திர மகாராஜருக்கே யன்றி மற்றையர் கண்களுக்குத் தோற்றாத எனது திருமங்கலியத்தை ஒரு பறையன் காணுங் காலமும் நேர்ந்துவிட்டதே,' என்று சொல்லி அனலிலிட்ட மெழுகைப்போல நெஞ்சுருகினாள்; 'அஞ்ஞான நீங்கின குண

த்தையுடைய என் தந்தைக்குப் பாம்பையணிந்த சடையை யுடைய பரமசிவக்கடவுள் நல்ல வரத்தைக் கொடுக்கிறகாலத் திலே உன்னுடைய புத்திரியின் கழுத்திலுள்ள மங்கலியம் அவளுடைய நாயகனுக்கன்றி மற்றையர்க்குத் தோற்று தென்று கூறிய இரகசிய வார்த்தையும் பொய்யாய்ப் போயிற்றே; குளிர்ந்த சந்திரனைச் சிரசி லணிந்த பார்வதி நாதனாகிய சிவன் சொன்ன வாக்கியம் இப்போது விசுவா மித்திருடைய கொடுஞ் செய்கையால் மேற்கண்டவாறு பொய்த்துப் போய்விட்டபடியால் அந்தப் பரிசுத்தனான சிவ னினும், உலகத்தையெல்லா மளந்த விஷ்ணுவினும், இன் னும் மற்றத் தேவர்களினும் அந்த விசுவாமித்திர முனிவரே சிறந்தவரானார்,' என்று சொல்லி யழுதாள்; 'கிருபைக் கட லாகிய அரிச்சந்திரமகாராஜர் என்னை விலைக்கு விற்றதனால் என் மேன்மை பொருந்திய குலத்தின் தன்மை கெட்டது; என் அழகும் கெட்டது; என்னுயர்வுங் கெட்டது; இவை யெல்லாம் கெடுவது இயற்கை; இவற்றோடு இச்சமயத்தில் எவ்விதத்தாலும் அழிவுறாத என் கற்புநிலையுந் தவறியதற் குக் காரணமென்ன?' என்று கண்ணீர்விட்டு மனங் கலங்கிப் புலம்பினாள்.

அரிச்சந்திரன் தன் மனைவியைக் கண்டு புத்திரனிறந்த விவரத்தைத் தெரிந்துகொள்ளல்.

அப்படி அவள் சொல்லிப் புலம்பியதைக் கேட்ட வுடனே அரிச்சந்திரன் அவளை நிச்சயமாகத் தன் மனைவி யென்றும், இறந்தவன் தன்னுடைய புத்திரனென்றும் தெரி ந்துகொண்டு கையிலிருந்த பிணஞ்சுடுகோல் முதலியவற் றைக் கீழே போட்டுவிட்டு, "ஆ தெய்வமே! என் மனைவிக் கும் புத்திரனுக்கும் இக்கதியோ நேர்ந்தது," என்று ஆற் றொணாத் துயரத்தை யடைந்து நினைவு தடுமாறினான். அவ் வாறு தடுமாறிப் பின்னர் அவன் மயங்கி மண்மேல் விழா மல் தானே அம்மயக்கத்தைத் தேற்றிக்கொண்டு நின்றபடி யே, "ஐயோ! கள்ள மிகுந்த விஷக்கொடுமையையுடைய

பாம்பு கடிக்க, நம் புத்திரனே இறந்தான்," என்று மேலும் வருந்திப் பெருமூச்சுவிட்டுப் பிரமை கொண்டவன்போன்று வெளியே ஒரு வார்த்தையுஞ் சொல்லாமல் மௌனமாகி மனங் கலங்கினான். அப்படி மனங்கலங்கிய அவன் அதன் மேல்தனக்குண்டாகிய விசனத்தைத் தாங்கமுடியாமல் புலம்பத் தொடங்கிக் கண்களிலே முத்துக்களைப் போன்று கண்ணீர்த்துளிகள் சிந்தத் தேவதாசனை நோக்கி, "இளம்பருவத்தில் உயிரிழந்த என் புத்திரனே! தாய் கூட வரப்பெறாமல் தனித்துக் காட்டிற்குள்ளே சென்ற உன்னை அரவமானது விரைந்தோடிவந்து கடிக்குங்காலத்தில் நீ, உன்னைத் தனியே காட்டிற் கனுப்பின தாயையும், உன்னையும் உன் தாயையும் வேதியர்க்கு விலைக்கு விற்ற பாவியாகிய என்னையும் எப்படி நொந்தாயோ; அடா என் அருமைப் புதல்வனே! நீ நம்முடைய நாட்டையும், மிக்க சுகத்தையு மிழந்து எங்களுடனே சேர்ந்துவந்து இவ்வித நிலைமையை அடைந்தாய்; நீ இவ்வாறு கெடுதற்குக் காரணமாயிருந்தவன் நானே; என்னாலே நீ பெற்ற சுகம் இதுதானோ? அடா மதியிற் சிறந்த என் மைந்தனே! 'நம் தந்தை அளவில்லாத கஷ்டங்கள் வந்தும் இறந்துபோகாமல் நிலைபற்ற உயிரை விரும்பி வளர்த்துக்கொண்டு நம்மையும் விற்று அவனும் ஒரு பறையனுக் கடிமையானான்; அப்படி அடிமையானவன் இனிமேல் நம்மை எக்காலத்தில் மீட்கப்போகின்றான்; அவன் ஒருநாளும் மீட்க மாட்டான்; நாம் இப்படியே ஆயுள்வரை அடிமையா யிருக்க வேண்டும்; இப்படி யிருப்பதைக் காட்டிலும் இறந்துபோவதே நலம்,' என்று நினைத்தோ நீ இவ்வாறு காட்டிற்கு வந்து பாம்பினிடம் கையை நீட்டி அதன் விஷத்தை உடம்பிலேற்றிக்கொண் டிறந்தாய்? அடா அப்பனே! நான் உன்னையும், உன் அன்னையையும் வேதியனுக்கு விலைக்கு விற்ற காலத்தில் என்னை விட்டுப் பிரிய மனமிசையாமல் என் கழுத்தைக் கட்டிப்பிடித் தணைத்துக்கொண்டிருந்த உன்னை அந்த நெஞ்சிரக்க மில்லாத பிராமணன் பற்றி யிழுத்துக் கொண்டு சென்றதைப் பார்த்தும் இதுவரையில் உன்மீ

திரக்கங்கொண்டு உன்னை மீட்பதற்குரிய முயற்சி யொன்றுஞ் செய்யாதிருந்த பாவியாகிய எனக்கு நீ புத்திரனாகப் பிறந்த பாவத்தை இன்றோடு தீர்த்துக்கொண்டாயோ; ஐயோ! என் ஐயனே! நீ ஒரு வேதியருக்கு விலையானாய்; அப்படி விலையாகிக் கஷ்டப்பட்டதுமின்றி ஒரு பாம்பின் வாயிற் சிக்கியு மிறந்தாய்; பின்பு உன் தாயானவள் உன்னைத் தூக்கிக்கொண்டு வர அவள் தோள்மீது சோர்ந்து கிடந்தாய்; இப்போது கட்டைமீதிருந்த உன்னை இந்தச் சண்டாளனாகிய நான் முன்பின்யோசியாமல் காலினா லெற்றி யெறிய நீ கீழே விழுந் துடல்சிதைந் தலைச்சாற்பட்டாய்; என் அப்பனே! உனக்கிந்த விதியையா நான்முகன் விதித்தான்? அடா புத்தியிற் சிறந்த என் புத்திரனே! நீ காட்டிற்குச் செல்லுங் காலத்தில் மிகவும் அன்புகொண்டு உன்னுடனே கூடவந்து, உன்னைப் பாம்பு கடிக்க உன்னுயிர் போகுங் காலத்தில உன் முகத்தில் விழிக்காத தாயையும், நீ இவ்வித துன்பங்களை யெல்லா மடைதற்குக் காரணமா யிருந்து இப்போ துன்னைக் காலினா லுதைத்து மெறிந்த என்னையும் நீ உயிர் விடுங்காலத்தில் எவ்வாறு நிந்தித்தாயோ? என்னென்ன சொற்களை யெல்லாஞ் சொன்னாயோ? அவற்றை யெல்லாம் இப்போதுசொல்வாயாக; மகனே! நீ பிறந்தகாலத்தில் ஜாதகங் கணித்தபோது உனக்கு அற்ப ஆயுளென்று அதிற் கண்டிருக்க நாங்கள் தெரிந்தோம்; ஆயினும் அவ்வாறு நடக்குமோ நடக்காதோஎன் றுசந்தேகித்திருந்தோம்; இப்போது அப்படியே உனக்கு ஆயுள் முடிந்துவிட்டது; நீ அந்த ஜாதக பலனின்படியே யிறந்தாலும் நம் முன்னோர்கள் பெற்றிருந்த சிறப்பையும் செல்வத்தையும் பெறாமல் தரித்திரத்தையும், கஷ்டத்தையு மடைந்ததற்குக் காரணமியாது; இவ்வாறு நான்முகன் உனக்கு விதியை ஏற்படுத்தினது மிகுந்த பாவம்! பாவம்!! மன்மதனினுஞ் சிறந்த அழகு வாய்ந்த என் குமாரனே! வாள்வலியா லுயர்ந்த வெற்றியைக் கொண்ட அரசர்கள் வந்து சூழ்ந்து உன் பாதங்களிலே வீழ்ந்தழ, நீ உயிர் விடாமல் காட்டிலே தனித்திறந்து உன்

னுடைய தாயின் தோள்மீதமர்ந்து இச்சுடுகாட்டில் வந்து இவ்வாறு சீரழிந்து கிடத்தற்கு வெவ்விய பாவத்தைச் செய்தாயோ?" என்று பல விசனமிகுந்த வார்த்தைகளைக் கூறியழுதான்.

இவ்வாறு சொல்லி அரசனழும்போது சந்திரமதி அவனுடைய வார்த்தைகளை யெல்லாம் நன்றாக உற்றுக்கேட்டு அவனைத் தன் நாயகனென்று நிச்சயமாக வுணர்ந்து, "அந்தோ! நம்மரசான்றோ இவர்! இவருக்கிவ்விதி எவ்வாறு சம்பவித்தது; மயானங் காக்குந் தொழிலையா இவர் பெறவேண்டும்; இவ்வித நிலைமையில் இவரைப் பார்த்தற்கோ இந்தப் பாவி பெண்ணாகப் பிறந்தேன்?" என்று சொல்லி முகத்திலடித்துக்கொண்டு திடீரென்று அரிச்சந்திரனுக்கு முன்னே விழுந்தழுது அவன் முகத்தை நோக்கி, "புருஷரிற் சிறந்த உத்தமரே! உலகத்தில் ஒருவர்க்குக் கெட்டகாலம் வந்தால் பல துன்பங்கள் மேன்மேலும் வளர்ந்தோங்கி மனத்திலே நிறைந்து அவரை வருத்துமென்னும் உண்மையை உம்மிடத்திற கண்டேன்; தலைவிதியை விலக்க எவராலு முடியாது; எவருக்கும் நன்மை தீமைகள் தலைவிதிப்படியே நடக்கும்; அத்தலைவிதியோ டனுசரித்து இப்போது உமக்கும், உம்முடைய புத்திரனுக்கும் மிகுந்த கஷ்டங்களை யுண்டாக்கியது நீர் கொண்ட சத்தியமேயாகும்; நீர் சத்தியத்தை விடாமற் கைக்கொண்டதை முன்னிட்டே விசுவாமித்திரர் உம்மீது கோபங்கொண்டு இத்தகைய துன்பங்களை யெல்லாம் செய்தனர்; ஆயினும், அச்சத்தியமானது இனி இம்மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும் உமக்கு மிகுந்த நன்மையையே செய்யும்; இப்படி நடக்குமென்று நான்நிச்சயமாகத் துணிவு கொண்டேன்; ஆதலால், நீர் இத்துன்பங்களை யெல்லாம் நினைத்து மனங்கலங்க வேண்டாம்; தருமத்தையே உறுதியோடு நினைப்பீராக," என்றுகூறிப் பின்னும் அவனை நோக்கி, "என் ஆருயிர்த்துணைவரே! நீர் என்னைப் பிரிந்த பின்னர் பறையனுக்கெவ்வா றடிமையானீர்? இங்கே எப்படி வந்தீர்?" என்று வினவினாள்.

அப்போது அரிச்சந்திரன் ஒழுகிய கண்ணீரோடு அவள் முகத்தைப் பார்த்து, "பெண்ணே! நீயும், புத்திரனும் என்னைப் பிரிந்து சென்றபின் விசுவாமித்திரரால் நம்மிடம் பணம் வாங்குதற் கனுப்பப்பட்ட வேதியர் தமக்குக் கூலிப்பொருள் வேண்டுமென்று கேட்டார்; அதனால் நான் இந்நகரிலுள்ள வீரவாகுவென்னும் சாம்புவருக் கடிமையாகி விலைப்பணம் வாங்கி அதை அவ்வேதியருக்குக் கூலிப்பொருளாகக் கொடுத்துவிட்டு அவ்வீரவாகுவின் கட்டளைப்படி இம்மயானங் காக்குந் தொழிலையேற்று இங்கு வந்திருக்கின்றேன்; இனிமேல் அதைப்பற்றிச் சிந்திப்பதிற் பயனொன்றுமில்லை; இப்போது பிள்ளையைத் தகனஞ் செய்தற்குரிய வழியைத் தேடவேண்டும்; நான் வீரவாகுவுக்கடிமையாதலால் அவரிட்ட கட்டளையினின்றும் பிசகலாகாது; அவருக்குரிய பொருள்களை நான் வாங்காமல் விட்டுவிடுவேனானால் நீதிக்கு வழுவாகும்; ஆதலால், நீ எப்படியேனும், வஸ்திரமும் பணமும் தேடிவந்து கொடுத்தலே நலமாம்; உன்னை விலைக்கு வாங்கிய வேதியரிடம் சென்றுவது அவற்றை வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டுப் புத்திரனைத் தகனஞ்செய்வாயாக," என்று கூறினான். அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் சந்திரமதி, "ஐயோ! அவ்வேதியர் கோபத்தாற் சிவப்புப் பொருந்திய நெருப்புக் கண்களை யுடையவர்; கொஞ்சமேனும் மனதிரக்க மில்லாதவர்; இத்தகைய வன்னெஞ்சையுடைய அவர் பணமும் வஸ்திரமுங் கொடுக்கச் சிறிதும் மனமிசையார்; ஆயினும் நான் அவரிடஞ்சென்று கெஞ்சிக் கேட்டுப்பார்த்து வருகின்றேன்; நான் திரும்பி வரும்வரை புத்திரனுடைய தேகத்தை நாய் நரிமுதலியன இழுத்துக்கொண்டு போகாதபடி பாதுகாத்துக்கொள்வீராக," என்று சொல்லித் தேவதாசனை அவ்விடத்திலேயே வைத்துவிட்டுக் காசிநகரத்தை நோக்கி, விரைந்தோடினாள்.

சந்திரமதி அவ்வாறு விரைந்தோடிய பின்பு அரிச்சந்திரன் தனித்திருந்து விசனமதிகரித்தபடியால் இறந்துகிடக்கும் தன்னுடைய புத்திரன் முகத்தை நோக்கித் தனக்கு

அவனை யெடுத்தற்கு அளவில்லாத ஆவலுண்டாகியும், அவ்வாறு விலக்குவிற்ற புத்திரனைத் தொடுதல் நீதிக்கு விரோதமாகுமென்று கருதித் தன்னுடைய கைகளாலே அப் புத்திரனைத் தொடுதற்கஞ்சிப் பக்கத்தில் நின்றுகொண்டு தன்னிரண்டு கண்களிலும் கான்யாறுபோல நீரொழுக அழுது வருந்தி நெஞ்சங் கரைந்துருகி, வெவ்விதாகிய யானைத் தீயென்னும் வியாதியாற் பற்றப்பெற்ற விளாங்கனியானது வெளிக்குமாத்திரம் கனிவடிவமாய் உள்ளே ஒன்று மில்லாமல் கூடாயிருப்பதுபோல உள்ளேயிருக்கு முயிர் குன்றி வெற்றுடம் புடையவனானான்.

சந்திரமதி கொலைக்குற்றத்தி லகப்படுதல்.

அவ்வாறு அரிச்சந்திரன் தனித்து வருந்திக்கொண்டிருக்க, மேற்கூறியபடி விரைந்து சென்ற சந்திரமதி அந்தச் சுடுகாட்டையும் அதற்கப்பாலுள்ள வனத்தையுங் கடந்து, 'இன்னும் என்ன தீங்குகள் நேருமோ,' என்னும் பயத்துடன் மின்னுகின்ற அழகிய மதில் சூழ்ந்த காசி நகரத்திற்குள்ளே புகுந்தாள். அப்படிக் கிளிபோலும் வசனத்தையுடைய அச் சந்திரமதி செல்லுங் காலத்தில் அவளைக் கொலைக்குற்றத்திற் குள்ளாக்கும் பொருட்டு விசுவாமித்திரர் ஏவியபடி சில கள்ளர்கள் காசி மன்னனுடைய அரண்மனைக் குள்ளே புகுந்து அவனுடைய இளம் புத்திரனைத் தூக்கிவந்துகொன்று அவன் தேகத்தி லணியப்பட்டிருந்த நகைகளைத் திருடிக்கொண்டு சந்திரமதி செல்லும் வழியில் முன்னரே அப்புதல்வனைப் போட்டுச் சென்றார்கள். அப்புத்திரன் அங்கே ஓரிடத்திற் பிணமாய்க் கிடந்தான். அப்படிக் கிடக்கும்போது மேற்கூறியபடி வீதியிற்சென்ற சந்திரமதி அப்பிள்ளையைக்கண்டு, "இவன் யாருடைய பிள்ளை? நம்முடைய புத்திரன்தானோ? நாம் மயானத்தில் நம் நாயகருடைய காவலில் வைத்து வந்தோமே; அவர் வேலையினிமித்தம் பக்கத்திற் சென்ற சமயத்தில் அவரறியாமல் பூதங்கள் அவனைத் தூக்கிக்கொண்டு வந்து இங்கே போட்டுவிட்டனவோ! ஐயோ! எனக்கொன்

றுந் தெரியவில்லையே; எப்படியிருந்தாலுஞ் சரி; இப் புத்திரனருகே சென்று பார்த்துச் சந்தேகந் தெளிந்துகொள்ளுவோம்,'' என்றெண்ணி உடனே அப்புத்திரனருகிற் போயிருந்து அவனிடத்தில் தேவதாசனுக்குள்ள அடையாளங்களிருக்கின்றனவாவென்று அவன் தேகத்தைத் தடவிப்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அந்தோ! அவள் அப்படிப் பார்த்துக்கொண்டிருக்குந் தருணத்தில் விசுவாமித்திரர் தம்முடைய மாயையால் காசிராஜன் அரண்மனையிலிருந்தவர்களை யெழுப்பிவிட்டுப் புத்திரன் காணாமற்போன செய்தியை அறிந்துகொள்ளும்படிச் செய்ய உடனே அவர்கள், குழந்தை காணாமற்போனதை அரசனிடம் தெரிவிக்க அவன், ''விடிவதற்குள் குழந்தையையும், அவனைத் திருடிப் போனவர்களையும் கண்டு பிடித்துக்கொண்டு வரவேண்டும்; இல்லையேல் தக்க தண்டனை புரிவேன்,''என்று கட்டளையிட்டவண்ணம் அப்பட்டணத்தைக் காக்கும் தலையாரிகள், கள்ளர்கள் சுவரை யிடித்துப் புகுந்த வழியைப்பற்றி அவர்களுடைய சுவடு சென்ற வழியே அவர்களைத் தேடிக்கொண்டு போனார்கள். அப்படிச்சென்ற அவர்கள் சிறிது நேரத்திற்குள் மேற்கூறியபடி குழந்தையை எடுத்து வைத்துத் தடவிப் பார்த்துக்கொண்டு தலைவிரிகோலமாயிருந்த சந்திரமதியைக் கண்டார்கள். அவ்வாறு கண்டமாத்திரத்தில் அவர்களெல்லோரும், ''நம் அரசர் புத்திரனைத் திருடிக்கொண்டு வந்தவள் இவள் தான்; எள்ளளவும் சந்தேகமில்லை; நகைகளைத் திருடி மறைத்துவிட்டு இப்பொழுதுதான் குழந்தையைக் கொலை செய்துகொண் டிருக்கின்றாள்; இவளைப் பிடித்துக் கட்டுங்கள்; விட்டுவிடாதிர்கள்,'' என்று சொல்லி விரைந்தோடிச் சந்திரமதியின் கூந்தலைப் பற்றிக்கொண்டு அப்படியு மிப்படியு மிழுத்துத் துடிதுடித்து மிகுந்த கோபங்கொண்டு கண்களிலே நெருப்புப் பொறிகள் சிந்த விழித்து, அவளுடைய தேகத்தில் இரத்த மொழுகும்படியும், எலும்பெல்லாம் நோவெடுக்கும்படியும் தங்கள் கைகளில் வைத்திருந்த

மாறுகளால் பலங்கொண் டடித்தார்கள். அப்படி அடிக்கும் போது அந்தச் சந்தடியைக் கேட்டுப் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த சில மனிதர்களும் எழுந்தோடிவந்து அவளைப் பார்த்து அவள்மீது கோபங்கொண் டடித்துப் பலவாறு நிந்தித்தார்கள். அப்போது சந்திரமதிக் குண்டான வேதனைக்கோ அளவில்லை; அவள் என் செய்வாள் பாவம்! ஒன்றுஞ் சொல்லாமல், 'இதுவும் தலைவிதிதான்', என்று உடல்பதறி மனம்நடுங்கி அழுதுகொண் டிருந்தாள். அப்படி அவள் அழும்போது அங்குக் கூடியிருந்தவர்களுட் சிலர் பக்கத்தில் நின்றவர்களை நோக்கி, "நீங்கள் அப்பாற் செல்லுங்கள்; நாங்கள் யாரென்று இவளை விசாரிக்கின்றோம்," என்று சொல்லி விலக்கிச் சந்திரமதியின் சமீபத்திற் சென்று அவள் முகத்தைப் பார்த்து, "பெண்ணே! உன் ஊர் யாது? உன் பெயரென்ன? உன் குலம் யாது? இச்சிறு பிள்ளையைக் கொன்றதற்குக் காரணமியாது? நீ உள்ளதைச்சொல்; பொய் கூறாதே," என்று கேட்டார்கள். அப்போது சந்திரமதி, "இப்பொழுதோ நம்மைச் சனி தொடர்ந்திருக்கின்றது; விசுவாமித்திரரோ பலவிதமான மாயைகளைச்செய்து நம்மைத் துன்பத்திற் குட்படுத்தக் கங்கணங் கட்டிக்கொண் டிருக்கின்றார்; நமக்கேற்பட்ட தலைவிதியும் பொல்லாததா யிருக்கின்றது; ஆதலால், இச்சமயம் நாம் இந்தக் குழந்தையைக் கொல்லவில்லை யென்று எவ்வளவு உறுதியாகச் சொன்னாலும் ஒருவரும் நம்பமாட்டார்கள்; நாம் பொய் கூறுவதாகவே நினைத்து ஒவ்வொருவரும் மேன்மேலும் நம்மை அடித்து வருத்துவார்கள்; எதுவும் தலையில் எழுதினபடியே நடக்கும்; நம்முடைய கெட்ட விதியே, எவரோ கொன்று போட்டிருந்த இக்குழந்தையை நாம் தொடும்படிச் செய்தது; இப்பொழுது நாம் குழந்தையைக் கொன்றதாகச் சொல்வதே நலம்; நாம் இவ்வளவு துன்பங்களையடைவதைக்காட்டிலும் இவ்வாறுசொல்லி இக்கொலைக் குற்றத்திலகப்பட்டு மடிவதே சிறந்தது," என்று தனக்குள் ஆலோசித்து மேற்கூறியபடி தன்னை வினவிய அம் மனிதர்களை

நோக்கி, "ஐயன்மாரே! நான் சொல்வதைக் கேளுங்கள்; இறந்துபோன குழந்தையோ என் கையி லிருக்கின்றது; அப்படியிருக்க நான் இக்குழந்தையைக் கொல்லவில்லையென்று சொன்னால் அந்த வார்த்தையை எவர் நம்புவர்! இக் குழந்தையைக் கொன்றவள் நானே; நான் சிறிதும் இரக்க மில்லாமல் உலகத்தில் பல உயிர்களைக் கொன்று திரிகின்ற இராக்ஷசி; கையும் களவுமாக நான் உங்களிடம் அகப்பட்டுக் கொண்டேன்; என்னை என்ன செய்யவேண்டுமோ செய்து கொள்ளுங்கள்," என்று கூறினாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே அங்கு நின்றவர்க ளெல்லோரும், "இவள் மிகவுங்கொடியவள்; இவளை விட்டுவிடாதீர்கள்; கட்டியடித்து அரண்மனைக்குக் கொண்டு செல்லுங்கள்," என்று தலையாரிகளிடம் சொல்ல, அவர்கள் மேலும் சந்திரமதியை நன்றாக அடித்து, வலிய கயிற்றினாலே இரண்டு கைகளையுங் கட்டி, அந்தப் பிணத்தை அவளுடைய தோள்மேலேற்றி, வெற்றி பொருந்திய காசிராஜனுடைய அரண்மனையை நோக்கி அவளை யிழுத்துக்கொண்டு போனார்கள். அப்போது சந்திரமதி, தன் தோள்மீது கிடந்த பிணத்தின் இரண்டு கால்களையும் கைகளா லணைத்துச் சுமந்துகொண்டு, கால்கள் நடுங்க அப்பிணத்தினின்றும் வடியும் இரத்தமும் நிணமும் பின்புறத்திலும் முன்புறத்திலும் ஒழுகத் தலையாரிகள் அடிப்பதனால் தெறிக்கும் இரத்தத் துளிகள் பக்கங்களிற் சிந்தக் கைகளின் இரண்டு பக்கங்களிலுங் கட்டித் தலையாரிகளால் இழுக்கப்படும் கயிற்றைப்பற்றிச் செல்லும்போது பல நாய்கள் வெறிகொண்டு சீறிப் பாய்ந்து குலைத்து மேல் விழ வேடர் கையிற் சிக்கிய ஒரு மானைப்போல அஞ்சி அத்தலையாரிகளுக்குப் பின்னே நடந்து சென்றாள்.

கடல்போன்ற ஆரவாரத்தையும், சிறப்பையுமுடைய காசிப்பட்டணத்தைக் காக்கும் தலையாரிகளும், கரும்பாலைகளும் வயல்களும் சூழ்ந்த நாட்டை விசுவாமித்திரருக்குக் கொடுத்த வள்ளலாகிய அரிச்சந்திரன் மனைவியும் மேற்கூறியபடி நடந்து சென்று, விடியற்கால முரசு சப்திக்கும்

கோட்டைவாயிலைக் கடந்து, மாலையணிந்த கிரீடாதிபதியான காசிராஜனிருக்கும் அழகிய சபா மண்டபத்திற்குள்ளே சென்றார்கள். அப்போது இரவாயிருந்தும் தன் புத்திரன் காணாமற்போன விஷயத்தை விசாரிக்கும்பொருட்டு காசிராஜன் தன் மந்திரிகளுடன் அச் சபாமண்டபத்தில் வந்திருந்தான். மேற்கூறியபடி சந்திரமதியைக் கட்டியிழுத்துச் சென்ற பொல்லாதவர்களாகிய தலையாரிகள் சந்திரமதியை அரசன் முன்னே நிறுத்தி அவ்வரசனுடைய பாதங்களை நோக்கி வணங்கி நின்றார்கள். சந்திரமதியும் அழகிய மூங்கிலை நிகர்த்த தோள்மீது கிடந்த பிணத்தைத் தாங்கிக்கொண்டு அங்கே தலைகுனிந்து நின்றாள். அப்படி நிற்கும்போது காசிராஜன், "ஐயோ! இந்தப் பெண்ணா நம் புத்திரனை வதை புரிந்தனள்?" என்றதிசயித்துப் புத்திரனைப் பார்த்து வருந்திப் பின்னர் சந்திரமதியை நோக்கி, "பெண்ணே! நீ இறந்தப் பிணத்தைக் கீழே யிறக்கிவை," என்று கட்டளையிட, பரிமளமிருந்த கூந்தலையுடைய சந்திரமதி அப்பிணத்தைக் கீழே யிறக்கிவைத்தாள். அதன்மேல் அவன், தலையாரிகளை நோக்கி, "காவலர்களே! இந்தப் பெண் நம்முடைய புத்திரனை எவ்வாறு கொன்றாள்? இவளை நீங்கள் எவ்விடத்திற் கண்டீர்கள்? எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறுவீராக?" என்று வினவினான். அவ்வாறு அவன் கேட்டபோது அந்தத் தலையாரிகள் அம்மன்னனை வணங்கி, அவன் திருச்சமுகத்தை நோக்கி, "அரசர் பெருமானே! இன்றிரவு இந்த இராக்ஷசி, திருட்டுத்தனமாக நம் அரண்மனைக்குட் புகுந்து, உம்முடைய பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் ஆபரணங்களை யெல்லாங் கழற்றி எங்கேயோ மறைத்து வைத்துவிட்டு அக் குழந்தையை அலங்காரம் பொருந்திய இராஜவீதியின் ஒரு மூலையில் வைத்துக் கொன்று உடம்பைப் பிளந்துகொண்டிருந்தாள். அச்சமயத்தில் சந்தடி செய்யாமல் இரகசியமாகத் தேடிச் சென்ற நாங்கள் இவளைச் சாமர்த்தியமாகக் கண்டு பிடித்து உமக்கு முன்னே கொண்டு வந்தோம்; இனிமேல் நீர் இவளுடைய துஷ்ட செய்கை

யைப்பற்றி நன்றாக விசாரித்து உண்மையை யுணர்ந்து இவ ளுக்குத் தக்க தண்டனை புரிவீராக," என்றுரைத்தார்கள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் காசிராஜன் அவர் களை விலகி நிற்கும்படிக் கட்டளையிட்டு அதன்மேல் சந்திர மதியை நோக்கி, "அம்மே! நீ எதைக்குறித்து இந்நகர்க் குள்ளே வந்தாய்? எதற்காக இப்பிள்ளையைக் கொலை செய் தாய்? நடந்ததை உண்மையாகக் கூறு?" என்று வினவினான். அவ்வாறு அவன் கேட்கவே, சந்திரமதி தன் பாதத்தை நோக்கினபடியே சிவந்த பவளத்தையும் குமுதமலரையும் நிகர்த்த வாயைத் திறந்து, "அரசர் பெருமானே! நான் இந் தச் செவ்விதான பிள்ளையைக் கொலை செய்துகொண் டிருக் கும்போது உம்முடைய தலையாரிகள் என்னைக் கண்டு பிடித் துக்கொண்டு வந்து உமக்கு முன்னே நிறுத்தியிருக்கிறார் கள்; இனிமேல் நீர் என் விஷயத்தில் ஏன் சந்தேகிக்கிறீர்? என் கையிலோ இறந்துபோன உம்முடைய குழந்தை யிருக் கின்றது; என் உடம்பிலோ புலால் நாற்றம் நிறைந்திருக்கின் றது; ஆதலால், இனி நீர் சந்தேகங் கொள்ளவேண்டாம்; உம் முடைய பிள்ளையைக் கொன்றவள் நானே; நான் இராக்ஷசி களி லொருத்தி; நான் எப்போதும் மனிதருடைய மாமிசத் தையே தின்று என் உடலை வளர்த்து வந்தேன்; அந்த வழக் கப்படியே இன்று உம்முடைய நகர்க்குட் பிரவேசித்து உம் முடைய பிள்ளையின் மெல்லிய தசையைத் தின்ன விருப்பங் கொண்டு அதனைத் திருடிக்கொண்டுபோய்க் கொலை புரிந் தேன்; எனக்கு என்ன தண்டனை விதிக்கவேண்டுமோ அந் தத் தண்டனையை ஏற்படுத்துவீராக; உண்மையைக் கூறி விட்டேன்; இனி நான் உம்முடைய கட்டளைப்படி நடந்து கொள்வேன்," என்றுரைத்தாள்.

அவ்வாறு சந்திரமதி கூறவே காசிராஜன் அவள் முகத் தையும் தேகக் குறிப்பையும் நன்றாக உற்று நோக்கி, அவ ளுடைய அடக்கமான பல வார்த்தைகளையும் மனத்துட் கொண் டாலோசித்து, "இந்த அம்மையினுடைய மன

அடக்கமும், தேகவொடுக்கமும், முகக்குறிப்பும் இவள் இராக்ஷசியல்ல ளென்பதை நன்ருக விளக்கிக்காட்டுகின்றன; இன்னும் இவள் பல துன்பங்களை யடைந்து வருந்தியவள்போலவும் தோற்றுகின்ருள்; அவ்வாறு இவள் கஷ்டப்பட்டவளென்பதை இவள் சுடச்சுடச் சொல்லும் வார்த்தைகள் ஐயமறத் தெரிவிக்கின்றன; இவள் ஏதோ ஒரு வகையினுல் இந்தக் கொலைக்குற்றத்தி லகப்பட்டிருக்கின்ருள்; இப்பெண்மணி தானடைந்த கஷ்டங்களால் மனம் வருந்தி, 'நாம் இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு உயிர் வாழ்வதைக் காட்டினும் இறத்தலே நலம்,' என்று கருதித் தான் கொலை செய்ததாக இச்சமயம் ஒப்புக்கொள்ளுகின்ருள்; சீவவதை செய்தவர்களை அவர்களுடைய முகக்குறியே நன்ருகக் காட்டிவிடும்; இன்னும் அவர்களுடைய கைக்குறியும் கொலைத் தொழிலைக் காட்டிவிடும்; அவர்களுடைய இரண்டு கண்களின் குறிப்பும் அதனை வெளிப்படுத்திவிடும்; குயில்போலுந் தொனியையுடைய இப்பெண்ணினிடத்தே அத்தகைய குறியொன்றும் காணப்படவில்லை; ஆதலால், இவளுக்குத் தண்டனை விதித்தற்கு என் மனம் சிறிதும் இணங்கவில்லை," என்று மந்திரிகளை நோக்கிக் கூறினுன். அப்படி அரசன் கூறவே சந்திரமதியைப் பிடித்துக்கொண்டுவந்த தலையாரிகள் மிகவும் வணக்கத்தோடு அரசனை நோக்கி, "மன்னர் பெருமானே! இவள் நம் அரண்மனைக்குள் வந்து பிள்ளையை யெடுத்துக்கொண்டு போகும்போது பூமியிற் படிந்திருந்த இவளுடைய அடிச்சுவட்டைப் பற்றிக்கொண்டேபோய் நாங்கள் இவளைக் கண்டுபிடித்தோம்; இதில் எள்ளளவுஞ் சந்தேகமில்லை; இவள்மீது அனியாயமாகக் கொலைக் குற்றஞ் சுமத்துதற்கு எங்களுக்கென்ன அவசிய மேற்பட்டிருக்கின்றது? இவள் இக்குழந்தையைக் கொன்றதை நாங்கள் நேரில் பார்த்தோம்; இவளைக் குற்றமில்லாதவளென்று நீர் நினைத்து இப்போது விட்டுவிடுவீராஞல் கடல் சூழ்ந்த இப்பூமண்டலத்திலுள்ள இனிய உயிர்களெல்லாம் இவளால் நாசமடையும்; இவ்விஷயத்தை நன்ருக ஆலோசித்து நீர் இவளுக்குத் தக்க தண்டனை புரியவேண்டும்," என்று சொன்னுர்கள்.

அப்போது அரசன் தலையாரிகளுடைய வார்த்தைகளை அடக்கி, அவர்களை நோக்கி, "நீங்கள் சொல்லும் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கையில்லை; அரண்மனையிலிருந்து சென்றிருக்கும் அடிச்சுவடுகள் இவளுடைய அடிச்சுவடுகளாயிருந்தால்மாத்திரம் நான் இவளைக் கொலைகாரியென்று நிச்சயப்படுத்துவேன்; அந்த அடிச்சுவடுகளை ஆராய்ந்து வரும்படிச் சிலரை யனுப்பி அவர்களால் நான் உண்மையைத் தெரிந்துகொள்கிறேன்; நீங்கள் பேசாமலிருங்கள்," என்று சொல்லிவிட்டு உடனே பக்கத்திலிருந்த உத்தமரான சிலரை யழைத்து அரண்மனைக்குப் பக்கத்திற் பட்டிருந்த காற்சுவடுகளையும், சந்திரமதியின் அடிச்சுவட்டையும் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை யுணர்ந்துவரும்படி கட்டளையிட்டனுப்பினான். உடனே அவர்கள், அரசனை வணங்கிக்கொண்டு, "காற்றினாலே காற்சுவடுகள் அழிவதற்கு முன்னமே நாம் சென்று பார்த்து உண்மையை அறிந்துவருவோம்," என்று விரைந்து வீதியிற் புகுந்து, 'அரண்மனைக்குள்ளிருந்து சென்ற காற்சுவடுகள் அந்தப் பெண்ணின் அடிச்சுவடுகள் தாமா அல்லது வேறு மனிதருடைய அடிச்சுவடுகளா,' என்று தேடிப்பார்த்தார்கள். அவர்கள் அவ்வாறு பார்ப்பதற்கு முன்னமே, சந்திரமதிக்கும் அரிச்சந்திரனுக்கும் மிகுந்த துன்பங்களைச் செய்தற்குக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிந்த விசுவாமித்திரர், இவ்வாறு அடிகளை ஆராய்ந்துபார்க்க மனிதர்கள் வருவார்களென்பதை யுணர்ந்து எல்லா அடிச்சுவடுகளும் சந்திரமதியின் அடிச்சுவடுகளாகவே அவர்கள் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்யக்கருதி, விடிவதற்கு முந்தி அரண்மனையி லிருந்து சென்றிருந்த அடிச்சுவடுகளை யெல்லாம் தம்முடைய மாயையால் சந்திரமதியின் காற்சுவடுகளுக்கு ஒத்திருக்கும்படிச்செய்து, அவற்றையும், சந்திரமதி பிள்ளைப் பிணத்தைத் தூக்கிக்கொண்டு தலையாரிகளுடன் வந்த அடிச்சுவடுகளையும் வைத்துவிட்டு மற்ற அடிச்சுவடுகளை யெல்லாம் தம் கைகளால் அழித்து மறைத்துவிட்டபடியால் மேற்கூறியபடி பார்த்த மனிதர்க

ருடைய கண்களுக்கு அரண்மனையிலிருந்து சென்றிருந்த அடிச்சுவடுகளெல்லாம் சந்திரமதியின் அடிச்சுவடுகள்போ ன்று தோற்றின; அவ்வாறு தோற்றவே அவர்கள் அச்சுவடு கள் சென்றவழியேசென்று சந்திரமதி பிள்ளையையெடுத்து வைத்துக்கொண்டிருந்த விடத்திற் சேர்ந்து அவள் அங்கிரு ந்து அரண்மனைக்கேகியதனுலேற்பட்ட அடிச்சுவடுகளையும், மேற்கூறியபடி அரண்மனையி லிருந்துவந்த அடிச்சுவடுகளை யும் ஒப்பிட்டு நோக்கினார்கள்; இரண்டு அடிச்சுவடுகளும் எள்ளளவும் வித்தியாசமில்லாமல் ஒரேவிதமாயிருந்தன. அப் படி அவ்வடிச்சுவடுகளெல்லாம் ஒரேவிதமா யிருந்ததைப் பார்த்தவுடனே அவர்கள், "எல்லாம் அந்தப் பெண்ணி னுடைய அடிச்சுவடுகளாகவே யிருக்கின்றன; வேறொருவ ருடைய அடிச்சுவடுகள் இங்கே காணப்படவில்லை; ஆதலால், நம் மிராஜபுத்திரனைக் கொன்றவள் அவளையன்றி வேறொரு வருமில்லை," என்று தீர்மானித்து, அப்பொழுதே அரசன் பாற் சென்று அவன்முன்னே நின்றுவணங்கி அவன் திரு முகத்தை நோக்கி, "எங்கட்கிறைவரே! உம்முடைய உத்தர வின்படியே வீதியிற்சென்று அடிச்சுவடுகளை ஆராய்ந்து பார்த்தோம்; அரண்மனையிலிருந்து சென்றிருக்கும் சுவடுக ளும், இப் பெண்ணினுடைய பாதச்சுவடுகளும் ஒரேவிதமா யிருக்கின்றன; உமது புத்திரனைக் கொன்ற திருடி இவளை யன்றி வேறொருவருமில்லையென்பது நிச்சயமாக விளங்கு கின்றது; நீர் இவ்விஷயத்தில் எள்ளளவுஞ் சந்தேகப்பட வேண்டாம்," என்று கூறினார்கள்.

அதன்மேலும் அவ்வரசன் சந்திரமதியைத் தண்டிக் தற்கு மனமிசையாதவனாகி அந்த மனிதர்கள்கூறிய உறுதி வாக்கியங்களையும் ஒப்புக்கொள்ளாமல் மீண்டும் சந்திரமதி யின்முகத்தைப்பார்த்து, "பெண்ணே! நீ கூறும்வார்த்தைகள் மாறுபாடானவைகளா யிருக்கின்றன; உள்ளதைச் சொல்," என்று கூற, அவள் பின்னரும் உள்ளதைக் கூறாமல், "நம க்கு எல்லாக் கெடுதிகளையுஞ் செய்தற்கு விசுவாமித்திரர் விரும்பியிருக்கின்றார்; நம்முடைய அடிச்சுவடுகளும் திருட

ருடைய அடிச்சுவடுகளும் ஒரேவிதமா யிருக்கும்படிச் செய்தவரும் அவரே; ஆதலால், நாம் உண்மை கூறினும், இன்னும் அவர் ஏதேனுமோ ருபாயத்தைச் செய்து நிச்சயமாக நம்மீது கொலைக்குற்றத்தைச் சுமத்திவிடுவார்; அவர் எதைச் செய்யினும் செய்யட்டும்; நாம் இப்பொழுது ஒரே பிடிவாதமாய்க் கொலை செய்ததாகவே சொல்லி உயிரிழப்பதே நலம்; அதன்மேலாவது அந்த விசுவாமித்திரர் திருப்தி யடையட்டும்," என்று கருதிக் காசிராஜன் முகத்தை நோக்கி, "மன்னர்பெருமானே! எல்லாக் குறிப்புக்களும் நானே கொலைகாரியென்பதை வெளிப்படுத்துகின்றன; என்னுடைய அடிச்சுவடுகளும் என் கொடுந்தொழிலைக் காட்டிவிட்டன; இன்னும் ஏன் சந்தேகிக்கிறீர்; நானே பிள்ளையைக் கொன்றவள்," என்றுரைத்தாள். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அரசன் அதிசயித்து, "ஐயோ! இவள் என்ன சொன்னாலும் இவளைக் கொலைக்குற்றத்திற் குட்படுத்த என்மனம் பொருந்தவில்லை; இவள் கொலைகாரி யல்லளென்று தீர்மானிக்கலாமென்றால் வேறொருவருடைய அடிச்சுவடுகளும் மார்க்கத்தில் படாமல் இவளுடைய அடிச்சுவடுகளே பட்டிருக்கும் சாக்ஷியானது அவ் வெண்ணத்தைத் தடுத்து இவளை கொலைகாரி யென்பதை விளக்குகின்றது; இவளுக்கேதோ பழைய பாபசம்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது; அதனாலேயே இவள் இப்போது இக் கெடுதிக்குள்ளாகி யிருக்கின்றாள்; நடந்திருக்கும் விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவளைக் கொலைபுரிதலே நியாயமென்று விளங்குகின்றது; ஆயினும், அக்காரியத்தை அவசரப்பட்டுச் செய்தற்கு என்மனந் துணியவில்லை," என்று பலவாறு எண்ணித் தன் புத்திரனிறந்ததைக் குறித்து மனமிரங்குவதைக்காட்டிலும் பதின்மடங்கதிகமாகச் சந்திரமதியின்மீது இரக்கங்கொண்டு சிறிது நேரம் விசனத்தோடு ஆலோசித்துக்கொண்டிருந்து பின்பு, "யார் என்ன செய்யினும் உலகத்தில் ஒவ்வொருவருக்கும் பூர்வ கருமத்தின்படியே காரியங்கள் நடக்கும்; இப்பெண் கொலைக்குற்றத்தி லகப்படவேண்டியவிதி முன்னமே ஏற்பட்

டிருக்கின்றது; ஆகலின், நாம் பலவிதமாக ஆலோசித்து விசனிப்பதிற் பயனொன்றுமில்லை; இப்பெண்ணிற்கு மரண தண்டனை விதிப்பதே தகுதி," என்றுறுதிகொண்டான்.

காசிராஜன் சந்திரமதிக்கு மரணதண்டனை விதித்தல்.

மேற்கூறியபடி காசிராஜன் பலவிதமாக ஆலோசித்து முடிவில் சந்திரமதிக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமென்றுறுதிகொண்ட தருணத்தில், "நல்லநிறம்பொருந்திய வேலாயுதத்தைக்கொண்ட அரிச்சந்திர மகாராஜனுடைய துன்பங்களெல்லாம் இன்றோடு நான் செல்லும் இவ்விதமாகவே கழிந்துபோம்," என்று இரவானது சொல்லிக் கழிவதுபோல மைபோலும் நிறத்தினையுடைய இருள் நீங்கி விடிந்தது; அப்போது சந்திரன் தன் குலத்துப் பெண்ணாகிய சந்திரமதி படுகிற துன்பங்களையெல்லாங் கண்டு மனம்வருந்தி ஒளி குறைந்து ஆகாயத்தில் மறையவும், மேற்கூறிய இரவாகிய பெண், அவ்வாறு காசிராஜன் அநீதியாகச் சந்திரமதிக்கு மரணதண்டனை விதித்ததாகிய பாபகருமத்தைக் கண்டு அதற்கு மனம் பொறுமற் செல்வதுபோலத் தூரத்திற் செல்லவும், அரிச்சந்திரன் குலத்துக்கு முதல்வனான சூரியன், அவ்வரிச்சந்திரனுக்குத் துன்பஞ்செய்யும் விசுவாமித்திரர் முதலியவர்களைக் கோபித்தெழுவதுபோலக் கிழக்குத்திக்கி லுதயமாயினன். அன்று அரிச்சந்திரன் மனைவியாகிய சந்திரமதி கற்பைநிலை நிறுத்தி உயர்ந்தபதவியைப்பெற்ற ஒழுங்கைக்கண்டு தங்கள் கணவருக்குமுன்னே, "எங்களைப்போன்ற ஸ்திரீகள் கற்பைநிலைநிறுத்திப் பெறும் அறிவினாலுண்டாகும் பயன் இத்தன்மையுடையதாகும்," என்று அச்சந்திரமதியைக் கொண்டாடிய ஸ்திரீகளுடைய முகங்களைப்போல வயல்களிலும், குளங்களிலும், மற்றைய நீர்நிலைகளிலும் மேற்கூறியபடி உதயமான சூரியனுடைய பிரகாசத்தைக் கண்டு தாமரை மலர்கள் மலர்ந்தன.

அப்படி விடிந்தபோது, முன்னுரைத்தபடி சந்திரமதிக்கு மரணதண்டனை விதித்தற் குறுதிகொண்ட காசி

மன்னன், இறந்துபோன தன் பிள்ளையை அரண்மனைக் கனுப்பிவிட்டுச் சந்திரமதி முற்பிறப்பிற் செய்த பாவத்தினாலும், விசுவாமித்திரர் செய்த மாயைச் செய்கைகளினாலும் அவளைக் கொலைசெய்விக்கும்பொருட்டுக் கொலைக்களத்திற் கனுப்பவெண்ணி, "ஐயோ! இந்தப் பெண், நம்முடைய வினாவிற்குச் சரியான மறுமொழி கூறவில்லை; அதனால் இவள் கொலைசெய்திருக்க மாட்டாளென்பது விளங்குகின்றது; ஆயினும் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியோ இவளை கொலைகாரி யென்று சந்தேகமில்லாமல் தெரிவிக்கின்றது; இதனால் இவளை விடக்கூடவில்லை; வேறு எவரேனும் திருடர்கள் ஒருவாறு நம்புத்திரனைக் கொலைசெய்ததைக் கண்டு யாராவது தெரிவித்தாலும் இவளை விடுதலை செய்துவிடலாம்; அப்படியும் யாரும் சொல்லவில்லை; ஒவ்வொரு மனிதருடைய மனோ நிலைமையையும் அறிதல் நம்மாலியலாது; இவளுடைய தலைவிதி இவ்வாறு இக்குற்றத்திற் குட்படுத்தி யிருப்பதனால் அதன்படி இவளைக் கொலைபுரிவித்தலே தகுதி; ஆதலால், அத்தொழிலைச்செய்தற்குரிய பறையனான வீரவாகுவை விரைவில் அழைத்து வாருங்கள்," என்று பக்கத்தில்நின்ற சேவகரிடம் சொன்னான். உடனே அச்சேவகர் விரைந்தோடி வீரவாகு தங்கியிருக்கும் பறைச்சேரிக்குள் நுழைந்து அவனைக் கண்டு அவனிடம், "நம்முடைய மன்னர்பெருமான் உன்னையழைத்து வரும்படி கட்டளையிட்டனர்; ஆகலின், நீ விரைந்து வருவாயாக," என்று கூற, அவ்வீரவாகுவானவன், சுரைவிதைகளைப்போன்ற வெண்மையான பற்களையுடைய வாயையும், சிவந்தகண்களையும், கருமையான தேகத்தையும், ஒளிபொருந்திய வாளாயுதத்தைக்கொண்ட கையையு முடையவனாய்ப் புறப்பட்டு விரைவாக நடந்து அரசன் சமுகத்தை யடைந்து தூரத்தே நின்று வாயைமூடிக்கொண்டு மன நடுக்கத்தோடு வஸ்திரத்தையொடுக்கிப் பெரியவுடம்பைச் சுருக்கிக் கீழே விழுந்து நமஸ்கரித்தெழுந்துநின்று பின்பு அவ்வரசன் முகத்தை நோக்கி, "சுவாமி! இச்சமயம் நாயேனையழைத்த காரணம் யாது?" என்று கேட்டான். அப்படிக் கேட்ட வீரவாகு

வைக் காசிமன்னன் பார்த்து, அவனுக்குச் சந்திரமதியைச் சுட்டிக்காட்டி, "வீரவாகுவே! இதோ நிற்கிற இந்தப்பெண் நம்முடைய புத்திரனைத் திருடிக்கொண்டு போய்க் கொலை செய்துவிட்டதாக இவள்மீது குற்ற மேற்பட்டிருக்கின்றது; இவள் கொலைசெய்துகொண் டிருக்குங் காலத்தில் இவளைக் கண்டுபிடித்துவந்ததாக நம் தலையாரிகள் உறுதியோடு கூறுகின்றனர்; இன்னும் இவளே கொலைசெய்தா ளென்பதற்கு வேறுதக்க சாக்ஷியு மேற்பட்டிருக்கின்றது; ஆதலின், இவளுக்கு மரணதண்டனை விதித்திருக்கின்றேன்; நீ விரைவில் இவளைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோய் வெட்டிவிடு; அல்லது உன் வேலைக்காரரிடம் இவளை ஒப்புவித்து அவர்கள் கையாலாவது வெட்டும்படிச்செய்," என்று கட்டளையிட்டுச் சந்திரமதியை அவன் வசத்தி லொப்புவித்தான்.

காசிராஜன் கட்டளைப்படி சந்திரமதியை வெட்டுதற்குக் கொண்டுசென்ற வீரவாகு, அவளை அரிச்சந்திரனிடமே ஒப்புவித்து வெட்டச்சொல்லல்.

மேற்கூறியபடி காசிமன்னன்கட்டளையிடவே வீரவாகு, சந்திரமதியின் கைகளிற் பிணிக்கப்பட்டிருந்த கயிறுகளைப் பின்னு மிறுக்கிக்கட்டி அவற்றைக் கைப்பற்றிக்கொண்டு அரசனை வணங்கி உடனே சந்திரமதியை முன்னே நடத்திக் கொண்டு சென்று பறைச்சேரிக்குட் புகுந்து அங்கே தன்னுடைய வீட்டிலிருந்துகொண்டு தனக்கடிமையான அரிச்சந்திரனுக்கு ஆளனுப்பி அவனை யழைத்து வரும்படிச் செய்து அவனுக்குச் சந்திரமதியைச் சுட்டிக்காட்டி, "இவள் நம்மரசருடைய அருமைப் புதல்வனைத் திருடிக்கொண்டு போய்க் கொலைசெய்துவிட்டாள்; அக்குற்றத்திற்காக இவளைக் கொலைசெய்துவிடும்படி நம்மிறைவர் கட்டளையிட்டிருக்கின்றார்; ஆதலால், நீ இந்தத் திருடியைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோய் இவளுடைய மூண்டமானது பதைத்தோடி பக்கத்தில் விழும்படி கழுத்தைவெட்டி இவளைக் கொலைபுரிவாயாக," என்று சொல்லிச் சந்திரமதியை அவனிட மொப்புவி

த்து வெட்டுதற்குத் தன் கையிலிருந்த கத்தியையும் அவன் கையிற் கொடுத்தான். அரிச்சந்திரன், "ஐயோ! ஸ்திரீயை வதைபுரியுந் தொழிலுமா எனக் குரியதாயிற்று," என்று மனம் வருந்தி, வீரவாகுவின் கட்டளைப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு, அவன் கொடுத்த கத்தியையும் வாங்கிக் கையிற் பிடித்துச் சந்திரமதியின் கைகளைக் கட்டியிருந்த கயிற்றைப் பற்றி அவளை முன்னே நடத்திக்கொண்டு அந்தப் பறைச்சேரியை விட்டு வெளியேறினன். அப்படி வெளிப்பட்டு வீதியில் வந்தவுடன் அவன், "இராஜபுத்திரனைக் கொலைசெய்த பெண் இன்ன இலக்ஷண முடையவளென்பதை நன்றாகப் பார்த்தறிந்துகொள்வோம்," என்று கருதித் தலை குனிந்து சென்ற சந்திரமதிக்கு முன்னே வந்து அவள் முகத்தை உற்று நோக்கினன். அவ்வாறு நோக்கவே அவன், அவளைத் தன் மனைவியென்று தெரிந்து கொண்டான். சந்திரமதியும் தலைநிமிர்ந்து பார்த்து, தன்னை வெட்டக் கொண்டு செல்பவன் தன் நாயகனென்று தெரிந்து கொண்டாள். அவ்வாறு தெரிந்துகொண்ட மாத்திரத்தில் அந்தோ! அவ்விருவரும் அடைந்த துயரத்தை நாம் என்னென் றெடுத்துரைப்போம்! உடனே அரிச்சந்திரன் ஒன்றுந் தோற்றாதவனாய் மதிமயங்கி, "ஐயோ! இஃதென்ன கொடுங்காலம் சம்பவித்தது! தெய்வமே! நாங்கள் இது வரை அடைந்த துன்பமெல்லாம் போதாதோ? உயிரையும் ஒழிக்கும் வரையிலா தீவினை எங்களைத் தொடரவேண்டும்," என்று மனங் கரைந்துருகிக் கண்ணீர்விட்டழுது மேலும் சந்திரமதியை நோக்கி, "பெண்ணே! பணமும் வஸ்திரமும் தேடிவரச்சென்ற உனக்கு இவ்விதி எவ்வாறு நேர்ந்தது?" என்று வினவினன். அதற்குச் சந்திரமதி கண்ணீர்விட்டழுதுகொண்டு, "மன்னர் பெருமானே! யான் இரவிற் சென்ற வழியில் காசிராஜனுடைய குழந்தை எவராலோ கொல்லப்பட்டுக் கிடந்தது; அக்குழந்தையை நான் கண்டு, என்னுடைய கெட்டவிதியால் நம்முடைய குழந்தையென்றும், அவனைப் பூதங்கள் இழுத்துக்கொண்டுவந்து அங்கே

போட்டிருக்கக் கூடுமென்றும் நினைத்து அக்குழந்தையினருகே யுட்கார்ந்து அது நம்முடைய குழந்தைதானோவென்று பார்த்தேன்; அப்போது தலையாரிகள் வந்து நான் குழந்தையினருகே யிருப்பதைக் கண்டு நானே கொலை செய்தவளென்று தீர்மானித்து என்னைக் கட்டியடித் திழுத்துக் கொண்டுபோய் அரசன் முன்னே நிறுத்தினார்கள்; அரசனுக்கு என்மீது சந்தேக மில்லைபாயினும் என் அடிச்சுவடுகளும், குழந்தையைத் திருடியவருடைய அடிச்சுவடுகளும் ஒரேவிதமா யிருந்தபடியாலும், நான் உயிர்வைத் திருப்பதிலும் இறப்பதே நலமென்று கருதி, நானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டபடியாலும் எனக்கு மரணதண்டனை விதித்துவிட்டனர்; இச்செய்கையும் விசுவாமித்திருடைய வஞ்சனையினாலேயே நடந்திருக்கின்றது; என் உயிர்போன பின்னராவது அவர் திருப்தி யடையட்டும்; இனி என்ன வந்தாலும் சரி; நீர் சத்தியத்தைக் கைவிடவேண்டாம்; நீசன் கையால் நா னிறக்காமல் உம் கையா லிறக்கும்படி எனக்கு விதி நேர்ந்ததைப்பற்றி என் மனம் திருப்தி யடைகின்றது; நான் நல்ல தவத்தைச் செய்தவள்; உலகத்திற் றோன்றிய எல்லோரும் இறப்பவர்களே; ஆதலால், நீர் இவ்விஷபத்தைக் குறித்துச் சிறிதும் மனங் கலங்கவேண்டாம்; நம்முடைய புகழ் உலகமுள்ளளவும் நிலைநிற்கும்;" உம்முடைய குலத்தில் சிற்சில விஷயங்களுக்காக உயிர்விட்டும், கஷ்டங்களை யனுபவித்தும் புகழடைந்தவர் அநேகர்; அவர்களுடைய பெயர்கள் எப்பொழுதும் பிரகாசிக்கின்றன; அவர்களுடைய செய்கையை நினைத்து நீரும் இக்கஷ்டங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் மேல் நடத்தவேண்டிய காரியங்களை நடத்திப் புகழை நிலைநிறுத்துவீராக," என்று கூறினாள். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அரிச்சந்திரன், தனக்கு ஆறாத்துயரம் மேலிட்டும், "இனிமேல் நம்மாலாவதென்ன விருக்கின்றது? எல்லாம் தெய்வச்செயல்," என்று மனந்தேறி முகவாட்டத்துடன் சந்திரமதியை அழைத்துக்கொண்டு அப்பாற் சென்றான். அத்தருணத்தில் சத்திபகீர்த்தி யென்னும் மந்திரி

எங்கிருந்தோ வந்து அரிச்சந்திரனையும் சந்திரமதியையுங் கண்டு ஒன்றுந் தோன்றாதவனாகி மனங் கலங்கி, "இஃதென்ன கொடுங்காலம்? இந்தப் பெண் யார்? இவளைக் கட்டிக்கொண்டு செல்லவேண்டிய காரண மியாது?" என்று அரிச்சந்திரனிடம் வினவினான். அப்போது அரிச்சந்திரன் அவள் சந்திரமதி யென்னும் விவரத்தையும், தன் புத்திரனிறந்த செய்தியையும், மற்ற விவரங்களையும் அவனுக்குக் கூறினான். உடனே சத்தியகீர்த்தி, "ஐயோ! உங்களுக்கு வந்த துன்பங்களெல்லாம் போதாவோ? இத்தகைய தீவினையுமா சம்பவிக்கவேண்டும்," என்று மனம் பதறிக் கண்ணீர்விட் டழுதான். அவன் அவ்வாறு விசனிப்பதைக் கண்டு அரிச்சந்திரன் அவனுக்குத் தேறுதல் கூறிவிட்டுப் பின்னர் தன் இடக்கையில் சந்திரமதியைக் கட்டியிருக்கும் கயிற்றையும், கத்தியையும் பிடித்து, வலக்கையிற் பிடித்த பிணஞ்சுடு கோலினாலே அவளைத் தள்ளிக்கொண்டு அக்காசிமாநகரின் பெரிய வீதியிலே சென்றான். சத்தியகீர்த்தியும் அவனுக்குப் பின்னே நடந்துபோனான்.

மேற்கூறியபடி அரிச்சந்திரன், சந்திரமதியைத் தள்ளிக்கொண்டு தெருவிற் செல்லுங் காலத்தில், அந்நகரத்திலுள்ள ஸ்திரீகளும், புருஷர்களும் சந்திரமதியை வெட்டக் கொண்டுபோகும் செய்தியை யுணர்ந்து வீதியின் இரண்டு பக்கங்களிலும் கூடி மனமிரங்கி, அவர்களுட் சிலர் சந்திரமதியை நோக்கி, "ஐயோ இந்தப் பெண்ணுக்குக் கைகளோ செழுமையான தாமரைமலர்களைப்போன் றிருக்கின்றன; முகமோ பூரணசந்திரனைப்போன் றிருக்கின்றது; கணைக்கால்களோ இளமையான சினைவரால்களைப்போன் றிருக்கின்றன; உடம்போ கலாபத்தையுடைய மயிலின் சாயலைப் பெற்றிருக்கின்றது; இடையோ துவளுகின்ற கொடியைப்போன் றிருக்கின்றது; கண்களோ கூரிய வேலாயுதங்களைப்போன் றிருக்கின்றன; சுருண்ட கூந்தலோ மேகத்தை நிகர்த்திருக்கின்றது; இத்தகைய இலக்ஷணங்களையுடைய இவளுக்கும் மரணதண்டனையோ நேர்ந்தது?" என்று சொல்லி முகத்தி லடித்

துக்கொண்டு கீழ்விழுந்து கதறியழுதார்கள்; சிலர், "இவளுக்கு வெண்மையான முத்துக்களை நிகர்த்த பற்களையும், சிறந்த இரண்டு விற்களைப் பழிக்கும் புருவங்களையும், பவளத்தை நிகர்த்துக் கொவ்வைக்கனிபோலவும் விளங்கும் இதழையும் படைத்த பிரமதேவன் பூரண ஆயுளையும் படைக்காமற் போனானே; அவன் இவளைப் படைக்குங் காலத்தில் பதற்றத்தோடு மெய்ம்மறந்து இவ்வாறு படைத்துவிட்டானோ; பட்டத்து யானைமீதேறிப் பவனி வருபவரும், உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் உதவி செய்பவரும், கபடமில்லாதவரும், இரக்க முடையவருமாகிய இக்காசிமன்னர் இப்பெண்ணைக் கொலை செய்யும்பொருட்டு இப்புலையன் வசம் ஒப்புவித்ததற்குக் காரணமியாதோ?" என்று அழுது வருந்தினார்கள்; சிலர், அரிச்சந்திரனை நோக்கி, "நம்முடைய மன்னர் கோபங்கொண்டு வேலாயுதத்தைப் பழிக்கும் விழிகளையுடைய இப்பெண்ணை வெட்டிவிடக்கடவாய் என்று கட்டளையிட்ட அப்பொழுதே அக் கொலைத்தொழிலுக் கிசைந்து பிணஞ்சுடுங்கோலினாலே இவளை அடித்துக்கொண்டுவந்த இப்புலையனுடைய ஒழுக்கத்தையும், பொன்மயமான மார்பையும், திண்ணிய தோள்களையும் பார்க்கும்போது இவன் திருமாலையும், மயில்வாகனக் கடவுளையும் அழகில் நிகரற்ற மன்மதனையும் நிகர்த்து விளங்குகின்றான்; இத்தகைய இவன் இப்பெண்ணைக் கொலைசெய்தற் கிசைந்தது ஆச்சரியம்! ஆச்சரியம்!!" என்று மதிமயங்கிக் கூறினார்கள்; சிலர், அரிச்சந்திரனையும், சந்திரமதியையும், சத்தியகீர்த்தியையும் பார்த்து, "இப்பெண்ணை இப்போது தள்ளிக்கொண்டுபோகிற இம்மனிதனை நன்றாகஉற்றுநோக்கும்போதுஇவன்முந்திஇப்பெண்ணையும், இவளுடைய புத்திரனையும் விலைகூறி ஒரு வேதியனுக்கு விற்றவனைப்போன்று விளங்குகிறான்; அவனே யிவன்; இத்தகைய இவன் அவ்வாறு இப்பெண்ணையும் பிள்ளையையும் விற்பதற்கு என்ன குறை வந்ததோ தெரியவில்லை; இவன் மேற்கூறிய செய்கையைச் செய்ததற்குப் பின் இவனையே மற்றொரு மனிதன் பறையனுக்கு விற்றான்; அப்படி விற்றவனும்

இதோ இவனுக்குப் பக்கத்திலே செல்கின்றான்; இச்செய்கைகள் நடந்து நெடுங்காலமாய்விட்டது; எனினும், இவை நமக்கு நன்றாக ஞாபகத்தி லிருக்கின்றன; இப்போது இந்தப் பெண் நம் மிராஜபுத்திரனை வதை செய்ததால் இவளுக்கு இக்கதி நேர்ந்தது; இவளை விற்ற மனிதனை கொலை செய்யப் போகின்றான்; இவனைச் சார்ந்த மற்றொரு மனிதனும் வருத்தத்தோடு கூடச் செல்கின்றான்; இவர்களுடைய நிலைமை மிகவும் விநோதமா யிருக்கின்றது," என்று பேசிக்கொண்டார்கள். உண்மையை அறியாமையினாலே சிலர், சந்திரமதியை வெறுப்போடு பார்த்து, "நம்மரசர் அழும்படி அவருடைய புத்திரனைக் கொன்ற கொலைகாரி இவள்தானோ?" என்று அவளுக்குப் பின்னே தொடர்ந்து சென்றார்கள்; சிலர், "மதங்கொண்ட யானைக்கு முன்னே இவளைக் கொண்டுபோய்ப் போடுங்கள்," என்று சொல்லிக் கோபங் கொண்டார்கள்; சிலர் நெருங்கிவந்து கைகளால் சந்திரமதியின் முகத்திலிடித்துத் தூஷணையாகப் பேசி அவளுக்குத் துன்பத்தைச் செய்தார்கள்; சிலர், பக்கத்தில் நின்றவர்களை நோக்கி, "பறையனே இவளைக்கொல்லவேண்டுமென்னும் நிபந்தனை யேற்பட்டிருக்கின்றதோ? நாம் ஏன் இவளைக் கொல்லலாகாது? நம்முடைய ஆயுதங்கள் இவளைக் கொல்லமாட்டாவோ? இவ்விடத்திலேயே இந்தப் பழிகாரியை வதை செய்துவிடுங்கள்," என்று பதறிக் கூறினார்கள்; அப்படிச் சொன்னவர்களை நோக்கி வேறு சிலர், "நீங்கள் சொல்லும் வார்த்தைகள் அரசருடைய ஏற்பாட்டுக்கு விரோதமானவைகள்; இவ்வாறு மனதிற்குத் தோன்றிய வார்த்தைகளையெல்லாம் சொல்ல வேண்டாம்," என்று கூறினார்கள்; சிலர், மேற்கூறியவாறு பக்கத்தில் நின்றவர்கள் சமாதானங் கூறியுங் கேளாமல் சந்திரமதியின்மீது மிகுந்த கோபங்கொண்டு, "நம்மன்னன் மகனுயிரை வதைத்த இவள் எப்பொழுதும் அநியாயமே செய்யுங் கொடியவள்; பழியே செய்யத்தக்கவள்; இப்போது கட்டை யவிழ்த்துக்கொண்டு தவறியோடுவாளானால் பின்பு வந்து நம்முடைய உயிர்களையெல்லாங் கொல்லுவாள்; இவ

ளுடைய கண்ணுல் வெருட்டியும் பலருயிரை வாங்குவாள்; இவள் முகத்துக்கு முன்னே ஒருவரும் போகாமல் நில்லுங்கள்; இப்போது இவளுக்கு மரணதண்டனை நேர்ந்திருந்தும் இவள் சிறிதேனும் மனங்கலங்காமற் செல்கின்றுள்; இத்தகைய இவள் இராக்ஷசியென்பதற் கென்னதடை?" என்று சொன்னுர்கள்; சிலர், சந்திரமதியினுடைய வடிவத்தைப் பார்த்து அவள் இராக்ஷசி யல்லவென்று கருதி, "இவள் நம் மாசருடைய புத்திரனுயிரை வதைத்து இரத்தங் குடித்த இராக்ஷசியானுல் மனிதர் கட்டுக் கடங்குவாளோ? உடனே கட்டை யவிழ்த்துக்கொண்டு ஆகாயத்திற்போய் மறைந்து விடுவாளே? அப்படிப் போகாதிருப்பதனுல் இவள் மானிடப் பெண்ணேயாவள்; மேலும், இவள் மனத்தில் வஞ்சனை யற்றவளாகவுந் தோன்றுகின்றுள்; இத்தகைய இவள் மன்னர் புதல்வனைக் கொன்றுளென்பது நம்பத்தகாததா யிருக்கின்றது; அச்சிறுவனை இவளே கொன்றுளோ அல்லது வேறு யாரேனும் கொன்றுர்களோ; ஓ தெய்வமே! பழியில்லாத இப்பெண்ணின்மீது பழியைச் சுமத்தினுய்; உனக்கிது நீதியாமோ," என்று சொல்லி வருந்தினுர்கள்; சிலர், "கொலைக் குற்றத்திற் சம்பந்தப்பட்ட இவளை முன்னே இங்கு விலைகூறி விற்ற கொலைகாரனுகிய இப்பறையனே இப்பொழுது கொலை செய்தற்கும் கொண்டு செல்கின்றுன்; இவனுக்கு இரக்கமென்பது சிறிது மில்லையே; பசுக்களை வதை செய்யும் மகாபாதகனுன இவன் இப்பெண்ணைக் கொலைசெய்வது ஆச்சரியமன்று," என்று வருந்தி யழுதார்கள். பின்னுஞ் சிலர், "இவளை விலைகூறி விற்றவன் இந்த மனிதனே யானுல் இவளைக் கொண்டுபோய்க் கொல்லாமல் விட்டுவிடுவான்; ஆதலால், அச்செய்கையைப் பார்த்தற்கு எல்லோரும் இவனைவிடாமற் பின்பற்றிச் செல்லுங்கள்," என்று பக்கத்தில் நின்றவர்களிடம் கூறி அரிச்சந்திரனைத் தொடர்ந்து சென்றுர்கள்; சிலர், சந்திரமதியின் தோள்களிறுகும்படி சேர்த்துக் கட்டின கயிற்றைத் தாங்களும் கூடப்பற்றிச் சென்றுர்கள். சிலர், சந்திரமதியின்மீ திரக்கமுற்று அவள்

எள்ளளவுங் குற்றமற்றவளென்று நினைத்து, "ஐயோ! இவள் வேறொரு ஆதரவு மில்லாத பாவி; இவள் கொலை செய்திருக்கவேமாட்டாள்; நம்மரசர்க்கு உண்மையான சமாசாரத்தை எடுத்துக் கூறி இவளுடைய குறையைத் தீர்ப்பவர் யாவர்? தருமத்திற் கிருப்பிடமாகிய நம்மரசர் இது அனியாயமென்று கொஞ்சமேனுங் கருதாமல் இவளுக்கு மாணதண்டனை விதித்து இப் பெண்பழியை ஏற்றுக்கொண்டனரே; இனிமேல் இந்த அனியாயத்துக்கு யாவர் விசனப்படுகிறவர்? எவரையுங் காணோம்," என்று வயிறெரிந்து வருந்தினார்கள்; சிலர், அவளுடைய பரிதாபமான நிலைமையைப் பார்த்துக் கனி போன்ற வாய் காய்ந்து நாவுலர்ந்து மயங்கினார்கள்; சிலர், உடல்பதறி மனங்கரைந்தார்கள்; சிலர், புலம்பியழுதார்கள்; வேறு சிலர், "நம்மரசர் முன்பின் யோசியாமல் இவளைக் கொலைபுரியும்படி உத்தரவளித்துவிட்டார்; உலகத்தில் வல்லவர்களாயிருப்பவர்கள், தங்கள் வல்லமைக்குத் தக்கபடி இஷ்டம்போல் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்துவிடுகிறார்கள்; அவர்களைத் தடுப்பவரெவர்? இவள், அரசர் புத்திரனைக் கொலை செய்யாதவளா யிருப்பாளானால் இவளைக் கொலை புரியும் பாவம் எவரைச்சாரும்? இவள் கொலைசெய்தது சந்தேகமாயிருப்பதால் இவளைச் சிறைக்கூடத்திலாவது வைக்கலாம்; அல்லது விட்டுவிடலாம்; இவள் ஒருவாறு கொலைசெய்திருப்பாளானால் சிறைக்கூடத்தி லிருந்தாலும் வெளியே போய் விட்டாலும் அக்கொலைதானே விடாது தொடர்ந்து இவளைக் கொல்லும்; ஆதலால், நம்மரசர் இவளுக் கிப்போது மாண தண்டனை விதிக்க வேண்டியதில்லை; அவ்வாறு அவர் செய்யாமல் இவளை விட்டுவிடுவாரானால் அவருக்குப் பலவிதத்திலும் புண்ணியமே யுண்டாகும்," என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்; சிலர், சந்திரமதி தள்ளாடிச் செல்வதைப் பார்த்து, "இவளுடைய வூர் யாது? இவள் இவ்விடம் வருதற்குக் காரணமென்ன? இங்கே வந்து பெற்ற பலனென்ன? இந்தக் கொலையைச் செய்யும் புத்தி இவளுக் கெப்படி யுண்டாயிற்று? இத்தகைய கெடுதிகளெல்லாம் இவளுக்குண்

டாகும்படி என்ன விதி யேற்பட்டதோ? இவள் ஒருவாறு கொலை செய்திருப்பினும் பெண்ணா யிருப்பதால் இவளைக் கொலை செய்வது பாவம்," என்று கூறினார்கள்; சிலர், "ஓ தெய்வமே! நீ இவளுக்குச் செய்தது மிகவுங் கொடுமை; முந்தியோ இந்த மனிதனை இவளை விலைகூறி விற்கும்படிச் செய்தாய்; இப்பொழுதோ இவன் கையினாலேயே இவளை வெட்டும்படிக்கும் செய்தனை; இஃதுனக்கு நியாயமோ?" என்று மனத் தளர்ச்சியடைந்து முகத்தி லடித்துக்கொண்டார்கள்; சிலர், சந்திரமதியை முன்னே தலையாரிகள் அடித்ததை யெண்ணி, "ஐயோ! இவளைத் தலையாரிகள் அடித்த அடியை நாம் நினைக்கும்போது அவ்வடியானது நம்முடைய மனத்தை வருந்தச்செய்கின்றது; இவளுடைய செந்தாமரை போன்ற முகக்குறியால் இவளிடத்திலே கொலைக்குற்றம் சிறிதும் விளங்கவில்லை; சித்திரப் பதுமைபோன்ற இவள் எங்கே பிறந்தாளோ? எவ்விடத்தில் வளர்ந்தாளோ? எவ்வூரில் இன்ப மனுபவித்திருந்தாளோ? இவளுக்குச் சாவு இவ்விடத்திலே அமைந்தது," என்று சொல்லி வருந்தினார்கள்.

இவ்வாறு பலரும் பலவிதமாக அரிச்சந்திரனையும், சந்திரமதியையும் இகழ்ந்தும் புகழ்ந்தும் பேசி அவர்களைத் தொடர்ந்து செல்லும்போது அரிச்சந்திரன் தன்னையும், தன் நாயகியையும் சிலர் நிந்திப்பதைப்பற்றி மனம்வருந்தி, "ஐயோ! இவர்கள் இவ்வாறு நிந்திப்பதற்கு நாம் என்ன பாவத்தைச் செய்தோமோ?" என்று விசனச் சிரிப்பாகச் சிரித்துச் சந்திரமதியை முன்னே நடத்திக்கொண்டு பெரிய தோரணங் கட்டியிருக்கிற கோட்டை வாயிலைக் கடந்து அந்தப் பொன்மயமான பட்டணத்தின் மதிலுக்கு வெளியே சென்று மயானத்தை நோக்கிப்போனான். அச்சமயத்தில் தெய்வலோகத்திலிருந்த வசிஷ்டமகாமுனிவர் தேவேந்திரனைப் பார்த்து, "தேவராஜனே! அரிச்சந்திரன் விஷயமாக நானும் விசுவாமித்திரனும் உமக்கு முன்னே சபதஞ் செய்துகொண்ட அந்நாளிலிருந்து இந்நாள்வரை அவ்வரிச்சந்திரனைப் பொய்யனாக்கவேண்டி அவனுக்கு விசுவாமித்திரன் எத்தனையோ

இடையூறுகளைச் செய்தும் அவன் சிறிதேனும் சத்தியந் தவறிலன்; இன்று தன் மனைவியையும் வெட்டுதற்கிணங்கிச் செல்லுகின்றான்; இனிமேல் அவனைச் சோதிக்கவேண்டிய தென்னவிருக்கின்றது? இன்று என் சபதமே நிறைவேறிப் போம்; அரிச்சந்திரனுக்கு எல்லாத் துன்பங்களையும் நீக்கி நன்மையைச் செய்வதற்கு நீர் இப்பொழுதே அங்குப் புறப் படுவீராக," என்று கூறினார். அவர் அவ்வாறு கூறவே எப் போதும்விடாமற் சூழ்ந்திருக்கிற தெய்வப்பெண்களும், தும் புருவும், நாரதரும், மற்றைய திக்குப்பாலக ரெழுவரும், தேவர்களும், மற்றைய முனிவர்களும் தன்னோடு கூட நெருங்கிவர, வச்சிரபாணியாகிய இந்திரன் அந்த வசிஷ்ட முனிவருடனே புறப்பட்டு, அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டப்போகும் மயானத்திற்கு நேரேவந்து மனிதர் கண் களுக்குத் தோற்றாமல் ஆகாயத்திலே மறைந்திருந்தார்கள்.

அச்சமயத்தில் விசுவாமித்திரர் "ஐயோ! அரிச்சந்திர னுக்கு எண்ணிறந்த துன்பங்களையெல்லாம் செய்து பார்த்து விட்டோம்; இப்பொழுது அவன் மனைவியையும் வெட்டுதற் குக் கொண்டுபோகும்படிச் செய்திருக்கிறோம்; இதுவரை அவன் உறுதியைக் கைவிடவில்லை; இது எல்லாக் காரியங் களும் முடியுஞ் சமயமா யிருக்கிறது; இப்பொழுதேனும் அவன் நம்முடைய நோக்கத்திற் கிணங்காவிடில் நாம் வசிஷ்ட ருக்குத் தோற்றுப்போவோம்; ஆதலால், இப்பொழுதாவது ஒருபொய் கூறும்படி அவனிடம் சொல்லிப் பார்ப்போம்; ஒரு வாறு அவன், தன் மனைவியை வெட்டுதற்கஞ்சி நம்முடைய வார்த்தைக் கிணங்கினு மிணங்குவான்," என்று கருதித் தம்முடைய மாயையால் அங்குள்ள வேறு மனிதர் தம்மைக் காணாதபடி தம்முடைய வடிவத்தை மறைத்து விரைந்தோடி வந்து அரிச்சந்திரனைக் கண்டு, "திரிசங்கு புத்திரனே! நீ இதுவரை என்னுடைய வார்த்தைகளை மறுத்துரைத்து என்ன நன்மையை அடைந்தாய்? எதற்காக வீணே இத்துன் பங்களை யடைகின்றாய்; இப்பொழுதாவது முன்னே நீ எனக் குக் கொடுத்த நாட்டை, 'நான் கொடுக்கவில்லை,' என்று ஒரு

பொய் வார்த்தை கூறிவிடு; இறந்துபோன உன்னுடைய புத்திரனையும், காசிராஜனுடைய புத்திரனையும் நான் எழுப்பிச் சந்திரமதியைக் கொலைக் குற்றத்தினின்றும் விடுதலை செய்து, உனக்கு அரசாட்சியைக் கொடுத்து உன்னுடைய துன்பங்களை யெல்லாம் நீக்கிவிடுகின்றேன்," என்றுரைத்தார். அவர் அப்படி யுரைத்த வார்த்தைகளை அரிச்சந்திரனும் சந்திரமதியும், சத்தியகீர்த்தியும், வசிஷ்டமுனிவரும், ஆகாயத்தில் மறைந்திருந்த தேவர்களும் கேட்டார்களேயன்றி அரிச்சந்திரனைத் தொடர்ந்து வந்திருந்த மனிதரொருவருங் கேட்டிலர். அவ்வாறு கூடியிருந்த மனிதர் கேளாதபடி விசுவாமித்திரர் கூறிய வார்த்தைகளை அரிச்சந்திரனும் சந்திரமதியும் கேட்டவுடனே வியப்பும் வெறுப்பு முடையவர்களாய் அவருடைய பாதங்களிலே விழுந்து வணங்கி மிகவும் விசனத்தோடு அவரைப் பார்த்து, "சுவாமி! இங்கே யாரைப் பார்த்து இந்த மூடத்தனமான செய்கைக் கிணங்கும்படிச் சொல்கின்றீர்? நாங்களோ இதற்கிணங்குபவர்கள்? ஒருவர் உடம்பைப் பரிசுத்தஞ் செய்வது நீரேயாகும்; அதுபோல உள்ளத்தைப் பரிசுத்தஞ் செய்வது, தூரத்தி லுள்ளதாகிய மேலுலகத்திலும், சமீபத்தி லுள்ளதாகிய இவ்வுலகத்திலும் உயிருக்கு ஒப்பற்ற துணையாகிச் சிறந்துள்ள சத்தியமேயாகும்; இத்தகைய சத்தியத்தைக் கைவிடாதிருத்தலே தகுந்த விரதமாமெனக்கொண்டு, உலகத்தவர் அதன்பொருட்டுத் தேகத்திற்கு மிகுந்த துன்பங்களைச் செய்யினும் முடிவில் அத்துன்பங்களால் நன்மையே விளையும்; ஆதலின், நீசனுங் கூட விரும்பாத இந்த அற்பமாகிய புலால் நாற்றத்தையுடைய தேகத்தை நிலையுள்ளதென்று மயங்கி, உயிரைப் பார்க்கினுஞ் சிறந்த சத்தியத்தை நாங்கள் கைவிடமாட்டோம்; சாஸ்திரங்களை யெல்லாம் படித்துணர்ந்த நீர் எம்மிடத்தில் இந்த வார்த்தைகளைக் கூறுவதழகாமோ? இன்னும் வெப்பமிகுந்த நாகத்திலே எங்களை வீழ்த்தினாலும், 'இம்மைப்பயன், மறுமைப்பயன், மோக்ஷம் என்னும் மூன்றையுந் தாத்தக்க ஒழுக்கை யுடையது சத்தியமேயாகும்,' என்று வேதங்கள்

தெளிவாகச் சொல்லும் அறிவிற்கு மாற்றமாக நாங்கள் சத்தியத்தை யிழக்கமாட்டோம்; முனிவரே! இன்னுங் கேட்பீராக; நாங்கள் சத்தியத்தை நிலை நிறுத்தும்பொருட்டு எங்களூரையு மிழந்தோம்; பிள்ளையையு மிழந்தோம்; செல்வத்தையு மிழந்தோம்; இவற்றையெல்லா மிழந்ததோடு இனி எங்களுக் குண்டென்று சொல்லும் நற்கதியை யிழந்தாலும் வாய்மையை மாத்திரம் இழந்துவிடமாட்டோம்; இப்போது நாங்களடைந்திருக்குந் துன்பங்களைக் காட்டினும் நூறுமடங் கதிகமான துன்பங்கள் வரினும் உம்முடைய நோக்கத்திற் கிணங்குவோ மென்பதைமாத்திரம் மறந்துவிடும்," என் றுரைத்தார்கள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே விசுவாமித்திரர், "இனிமேல் நம்முடைய காரியமொன்றும்பலிக்காது," என்று வெட்கத்தை யடைந்து தேவர்களிருக்கும் பக்கத்திற் செல்லாமல் மற்றொரு பக்கத்தில் மறைந்து சென்றார். அப்படி அவர் மறைந்து செல்வதை இந்திரன் கண்டு அவரைக் கூப்பிட்டு அவரிடம், "விசுவாமித்திரரே! எங்கே மறைந்து செல்கின்றீர்; நீர் சொன்ன சபதப்படி கடைசிவரை யிருந்து காரியங்களை நடத்திச் செல்லும்," என்று சொன்னான். அப்போது அந்தவிசுவாமித்திரர் மேலும் மிகுந்த வெட்கத்தையடைந்து முகம் வாடி அத்தேவேந்திரனுடனே கூடியிருந்தார்.

அரிச்சந்திரன், சந்திரமதியை வாளால் வெட்ட, அவ்வாளானது மாலையாகி அவளுடைய கழுத்தில் விழுதல்.

மேற்கூறியபடி தேவர்களும் விசுவாமித்திரரும் ஆகாயத்திற் கூடியிருக்கும்போது, சந்திரமதியைத் தள்ளிக் கொண்டு சென்ற அரிச்சந்திரன் தன்னுடைய புத்திரன் சவமாய்க்கிடக்கும் சுடுகாட்டிற்போய்ச் சேர்ந்தான். அவனோடு கூடச் சென்ற மனிதர்களும் அங்கேபோய்க் கூடிநின்றார்கள். சத்தியகீர்த்தியும் ஒருபக்கத்தில் கண்ணீர்விட் டழுதுகொண்டு நின்றான். அத்தருணத்தில் அரிச்சந்திரன், தன்னுடைய அளவற்ற துயரங்களையெல்லாமடக்கி மனத்தைத் திடப்படுத்

திச் சத்தியமொன்றையே உறுதியாகப் பற்றிக்கொண்டு தன் மனைவியை வெட்டும்பொருட்டு அவளைநோக்கி, "பெண்ணே! நீ வழக்கமாக வணங்கும் தெய்வத்தை வணங்கிக்கொண்டு கிழக்குமுகமாக நோக்கித் தலைவணங்கி நிற்பாயாக," என்றுரைத்தான். அவ்வாறு சொல்லவே சந்திரமதி, தான் சாவதற்குச் சிறிதுமஞ்சாமல் மனத்தை ஒருநிலைப்படுத்தி உறுதியோடு, கற்புடைய மங்கையரின் வழக்கப்படி தன்னுடைய நாயகனாகிய அரிச்சந்திரனையே தெய்வமாகக் கருதி அவனுடைய பாதங்களை வணங்கித் துதித்துக்கொண்டு அவனை நோக்கி, "சத்தியசீலரே! மனிதருடைய வாழ்வானது ஜலத்திலேதோன்றுகின்ற குமிழிபோலத்தோன்றி உடனே மறையத்தக்கது; ஆதலின், நீர் என்னுடைய சாவுக்கஞ்சி உம்முடைய அருமையான தவத்தையும், தருமத்தையும், சத்தியத்தையுங் கைவிட்டுவிடாமல் அவற்றை நிலைநிறுத்துவீராக; மனத்தில் வருத்தத்தை எள்ளளவுங் கொள்ளாமற் கைவிடுவீராக; உம்முடைய புகழானது பரம்பரைவழியே வளர்ந்தோங்கி என்றென்றும் நிலைபெறுவதாக," என்று வாழ்த்திக் கிழக்கு முகமாகத் தலை குனிந்து நின்றாள். அப்படிநிற்கவே அரிச்சந்திரன் அவளை மனைவியென்று நினைத்துச் சிறிதும் மனங்கலங்காமல் உடனே வீரத்தோடு தாக்ஷணியமென்பது சிறிதுமின்றி ஒளிபொருந்திய வாளாயுதத்தை வலக்கையிற் பிடித்து அந்தச் சந்திரமதிக்குப் பக்கத்திற் போய் நின்று, "நான் இப்போது கொஞ்சமும் கைகூசாமல் இவளை வெட்டுகிறேன்; உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் பசுபதியே ஒப்பற்ற முதற்கடவுளென்பது மெய்யானால், அளவற்ற சிறப்பையுடைய அக்கடவுள் சொல்லே வேதமென்பது சத்தியமானால், அந்த வேதத்திலே சொல்லப்படுகிற பலவகைத் தருமங்களினும் மெய்யே ஒப்பில்லாத தருமமென்பது உறுதியானால், அத்தகைய மெய்யைக் கைவிடாமல் நான் பற்றியது நிச்சயமானால், அவ்வாறு மெய்யைக் கைவிடாதவனாகிய என்னிடத்தே இவள் விசுவாசங்கொண்டு தன் கற்பை விட்டு நீங்காதிருப்பது நிலையானால் இவள்சாவினின்றும் நீங்குவாளாக;

மேற்கூறியவைகளெல்லாம் இல்லையானால் இவ்வாளால் வெட்டுண்டு இப்பொழுதே இவள் உயிர்விடுக,'' என்று சொல்லி அந்த வாளினால் ஓங்கி அவளுடைய கழுத்தில் வெட்டினான். அவ்வாறு வெட்டவே அரிச்சந்திரனுடைய சத்தியமகிமையாலும், தேவர்களின் கிருபையாலும், அங்குக் கூடியிருந்த எல்லோரும் அதிசயிக்கும்படி அவ்வாளானது இரண்டாவது கலியாணத்திற்கிட்ட மாலையாகிச் சந்திரமதியின் கழுத்திலே விழுந்தது.

மயானகாண்டம் முற்றுப்பெற்றது.

மீட்சி காண்டம்.

கலித்துறை.

“படத் தகாதபா டியாவையும் பட்டுளத் தழுத்துந்
திடத்தி னின்றுவாள் வெட்டினிற் பிழைத்திடு செழுந்தீப்
புடத்தி னின்றுமாற் றுயர்ந்தசெம் பொன்னெனப் பொலிந்
மடத்திற் றீர்ந்தொளிர் சந்திர வதியெனு மணங்கு.''[தாள்

‘‘சடைபட் டோங்கிய முடிமுனி தனதுசூழ் வினைபால்
அடைபட் டுறுபா டனைத்தையுங் கடந்துசா வணையினுற்
கடைபட் டானபின் செழுமணி யெனவொளி காட்டிக் [ல்.''
கொடைபட் டார்புகழ்க் கோமகன் விளங்கினன் குணத்தா

மேற்கூறியபடி அரிச்சந்திரன் வெட்டிய வாளானது மணம்பொருந்திய மாலையாகிச் சந்திரமதியினுடைய கழுத்தில் விழுந்தவுடனே, அறியாமைக்குணத்தினின்றும் நீங்கி அறிவோடு விளங்கும் அச்சந்திரமதியானவள், விசுவாமித்திரருடைய வஞ்சனையினால் அடைபத்தகாத துன்பங்களையெல்லாமடைந்தும் சத்தியத்தை விடாமல் மனத்திலே நிலை நிறுத்திய உறுதியைப்பற்றி அதன் வழியிலேநின்ற விசேஷத்தினாலே அவ்வாள் வெட்டினின்றுந் தவறித் தெய்வீகம் பொருந்திய மாலையையணிந்துகொண்டு, தன்னிடஞ் சேர்ந்தவற்றைச் சுட்டெரிக்கத்தக்க வெப்பமிகுந்த நெருப்புப்பற்றிய

புடத்தினின் றெரிந்து களங்கமெல்லாம் நீங்கி மாற்றுயர்ந்து விளங்கும் செம்பொன்னைப்போன்று தன்னுடைய புகழானது எங்கும் பிரகாசிக்க நின்றாள். தன்னுடைய கையிலே கொடை வளர்ந்தோங்குவதனாலே நிறைந்த புகழைக் கொண்ட அரிச்சந்திரன், சடைவளர்ந்துயர்ந்த முடியையுடைய விசுவாமித்திருடைய தந்திரமான வஞ்சனைச் செய்கைகளினாலே பலதுன்பங்களி லகப்பட்டும், அக்கஷ்டங்களையெல்லாங் கடந்து தன்னுடைய சத்தியத்தின் உயர்வாலே சாணையிற் கடையப்பட்டபின் ஒளிமிகுந்து விளங்கும் செழிய இரத்தினம்போன்று, தன்னுடைய கீர்த்தியாகிய வொளியை எவ்விடத்தும் விளக்கிக் காட்டி மிக்க பிரகாசத்தோடு விளங்கினான்.

தேவர்கள் பிரசன்னமாகி அரிச்சந்திரனுக்கு வரங்கொடுத்தல்.

அச்சமயத்தில் அறிவுமிகுதியினாலே மாட்சிமை யடைந்த சந்திரமதியென்னும் பொற்கொடி தன்னைச் சேர்ந்த விசேஷத்தினாலே கீர்த்தியைப்பெற்றோங்கிய அரிச்சந்திரனுடைய குலத்தினது பெருமையும், குணத்தினது பெருமையும், அழகின் பெருமையும், சத்தியத்தின் பெருமையும் அவ்விடத்தில் விளங்க, அவ்வரிச்சந்திரனும் சந்திரமதியினும் அங்குண்டாகிய தெய்வீகமான செய்கையைக் கேட்டுணர்ந்து, முன்னமே அரிச்சந்திரனோடு வந்து கூடியிருந்த ஜனங்கள் தவிர, காசிநகரத்திலிருந்த மற்ற மனிதர்களும் அவ்விநோதத்தைப் பார்த்தற்கு ஓடிவந்து அங்கு நிறைந்தார்கள். அப்போது காசிராஜன் தன்னுடைய புத்திரனைத் தகனஞ் செய்தற்கு அங்கே சென்றிருந்தபடியால் அவனும் அவ்விசேஷத்தை யுணர்ந்து, "நாம் நினைத்தபடியே அந்தப் பெண் தெய்வத்தன்மை பொருந்தியவளானாள்," என்று மகிழ்ந்து தன்னைச் சூழ்ந்த மந்திரிகளோடு அரிச்சந்திரனிருக்குமிடத்திற் கோடிவந்து அவனையும், சந்திரமதியையும் பார்த்து அதிசயித்து நின்றான். சத்தியகீர்த்தி அளவற்ற உவகை

யோடு அரிச்சந்திரனுக்குப் பக்கத்திலே நின்றான். இவர்க ளெல்லோரும் இவ்வாறு சூழ்ந்து நிற்க, மேற்கூறியபடி அரிச்சந்திரன் வெட்டிய வாளானது மாலையாகிச் சந்திரமதி யின் கழுத்தில் விழுந்ததைக் கண்டமாத்திரத்தில் ஆகாயத் திற் கூடியிருந்த தேவர்க ளெல்லோரும், அரிச்சந்திர னுடைய சத்தியத்தின் உயர்வை யெண்ணி அவனை மெச்சி ஆனந்தக்கூத்தாடி அவன்மீது புஷ்பமாரியைச்சொரிந்து பின் னர் அந்தச் சுடுகாட்டு நிலத்திலே யிறங்கி நெருங்கிக் கூடி னார்கள். அப்போது விசுவாமித்திரரும் அவர்களுடனே வந்து, தாம் தோல்வி யடைந்திருந் தும், 'நம்மாலன்றோ அரிச்சந்திரன் தேவர்களை யெல்லாம் தரிசிக்கப்பெற்றான்,' என்று அதற்காகத் திருப்தியடைந்து, அரிச்சந்திரனுக்கு முன்னே அங்கு நின்றவர்களை நோக்கி, "என்னாலன்றோ அரிச்சந்திரனுடைய நற்குணங்களெல்லாம் விளங்கின; நான் இவனுக்குத் துன்பஞ் செய்யாவிடில் இப்போது தேவர்க ளெல்லோரும் இவன் முன்னே பிரசன்னமாவார்களா? நான் இவ்வாறு அரிச்சந்திரனுடைய நற்குணங்கள் வெளிப்படுவ தற்குக் காரணமா யிருந்தபடியால் இவனுக்கு மிக்க உதவி புரிந்தவனாகின்றேன்; என்னைப்போல இம்மன்னனுக் குதவி செய்தவ ரெவர்?" என்று சொல்லி முகமலர்ச்சியோடு நெரு ங்கி நீண்டு வளர்ந்த சடைகள் அவிழ்ந்து பிடரியிலே விழுந் தாடத் தாமும் வெற்றிகொண்டவர்போன்று வெட்கங் கெட்டு ஆனந்தக் கூத்தாடினார். விசுவாமித்திரரால் அரிச்சந் திரனுக்கேற்பட்ட கெடுதிகளைக் குறித்துத் தினந்தோறும் மனம் வருந்தியிருந்த வசிஷ்டரோ, அப்போது அவ்வரிச் சந்திரனுடைய மனவுறுதியை யெண்ணித் தம்முடம்பெல் லாஞ் சிலிர்க்கப் புளகாங்கிதங் கொண்டார்; அரிச்சந்திரனுக் கேற்பட்ட இறந்தகாலத் தியல்பையும், நிகழ்காலத் தியல்பை யும், வருங்காலத் தியல்பையு முணர்ந்து கூத்தாடினார்; வெற்றியிற் சிறந்து எல்லாரினு மேற்பட்டு விளங்கினார்; சந் தோஷ மிகுதியால் தேகச் சோர்வடைந்தார்; தம்மை மற ந்து அங்குமிங்கும் ஓடிக் குதித்தார்; அவ்வாறு அவர் ஓடி

யாடும்படி அவருக்குண்டாகிய சந்தோஷமானது மேன் மேலும் வளர்ந்துகொண்டிருந்தது.

அப்படி வசிஷ்டர் முதலிய எல்லோரும் சந்தோஷித்து அங்கே கூடியிருக்குந் தருணத்தில் சிவபெருமான், அரிச் சந்திரன் சத்தியத்தை நிலைநிறுத்தியதையும், அவனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும்பொருட்டு அவனிடம் தேவர் கள் சென்று கூடியிருப்பதையு முணர்ந்து தாமும் அங்கே சென்று அவ்வரிச்சந்திரனுக்கு வரத்தைக் கொடுக்க வெண் ணித் தமக்குப் பக்கத்திலிருந்து விளங்கும் புத்திரராகிய விநாயகரும், முருகக்கடவுளும் பின் தொடர்ந்துவர, கொன் றைமாலை விளங்கும் சடைமுடியை அடிக்கடி அசைத்துக் கொண்டு பார்வதி தேவியுடனே இடபவாகனத்தி லேறித் தேவர்கள் கூடியிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார்; அவ ரைப்போலவே அசுரர்களை நாசப்படுத்திய பஞ்சாயுதங் களைத் தரித்த மகாவிஷ்ணுவும் இலக்குமியுடன் கருடவாக னத்திலேறி மகிழ்ச்சியோடு அங்குவந்து சேர்ந்தார்; அந்த மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலே தோன்றிய பிரமாவும் சரஸ்வதியுடனே அன்னவாகனத்தின்மே லேறிவந்து சேர்ந் தார். இன்னும், சந்திர சூரியர்களும், வைரவர்களும், கற்பிற் சிறந்த சப்தமாதர்களும், இயக்கர்களும், இரதிதேவியும், அவளுடைய நாயகனான மன்மதனும், மேலுலகத்திலுள்ள மற்றவர்களும் அச்சுடலையில் வந்து கூடினார்கள். அப்போது மந்தரகிரிபோலும் பல தோள்களையுடைய வாணாசுரன் தன் னுடைய கழுத்திலே மாட்டிக்கொண்டு கையால் முழக்கு கின்ற குடமுழாவின் சத்தமும், ஆகாயதுந்துமி யென்னும் வாத்திய வொலியும்; சின்னம், பேரிகை, சல்லரி, எக்காளம் முதலிய வாத்திய வோசைகளும், மேகத்திற் றோன்றும் இடி முழக்கத்தையும் கடல் முழக்கத்தையும் நிகர்த்து முழங் கின; அங்கே நெருங்கின தெய்வப்பெண்கள் சொரிந்த கற்ப கப் பூங்கொத்துக்களும், பொன்னாலாகிய மலர்களும் எங்கும் நிறைந்து விளங்கின.

அவ்வாறு வாத்திய முழக்கத்துடனும், புஷ்பமாரியுடனும் வந்து கூடிய தேவர்களை யெல்லாம் அரிச்சந்திரன் கண்டு அடங்கா ஆனந்த முடையவனாய்த் தேகம் பூரித்து, "உலகத்தில் நான் செய்த தவமே மிகவுஞ் சிறந்தது; என்னுடைய தவமகிமையினாலேயே உலகத்தில் எவரும் எளிதிற் காணமுடியாத தேவர்களையெல்லாம் நான் தரிசிக்கப்பெற்றேன்; இங்கு என்னைப்போலப் புண்ணியஞ் செய்தவரெவர்?" என்று சொல்லி ஆனந்த மிகுதியினால் தன்னை மறந்து அந்தத் தேவர்களை நோக்கிப் பூமியில் விழுந்து வணங்கினான்; அவ்வாறு வணங்கி உடனே எழுந்திருந்தான்; மீண்டும் அந்தத் தேவர்களுடைய அடியில் விழுந்து அவர் பாதங்களை முடிமேலே சூட்டிக்கொண்டு புழுதியெல்லாம் தன்மீது படும்படி மண்மேற் கிடந்து புரண்டான்; ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்; பலவாறு துதித்தான்; அதன்மேல் விரைந்தெழுந்து பார்வதி நாதனான சிவனையும், மகாவிஷ்ணுவையும், சதுர்முகப் பிரமாவையும், வேலாயுதக்கடவுளையும், விநாயக மூர்த்தியையுங் கண்டு நாக்குளறத் துதித்துப் பன்முறை கீழே விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கினான். சந்திரமதி, சத்தியகீர்த்தி, காசிராஜன் முதலியவர்களும் அவ்வாறே எல்லாத் தேவர்களுக்கும் முன்னே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்கள். அப்படி அவர்கள் வணங்கவே எல்லாத் தேவர்களும் அவர்களை நோக்கி, 'போதும்! போதும்!!' என்று தங்கள் கைகளால் அமைத்தார்கள். அப்படி அமைத்த தேவர்கள் எண்ணிலடங்காதவர்களாயிருந்தபடியால், எவரும் இன்னவர் இன்னவர் என்று பகுத்துக் கூறமுடியாதவர்களாயிருந்தார்கள். அதனால் அரிச்சந்திரன் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வணக்கங் கூறமுடியாமலிருந்தபடியால் அவன் மீண்டும் பரமசிவனை நோக்கி வணங்கி, "சுவாமி! இங்கு வந்து கூடியிருக்கும் எல்லோருக்கும் என் வந்தனம் ஏற்கக் கடவது," என்று சொல்லிப் பொதுவாய் எல்லோருக்கும் வணக்கஞ் செய்தான். அவ்வாறு செய்யவே மாத்திரனடியில் ஓரிடத்திலே யூற்றின ஜலத்தைப் பல கிளைகளும் கிரகித்துக்

கொள்ளுதல்போலச் சிவனுக்கு முன்னே அரிச்சந்திரன் செய்த அவ்வணக்கத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டு மனக்குளிர்ச்சி யடைந்தார்கள். அச்சமயத்தில் வசிஷ்ட முனிவரும் ஒரு பக்கத்தில் நிற்கக் கண்டு அவ்வரிச்சந்திரன் விரைந்தோடி அவர் பாதங்களிலும் விழுந்து வணங்கி, "சுவாமி! நீரிருந்தும் எனக் கித்தகைய துன்பங்கள் வரலாமோ?" என்று அவரிடம் சொல்லிப் புலம்பினன். அவர், "அரிச்சந்திரா! வருந்தாதே; இத்துன்பங்கள் நன்மைக்கே நடந்தன," என்று சொல்லி அவனைத் தேற்றினர்.

அதன்மேல் அரிச்சந்திரன் தன் மனைவியோடு சிவனுக்கு முன்னே நின்று கைகூப்பிக்கொண்டு, "எங்களை வமிச பாம்பரையாக ஆட்கொண்டருளும் அந்திவண்ணனே! முக்கண்ணனே! சிவலோகத்திற்கிறைவனே! வேதமுதல்வனே! மெய்யர்க்குக் கிருபை செய்யுந் துய்யனே! அயனு மாலுந் தேடியறிய முடியாத உம்மை இவ்வாறு நேரில் கண்டு தரிசிக்க நாங்கள் எத்தகைய தவத்தைச் செய்தோம்? எங்கள் தவமே மிகவும் சிறப்புடையது," என்று கூறித் துதித்தான். உடனே சிவன், அவனுடைய துதிக்கு மகிழ்ந்து, அவனை நோக்கி, "அரிச்சந்திரா! உனக்கு எல்லாநலங்களு முண்டாவதாக," என்று வாழ்த்தினர். அப்போது பார்வதிதேவி சந்திரமதியைத் தன் கைகளால் கட்டித்தழுவி அவளுக்கு வாழ்த்துதல் கூறி அவளுடைய கற்பை மிகவுங் கொண்டாடினள். அவ்வாறு பார்வதி, முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த தன்னுடைய கையினல் தழுவியமாத்திரத்தில் சந்திரமதியினுடைய உடம்பெல்லாம் நெகிழ்ந்து உரோமங்கள் சிலிர்த்தன; அவளுடைய உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கியெழுந்து மேல் வழிந்தோடியது.

தேவராஜனும், காசிராஜன் புத்திரனும், உயிர்பெற்றேழுதல்.

அத்தருணத்தில் கிரவுஞ்சகிரியைப் பிளந்த வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள் இறந்து கிடந்த தேவதாசனுக்

குச் சமீபத்திற் போய் "தேவதாசா! எழுந்துவா," என்று கூப்பிட்டார். உடனே எல்லோரும் அதிசயிக்கும்படி அவன் தூங்கி விழித்தவன் போன்று உயிர்பெற்றெழுந்தோடிவந்து முருகக்கடவுளை வணங்கினான். பின்பு, அவர் காசிராஜன் புத்திரனையும் அவ்வாறே அழைத்தார்; அவனும் உயிர்பெற்றெழுந்தோடிவந்து அவரை வணங்கினான். பின்னர் அம்முருகக் கடவுள் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு வந்து அரிச்சந்திரன் முதலியோர் நிற்குமிடத்தில் விட்டார். உடனே அவ்விரண்டு புத்திரர்களும், தேவர்கள் முதலிய எல்லோரும் கூடிநிற்பதைப் பார்த்து பிரமித்து அதிசயித்து அந்தத் தேவர்களையும், தங்கள் தந்தைதாய் முதலியோரையும் வணங்கி, அரிச்சந்திரனும், காசிராஜனும் நடந்த விஷயங்களைச் சொல்ல அவர்களுணர்ந்து மகிழ்ந்து பரிசுத்த உடம்பையுடையவர்களாகி நின்றார்கள். அதன்மேல் முருகக்கடவுள் அவ்வாறு அப்பிள்ளைகளை யெழுப்பினதற்காக அரிச்சந்திரனும், காசிராஜனும் மகிழ்ந்து தங்கள் பிள்ளைகளுடன் பன்முறை அவரை வணங்கி, "சுவாமி! இவ்வேழைகள்மீது தாம் செய்த கிருபைக்கு நாங்கள் வணங்குவதல்லது வேறென்ன கைம்மா றியற்றப்போகின்றோம்?" என்று சொல்லித் துதித்தார்கள். அவரும் அவ்விருவருக்கும் ஆசி கூறி அவர்களை வாழ்த்தினார். அதன்மேல் சிவன்முதலிய மும்மூர்த்திகளும் அரிச்சந்திரனை நோக்கி, "சத்தியத்திற் சிறந்த உத்தம குணசீலனே! உன்னுடைய சிறந்த குணம் வேறெவரிடத்திலு மிராது; முன்னே உலகத்திற் றோன்றிய உத்தமரெல்லாரினும் நீ நீதியிற் சிறந்தவன்; உன்னுடைய கீர்த்தி உலகத்தில் என்றென்றும் நிலைபெறும்," என்று கூறியும், சந்திரமதியை நோக்கி, "கற்பை நிலைநிறுத்திய உத்தமியே! உலகத்திலுள்ள எல்லாப் பதிவிரதைகளினும் நீ சிறந்தவளாவாய்; உன்னைப்போல நன்மார்க்கத்தைக் காக்கு மனவுறுதிபூண்டவர் ஒருவருமிரார்; உன்னுடைய பெயர் உலகத்தில் என்றென்றும் கொண்டாடப்படும்," என்றும், தேவதாசனையும், காசிராஜன் புத்திரனையும் நோக்கி, "உங்களுடைய

பெயர் உலகத்தில் எப்பொழுதும் நிலைபெறும்," என்றும், காசிராஜன், சத்தியகீர்த்தி முதலியவர்களை நோக்கி, "நீங்கள் அரிச்சந்திரனுக்கும், சந்திரமதிக்கும் நேர்ந்த காரியங்களிற் சம்பந்தப்பட்டவர்களாதலால் நீங்களும் மகா புண்ணியசாலிகள்; உங்கள் புகழும் உலகத்தில் என்றும் நிலைபெறும்," என்றும் கூறி அவர்களை வாழ்த்தினார்கள். அப்படித் தேவர்களுக் கெல்லாம் தேவரான மும்மூர்த்திகளும் கிருபையோடு மொழிந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அரிச்சந்திரன், சந்திரமதி, காசிராஜன், அவர்களுடைய புத்திரர்கள், சத்தியகீர்த்தி ஆகிய எல்லோரும், "நம்மைப் போல் உலகத்திற் பேறுபெற்றவர்கள் யாவர்?" என்று பெருமகிழ்ச்சி யடைந்து அவர்களுள் ஒவ்வொருவரும் தனித் தனியே அம்மூர்த்திகளைத் தோத்திரஞ் செய்தார்கள்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்குத் துன்பஞ்செய்ததற்
கேற்பட்ட காரணத்தை எல்லோரும் தெரிந்துகொள்ளல்.

அப்படி அவர்கள் துதித்த சமயத்தில் பார்வதி நாதனான பரமசிவக்கடவுள் அவர்களை இருகைகளாலும் அமைத்துவிட்டுப் பின்னர் விசுவாமித்திரரைச் சமீபத்தி லழைத்து "கௌசிகரே! இப்போது எல்லாக்காரியங்களும் முடிந்துவிட்டன; இனி, நீர் அரிச்சந்திரனுக்குத் துன்பங்களைச் செய்ததற் கேற்பட்ட காரணத்தையும், ஆதியிலிருந்து இதுவரை நடந்த மற்ற விஷயங்களையும் இங்குள்ள எல்லோரு மறியும்படி கூறுவீராக," என்று கட்டளையிட்டார். பரமசிவன் அவ்வாறு கூறவே, விசுவாமித்திரர் அச்சிவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து மிகுந்த பயபக்தியுடனே அவர் சந்நிதியில் நின்று முன்னொருமிலே தேவசபையில் இந்திரன், 'பூலோகத்திலுள்ள மனிதர்களில் சத்தியந் தவறாதவர் யாவர்?' என்று வினவியதையும், அதற்கு வசிஷ்டர், 'அரிச்சந்திரனே சத்தியமுடையவன்,' என்றுரைக்கத் தாம் அவர்மீதேற்பட்ட பகையினல் அவ்வார்த்தையை மறுத்துரைத்து, 'அவனைப் பொய்யனுக்குகிறேன்,' என்று சொல்லிச் சபதஞ் செய்துகொண்டதையும், அதன்மேல் தாம் பூலோகத்திற்கு

வந்து அரிச்சந்திரனைப் பொய்யனுக்க வேண்டி அவனுக்கு ஓயாமல் பல துன்பங்களைச் செய்துவந்த விவரத்தையும், அவன் எல்லாத் துன்பங்களையு மடைந்தும் தன்னுடைய விரதத்தைக் கைவிடாமல் காப்பாற்றிய மனவுறுதியையும் அங்குக் கூடியிருந்த எல்லோருங் கேட்கும்படி கிரமமாகக் கூறினர். அவ்விவரங்களை யெல்லாம் அங்கு நின்றவர்க ளெல்லோரும் கேட்டு, "ஆ! ஆ! விசுவாமித்திரர் அரிச்சந்திர மகாராஜனுக்குத் துன்பஞ் செய்யும்படி நேரிட்ட காரணம் இதுவா? அப்படியானல் அவர்மீது குற்றமில்லை; அவரால் இம்மன்னனுடைய மேன்மை எல்லோருக்கும் விளக்கமாயிற்று," என்று கூறி அதிசயத்தையும், ஆனந்தத்தையு மடைந்தார்கள்.

அதன்மேல் பரமசிவன் விசுவாமித்திரரை நோக்கி, "முனிவரே! நீர் வீணே வசிஷ்டமுனிவரோடு கொண்ட பகையினுல் சபதங்கூறி அச்சபதத்தை நிறைவேற்றும்பொருட்டு அரிச்சந்திரனுக்கு அளவற்ற துன்பங்களைச் செய்தீர்; அவ்வாறு செய்தும் அவன் சத்தியத்தினின்று எள்ளளவும் பிசகவில்லை; ஆகலால்,இப்பொழுது வென்றவர்யார்? தோற்றவர் யார்? நீரோ? வசிஷ்டமுனிவரோ?" என்று வினவினர். அதற்குவிசுவாமித்திரர், "சுவாமி! நான்அரிச்சந்திரனுடைய மனவுறுதியைத் தெரிந்துகொள்ளாத தோஷத்தால் இவ்வாறு வீணே வசிஷ்டரோடு பகைகொண்டு அவமானத்தை யடைந்தேன்; இப்போது தோற்றவன் யானே; வென்றவர் வசிஷ்டரே; நான் முன்னே தோற்றுப்போனல் என்னுடைய தவத்திற் பாதியை வசிஷ்டருக்குக் கொடுப்பதாகச் சொன்னேன்; இச்சமயத்தில் அரிச்சந்திரனுடைய செய்கையைப் பற்றி எனக்கு இவன்மீது அளவில்லாத திருப்தி ஏற்பட்டிருக்கின்றது; ஆதலால், நான் கூறியபடி என்னுடைய தவத்திற் பாதியை அவருக்குக் கொடுத்து, அதை அவர் ஏற்று இவனுக்கே கொடுத்துவிடும்படிச் செய்து, முன்னே இவன் எனக்குக் கொடுத்த அரசாட்சியையும் இவனிடமே கொடுத்துவிடுகிறேன்," என்றுரைத்தார்.

விசுவாமித்திரர் அவ்வாறு கூறியவுடனே அரிச்சந்திரன் எல்லாம் தன்னுடைய சத்தியத்தைச் சோதித்தறிதற்கே தேவர்களுடைய சம்மதத்தின்மேற் செய்யப்பட்ட விஷயங்களென்றறிந்தும், அச்சமயத்திலும் கொடுத்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல் குற்றமென்று கருதி அவ்வார்த்தைகளைக்கேட்டு நாராசத்தைக் காய்ச்சித் தன்செவியில் விட்டது போல வருந்தி மனம் பதைத்து, விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! முந்திக் கூறினதுபோல இப்பொழுதும் கெடுதியான வார்த்தைகளையே கூறுகின்றீர்; ஒருவர் கேட்ட பொருளை இல்லையென்று கூறி மறைத்துக்கொள்ளும் பாவிகளும் கூடக் கொடுத்த பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்; யாசித்தவர்களுக்குக் கொடுத்த பொருளை மீண்டும் வாங்கிக்கொண்டால் அது, இப்பிறப்பிலும் பழிப்பை யுண்டாக்கும்; வருபிறப்பிலும் தீமையை விளைவிக்கும்; இத்தகைய பழிப்பை யேற்று உலகத்தை யாள்பவன் யானோ? நீர் இதுவரை எனக்குண்டாக்கிய துன்பங்களெல்லாம் போதாதோ? இன்னமும் ஏன், எனக்கு வீணே பழிப்பை யுண்டாக்க நினைக்கிறீர்," என்று கூறினான். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் விசுவாமித்திரர் மீண்டும் அரிச்சந்திரனை நோக்கி, "சத்தியகுணத்திற் சிறந்த உத்தமனே! எல்லாம் உன்னுடைய சத்தியத்தைச் சோதித் தறிதற்குத் தேவர்களுடைய சம்மதத்தின்மேல் செய்யப்பட்ட விஷயங்களென்பதை நீ இப்பொழுது நன்றாகத் தெரிந்துகொண்டாய்; அச்செய்கைகளை யெல்லாம் செய்யும்படி எனக் கனுமதி கொடுத்த தேவர்களெல்லோரும் இதோ உனக்கெதிரே நிற்கின்றார்கள்; இச்சமயம் எல்லாக் காரியங்களும் முடிந்து விட்டன; நீ மிகவும் புண்ணியசீலனாக விளங்குகின்றாய்; இனி உன்னுடைய இராஜ்ஜியத்தைப் பெற்றுக்கொண்டு நீ சுகமாக வாழுதலே கிரமம்; நான் அந்த இராஜ்ஜியத்தை இனி வைத்திருத்தல் தகுமா? முந்தியே எல்லாவற்றையுந் துறந்து முனிவனான நான் மீண்டும் அரசனாவேனா? இப்போது நீ எள்ளளவுஞ் சந்தேகங்கொள்ளாமல் அரசாட்சியை

ஏற்றுக்கொள்," என்றுரைத்தார். அதன்மேலும் அரிச்சந்திரன், "நாம் இவ்வளவு தாழ்மையை அடைந்துவிட்டு மீண்டும் சிம்மாசனத்திற்போய் உட்காருதல் தகுதியாகுமா?" என்று மனங்கூசி விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! நீர் சொல்வது ஒருவாறு சரியே, ஆயினும், நான் ஒரு பிராமணருக் கடிமைகளாகும்படி என் மனைவியையும், புத்திரனையும் விலைக்கு விற்றேன்; நானும் ஜாதியிற் ருழ்ந்தவனான ஒரு நீசனுங் கடிமையாகி இச்சுடுகாட்டிற் காவல்புரிந்து பிணஞ்சுடுந் தொழிலை மேற்கொண்டேன்; இத்தகைய இழிவையடைந்த இவ்வேழை இனி, ஒளிபொருந்திய சபாமண்டபத்திலே, இரத்தின சிங்காதனத்திலேறியிருந்து பிரகாசமுள்ள கிரீடத்தைச் சூடிக்கொள்ளுதல் தகுதியாமோ? அவ்வாறு செய்யின் என்னை எவர் மதிப்பார்? ஆகலால், அஃதெனக்குத் தகாது; அரசாட்சி செய்யுந்தொழில் உமக்கே தக்கது; எனக்குச் சுடுகாடு காக்குந் தொழிலேதக்கது," என்று கூறினன்.

தன்மேல் தேவர்களெல்லோரும், அரிச்சந்திரன் கடைசிவரையிலும் மனவுறுதியைக் கைவிடாதிருப்பதற்காக மகிழ்ந்து, அச்சமயத்தில் அவன் கொண்ட கருத்தை மாற்றி அவனிடம் அரசாட்சியை ஒப்புவித்து அவனை உயர்வுடையவனாகச் செய்யவெண்ணி, வேதியனும் நீசனுமாகிச் சந்திரமதியையும், அரிச்சந்திரனையும் விலைக்கு வாங்கியிருந்த அக்கினியையும் எமனையும் நோக்கி, "நீங்கள் உண்மையைத் தெரிவித்து, அரிச்சந்திரன், தானும், மனைவியும் உங்களுக்கு விலைப்பட்டதனால் தம்மை இழிவுடையவராகக் கருதியிருக்கும் எண்ணத்தை மாற்றுவீராக", என்றுரைக்க, அவர்களுள் சந்திரமதியை விலைக்குவாங்கிய பிராமணனாகியிருந்த அக்கினி தேவன், பரமசிவனுக்கும் அரிச்சந்திரனுக்கும் முன்னே வந்து நின்று அரிச்சந்திரன் முகத்தை நோக்கி, "மன்னனே! நான் அக்கினிதேவன்; உன்னுடைய மனைவியை விலைக்கு வாங்கினவன் நானே; அவளை விலைக்கு வாங்கும்பொருட்டு நான் இக்காசியில் வேதியனாகி யிருந்தேன்; அவள் எனக் கடிமைப்பட்டது இழிவாகாது; உன்னுடைய சத்தியத்தைச்

சோதித்தறிதற் பொருட்டாகவே நாங்களெல்லோரும் விசுவாமித்திருக் கிணங்கி, இக்காரியங்களை நடத்தினேம்; ஆதலால், நீ விசுவாமித்திரர் சொல்லுகிறபடி அரசாட்சியை ஒப்புக்கொண்டு சுகமாக வாழக்கடவாய்; இதோ நீ சந்திரமதியை விற்கும்போது எழுதிக்கொடுத்த அடிமைச் சீட்டிருக்கிறது பார்," என்று அடிமையோலையை அவன் கையிற் கொடுத்தான்; பின்னர் அரிச்சந்திரனை விலைக்குவாங்கிய நீசனாகியிருந்த எமன், கருமையான எருமைக்கடாவின் மேலேறிக் கரியமேகமானது விட்ட கிளைகளைப்போன்ற கைகளுடனே பொருந்திய வடிவமும், சிவந்த கண்களும், நீண்ட தலைமயிர்களும், குண்டலமணிந்த காதுகளும், சூலாயுதமும், காலதண்டமும், விசாலித்த மார்புமுடையவனுய், அரிச்சந்திரனை விற்குங்காலத்தில் சத்தியகீர்த்தி யெழுதிக் கொடுத்த முறிச்சீட்டுடன் வந்து சிவனுடைய பாதத்தில் விழுந்து வணங்கியெழுந்து பின்பு முகமலர்ச்சியுடனே அரிச்சந்திரனை நோக்கி, "நீதியிற் சிறந்த அரசனே! நான் எமன்; உன்னை விலைக்கு வாங்கினவன் நானே; உன்னை வாங்கும்பொருட்டே நான் இந்நகரத்தில் நீசனாக வந்திருந்தேன் நீ எனக் கடிமையானது இழிவாகாது; நீ ஆதியிற் சுமந்து வந்த காவடியிலிருந்தது பசுவின் மாமிசமன்று; எல்லாம் வேதங்களே; நீ காவல்புரிந்துகொண்டிருந்தது சுடலையன்று; தடாகங்களும், சோலைகளும், யாகசாலைகளும் பொருந்திய விடமாகும்; விசுவாமித்திரர் செய்த எல்லாக் காரியங்களும் உன்னுடைய சத்தியத்தைச் சோதித்தறிதற்பொருட்டுத் தேவர்களுடைய சம்மதத்தின்பேரிற் செய்யப்பட்டவைகள்; ஆதலால், நீ சந்தேகங் கொள்ளாமல் உன்னுடைய அரசாட்சியைப் பெற்றுக்கொள்; இதோ சத்தியகீர்த்தி உன்னை விற்றகாலத்தில் எழுதிக்கொடுத்த முறிச்சீட்டு," என்று சொல்லி அவ்வோலையையும் அவனிடங் கொடுத்துச் சுடுகாட்டை யெல்லாம், யாகசாலைகள் முதலியவை பொருந்திய புண்ணிய பூமியாகச் செய்துவிட்டான்.

அதன்மேல் அரிச்சந்திரன் அந்த முறிச்சீட்டுகளைப் பார்த்து அவை தன்னாலும், சத்தியகீர்த்தியாலும் எழுதிக்

கொடுக்கப்பட்டவைகளா யிருக்கக்கண்டு ஆச்சரியங்கொண்டு தான் காவல் புரிந்துகொண்டிருந்த மயானத்தை நோக்கினான். அவ்வாறு நோக்கியபோது, பந்தல்களின் நிழல்களைப் போன்று இறகுகளின் நிழலுண்டாக்க கழுகுகள் மேலுயர்ந்து பறக்கும் அச்சுடுகாடானது இலக்குமி வாசஞ்செய்யும் தாமரைத் தடாகங்களும், மணமலர் நிறைந்த சோலைகளும், பல யாகசாலைகளும் நிறைந்தவிடமாய் விளங்கிற்று; அங்கே நின்ற மரங்களெல்லாம் வேள்வித்தூண்களாக விளங்கின; பிணஞ்சுட்டதனாலெழுந்த புகைகளெல்லாம் வேள்விப்புகைகளாய் விளங்கின; பிணங்களில் பற்றியெரிந்த நெருப்புச் சுவாலைகளெல்லாம் காருகபத்தியம், தக்ஷிணாக்கினியம், ஆகவனீயம் என்னும் யாகாக்கினிகளாய் விளங்கின; பிணங்களி னடியிற்போட்டுக் கொண்டுவரப்பட்டுக் கிடந்த கிடுகுகளின் ஓலைகளெல்லாம் தருப்பைகளாய் விளங்கின; பிணஞ்சுடும் விறகுகளெல்லாம் சமித்துக்களாய் விளங்கின; அங்குள்ள பூதங்களெல்லாம் முனிவர்களாகி விளங்கின; அங்கு நிறைந்திருந்த பயங்கரமான தொனிகளெல்லாம் வேதகோஷங்களாய் விளங்கின; பிணங்களெல்லாம் யாகத்திற்குரிய பசுக்களாய் விளங்கின. அப்படிச் சுடுகாடுமாறிப் புண்ணிய பூமியாய் விளங்கின விநோதத்தைக் கண்டவுடனே அரிச்சந்திரன் தன்மனத்தி லேற்பட்டிருந்த எல்லாக் கலக்கத்தையுமொழித்து அடங்கா மகிழ்ச்சியடைந்து, "எல்லாம் தேவர்களின் செயல்," என்று உடல்சிலிர்க்கப் பிரமித்து நின்றான்.

அப்போது, கைலைக் கிறைவனாகிய பரமசிவன் அரிச்சந்திரனை நோக்கி, "அன்பனே! உன்னுடைய மனவுறுதியைச் சோதித்தறியவேண்டித் தேவர்களும், முனிவர்களும் சேர்ந்து இக்காரியங்களை நடத்தியிருக்கின்றார்கள்; எல்லோருக்கும் முன்னிலையில் உன்னுடைய உயர்வை நீ விளக்கிக் காட்டிவிட்டாய்; அவர்கள் கொண்ட எண்ணமும் நிறைவேறியது; ஆதலால், இனி நீ அயோத்திக்குச் சென்று உன் அரசாட்சியை ஒப்புக்கொண்டு சிரசில் கிரீடந்தரித்து, விசுவாமித்திருடைய தவத்திற் பாதியையும் வசிஷ்டர்மூலம்

பெற்று அரசுபுரிந்து பின்பு நம்முடைய திருவடி நிழலைச் சேரக்கடவாய்," என்று கட்டளையிட்டருளினர். அவ்வாறு சிவனுரைத்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அரிச்சந்திரன், "இந்தக் காரியங்களையெல்லாம் தேவர்களும் முனிவர்களும் சேர்ந்து நம்மைச் சோதிக்கும்பொருட்டுச் செய்திருக்கின்றார்களாகையால் இவையெல்லாம் மெய்யான காரியங்களல்ல; இவற்றை நாம் மெய்யென்று கருதி அவர்களுடைய வார்த்தையைத் தட்டுதல் கூடாது; அவர்கள் உலகத்தில் நன்மை தீமைகளையெல்லாம் வகுக்கக்கூடியவர்கள்; அவர்கள் எதைச் செய்யும்படி கட்டளையிடுகின்றார்களோ அதைச் செய்ய நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்; ஆதலின், இப்பொழுது, சிவன் கட்டளைப்படி நடத்தலே தகுதி," என்று தீர்மானித்து உடனே அச்சிவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி, "எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய கடவுளே! உம்முடைய திருவுளப்படியே அடியேன் செய்கின்றேன்," என்றுரைத்தான். பின்னர் அச்சிவன், இந்திரனை நோக்கி, "தேவராஜனே! மற்றைய தேவர்களைத் தங்கள் தங்கள் இடங்களுக்குப் போகும்படி அனுப்பிவிட்டு நீமாத்திரம் காசிபர், விசுவாமித்திரர், வசிஷ்டர் முதலிய முனிவர்களுடனும், மற்றைய மனிதர்களுடனும், இந்தக் காசிமன்னனுடனும் அரிச்சந்திரனையழைத்துக்கொண்டு அயோத்திக்குச் சென்று அவனுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகஞ் செய்துவிட்டுப் பின்னர் தெய்வலோகஞ் செல்லக்கடவாய்," என்று கட்டளையிட்டார். அவ்வாறு கட்டளையிட்டவுடனே இந்திரன்முதலிய எல்லோரும் சிவனை நோக்கி வணங்கி, "சந்திரனைத் தரித்த சடைமுடியையுடையவரே! உம்முடைய கட்டளைப்படியே செய்கின்றோம்," என்றுரைத்தார்கள். அதன்மேல் பரமசிவன், அரிச்சந்திரன் முதலிய எல்லோருக்கும் வாழ்த்துதல் கூறிவிட்டுக் கைலைக்கெழுந்தருளினர்; சிவந்த கண்களையுடைய திருமால் எல்லோருக்கும் ஆசிகூறித் திருப்பாற்கடல் போய்ச் சேர்ந்தார்; பிரமதேவரும் அங்கு நின்றவர்களுக்குக் கிருபைமொழி கூறிச் சத்தியலோகம்போய்ச் சேர்ந்தார்; மற்றதேவர்களும்

சிவனுடைய கட்டளைப்படி தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

மேற்கூறியபடி தேவர்க ளெல்லோரும் மனத்திலே சந்தோஷ மதிகரிக்கப் பரமசிவக் கடவுளுடைய கட்டளையை மறுக்காமல் தங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தபின்பு தேவேந்திரன், சிவனுரைத்தபடியே அரிச்சந்திரனுக்கு மகுடஞ்சூட்டிச் செல்லும்பொருட்டுத் தன்னைச் சேர்ந்த முக்கியமான சில தேவர்களுடன் அவ்விடத்திற் றங்கியிருந்தான்; அவனுடன் காசிபர், பிருகு, உரோமசர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், வசிஷ்டர், சன்னுமாமுனிவர், அகஸ்தியர், மரீசி, நாரதர், மதங்கர், அத்திரிமுதலிய ரிஷிகளும் தங்கியிருந்தார்கள். அப்போது காசிராஜன் உடனே அரிச்சந்திரனையும், இந்திரனையும், மற்ற முனிவர்களையும் தன் நகரத்திற் கழைத்துச்சென் றுபசரித்து அவர்களுக்குத் தக்க மரியாதைகளை நடத்தி அவர்களை நோக்கி, "எல்லோரும் இன்றைக்கு என் அரண்மனையிற் றங்கியிருந் திளைப்பாறி நாளை அயோத்திக்குப் புறப்பட்டுச் செல்லலாம்," என்றுரைத்தான். எல்லோரும் அவனுடைய வார்த்தைக்கிணங்கி அன்றிரவு அவ்வரசன் மாளிகையிற் றங்கியிருந்தார்கள். அப்படி அவர்கள் தங்கியிருக்கும்போது அன்றிரவு கழிந்து மறுநாட் பொழுதுவிடிந்தது.

அரிச்சந்திரன், இந்திரன் முதலியவர்களோடு காசியிலிருந்து அயோத்திக்கேகுதல்.

அங்ஙனம் மறுநா ளுதயமானவுடனே காசிராஜ னெழுந்து காலைக்கடன் முதலியவற்றை முடித்துக்கொண்டு மற்றவர்களையும் முடித்துக்கொள்ளும்படிச் செய்து உடனே தன்னுடைய சேனைத்தலைவர்களை யழைத்து அவர்களிடம், "நம்முடைய சேனைகளையெல்லாம் நம்முடனே அயோத்திக்குப் புறப்படும்படி செய்வீராக," என்று கட்டளையிட்டான். அச்சேனைத் தலைவர்கள் அவ்வுத்தரவைச் சிரமேற்கொண்டு அவ்வாறே புறப்படும்படி சேனைகளுக் கறிவிக்கத் தேர்ப்படைக

ளும், குதிரைப்படைகளும், யானைப்படைகளும், காலாட்படைகளும் எழுந்து அரண்மனைவாயிலில் வந்துகூடி அயோத்திக்குப் பிரயாணமாகி நின்றன; அவற்றோடு அரசர்முதலியோர் ஏறிச்செல்வதற்கு அழகிய இரத்தினத் தேர்களும், இராஜஸ்திரீகள் ஏறிச்செல்வதற்குப் பல பெண்களால் தாங்கப்படும் பல பொற்பல்லக்குகளும் வந்து நிறைந்தன; அநேகம் குடைகளும், கொடிகளும், சாமரங்களும் கூடிச் செறிந்தன; முரசு முதலிய பல வாத்தியங்களும் முழங்கின.

அவ்வாறு எல்லாச் சிறப்புக்களுடனும் நால்வகைச் சேனைகளும் வந்து சூழ்ந்தவுடனே அரிச்சந்திரன், தேவர்க்கதிபனான இந்திரனும், இந்திராணியும், முனிவர்களும், காசிராஜனும், சத்தியகீர்த்தியும், சந்திரமதியும், காசிராஜன் மனைவி முதலிய பெண்களும், தேவதாசனும், மற்றுமுள்ள மனிதர்களும் தன்னைச் சூழ்ந்துவரக் காசிராஜன் மாளிகையை விட்டு வெளியேறி நடந்தான். மேற்கூறிய சேனைகளும் அவனைச் சூழ்ந்து சென்றன. அப்படி எல்லோரும் செல்லும் போது காசிராஜன், கால்நடையாகச் செல்லும் அரிச்சந்திரனை நோக்கி, "தேனிறைந்த மாலையையணிந்த மார்பையுடைய மன்னர்பெருமானே! நீர் பூமியில் நடந்து செல்லுதல் தகாது; தேர்மீ தேறிக்கொள்ளும்," என்று கூற அவன், "எனக்குத் தேர் வேண்டியதில்லை; நான் கால் நடையாகவே நடந்து வருகின்றேன்," என்றுரைத்தான். அதைக்கேட்டுப் பக்கத்திற் சென்ற முனிவர்கள், "அரிச்சந்திரா! காசிராஜன் சொற்படியே தேர்மீ தேறிக்கொள்வாயாக," என்று வற்புறுத்திக் கூறினார்கள். அதன்மேல் அரிச்சந்திரன் அதற்கிசைந்தான். உடனே இந்திரனோடிருந்த தேவர்களும், இந்திரனும் அவனையும் தேவதாசனையும் தூக்கிச் சிவந்த பொன்னாலும், இரத்தினத்தாலும் செய்யப்பெற்ற தேரின்மேலேற்றினார்கள். இந்திராணி சென்று சந்திரமதியைத் தூக்கி அத்தேர்மீ திருத்தினாள்; பின்னர் தேவர்களும், முனிவர்களும், காசிராஜனும், அவனைச் சார்ந்த ஸ்திரீகளும், சத்தியகீர்த்தியும் தங்கள் தங்களுக்குரிய வாகனங்களி லேறிக்கொண்டார்

கள். அப்படி எல்லோரும் வாகனங்களி லேறிக்கொண்ட வுடனே, வேடர் வலைக்கு ளகப்பட்டு வருந்திப் பின்பு அவ் வலையைவிட்டு நீங்கின ஆண்யானையும், அதன் கன்றும், பெட்டையானையும் முன்னே தாங்கள் சஞ்சரித்த விடத்திற் குச் செல்வதுபோல மகா புண்ணியவானாகிய அரிச்சந்திர னும், சந்திரமதியும், தேவதாசனும் இந்திரன் முதலியோ ரும், சேனைகளும் தம்மைப் புடைசூழவும், கவிவாணர் துதி பாடவும் அக்காசி நகரத்தைவிட்டு நீங்கித் தோரணங்கள் கட்டியிருக்கின்ற கோட்டைவாயிலைக் கடந்து அழகிய மருத நிலத்தைச் சார்ந்து நீர் நிறைந்த குளங்களையும் சோலைகளை யும் தாண்டி வாரணவாசியின் ஆற்றங்கரை யோரத்தில் வந் திறங்கினார்கள். அப்போது சூரியன் மேற்குக் கடலிற்போய் மறைய இராக்காலமாயிற்று. அவ்வாறு சூரியன் அஸ்தமித்த வுடனே அரிச்சந்திரன் முதலிய எல்லோரும் அந்நதியிலே ஸ்நானஞ்செய்து அங்கே தங்கியிருந்து மறுநாள் விடிந்த வுடனே அவ்விடத்தினின்றும் புறப்பட்டு வாசனை மிகுந்த சந்தனவனங்களையும், மலைகளையும், மேடுகளையுந் தாண்டி மிருதுவாகச் சென்று யமுனையாற்றங்கரைபோய்ச் சேர்ந்து அந்நதியிலும் ஸ்நானஞ்செய்து, அதற்கப் பாற் சென்று, அழ கிய இரத்தினங்களும், முத்துக்களும், செம்பொன்னுங் கல ந்து மின்னும் ஒளியைக்கொண்ட அலைகளையுடைய கோதா விரித் துறையைச்சார்ந்து அதிலும் ஸ்நானஞ்செய்து, அதன் மேல் அங்கிருந்து பிரயாணமாகிப் பின்னும் பல நதிகளைக் கடந்து சென்று அயோத்தி நாட்டிற்குச் சமீபத்திலிருந்த தெய்வத்தன்மை பொருந்திய கங்கைத் துறையிற்போய்ச் சேர்ந்தார்கள்.

அவ்வாறு போய்ச் சேர்ந்தமாத்திரத்தில் வேலாயுதங்க ளைக் கொண்ட படைகள் இருபக்கத்திலும் நெருங்கிவரவும், வெள்ளைக்குடை மேலே நிழலைச்செய்யவும், எட்டுத் திக்கு களிலும், தேர்களும், யானைகளும், குதிரைகளும் பரவிச் செல்லவும், தூளிகளெழுந்து ஆகாயத்தை மறைக்கவும், இருபுறத்திலும் வெண்சாமரை யிரட்டவும் அரிச்சந்திரன்,

மற்றவர்களோடு தேரைவிட்டிறங்கி நடந்து அந்தக் கங்கா நதியைக் கண்டான். அப்போது, தன்பக்கத்தில்வந்து துள்ளிக் கனைத்து அன்பை விளைவிக்கும் இளங்கன்றைக் கண்ட பசுவானது மடி சுரப்புற்று மிகுந்தபாலைச் சொரிவதுபோல, அரிச்சந்திரனும், சந்திரமதியும், தேவதாசனும் அயோத்தி சேரத் திரும்பி வருவதைக்கண்ட அக் கங்கையானது மிகவும் சந்தோஷித்துப் பெருக்கெடுத்துப் பொங்கியது. அப்படிப் பெருகிய அதன் வெள்ளமானது, பல மலைக்குன்றுகளையுருட்டிக்கொண்டும், நீண்ட பலமரங்களைப் பிடுங்கிக்கொண்டும், வெண்மையான நுரைகளைச் சிதறிக்கொண்டும், எவ்விடத்திலும் மலங்குமீனும் வரால்மீனும் துள்ள, வரிசை வரிசையாகப் பதுமராக மணிகளையும் முத்துக்களையும் ஒதுக்கிக் கொண்டும், இருபுறத்திலுமுள்ள கரைகளை யுடைத்துக்கொண்டு,யுகமுடிவிலே பெருகும் கடலென்னும்படி விரைவுகொண்டோடிற்று. அத்தருணத்தில் அரிச்சந்திரன் முதலிய எல்லோரும் அப்படியோடிய வெள்ளத்தையுடைய அக் கங்கையின் வடகரையைச் சார்ந்து மகரந்தங்கள் சிந்துகின்ற பூஞ்சோலைகளிலும், இரத்தினக் குன்றுகளிலும், மணற்குவியல்களிலும், பெரிய மலைச் சாரல்களிலும் வாகனங்களை விட்டிறங்கி, அவர்களுள் தேவர்கள் சிலவிடங்களிலே தங்கினார்கள்; மண்ணுலகத்திலுள்ள மனிதர்கள் தங்கள் பெண்களுடனே சிலவிடங்களில் தங்கினார்கள்; நான்கு வேதங்களையும் பாராயணஞ் செய்கின்ற தவசிரேஷ்டர்கள் சிலவிடங்களிலே தங்கினார்கள்; வீணைவித்தையிற் சிறந்த வித்தியாதரர்கள் சிலவிடங்களில் தங்கினார்கள்; அச்சமயத்தில் சூரியனும் மேற்குத்திக்கிற்போய் மறைந்தான். அவ்வாறு சூரியன் அஸ்தமித்தவுடனே அங்குத் தங்கியவர்கள் தங்கள் வாகனங்களாகிய யானைகளையும், குதிரைகளையும், அகில்விருக்ஷங்களிலும், சந்தன விருக்ஷங்களிலும் கட்டிவிட்டுத் தேர்களையும் ஒரு பக்கத்தில் நிறுத்திக் கங்கையில் ஸ்நானஞ் செய்து மாலைக் கடன்களை முடித்துக்கொண்டு அங்குச் சந்தோஷமாக விருந்தார்கள்.

அப்படி அவர்கள் சூரியன் மறைந்த பின்பு சந்தோஷமாகத் தங்கி யிருக்கும்போது, பாவச் செய்கைகளைச் செய்த விசுவாமித்திரர் அரிச்சந்திரன்மீது கொண்ட விரோதமும், அவரால் அவனுக்குச் செய்யப்பட்ட பாவச்செய்கைகளும் நீங்கியபின், உலகத்தையாளும் அவ்வரிச்சந்திரனுடைய புண்ணியமே எவ்விடத்திலும் பாவினாற்போலப் பிரகாசத்தைக் கொண்ட சந்திரனுதயமாக எங்கும் வெள்ளிய சந்திரிகை பாவியது. அங்கே நின்ற மதயானைகளும், தேர்களும், குதிரைகளும், அரசர்களும், தேவர்களும், சேனைகளும் நன்றாக விளங்கும்படி அவ்வாறு பாவிய சந்திரிகையானது, யுகாந்த காலத்திலே நீலக் கடல்சூழ்ந்த பூமியிலும், எட்டுத் திக்குகளிலும், ஆகாயத்திலும் பாற்கடல் பொங்கி வியாபித்தது போல விளங்கிற்று; அப்போது நல்லோ ருள்ளக்கருத்து நல்லோராலேயே விளக்கிக் காட்டப்படுவதுபோல அவ்விடத்தில் நல்லனவாகிய சோலைகளும், ஆறும், மணற்குன்றுகளும், மலைகளும், அவற்றின் சார்பிற் சஞ்சரிக்கின்ற மான்களும், மரைகளும், யானைகளும், பக்ஷிஜாதிகளும் தூரத்திலுள்ளவர்களுக்கும் தெரியும்படி சந்திரனுடைய நிலவினால் விளக்கிக் காட்டப்பட்டன. அப்படி எல்லாம் விளங்கும்படி பிரகாசித்த அந்நிலவின் வெளிச்சத்திலே எப்பொழுதும் வயிரம், பவளம், முத்து, பச்சை, நீலம், மாணிக்கம் ஆகியவைகளை அலைகளால் ஒதுக்கிக் கரையிற் றள்ளும் சிறப்பினையுடைய கங்காநதியையும், அதன் பக்கத்திலுள்ள சிறப்புக்களையும் இந்திரன் பார்த்து அங்கம் பூரித்து ஆனந்தமிகுந்து சிரக்கம்பஞ்செய்து, உரோமங்கள் சிலிர்க்க இந்திராணியை யழைத்து, "பெண்ணே! சிவபெருமானுடைய சடையிலேயிருந்து விழுந்து பூமியிற் பாய்ந்து வருகின்ற இந்தக் கங்கைக் கரையில் வெள்ளத்தால் ஒதுக்கித் தள்ளப்படும் இரத்தினங்களையுடைய நாகங்களையும், இங்கே செழித்து வளர்ந்திருக்கின்ற கமுகமரச் சோலைகளையும், அவற்றி லமர்ந்திருக்கின்ற சிங்காரமான பக்ஷிகளையும், மிருகங்களையும், மணல்களோடு கலந்துகிடக்கும் இரத்தினங்களையும் நீ தெய்வலோகத்திற் பார்

த்ததுண்டோ?" என்று வினவினன். அதற்கு இந்திராணி, "இத்தகைய சிறப்புக்கள் பொன்னுலகத்திலுமில்லை, வேறெவ்வுலகத்திலுமில்லை," என்று கூறி அக் கங்கையை வியந்தாள். இப்படியே இந்திராணியும், இந்திரனும் சிறிதுநேரம்வரை வார்த்தையாடிக்கொண்டிருந்து பின்பு சயனித்துக்கொண்டார்கள்; மற்றையரும் அங்கு உல்லாசமாக விளையாடிக்கொண்டிருந்து பின்னர் நித்திரை செய்தார்கள்.

அதன்மேல் அவ்விரவு நீங்கிச் சந்திரனொளி குறையச் சூரிய னுதயமானன். அவ்வாறு சூரியனுதயமாகி விடிந்தவுடனே அரிச்சந்திரன் முதலிய எல்லோருமெழுந்து காலைக் கடனை முடித்துக்கொண்டு தாமதஞ் செய்யாமல் அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சேனைகளுடன் சென்று பல மேட்டு நிலங்களையும், காடுகளையும், மலைகளையுங் கடந்து கோமதியாற்றங்கரையை யடைந்து அந்நதியில் ஸ்நானஞ் செய்து அதன் பக்கத்திலிருந்த ஓர் அழகியமலையிற் றங்கினார்கள்.

அயோத்தியில் அரிச்சந்திரனுக்கு இந்திரன் முடிசூட்டித் தெய்வலோகஞ் செல்லுதல்.

மேற்கூறியபடி கோமதியாற்றிற் கருகிலுள்ள மலையில் அரிச்சந்திரனும், மற்றவர்களும் தங்கியிருக்கும்போது சில தூதர்கள் விரைந்தோடி அயோத்தியிற் சேர்ந்து அங்குள்ளவர்களுக்கு, "அரிச்சந்திரமகாராஜனுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுத்து முடிசூட்டுவதற்காக விசுவாமித்திரர் அம்மன்னனை அழைத்துக்கொண்டு வருகிறார்; அரிச்சந்திர மகாராஜனும், விசுவாமித்திரரும், மற்றவர்களும் கோமதியாற்றருகே வந்து தங்கியிருக்கின்றார்கள்," என்று தெரிவித்தார்கள். அப்படி அவர்கள் தெரிவித்தவுடனே அங்குள்ள இராஜகுடும்பத்தாரும், மந்திரிகளும், சேனைத்தலைவர்களும், குடிகளும் அங்கம் பூரித்து உரோமஞ்சிலிர்க்க ஆனந்தபரவசமாகி உடனே நகரத்தையும், அரண்மனையையும், சபாமண்டபத்தையும் அலங்கரித்து, எங்கும் தோரணங்களைக் கட்டிப் பேரிகை முதலிய சகல வாத்தியங்களுமுழங்க, இராஜவிரு

துகளுடனும், சேனைகளுடனும் புறப்பட்டு விரைந்து நடந்து கோமதியாற்றின்பக்கத்திற் சேர்ந்து அரிச்சந்திரனைக் கண்டு அவனுடைய பாதங்களிலேவிழுந்துவணங்கி, எமன்கொண்டு போன உயிர் திரும்பிவரக் கண்டோர் துன்பநீங்கி மகிழ்வது போல பேரானந்தமுற்று, அவ்வரசனை நோக்கி, "மன்னர் பெருமானே! 'இனி எப்போது நம் மிறைவரைக் காணப் போகின்றோம்?' என் றேங்கியிருந்த நாங்கள் இன்று மீண்டும் உம்மைத் தரிசிக்கப்பெற்றதால் மிக்க தவத்தைச் செய்தவர்களானோம்; தினந்தோறும் வாட்ட மடைந்திருந்த எங்களுடைய முகம் இன்று செழிப்படைந்தது," என்று கூறி அவனைப் பலவாறு துதித்தார்கள். அரிச்சந்திரனும் இனிமையான வார்த்தைகளைக் கூறி அவர்களை மகிழ்வித்தான். பல இராஜஸ்திரீகள் சந்திரமதியைக் கண்டு தழுவி, "அம்மா! நீயே உலகத்திலுள்ள பெண்களிற் சிறந்தவள்," என்று கூறிப் புகழ்ந்தார்கள். பின்னுஞ் சிலர் தேவதாசனைத் தூக்கி அவன் முகத்தில் முத்தியிட்டு அவனைப் பலவாறு புகழ்ந்தார்கள்; மந்திரிக ளெல்லோரும் சத்தியகீர்த்தியைக் கண்டு, "நீரே மந்திரிகளிற் சிறந்தவர்; எக்காலத்தும் நம் மாசரோடு கூடவிருந்து அவரடைந்த துன்பங்களையெல்லாம் நீரும் அடைந்து உலகத்தில் அழியாப்புகழை நிலைநிறுத்தினீர்," என்று கொண்டாடினார்கள். அயோத்தியிலிருந்து சென்ற மனிதர்களுக் கேற்பட்ட சந்தோஷத்திற் களவேயில்லை.

அதன்மேல் அயோத்தியிலிருந்து வந்த சேனைகளுடனே காசிமன்னனுடைய சேனைகளுஞ் சேர்ந்து நெருக்கமாகப் புடைசூழ்ந்து செல்லப் பல வாத்தியங்கள் முழங்க அரிச்சந்திரன், இந்திரனுடனும், காசிராஜனுடனும், மற்றவர்களுடனும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று அயோத்திநகரத்தை யடைந்து, கோட்டைவாயிலைக் கடந்து அரண்மனைக்குட் போய், இரதத்தை விட்டிறங்கிப் பூரணகும்பங்கள் நிறைந்து விளங்காநின்ற சபாமண்டபத்திற் புகுந்தான். அப்போது அயோத்தி மிகவுஞ் செழிப்படைந்து

புதிய நகரமாக விளங்கிற்று; எங்கும் திருவிழாக்களும், தேவ ஆராதனைகளும், ஆடல் பாடல்களும், விநோதங்களும், விளையாட்டுக்களும் நடந்தன. சபாமண்டபத்தில் தேவர்களும், முனிவர்களும், அரசர்களும், மந்திரிகளும், மற்றுமுள்ள பெரியோர்களும் அரிச்சந்திரனை உட்காரச்செய்து வாழ்த்தித் தாங்களும் அவனைச் சூழ்ந்திருந்தார்கள்.

அப்போது விசுவாமித்திரர் அங்குக் கூடியிருந்த எல்லோரையும் பார்த்து, "சபையோர்களே! நான் முன்னே அரிச்சந்திரனிடம் பெற்றுக்கொண்ட அரசாட்சியை இப்போது மீண்டும் அம்மன்னனுக்கே கொடுத்துவிட்டேன்; இனி அதில் எனக்கு எவ்வித பாத்தியமுமில்லை; இன்னும் நான் வசிஷ்டருக்குக் கொடுப்பதாகச்சொன்ன என்னுடைய பாதித் தவத்தையும் பரமசிவக்கடவுளுக்கு முன்னே தெரிவித்தபடி அரிச்சந்திரனுக்கே கொடுக்க விரும்புகிறேன்; ஆதலால், வசிஷ்டர் என்னிடம் அதனை யேற்று அதையும் அவனுக்கே கொடுத்துவிட வேண்டும்," என்று கூறினர். அதைக் கேட்டவுடன் வசிஷ்டர், "அப்படியே செய்யும்," என்றுரைத்தார். உடனே விசுவாமித்திரர் தம்முடைய பாதித்தவத்தைக் கொடுத்துவிட்டதாகச் சொல்லி வசிஷ்டர் கையில் தாரை வார்த்தார். வசிஷ்டர் அதை அரிச்சந்திரனுக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்லி அவன் கையில் தாரை வார்த்தார். பின்னர் விசுவாமித்திரர் இராஜ்ஜியத்தையும் அரிச்சந்திரனுக்குக் கொடுத்ததற் கறிகுறியாக அவன் கையில் தாரைநீர் வார்த்தார்.

அதன்மேல் இந்திரன், சுபமுகூர்த்தத்தில் அரிச்சந்திரனை அலங்கரித்துப்பொன்மயமான சிங்காசனத்திலேற்றி, நல்ல குணங்களையுடைய தபோதனர்கள் ஆசிர்வதிக்கவும், பெரியோர் வாழ்த்தவும், மன்னர் துதிக்கவும், வித்வான்கள் புகழவும், கந்தருவர்கள் பாடவும், அரம்பையராடவும், பல மங்கலவாத்தியங்கள் கடலொலிபோல் முழங்கவும் சந்தோஷமாக இரத்தின கிரீடத்தை யெடுத்து அவன் முடியிற்சூட்டி,

"அரிச்சந்திரா! உனக்கு என்றும் சுகமுண்டாவதாக," என்று வாழ்த்தினன். அப்போது அயோத்தியிலுள்ள ஜனங்கள் ஆனந்தசாகரத்தில் மூழ்கினர்கள். அவ்வாறு முடிசூட்டிய பின்னர் இந்திரன், அரிச்சந்திரனிடத்திலும், மற்றையரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு தன் பரிவாரங்களுடன் தேவலோகம் போய்ச் சேர்ந்தான். முனிவர்களெல்லோரும் அரிச்சந்திரனை நோக்கி, "மன்னனே! விசுவாமித்திரர் செய்த தீமைகளெல்லாம் உனக்கு நன்மைகளாயின; இனி எழுகடல்களுள்ளவரையிலும், பதினுலுலகங்களுள்ளவரையிலும் உன் புகழ் நிலைநிற்கும்; ஒருகாலத்திலும் உனக்குத் தவறுத லுண்டாகமாட்டாது; உனக்கு நிகரானவர் இவ்வுலகத்தில் எவருமிலர்," என்று சொல்லிக் கொண்டாடி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கள் தங்க ளிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். பின்னர் விசுவாமித்திரர் அரிச்சந்திரன் சமீபத்திற் போய், அவனுடைய திருமுகத்தை நோக்கி, "வாய்மையிற் சிறந்த மன்னனே! நான் உனக்கும், உன் மனைவிக்கும், உன் புத்திரனுக்கும் அளவற்ற துன்பங்களைச் செய்தும் நீங்கள் சத்தியத்தைக் கைவிடாமல் மிகுந்த புகழடைந்தீர்கள்; இவ்வாறு உங்களுக்குப் புகழுண்டாவதற்குக் காரணமா யிருந்தவன் நானே; ஆதலால், என்மீது நீங்கள் வருத்தங் கொள்ளலாகாது; உங்களுக்கு இனி என்றென்றும் சுகமே விளையும்," என்று உபசார வார்த்தைகள் கூறி, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, அதன்மேல் வசிஷ்டமுனிவரிடம் சென்று, "தவசிரேஷ்டரே! அரிச்சந்திரனுடைய மகிமையை யுணராமல் உம்மையும், அவனையும் தூஷித்துச் சில தகாச் செய்கைகளைச் செய்துவிட்டேன்; அவற்றிற்காக நீர் மனவருத்தங் கொள்ளாமல் என் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும்," என்று சொல்லி, சந்திரமதிக்கும், தேவதாசனுக்கும், சத்தியகீர்த்திக்கும் இனிய மொழிகள் கூறி அவர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு தாம் தவஞ்செய்யும் வனத்திற்குச் சென்றார். வேற்றூர்களிலிருந்துவந்த சிற்றரசர் முதலியவர்களும் அரிச்சந்திரனிடம்

விடை பெற்றுத் தங்கள் நகரங்களுக்குச் சென்றார்கள். காசி ராஜனும், வசிஷ்டமுனிவரும் அரிச்சந்திரனை விட்டுப் பிரிய இஷ்டமில்லாமல் அவ்விடத்திலேயே சில தினங்கள் தங்கியிருந்தார்கள். அரிச்சந்திரன் அவ்விருவருடனும் சில நல் விஷயங்களைக் குறித்துப் பேசித் தினந்தோறும் சந்தோஷத்தை யடைந்திருந்தான்.

மீட்சிகாண்டம் முற்றுப்பெற்றது.

உத்தரகாண்டம்.

வசிஷ்டர், காசிராஜனுக்கு விசுவாமித்திரர், சரித்திரங் கூறுதல்.

மேற்கூறியபடி காசிராஜனும், வசிஷ்டமுனிவரும் அரிச்சந்திரனோடு கூடியிருக்குங் காலத்தில் ஒரு தினம் சபா மண்டபத்திலிருந்து காசிராஜன் அரிச்சந்திரனுக்கு முன்னிலையில் வசிஷ்டரை நோக்கி, "முனிசிரேஷ்டரே! விசுவாமித்திரர் இந்த அரிச்சந்திர பூபதிக்கும், இவர் மனைவிக்கும், இவருடைய புத்திரனுக்கும் மிகுந்த துன்பங்களைச் செய்ததற்குக் காரணம், அவர் உம்மீது கொண்ட பகையினால் தெய்வலோகத்திற் செய்துகொண்ட சபதமே யென்பதை நான் தெரிந்துகொண்டேன்; ஆயினும், அவர் உம்மோடு பகை கொண்டதற்குரிய காரணத்தைத் தெரிந்துகொள்ளவில்லை; அவ்வாறு அவர் உம்மீது விரோதங்கொண்டதற் கேற்பட்ட காரணமியாது? அரிய தவத்தைச் செய்யும் முனிவர்களிடத்தில் நற்குணங்களன்றோ பொருந்தியிருக்கவேண்டும்; அப்படியிருக்க இந்த விசுவாமித்திரரிடத்தில் மாத்திரம் இத்தகைய தீயகுணங்கள் எவ்வாறு பொருந்தின?" என்று வினவினான்.

அவ்வாறு வினவினவுடனே வசிஷ்டர் காசிராஜனை நோக்கி, "மன்னனே! மேகத்திலிருந் திறங்கும் நீரானது மிகவும் பரிசுத்த முடையதாயினும், அது சார்ந்தபூமியின்

குணத்தையே பெறும்; அதுபோல துறவு பரிசுத்த முடைய தாயினும் விசுவாமித்திரனுடைய குலாசாரத்தின் தன்மை யால் அதன் மகிமை அவனிடத்திற் சிறிது குறைவுபட்டு விளங்குகின்றது; விசுவாமித்திரனே அரச பரம்பரையிற் றோன்றி அரசுபுரிந்து பின்னர் துறவடைந்தவன்; அவன் அவ் வாறு துறவடைந்தும், 'குலவித்தை கல்லாமற்பாதி' என்ற படி அவனுடைய குலசுபாவம் அவனைவிட்டுப் போகவில்லை; அதனாலேயே என்மீதும் அவன் பகைகொண்டான்," என்று கூறினர். அப்படிக் கூறவே காசிராஜன் மீண்டும் வசிஷ்டரை நோக்கி, "சுவாமி! அந்த விசுவாமித்திரர் எக்குலத்திற் பிறந்தவர்? என்ன காரணத்தால் துறவடைந்தார்? உம்மீது ஏன் பகைகொண்டார்? அவ்விவரங்களையும் உரைத்தருள வேண்டும்," என்று கூறினன்.

அதன்மேல் வசிஷ்டர் காசிராஜன் விருப்பப்படியே விசுவாமித்திருடைய விருத்தாந்தத்தைக் கூறுதற்கிசைந்து அம்மன்னனை நோக்கி, "காசிராஜனே! உம்முடைய விருப் பத்தின்படி விசுவாமித்திரனுடைய சரித்திரத்தைக் கூறுகி றேன் கேட்பீராக; நான்முகப் பிரமதேவனுடைய வழியிலே முற்காலத்தில் குசனென்பவன் தோன்றியிருந்தான்; அவ னுக்குக் குசன், குசநாபன், வதூர்த்தன், வசு என்னும் நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களுக்குத் தந்தை யாகிய குசனென்பவன், அப்புத்திரர் நால்வரும் தக்க பருவ த்தை யடைந்தவுடன் அவர்களுள் குசனுக்கு கிரிவிரசமென் னும் நாட்டையும், குசநாபனுக்கு கௌசாம்பி நாட்டையும், வசுவுக்கு வசுமதி நாட்டையும், வதூர்த்தனுக்கு வாரண மென்கிற நாட்டையுங் கொடுத்தான். அந்நால்வரும் அந் நாடுகளை யாண்டுவருங்காலத்தில் அவர்களுள் கௌசாம்பி நாட்டை யாண்டுவந்த குசநாபனுக்கு நூறுபெண்கள் பிறந் தார்கள். அவர்கள் அவ்வாறு பிறந்து பருவமடைந்த காலத் தில் தினந்தோறும் ஒரு சோலையிற் சென்று உல்லாசமாக விளையாடிவருவது அவர்களுக்குள் வழக்கமா யிருந்தது; அப்படி அவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும்போது அங்

கே வாயுபகவான் வந்து அவர்களைக்கண்டு, அவர்கள் நேசத்தைப்பெற விரும்பி அவர்களிடம் சென்று, 'பெண்களே! நான் உங்களோ டுறவுகொண்டு விளையாட விரும்பினேன்; ஆதலால், நீங்கள் என்னோடு நேசித்து விளையாடவேண்டும்,' என்று கூறினன். அதைக்கேட்டு அப்பெண்கள் வாயுவின் மீது அருவருப்புக்கொண்டு அவனை நோக்கி, 'மணமாகாத பெண்கள் ஆடவரோ டுறவுகொள்ளுதல் தகாது; நீர் எங்கள் தந்தையறிய எங்களை மணஞ்செய்துகொண்டாலன்றி உம் மீது நாங்கள் நேசங்கொள்ளோம்,' என்று கூறி அவ்விஷயத்தை மறுத்துவிட்டார்கள். அவ்வாறு அவர்கள் தடை செய்யவே வாயுபகவான் அவர்கள்மீது கோபங்கொண்டு வேகத்தோடு அவர்களுடைய முதுகொடியும்படி அவர்களை மோதியடித்துக்கீழே தள்ளிவிட்டுப் போய்விட்டான். அதன் மேல் அப்பெண்கள் மிருதுவாக எழுந்து தளர்ச்சியோடு வருந்தி நடந்து வீட்டிற்குச் சென்றார்கள். அப்படி அவர்கள் அலங்கோலமாகச் சென்றதை அவர்களுடைய தந்தையாகிய குசநாபன் கண்டு மிகவுங்கோபங்கொண்டு அவர்களை நோக்கி, 'நீங்கள் இவ்வித கோலத்தோடு வருவதற்குக் காரணமியாது?' என்று வினவ, அவர்கள் அழுதுகொண்டு வாயுவால் நடந்த சங்கடத்தைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டவுடனே அவனுக்கு வாயுவின்மேல் அதிக கோபமுண்டாகியும் தன்னால் ஒன்றுஞ் செய்ய வியலாமையால் அவன் அக்கோபத்தை யடக்கிக்கொண்டு அந்தப் பெண்களைச் சூளி புத்திரனை பிரமதத்தனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். அவர்கள் அந்த பிரமதத்தனைக் கூடி வாழ்ந்திருந்தார்கள்.

அதன்மேல் மீண்டும் அக்குசநாபன் செய்த வேள்வியிலே காதியென்னும் ஒரு வீரன் அவனுக்குப் புத்திரனாகத் தோன்றி வளர்ந்து அவனால் மகுடஞ் சூட்டப்பெற்று அக்குசநாபனுக்குப் பின்னே கௌசாம்பிநாட்டை யாண்டுவந்தான். அக்காலத்தில் அந்தக் காதியென்பவன் காளியை நிகர்த்த கௌசிகையென்னு மொரு பெண்ணையும், கௌசிக

னென்னும் பெயர்பெற்ற இந்த விசுவாமித்திரனையும் பெற்று வளர்த்துக் கௌசிகையை இருசிகமகாமுனிவருக்கு மணஞ் செய்து கொடுத்தான். அவ்விருசிக மகாமுனிவர் அக் கௌசிகையோடுகூடி வாழ்ந்து சிலகாலஞ் சென்று அவள் இரண்டு பிள்ளைகளைப் பெற்றபின்பு தவஞ் செய்து முடிவில் பிரமலோகஞ் சென்றார். அப்போது அக்கௌசிகை அவருடைய பிரிவுக்காற்றாது அவரைப் போகவேண்டாமென்று தடை செய்ய அதனால் அவர் கோபங்கொண்டு, அக் கௌசிகையை நோக்கி, 'நீ, புண்ணியலோகஞ் செல்லும் என்னைத் தடை செய்தபடியால் ஓடுகிற நீரையுடைய ஆறாகக்கடவை,' என்று சபித்துப் போய்விட்டார். அதன்மேல் அவள் அவருடைய சாபப்படியே நீராகி, மானதவாவியிலே வீழ்ந்து சரயுவுடனே சார்ந்து பிரிவதான கோமதி நதியாயினாள்.

அவளுடைய வரலாறு அப்படியிருக்க, அவளுடனே பிறந்த இந்தக் கௌசிகனே காதிக்குப் பிற்காலத்தில் மகுடாபிஷேகம் பெற்று மேற்கூறிய கௌசாம்பி நாட்டை யாண்டு வந்தான். அப்படி ஆண்டுவருங் காலத்தில் இவனுக்கு நூறுபுத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களை இந்தக் கௌசிகன் அன்புடன் வளர்த்து அவர்களுக்கு வில்வித்தை முதலியவைகளை யெல்லாங் கற்றுக்கொடுத்தான். அப்புத்திரர்கள் எல்லா வித்தைகளையுங் கற்றுக்கொண்டு மிகவும் வீரத்துடனே யௌவனநிலையை யடைந்து வாழ்ந்து வந்தார்கள். அக்காலத்தில் இந்தக் கௌசிகன் ஒரு தினத்தில் தன்னுடைய நூறு புத்திரர்களுடனும், மந்திரிகளுடனும், நால்வகைச் சேனைகளுடனும் வேட்டையாடுதற்பொருட்டுக் காட்டிற்குச் சென்று யானைக்கூட்டங்களும், புலிக்கூட்டங்களும் பயந்தோடவும், கலைமான்களும் புள்ளிமான்களும் மடியவும், சிங்கங்களும் மூபற்கூட்டங்களும் நாசமாகவும் வேல்களையும் அம்புகளையுஞ் செலுத்திப் பல வுயிர்களைக் கொன்று அவற்றின் மாமிசங்களைச் சுட்டுத் தின்றும், வனத்தில் நெருப்பைமூட்டிப்பலசோலைகளையும்,முனிவர்களுடைய ஆசிரமங்களையும் அழித்தும் சில தினங்கள்வரை அங்

காட்டிலேயே வாசம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்படி இருக்கும்போது ஒரு தினத்தில் இவன் தன் சேனைகளுடன் காலையிலெழுந்து புறப்பட்டு மிருகங்களைத் தேடி உயர்ந்த மலைகளிலெல்லாம் ஏறித் திரிந்தலைந்து ஒன்று மகப்படாமல் முடிவில் ஒரு மானைக் கண்டு துரத்தி நெடுந்தூரம் போய் அஃதகப்படாமையால் அதனைவிட்டு மிகுந்த பசியுந் தாக முங் கொண்டு முகம் வியர்த்து வெதும்பி நாவறண்டு தன் புத்திரருடன் திரும்பி, நான் தவஞ் செய்துகொண்டிருந்த மலைப்பக்கத்திலே வந்து என்னைக் கண்டான். அப்போது நான் இந்தக் கௌசிகனைப் பார்த்து, 'நீ யார்?' என்று கேட்க, இவன் என்னுடைய பாதங்களில் விழுந்து வணங் கித் தான் கௌசிக னென்பதையும், வேட்டைக்கு வந்த விவ ரத்தையும், அப்போது பசித்துக் களைத்திருக்கும் தன்மை யையும் என்னிடம் தெரிவித்தான். நான் உடனே தெய்வ லோகத்திலுள்ள காமதேனுவை வரவழைத்து இவனுக்கும் இவனைச் சார்ந்தவர்களுக்கும் போசன மளிக்கும்படிச் செய்து எல்லோருக்கு மேற்பட்டிருந்த பசியையுந் தாகத்தை யும் போக்கினேன்.

அதன்மேல் இந்த மதியீனனாகிய கௌசிகன் காமதேனு தன்னிடத்தி லிருந்தால் எப்பொழுதும் நற்போசனத்தை யுண்ணலா மென்னும் பேராசை கொண்டு அதைப் பெற்றுக் கொள்ள வெண்ணி உடனே என்னிடம் வந்து, 'ஓ மகா முனிவரே! இந்தப் பசுவை எனக்குக் கொடுக்கவேண்டும்,' என்று கேட்டான். அப்போது நான், 'இதனைக் கொடுத்தல் என்னா லியலாது; இதற்குரியவன் யானல்லன்,' என்று கூறி னேன். பின்னர் இவன் அதனை வலிதிற் பிடித்துக் கயிற் றாற் கட்டிக்கொண்டுபோக நினைத்து உடனே தன்னுடைய சேனைகளை யேவி அதன்மேல் கயிற்றை வீசி அப்பசுவைப் பிடிக்கும்படிச் செய்தான். அவனிட்ட கட்டளைப்படி சேனை கள் அதனைப் பிடிக்க முயன்றபோது அப்பசு என்னை நோக்கி, 'நீரோ என்னைப் பிடிக்கும்படி இச்சேனைகளுக்கு அனுமதி கொடுத்தீர்?' என்று கேட்டது. நான், 'அவ்வாறு

அநுமதி கொடுக்கவில்லை,' என்று கூறினேன். அதன்மேல் இத்தேவபசு மிகுந்த கோபங்கொண்டு தன்னைப் பிடிக்கவந்த அச்சேனைகளோடெதிர்த்து அவற்றின்மேல் மோதிக் கொம்பு களால் அவற்றைக் குத்தியும், காலாலுதைத்தும், வாலால் வீசியும் கொல்லத்தலைப்பட்டது. அப்போது வேல்வீரர்களி லும், வில் வீரர்களிலும், யானை வீரர்களிலும், குதிரை வீரர் களிலும் அநேகம் பேர் அப்பசுவின் கால்களாலே மிதிபட் டிறந்தார்கள்; அநேகர் அதன் கண்களினின்று முண்டாகிய கோபாக்கினியா லெரிந்திறந்தார்கள்; பலர் அதன் வாலினு லடிபட்டிறந்தார்கள்; அநேகர் அதன் வெள்ளிய கொம்புக ளால் குத்தப்பட் டிறந்தார்கள்; அப்படி இறந்தவர்களுட் சிலர் கொழுப்புடனே இரத்தம், மாமிசம், ஈரல், குடல், மூளை ஆகியவைகள் சரியக் கீழே விழுந்து கிடந்தார்கள்; சிலர் மழு, வாள், வில், தண்டு, வேல் முதலிய ஆயுதங்க ளெல்லா மொடிய அவற்றைக் கீழே போட்டுவிட்டு வெறுங் கைகளோடு வீழ்ந்து கிடந்தார்கள்; காயம் பட்டவர்களுட் சிலர் குற்றுயிராய்க் கிடந்து நெஞ்சங் கரைந்தார்கள்; சிலர் உருண்டார்கள்; சிலர் புரண்டார்கள்; சிலர், 'ஓ தெய்வமே! எங்களுக் கிப்படிப்பட்ட கெடுதிவரச் செய்தாயே,' என் றழுதார்கள்; சிலர், 'நாம் நியாயமற்ற காரியத்தைச் செய்த படியால் நமக்கு இக்கெடுதி சம்பவித்தது,' என்று சொல்லி வருந்தி யோடினார்கள். அந்தப்படி அப்படைகளைச் சிதை த்து மனிதர்களைக் கொன்ற அப்பசுவானது பின்னர் என் னிடம் வந்து, "இனி யான் செய்யத்தக்கது யாது?" என்று கேட்டது. அதற்கு நான், 'நீ இப்பொழுது தெய்வலோகம் போகக்கடவாய்,' என்று கூறினேன். அந்த வார்த்தை களைக் கேட்ட காமதேனு என்னை நோக்கி, 'இப்போ திறந்த வர்களைச் சார்ந்தவர்களால் உமக் கேதேனும் கெடுதி சம் பவிக்குமே; நான் எவ்வாறு உம்மைத் தனியேவிட்டுச் செல் வேன்? இவ்விடத்திலேயே உமக்குக் காவலாக நிற்கின் றேன்,' என்று கூற, நான் மீண்டும் அதனிடத்தில், 'நீ என் னைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டாம்; இங்கே நின்றால்

உனக் கின்னும் கெடுதி சம்பவிக்கும்; ஆதலால், நீ சீக்கிரம் போய்விடு,' என்று கூறினேன்; உடனே அக்காமதேனு தெய்வலோகம் போய்விட்டது.

அதன்மேல் இந்தக் கௌசிகனுடைய புத்திரர்கள் நூற்றுவரும், நானே காமதேனுவை ஏவிவிட்டு அவர்களுடைய சேனையைக் கொல்லும்படிச் செய்ததாகக் கருதி, அதன்பொருட்டு என்மீது கோபங்கொண்டு, என்னைக் கொல்லத் துணிந்து என்னிடம் வந்து நெருங்கி இடிபோல முழங்கி என்மேல் நெடுநேரம்வரை பாணவருஷங்களைப் பொழிந்தார்கள்; அப்போது சிறிது நேரம்வரை நான் சகித்திருந்தேன்; அதன்மேல் பல பாணங்கள் என்னுடம்பிற் பாய்ந்து துளை செய்து என்னை வருத்தியபடியால் எனக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று; அவ்வா றுண்டாகவே நான் அந்தக் கோபத்தோடு விழித்து அவர்களை நோக்கினேன்; உடனே என் கண்களிலிருந் துண்டான கோபாக்கினியினாலே அந்த நூறு பேரும் வெந்து சாம்பலானார்கள். அப்படி அவர்கள் சாம்பலாகவே இந்தக் கௌசிகன் புத்திர சோபத்தால் வருந்தி என்மீது கடுங்கோபங்கொண்டு என் முன்னே வந்து நின்று வில்லை வளைத்து என் தேகத்தை நோக்கிப் பாணப்பிரயோகஞ் செய்ததோடு மற்ற ஆயுதங்களையும் ஏவினான். நான் உடனே அவனுடைய ஆயுதங்களையெல்லாம் நாசஞ்செய்யும்படி என்னுடைய தண்டத்தை முன்னே நட்டுவைத்தேன்; அத் தண்டமானது, இவனேவிய பாணங்களையும், மழுவையும், சக்கரத்தையும், வேலையும், கதையையும் தூளாகும்படி நொறுக்கி விழுங்கிவிட்டது. அப்படி அத்தண்டமானது ஆயுதங்களை யெல்லாம் விழுங்கவே கௌசிகன், 'இனிமேல் இம்முனிவனை நம்மால் வெல்லுத லரிது,' என்று யுத்தத்தைக் கைவிட்டு மிக்க வருத்தத்துடனே தன்னூருக்குப் போய், 'எல்லா விஷயங்களிலும் முனிவரே சிறந்தவர்கள்; ஆதலால், இனி நாம் தவஞ் செய்து முனிவர் நிலைமையை அடைதலே தகுதி,' என்று நிர்மானித்து உடனே அரசாட்சியை யிழந்து முனிவனாகிக் கிழக்குத் திக்கிலே சென்று மிகவும் கடுமையான தவஞ் செய்தான்.

அப்படி இவன் தவஞ்செய்யும்போது இந்திரன் இவனுடைய தவத்தைக் கெடுக்கவெண்ணி, அவ்வாறே அதனைக் கெடுத்துவரும்படி திலோத்தமையை இவனிடமனுப்பினன். அவள் இந்தக் கௌசிகனுக் கெதிரில் வர இவன் மனவுறுதி கெட்டுத் தவத்தைக் கைவிட்டு அவளுறவைக் கொண்டு, பின்னர் தான் வருந்திச் செய்த தவங் கெட்டதை யுணர்ந்து பதறி அவ்விதம் கெடுத்த அவளை உலகத்தில் மானிடப் பிறவியாகப் பிறக்கும்படி சபித்துவிட்டுப் பின்பு விசாலமான தென்றிசையிற் சென்று பரமசிவனைக் குறித்து நெடுங்காலந் தவஞ் செய்ய அவர் பிரசன்னமாகி இவனுக்கு அழியாத வரங் கொடுத்தருளினர். அவ்வரத்தைப் பெற்றுக் கொண்டவுடனே இவன் மிகவும் அகங்காரங்கொண்டு உலகத்தில் திரிந்தான்.

அப்படி இவன் திரிகிறகாலத்தில் இந்த அரிச்சந்திர மகாராஜனுடைய தந்தையாகிய திரிசங்கு என்னை யடுத்துத் தன்னை உடலோடு சுவர்க்கத்திற் கனுப்பவேண்டுமென்று என்னிடம் விண்ணப்பஞ் செய்துகொண்டான். அப்போது நான், 'உடலோடு சுவர்க்கம் போதல் முடியாது,' என்று அவனிடம் கூற, அவன் என்னுடைய வார்த்தையை மதியாமல் என்னை நோக்கி, 'முனிவரே! நீர் எனக்கு வேண்டியவராயிருந்தும் நான் எண்ணிய காரியத்தைச் செய்ய முடியாதென்று கூறிவிட்டீர்; ஆதலின், உம்மைப்போன்ற வேறு முனிவர்களிடம் சென்று எப்படியாவது அவர்களுடைய கிருபையைப்பெற்று அவர்களின் வல்லமையால் நான் தேகத்தோடு சுவர்க்கம் புகுகின்றேன்,' என்று கூறினன். அதனல் நான் கோபங்கொண்டு அவனை நோக்கி, 'திரிசங்குவே! நீ என்னுடைய வார்த்தைகளை மதியாமல் எனக்கு விரோதமான சொற்களைக் கூறியபடியால் நீசனாகக் கடவை,' என்று சபித்தேன். உடனே அவன் தன்னுருக்குலைந்து புலையனாகித் தன்னுடைய நாட்டிற் புகுந்தான். அப்போது நாட்டிலுள்ளவர்கள் அவனைப் பார்த்து, 'புலையா! சீ! சீ!! நீ எங்கே வந்தாய்? வெளியிற் செல்,' என்றிகழ்ந்து தள்ள, அவன்

உடனே மனம் வருந்தி என்னை வெறுத்துத் தள்ளிவிட்டு இந்தக் கௌசிகனை யடுத்து நடந்த விஷயங்களைக் கூறித் தன்னை உடலோடு சுவர்க்கத்திற் கனுப்பும்படி இவனிடம் வேண்டினான். உடனே இந்தக் கௌசிகன் என்மீது முந்தியே கொண்டிருந்த பகையினால், என்னாலாகாத அக்காரியத்தைத் தான் செய்து எனக்கிழிவை யுண்டாக்க வேண்டுமென்று கருதித் திரிசங்குவின் விருப்பப்படியே செய்வதாகச் சொல்லி மலைபோன்ற ஒரு விமானத்தைச் சிருஷ்டி செய்து அதில் திரிசங்குமன்னனை யேற்றித் தெய்வலோகத்திற் கனுப்பினான். அந்த விமானம் அவனை அமராவதிக்குக் கொண்டு சென்றது. அவ்வாறு சென்ற விமானம் அமராவதிக்குச் சமீபத்திற் போய்ச் சேர்ந்தவுடனே அவ்விமானத்திலிருந்த திரிச்சங்கைத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் கண்டு மிகுந்த கோபங்கொண்டு, 'அடா நீசா! நீ தேகத்துடனே தேவர் பதிக்குள் வருதல் தகுதியாமா?' என்று சொல்லி உடனே அவனை அங்கிருந்து தள்ளிவிட்டார்கள். அப்படித் தள்ளுண்ட திரிசங்கு அந்த விமானத்துடனே அலைச்சற்பட்டு, 'விசுவாமித்திரருக் கபயம்,' என்று சொல்லிக் கதறிக்கொண்டு கீழே விழுந்தான். அவ்வாறு அவன் விழுந்து கீழ் நோக்கி யிறங்கி நக்ஷத்திர மண்டலத்தில் வந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் விசுவாமித்திரன் அவனுடைய அபயக்குரலைக் கேட்டோடி அவ்விடத்திலேயே விமானத்தோடு அவனை நிறுத்தித் தேவர்கள்மீது அடங்காக் கோபங்கொண்டான். அக்கோபத்தால் இவனுடைய கண்களினின்று மெழுந்த அக்கினியால் பலவிடங்களு மெரிந்து ஆங்காங்குள்ள உயிர்களெல்லாம் பதைத்தன. அவ்வாறு எல்லோரும் பதைப்புற இவன் கோபித்து, 'இப்போதே நான் வேறு பதினாலுலகங்களையும், வேறு இந்திரனையும், வேறு பிரமனையும், வேறு தேவர்களையும் சிருஷ்டி செய்கிறேன்; நான் உண்டாக்கும் வேறே சுவர்க்கத்தில் திரிசங்கை நிலைபெறச் செய்கிறேன்,' என்று சொல்லி அவ்வாறே உலகசிருஷ்டிசெய்யத் தொடங்கினான். இவனுடைய செய்கையைப் பார்த்தவுடனே இந்திர

னும், பிரமாவும், விஷ்ணுவும், சிவனும், மற்றுமுள்ள தேவர்களும் கூடி, 'இஃதேது விபரீதகாலமாய் முடிந்தது,' என்று கலங்கி, உடனே கௌசிகனுடைய கோபத்தைத் தணிக்கவெண்ணி இவனிடம் வந்து, இவனுக்கு நல்ல வார்த்தைகளைக் கூறி இவனுடைய கோபத்தைத் தணித்து, இவனை நோக்கி, 'விசுவாமித்திரரே! நீசத்துவத்தையடைந்த மானிடன் தேகத்தோடு சுவர்க்கம் புகுதல் தகாது; அதுபற்றியே திரிசங்கைத் தள்ள ஏதுவாயிற்று; உமக்குத் தெரியாததென்ன விருக்கின்றது; நீர் இதற்காக இவ்வாறு கோபங்கொண்டு உலகசிருஷ்டி செய்யத் தொடங்குவது சரி[illegible] வேண்டுமானால் உமக்காகத் திரிசங்குக்கு இந்த [illegible] பதவியைக் கொடுக்கின்றோம்; நீர் இவனை இவ்விட[illegible] நிலைபெறச் செய்யும்,' என்று கூறினார்கள். அத[illegible]ல் கௌசிகன் அவர்களுடைய வார்த்தைக் கிணங்கிக் கோபந் தணிந்து அவர்கள் கூறியபடியே திரிசங்கை நக்ஷத்திரபதவியில் நிலைநிறுத்தினான். அதுமுதல் இந்தக் கௌசிகன் என்மீது தனக் கேற்பட்ட பழைய விரோதத்தால் என்னுடைய காரியங்களில் இடையூறு செய்யத் தலைப்பட்டான்; அந்த வழக்கப்படியே இப்போது அரிச்சந்திரன் விஷயமாகவும் என்னோடு விரோதித்துக் காரியங்களை நடத்தித் தோல்வியடைந்தான்; இவனுடைய துர்க்குணமே இவனுக்கு மிக்க அவமானத்தை யுண்டாக்கிவிட்டது," என்று கூறினார்.

இந்த விசேஷங்களை யெல்லாம் காசிராஜன் கேட்டு மனமகிழ்ச்சி யடைந்து, வசிஷ்டரை நோக்கி, "சுவாமி! உலகத்திலுள்ள முனிவர்களுடைய தன்மையை உம்மைப்போல் உணரவல்லவ ரியாவர்? உம்முடைய பெருமையை அறிவிற் சிறந்தவர்களே தெரிந்துகொள்வார்கள்; ஞானமில்லாதவர்கள் அறிவார்களோ? உலகத்திற் சிறந்தவர் நீரே," என்று சொல்லித் துதித்து அவருடைய பாதங்களில் வணங்கினான். அதன்மேல் அக்காசிமன்னன் ஒருமாதகாலம்வரை அரிச்சந்திரனுடனிருந்து பின்னர் தன் நகர்க்கேக விரும்பி அவ்வெண்ணத்தை அரிச்சந்திரனிடமும் வசிஷ்டரிடமுந்

தெரிவித்தான். அவர்கள் அவனை நோக்கி, "காசிமன்னனே! உம்மை எவ்வாறு நாங்கள் மறந்திருப்போம்?" என்று உபசார வார்த்தைகள் கூறிப் போய்வரும்படி அவனுக்கு விடை கொடுத்தார்கள். அப்படி விடை கொடுத்தவுடன் காசிராஜன் வசிஷ்டரை வணங்கி, அரிச்சந்திரன் சத்தியகீர்த்தி, தேவதாசன் முதலியவர்களைத் தழுவிக்கொண்டு, மற்றவர்களிடமும் விடைபெற்றுத் தன் சேனைகளுடனும், சுற்றத்தார்களுடனும் புறப்பட்டுக் காசி நகர்போய்ச் சேர்ந்தான்.

அவன் அவ்வாறு சென்றபின்பு அரிச்சந்திரன் தன் ... மேலே வெள்ளிய முத்துக்குடைகள் நெருங்கி நிழ... பவும், கொடிகள் நெருங்கவும், வெண்சாமரை யிர... கவிவாணர்கள் புகழ்ந்து பாடவும், பெரியோர் வாழ்த்தவும், வசிஷ்டர் அருகிருந்து இதோபதேசங்களைச் செய்யவும், சிற்றரசர்கள் பகுதிகட்டி வணங்கவும், மாதமுட் மாரிபெய்து கோசலநாடு முன்னினும் அதிகமாகச் செழி... தோங்கவும், சிங்காசனத்திலேறிச் செங்கோல் செலுத்தி, தன் மனைவியும், மைந்தனும், சத்தியகீர்த்திமுதலிய மந்திரிகளும், சுற்றத்தார்களும், குடிகளும் மகிழ அவர்களுக் கிதமான காரியங்களைச் செய்து என்றும் நிலைபெற்ற புகழ்வளர அயோத்தியில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தான். சுபம்.

உத்தரகாண்டம் முற்றுப்பெற்றது.

நூல் வாழ்த்து.

கலிவிருத்தம்.

"மன்னர் வாழிய மாமறை வாழிய
செந்நெல் மன்னுக செந்தமி ழோங்குக
அன்ன தான வரிச்சந்தி ரன்கதை
தன்னைக் கேட்டவர் வாழ்வு தழைக்கவே."

அரிச்சந்திரபுராண வசனம்
முற்றுப்பெற்றது.

கோவிலூர் ... கோவிலூர்-630 307